சிவமயம்

# திருத்தலப்பயணம்


"தமிழ்க்கடல்"

'சிவமணி' 'சிவம்பெருக்குந்தமிழ்ச்செல்வர்'

ராய. சொ.



வெளியீடு

C.V. CT. V. அறக்கட்டளை

சென்னை — 600 085

உ

சிவமயம்

# திருத்தலப்பயணம்

"தமிழ்க்கடல்"
'சிவமணி', 'சிவம்பெருக்கும்சிலர்'
ராய. சொ.

வெளியீடு:
C. V. CT. V. அறக்கட்டளை
சென்னை – 600 085



க. வெ. சித. வெ. வேங்கடாசலம் செட்டியார்

சிவமயம்

# பொருள் அடக்கம்


| தொடர் எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1. | பதிப்புரை (க.வெ.சித.வெ.) | iii |
| 2. | அணிந்துரை (அ.உத்தண்ட ராமன்) | ix |
| 3. | நூல்முகம் (ராய.சொ) | xv |
| 4. | தேவாரத் தல வரிசை | xiii |
| 5. | திவ்வியப் பிரபந்தத் தல வரிசை | xxviii |
| 6. | தேவாரத் தலப் பாடல் தொகை | xxxi |
| 7. | திவ்வியப் பிரபந்தத் தலப்பாடல் தொகை | xxxii |
| | **தேவாரத்தலம்** | |
| 8. | 1. சோழநாடு | 9 |
| 9. | 2. ஈழநாடு | 169 |
| 10. | 3. பாண்டிநாடு | 173 |
| 11. | 4. மலைநாடு | 193 |
| 12. | 5. கொங்குநாடு | 197 |
| 13. | 6. நடுநாடு | 207 |
| 14. | 7. தொண்டை நாடு | 233 |
| 15. | 8. துளுவநாடு | 267 |
| 16. | 9. வடநாடு | 271 |
| | **திவ்வியப் பிரபந்தத் தலம்** | |
| 17. | 1. சோழநாடு | 279 |
| 18. | 2. பாண்டிநாடு | 321 |
| 19. | 3. மலைநாடு | 341 |
| 20. | 4. நடுநாடு | 351 |
| 21. | 5. தொண்டைநாடு | 355 |
| 22. | 6. வடநாடு | 375 |
| 23. | 7. பரமபதம் | 399 |
| 24. | சென்று வந்த பிற தலங்கள் | 404 |
| 25. | தேவாரத் தலங்களில் நகரத்தார் திருப்பணி | 408 |
| 26. | பிரபந்தத் தலங்களில் நகரத்தார் திருப்பணி | 423 |
| 27. | அறுபத்துமூவர் வரலாற்றுச் சுருக்கம் | 423 |
| 28. | ஆழ்வார்கள் வரலாற்றுச் சுருக்கம் | 428 |
| 29. | பயணத்தில் பங்கு பெற்றோர் | 429 |
| 30. | பயணத்தில் உதவிசெய்தோர் | 430 |
| 31. | தேவாரத் தல வணக்கம் | 433 |
| 32. | திவ்வியப் பிரபந்தத் தல வண்ணம் | 443 |
| 33. | தல அகராதி | 447 |
| 34. | பாட்டு முதற் குறிப்பு | 461 |

# பதிப்புரை

(திரு. க. வெ. சித. வெ. வேங்கடாசலம் செட்டியார்)

ஆண்டவனை வழிபடுவதே அங்கம் பெற்ற பயன் என்பார் அப்பர் சுவாமிகள். அரசர்களும், அடியார்களும் அதற்கெனவே ஆங்காங்கே ஆலயம் எழுப்பினர். ஒவ்வொரு தலத்தையும் கண்டு, கைதொழுது வணங்க, கடும் பிரயாணங்களை மேற்கொண்டனர். தேனினும் இனிய தீந்தமிழ்ப் பாடல்களைத் திருத்தலங்களுக்குப் பாடிப் பரவினர். இதனால் தாங்கள் பயன் அடைந்ததோடு, ஏனையோரையும் பயன்பெற வகை செய்தனர். இங்ஙனம் ஆலய வழிபாடு தொன்றுதொட்டு, நம்மிடையே பல்கிப் பரந்தது.

ஆலய வழிபாட்டில் ஆண்களைவிடப் பெண்களுக்கு அதிக ஈடுபாடு என்று சொன்னால் மிகை அல்ல. மாலை நேரங்களில், புகழ்பெற்ற ஆலயங்களில் இவ் உண்மையைக் காணக்கூடும். ஆலய வழிபாடு, ஆலயம் அமைத்து அறப்பணி புரிதல் ஆகிய நற்தொண்டிற்கும், நகரத்தாருக்கும் மிக நெருங்கிய தொடர்பு உண்டு. நகரத்தார் பகுதிகளில், உள்ள கோவில்களில், அப்பெருங்குலப் பெண்டிர் ஏராளமாகச் சென்று வணங்கி மகிழ்வதை அன்றாடம் பார்க்கலாம்.

ஆலய வழிபாடு என்னும் அரியதொரு நற்பழக்கத்தை என் மனைவி நன்கு கடைப்பிடித்தாள். பாடல் பெற்ற தலங்களுக்கும், புகழ் பெற்ற பிறதலங்களுக்கும் அடிக்கடி செல்வாள். என்னையும் அந்த நல்ல பழக்கத்தில் ஈடுபடுத்த முயன்றாள். ஆனால் அதற்கான வாய்ப்பும், பேறும் எனக்குக் கிட்டவில்லை. என் மனைவியின் உடல்நிலை திடீரென்று பாதிக்கப்பட்டது. 15-9-62 அன்று அவள் இறைவன் திருவடி நீழலை அடைந்தாள். மணிவாசகப் பெருமான் அருளிய திருவாசகமாம் தேனமுதி லிருந்து, "சிவபுராணம்" ஓதக்கேட்டு, விட்டவரியை நினைவுப் படுத்தி, தன்னைத் தூய்மைப்படுத்திக் கொண்டு, புண்ணிய நிறைவையும் பெற்றாள். அவளது மறைவு எனக்குப் பெரும் அதிர்ச்சியைத் தந்தது. அதிர்ச்சிநீக்கம் விரைவில் கிட்டக் கூடிய வகையைச் சேர்ந்ததா? இல்லையே.

வாழ்க்கைத் துணையை இழந்தோரின் மனம்பாங்கை உள்ள வாறு உணர அம்மாதிரியான நிலைக்கு ஆளானவர்களா லேயே இயலும். என் மன அதிர்ச்சியைச் சிறிது சிறிதாக மாற்ற, ஆண்டவன் அருளால், என் பெருமதிப்பிற்குரிய நண்பர், 'தமிழ்க் கடல்' 'சிவமணி', 'சிவம் பெருக்கும் சீலர்' ராய. சொ. அவர்கள்.

கிடைத்தார்கள். அழகப்பா கல்லூரி வட்டத்திலேயே அவர்களை அமர்த்தி, அவ்வப்போது அன்னாரின் அறிவுரைகளையும், தமிழ்ச் செல்வத்தையும் பெற வகை செய்தேன். தேவாரம், பிரபந்தம் இன்னும் ஏனைய தீந்தமிழ்த் தெய்வீகப் பாடல்களை, அவர் உணர்ச்சியுடன், நிறுத்தி, பாடல் வரிகளை மடக்கி, மடக்கிக் கேட்பவர் செவியையும், உள்ளத்தையும் கொள்ளை கொள்ளும் பாங்கில், அவருக்கே உரித்தான கம்பீரமான குரலில், அரிய நினைவாற்றலுடன், சொல்லி விளக்குவதையும் உவகையோடு அடிக்கடி கேட்டு மகிழ்வேன்.

வானொலி நிகழ்ச்சிகளைக் கேட்பதில் எனக்கு ஆசை. அதிலும் காலை நேரத்தில் ஒலிபரப்பாகும் 'அருள் வாக்கு', 'பக்திப் பாடல்கள்,' இரவு நேரத்தில் நிகழும் காலட்சேபங்கள் இவற்றை இயன்றவரைத் தவறாது கேட்பேன். அப்போது நான் மன அமைதி பெறுவேன்.

மேலே குறிப்பிட்ட இருவாய்ப்புக்களும், "நானும் ஏன் தல யாத்திரை செய்யக்கூடாது?" என்ற எண்ணத்தை என் அகத்தே எழுப்பின. சிறுகச் சிறுக அந்த நல் எண்ணம் வலுப் பெற்றது. என் நண்பர், 'தமிழ்க்கடல்' அவர்களிடம் இதுபற்றிக் குறிப்பிட்டேன். கோவிலுக்குப் போவது, அங்கு எழுந்தருளிய மூர்த்திகளை வழிபடுவது, அடியார்களின் அருள் வாக்குகளைச் சன்னிதியில் இசைப்பது இவற்றையே குறிக்கோளாகக் கொண்ட அன்னாருக்கு என் தலயாத்திரை எண்ணம் துள்ளும் இளமையைத் தந்தது என்றால் வியப்பில்லை.

ஏற்கனவேயே 'தமிழ்க் கடல்' அவர்கள் தேவாரப் பிரபந்தத் தலங்களுக்குச் சென்று வழிபட்டு வந்தவர். யாத்திரையிலுள்ள பலவிதச் சிரமங்களைக் கருத்தில் கொள்ளாது, தானும் கூட வருவதாக ஒப்புக்கொண்டார்கள். ஆகவே திருத்தலப் பயண எண்ணம் நாளுக்கு நாள் வளர்ந்து வலுப்பெற்று வந்தது. இன்னும் என் அரிய நண்பர்களும், சிவநேசச் செல்வர்களுமான திரு. முத்த. வெ. சொக்கலிங்கச் செட்டியார் அவர்களும், தேவகோட்டை, திரு. சேவு. மெ. மெய்யப்ப செட்டியார் அவர்களும் என்னைத் தலயாத்திரை செய்யுமாறு அடிக்கடி கூறி ஊக்குவித்தனர்.

எந்தக் காரியத்தை நினைத்தாலும் அதை விரைவில் செய்து, நன்கு முடிக்க வேண்டும் என்பது என் பிறவிக் குணம். ஆகவே திருத்தலப் பயணத்தைத் தொடங்கி, முடிக்கத் திட்டம்வகுத்தோம். தல யாத்திரையில் மிக்க அநுபவம் பெற்ற, தமிழ்க்கடல் அவர்களும், நண்பர் திரு. முத்த. வெ. சொ. அவர்களும் திட்டம் வகுத்துத் தந்தனர். தமிழ்க் கடலுடன், திரு. முத்த. வெ. சொ.

அவர்களும் யாத்திரையில் பங்குகொள்ள இசைந்தனர் என் தமையனார் மகன் திரு. க. வெ. ராம. இராமசாமி. செட்டியார் அவர்களும் கலந்துகொள்வதாகக் கூறினார்கள். இவ்வாறு என் திட்டம் ஆக்கம் பெற வழிபிறந்தது. இத்தனை பேரும், வேலையாட்களுடன் தேவார-பிரபந்தப் பாடல் பெற்ற தலங்களுக்குச் சென்று வணங்கி வர, காரில் செல்வது தான் வசதி என்ற முடிவுக்கு வந்தோம். அதற்காக, சுமார் பத்துப் பேர்கள் போகவும், இரவில் படுத்துக்கொள்ளவும் கூடிய வகையில், சிறியதொரு வீட்டின் வசதியுடன் கட்டப்பட்ட 'காரவான்' என்னும் பெரிய கார் ஒன்றை வாங்கினேன். அக்காரின் அமைப்பை இந்நூலில் வெளியிடப்பட்டுள்ள புகைப் படங்களில் காணலாம்.

தரிசிக்கவேண்டிய தேவார-பிரபந்தத் தலங்களின் எண்ணிக் கையையும், பரந்து கிடக்கும் தன்மையையும் எண்ணி, எவ்விதம் பிரயாணம் செய்தால், குறுகிய கால அளவில் கூடுதலான கோயில்களைக் கண்டு தொழலாம் என, ஒவ்வொரு பிரயாணத் தொடக்கத்திலும் முன் திட்டம் போட்டோம். எங்கள் திருத்தலப் பயணம் 28-1-65 அன்று தொடங்கியது. 19-3-66 அன்று முடிவு பெற்றது. நாங்கள் தல யாத்திரையை குறுகிய கால அளவில் மன நிறைவோடு முடித்தோம். இந்தக் கிடைத்தற் கரிய நற்பயணத்தை இவ்வளவு விரைவாகச் செய்து, நன்கு முடிக்க அருள் பாலித்த, எங்கள் அரியக்குடிப் பெருமாளுக்கு முதலில் வணக்கம் செலுத்துகிறேன்.

நாங்கள் தரிசித்த தேவாரத் தலங்கள் 269. திவ்வியப் பிரபந்தத் தலங்கள் 97. இவை தவிர ஆங்காங்கே உள்ள பிற தலங்களையும் கண்டு வணங்கினோம். அவை 90. ஆக, நாங்கள் ஓர் ஆண்டு, ஒரு மாதம், 22 நாட்களில் ஏனைய அலுவல்கட்கிடையில், தரிசித்த தலங்கள் 456 ஆகும்.

ஆலயங்களில் எழுந்தருளிய மூர்த்திகளின், ஆலயங்களின், அருமை, பெருமைகளையும், பாடற் சிறப்பினையும், தமிழ்க் கடலார் அவர்களும், 'முத்த. வெ. சொ.' அவர்களும் அவ்வப் போது எடுத்துக் கூறி விளக்கினர். அத்தோடு அந்தந்தத் தலத்திற்கான பாடல்களைப் பாடியும், பாடச் செய்தும் இன்புற வைத்ததை ஒருபோதும் மறக்க முடியாது. ஒவ்வொரு தலத்திலும், அத்தலத்திற்குரிய பாடல் முழுமையும் படித்து வழிபாடு செய்தோம். தேவார முழுமையும் ஓதப்பட்டது ; தலம் பற்றிய பிரபந்தப் பாடல்கள் முழுமையும் வாசித்தோம். மணிவாசகரை ஆண்டவன் ஆட்கொண்ட திருப்பெருந்துறை யினைத் தரிசித்து யாத்திரையைத் தொடங்கினோம். பயணம் கிட்டத்தட்ட முடிந்தபோது அத்தலத்தை வணங்கி, திருப்பெருந்

துறைக்கான திருவாசகப் பாடல்கள் அனைத்தையும் படித்தோம். இத்தகைய அரியதொரு வாய்ப்பினை என் மனைவியுடன் சென்று பெறும் பேற்றிற்கு நான் கொடுத்து வைக்கவில்லை என்ற குறை எனக்கு உண்டு. ஆயினும் அந்தக் குறையையும், 'தமிழ்க் கடல்' அவர்கள் தமது அன்பு நட்பின் மூலமும், தெய்வீகப் பாடல்களைப் பாடிவிளக்குவதன் மூலமும் நன்கு நீக்கினார்கள். எனவே அவருக்கு நான் எவ்வாறு நன்றி கூறி அமைவது என்பது எனக்குப் புலனாக வில்லை.

நாங்கள் தல யாத்திரைகள் செய்யும்போது, தங்க இடம், உணவு, வாகன வசதிக்காக தங்கள் கார்களைத் தருவது இன்னும் பல்லாற்றானம் உதவி செய்தோர் பல்லோர். அவர்கள் ஒவ்வொருவருக்கும் நாங்கள் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளோம். அவர்களின் பெயர், முதலிய விபரங்களை இப் புத்தகத்தின்பின் இணைப்பில் காணலாம்.

எங்கள் திருத்தலப் பயணத்தில், எங்களுக்கு மரியாதை செய்து வரவேற்றுச் சிறப்பித்த, தமிழ் நாடு–ஆந்திரா ஆலய அறநிலையக் குழு நிருவாகிகளுக்கு நன்றி செலுத்தக் கடமைப் பட்டிருக்கின்றோம்.

பெரிய நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு திரும்பியதும் அது பற்றிப் பேசி மகிழ்வது இயல்பு. ஆகவே எங்கள் திருத்தலப் பயணத்தைப் பற்றி எண்ணி மகிழ்ந்தும், பேசி மகிழ்ந்தும் வந்தோம்; எங்களுக்குக் கிட்டிய மன நிறைவு, பயண அநுபவம், பிரயாண சிரமங்கள் இவை யாவும் மாறி மாறி அகத்தே தோன்றும். அதோடு, ஆங்காங்கே கண்ட மாபெரும் கோபுரங்களையும், ஆலய அமைப்பின் பேரழகையும் எண்ணிப் பார்த்து, நம் முன்னோர்களின் அறப்பணிகளுக்கு எங்கள் அஞ்சலியையும் செலுத்துவோம். குறிப்பாக, நகரத்தார், அதிலும் மிக மிக அதிகமாகத் தேவகோட்டை நகரத்தார் புரிந்துள்ள கோயில் அறப்பணியினைச் சொல்லிச் சொல்லி வியக்கின்றோம். தேவார–பிரபந்தத் தலங்களில் நகரத்தார் செய்த அறப்பணியின் விபரங்களையும் இந்நூலின் பின்னிணைப்பில் வெளியிட்டுள்ளோம்.

சோழ நாட்டில் கல் அகப்படுவது ஏது? கல்லே அகப்படாத அந்நாட்டில், வெளியிலிருந்து கற்களைக் கொண்டு வந்து, விண்ணை முட்டும் கோபுரங்களுடன், விசாலமான, எழில்மிக்க ஆலயங்களை அமைத்த பெரியோர்களின் தெய்வீகத் தொண்டு மிகமிகப் போற்றத் தக்கது.

திருத்தலப் பயணத்தைப் பற்றிய நல்நினைவுகளையும், பயனை யும் ஏனையோரும் பெற வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டது. தலங்கள், அவற்றிற்கான தலப் பாடல்கள் பற்றிய விபரம்,

மாதிரிக்காகத் தலந்தோறும் சில-பல பாடல்கள் இன்னபிற சேர்த்து, ஒரு நூல் வெளியிட்டால் பயனுள்ளதாக அமையும் என எண்ணினேன். 'தமிழ்க்கடல்'அருகில் இருக்கையில் அந்த எண்ணம் நிறைவேறத் தடை ஏன்? உடனேயே 'திருத்தலப் பயணம்' என்ற இந்நூலைக் கொணர முனைந்தார்கள். அதற்கான குறிப்புகள், பாடல்கள் தேர்வு, முதலிய பல பகுதிகளை மிக விரைவில் தொகுத்தார்கள். இரவு–பகல் என்று பாராது, தன் வயதின் தன்மையையும் ஒதுக்கித் தள்ளி உழைத்தார்கள். அவரது சீரிய முயற்சியின் விளைவே இந்நூல்.

நூலின் தனிச்சிறப்புப் பெரிது. அதை எடுத்துக் கூறும் ஆற்றல் எனக்கு இல்லை. இந்நூலைப் பற்றிய,'தமிழ்க்கடல்'அவர்களின் முன்னுரையில் இதனைக் கண்டு கொள்க. என்மேல் உள்ள அன்பு காரணமாக இந்நூலை மிக விரைவில், நன்கு ஆக்கித் தந்த 'தமிழ்க் கடல்' அவர்களுக்கு நானும், இந்நூல் மூலம் பயன் பெறுவோரும் என்ன கைம்மாறு செய்ய முடியும்? அவர்கள் இன்னும் பல்லாண்டு, பல்லாண்டு வாழ்ந்து நமக்கெல் லாம் நல்வழி காட்டுவாராக!

திருத்தலப் பயணத்தின்போது எனக்கு ஏற்பட்ட அநுபவத்தின் காரணமாகவும், வெற்றிகரமாக முடித்ததின் விளைவாகவும் என் மனத்தின்கண் எழுந்த எண்ணங்களை இங்குக் கூற ஆசைப் படுகிறேன்.

1. தலயாத்திரை எல்லோரும் செய்தல் வேண்டும்; அதிலும் இந்துவாகப் பிறந்தவர் ஒவ்வொருவரும், தமது ஆயுட் காலத்தில், ஒரு தடவையேனும் கட்டாய மாகச் செய்தல் வேண்டும்.
2. தல யாத்திரை செய்யும்போது, தலத்தைப் பற்றிய விபரங்களைத் தெரிந்து கொண்டோமானால் மிக்க பயன் உண்டு.
3. தலயாத்திரை மனத்தூய்மையை அளிக்கிறது.
4. தள்ளாடி நடக்கும் பருவம்வரைத் தலயாத்திரையைத் தள்ளிப் போடக் கூடாது; தேக வலிவு தளருவதற்குள், அதாவது 55 ஆவது வயதிலிருந்து 60 ஆவது வயதிற் குள்ளாவது தல யாத்திரை மேற்கொள்வது நலம்; அவசியமுமாகும்.
5. பாடற் சிறப்புப் பெற்ற அனேகத் தலங்கள் நல்ல நிலையிலில்லை. அவற்றைச் செப்பனிட அரசாங்கமும் பொதுமக்களும் ஆவன செய்ய வேண்டும்.

இந்நூலைப் பெரிதும் அலங்கரிக்கும் அரங்கநாதனின் மூவர்ண பிளாக்கைத் தந்து உதவிய, தமிழ் நாடு ஆலய அறக்குழு ஆணையர், திரு. சாரங்கபாணி முதலியார் அவர்களுக்கு நன்றி. இந்நூலில் ஆனந்தத் தாண்டவம் புரியும் கூத்தப் பெருமான் பிளாக்கைத் தந்து உதவிய திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தாருக்கு நன்றி.

இந்நூலின் பின்னே சேர்க்கப்பெற்றிருக்கும் தேவாரத் தல வணக்கப் போற்றிப் பாடலை வெளியிட இசைவுதந்த, காரைக்குடி சிநேசர் திருக்கூட்டத்தாருக்கு நன்றி.

என் அரிய நண்பர், அறநிலைய நிருவாகத்துறை ஆணையராக இருந்து, கோவில்களையெல்லாம் மிகச் சிறப்பாகச் சீர்திருத்தம் செய்து, தேவார–திவ்வியப் பிரபந்தக் கோவில்களிலெல்லாம் பெரியோர்கள் பாடல்களைக் கல்வெட்டில் செதுக்கிய அ. உத்தண்டராமன் பிள்ளை அவர்கள், நான் கேட்டவுடன் விரைந்து இந்நூலுக்கு அரியதோர் அணிந்துரை தந்து உதவினார்கள். அவர்களுக்கு உளங்கனிந்த நன்றி.

இந்நூலைத் தொகுப்பதில் 'தமிழ்க்கட' லோடு உடன் இருந்து பொறுப்பாக அரிய தொண்டு செய்த, என் நண்பர், ரா. பதுமநாபன் அவர்கட்க நன்றி.

இந்நூல் வெளிவரப் பலவாறு உதவிய அன்பர்கள் அனைவருக்கும் என் நன்றி.

மிகக் குறுகிய கால அளவில் இதனை நன்கு அச்சடித்து, உருவாக்கி அமைத்துத் தந்த, என் நெடுநாளைய நண்பரும் பக்திமானுமான பதஞ்சலி பிரஸ் உரிமையாளர், திரு. பதஞ்சலி பத்மநாபய்யர் அவர்களுக்கும், அவரது அச்சக நிருவாகி 'அம்மாஞ்சி' பதுமநாபனுக்கும், அச்சகத்தைச் சார்ந்தோருக்கும் என் உளம்கனிந்த நன்றி.

இறுதியாக, எங்கள் குடும்பத்தைப் பரம்பரை பரம்பரையாகத் தனக்குப் பலவாறு திருத்தொண்டு செய்ய வைத்து, ஆட்கொள்ளும் அரியக்குடி ஸ்ரீநிவாசப் பெருமாளின் திருவடிக் கமலங்களில், என் மணிவிழா வெளியீடாக மலரும், இம்மலரை அணிவிக்கின்றேன்.

யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்.

சென்னை

18–10–66 க. வெ. சித. வெ. வேங்கடாசலம் செட்டியார்

# அணிந்துரை

திரு. அ. உத்தண்டராமன். I. A. S.,(Retd.)

'எப்போதகத்து நினைவார்க்கிடரில்லை
கைப் போத கத்தின் கழல்'.

'C.V.CT.V.' என்று அன்புடன் எல்லோராலும் அழைக்கப் பெறும் உயர் திரு. வெங்கடாசலம் செட்டியாரவர்கள் தெய்வ பக்தியிலும் பொது நலத் தொண்டிலும் பெரும் புகழ் பெற்று விளங்குபவர். கொடை வள்ளல் அழகப்பச் செட்டியாரவர்கள் விட்டுச் சென்ற கல்வி நிறுவனங்களை அரும் பாடுபட்டுக் காத்து வரும் அவர் தனிப்பெருந் திறத்தை அளவிட முடியாது. அன்னாரின் அறுபதாம் ஆண்டு நிறைவு விழா அண்மையில் 18–10–66 செவ்வாய்க் கிழமையன்று நடை பெற இருக்கிறது. அவர்களை நான் ஏறத்தாழ முப்பது ஆண்டுகளாக அறிவேன். இராமனாதபுர மாவட்டத்தில் வடபகுதி நாட்டாண்மைக்கழகத் தலைவராக, பெரும்புகழுடன் பணியாற்றியதை நேரில் கண்டேன். கிராம மக்களின் பொருளுதவி உழைப்பு மூலம் கிராமங்களின் நலனைப் பெருக்க முடியு மென்பதைச் செயல் முறையில் காட்டிய முதல்வர் அவரே. இராமனாதபுரம் வடபகுதியில் உள்ள போக்கு வரத்துச் சாலைகள், பொது நல நிறுவனங்கள் பல இன்றும் அவர் வகுத்த திட்டத்தில் உருவானவைகளேயாகும். பொது நலப்பணிகள் எல்லாவற்றிலும் அவருடைய ஆற்றலையும் செல்வாக்கையும் அந்த மாவட்ட ஆட்சியினர் நன்கு பயன் படுத்திக் கொண்டனர். நகரத்தாரிடையே மட்டுமின்றி எல்லா மக்களிடமுமே அவருக்குச் செல்வாக்கு நிறைய உண்டு.

வாழ்வில் அவருக்கு யாதொரு குறையும் இருந்ததில்லை. அவருடைய அன்பு மனைவியாரை இழந்த தொன்றை மாத்திரம் அவர் குறையாகக் கருதலாம். ஆனால் அந்த அம்மையார் சம்பந்தப் பட்டவரை அவர் மறைவு அவருக்கு நல்ல முடிவேயாகும்.

'வினைப் போகமே தேகங் கண்டாய் வினைதானொழிந்தால் தினைப் போதளவு நில்லாது கண்டாய்' என்பது பட்டினத்தார் வாக்கு. செட்டியாரவர்கள் வாழ்க்கைத் துணைவியார் அண்ணா மலையரசரின் புதல்வி. அவருடைய பெண் மக்களிருவரும் தொழில் மேதை அ. மு. மு. குடும்பத்தில் பெறற்கரிய கணவரைப் பெற்று இனிது வாழ்கின்றனர். அவருடைய மகனும் அண்ணாமலையரசரின் மகன் வழிப்பேத்தியாகிய தன் முறைப் பெண்ணையே மணம் செய்து கொண்டு, வணிகத் துறையில் சீரும் சிறப்பும் பெற்று வாழ்கிறார். எனவே உலக வாழ்வில் இறைவன் அவருக்கு அளித்திருப்பது இன்பமே. அவரிப்போது அருள் வாழ்வில் பேரின்பம் காண விழைவது இயற்கையே. அவர் பிறப்பால் சைவ ராயினும் சைவ வைணவ பேதமின்றியே பக்தி சீலராக விளங்கிவருகிறார். இப்போது உணவிலும் சைவராகவே மாறியது பாராட்டுக்குரியது.அரியக்குடி வெங்கடாசலபதி திருக்கோயிலில்

அறங்காவலராக அரும்பெரும் பணிகள் செய்துள்ளார். அதிக வருவாயில்லாத அவ்வாலயத்தில் நித்திய பூசைகள் முட்டின்றி நடைபெறும் வகையில் ஒரு நிரந்திரத் திட்டம் வகுத்து அதற்கான பொருளில் பெரும் பாகத்தைத் தானும் தன் சம்பந்திகளாகிய அ. மு. மு. குடும்பத்தினருமாக ஏற்று நடத்தி வருகின்றனர். நூலின் 378ம் பக்கத்தில் திருவேங்கடமுடையார் ஒன்றும் குறைந்தவரல்லர் என உள்ளது. அவர் பெயருடைய இவரும் அப்படியே.

அன்னாருடைய மணிவிழா நினைவு மலராகப் பொது நலம் கருதி எல்லா மக்களுக்கும் எக்காலத்திலும் நன்கு பயன்படும் வகையில் 'திருத்தலப் பயணம்' என்னும் அரிய நூல் ஒன்றை வெளியிட்டு வழங்குவது சாலப் பொருத்தமே. இந்நூலில் தேவாரப் பாடல்கள் பெற்ற 275 தலங்களும் ஆழ்வார்களால் மங்களா சாசனம் செய்யப் பெற்ற 108 திருப்பதிகளும் இடம் பெற்றுள்ளன. 'திருவையாறு', 'திருப்பழனம்' என்னும் தலங்களுக்கு நடுவேயுள்ள திங்களூர் என்னும் அப்பூதியடிகள் அவதாரத்தலமும் பாடல் பெற்ற தலமேயாகும். அவர் மைந்தன் அரவம் தீண்டியதால் மாண்டபோது அவனை அப்பர் அங்குள்ள திருக்கோயி லுக்குக் கொணர்வித்துப் பதிகம்பாடி உயிர்ப்பித்தாரன்றோ!

"அன்றவர்கள் மறைத்ததனுக்கு
அளவிறந்த கருணையராய்க்

கொன்றைநறுஞ் சடையார்தங்
கோயிலின்முன் கொணர்வித்தே

'ஒன்று கொலாம்' எனப்பதிகம்
எடுத்துடையான் சீர்பாட,

பின்றைவிடம் போய்நீங்கிப்
பிள்ளையுணர்ந் தெழுந்திருந்தான்"

என்பது பெரிய புராணம்.

'மைப் படிந்த கண்ணாளும் தானும் கச்சி மயானத்தான்' என்று தொடங்கும் திருத்தாண்டகப் பாடலும் கச்சி மயானத்துக் குரியதாகும். திருவாரூர் அரநெறி, திருப்புகலூர் வர்த்த மானீச்சுரம், மீயச்சூர் இளங்கோயில் போன்றதே இக்கோயிலும். காஞ்சி புரத்திலுள்ள திருக்கோயில்களில் சிவலிங்கம் மாத்திரம் இருப்பதற்குப் பண்டைக்காலத்தில் அம்பிகைக்குத் தனிக்கோயில் இருக்கவில்லை என்பது ஒரு காரணம். பிற்காலத்திலும் அம்பிகைக்குத் தனிச் சந்நிதி அமைக்காததற்குக் காரணம் காமாட்சியம்பிகையே அங்குள்ள எல்லாக் கோயில்களுக்கும் மூலமூர்த்தியாகக் கொள்ளப்பட்டதே என்பர். உற்சவ உருவம் 'ஏலவார்குழலி' என்ற திருப் பெயருடன் ஏகாம்பரேசுரர் கோயிலில் இருக்கிறது. திருக்கல்யான உற்சவம் பங்குனி

உத்திரத்தில் மிகச்சிறப்பாக நடைபெறுகிறது. அன்று நூற்றுக் கணக்கான மக்கள்யாதொரு செலவுமின்றி மணம் செய்து கொள்ளும் வழக்கம் இருக்கிறது.

செட்டியாரவர்களும் அவருக்கு உறுதுணையாக, சிறந்த பக்த சீலரும் புலவர் பெருமானுமாகிய தமிழ்க்கடல் 'ராய. சொ' அவர்களும் வேறு சில அன்பர்களும் மிக நல்ல முறையில் திருத்தலப் பயணத்தை மேற்கொண்டு நடத்தியுள்ளனர். அவர்கள் ஒவ்வொரு தலத்துக்கும் பொருத்தமான பாடல்களைத் திரட்டி அமைத்துள்ளனர். அவர்கள் சென்று வழிபட்ட சிவத்தலங்களை அடியேனும் வழிபடும் பேறு பெற்றுள்ளேன். அவர்கள் இன்னும் ஈழ நாட்டுக்குச் செல்லவில்லை. 1919ல் இலங்கை சென்று இரு தலங்களையும் வழிபடும்வாய்ப்புப் பெற்றேன். திருக்கேதிச்சரத்தில் நகரத்தார் திருப்பணி செய்துள்ளனர். கடைமுடி என்ற தலம் கீழையூரல்ல. கல்வெட்டுப்படி சென்னம் பூண்டி என்பர். அதே போல் சிற்றேமம் என்பது சிற்றாய்மூரல்ல; திருச் சிற்றம்பலம் என்பர். அதுவுமல்ல நேமம், எழிலூர் என்ற ஊர்களே என்பாரும் உளர். அடியேன் இவ்வூர்களுக்கும் சென்று வழிபட்டேன்.

வைணவத் திருப்பதிகளில் வட நாட்டிலுள்ள அயோத்திக்கும் வட மதுரைக்கும் சென்றிருக்கிறேன். அயோத்தியிலும் வட மதுரையிலும் ப்ரபாவத்தில் கண்டபடி சந்நிதிகள் இல்லை. அயோத்தியில் குன்றின் மேல் அனுமன் கோயிலும் அண்மையில் கட்டப்பட்ட விஷ்ணு கோயிலும் (அம்மாஜிகா மந்திர்) உள்ளன. இராமர் ஜன்மஸ்தானம் ஒரு மசூதியை ஒட்டியிருக்கிறது. அதில் இப்போது அகண்ட பஜனை செய்து வருகிறார்கள். வட மதுரையில் கிருஷ்ணன் பிறந்த இடம் ஒரு குகையில் உள்ளது. சலவைக் கல்லில் கிருஷ்ணனுக்கும் புதிய கோயில் கட்டப்பட்டுள்ளது. 6 மைல் வடக்கேயுள்ள பிருந்தாவனத்தில் ரங்க மந்திர் என்று வழங்கும் புதிய கோயில் தமிழ் நாட்டு வைணவர்கள் ஆட்சியில் உள்ளது. வடமதுரையில் யமுனைத் துறையில் நாள்தோறும் மாலை தீபாராதனை நடைபெறுகிறது. மற்றும் செட்டியாரவர்கள் குழு சென்ற திருப்பதிகளுக்கும் சென்றுள்ளேன். கள்வனூர் என்னும் திருப்பதியிலுள்ள ப்ராபவப்படி காமாட்சியம்மன் கோயிலில் இல்லை. தாயார் சந்நிதியில்லை. பெருமான் உருவமும் மேற்கு நோக்கியில்லை. நிலாத்திங்கள் துண்டத்திலும் தாயார் சந்நிதி இல்லை. வேளுக்கை என்ற தலம் காணப்பட வில்லை. வயல் வெளியிலுள்ள ஒரு குளத்தில் காணும் உருவத்தையே அத்தல மூர்த்தி என்பர். பரமபதமும் திருப்பாற்கடலும் எப்படி ஊனக் கண்ணால் காண முடியாதனவோ, அதே போல் கயிலாயம் இந்திர நீலப்பருப்பதம் இரண்டிலும் மூர்த்தியும் தலமும் காண முடியாதனவே. அனேகதங்காவதம் என விளங்கும் கௌரி குண்டத்திலும் கோயிலும் மூர்த்திகளும் இருப்பதாகத் தெரியவில்லை.

இந்நூலில் மேற்கு நோக்கிய சந்நிதிகள் என்று அங்கங்கே குறிக்கப் பெற்றுள்ளன. கீழ்க் கண்ட சந்நிதிகளும் மேற்கு நோக்கியவையே.

| | |
|---|---|
| சிராப்பள்ளி | கோட்டூர் |
| ஆனைக்கா | திருத்துருத்தி |
| ஆலம் பொழில் | முருகன் பூண்டி |
| குடந்தைக்காரோணம் | திருச்சோபுரம் |
| திருப்பழியலூர் | திருக்கோவலூர் |
| கடவூர்மயானம் | திருத்துறையூர் |
| நறையூர்ச் சித்திச்சுரம் | கச்சிமேற்றளி |
| அரிசிற்கரைப் புத்தூர் | கச்சி நெறிக்காரைக்காடு |
| விற்குடி | குரங்கணில் முட்டம் |
| குடவாயில் | திருவான்மியூர் |
| கொள்ளிக்காடு | அரசிலி |
| நெல்லிக்கா | கோகர்ணம் |
| சாத்த மங்கை | |

திருத்தலப் பயணத்தில் அநேக இடங்களில் சைவ வைணவப் பிணைப்பைப் பார்க்கலாம். சிதம்பரத்திலும் கச்சி ஏகம்பத்திலும் காமாட்சியம்மன் கோயிலிலும் மூன்று திருப்பதிகளும் சிவத்தலங்களும் இணைந்துள்ளன. கீழ்க்கண்ட வைணவத் தலக் கோயில்களில் சிவ சந்நிதிகள் உள்ளன.

கரம்பனூர் உத்தமர் கோயில்
திருக்கோட்டியூர்
திருக்குறுங்குடி
வித்துவக்கோடு

அதே போல் கீழ்க்கண்ட சிவத்தலக் கோயில்களில் விஷ்ணு சந்நிதிகள் உள்ளன.

| | |
|---|---|
| சிக்கல் | திரு அண்ணாமலை |
| திருப்பழனம் | இராமேச்சுரம் |
| திருவோத்தூர் | திரு உத்திரகோசமங்கை |
| திருநணா | திருநெல்வேலி |
| கொடிமாடச் செங்குன்றூர் | திருச்செந்தூர் |
| திருநாவலூர் | திருக்குற்றாலம் |
| திருப்பாண்டிக் கொடுமுடி | ஆத்தூர் |
| திருவக்கரை | சுசீந்தரம் |

மலை நாட்டில் அநேக ஆலயங்களில் சிவ விஷ்ணு அம்பிகை சந்நிதிகள் கலந்தே இருக்கக் காணலாம்.

'CV.CT.V', ராய.சொ. இருவருமே சைவ வைணவ பேதமின்றி, சமரச நோக்குடன் எல்லாத் திருத்தலங்களுக்கும் சென்று வழிபட்டிருக்கின்றனர். அவர்கள் இருவரும் 'ஒன்றே மெய்ப்

பொருள்' என்னும் உணர்வினர். அவர்கள் எவ்வளவு ஆர்வத்துடனும் பக்தியுடனும் பயணம் செய்தனர் என்பது என் போன்றோருக்குத்தான் நன்கு விளங்கும். செல்லும் வழிகள் மிக நன்றாக விவரிக்கப்பட்டுள்ளன. திருக்கள்ளில். இலம்பையங் கோட்டூர், பேரெயில், சிற்றேமம், நெல்வெண்ணெய், திருமாணிகுழி திருச்சோபுரம், திருக்கானூர், திருந்துதேவனகுடி, கூடலையாற்றூர், திருக்குரக்குக்கா, தொலைவில்லி மங்கலம், முதலிய தலங்களுக்குச் செல்லுவது எளிதல்ல. இத்தலங்களுக்கு இருமுறை சென்றது அரிய செயலே. முண்டீச்சுரம் என்பது கிராமம் என்று வழங்குகிறது. மிகக் குறுகிய காலத்தில் வெளியிடப் படுவதால் இந்நூலில் சில சிறு அச்சுப் பிழைகள் உள்ளன. அவற்றை வாசிப்போரே திருத்திக் கொள்ளலாம்.

இந்நூலில் நகரத்தார், பாடல் பெற்ற தலங்களில் செய்துள்ள திருப்பணிகளைப் பற்றிய குறிப்பு ஒன்று சேர்க்கப் பெற்றுள்ளது. இதில் அவர்கள் திருப்பணி செய்த காலம் குடமுழுக்குச் செய்த தேதி முதலியன சேர்க்கப் பெற்றிருந்தால் மிகவும் பயனுள்ளதாக இருக்கும். சென்ற நூற்றாண்டின் பிற்பகுதியிலும் இந்த நூற்றாண்டுத் தொடக்கத்திலும் நகரத்தார் செய்துள்ள திருப்பணிகள் முன்னாள் அரசர்கள் செய்த திருப்பணிகளுக்கும் மேலானவை என்றே சொல்லலாம். இந்தக் கோயில்களை நேரில் கண்டவர்களுக்கே நகரத்தார் செய்துள்ள திருப்பணிகளின் உண்மையான மதிப்பு நன்கு புலனாகும். இத்திருப்பணிகள் செய்யப் படாமலிருந்தால் அநேக தலங்கள் மறைந்தோ சிதைந்தோ போயிருக்கு மென்று திருப்பணி செய்யப் பெறாத சிவத்தலங்களைப் பார்த்துத் தெரிந்து கொள்ளலாம். நமது நாட்டுத் திருக் கோயில்களே நமது நாகரிகச் சின்னங்கள். இந்த அரிய பொக்கிஷங்களைப் பெரும் பொருட் செலவில் பாதுகாத்து வைத்த நகரத் தாருக்குத் தமிழ்ப் பெருமக்கள் பெரிதும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளனர். 'தேவூர்த் தென் பால் திகழ் தரு தீவில் கோவார் கோலம் கொண்ட' மூர்த்தியின் கோயிலைத் தேவூர்க் கோவிலார் விரைவில் செப்பனிடுவார்களென நம்புகிறேன். திரு வக்கரை, தலையாலங்காட்டுத் திருப்பணியும் வெஞ்சமாக்கூடல், திருப்பணியும் துறையூரில் அருள் நந்தி சிவாச்சாரியார் கோவிலைச் செப்பனிடுவதும் அவசியமே.

நமது நாட்டுத் திருக்கோயில்களுக்கொப்பான ஆலயங்களை வேறெங்கும் காண முடியாதென்பது உலகறிந்த உண்மை. பெறற்கரிய பிறவியைப் பெற்ற மக்கள் தம் வாழ்நாளில் எல்லாக் கோயில்களையும் கண்டு வழிபட இயலாமற் போயினும் பாடல் பெற்ற தலங்களுக்காகிலும் சென்று வழிபட வேண்டுவது அவசியம் என்று கருதி 'தான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்ற பெருநோக்குடன் இவ்வரிய நூலைப் பெரும்

புலவர் 'ராய.சொ' அவர்கள் துணையுடன் வெளியிட முன் வந்த மணிவிழாத் தலைவர் அவர்கள் நம் நன்றி கலந்த பாராட்டுக்கும் வாழ்த்துக்கும் உரியர்.

மனிதன், வாழ்வில் அறுபது ஆண்டுகள் ஒரு பகுதி. ஆண்டுகளின் எண்ணிக்கையும் அறுபது. நாயன்மார்களுள் சுந்தரர், சடையர், இசை ஞானியார் நீங்கலாக அடியார்கள் எண்ணிக்கையும் அறுபதே. இல்லற வாழ்க்கையின் பயன்பெறும் பகுதியை அனுபவித்த நிலையில் மணிவிழாவுக்குப் பின் வாழ்க்கையின் பிற் பகுதியைத் தொடங்குகிறான். உடல் பெற்ற பயனை ஒரளவு மனிதன் துய்த்த பின்னர் உயிர்க்குறுதி பயக்கும் ஆன்ம வாழ்வில் கவனம் செலுத்தும் வாய்ப்புக் கிட்டுகிறது. இதை நன்கு பயன்படுத்திக் கொள்பவனே உண்மை அறிவாளி. இவ்வகையி "செட்டியார்" அவர்கள் தனது வாழ்க்கை முறையை நன்கு அமைத்துக் கொண்டுள்ளார். அன்னாருக்கும் அன்னார் குடும்பத் தினருக்கும் எல்லாம் வல்ல இறைவன் நீண்ட நல்வாழ்வும் பிற வெல்லாப்பாக்கியமும் அருள் பாலிக்க வேண்டுமாய் அவனிணையடிகளை இறைஞ்சுகின்றேன்.

இந்நூலுக்கு அணிந்துரை எழுதும் வாய்ப்பை யளித்தமைக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

'நாடும் நகரமும் நற்றிருக் கோயிலும்
தேடித் திரிந்து சிவபெரு மானென்று
பாடுமின்! பாடிப் பணிமின் பணிந்தபின்
கூடிய நெஞ்சத்துக் கோயிலாக் கொள்வனே'

–திருமந்திரம்.

'வையத்து வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்'

–குறள்

பொங்கும் மங்களம் எங்கும் தங்குக! வாழ்க உலகெலாம்!

அ. உத்தண்டராமன்

சிவமயம்

# நூல் முகம்

('தமிழ்க்கடல்', 'சிவமணி' ராய. சொ.)

அருளாளர்கள் பாடிய இறைவன் உறைகின்ற திருத்தலங்கள் தோறும் சென்று வணங்கிப் பேறு பெற வேண்டும் என்ற எண்ணம் 1955–ஆம் ஆண்டில் எனக்குத் தோன்றியது. அப்பொழுது தேவார திருவாசக–திவ்வியப் பிரபந்தம் பெற்ற பாடல் தலங்களைக் கண்டு வணங்குவது என்று தொடங்கி, 1957–இல் பெரும்பாலும் வணங்கி முடித்தேன். ஒரு சில தலங்களுக்கு மட்டும் 1957 க்குப் பின்னர் சென்று வந்தேன். அந்த நாளில் கிட்டத்தட்ட இரண்டரை ஆண்டுகளுக்குள் என் தல வணக்கத்தை நிறைவு செய்தேன்.

என் அரிய நண்பர் க.வெ. சித.வெ. வேங்கடாசலம் செட்டியார் 1965 இல் திருத்தலப் பயணம் தொடங்க வேண்டும் என்று என்னை அழைத்தார்கள். மகிழ்ச்சியுடன் 28–1–65இல் தொடங்கினோம். சில தலங்கள் தவிர, 19–3–66இல் எங்கள் திருத்தலப் பயணத்தை நிறைவு செய்தோம். எனவே ஓராண்டு, ஒரு திங்கள், இருபத்திரண்டு நாட்களில் எங்கள் பயணம் முடிவு பெற்றது. பயணத்தை மணிவாசகப் பெருமானை இறைவன் ஆட்கொண்ட, திருவாசகம் பெற்ற, திருப்பெருந்துறையில் தொடங்கினோம். நடு நாட்டில் மாணிகுழி என்ற திருப்பாதிரிப்புலியூருக்கு அடுத்த, தேவாரத் தலத்தில் முடித்தோம்.

தேவாரத்தலம் 275 இல் 269 தலங்கள் சென்றோம். நான் முதலில் சென்று வந்ததும் இவ்வளவு தலங்கள்தாம். எஞ்சிய 6 தலங்களில், ஈழநாடு என்ற இலங்கையில் இரண்டும், இமயமலைச் சாரலில் நான்கும் இருக்கின்றன. இலங்கையிலுள்ள இரண்டு தலங்களுக்கும் செல்ல முடிவு செய்திருக்கின்றோம்.

இமயமலைத்தலங்கள் நெடுந்தூரம் நடந்து சென்றாலொழிய அணுக முடியாத நிலையிலிருப்பதால் இப்பிறவியில் இல்லை.

திவ்வியப் பிரபந்தத் தலங்கள் 108–இல் இப் பயணத்தில் 97 தலங்கள் வணங்கியிருக்கின்றோம். என் முதற் பயணத்தில் இவற்றைத் தவிர, அயோத்தி சென்று வந்திருக்கின்றேன். எஞ்சிய 10 தலங்களுள் திருப்பாற்கடல், பரமபதம் என்ற இரண்டும் இவ்வுலகத்தில் இல்லை. சாளக்கிராமம் என்ற தலம் நேபாளத்தில் இருக்கிறது. சில ஆண்டுகளுக்குமுன் நான் நேபாளம் சென்றிருந்தேன். சாளக்கிராமம் பல மைல்கள் நடந்து செல்ல வேண்டியிருந்த காரணத்தால் செல்லவில்லை. வதரியாச்சிரமம், தேவப் பிரயாகை, திருப்பிரிதி ஆகிய 3 தலங்களும் இமய மலையில் இருக்கின்றன. நடக்க முடியாக் காரணத்தால் அவைகளுக்குச் செல்ல இல்லை. பாக்கியுள்ள நைமிசாரணியம், துவாரகை, வடமதுரை, ஆய்ப்பாடி ஆகிய 4 தலங்களுக்கும் செல்லக்கருதியிருக்கின்றோம்.

இந்த நூலில் "வழிபட்ட நாள்" என்ற தலைப்பில் இரண்டு தேதிகள் குறித்திருக்கின்றோம். முதல் தேதி நான் மட்டும் சென்று வந்ததைக் குறிக்கும். இரண்டாவது தேதி எங்கள் கூட்டுப் பயணத்தைக் குறிப்பிடும். இரண்டிற்கும் இடையில் சில தலங்களுக்குப் பல முறை சென்று வந்திருக்கின்றேன். அவற்றை இங்குக் குறிப்பிடவில்லை.

திருவாசகத்தில் வந்துள்ள தலங்கள் 45 அவற்றுள் தேவாரத் தலங்கள் 26. அந்த இருபத்தாறு தலங்களுடன் இந்தநூலில் பின்னே குறித்திருக்கின்ற நான்கு தலங்களுக்கும் சென்று வந்திருக்கிறோம். எஞ்சிய திருவாசகத்தலங்களுள் பலவற்றை இருக்கும் இடம் அறிய முடிய வில்லை.

திருவிசைப்பாத்தலம் மொத்தம் பதினான்கு. அப் பதினான்கில் தேவாரம் பெற்ற தலம் ஆறு. அவ் ஆறுடன் இந்நூலில் பின்னே காட்டியிருக்கின்ற

ஆறு தலங்களுக்கும் சென்று வந்திருக்கின்றோம். எஞ்சிய திரைலோக்கிய சுந்தரம், திருக்களந்தை ஆதித் தேச்சுரம் என்ற இரண்டிற்கும் நான் முன்னே சென்று வந்திருக்கின்றேன். எனவே எனக்குத் திரு விசைப்பாத்தலம் பாக்கி இல்லை.

இப்பயணத்தில் தேவார வைப்புத்தலங்கள் ஆறுக்குச் சென்று வந்திருக்கிறோம். வைப்புத்தலங்கள் என்பன தேவாரத்தில் தனிப்பதிகம் இல்லாமல், மற்றைய தலப்பதிகத்தில் வைத்துப் பாடுபவை. இத்தகைய தலங்கள் தேவாரத்தில் பல இருக்கின்றன. திவ்வியப் பிரபந்தத்தில் வைப்புத்தலம் என்று தனியே இல்லை. பதிகம் பெற்ற திருப்பதி, இடையில் வைக்கப் பெற்ற திருப்பதி எல்லாம் சேர்த்தே திவ்வியப் பிரபந்தத்தலம் 108 தான்.

மேற்குறித்த பாடற் கோயில்கள் தவிர, 31 சிவன் கோயிலுக்கும், 13 திருமால் கோவிலுக்கும், 2 அம்பிகை கோவிலுக்கும், 14 முருகன் கோவிலுக்கும், 14 அடியார்கள் கோவிலுக்கும் சென்று வந்திருக்கிறோம்.

மொத்தத்தில் இப்பயணத்தில் சென்று வணங்கியகோயில்கள் 456. அவற்றின் விபரமான பட்டியலை இந்நூலின் பின்னே சேர்த்திருக்கிறோம்.

பாடல் பெற்ற கோயில் ஒவ்வொன்றிலும், அத்தலத்திற்குரிய, தேவார–திருவாசக–திவ்வியப்பிரபந்தப் பாசுரங்களைப் பாடி வணங்கினோம். அதிகமாக இருந்த தலப் பாடல்களையும், தலம் குறிப்பிடாத பாடல்களையும் வீட்டில் படித்து முடித்தோம். எனவே இப்பயணத்தின் காரணமாகத் தேவாரப் பாடல் எண்ணாயிரமும், திவ்வியப் பிரபந்தப் பாடல் கிட்டத்தட்ட நாலாயிரமும் படித்து முடிக்கும்பேறு பெற்றோம்.

பெரியோர்கள் பாடிய கோயிலை வணங்குவது கிடைத்தற்கரிய பேறு. முன்னர் ஒரு முறை நான் முழுதும் சென்றிருந்தாலும், திரும்பவும் பார்க்க வேண்டும் என்ற ஆசையால், அன்பர் வேங்கடாசல னார் அழைத்த போது, கழிபேரு வகையுடன் ஏற்றுக்

கொண்டேன். நான் இணங்கியதில் அவர்கள் அடைந்த நன்மையைவிட, நான் அடைந்த நன்மை பெரிது; ஆண்டவனை எத்துணை முறை வணங்கினால் என்ன? இத்தலப் பயணத்தில் என்னால் அவர்களும், அவர்களால் நானும் சிறப்படைந்தோம்.

அன்பர் வேங்கடாசலனார் எடுத்த காரியம் எதையும் சிறப்புறச் செய்து முடிப்பவர். அதனால் இப்பயணத்தில் எவ்விதக் குறையும் எங்களுக்கு நேரவில்லை. தெய்வ பக்தியில் சிறந்த, தேவாரத்தலங்களைப் பல முறை வணங்கிய, சிவபூசைச் செல்வர், என் ஆருயிர் நண்பர் முத்த. வெ. சொ. அவர்கள் இப்பயணத்தில் எங்களுடன் பெரும்பாலும் கலந்து கொண்டது எங்கட்கு உறுதுணையாக இருந்தது. நல்ல இரசிகர். அன்பர் க. வெ. ராம. இராமசாமிச் செட்டியார் அவர்கள் பெரும்பாலான தலங்களுக்கு எங்களுடன் வந்து ஊக்கம் அளித்தார்கள். என் மைந்தர், புலவர் மு. இராமசாமி உடன் வந்து, நல்ல பணி செய்து, ஆங்காங்கு, தேவார – திவ்வியப் பிரபந்தப் பாடல்களைப் படித்து மகிழ்வித்தார். மற்றும் பல அன்பர்கள் எங்கள் பயணத்தில் அப்போதைக்கப்போது கலந்து கொண்டனர். சென்ற இடங்களில் பல பெரியார்கள் எங்கள் பயணத்திற்குப் பெருந்துணை புரிந்தனர். அவர்கள் அனைவருக்கும் நாங்கள் கடமைப் பட்டிருக்கின்றோம்.

தலையாத்திரையைக் களிப்போடு நடத்துதற்கு எல்லோரும் ஒன்றாக அமர்ந்து செல்லக் கூடிய, எல்லா வசதியும் உடைய, உலலாச ஊர்தி ஒன்றை அன்பர் வேங்கடாசலனார் கொணர்ந்தது பயணத்துக்கே தனி அழகைத் தந்தது. இப்பயணத்தில் அன்பர் வேங்கடாசலனார் நிறைந்த பொருளைச் செலவிட்டார். அதனால் ஒன்றும் குறைவில்லை. செலவிட்ட பொருளை விட, எத்தனையோ மடங்கு அருளை அவர் பெற்று விட்டார்.

பயணத்தில் உடன் வந்த அன்பர்களை யெல்லாம் அன்னார் நன்கு கண்காணித்தார். அதினும் பெருமித மாக எனக்கு அவர் செய்த சிறப்பை மறக்குமாறு

இல்லை. அன்பர் வேங்கடாசலனார் இத்தகைய திருத்தலப் பயணம் ஒன்றை மேற்கொள்வார் என்று யாரும் கருதியிருக்க மாட்டார்கள். இறைவன் அருள் கூட்டுமானால் எதுவும் நடக்கும். திருத்தலப் பயணத்தைவிட அவர் செய்த மற்றொரு சிறந்த செயலை இங்கே சொல்லப் போகின்றேன். நீங்கள் எல்லாம் வியப்படைவீர்கள். இப்போது அவர் சுத்த சைவர் ; என்றால் என்ன? புலால் உணவை அடியோடு நிறுத்தி விட்டார். இதை விட நல்ல செய்தி உங்களுக்கு நான் என்ன சொல்ல முடியும்?

எங்கள் திருப்பயணத்தை நூலாக வடித்துத் தர வேண்டும் என்பது பலர் விருப்பம். நான் முன்னர் பயணம்மேற்கொண்ட போதே இத்தகைய நூலொன்று எழுத விரும்பினேன். அப்பொழுது எழுதியிருந்தால் இரண்டாவது பயணம் இடம் பெற்றிருக்காதல்லவா? எனவேதான் ஆண்டவன் அதனை நிறுத்தினார் போலும்.

எங்களுக்குச் சிவன், திருமால் என்ற பாகுபாடு இன்மையின், இருவகையான தலப்பயணத்தையும்மேற்கொண்டோம். நான் முன்னர் சென்றபோதும் இரண்டு தலங்களுக்கும்தான் சென்று வந்தேன். எனவே இந்நூலில் சிவத்தலங்கள், திருமால்தலங்கள் இரண்டையும் பற்றிய செய்திகள் நிறைய வந்திருக்கின்றன. இரண்டும் சேர்ந்த இந்நூல் பொது நோக்குடைய மெய்யறிவுடையாருக்குப் பெரிதும் பயன்படும்.

இந்நூலின் தனிச் சிறப்பு ஒவ்வொரு தலத்தையும் பற்றிய அருளாளர் பாடல்களைத் தலங்கள்தோறும் அமைத்திருப்பது. மொத்தம் தேவார, திருவாசக, திவ்வியப் பிரபந்தப் பாடல்களும், பின் வந்த பெரியார்கள் பாடல்களும் சேர்ந்து 813 அருட்பாக்கள் இந்நூலை அலங்கரிக்கின்றன. இவற்றைப் பாடம் செய்து அன்பர்கள் சிறப்படைய வேண்டும் என்பது எங்கள் விருப்பம்.

தேவார – திவ்வியப் பிரபந்தத் தலங்களுள் நாட்டுக் கோட்டை நகரத்தார் செய்த திருப்பணி யின் தொகை (ரூ 4,46,39,500/-) ஏறக்குறைய நாலரைக் கோடி ரூபாய் ஆகும். அதன் விபரத்தை

நூலின் பின்னே சேர்த்திருக்கின்றோம். இத்தலங்களில் செய்த கோயில் திருப்பணிதான் இந்தத் தொகை பாடசாலை. நந்தவனம் முதலிய அறச் செயல்களின் கணக்கு இதில் சேரவில்லை. இது தவிர, பாடல் தலங்கள் அல்லாத கோவில்கள் பல நகரத்தார் கட்டியிருக்கின்றனர்.

இந்நூலில் தேவாரத் தலங்களையும், திவ்வியப் பிரபந்தத் தலங்களையும் வணங்கும் "போற்றிப் பாடல்"கள் பின்னே சேர்க்கப் பெற்றிருக்கின்றன. அது வணங்குவார்க்குப் பெரிதும் பயன்படும்.

இந்த நூலை, சுருங்கிய காலத்திற்குள் மிக அழகாக அச்சிட்டுத் தந்த, சென்னை பதஞ்சலி அச்சக உரிமையாளர் அன்பர் பதுமநாப அய்யர் அவர்கட்கும் அதன் நிருவாகியாகிய "அம்மாஞ்சி" என்று அன்போடு அழைக்கப்படும் பதுமநாபன் அவர்கட்கும் நன்றி.

என் நூல் எல்லாவற்றினும் எனக்குப் பெருந் துணையாக இருக்கும். எங்களூர் பொறியியற்கல்லூரியில் பணிபுரியும், எனது அருமைத் துணைவர் பதுமநாபன் அவர்கட்கு நன்றி.

இந்நூல் எழுதுவதில் துணைபுரிந்த காரைக்குடி அழகப்பா கல்லூரித் தமிழ்ப் பகுதியைச் சேர்ந்த அன்பர்கள் விசுவனாதன், சொக்கலிங்கன், முருகப்பன் ஆகியவர்கட்கு நன்றி.

இந்த நல்ல நூலை உள்ளக்களிப்புடன் தம் அறுபதாம் ஆண்டு நிறைவு விழாவாகிய இன்று வெளியிட்டுப் புகழ் பெறும், என் மீது பேரன்பும், பெருமதிப்பும் கொண்ட, அரிய நண்பர் வேங்கடாசலனாருக்கு நன்றி.

இன்று மணிவிழாக் காணும் அன்பர் வேங்கடாசலனாருக்கு இன்னோரன்ன பணிகள் பல செய்து உயர, பல்லாண்டு பல்லாண்டு கூறுகின்றேன்.

சென்னை
18–10–66

ராய. சொ.

# திருத்தலவரிசை

## தேவாரத்தலங்கள் - 275

### சோழநாடு 191

1 கோயில் (சிதம்பரம்)
2 திருவேட்களம்.
3 திருநெல்வாயில் (சிவபுரி)
4 திருக்கழிப்பாலை
5 திருநல்லூர்ப்பெருமணம் (ஆச்சாபுரம்)
6 திருமயேந்திரப்பள்ளி
7 தென்திருமுல்லைவாயில்
8 திருக்கலிக்காமூர் (அன்னப்பன்பேட்டை)
9 திருச்சாய்க்காடு (சாயாவனம்)
10 திருப்பல்லவனீச்சுரம் (காவிரிப்பூம்பட்டினம்)
11 திருவெண்காடு
12 கீழைத்திருக்காட்டுப்பள்ளி
13 திருக்குருகாவூர்
14 சீர்காழி
15 திருக்கோலக்கா
16 திருப்புள்ளிருக்குவேளூர் (வைத்தீசுரன்கோவில்)
17 திருக்கண்ணார்கோயில் (குறுமாணக்குடி)
18 திருக்கடைமுடி (கீழையூர்)
19 திருநின்றியூர்
20 திருப்புன்கூர்
21 திருநீடூர்
22 அன்னியூர்
23 வேள்விக்குடி
24 எதிர்கொள்பாடி (மேலைத்திருமணஞ்சேரி)
25 திருமணஞ்சேரி (கீழைத்திருமணஞ்சேரி)
26 திருக்குறுக்கை
27 கருப்பறியலூர் (மேலைக்காழி, தலைஞாயிறு)
28 குரக்குக்கா
29 திருவாளொளிப்புத்தூர்
30 மண்ணிப்படிக்கரை (இலுப்பைப்பட்டு)
31 ஓமாம்புலியூர்
32 கானாட்டுமுள்ளூர்
33 திருநாரையூர்
34 கடம்பூர் (மேலைக்கடம்பூர்)
35 பந்தணைநல்லூர்
36 கஞ்சனூர்

37 திருக்கோடிக்கா
38 திருமங்கலக்குடி
39 திருப்பனந்தாள்
40 திருஆப்பாடி
41 திருச்சேய்ஞலூர்
42 திருந்துதேவன்குடி
43 திருவியலூர்
44 கொட்டையூர்
45 இன்னம்பர்
46 திருப்புறம்பயம்
47 திருவிசயமங்கை
48 திருவைகாவூர்
49 வடகுரங்காடுதுறை
50 திருப்பழனம்
51 திருவையாறு
52 திருநெய்த்தானம்
53 பெரும்புலியூர்
54 திருமழபாடி
55 திருப்பழுவூர்
56 திருக்கானூர்
57 அன்பில்ஆலந்துறை (அன்பில்)
58 திருமாந்துறை
59 திருப்பால்துறை
60 திருவானைக்கா(ஜம்புகேசுரம்)
61 திருப்பைஞ்ஞீலி
62 திருப்பாச்சிலாச்சிராமம் (திருவாசி)
63 திருஈங்கோய்மலை (திருவிங்கநாதமலை)
64 திருவாட்போக்கி (மாணிக்கமலை)
65 கடம்பந்துறை (குழித்தலை)
66 திருப்பராய்த்துறை
67 கற்குடி (உண்ணக்கொண்டான்)
68 மூக்கிச்சுரம் (உறையூர்)
69 திருச்சிராப்பள்ளி
70 எறும்பியூர்
71 நெடுங்களம்
72 மேலைத்திருக்காட்டுப்பள்ளி
73 திருவாலம்பொழில்
74 திருப்பூந்துருத்தி
75 கண்டியூர்
76 திருச்சோற்றுத்துறை

77 திருவேதிகுடி
78 தென்குடித்திட்டை (திட்டை)
79 திருப்புள்ளமங்கை
80 சக்கரப்பள்ளி (ஐயம்பேட்டை)
81 திருக்கருகாவூர் (திருக்களாவூர்)
82 திருப்பாலைத்துறை
83 திருநல்லூர்
84 ஆவூர்
85 திருச்சத்திமுத்தம்
86 பட்டீச்சரம
87 பழையாறைவடதளி
88 திருவலஞ்சுழி
89 குடமூக்கு (கும்பகோணம்)
90 குடந்தைக்கீழ்க்கோட்டம்
91 குடந்தைக்காரோணம்
92 திருநாகேச்சரம்
93 திருவிடைமருதூர்
94 தென்குரங்காடுதுறை (ஆடுதுறை)
95 திருநீலக்குடி (தென்னல்குடி)
96 வைகன்மாடக்கோயில்
97 திருநல்லம் (கோனேரிராசபுரம்)
98 கோழம்பம்
99 திருவாவடுதுறை
100 திருத்துருத்தி(குற்றாலம்)
101 திருவழுந்தூர்
102 திருமயிலாடுதுறை (மாயூரம்)
103 திருவிளநகர்
104 திருப்பறியலூர் (பரசலூர்)
105 திருச்செம்பொன் பள்ளி
106 திருநனிபள்ளி (புஞ்சை)
107 திருவலம்புரம்
108 தலைச்சங்காடு
109 ஆக்கூர்
110 திருக்கடவூர்
111 திருக்கடவூர் மயானம்
112 திருவேட்டக்குடி
113 திருத்தெளிச்சேரி
114 தருமபுரம்
115 திருநள்ளாறு
116 கோட்டாறு
117 அம்பர்ப்பெருந்திருக்கோயில்

118 அம்பர்மாகாளம்
119 திருமீயச்சூர்
120 திருமீயச்சூர் இளங்கோயில்
121 திலதைப்பதி (மணிமுத்தம்)
122 திருப்பாம்புரம்
123 சிறுகுடி
124 திருவீழிமிழலை
125 திருவன்னியூர்
126 கருவிலி
127 பேணுபெருந்துறை (திருப்பந்துறை)
128 நறையூர்ச்சித்திச்சுரம்
129 அரிசிற்கரைப்புத்தூர்
130 சிவபுரம்
131 கலையநல்லூர் (சாக்கோட்டை)
132 கருக்குடி (மருதாந்தநல்லூர்)
133 திருவாஞ்சியம்
134 நன்னிலம்
135 திருக்கொண்டீச்சுரம்
136 திருப்பனையூர்
137 திருவிற்குடி
138 திருப்புகலூர்
139 திருப்புகலூர் வர்த்தமானீச்சுரம்
140 இராமனதீச்சுரம்
141 திருப்பயற்றூர்
142 திருச்செங்காட்டங்குடி
143 திருமருகல்
144 திருச்சாத்தமங்கை
145 நாகைக்காரோணம் (நாகைப்பட்டினம்)
146 சிக்கல்
147 கீழ்வேளூர்
148 தேவூர்
149 பள்ளியின்முக்கூடல் (அரியான்பள்ளி)
150 திருவாரூர்
151 திருவாரூர் அரநெறி
152 திருவாரூர்ப்பரவையுள்மண்தளி
153 திருவிளமர்
154 கரவீரம் (கரையபுரம்)
155 பெருவேளூர் (காட்டூரையன்பேட்டை)
156 தலையாலங்காடு
157 குடவாயில்
158 திருச்சேறை
159 நாலூர் மயானம்
160 கடுவாய்க்கரைப்புத்தூர்
161 இரும்பூளை (ஆலங்குடி)
162 அரதைப்பெரும்பாழி (அரித்துவாரமங்கலம்)
163 அவளிவள்நல்லூர்
164 பரிதிநியமம்

165 வெண்ணி
166 பூவனூர்
167 பாதாளீச்சுரம் (பாமணி)
168 திருக்களர்
169 சிற்றேமம்
170 திருஉசாத்தானம்
171 இடும்பாவனம்
172 கடிக்குளம்
173 தண்டலைநீள்நெறி
174 கோட்டூர்
175 திருவெண்துறை
176 கொள்ளம்பூதூர்
177 பேரெயில்
178 திருக்கொள்ளிக்காடு
179 திருத்தெங்கூர்
180 திருநெல்லிக்கா
181 திருநாட்டியத்தான்குடி
182 திருக்காறாயில் (திருக்காறைவாசல்)
183 கன்றாப்பூர்
184 வலிவலம்
185 கைச்சினம்
186 திருக்கோளிலி
187 திருவாய்மூர்
188 திருமறைக்காடு (வேதாரணியம்)
189 அகத்தியான்பள்ளி
190 திருக்கோடி (குழகர்கோயில்)
191 திருவிடைவாய்

## 2. ஈழநாடு 2

192 திருக்கோணமலை
193 திருக்கேதீச்சுரம்

## 3. பாண்டிநாடு 14

194 திருஆலவாய் (மதுரை)
195 திருஆப்பனூர் (திருஆப்புடையார்கோயில்)
196 திருப்பரங்குன்றம்
197 திருவேடகம்
198 கொடுங்குன்றம் (பிரான்மலை)
199 திருப்புத்தூர்
200 திருப்புனவாயில்
201 இராமேச்சுரம்
202 திருஆடானை
203 திருக்கானப்பேர் (காளையார் கோவில்)
204 திருப்பூவணம்
205 திருச்சுழியல்
206 திருக்குற்றாலம்
207 திருநெல்வேலி

## 4. மலைநாடு 1

208 திருஅஞ்சைக்களம்

## 5. கொங்குநாடு 7

209 அவிநாசி
210 திருமுருகன்பூண்டி
211 திருநணா (பவாநி)
212 திருச்செங்குன்றூர் (திருச்செங்கோடு)
213 வெஞ்சமாக்கூடல்
214 திருப்பாண்டிக்கொடுமுடி (கொடுமுடி)
215 கருவூர்

## 6. நடுநாடு 22

216 திருநெல்வாயில் அரத்துறை (திருவரத்துறை)
217 பெண்ணாகடம்
218 கூடலையாற்றூர்
219 எருக்கத்தம்புலியூர் (இராசேந்திரன்பட்டினம்)
220 திருத்தினை நகர்
221 திருச்சோபுரம் (தியாகவல்லி)
222 திருவதிகை
223 திருநாவலூர்
224 திருமுதுகுன்றம் (விருத்தாசலம்)
225 திருநெல்வெண்ணெய்
226 திருக்கோவலூர்
227 அறையணி நல்லூர்
230 துறையூர்
231 வடுகூர் (ஆண்டார் கோயில்)
232 திருமாணிகுழி
233 திருப்பாதிரிப்புலியூர்
234 திருமுண்டீச்சரம்
235 புறவார் பனங்காட்டூர் (பனையபுரம்)
236 திருவாமாத்தூர்
237 திருவண்ணாமலை

## 7. தொண்டைநாடு 32

238 திருக்கச்சியேகம்பம் (காஞ்சிபுரம்)
239 திருக்கச்சிமேற்றளி "
240 ஓணகாந்தன்தளி "
241 திருக்கச்சி அநேகதங்காபதம் "
242 திருக்கச்சி நெறிக்காரைக்காடு
243 குரங்கணில்முட்டம்

244 மாகறல்
245 திருவோத்தூர்
246 திருப்பனங்காட்டூர் (திருப்பனங்காடு)
247 திருவல்லம்
248 திருமாற்பேறு
249 திருவூறல் (தக்கோலம்)
250 இலம்பையங்கோட்டூர்
251 திருவிற்கோலம்
252 திருவாலங்காடு
253 திருப்பாசூர்
254 திருவெண்பாக்கம்
255 திருக்கள்ளில்
256 திருக்காளத்தி
257 திருஒற்றியூர்
258 திருவலிதாயம் (பாடி)
259 வடதிருமுல்லை வாயில்
260 திருவேற்காடு
261 மயிலாப்பூர்
262 திருவான்மியூர்
263 திருக்கச்சூர்
264 திருவிடைச்சுரம்
265 திருக்கழுக்குன்றம்
266 அச்சிறுபாக்கம்
267 திருவக்கரை
268 அரசிலி (ஒழிந்தியாப்பட்டு)
269 இரும்பைமாகாளம்

8. துளுவநாடு 1

270 கோகர்ணம்

9. வடநாடு 5

271 ஸ்ரீ பருப்பதம் (ஸ்ரீ சைலம், மல்லிகார்ச்சுனபுரம்)
272 இந்திரநீலப்பருப்பதம்
273 அநேகதங்காபதம்
274 திருக்கேதாரம்
275 திருநொடித்தான் மலை (கயிலாயம்)

# திருத்தல வரிசை

## (திவ்வியபிரபந்தத் தலங்கள் – 108)

### 1. சோழநாடு 40

1 கோயில் (திருஅரங்கம்)
2 கோழி (உறையூர்)
3 தஞ்சைமாமணிக்கோயில்
4 அன்பில்
5 உத்தமர்கோயில் (கரம்பனூர்)
6 திருவெள்ளறை
7 புள்ளம்பூதங்குடி
8 திருப்பேர்நகர் (கோவிலடி)
9 ஆதனூர்
10 திருஅழுந்தூர் (தேரழுந்தூர்)
11 சிறுபுலியூர்
12 திருச்சேறை
13 தலைச்சங்கநாண்மதியம் (தலைச்சங்காடு)
14 திருக்குடந்தை (கும்பகோணம்)
15 கண்டியூர்
16 திருவிண்ணகர் (ஒப்பிலியப்பன் கோயில்)
17 திருக்கண்ணபுரம்
18 திருவாலிதிருநகரி
19 திருநாகை (நாகப்பட்டினம்)
20 திருநறையூர் (நாச்சியார் கோயில்)
21 நந்திபுரவிண்ணகரம் (நாதன்கோயில்)
22 திருஇந்தளூர் (திருவழுந்தூர்)
23 தில்லைத்திருச்சித்திரகூடம் (சிதம்பரம்)
24 காழிச்சீராம விண்ணகரம் (தாடாளன் சந்நிதி)
25 கூடலூர் (ஆடுதுறைப்பெருமாள் கோயில்)
26 திருக்கண்ணங்குடி
27 திருக்கண்ணமங்கை
28 கவித்தலம்
29 திருவெள்ளியங்குடி
30 மணிமாடக்கோயில் (திருநாங்கூர்)
31 வைகுந்தவிண்ணகரம் "
32 அரிமேயவிண்ணகரம் "
33 வண்புருடோத்தமம் "
34 செம்பொன்செய்கோயில் "
35 திருத்தெற்றியம்பலம் "
36 திருத்தேவனார் தொகை
37 திருமணிக்கூடம்

38 காவளம்பாடி
39 திருவெள்ளக்குளம் (அண்ணன்கோயில்)
40 பார்த்தன்பள்ளி

### 2. பாண்டிநாடு 18

41 திருமாலிருஞ்சோலை
42 திருக்கோட்டியூர்
43 திருமெய்யம்
44 திருப்புல்லாணி (தர்ப்பசயனம்)
45 திருத்தண்காலூர் (திருத்தங்கால்)
46 திருமோகூர்
47 திருக்கூடல் (தென்மதுரை)
48 ஸ்ரீவில்லிபுத்தூர்
49 திருக்குருகூர் (ஆழ்வார் திருநகரி) நவதிருப்பதி
50 தொலைவில்லிமங்கலம் (இரட்டைத்திருப்பதி) "
51 திருப்புளிங்குடி "
52 திருப்பேரை "
53 ஸ்ரீ வைகுந்தம் "
54 வரகுணமங்கை "
55 திருக்குளந்தை (பெருங்குளம்) "
56 திருக்கோளூர் "
57 சிரீவரமங்கை
58 திருக்குறுங்குடி

### 3. மலைநாடு 13

59 திருஅனந்தபுரம் (அனந்தசயனம்)
60 திருவண்பரிசாரம் (திருப்பதிசாரம்)
61 திருக்காட்கரை
62 திருமூழிக்களம்
63 குட்டநாடு (திருப்புலியூர், புலியூர்)
64 திருச்செங்குன்றூர் (செங்கன்னூர்–சிற்றாறு)
65 திருநாவாய்
66 திருவல்லவாழ் (திருவல்லாய்)
67 திருவண்வண்டூர் (திருவமுண்டூர்)
68 திருவாட்டாறு
69 வித்துவக்கோடு
70 திருக்கடித்தானம்
71 திருஆறன்விளை (ஆறன்விளை)

### 4. நடுநாடு

72 திருஅயிந்திரபுரம்
73 திருக்கோவலூர்

## 5. தொண்டைநாடு 22

74 அத்தியூர் (காஞ்சி)
75 அட்டபுயகரம் (அஷ்டபுஜம்) "
76 திருத்தண்கா (விளக்கொளிக்கோயில்) "
77 வேளுக்கை "
78 பாடகம் (பாண்டவதூதர் சந்நிதி) "
79 நீரகம் "
80 நிலாத்திங்கள் துண்டம் "
81 ஊரகம் (உலகளந்த பெருமாள்கோயில்) "
82 திருவெஃகா (யதோத்காரிசந்நிதி) "
83 காரகம் "
84 கார்வானம் "
85 கள்வனூர் "
86 பவளவண்ணம் (பவளவண்ணர் சந்நிதி) "
87 பரமேச்சுரவிண்ணகரம் "
(வைகுண்டப்பெருமாள் கோயில்)
88 திருப்புட்குழி
89 திருநின்றவூர்
90 திருஎவ்வுள் (திருவள்ளூர்)
91 திருநீர்மலை
92 திருஇடஎந்தை (திருவிடந்தை)
93 திருக்கடல்மல்லை (மகாபலிபுரம்)
94 திருவல்லிக்கேணி
95 கடிகை (கடிகாசலம்)(சோளிங்கபுரம்)

## 6. வடநாடு 12

96 திருவேங்கடம் (திருப்பதி)
97 சிங்கவேள்குன்றம் (அகோபிலம்)
98 அயோத்தி
99 நைமிசாரணியம்
100 சாளக்கிராமம்
101 வதரியாச்சிரமம் (பதரிகாசிரமம்)
102 கண்டம் என்னும் கடிநகர்
103 திருப்பிரிதி (ஜோஷிமடம்)
104 துவாரகை.
105 வடமதுரை
106 திருஆய்ப்பாடி (கோகுலம்)
107 திருப்பாற்கடல்

## 7 பரமபதம்

108 பரமபதம்

# தேவாரத் தலப் பாடல் தொகை

| தொடர் எண் | பாடியோர் பெயர் | பாடல் தொகை |
|---|---|---|
| 1 | சம்பந்தர் | 221 |
| 2 | அப்பர் | 127 |
| 3 | சுந்தரர் | 85 |
| 4 | மணிவாசகர் | 27 |
| 5 | திருமாளிகைத்தேவர் | 1 |
| 6 | கருவூர்த்தேவர் | 4 |
| 7 | பூந்துருத்திநம்பிகாடநம்பி | 2 |
| 8 | கண்டராதித்தர் | 1 |
| 9 | வேணாட்டடிகள் | 1 |
| 10 | திருவாலி அமுதனார் | 1 |
| 11 | புருடோத்தமநம்பி | 1 |
| 12 | சேதிராயர் | 1 |
| 13 | சேந்தனார் | 4 |
| 14 | திருமூலர் | 1 |
| 15 | காரைக்கால் அம்மையார் | 2 |
| 16 | ஐயடிகள் காடவர் கோன் | 20 |
| 17 | சேரமான் பெருமாள் நாயனார் | 2 |
| 18 | ஆலவாயுடையார் | 1 |
| 19 | கபிலர் | 1 |
| 20 | நக்கீரர் | 4 |
| 21 | பட்டினத்துப்பிள்ளையார் | 7 |
| 22 | நம்பியாண்டார் நம்பி | 1 |
| 23 | சேக்கிழார் | 58 |
| 24 | வில்லிபுத்தூர் ஆழ்வார் | 7 |
| 25 | பரஞ்சோதி முனிவர் | 2 |
| 26 | சிவஞானயோகிகள் | 1 |
| 27 | தாயுமானார் | 2 |
| 28 | குரு நமச்சிவாயர் | 1 |
| 29 | சைவ எல்லப்ப நாவலர் | 2 |
| 30 | சின்னத்தம்பிப் பாவலர் | 1 |
| 31 | திரிகூட ராசப்பக் கவிராயர் | 1 |
| 32 | சொக்கநாதப் புலவர் | 1 |
| 33 | இராமலிங்க சுவாமிகள் | 5 |
| | ஆக | 596 |

# பிரபந்தத்தலப் பாடல் தொகை

| தொடர் எண் | பாடியோர் பெயர் | பாடல் தொகை |
|---|---|---|
| 1 | பெரியாழ்வார் | 18 |
| 2 | ஆண்டாள் | 11 |
| 3 | குலசேகர ஆழ்வார் | 8 |
| 4 | திருமழிசையாழ்வார் | 14 |
| 5 | தொண்டர்அடிப்பொடியாழ்வார் | 4 |
| 6 | திருப்பாணாழ்வார் | 3 |
| 7 | திருமங்கையாழ்வார் | 81 |
| 8 | பொய்கையாழ்வார் | 6 |
| 9 | பூதத்தாழ்வார் | 10 |
| 10 | பேயாழ்வார் | 10 |
| 11 | நம்மாழ்வார் | 36 |
| 12 | கம்பர் | 3 |
| 13 | பெருந்தேவனார் | 3 |
| 14 | வில்லிபுத்தூர் ஆழ்வார் | 2 |
| 15 | பிள்ளைப்பெருமாள் ஐயங்கார் | 3 |
| 16 | இராமலிங்க சுவாமிகள் | 3 |
| 17 | அழகர்கலம்பகம் | 1 |
| 18 | தனிப்பாடல் | 1 |
| | ஆக | 217 |

# 1. சோழநாடு

தேவாரத்தலம் *191*

சிவமயம்.

# தேவாரத் திருத்தலங்கள் 275

--: o :--

சோழநாட்டு ஒரு நூற்றுத்
தொண்ணூற்று ஒன்று;
தொல்இலங்கை இரண்டு;தமிழ்ப்
பாண்டி நாட்டில்

ஏழிரண்டு; மலைநாட்டில்
ஒன்று; கொங்கில்
ஏழு;நடு நாட்டில்இரு
பத்துஇ ரண்டு;

ஏழு.ஐந்தோடு இருபதாம்
தொண்டை நாட்டில்;
எண்ஒன்றே துளுவத்தில்;
வடநாட்டு ஐந்தே;

ஏழுபத்தைந் துடன்இரண்டு
நூறு கொண்டது.
ஈசன்உறை தேவாரத்
திருத்த லங்கள்.

# 1. கோயில்

## (சிதம்பரம்)

## திருமூலநாதர்–உமையம்மை

## சபாநாயகர்–சிவகாமியம்மை

**சம்பந்தர்: 2; அப்பர்: 8; சுந்தரர்: 1.**

**வழிபட்டநாள்: 25-12-55; 13-10-65.**

சிதம்பரம்: இரயில் நிலையம்.

கோயில் என்றாலே சிதம்பரத்தைக் குறிக்கும். சைவர்களுக்குக் கோயில் சிதம்பரம். வைணவர்களுக்குக் கோயில் திருவரங்கம். சிதம்பரத்திற்குப் பொன்னம்பலம் என்று பெயர். அம்பலம், அரங்கம் இரண்டுமே சபையைக் குறிப்பன.

தில்லைப்பதி மூவர் தேவாரம் பெற்றதோடு திருவாசகத்தால் பெரிதும் சிறப்பிக்கப் பெற்றது. திருவாசகத்தில் சிதம்பரம் 65 இடங்களில் செப்பப் பெறுகிறது. திருவாசகம் அருளிய பெரியார் மணிவாசகப் பெருமான் திருவாசகத்தின் பொருள், 'கூத்தப் பெருமானே' என்று காட்டித் தில்லைத் தலத்திலேயே கூத்தப் பெருமான் திருவடி நீழலில் இரண்டறக் கலந்தார் என்ப.

தேவார–திருவாசகம் தவிர, பன்னிரு திருமுறைகளுள், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருமந்திரம், பதினொராம் திருமுறை, பெரியபுராணம் ஆகிய அனைத்தினும் தில்லைக் கூத்தன் பெருமை பெருகப் பேசப் பெற்றிருக்கின்றன.

திருநீலகண்ட நாயனார், திருநாளைப்போவார் நாயனார், கூற்றுவ நாயனார், கோச்செங்கட் சோழ நாயனார், கணம்புல்ல நாயனார் ஆகிய, அறுபான் மும்மை நாயன்மார்களுள் ஐவரும், மறைஞான சம்பந்த சிவாச்சாரியார், உமாபதி சிவாச்சாரியார் ஆகிய, சந்தான குரவர் நால்வருள் இருவரும் வீடு பேறு அடைந்த பெருமை பெற்ற தலம் தில்லை.

மணிவாசகப்பெருமான் "திருச்சிற்றம்பலக்கோவையார்" பாடி அருளிய பதி. சேரமான் பெருமாள் நாயனார் பொன்வண்ணத்து அந்தாதி பாடிய புண்ணியப் பதி.

சேக்கிழார் அடிகள் "பெரியபுராணம்" பாடி, யானை மீது இவர்ந்து, அநபாய சோழனால் சிறப்பிக்கப் பெற்று அரங்கேற்றிய அழகிய பதி.

நம்பியாண்டார் நம்பியால் தேவாரப்பதிகங்கள் கண்டெடுக்கப்பெற்ற திருத்தலம்.

இன்னோரன்ன பெருமைகள் பல வாய்ந்த தில்லைத் திருத்தலமே "கோயில்" என்பது.

சாம்பந்தர்

செல்வ நெடுமாடம் சென்று சேண் ஓங்கிச்
செல்வ மதிதோயச் செல்வம் உயர்கின்ற
செல்வர் வாழ்தில்லைச் சிற்றம் பலமேய
செல்வன் கழல்ஏத்தும் செல்வம் செல்வமே.

அப்பர்

அரும்துணையே, அடியார்தம் அல்லல் தீர்க்கும்
அருமருந்தை, அகல்ஞாலத்து அகத்துள் தோன்றி
வரும்துணையும், சுற்றமும், பற்றும் விட்டு,
வான்புலன்கள் அகத்துஅடக்கி, மடவா ரோடும்,
பொருந்துஅணைமேல் வரும்பயனை, போகம் மாற்றி,
பொதுநீக்கித் தனைநினைய வல்லோர்க்கு என்றும்
பெரும்துணையை, பெரும்பற்றப் புலியூ ரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே.

சுந்தரர்

கருமையார் தருமனார் தமர்நம்மைக்
கட்டியகட்டு அறுப்பிப் பானை,
அருமையாம் தன் உலகம் தருவானை,
மண்ணுலகம் காவல் பூண்ட

உரிமையால் பல்லவர்க்குத் திறைகொடா
மன்னவரை மறுக்கம் செய்யும்
பெருமையார் புலியூர்ச்சிற் றம்பலத்துஎம்
பெருமானைப் பெற்றாம் அன்றே.

### மணிவாசகர்

பொய்ஆய செல்வத்தே புக்குஅழுந்தி நாள்தோறும்
மெய்யாக் கருதிக் கிடந்தேனை, ஆட்கொண்ட
ஐயா!என் ஆர்உயிரே! அம்பலவா! என்று அவன்தன்
செய்யார் மலர் அடிக்கே சென்றுஊதாய் கோத்தும்பீ!

(திருவாசகம்)

நிருத்தம் பயின்றவன் சிற்றம்
பலத்துஃநெற் றித்தனிக்கண்
ஒருத்தன் பயிலும் கயிலை
மலையின் உயர்குடுமித்
திருத்தம் பயிலும் சுனைகுடைந்து
ஆடிச் சிலம்புஎதிர்கூய்
வருத்தம் பயின்றுகொல் லோ?வல்லி
மெல்லியல் வாடியதே.

(திருக்கோவையார்)

### திருமாளிகைத்தேவர்

கருவளர் மேகத்து அகடுதோய் மகுடக்
கனகமா ளிகைகலந்து எங்கும்
பெருவளர் முத்தீ நான்மறைத் தொழில்சால்
எழில்மிகு பெரும்பற்றப் புலியூர்த்
திருவளர் தெய்வப் பதிவதி நிதியம்
திரண்டசிற் றம்பலக் கூத்தா!
உருவளர் இன்பச் சிலம்பொலி அலம்பும்
உன்அடிக் கீழதுஎன் உயிரே.

(திருவிசைப்பா)

### கருவூர்த்தேவர்

கண்பனி அரும்பக் கைகள்மொட் டித்துஎன்
 களைகணே ஓலம்என்று ஓலிட்டு.
என்பெலாம் உருகும் அன்பர்தம் கூட்டத்து
 என்னையும் புணர்ப்பவன் கோயில்.
பண்பல தெளிதேன் பாடிநின் றாடப்
 பனிமலர்ச் சோலைசூழ் மொழுப்பில்
செண்பகம் அரும்பும் பெரும்பற்றப் புலியூர்த்
 திருவளர் திருச்சிற்றம் பலமே.

(திருவிசைப்பா)

### பூந்துருத்திநம்பி காடநம்பி

அல்லிஅம் பூம்பழனத்து ஆமூர்நா வுக்குஅரசைச்
செல்ல நெறிவகுத்த சேவகனே! தென்தில்லைக்
கொல்ஐ விடைஏறி. கூத்துஆடு அரங்காகச்
செல்வம் நிறைந்தசிற் றம்பலமே சேர்ந்தனையே.

(திருவிசைப்பா)

### கண்டராதித்தர்

மானைப் புரையும் மடமென்
 னோக்கி மாமலை யாளோடும்
ஆன்அஞ்சு ஆடும் சென்னி
 மேலோர் அம்புலி சூடும்அரன்
தேனைப் பாலைத் தில்லை
 மல்கு செம்பொனின் அம்பலத்துக்
கோனை.ஞானக் கொழுந்து
 தன்னைக் கூடுவது என்றுகொலோ?

(திருவிசைப்பா)

### வேணாட்டடிகள்

"பாவார்ந்த தமிழ்மாலை பத்தர்அடித் தொண்டன்எடுத்து
ஓவாதே அழைக்கின்றான்" என்றுஅருளி நன்றுமிகத்
தேவே!தென் திருத்தில்லைக் கூத்தாடீ! நாய்அடியேன்,
சாவாயும் நினைக்கண்டால் இனிஉனக்குத் தடுப்பரிதே!

(திருவிசைப்பா)

### திருவாலி அமுதனார்

அன்ன நடையார் அமுத மொழியார்
அவர்கள் பயில்தில்லைத்

தென்னன் தமிழும். இசையும் கலந்த
சிற்றம் பலம்தன்னுள்

பொன்னும் மணியும் நிரந்த தலத்துப்
புலித்தோல் பியற்கிட்டு.

மின்னின் இடையாள் உமையாள் காண
விகிர்தன் ஆடுமே.

(திருவிசைப்பா)

### புருடோத்தம நம்பி

வானவர்கள் வேண்ட வளர்நஞ்சை உண்டார்தாம்.
ஊனமிலா என்கை ஒளிவளைகள் கொள்வாரோ?
தேன்நல்வரி வண்டறையும் தில்லைச்சிற் றம்பலவர்
நான்நமரோ என்னாதே நாடகமே ஆடுவரே.

(திருவிசைப்பா)

### சேதிராயர்

சேல் உலாம்வயல் தில்லைஉ ளீர்!உமைச்
சால நாள் அயல் சார்வதி னால்இவள்
வேலை ஆர்விடம் உண்டுஉகந் திர்என்று
மால தாகும்என் வாள்நு தல்லே!

(திருவிசைப்பா)

### சேந்தனார்

மன்னுக தில்லை! வளர்கநம்
பத்தர்கள்! வஞ்சகர் போயகல!

பொன்னின்செய் மண்டபத்து உள்ளே
புகுந்து புவனிஎல் லாம்விளங்க;

அன்ன நடைமட வாள்உமை
கோன்அடி யோமுக்கு அருள்புரிந்து

பின்னைப்பிறவி அறுக்க நெறிதந்த
பித்தற்குப் பல்லாண்டு கூறுதுமே.

(திருப்பல்லாண்டு)

### திருமூலர்

மாணிக்கக் கூத்தனை, வண்தில்லைக் கூத்தனைப்
பூணுற்ற மன்றுள் புரிசடைக் கூத்தனைச்
சேணுற்ற சோதிச் சிவானந்தக் கூத்தனை,
ஆணிப்பொற் கூத்தனை யார்உரைப் பாரே.

(திருமந்திரம்)

### காரைக்கால் அம்மையார்

அடிபேரில் பாதாளம் பேரும்; அடிக்கண்
முடிபேரில் மாமுகடு பேரும்;—கடகம்
மறிந்துஆடு கைபேரில் வான்திசைகள் பேரும்
அறிந்துஆடும் ஆற்றாது அரங்கு.

(பதினொராம் திருமுறை)

### ஐயடிகள் காடவர்கோன் நாயனார்

ஓடுகின்ற நீர்மை ஒழிதலுமே, உற்றாரும்
கோடுகின்றார்; மூப்பும் குறுகிற்று;—நாடுகின்ற
நல்அச்சுஇற்று அம்பலமே நண்ணாமுன் நல்நெஞ்சே!
தில்லைச்சிற் றம்பலமே சேர்.

(பதினொராம் திருமுறை)

### சேரமான் பெருமாள் நாயனார்

ஆவன யாரே அழிக்கவல் லார்?அமை யாஉலகில்
போவன யாரேபொதியகிற் பார்?புரம் மூன்றுஎரித்த
தேவனை, தில்லைச் சிவனைத் திருந்துஅடி கைதொழுது
தீவினை யேன்இழந் தேன்;கலை யோடு செறிவளையே.

(பதினொராம் திருமுறை)

### பட்டினத்துப் பிள்ளையார்

நாயனைய என்னைப் பொருட்படுத்தி நன்களித்து
தாயனைய னாய்அருளும் தம்பிரான்,—தூயவிரை
மென்துழாய் மாலொடுஅயன் தேட வியன்தில்லை
மன்றுளே ஆடும் மணி.

(பதினொராம் திருமுறை)

### நம்பியாண்டார் நம்பி

நண்ணிய தீவினை நாசம் செலுத்தி, நமன்உலகத்து
எண்ணினை நீக்கி, இமையோர் உலகத்து இருக்கல்உற்றீர்!
பெண்ணினொர் பாகத்தன் சிற்றம் பலத்துப் பெருநடனைக்
கண்இணை ஆர்தரக் கண்டு,கை ஆரத் தொழுமின்களே.

(பதினொராம் திருமுறை)

### சேக்கிழார்

என்றும் இன்பம் பெருகும் இயல்பினால்
ஒன்று காதலித்து உள்ளமும் ஓங்கிட
மன்று ளார்அடி யாரவர் வான்புகழ்
நின்றது எங்கும் நிலவி உலகெலாம்.

(பெரிய புராணம்)

### வில்லிபுத்தூர் ஆழ்வார்

இன்னம்பல பலயோனியில் எய்தாநெறி பெறவே,
முன்னம்பலர் அடிதேடவும் முடிதேடவும் எட்டா
அன்னம்பல பயில்வார்புனல் அணிதில்லையுள் ஆடும்
பொன்னம்பல நாதன்கழல் பொற்போடு பணிந்தான்.

(பாரதம்)

### பரஞ்சோதி முனிவர்

உண்மைஅறிவு ஆனந்த உருவாகி
எவ்உயிர்க்கும் உயிராய், நீரின்
தண்மை,அனல் வெம்மைஎனத் தனை அகலாது
இருந்து,சரா சரங்கள் ஈன்ற
பெண்மைஉரு ஆகியதன் ஆனந்தக்
கொடி,மகிழ்ச்சி பெருக, யார்க்கும்
அண்மையதாய் அம்பலத்துள் ஆடிஅருள்
பேரொளியை அகத்துள் வைப்போம்.

(திருவிளையாடல்)

### சிவஞான யோகிகள்

சங்குஏந்தும் மலர்க்குடங்கைப் புத்தேளும்,
மறைக்கோவும், தழல்கால் சூலம்
அங்குஏந்தும் அம்மானும் தத்தமது
தொழில்தலைநின்று ஆற்றச் செய்துஓர்
பங்குஏந்தும் பெருமாட்டி விழிகளிப்ப
இருமுனிவர் பணிந்து போற்றக்
கொங்குஏந்தும் மணிமன்றுள் குனித்தருளும்
பெருவாழ்வைக் குறித்து வாழ்வாம்.

(காஞ்சிப் புராணம்)

### தாயுமானார்

சைவ சமய மேசமயம்;
சமயா தீதப் பழம்பொருளைக்
கைவந் திடவே மன்றுள்வெளி
காட்டும் இந்தக் கருத்தைவிட்டுப்
பொய்வந்து உழலும் சமயநெறி
புகுத வேண்டா; முத்திதரும்
தெய்வ சபையைக் காண்பதற்குச்
சேர வாரும் செகத்திரே!

### இராமலிங்க சுவாமிகள்

அருள்எலாம் அளித்த அம்பலத்து அமுதை,
அருட்பெரும் சோதியை, அரசை,
மருள்எலாம் தவிர்த்து வாழ்வித்த மருந்தை,
வள்ளலை, மாணிக்க மணியை,
பொருள்எலாம் கொடுத்துஎன் புந்தியில் கலந்த
புண்ணிய நிதியைமெய்ப் பொருளை,
தெருள்எலாம் வல்ல சித்தை,மெய்ஞ் ஞான
தீபத்தைக் கண்டுகொண் டேனே.

# 2. திருவேட்களம்

## பாசுபதேசுவரர்–நல்லநாயகி

*சம்பந்தர்: 2;   அப்பர்: 1.*
*வழிபட்டநாள்:* **4-7-57; 6-1-66**

சிதம்பரத்திற்கு அணித்தே இரண்டு கல். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தை ஒட்டி இருக்கின்றது. பார்த்தனுக்குப் பாசுபதம் கொடுத்த தலம். பாசுபதம் ஏந்திய புறப்பாட்டுத் திருவுருவமும், பார்த்தன் உருவமும் கோயிலில் இருக்கின்றன.

*சம்பந்தர்*

ஆழ்தரு மால்கடல் நஞ்சினை உண்டார்.
அமுதம் அமரர்க்குஅருளி.
சூழ்தரு பரம்பரை ஆர்த்துச் சூலமோடு
ஒண்மழு ஏந்தி.
தாழ்தரு புன்சடை ஒன்றினை வாங்கித்
தண்மதியம் அயலேததும்ப.
வீழ்தரு கங்கை கரந்தார்; வேட்கள
நன்னக ராரே.

*அப்பர்*

அல்லல் இல்லை; அருவினை தான்இல்லை;
மல்கு வெண்பிறை சூடு மணாளனார்.
செல்வ னார்,திரு வேட்களம் கைதொழ
வல்ல ராகில் வழியது காண்மினே.

# 3. திருநெல்வாயில்

## (சிவபுரி)

## உச்சிநாதேசுரர்–கனகாம்பிகை

சம்பந்தர்: 1.

வழிபட்டநாள்: 4-7-57: 4-1-66.

சிதம்பரத்திலிருந்து மூன்று கல், அண்ணாமலைப்பல்கலைக் கழகத்திலிருந்து ஒன்றரைக் கல்.

சம்பந்தர்

விருத்த னாகி,வெண் ணீறு பூசிய
கருத்த னார்,கன லாட்டு உகந்தவர்,
நிருத்த னார்,நெல் வாயில் மேவிய
ஒருத்த னார்,எமது உச்சி யாரே.

# 4. திருக்கழிப்பாலை

## பால்வண்ணநாதேசுரர்–வேதநாயகி

சம்பந்தர்: 2; அப்பர்: 5; சுந்தரர்: 1.

வழிபட்டநாள்: 4-7-57; 4-1-66.

சிதம்பரத்திலிருந்து மூன்று கல்லும், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலிருந்து ஒன்றரைக்கல் அளவிலும் உள்ள திருநெல்வாயில் என்னும் சிவபுரிக் கோயிலுக்கு மிக அண்மையிலிருக்கிறது. பாடல்காலத்திலிருந்தபழைய கோயில் சிதம்பரத்திற்குத் தென் கிழக்கில் ஏழு கல் தூரத்தில் திருக்கழிப்பாலை என்ற இடத்தில் இருந்ததாகவும், அக்கோயில் கொள்ளிட ஆற்றால் கொண்டு செல்லப்பட்டு விட்டதால் இங்கே நிறுவப்பட்டதாகவும் சொல்லப்படுகிறது.

### சம்பந்தர்

முதிரும் சடையின் முடிமேல் விளங்கும்
கதிர்வெண் பிறையாய்! கழிப்பா லையுளாய்!
எதிர்கொள் மொழியால் இரந்துஏத் தும்அவர்க்கு
அதிரும் வினையா யினஆ சறுமே.

### அப்பர்

விண்ணப்ப விச்சா தரர்கள் ஏத்த
விரிகதிரோன் எரிசுடரான் விண்ணும் ஆகிப்
பண்ணப்பன் பத்தர் மனத்துள் ஏயும்
பசுபதி, பாசுபதன், தேச மூர்த்தி.
கண்ணப்பன் கண்அப்பக் கண்டுஉகந்தார்
கழிப்பாலை மேய கபாலப் பன்னார்.
வண்ணப் பிணிமாய, யாக்கை நீங்க
வழிவைத்தார்க்கு அவ்வழியே போது நாமே.

### சுந்தரர்

எங்கேனும் இருந்துஉன் அடியேன் உனைநினைந்தால்
அங்கேவந்து என்னொடும் உடனாகி நின்றுஅருளி
இங்கேஎன் வினையை அறுத்திட்டு எனைஆளும்
கங்காநா யகனே! கழிப்பாலை மேயானே.

### சேக்கிழார்

மேவிய பணிகள் செய்து
விளங்குநாள் வேட்க ளத்துச்
சேஉயர் கொடியார் தம்மைச்
சென்றுமுன் வணங்கிப் பாடிக்
காவிஅம் கண்டர் மன்னும்
திருக்கழிப் பாலை தன்னில்
நாவினுக்கு அரசர் சென்று
நண்ணினார் மண்ணோர் வாழ.

(பெரியபுராணம்)

# 5. திருநல்லூர்ப்பெருமணம்

## (ஆச்சாள்புரம்)

## சிவலோகத் தியாகேசர்–நங்கை உமையம்மை

சம்பந்தர்: 1.

வழிபட்டநாள் : **21-12-56: 5-1-66.**

*சிதம்பரத்திற்குத் தெற்கே 5 மைலில் உள்ள கொள்ளிடம் இரயில் நிலையத்திற்குக் கிழக்கே 3 கல்.*

*திருஞானசம்பந்தப் பெருமான் திருக்கல்யாணக்கோலத்துடன் மணப் பெண்ணைக் கைப்பிடித்து, திருநீலநக்க நாயனார், திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனார், முருக நாயனார் முதலியோருடன் வைகாசி மூல நாளன்று சோதியிற் கலந்து வீடு பேறு அடைந்த திருத்தலம்.*

*இத்தலத்திற்குச் சிவக்கொழுந்து தேசிகர் தலபுராணம் பாடியுள்ளார்.*

*மகா வித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை, திருவெண்ணீற்றுமை பிள்ளைத் தமிழ் என்ற பிரபந்தம் பாடியுள்ளார்.*

சம்பந்தர்

*அன்புறு சிந்தையர் ஆகி, அடியவர்*
*நன்புறு நல்லூர்ப் பெருமணம் மேவிநின்று,*
*இன்புறும் எந்தை இணையடி ஏத்துவார்*
*துன்புறு வார்அல்லர்: தொண்டுசெய் வாரே.*

சேக்கிழார்

*தவஅரசு ஆள உய்க்கும் தனிக்குடை நிழற்றச் சாரும்*
*பவம்அறுத்து ஆள வல்லார் பாதம்உள் ளத்துக் கொண்டு*
*புவனங்கள் வாழ வந்தபூந்தராய் வேந்தர் போந்து*
*சிவன் அமர்ந்து உறையும் நல்லூர்த் திருப்பெரு மணத்தைச் சேர்ந்தார்.*

# 6. திருமயேந்திரப்பள்ளி

## (கோயிலடிப்பாளையம்)

## திருமேனியழகர்–வடிவாம்பிகை

*சம்பந்தர்: 1.*

*வழிபட்டநாள்:* **21-12-56; 5-1-66.**

*இத் தலம் கொள்ளிடம் இரயில் நிலையத்திலிருந்து கிழக்கே 3 மைலில் உள்ள நல்லூர்ப் பெருமணம் என்ற ஆச்சாள்புரத்திற்கு வட கிழக்கில் 4 மைலில் இருக்கிறது.*

*மயேந்திரன் என்ற இந்திரன் வழிபட்டமையால் மயேந்திரப் பள்ளி என்னும் பெயர் பெற்றது என்ப.*

*சம்பந்தர்*

*வங்கம்ஆர் சேண்உயர் வருகுறி யால்மிகு*
*சங்கம்ஆர் ஒலி,அகில் தருபுகை கமழ்தரும்*
*மங்கைஓர் பங்கினன், மயேந்திரப் பள்ளியுள்*
*எங்கள்நா யகன்தனது இணையடி பணிமினே.*

# 7. தென் திருமல்லைவாயில்

## முல்லைவனநாதர்–கோதையம்மை

*சம்பந்தர்: 1.*

*வழிபட்டநாள்:* **24-12-56; 15-10-65**

*சீர்காழிக்குக் கிழக்கில் 9 மைல், இத் தலம் கடற்கரையில் இருக்கின்றது. இத் தலத்தைப் பற்றிய திருஞானசம்பந்தர் பாடல் இயற்கை வளம் கொழிக்கின்றது.*

*சம்பந்தர்*

*கொம்பன்ன மின்னின் இடையாள்ஓர் கூறன்.*
*விடை நாளும்ஏறு குழகன்.*
*நம்பன்எம் அன்பன்; மறைநாவன். வானின்*
*மதிஏறு சென்னி அரன்ஊர்.*
*அம்பன்ன ஒண்கண் அவர்ஆடு அரங்கின்*
*அணிகோ புரங்கள் அழகார்*
*செம்பொன்ன செவ்வி தருமாடம் நீடு*
*திருமுல்லை வாயில் இதுவே.*

*சேக்கிழார்*

*மங்கை யர்க்குவாள் விழி இணை தோற்ற. மான் குலங்கள்*
*எங்கும்; மற்றவர் இடைக்குஇடை மலர்க்கொடி எங்கும்;*
*அங்கண் "முல்லையின் தெய்வம்" என்று அருந்தமிழ் உரைக்கும்*
*செங்கண் மால்தொழும் சிவன்மகிழ் திருமுல்லை வாயில்.*

## 8. திருக்கலிக்காமூர்

## (அன்னப்பன் பேட்டை)

### சுந்தரேசுவரர்–அழகுவனமுலையம்மை

**சம்பந்தர்: 1**

**வழிபட்டநாள்: 17-8-57; 19-10-65.**

தென் திருமுல்லை வாயிலுக்குத் தென்மேற்கில் 3 கல் அளவு, உப்பனாறு தாண்டுதல் வேண்டும். சாயா வனத்துக்கு வடக்கே 4 மைல், திருவெண்காட்டிற்கு வடகிழக்கில் 3 மைல்.

*சம்பந்தர்*

*வானிடை வாள்மதி மாடம் தீண்ட மருங்கே கடல்ஓதம்*
*கானிடை நீழலில் கண்டல் வாழும் கழிசூழ் கலிக்காமூர்*
*ஆனிடை ஐந்துஉகந்து ஆடி னானை. அமரர் தொழுது ஏத்த*
*நானடை வாம்வணம் அன்பு தந்த நலமே நினைவோமே.*

# 9. திருச்சாய்க்காடு

## (சாயாவனம்)

## சாயாவனேசுரர்–குயிலினும் நன்மொழியம்மை

சம்பந்தர் : 2 அப்பர் : 2

வழிபட்டநாள் : 7-8-57; 16-10-65.

சீர்காழிக்குத் தென்கிழக்கில் 9 மைல், திருவெண்காட்டிலிருந்து 2 மைல். காவிரிப்பூம் பட்டினத்திற்கு முன்னே 1 மைல்.

இங்கு இயற்பகை நாயனார், அவர் மனைவி, இவர்களின் எழுந்தருளும் படிவங்கள் இருக்கின்றன. இயற்பகை நாயனார் சாய்க்காடு வரை தம் மனைவியை அழைத்துக்கொண்டு வந்து இறைவனோடு வழி அனுப்பியதாகப் பெரியபுராணம் பேசும்.

சம்பந்தர்

நீநாளும் நன்னெஞ்சே! நினைகண்டாய்! யார் அறிவார்
சாநாளும் வாழ்நாளும்? சாய்க்காட்டுஎம் பெருமாற்கே
பூநாளும் தலைசுமப்பப் புகழ்நாமம் செவிகேட்ப
நா நாளும் நவின்றுஏத்தப் பெறலாமே நல்வினையே.

அப்பர்

குவப்பெரும் தடக்கை வேடன்
கொடும்சிலை இறைச்சிப் பாரம்
துவர்ப்பெரும் செருப்பால் நீக்கித்
தூயவாய்க் கலசம் ஆட்ட,
உவப்பெரும் குருதி சோர
ஒருகணை இடந்துஅங்கு அப்ப
தவப்பெரும் தேவு செய்தார்
சாய்க்காடு மேவி னாரே.

ஐயடிகள் காடவர்கோன் நாயனார்

அஞ்சனம்சேர் கண்ணார் அருவருக்கும் அப்பதமாய்க்
குஞ்சி வெளுத்துஉடலம் கோடாமுன்–நெஞ்சமே!
பேர்க்காடு கூடப் புலம்பாது பூம்புகார்ச்
சாய்க்காடு கைதொழுநீ சார்ந்து.

சேக்கிழார்

இருவரால் அறிய ஒண்ணா ஒருவர்பின் செல்லும் ஏழை
பொருதிறல் வீரர் பின்பு போகமுன் போகும் போதில்
அருமறை முனிவன் சாய்க்காடு அதன்மருங்கு அணையமேவித்
திருமலி தோளி னானை "மீள்"எனச் செப்பினானே.

## 10. திருப்பல்லவனீச்சுரம்
### (காவிரிப்பூம்பட்டினம்)
### பல்லவனேசுரர்–சௌந்தரநாயகி.

சம்பந்தர் : 2.
வழிபட்ட நாள்: 5-8-57; 16-10-65.

சீர்காழிக்குத் தென்கிழக்கு 10 மைல், கோயிலுக்கு 2 மைலில் காவிரி கடலோடு கலக்கின்றது. "பதியெழு அறியாப் பழங்குடி" என்றும், "பூம்புகார்" என்றும் சிலப்பதிகாரம் முதலிய பழைய நூல்கள் இத் தலத்தைப் பேசும்.

பழைய காலத்தில் இது மிகப்பெரிய நகரமாக இருந்திருக்கிறது. புதை பொருள் ஆராய்ச்சியினர் நிலத்தைத் தோண்டிப் பல பொருள்களைக் கண்டெடுத்து வருகின்றனர்.

இயற்பகை நாயனாரும், பட்டினத்துப் பெரியாரும் பிறந்தருளியது இத் தலத்திலேயே.

கண்ணகி கோவலன் கதை தொடங்கியது இங்குத் தான்.

நாட்டுக் கோட்டை நகரத்தார் இவ்வூரில்தான் அந்த நாளில் வாழ்ந்ததாகக் கூறப் பெறுகின்றது.

இத் தலம் பல்லவ மன்னன் வழிபாடு செய்தமையால் பல்லவனீச்சுரம் என்னும் பெயர் பெற்றது என்ப.

சம்பந்தர்

*எண்ணார் எயில்கள் மூன்றும்சீறும் எந்தைபிரான் இமையோர்*
*கண்ணாய் உலகம் காக்கநின்ற கண்ணுதல் நண்ணும்இடம்*
*மண்ணார் சோலைக் கோலவண்டு வைகலும் தேன்அருந்தி.*
*பண்ணார் செய்யும் பட்டினத்துப் பல்லவ னீச்சுரமே.*

சேக்கிழார்

*சென்னி வெண்குடை நீடுஅந பாயன்*
*திருக்கு லம்புகழ் பெருக்கிய சிறப்பின்*
*மன்னு தொல்புகழ் மருதநீர் நாட்டு*
*வயல்வ யம்தர இயல்பினில் அளித்து.*
*பொன்னி நல்நதி மிக்கநீர் பாய்ந்து*
*புணரி தன்னையும் புனிதம்ஆக் குவதோர்*
*நன்னெ டும்பெருந் தீர்த்தமுன் னுடைய*
*நலம்சி றந்தது வளம்புகார் நகரம்.*

## 11. திருவெண்காடு

### வெண்காட்டு நாதர்–பிரமவித்தியா நாயகி

சம்பந்தர் : 3; அப்பர் : 2; சுந்தரர் : 1.
வழிபட்டநாள் : 31-1-57; 16-10-65

சீர்காழிக்குத் தென் கிழக்கில் 7 மைல், வைத்தீசுவரன் கோயிலுக்குக் கிழக்கே 7 மைல்.

கோயில்பெரிது. அகோர மூர்த்தி சூலத்துடன் தெற்கு முகமாகப் பெரிய வடிவாக இருக்கின்றது.

சோம, சூரிய, அக்கினி என்ற மூன்று குளங்கள் கோயிலுக்குள் இருக்கின்றன. இதனை "வெண்காட்டு முக்குள நீர்" என ஞானசம்பந்தர் பாடல் கூறுகின்றது.

சங்கமுகம் ஆடி, சாயா வனம்பார்த்து
முக்குளமும் ஆடி, முத்திபெற வந்தானோ?

என்பது பழைய தாலாட்டு, சங்கமுகம்: காவிரி கடலொடு கலக்கும் இடம். சாயாவனம் : சாய்க்காடு. முக்குளம் : வெண்காட்டு முக்குளம்.

இத்தலத்திற்கு,சைவ எல்லப்ப நாவலர் புராணம்பாடியுள்ளார்.

சம்பந்தர்

தண்பொழில்சூழ் சண்பையர்கோன் தமிழ்ஞான சம்பந்தன்,
விண்பொலிவெண் பிறைச்சென்னி விகிர்தன்உறை வெண்காட்டைப்
பண்பொலிசெந் தமிழ்மாலை பாடியபத்து இவைவல்லார்,
மண்பொலிய வாழ்ந்து, அவர்போய் வான்பொலியப் புகுவாரே

அப்பர்

ஆகத்து உமைஅடக்கி, ஆறு சூடி,
ஐவாய் அரவுஅசைத்துஅங்கு ஆனேறு ஏறி,
போகம் பலஉடைத்தாய்ப் பூதம்சூழ,
புலித்தோல் உடையாப் புகுந்து நின்றார்;
பாகிடுவான் சென்றேனைப் பற்றிநோக்கி,
பரிசுஅழித்துஎன் வளைகவர்ந்தார் பாவி யேனை;
மேக முகில்உரிஞ்சு சோலை சூழ்ந்த
வெண்காடு மேவிய விகிர்த னாரே.

சுந்தரர்

பண்ணு வீராய்ப் பாட்டும் ஆனீர்! பத்தர் சித்தம் பரவிக் கொண்டீர்!
கண்ணு வீராய்க்கருத்தில் உம்மைக் கருது வார்கள் காணும்வண்ணம்
மண்ணு வீராய் மதியம் வைத்திர்!வான நாடர்மருவி ஏத்த
விண்ணு வீராய் நிற்பது என்னே! வேலை சூழ்வெண் காடனீரே!

மணிவாசகர்

விருந்தினன் ஆகி வெண்காடு அதனில்
குருந்தின் கீழ்அன்று இருந்த கொள்கையும்.

## 12. கீழைத்திருக்காட்டுப்பள்ளி

### (ஆரணியேசுரர் கோயில்)

### ஆரணியசுந்தரேசுரர்–அகிலாண்டநாயகி.

சம்பந்தர் : 1.

வழிபட்ட நாள் : 31-1-57; 16-10-65.

திருவெண்காட்டினின்றும் மேற்கே 1 மைல். மேற்கு நோக்கிய சன்னிதி.

சம்பந்தர்

தோலுடை யான்;வண்ணப் போர்வையினான்;
சுண்ணவெண் ணீறு துதைந்திலங்கு,
நூலுடை யான்;இமை யோர்பெருமான்
நுண்ணறி வால்வழி பாடுசெய்யும்
காலுடை யான்;கரி தாயகண்டன்;
காதலிக் கப்படும் காட்டுப்பள்ளி,
மேலுடை யான்;இமை யாதமுக்கண்
மின்னிடை யாளொடும் வேண்டினனே.

## 13. திருக்குருகாவூர்

### (திருக்கடாவூர்)

### வெள்ளிடையீசுரர்–காவியங்கண்ணியம்மை.

சம்பந்தர் : 1 சுந்தரர் : 1

வழிபட்ட நாள்: 24–12–56; 15–10–65.

சீர்காழிக்குக் கிழக்கு 4 மைல். சீர்காழியிலிருந்து தென் திருமுல்லைவாயிலுக்குப் போகும் வழியில் மூன்றாவது மைலில் தெற்கே திரும்பி 1 மைல் செல்ல வேண்டும்.

சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்கும் அவருடன் வந்த அடியார்களுக்கும் உணவைச் சோறும், பருக நீரும் ஈந்தருளிய தலம்.

சம்பந்தர்

சுரிகுழல் நல்ல துடிஇடை யோடு
பொரிபுல்கு காட்டிடை ஆடுதிர், பொங்க
விரிதரு பைம்பொழில் வெள்ளடை மேவிய
எரிமழு வாள்படை எந்தை பிரானே.

சுந்தரர்

பண்ணிடைத் தமிழ்ஒப்பாய்; பழத்தினிற் சுவைஒப்பாய்;
கண்ணிடை மணிஒப்பாய்; கடுஇருள் சுடர்ஒப்பாய்;
மண்ணிடை அடியார்கள் மனத்துஇடர் வாராமே
விண்ணிடைக் குருகாவூர் வெள்ளடை நீயன்றே.

## 14. சீர்காழி

### பிரமபுரீசுரர்–திருநிலைநாயகி

சம்பந்தர் : 67; அப்பர் : 3; சுந்தரர் : 1.
வழிபட்ட நாள் : 26-12-55; 15-10-65

இரயில் நிலையம்.

திருஞானசம்பந்த மூர்த்தி சுவாமிகள் பிறந்தருளிய தலம். அதிகமான தேவாரப் பதிகம் பெற்றது இத்தலமே. இத் தலத்திற்கு 71 தேவாரப் பதிகங்கள் இருக்கின்றன.

சீர்காழி, பிரமபுரம், தோணிபுரம், வேணுபுரம், சிரபுரம், புகலி, வெங்குரு, பூந்தராய், புறவம், சண்பை, கொச்சைவயம், கழுமலம் என, 12 பெயர்கள் இத்தலத்திற்குரியன.

சம்பந்தப் பெருமானுக்கு அம்பிகை ஞானப்பால் கொடுத்தது இத்தலத்தில்தான். சம்பந்தர் உருவம் இங்கு பேரழகுடன் காட்சி தருகின்றது. சிவன் கோயிலுக்குள் சம்பந்தருக்கு ஒரு தனிப் பெரிய கோயில் இங்கு இருக்கின்றது. சம்பந்தரின் முதல் தேவாரம் எழுந்தது இத் தலத்தில்தான்.

இராமநாடகம்பாடிய அருணாசலக் கவிராயர் இவ்வூரினரே. அருணாசலக் கவிராயர் சீர்காழிக்குத் தலபுராணம் பாடியுள்ளார்.

கட்டுமலையில் உயரமான இடத்தில் தோணியப்பரும் அதற்கு மேல் தளத்தில் சட்டை நாதரும் காட்சியளிக்கின்றனர்.

சம்பந்தர்

தோடு டையசெவி யன்.விடை
ஏறிஓர் தூவெண் மதிசூடி.
காடு டையசுட. லைப்பொடி
பூசி.என் உள்ளம் கவர்கள்வன்.
ஏடு டையமல ரான்முனை
நாள்பணிந்து ஏத்த அருள் செய்த
பீடு டையபிர மாபுரம்
மேவிய பெம்மான் இவனன்றே.

அப்பர்

கெண்டை போல்நயனத்துஇம வான்மகள்
வண்டு வார்குழ லாள்உடன் ஆகவே.
துண்ட வான்பிறைத் தோணி புரவரைக்
கண்டு. காமுறு கின்றனள் கன்னியே.

சுந்தரர்

வரும்பெரும் வல்வினை என்றுஇருந்து எண்ணி
வருந்தல்உற் றேன்;மற வாமனம் பெற்றேன்;
விரும்பிஎன் மனத்திடை மெய்குளிர்ப்பு எய்தி
வேண்டிநின் றேன்;தொழு தேன்விதி யாலே;
அரும்பினை. அலரினை.அமுதினை.தேனை.
ஐயனை. அறவன்என் பிறவிவேர் அறுக்கும்
கரும்பினை. பெருஞ்செந்நெல் நெருங்கிய கழனிக்
கழுமல வளநகர்க் கண்டுகொண் டேனே.

மணிவாசகர்

கழுமலம் அதனில் காட்சி கொடுத்தும்.

பட்டினத்துப் பிள்ளையார்

ஆரணம் நான்கிற்கும் அப்பா
லவன்;அறி யத்துணிந்த
நாரணன் நான்முக னுக்குஅரி
யான்;நடு வாய்நிறைந்த
பூரணன்; எந்தை; புகலிப்
பிரான்பொழில் அத்தனைக்கும்
காரணன்; அந்தக் கரணம்
கடந்த கருப்பொருளே.

சேக்கிழார்

தொண்டர்குழாம் புடைசூழத் தொழுதகரத்
தொடு.நீறு துதைந்த கோலம்
கண்டவர்தம் மனம்கசிந்து கரைந்துஉருகும்
கருணைபுறம் பொழிந்து காட்டத்
தெண்திரைவாய்க் கல்மிதப்பில் உகைத்தேறும்
திருநாவுக் கரசர் தாமும்
வண்தமிழால் எழுதுமறை மொழிந்தபிரான்
திருப்புகலி மருங்கு சார்ந்தார்.

## 15. திருக்கோலக்கா

### (திருத்தாளமுடையார் கோயில்)

### சத்தபுரீசுரர்–ஓசைகொடுத்தநாயகி.

சம்பந்தர் : 1 சுந்தரர் : 1.

வழிபட்ட நாள் : **25-12-56; 15-10-65**

சீர்காழிக் கோயிலுக்கு மேற்கே 1 மைலில் இத் தலம் இருக்கின்றது. திருஞானசம்பந்த மூர்த்தி சுவாமிகள் தங்கத்தாளம் பெற்ற தலம் இது.

இறைவன் கொடுத்த பொன் தாளத்திற்கு அம்பிகை ஒலி கொடுத்ததால் இங்கு எழுந்தருளி யிருக்கின்ற தேவிக்கு ஓசை கொடுத்தநாயகி என்பது பெயர்.

சம்பந்தருக்கு இறைவன் தாளம் கொடுத்த செய்தியை,

"நாளும் இன்னிசை யால்தமிழ் பரப்பும்
ஞான சம்பந்த னுக்குஉல கவர்முன்
தாளம் ஈந்துஅவன் பாடலுக்கு இரங்கும்
தன்மை யாளனை"

எனச் சுந்தரமூர்த்திகள் பாடுவார்.

சம்பந்தர்

நிழலார் சோலை நீல வண்டினம்
குழலார் பண்செய் கோலக் காவுளான்,
கழலால் மொய்த்த பாதம் கைகளால்
தொழலார் பக்கல் துயரம் இல்லையே.

சுந்தரர்

அன்று வந்துஎனை அகலிடத் தவர்முன்
ஆள தாகஎன்று ஆவணம் காட்டி.
நின்று வெண்ணெய்நல் லூர்மிசை ஒளித்த
நித்தி லத்திரள் தொத்தினை, முத்திக்கு
ஒன்றி னான்தனை உம்பர் பிரானை,
உயரும் வல்அர ணம்கெடச் சீறும்
குன்ற வில்லியை மெல்லியல் உடனே
கோலக் காவினிற் கண்டுகொண் டேனே.

# 16. திருப்புள்ளிருக்கு வேளூர்

## (வைத்தீசுரன் கோயில்)

## வைத்திய நாதர்–தையல்நாயகி

சம்பந்தர் :1. அப்பர் : 2

வழிபட்ட நாள் : **26-12-55; 13-10-65.**

இரயில் நிலையம்: சீர்காழிக்குத் தென் மேற்கில் 4 மைல். மேற்குப் பார்த்த சன்னிதி.

சம்பாதி, சடாயு என்ற பறவைகளும், இருக்கு வேதமும், முருகக் கடவுளும், வழிபட்டமையால் இத்தலம் இப்பெயர் பெற்றது. புள்: பறவை. இருக்கு: வேதம். வேள் : முருகன்.

சடாயு, சம்பாதி ஆகிய இரண்டு சிறந்த பறவைகளையும் திருஞானசம்பந்தர் தேவாரத்தில் பாராட்டியுள்ளார். அவ்விருவர் சிறப்பையும் கம்பர் பெரிதும் பேசுவார்.

இத் தலத்தில் இறைவன், இறைவி, முருகன் ஆகிய மும் மூர்த்திகளும் சிறப்புடையவர். இறைவன் தீரா நோய் தீர்த்தருள வல்லான் ஆதலின் வைத்தியநாதன் என்ற பெயர் பெறுகின்றான். இறைவி பெண்களுக் கெல்லாம் தலைவி என்ற பொருளில் தையல் நாயகி என்று பெயர் பெறுகின்றாள். முருகனுக்குஇங்குபெருஞ் சிறப்பு உண்டு. முத்துக் குமார சுவாமி என்பது பெயர். பெரும் புலவர் குமரகுருபரசுவாமிகள் முத்துக்குமாரசாமிக்குப் பிள்ளைத்தமிழ் பாடியுள்ளார். அப்பிள்ளைத்தமிழில்.

தார் ஆட்டு மதிமுடித் தீராத
        வினைதீர்த்த தம்பிரானும் தம்பிரான்
        தழல்உருவில்ஒருபாதி குளிரஒரு
        புறம்நின்ற தையல்நா யாகியும்வைத்துச்
சீராட்டிவிளையாடு சேனா
        பதிக்கடவுள்! சிறுதேர்உ ருட்டியருளே;
        திருவளர வளர்கந்த புரிவளர்
        இளங்குமர! சிறுதேர்உ ருட்டியருளே

என்பது நயம் வாய்ந்தது. புள்ளிருக்கு வேளூருக்கு வடுகநாத தேசிகர் என்ற புலவர் புராணம் பாடியுள்ளார். படிக்காசுத் தம்பிரான் இத் தலத்திற்குக் கலம்பகம் ஒன்று இயற்றியுள்ளார்.

சம்பந்தர்

வாசநலம் செய்துஇமையோர் நாள்தோறும் மலர்தூவ
ஈசன்எம் பெருமானார் இனிதாக உறையும்இடம்
யோசனைபோய்ப் பூக்கொணர்ந்துஅங்கு ஒருநாளும் ஒழியாமே
பூசனைசெய்து இனிதிருந்தான் புள்ளிருக்கு வேளூரே.

அப்பர்

பத்திமையால் பணிந்துஅடியேன் தன்னைப் பன்னாள்
பாமாலை பாடப் பயில்வித் தானை,
எத்தேவும் ஏத்தும் இறைவன் தன்னை,
எம்மானை, என்உள்ளத்து உள்ளே ஊறும்
அத்தேனை, அமுதத்தை, ஆவின் பாலை,
அண்ணிக்கும் தீங்கரும்பை, அரனை, ஆதிப்
புத்தேளை, புள்ளிருக்கு வேளூ ரானை,
போற்றாதே ஆற்றநாள் போக்கி னேனே.

## 17. திருக்கண்ணார்கோயில்

### (குறுமாணக்குடி)

### கண்ணாயிரநாதர்–முருகுவளர் கோதை

சம்பந்தர் : 1.

வழிபட்ட நாள்: 30-1-57; 14-10-65.

வைத்திசுவரன் கோயிலுக்குத் தென்கிழக்கு 2 மைலில் இத் தலம் இருக்கிறது.

தேவேந்திரன் சாபநீக்கம் பெற்று ஆயிரம் கண் பெற்ற தலம் இஃது என்ப.

தண்ணார் திங்கள் பொங்குஅர வம்தாழ் புனல்சூடிப்
பெண் ஆண்ஆய பேர்அரு ளாளன் பிரியாத
கண்ணார் கோயில் கைதொழு வோர்கட்கு இடர்,பாவம்
நண்ணா ஆகும் நல்வினை யாய நல்கும்மே.

## 18. திருக்கடைமுடி

### (கீழையூர்)

### கடைமுடிநாதர்–அபிராமியம்மை.

சம்பந்தர் : 1

வழிபட்ட நாள் : 3-7-57; 19-10-65.

ஆனந்தத் தாண்டவபுரம் இரயில் நிலையத்திற்கு வடகிழக்கில் 2 மைல். நனிப்பள்ளிக்கு வடமேற்கே 1 மைல். திருநின்றியூருக்குத் தென்கிழக்கில் 4 மைல். மேற்கு நோக்கிய சன்னதி.

கல்வெட்டுப்படி கோவில்படிக்குக்கிழக்கே 1½ மையிலில் உள்ள சென்னம்பூண்டியே கடைமுடி என்பர்.

சம்பந்தர்

அருத்தனை, அறவனை, அமுதனை,நீர்
விருத்தனைப் பாலனை வினவுதிரேல்
ஒருத்தனை அல்லதுஇங்கு உலகம்ஏத்தும்
கருத்தவன் வளநகர் கடைமுடியே.

## 19. திருநின்றியூர்

### இலக்குமிநாதர்–உலகநாயகி

சம்பந்தர் : 1; அப்பர்: 1; சுந்தரர் : 2.

வழிபட்ட நாள் : 1-2-57; 14-10-65

ஆனந்தத் தாண்டவபுரம் இரயில் நிலையத்திலிருந்து வடகிழக்கே 2 மைல். மாயூரம் இருந்து வைத்தீசுவரன் கோயில் செல்லும் பெருவழிச் சாலையில் 5 மைல்.

சம்பந்தர்

அச்சம்இலர்; பாவம்இலர்; கேடும்இலர்; அடியார்
நிச்சம்உறு நோயும்இலர்; தாமுந்நின்றி யூரில்
நச்சம்மிட றுடையர்நறும், கொன்றைந யந்துஆளும்
பச்சம்உடை அடிகள்திருப் பாதம்பணி வாரே.

*அப்பர்*

*அஞ்சி யாகிலும் அன்புபட் டாகிலும்*
*நெஞ்சம் வாழி நினைநின்றி யூரைநீ*
*இஞ்சி மாமதில் எய்துஇமை யோர்தொழக்*
*குஞ்சி வான்பிறை சூடிய கூத்தனே.*

*சுந்தரர்*

*அணிகொள் ஆடைஅம் பூண்அணி மாலை*
*அமுது செய்துஅமு தம்பெறு சண்டி*
*இணைகொள் ஏழ்எழு நூறிரு பனுவல்*
*ஈன்ற வன்திரு நாவினுக்கு அரையன்.*
*கணைகொள் கண்ணப்பன் என்றுஇவர் பெற்ற*
*காதல் இன்னருள் ஆதரித்து அடைந்தேன்;*
*திணைகொள் செந்தமிழ் பைங்கிளி தெரியும்*
*செல்வத் தென்திரு நின்றியூ ரானே.*

## 20. திருப்புன்கூர்

### சிவலோகநாதர்–சொக்கநாயகி

*சம்பந்தர் : 1; அப்பர் : 1; சுந்தரர் : 1.*
**வழிபட்ட நாள்: 30-1-57; 15-10-65.**

வைத்தீசுவரன் கோயில் இரயில் நிலையத்திற்கு மேற்கு 3 மைல்.

திருநாளைப்போவார் நாயனார் என்னும் நந்தனாருக்காக இறைவன் நந்தி தேவரை விலகி இருக்கச் செய்த தலம்.

"சற்றே விலகி இரும் பிள்ளாய்" என நந்தன் சரித்திரக் கீர்த்தனையில் கோபாலகிருஷ்ண பாரதியார் பாடுவார்.

*சம்பந்தர்*

*மூவ ராய முதல்வர் முறையாலே*
*தேவ ரெல்லாம் வணங்கும் திருப்புன்கூர்*
*ஆவர் என்னும் அடிகள் அவர்போலும்*
*ஏவின் அல்லார் எயில்மூன்று எரித்தாரே.*

அப்பர்

பிறவாதே தோன்றிய பெம்மான் தன்னை.
பேணாதார் அவர்தம்மைப் பேணா தானை.
துறவாதே-கட்டறுத்த சோதி யானை.
தூநெறிக்கும் தூநெறியாய் நின்றான் தன்னை.
திறமாய எத்திசையும் தானே ஆகி.
திருப்புன்கூர் மேவிய சிவலோகன்னை.
நிறமாம் ஒளியானை நீடு ரானை
நீதனேன் என்னேநான் நினையா வாறே.

சுந்தரர்

வையகம் முற்றும் மாமழை மறந்து
வயல நீரிலை மாநிலம் தருகோம்
உய்யக் கொள்கமற்று எங்களை என்ன
ஒளிகொள் வெண்முகி லாய்ப்பரந்து எங்கும்.
பெய்யு மாமழைப் பெருவெள்ளம் தவிர்த்துப்
பெயர்த்தும் பன்னிரு வேலிகொண்டு அருளும்
செய்கை கண்டுநின் திருவடி அடைந்தேன்
செழும்பொ ழில்திருப் புன்கூர் உளானே

சேக்கிழார்.

திருப்புன்கூர்ச் சிவலோகன் சேவடிகள் மிகநினைந்து.
விருப்பினொடும் தம்பணிகள் வேண்டுவன செய்வதற்கே.
அருத்தியினால் ஒருப்பட்டுஅங்கு ஆதனூர் தனில்நின்றும்
வருத்தமுறும் காதலினால் வந்துஅவ்வூர் மருங்குஅணைந்தார்.

## 21. திருநீடூர்

### அருட்சோமநாதர்-வேயுறுதோளி

அப்பர் 1 சுந்தரர் : 1.
வழிபட்ட நாள் : 1-2-57; 15-10-65

நீடூர் என்னும் இரயில் நிலையத்திலிருந்து வடமேற்கே 1 கல் அளவில் கோயில் இருக்கின்றது. அறுபான் மும்மை நாயன்மார்களுள் ஒருவராகிய முனைஅடுவார் நாயனார் பிறந்து சிவனடியார்கட்கு உணவளித்து வீடு பேறு அடைந்த தலம். முனைஅடுவார் நாயனாரின் எழுந்தருளும் உருவம் இங்கு உள்ளது.

அப்பர்

கலைஞானம் கல்லாமே கற்பித் தானை,
கடுநரகஞ் சாராமே காப்பான் தன்னை,
பலவாய வேடங்கள் தானே ஆகி,
பணிவார்கட்கு அங்கங்கே பற்றா னானை,
சிலையால் புரம்எரித்த தியா டீயை,
திருப்புன்கூர் மேவிய சிவலோ கன்னை,
நிலையார் மணிமாட நீடூ ரானை
நீதனேன் என்னேநான் நினையா வாறே.

சுந்தரர்

குற்றம் ஒன்றுஅடி யார்இலர் ஆனால்
கூடு மாறு தனைக்கொடுப் பானை,
கற்ற கல்வியி லும்இனி யானை,
காணப் பேணும்அ வர்க்குஎளி யானை,
முற்ற அஞ்சும் துறந்திருப் பானை,
மூவ ரின்முத லாயவன் தன்னை,
சுற்று நீர்வயல் சூழ்திரு நீடூர்த்
தோன்ற லைப்பணி யாவிட லாமே?

# 22. அன்னியூர்

## (பொன்னூர்)

## ஆபத்சகாயநாதர்–பெரியநாயகி

சம்பந்தர் : 1. அப்பர் : 1
வழிபட்டநாள்: 9-8-57; 20-10-65.

திரு நீடூருக்கு மேற்கே 3 கல் அளவு.

சம்பந்தர்

நீதி பேணுவீர், ஆதி அன்னியூர்ச்
சோதி நாமமே, ஓதி உய்ம்மினே.

அப்பர்

வஞ்ச ரக்கன் கரமும் சிரத்தோடும்
அஞ்சும் அஞ்சும்ஓர் ஆறுநான் கும்இற.
பஞ்சின் மெல்விர லால்அடர்த்து ஆயிழை
அஞ்சல் அஞ்சல்என் றார்அன்னி யூரரே.

## 23. வேள்விக்குடி

### கலியாணசுந்தரர்–நறுமணநாயகி.

சம்பந்தர்: 1; சுந்தரர் : 2.

வழிபட்டநாள் : 10–1–57; 13–10–65

குற்றாலம் இரயில் நிலையத்திற்கு வடகிழக்கே 3 கல். தஞ்சை மாவட்டத்திலுள்ள குற்றாலம் என்னும் திருத்துருத்தியையும் திருவேள்விக்குடியையும் சேர்த்து ஒரே பதிகத்தில் சம்பந்தர் பாடியிருக்கின்றார். சுந்தரரும் அப்படியே. ஒரு அரசகுமாரனுக்காக மணவேள்வி செய்தருளியதலம்.

சம்பந்தர்

புரிதரு சடையினர். புலிஉரி அரையினர். பொடிஅணிந்து
திரிதரும் இயல்பினர். திரிபுர மூன்றையும் தீவளைத்தார்;
வரிதரு வனமுலை மங்கையோடு ஒருபகல் அமர்ந்தபிரான்.
விரிதரு துருத்தியார் இரவுஇடத்து உறைவர்வேள் விக்குடியே

சுந்தரர்

மூப்பதும் இல்லை; பிறப்பதும் இல்லை; இறப்ப தில்லை;
சேர்ப்பது காட்டகத்து ஊரினும் ஆகச்சிந் திக்கின்அல்லால்
காப்பது வேள்விக் குடிதண் துருத்திஎங் கோன் அலைமேல்
ஆர்ப்பது நாகம் அறிந்தோமேல் நாம் இவர்க்கு ஆட்ப டோமே.

## 24. எதிர்கொள்பாடி

### (மேலைத்திருமணஞ்சேரி)

### வெள்ளையானைநாதர்–மலர்க்குழல் மாது.

சுந்தரர் : 1

வழிபட்ட நாள் : 10–1–57; 13–10–65.

வேள்விக்குடியினின்றும் வடமேற்கே 2 கல் அளவு.

சுந்தரர்

தோற்றம் உண்டேல் மரணம் உண்டு; துயரம் மனைவாழ்க்கை;
மாற்றம்உண்டேல் வஞ்சம் உண்டு; நெஞ்சம் மனத்திரே!
நீற்றர், ஏற்றர், நீல கண்டர் நிறைபுனல் நீள்சடைமேல்
ஏற்றர் கோயில் எதிர்கொள் பாடி என்பது அடைவோமே.

## 25. திருமணஞ்சேரி
## (கீழைத்திருமணஞ்சேரி)
## அருள்வள்ளல்நாதர்–யாழின்மென்மொழி

சம்பந்தர் : 1 அப்பர் : 1

வழிபட்ட நாள் : 10-1-57; 13-10-65

எதிர்கொள்பாடிக்குக் கிழக்கே ½ மைல் அளவில் இத் தலம் இருக்கிறது. வணிககுலத்துப் பிறந்த ஆமை மனித உருப் பெற்று முறைப் பெண்ணை மணந்த தலமென்ப.

சம்பந்தர்

மொழியானை, முன்ஒரு நான்மறை ஆறுஅங்கம்
பழியாமைப் பண்இசை யான பகர்வானை,
வழியானை, வானவர் ஏத்து மணஞ்சேரி
இழியாமை ஏத்தவல் லார்க்குஎய்தும் இன்பமே.

அப்பர்

துள்ளு மான்மறி தூமழு வாளினர்
வெள்ள நீர்கரந் தார்,சடை மேலவர்
அள்ள லார்வயல் சூழ்மணம் சேரிஎம்
வள்ள லார்கழல் வாழ்த்தல்வாழ் வாவதே.

## 26. திருக்குறுக்கை
## வீரட்டேசுரர்–ஞானாம்பிகை

அப்பர் :2

வழிபட்ட நாள் : 12-7-57; 20-10-65

நீடூர் இரயில் நிலையத்தில் இருந்து மேற்கே 3 கல் அளவில் உள்ள அன்னியூரைத் தாண்டி வடமேற்கே 4

மைலில் இத் தலம் இருக்கிறது. இத்தலத்திற்குக் குறுக்கை வீரட்டம் என்ற பெயர்.

அட்டவிரட்டங்களுள் இது காமனை எரித்த தலம்.

மகா வித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை தல புராணம் பாடியுள்ளார்.

அப்பர்

அணங்குஉமை பாகமாக
அடக்கிய ஆதி மூர்த்தி
வணங்குவார் இடங்கள் தீர்க்கும்
மருந்துநல் அருந்த வத்த
கணம்புல்லர்க்கு அருள்கள் செய்து
காதலாம் அடியார்க்கு என்றும்
குணங்களைக் கொடுப்பர் போலும்
குறுக்கைவீ ரட்ட னாரே.

## 27. கருப்பறியலூர்

### (மேலைக்காழி, தலைஞாயிறு)

### குற்றம் பொறுத்த நாதர்–கோல்வளையாய்

சம்பந்தர் : 1 சுந்தரர் : 1

வழிபட்ட நாள் : 30-1-57; 15-10-65.

திருப்புன்கூரினின்றும் மேற்கே 2 மைலில் உள்ள மண்ணிப்பள்ளம் என்னும் ஊர் சென்று அங்கு இருந்து வடக்கே 1 மைல் சென்றால் இத் தலத்தை அடையலாம்.

இத் தலத்துக் கோயிலுக்குக் கொகுடிக் கோயில் என்று பெயர். சீர்காழியிற்போல் அம்மையப்பர் சட்டைநாதர் சந்நிதிகள் உள்ளன.

சம்பந்தர்

வாய்ந்தபுகழ் விண்ணவரும் மண்ணவரும் அஞ்சப்
பாய்ந்துஅமர்செ யும்தொழில்இ லங்கைநகர் வேந்தற்கு
ஏய்ந்தபுயம் அத்தனையும் இற்றுவிழ மேனாள்
காய்ந்தவன் இருப்பது கருப்பறியல் ஊரே.

சுந்தரர்

கலைமலிந்த தென்புலவர் கற்றோர்தம்
இடர்தீர்க்கும் கருப்ப றியலூர்க்
குலைமலிந்த கோள்தெங்கு மட்டுஒழுகும்
பூஞ்சோலைக் கொகுடிக் கோயில்,
இலைமலிந்த மழுவானை, மனத்தினால்
அன்புசெய்து இன்பம் எய்தி,
மலைமலிந்த தோள்ஊரன் வனப்பகைஅப்-
-பன்உரைத்த வண்த மிழ்களே.

## 28. குரக்குக்கா

### கொந்தளேசுரர்–கொந்தளநாயகி

அப்பர்: 1

வழிபட்டநாள் : 3-9-57; 20-10-65

கருப்பறியலூருக்கு வடக்கே 1 கல். இது அனுமன் வழிபட்ட தலம் என்ப.

அப்பர்

ஆல நீழல் அமர்ந்த அழகனார்
கால னைஉதை கொண்ட கருத்தனார்
கோல மஞ்ஞைகள் ஆலும் குரக்குக்காப்
பால ருக்குஅருள் செய்வர் பரிவொடே.

## 29. திருவாளொளிப் புத்தூர்

### மாணிக்கவண்ணர்–வண்டார்பூங்குழலி

சம்பந்தர் : 2; சுந்தரர் : 1.

வழிபட்ட நாள் : 30-1-57; 15-10-65.

திருப்புன்கூரினின்றும் மேற்கே 3 மைல்.

மகா வித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை தலபுராணம் பாடியுள்ளார்.

சம்பந்தர்

என்னணில் ஈரமும் உடையார். எத்தனை யோஇவர் அறங்கள்
கன்னனும் ஆயிரம்உடையார். கையும்ஓர் ஆயிரம் உடையார்.
பெண்ணும் ஆயிரம்உடையார். பெருமைஓர் ஆயிரம் உடையார்
வண்ணம் ஆயிரம்உடையார். வாழ்கொளிப் புத்தூர் உளாரே.

சுந்தரர்

வெந்த நீறுமெய் பூசவல் லானை.
வேத மால்விடை ஏறவல் லானை.
அத்தம் ஆதிஅறி தற்குஅரி யானை.
ஆறுஅலைத் தசடையானை. அம்மானை.
சிந்தை என்தடு மாற்றறுப் பானை.
தேவ தேவன்என் சொல்முனியாதே
வந்துஎன்உள் ளம்புகும் வாழ்கொளிப் புத்தூர்
மாணிக்கத் தை.மறந்து என்நினைக் கேனே.

## 30. மண்ணிப்படிக்கரை

### (இலுப்பைப்பட்டு)

### நீலகண்டேசுரர்–அமிர்தகரவல்லி

சுந்தரர் : 1.

வழிபட்ட நாள் : 30-1-57; 15-10-65.

குறுக்கைக்கு வடக்கே 4 மைல். வைத்திசுவரன் கோயில் இரயில்நிலையத்தில் இருந்து மேற்கே 8 மைல். பந்தணை நல்லூருக்குக் கிழக்கே 6 மைல்.

மகா வித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளையின் தலபுராணம் பெற்றது.

சுந்தரர்

ஆடுமின் அன்புடை யீர்!அடிக்கு ஆட்பட்ட தூளிகொண்டு
சூடுமின் தொண்டருள் ளீர்!உமரோடுஎமர் சூழவந்து
வாடும்இவ் வாழ்க்கைதன் னைவருந் தாமல் திருந்தச்சென்று
பாடுமின் பத்தருள் ளீர்!பழ மண்ணிப் படிக்கரையே.

## 31. ஓமாம்புலியூர்

### துயர்தீர்த்தநாதர்–பூங்கொடிநாயகி.

சம்பந்தர் : 1. அப்பர் : 1.

வழிபட்டநாள் : **28-2-56; 4-1-66**

சிதம்பரத்திற்குத் தென்மேற்கு 15 மைலில் உள்ள காட்டு மன்னார்குடியை அடைந்து அங்கிருந்து தெற்கே 4 மைல் சென்றால் இத் தலத்தை அடையலாம்.

தக்ஷிணாமூர்த்தி சந்நிதி சிறப்புடையது.

சம்பந்தர்

பூங்கொடி மடவாள் உமைஒரு பாகம்
புரிதரு சடைமுடி அடிகள்
வீங்குஇருள் நட்டம் ஆடும்எம் விகிர்தர்!
விருப்பொடும் உறைஇடம் வினவில்.
தேங்கமழ் பொழிலில் செழுமலர்கோதிச்
செறிதரு வண்டுஇசை பாடும்
ஓங்கிய புகழ்ஆர் ஓமமாம் புலியூர்
உடையவர் வடதளி அதுவே.

அப்பர்

அருந்தவத்தோர் தொழுதுஏத்தும் அம்மான் தன்னை,
ஆராத இன்அமுதை, அடியார் தம்மேல்
வரும்துயரம் தவிர்ப்பானை, உமையாள் நங்கை
மணவாள நம்பியை,என் மருந்து தன்னை,
பொருந்துபுனல் தழுவுவயல் நிலவு தூங்கப்
பொழில்கெழுவு தரும்ஓமாம் புலியூர் நாளும்
திருந்துதிரு வடதளிஎம் செல்வன் தன்னைச்
சேராதே திகைத்துநாள் செலுத்தி னேனே.

## 32. கானாட்டுமுள்ளூர்

### (கானாட்டாம்புலியூர்)

### பதஞ்சலிநாதர்–கோல்வளைக்கையாள்

சுந்தரர் : 1

வழிபட்ட நாள் : **20-12-56; 4-1-66.**

சிதம்பரத்தினின்றும் தென்மேற்கே 15 மைலில் உள்ள காட்டுமன்னார் குடியில் இருந்து தெற்கே ஓமாம்புலியூருக்குச் செல்லும் பாதையில் 2 மைல் சென்று கிழக்கே திரும்பினால் 1 மைலில் இத் தலம் இருக்கின்றது. இத் தலம் கொள்ளிடக் கரையில் இருக்கின்றது.

சுந்தரர்

அருமணியை. முத்தினை,ஆன் அஞ்சும் ஆடும்
அமரர்கள்தம் பெருமானை, அருமறையின் பொருளை,
திருமணியை, தீங்கரும்பின் ஊறலிருந் தேனை,
தெரிவரிய மாமணியை,திகழ்தருசெம் பொன்னை,
குருமணிகள் கொழித்துஇழிந்து, சுழித்துஇழியும்திரைவாய்க்
கோல்வளையார் குடைந்தாடும் கொள்ளிடத்தின் கரைமேல்
கருமணிகள் போல்நீலம் மலர்கின்ற கழனிக்
கானாட்டு முள்ளூரில் கண்டுதொழு தேனே.

## 33. திருநாரையூர்

### சௌந்தரநாதர்–திரிபுரசுந்தரி

சம்பந்தர் : 3; அப்பர் : 2.

வழிபட்டநாள் : **22-12-56; 4-1-66:**

சிதம்பரத்தில் இருந்து தென்மேற்கே காட்டு மன்னார்குடி செல்லும் பெருவழிச் சாலையில் 10 மைல் சென்று அங்கிருந்து தெற்கே ¾ மைலில் இத் தலம் உள்ளது. இது நாரை வழிபட்ட தலம் என்ப.

நம்பியாண்டர் நம்பிகள் பிறந்தருளிய தலம் இது.

இங்குள்ள பொல்லாப் பிள்ளையாரை வழிபட்டு நம்பியாண்டார் நம்பி, தில்லைத் தலத்தில் சேமித்து வைக்கப் பெற்றிருந்த தேவாரப் பதிகங்களைக் கண்டெடுத்தனர் என்ப.

### சம்பந்தர்

மாயவன் சேயவன் வெள்ளிய வன்விடம் சேரும்மைமிடற்றன்
ஆயவன் ஆகியொர் அந்தர மும்அவன் என்று வரைஆகம்
தீயவன் நீரவன் பூமிய வன்திரு நாரை யூர்தன்னில்
மேயவ னைத்தொழு வார்அவர் மேல்வினை ஆயின வீடுமே.

### அப்பர்

செம்பொன்னை, நன்பவளம் திகழும் முத்தை,
செழுமணியை, தொழுமவர்தம் சித்தத் தானை,
வம்புஅவிழும் மலர்க்கணைவேள் உலக்க நோக்கி
மகிழ்ந்தானை, மதில்கச்சி மன்னு கின்ற
கம்பனை,எம் கயிலாய மலையான் தன்னை,
கழுகினொடு காகுத்தன் கருதி ஏத்தும்
நம்பனை,எம் பெருமானை, நாதன் தன்னை,
நாரையூர் நன்னகரில் கண்டேன் நானே.

### சேக்கிழார்

அப்பொழுதே அம்பலத்துள் ஆடுகின்ற
கழல்வணங்கி, அருள்முன் பெற்றுப்
பொய்ப்பிறவிப் பிணியோட்டும் திருவீதி
புரண்டுவலம் கொண்டு போந்தே,
எப்புவனங் களும்நிறைந்த திருப்பதியின்
எல்லையினை இறைஞ்சி ஏத்திச்
செப்பரிய பெருமையினார் திருநாரை
யூர்பணிந்து பாடிச் செல்வார்.

# 34. கடம்பூர்

## (மேலைக்கடம்பூர்)

## அமிர்தகடேசுரர்–சோதிமின்னம்மை

சம்பந்தர் : 1; அப்பர் : 2.
வழிபட்ட நாள் : 22-12-56; 4-1-66.

சிதம்பரத்திற்கு 15 மைல் தொலைவிலுள்ள காட்டு மன்னார்குடியில் இருந்து மேற்கே எய்யலூர் செல்லும் வழியில் 3 மைலில் இத் தலம் உள்ளது. இங்குள்ள கோயிலுக்குக் கரக்கோயில் என்று பெயர். இதன் கிழக்கே 1 மைலில் கடம்பூரிளங்கோயில் உள்ளது.

சம்பந்தர்

தீவிரி. யக்கழல் ஆர்ப்பச்
சேயெரி கொண்டிடு காட்டில்
நாவிரி கூந்தல்நற் பேய்கள்
நகைசெய்ய நட்டம் நவின்றோன்;
காவிரி கொன்றை கலந்த
கண்நுத லான்கடம் பூரில்
பாவிரி பாடல் பயில்வார்
பழியொடு பாவம் இலாரே.

அப்பர்

நங்க டம்பனைப் பெற்றவள் பங்கினன்;
தென்க டம்பைத் திருக்கரக் கோயிலான்;
தன்க டன்அடி யேனையும் தாங்குதல்;
என்க டன்பணி செய்து கிடப்பதே.

மணிவாசகர்

கடம்பூர் மேவிய விடங்கா! போற்றி!

# 35. பந்தணை நல்லூர்

## பசுபதீசுரர்–காம்பனதோளியம்மை

சம்பந்தர் : 1; அப்பர் : 1.

வழிபட்ட நாள் : **30-1-57; 20-10-65.**

குற்றாலம் இரயில் நிலையத்திற்கு வடமேற்கே 6 கல்.

அம்பிகை ஆடிய பந்து வந்தணைந்த காரணத்தால் இத் தலம் இப் பெயர் பெற்றது என்ப. இத் தலத்திற்கு வடக்கே 5 மைலில் கொள்ளிடம் அணைக்கரையும் அதற்கு மேல் சென்னைக்குப் போகும் வழியில் வடமேற்கே 2 மைலில் திருவிசைப்பாத் தலமான கங்கை கொண்ட சோழேச்சுரமும் உள.

சம்பந்தர்

பொன்னினார் கொன்றை இருவடம் கிடந்து
பொறிகிளர் பூணநூல் புரள
மின்னினார் உருவின் மிளிர்வது ஓர் அரவம்
மேவுவெண் நீறுமெய் பூசித்
துன்னினார் நால்வர்க்கு அறம்அமர்ந்து அருளித்
தொன்மையார் தோற்றமும் கேடும்
பன்னினார் போலும் பந்தணை நல்லூர்
நின்றஎம் பசுபதி யாரே.

அப்பர்

நீர்உலாம் சடைமுடிமேல் திங்கள் ஏற்றார்
நெருப்புஏற்றார் அங்கையில் நிறையும் ஏற்றார்
ஊர்எலாம் பலிஏற்றார் அரவம் ஏற்றார்
ஒலிகடல்வாய் நஞ்சம் மிடற்றில் ஏற்றார்
வார்உலா முலைமடவாள் பாகம் ஏற்றார்
மழுவுஏற்றார் மான்மறிஓர் கையில் ஏற்றார்
பார்உலாம் புகழ்ஏற்றார் பைங்கண்ஏற்றார்
பலிஏற்றார் பந்தணை நல்லூ ராரே.

## 36. கஞ்சனூர்

### அக்கினீசுரர்–கற்பகநாயகி

அப்பர் : 1.

வழிபட்டநாள் : 7-1-57; 20-10-65.

கஞ்சன் (பிரமன்) வழிபட்ட தலம்

நரசிங்கன் பேட்டை இரயில் நிலையத்தில் இருந்து 1 கல். அரதத்த சிவாச்சாரியார் பிறந்து சைவம் வளர்த்த தலம். அவருக்குத் தனிக் கோயில் இருக்கிறது.

அப்பர்

தொண்டர்குழாம் தொழுதுஏத்த அருள்செய் வானை,
சுடர்மழுவாள் படையானை, சுழிவான் கங்கைத்
தெண்திரைகள் பொருதுஇழிசெஞ் சடையி னானை,
செக்கர்வான் ஒளியானை, சேராது எண்ணிப்
பண்டுஅமரர் கொண்டுஉகந்த வேள்வி எல்லாம்
பாழ்படுத்துத் தலைஅறுத்துப் பல்கண் கொண்ட
கண்டகனை, கஞ்சனூர் ஆண்ட கோவை,
கற்பகத்தைக் கண்ணாரக் கண்டுய்ந் தேனே.

## 37.திருக்கோடிகா

### கோடிகாநாதர்–வடிவாம்பிகை

சம்பந்தர் : 1; அப்பர் : 3.

வழிபட்ட நாள் : 7-1-57; 20-10-65.

கஞ்சனூருக்குக் கிழக்கே 2 கல். மூன்று கோடி முனிவர்கள் வழிபட்ட தலம்.

சம்பந்தர்

பண்டுசெய்த வல்வினை பற்றறக் கெடும்வகை
உண்டுமக்கு உரைப்பன்நான்; ஒல்லைநீர் எழுமினோ;
மண்டுகங்கை செஞ்சடை வைத்துமாதோர் பாகமாக்
கொண்டுகந்த மார்பினான் கோடிகாவு சேர்மினே.

அப்பர்

நெற்றிமேல் கண்ணி னானே! நீறுமெய் பூசி னானே!
கற்றைப்புன் சடையி னானே! கடல்விடம் பருகி னானே!
செற்றவர் புரங்கள் மூன்றும் செவ்வழல் செலுத்தி னானே!
குற்றமில் குணத்தி னானே! கோடிகா உடைய கோவே!

ஐயடிகள் காடவர்கோன் நாயனார்

காலைக் கலைஇழையால் கட்டித்தன் கைஆர்த்து
மாலை தலைக்குஅணிந்து மைஎழுதி-மேலோர்
பருக்கோடி மூடிப் பலர்அழா முன்னம்
திருக்கோடி காஅடைநீ சென்று.

## 38. திருமங்கலக்குடி

### பிராணவரதேசுரர்–மங்களநாயகி

சம்பந்தர் : 1 ; அப்பர் : 1.
வழிபட்ட நாள் : 6-1-57; 14-1-66.

ஆடுதுறை இரயில் நிலையத்தில் இருந்து 2 கல். மாகாளி வெங்கதிர்ச் செல்வன், சங்குசக்கிரதாரி, சதுமுகன், அகத்தியன் வழிபட்ட தலம் என்று அப்பர் பாடியுள்ளார்.

சம்பந்தர்

கருங்கை யானையின் ஈர்உரி போர்திடு கள்வனார்
மருங்குள லாம்மணம் ஆர்பொழில் சூழ்மங்க லக்குடி
அரும்பு சேர்மலர்க் கொன்றையி னான்அடி அன்பொடு
விரும்பி ஏத்தவல் லார்வினை ஆயின வீடுமே.

அப்பர்

செல்வம் மல்கு திருமங்க லக்குடி,
செல்வம் மல்கு சிவநிய மத்தராய்ச்
செல்வம் மல்கு செழுமறை யோர்தொழச்
செல்வன் தேவியொ டும்திகழ் கோயிலே.

## 39. திருப்பனந்தாள்

### சடையப்பர்–பெரியநாயகி

சம்பந்தர் : 1.

வழிபட்டநாள் : **6-1-57; 14-1-66.**

கும்பகோணத்திற்கு வடகிழக்கே 10 மைல். ஆடுதுறை இரயில் நிலையத்தினின்றும் வடக்கே 6 மைல். பனைமரம் தல விருட்சமானதால் பனந்தாள் என்னும் பெயர் பெற்றது. கோயிலுக்குத் தாடகேச்சுரம் என்பது பெயர். தாடகை என்னும் ஓர் பெண்ணால் வழிபடப் பெற்றமையால் இத் தலம் இப் பெயர் பெற்றது. இத் தலத்தை வழிபட்ட தாடகை இராம காதையில் வரும் தாடகையல்லள். அவள் அன்புக்காக இலிங்கம் சாய்ந்து கொடுக்க அதை யானைகளாலும் சேனைகளாலும் நிமிர்த்த முடியாமற்போக குங்கிலியக் கலய நாயனார் வளைந்த சிவலிங்கத்தைக் கழுத்தில் கயிறு கட்டி இழுத்து நிமிர்த்த தலம் இது.

மேற்கு நோக்கிய சந்நிதி.

குமரகுருபர சுவாமிகள் கண்ட திருப்பனந்தாள் மடத்தைப் பெற்றிருக்கும் புண்ணியத் தலம் இது.

சம்பந்தர்

சூழ்தரு வல்வினை யும்உடல் தோன்றிய பல்பிணியும்
பாழ்பட வேண்டுதி ரேல்மிக ஏத்துமின்; பாய்புனலும்
போழ்இள வெண்மதி யும்அனல் பொங்குஅர வும்புனைந்த
தாழ்சடை யான்பனந் தாள்திருத் தாடகை ஈச்சரமே.

ஐயடிகள் காடவர்கோன் நாயனார்.

கரம்ஊன்றிக் கண்இடுங்கிக் கால்குலைய மற்றுஓர்
மரம்ஊன்றி வாய்குதட்டா முன்னம்-புரம்மூன்றும்
தீச்சரத்தால் செற்றான் திருப்பனந்தாள் தாடகைய
ஈச்சரத்தான் பாதமே ஏத்து.

## 40. திருஆப்பாடி

### பாலுகந்தநாதர்–பெரியநாயகி

அப்பர் : 1.

வழிபட்ட நாள் : 6-1-57; 14-1-66.

திருப்பனந்தாளிலிருந்து கும்பகோணம் செல்லும் சாலையில் தென்மேற்கே ஒரு கல். மண்ணியாறு கோவிலுக்கு வடக்கே அண்மையில் ஓடுகிறது.

சண்டேசுர நாயனார் சிவபெருமானை வழிபட்டுப் பேறடைந்த தலம்.

அப்பர்

உள்ளுமாய்ப் புறமும் ஆகி
உருவுமாய் அருவும் ஆகி
வெள்ளமாய்க் கரையும் ஆகி
விரிகதிர் ஞாயிறு ஆகிக்
கள்ளமாய்க் கள்ளத்து உள்ளார்
கருத்துமாய் அருத்தம் ஆகி
அள்ளுவார்க்கு அள்ளல் செய்திட்டு
இருந்தஆப் பாடி யாரே.

ஐயடிகள் காடவர்கோன் நாயனார்

உள்ளிடத்தான் வல்லையே நெஞ்சமே! ஊழ்வினைகள்
கள்ளிடத்தான் வந்து கலவாமுன்-கொள்ளிடத்தின்
தென் திருஆப் பாடியான் தெய்வமறை நான்கினையும்
தன்திருவாய்ப் பாடியான் தாள்.

## 41. திருச்சேய்ஞலூர்

### (சேங்கனூர்)

### சத்தியகிரிநாதர்–சகிதேவி

சம்பந்தர் : 1.

வழிபட்டநாள் : 6-1-57; 14-1-66.

கும்பகோணத்தில் இருந்து வடகிழக்கில் 10 மைல். திரு ஆப்பாடியில் இருந்து தென் கிழக்கே $1\frac{1}{2}$ கல்.

சேய் (முருகன்) வழிபட்டு சர்வசங்காரப் படைப்பெற்று உவந்த ஊர்.

சேய் நல் ஊர் சேய்ஞலூர் எனப் பெயர் ஏற்பட்டது. சண்டேசுவர நாயனார் பிறந்தருளி வளர்ந்து சிவ வழிபாடு செய்து வீடு பேறு உற்ற தலம்.

சம்பந்தர்

பீர்அடைந்த பால்அதுஆட்டப் பேணாத வன்தாதை
வேர்அடைந்து பாய்ந்ததாளை வேர்த்தடிந் தான்தனக்குத்
தார்அடைந்த மாலைசூட்டித் தலைமை வகுத்ததுஎன்னே
சீர்அடைந்த கோயில்மல்கு சேய்ஞலூர் மேயவனே.

சேக்கிழார்

பெருமை பிறங்கும் சேய்ஞ லூர்ப் பிள்ளை யார்தம் உள்ளத்தில்
ஒருமை நினைவால் உம்பர்பிரான் உவக்கும் பூசை உறுப்பான
திருமஞ் சனமே முதலவற்றில் தேடா தனஅன் பினில்நிரப்பி
வரும்அந் நெறியே அர்ச்சனைசெய்து அருளி வணங்கிமகிழ்கின்றார்.

## 42. திருந்துதேவன்குடி

### கற்கடகநாதர்–அருமருந்தம்மை

சம்பந்தர் : 1.

வழிபட்டநாள் : **8-1-57; 14-1-66**

கும்பகோணத்துக்குக் கிழக்கு 4 கல் தொலைவில் உள்ள திருவியலூருக்கு வடக்கே 1 மைலில் கோயில் வயலுக்குள் இருக்கிறது.

நண்டு வழிபட்ட தலம்.

கற்கடம் : நண்டு.

இங்கே இரண்டு அம்மன் சன்னிதிகள் இருக்கின்றன. மகா லிங்கத்தின் வடிவம் முன் பக்கத்தில் வெட்டுண்டு இருக்கிறது. கிழ மருத்துவ உருவில் அரசனுக்குக் காட்டிய இடத்தில் வெட்டப்பட்ட போது வெளிப்பட்ட இலிங்கமென்ப.

சம்பந்தர்

மருந்துவேண் டில்இவை மந்திரங் கள்இவை
புரிந்துகேட் கப்படும் புண்ணியங்கள் இவை
திருந்துதே வன்குடித் தேவர்தேவு எய்திய
அருந்தவத் தோர்தொழும் அடிகள்வே டங்களே.

## 43. திருவியலூர்

### யோகாநந்தேசுரர்–சௌந்தரநாயகி

சம்பந்தர் : 1.
வழிபட்ட நாள் : 8-1-57: 14-1-66.

கும்பகோணத்திற்குக்கிழக்கே 4 கல். பிரமன் அந்தண குலத்தில் பிறந்து ஏழுதம்பியருடன் இலிங்கத்தில் ஒடுங்கியதால் என்மர் சடைகள் இலிங்கத்தில் உள்ளன.

சம்பந்தர்

எண்ணார்தரு பயனாய்அயன் அவனாய்மிகு கலையாய்ப்
பண்ணார்தரு மறையாய்உயர் பெருளாய்இறை அவனாய்க்
கண்ணார்தரும் உருவாகிய கடவுள்இடம் எனலாம்
விண்ணோரொடு மண்ணோர்தொழு விரிநீர்விய லூரே.

## 44. கொட்டையூர்

### கோடீசுரர்–பந்தாடுநாயகி

அப்பர் : 1.
வழிபட்ட நாள் 31-12-55; 26-6-65.

கும்பகோணத்திற்கு மேற்கே 2 மைல். சுவாமிமலைக்குக் கிழக்கே 2 கல். ஆமணக்குக் கொட்டைச் செடியின் கீழ் இலிங்கம் வெளிப்பட்டதால் ஊர் பெயர் கொட்டையூர். அரசனுக்குக் கோடிலிங்கமாகத் தோன்றியதால் கோயில் பெயர் கோடீச்சுரம்: இலிங்கத்தில் பல சிறு இலிங்கங்கள் அமைந்துள்ளன.

அப்பர்

கலைக்கன்று தங்கு கரத்தான் கண்டாய்
கலைபயில்வோர் ஞானக்கண் ஆனான் கண்டாய்
அலைக்கங்கை செஞ்சடைமேல் ஏற்றான் கண்டாய்
அண்ட கபாலத்துஅப் பாலான் கண்டாய்
மலைப்பண்டம் கொண்டு வருநீர்ப் பொன்னி
வலஞ்சுழியின் மேவிய மைந்தன் கண்டாய்
குலைத்தெங்கம் சோலைசூழ் கொட்டை யூரில்
கோடீச் சரத்துறையும் கோமான் தானே.

## 45. இன்னம்பர்

### எழுத்தறிநாதர்–கொந்தார் பூங்குழலி

சம்பந்தர் : 1. அப்பர் : 4.
வழிபட்ட நாள் : 31-12-55; 16-1-66.

கும்பகோணத்தில் இருந்து மேற்கே 3 மைலில் உள்ள புளியஞ்சேரி என்னும் ஊரினின்றும் வடக்கே 1 மைலில் இத் தலம் இருக்கின்றது. கொட்டையூருக்கு வட மேற்கில் $1\frac{1}{2}$ மைல். இரண்டு அம்மன் சந்நிதிகள் உள்ளன.

சம்பந்தர்

எண்திசைக் கும்புகழ் இன்னம்பர் மேவிய
வண்டுஇசைக் கும்சடை யீரே!
வண்டுஇசைக் கும்சடை யீர்உமை வாழ்த்துவார்
தொண்டுஇசைக் கும்தொழி லோரே.

அப்பர்

என்னில் ஆரும் எனக்குஇனி யார்இல்லை,
என்னி லும்இனி யான்ஒரு வன்உளன்;
என்னு ளேஉயிர்ப் பாய்ப்புறம் போந்துபுக்கு
என்னு ளேநிற்கும் இன்னம்பர் ஈசனே.

# 46. திருப்புறம்பயம்

## சாட்சிநாதர்–கரும்பன்னசொல்லி

*சம்பந்தர் : 1; அப்பர் : 1; சுந்தரர் : 1.*

வழிபட்டநாள் : **31-12-55; 16-1-66.**

*இன்னம்பரில் இருந்து வடக்கே 2 கல். கும்பகோணத்தில் இருந்து வடமேற்கில் 6 கல்.*

### சம்பந்தர்

விரிந்தனை குவிந்தனை விழுங்குஉயிர் உமிழ்ந்தனை
திரிந்தனை குருந்துஒசி பெருந்தகையும் நீயும்
பிரிந்தனை புணர்ந்தனை பிணம்புகு மயானம்
புரிந்தனை மகிழ்ந்தனை புறம்பயம் அமர்ந்தோய்.

### அப்பர்

கோஆய இந்திரன்உள் இட்டார் ஆகக்
குமரனும் விக்கின விநாய கன்னும்
பூஆய பீடத்து மேல்அ யன்னும்
பூமி அளந்தானும் போற்றி சைப்பப்
பாஆய இன்இசைகள் பாடி ஆடிப்
பார்இடமும் தாமும் பரந்து பற்றிப்
பூஆர்ந்த கொன்றைப் பொறிவண்டு ஆர்க்கப்
புறம்பயம்நம் ஊர்என்று போயி னாரே.

### சுந்தரர்

முன்னைச் செய்வினை இம்மையில் வந்து
மூடும் ஆதலின் முன்னமே
என்னை நீ தியக் காதுஎ ழுமட
நெஞ்ச மேஎந்தை தந்தையூர்
அன்னச் சேவலோடு ஊடிப் பேடைகள்
கூடிச் சேரும் அணிபொழில்
புன்னைக் கன்னி கழிக்கண் நாறும்
புறம்ப யம்தொழப் போதுமே.

மணிவாசகர்

புறம்பயம் அதனில் அறம்பல அருளியும்.

## 47. திருவிசயமங்கை

### விசயநாதர்–மங்கைநாயகி

சம்பந்தர் : 1; அப்பர் : 1.

வழிபட்டநாள் : **1-2-57; 16-1-66.**

திருப்புறம்பயத்துக்கு மேற்கு 2½ கல் அளவு.

சம்பந்தர்

கீதமுன் இசைதரக் கிளரும் வீணையர்;
பூதமுன் இயல்புடைப் புனிதர் பொன்னகர்
கோதனம் வழிபடக் குலவு நான்மறை
வேதியர் தொழுதெழு விசய மங்கையே.

அப்பர்

வந்து கேண்மின்! மயல்தீர் மனிதர்காள்!
வெந்த நீற்றன்; விசயமங் கைப்பிரான்;
சிந்தை யால்நினை வார்களைச் சிக்கெனப்
பந்து வாக்கி உயக்கொளும் காண்மினே.

## 48. திருவைகாவூர்

### வில்வவனேசுரர்–வளைக்கைநாயகி

சம்பந்தர் : 1.

வழிபட்டநாள் : 1–2–57; 16–1–66.

விசயமங்கைக்கு மேற்கே 1½ மைல். கும்பகோணத்தி னின்றும் கொட்டையூர், இன்னம்பர், புறம்பயம், விசய

மங்கையை வணங்கிக் கொண்டு வைகாவூர் செல்லலாம்.

இத் தலம் கொள்ளிடத்தின் தென்கரையில் இருக்கின்றது.

சம்பந்தர்

நஞ்சமுது செய்தமணி கண்டன்நமை
ஆளுடைய ஞானமுதல்வன்,
நெஞ்சடையி டைப்புனல்க ரந்தசிவ
லோகன் அமர் கின்றஇடமாம்.
அஞ்சுடரொடு ஆறுபதம் ஏழின்இசை
எண்ணரிய வண்ணம்உளவாய்
மைஞ்சரொடு மாதர்பல ரும்தொழுது
சேரும்வயல் வைகாவிலே.

## 49. வடகுரங்காடுதுறை

### குலைவணங்கீசுரர்–அழகுசடைமுடியம்மை

சம்பந்தர் : 1.

வழிபட்டநாள் : 29–1–57; 3–1–66.

கும்பகோணத்தினின்றும் திருவையாறு செல்லும் சாலையில் 15 ஆவது கல். திரு ஐயாற்றினின்றும் 6 கல்.

வாலியார் வழிபட்ட தலம் என்று சம்பந்தர் தேவாரம் சாற்றும்.

சம்பந்தர்

நீலமா மணிநிறத்து அரக்கனை இருபது கரத்தொடு ஒல்க
வாலினால் கட்டிய வாலியார் வழிபட மன்னு கோயில்
ஏலமோடு இலை.இல வங்கமே இஞ்சியே மஞ்சள் உந்தி
ஆலியா வருபுனல் வடகரை அடைகுரங் காடு துறையே.

# 50. திருப்பழனம்

## ஆபத்சகாயேசுரர்–பெரியநாயகி

*சம்பந்தர் 1. அப்பர் : 5*

*வழிபட்டநாள் : 16–2–59; 3–1–66.*

*திருஐயாற்றுக்குக் கிழக்கு 2 கல்.*

தம்மிடம் பெருங் காதல் கொண்டிருந்த "அந்தணரின் மேம்பட்ட அப்பூதி அடிகள்" எனச் சேக்கிழார் அடிகளால் பாராட்டப்பெற்ற அப்பூதி அடிகளைத் தேவாரப் பாடலில் வைத்து அப்பர் சுவாமிகள் சிறப்பித்த பதி இத் திருப்பழனம். அணித்தே உள்ள திங்களூரில் வாழ்ந்த அப்பூதி அடிகளை அப்பர் சுவாமிகள் காணுங்கால் இத் தலத்தை வணங்கித் தான் சென்றார் என்று தெரிகிறது.

ஒரு குன்ற வில்லானைத் திருப்பழனத்துள் இறைஞ்சி வருகின்றோம் என அப்பூதி அடிகளிடம் அப்பர் பெருமான் கூறியதாகப் பெரிய புராணம் பேசும்.

*சம்பந்தர்*

பொய்யா மொழியார் முறையால் ஏத்திப் புகழ்வார் திருமேனி
செய்யார் கரிய மிடற்றார் வெண்ணூல் சேர்ந்த அகலத்தார்;
கையா டலினார் புனலால் மல்கு சடைமேல் பிறையோடும்
பையா டரவம் உடனே வைத்தார் பழன நகராரே.

*அப்பர்*

சொல்மாலை பயில்கின்ற குயிலினங்காள்! சொல்லீரே!
பல்மாலை வரிவண்டு பண்மிழற்றும் பழனத்தான்
முன்மாலை நகுதிங்கள் முகிழ்விளங்கு முடிச்சென்னிப்
பொன்மாலை மார்பன்,என் புதுநலம்உண்டு இகழ்வானோ?

*மணிவாசகர்*

பாங்கார் பழனத்து அழகா! போற்றி!

சேக்கிழார்

"ஒருகுன்ற வில்லாரைத் திருப்பழனத் துள்இறைஞ்சி
வருகின்றோம்; வழிக்கரையில் நீர்வைத்த வாய்ந்தவளம்
தருகின்ற நிழல்தண்ணீர்ப் பந்தரும்கண்டு அத்தகைமை
புரிகின்ற அறம்பிறவும் கேட்டு அணைந்தோம்" எனப்புகல்வார்.

# 51. திருவையாறு

## ஐயாற்றீசர்–அறம்வளர்த்தநாயகி

சம்பந்தர் : 5; அப்பர் : 12; சுந்தரர் : 1.
வழிபட்டநாள் : 18–12–56; 2–1–66.

தஞ்சாவூருக்கு வடக்கு 7 கல்.

இத் தலம் அதிகமான தேவாரம் பெற்ற வரிசையில் நான்காவதாக நிற்கின்றது. 1. சீர்காழி 2. திருவாரூர் 3 .திருவீழிமிழலை 4. திருவையாறும் திருவதிகையும். இவ்விரண்டு தலங்களும் பதினெட்டுப் பதிகங்கள் பெற்றிருக்கின்றன.

அப்பர் சுவாமிகளுக்குக் கயிலைக் காட்சி கொடுத்தருளிய தலமிது.

சம்பந்தர்

நின்றுலா நெடுவிசும்பில் நெருக்கிவரு புரமூன்றும் நீள்வா யம்பு
சென்றுலாம் படிதொட்ட சிலையாளி, மலையாளி சேரும் கோயில்
குன்றெலாம் குயில்கூவக் கொழும்பிரச மலர்பாய்ந்து வாசம் மல்கு
தென்றலார் அடிவருடச் செழும்கரும்பு கண்வளரும் திருவை யாறே

அப்பர்

பேணித் தொழும்அவர் பொன்னுல காளப் பிறங்குஅருளால்
ஏணிப் படிநெறி இட்டுக் கொடுத்துஇமை யோர்முடிமேல்
மாணிக்கம் ஒத்து, மரகதம் போன்று வயிரம்மன்னி,
ஆணிக் கனகமும் ஒக்கும்.ஐ ஆறன் அடித்தலமே.

### சுந்தரர்

பிழைத்த பிழைஒன்று அறியேன்நான்.
பிழையைத் தீரப் பணியாயே.
மழைக்கண் நல்லார் குடைந்துஆட
மலையும். நிலனும் கொள்ளாமைக்
கழைக்கொள் பிரசம் கலந்துஎங்கும்
கழனி மண்டிக் கையேறி
அழைக்கும் திரைக்கா விரிக்கோட்டத்து
ஐயாறு உடைய அடிகளோ!

### மணிவாசகர்

கைஆர் வளைசிலம்பக் காதார் குழையாட
மைஆர் குழல்புரளத் தேன்பாய வண்டுஒலிப்பச்
செய்யானை. வெண்ணீறு அணிந்தானை. சேர்ந்தறியாக்
கையானை. எங்கும் செறிந்தானை. அன்பர்க்கு
மெய்யானை. அல்லாதார்க்கு அல்லாத வேதியனை.
ஐயாறு அமர்ந்தானைப் பாடுதும்காண் அம்மானாய்!

### ஐயடிகள் காடவர் கோன் நாயனார்.

குந்தி நடந்து குனிந்துஒருகை கோல்ஊன்றி
நொந்து.இருமி. ஏங்கி. நுரைத்துஏறி–வந்துஉந்தி
ஐயாறு வாயாறு பாயாமுன் நெஞ்சமே!
ஐயாறு வாயால் அழை.

### சேக்கிழார்

"மாதர்ப் பிறைக்கண்ணி யானை
மலையான் மகளொடும்" என்னும்
கோதறு தண்தமிழ்ச் சொல்லால்
குலவு திருப்பதி கங்கள்
"வேத முதல்வர்ஐ யாற்றில்
விரவும் சராசரம் எல்லாம்
காதல் துணையொடும் கூடக்
கண்டேன்" எனப்பாடி நின்றார்.

# 52. திருநெய்த்தானம்

## நெய்யாடியப்பர்–பாலாம்பிகை

**சம்பந்தர் : 1; அப்பர் : 5.**

**வழிபட்டநாள் : 18–12–56; 2–1–66.**

திருவையாற்றுக்கு மேற்கு 1 கல்.

**சம்பந்தர்**

பறையும்பழி பாவம்படு துயரம்பல தீரும்
பிறையும்புனல் அரவும்படு சடைஎம்பெரு மானூர்
அறையும்புனல் வருகாவிரி அலைசேர்வட கரைமேல்
நிறையும்புனை மடவார்பயில் நெய்த்தானம் எனீரே.

**அப்பர்**

தந்தைதாய் இல்லாதாய் நீயே என்றும்,
தலையார் கயிலாயன் நீயே என்றும்,
எந்தாய்,எம் பிரான்ஆனாய் நீயே என்றும்,
ஏகம்பத்து என்ஈசன் நீயே என்றும்,
முந்திய முக்கணாய் நீயே என்றும்,
மூவலூர் மேவினாய் நீயே என்றும்,
சிந்தையாய் தேனூராய் நீயே என்றும்,
நின்றநெய்த் தானா!என் நெஞ்சு ளாயே.

# 53. பெரும்புலியூர்

## வியாக்கிரபுரீசர்–சௌந்தரநாயகி

**சம்பந்தர் : 1.**

**வழிபட்டநாள் : 18–12–56; 2–1–66.**

திருவையாற்றுக்கு மேற்கே 2½ கல். நெய்தானத்தில் இருந்து 1½ கல். புலிக்கால் முனிவர் வழிபட்ட தலம்.

சம்பந்தர்

பிறைவள ரும்முடிச் சென்னிப் பெரும்புலி யூர்ப்பெரு மானை.
நறைவள ரும்பொழில் காழி நற்றமிழ் ஞானசம் பந்தன்
மறைவள ரும்தமிழ் மாலை வல்லவர் தம்துயர் நீங்கி
நிறைவளர் நெஞ்சினர் ஆகி நீடுஉல கத்திருப் பாரே.

# 54. திருமழபாடி

## வைரத்தூண்நாதர்–அழகாம்பிகை

**சம்பந்தர் : 3; அப்பர் : 2; சுந்தரர் : 1.**
**வழிபட்டநாள் : 16–3–56; 11–1–66.**

திருவையாற்றில் இருந்து வடமேற்கே 4 மைலில் இத்தலம் இருக்கிறது. இடையில் கொள்ளிட நதி. கொள்ளிடத்தின் அக்கரையில் மழபாடிக் கோயில் இருப்பதால் இவ்வழி சென்றால் கொள்ளிடப் பெருநதியை நடந்து தான் கடத்தல் வேண்டும். திருச்சியில் இருந்து லால்குடி வழி சென்றால் கோயில் வரைக் காரில் செல்லலாம். திருச்சியில் இருந்து சுமார் 30 கல் அளவு.

சம்பந்தர்

அந்தணர் வேள்வியும் அருமறைத் துழனியும்.
செந்தமிழ்க் கீதமும். சீரினால் வளர்தரப்
பந்தணை மெல்விர லாளொடும் பயில்விடம்
மந்தம்வந்து உலவுசீர் மாமழ பாடியே.

அப்பர்

சுழித்துணையாம் பிறவிவழித் துக்கம் நீக்கும்
சுருள்சடைஎம் பெருமானே! தூய தெண்ணீர்,
இழிப்பரிய பசுபாசப் பிறப்பை நீக்கும்
என்துணையே!என்னுடைய பெம்மான். தம்மான்.
பழிப்பரிய திருமாலும். அயனும் காணாப்
பரிதியே! சுருதிமுடிக்கு அணியாய் வாய்த்த
வழித்துணையாம் மழபாடி வயிரத் தூணே!
என்றென்றே நான்அரற்றி நைகின் றேனே.

சுந்தரர்

பொன்னார் மேனியனே! புலித்தோலை அரைக்கசைத்து
மின்னார் செஞ்சடைமேல் மிளிர்கொன்றை அணிந்தவனே!
மன்னே! மாமணியே! மழபாடியுள் மாணிக்கமே!
அன்னே! உன்னை அல்லால் இனியாரை நினைக்கேனே.

ஐயடிகள் காடவர் கோன் நாயனார்

இழவாடிச் சுற்றத்தார் எல்லாரும் கூடி
விழவாடி ஆவிவிடா முன்னம்-மழபாடி
ஆண்டானை. ஆர்அமுதை. அன்று.அயன்மால் காணாமை
நீண்டானை நெஞ்சே நினை.

# 55. திருப்பழுவூர்

## வடமூலநாதர்-அருந்தவநாயகி

சம்பந்தர் : 1.

வழிபட்டநாள் : 2-9-57; 6-1-66.

திருவையாற்றுக்கு வடக்கே 10 மைல் அரியலூருக்குப் போகும் வழி. இடையில் கொள்ளிட நதியைக் கடக்க வேண்டும். திருச்சி அரியலூர்ச் சாலையில் சென்றால் நேரே காரில் கோயிலுக்குச் செல்லலாம். அரியலூர் இரயில் நிலையத்தில் இருந்து கீழைப்பழுவூர் என்ற இத் தலம் 7 கல்.

சம்பந்தர்

முத்தன்;மிகு மூவிலைநல் வேலன்;விரி நூலன்;
அத்தன்;எமை ஆளுடைய அண்ணல்;இடம் என்பர்
மைத்தழை பெரும்பொழிலின் வாசம்அது வீசப்
பத்தரொடு சித்தர்பயில் கின்றபழு வூரே.

# 56. திருக்கானூர்

## செம்மேனிநாதர்–சிவயோகநாயகி
## கரும்பீசர்–சௌந்தரநாயகி.

*சம்பந்தர் : 1; அப்பர் : 1.*
*வழிபட்டநாள் : 24–3–57; 2–1–66.*

பூதலூர் இரயில் நிலையத்தில் இருந்து வடக்கே 5 மைலில் உள்ள மேலைத் திருக்காட்டுப் பள்ளியை அடைந்து அங்கிருந்து வடக்கே 2 மைல் சென்றால் இத் தலத்தை அடையலாம். இத் தலம் கொள்ளிடக் கரையில் இருக்கின்றது. ஊர் எதுவுமில்லை. கோவில் மட்டுமே மணல் திட்டுக்கு நடுவில் இருக்கின்றது.

திருவையாற்றில் இருந்து காரில் கண்டியூர், திருப்பூந்துருத்தி, திருவாலம்பொழில் வழி மேலைத் திருக்காட்டுப் பள்ளியை அடைந்து இத் தலத்தை அணுகுதல் எளிது.

### சம்பந்தர்

தமிழின் நீர்மை பேசித்தாளம் வீணை பண்ணின்நல்ல
முழுவ மொந்தை மல்குபாடல் செய்கையிடம் ஓவார்
குமிழின் மேனி தந்துகோல நீர்மையது கொண்டார்,
கமழும் சோலைக் கானூர்மேய பவளவண்ண னாரே.

### அப்பர்

தாயத் தார்,தமர் நல்நிதி என்னும்இம்
மாயத் தேகிடந் திட்டு மயங்கிடேல்;
காயத் தேஉளன் கானூர் முளையினை
வாயத் தால்வணங் கீர்!வினை மாயவே.

## 57. அன்பிலாலந்துறை

### (திருமாலயந்துறை, அன்பில்)

### சத்தியவாகீசர்–சௌந்தரநாயகி

சம்பந்தர் : 1; அப்பர் : 1.

வழிபட்டநாள் : 16–3–56; 11–1–66

அன்பில், ஊரின் பெயர். ஆலந்துறை, கோயிலின் பெயர். லால்குடி இரயில் நிலையத்தில் இருந்து கிழக்கே 3 கல்.

சம்பந்தர்

கணைநீடுஎரி மால்அர வம்,வரை வில்லா
இணையாஎயில் மூன்றும் எரித்த இறைவர்
பிணைமாமயி லும்,குயில் சேர்மட அன்னம்
அணையும் பொழில் அன்பிலா லந்துறை யாரே.

அப்பர்

வெள்ளம் உள்ள விரிசடை நந்தியைக்
கள்ளம் உள்ள மனத்தவர் காண்கிலார்;
அள்ள லார்வயல் அன்பிலா லந்துறை
உள்ள வாறுஅறி யார்சிலர் ஊமரே.

## 58. திருமாந்துறை

### ஆம்ரவனேசுரர்–அழகால்உயர்ந்தம்மை

சம்பந்தர் : 1

வழிபட்டநாள் : 16–3–56; 11–1–66.

லால்குடி இரயில் நிலையத்திற்கு மேற்கே 3 கல்.

**சம்பந்தர்**

கோங்கு. செண்பகம். குருந்தொடு
பாதரி குரவிடை மலர்உந்தி.
ஓங்கி நீர்வரு காவிரி
வடகரை மாந்துறை உறைவானைப்
பாங்கி னால்இடும் தூபமும்.
தீபமும். பாட்டுஅவி மலர்சேர்த்தித்
தாங்கு வார்அவர் நாமங்கள்
நாவினில் தலைப்படும் தவத்தோரே.

## 59. திருப்பாற்றுறை

### மூலநாதேசர்–மேகலாம்பிகை

**சம்பந்தர் : 1.**

**வழிபட்டநாள் : 14–11–56; 11–1–66.**

திருவானைக்காவிலிருந்து கிழக்கே 5 கல். அணைக்கரைச் சாலையில் செல்ல வேண்டும். கொள்ளிடத்துக்கும் காவிரிக்கும் இடையில் இக்கோயில் இருக்கிறது.

**சம்பந்தர்**

நல்லாரும்அவர் தீயர் எனப்படும்
சொல்லார் நன்மலர் சூடினார்
பல்லார் வெண்தலைச் செல்வர்எம் பாற்றுறை
எல்லா ரும்தொழும் ஈசரே.

## 60. திருவானைக்கா

### (ஐம்புகேசுரம்)

### ஆனைக்கா அண்ணல்–அகிலாண்டநாயகி

**சம்பந்தர் : 3; அப்பர் : 3; சுந்தரர் : 1.**

**வழிபட்டநாள் : 4–1–56; 7–1–66.**

ஸ்ரீரங்கம் இரயில் நிலையத்துக்குக் கிழக்கே ½ மைல்.

திருச்சிராப்பள்ளிக்கு வடக்கே 3 மைல்.

சிலந்தியும் யானையும் வழிபட்டதலம். வெள்ளையானை வழிபட்ட காரணத்தால் இத்தலம் ஆனைக்கா என்னும் பெயர் பெற்றது.

சிவலிங்கத்தின் அடியில் இருந்து ஊற்றுப் பெருக்கெடுத்து வந்து கொண்டிருக்கிறது. முற்பிறவியில் சிலந்திப் பூச்சியாக இருந்து ஆனைக்காவை வழிபட்டவரே பின்னர் அறுபான்மும்மை நாயன்மார்களுள் ஒருவராகிய கோச் செங்கட் சோழ நாயனாராகப் பிறந்து எழுபது சிவபெருமானுக்குரிய மாடக் கோயில் கட்டினார் என்பது வரலாறு. இச் செய்தியைச் சைவப் புலவர்கள் பாராட்டுவது ஒரு புறமிருக்க,

"இருக்கிலங்கு திருமொழிவாய் எண்தோள் ஈசற்கு
எழில்மாடம் எழுபதுசெய்து உலகம் ஆண்ட
திருக்குலத்து வளச்சோழன்"

எனத் திருமங்கை ஆழ்வார் பெரிதும் பாராட்டுவார்.

சம்பந்தர்

ஊழிஊழி வையகத்து உயிர்கள்தோற்றும் வானொடும்
ஆழியானும் காண்கிலா ஆனைக்காவில் அண்ணலைக்
காழிஞான சம்பந்தன் கருதிச்சொன்ன பத்துஇவை
வாழியாகக் கற்பவர் வல்வினைகள் மாயுமே.

அப்பர்

காராரும் மணிமிடற்றுஎம் பெருமான் தன்னை,
காதில்வெண் குழையானை, கமழ்பூங் கொன்றைத்
தாரானை, புலியதளின் ஆடை யானை,
தான்அன்றி வேறொன்றும் இல்லா ஞானப்
பேரானை, மணியார மார்பி னானை,
பிஞ்ஞகனை, தெய்வநான் மறைகள் பூண்ட,
தேரானை, திருவானைக்கா, உளானைச்
செழுநீர்த் திரளைச்சென்று ஆடி னேனே.

**சுந்தரர்**

தாரம் ஆகிய பொன்னித் தண்துறை ஆடி விழுத்தும்
நீரில் நின்றுஅடி போற்றி நின்மலா! கொள்என ஆங்கே
ஆரம் கொண்டஎம் ஆனைக் கா.உடை ஆதியை நாளும்
ஈரம் உள்ளவர் நாளும் எம்மையும் ஆளுடை யாரே.

**மணிவாசகர்**

முன்னானை, மூவர்க்கும் முற்றுமாய், முற்றுக்கும்
பின்னானை, பிஞ்ஞகனை, பேணு பெருந்துறையில்
மன்னானை, வானவனை, மாதுஇயலும் பாதியனைத்
தென்ஆனைக் காவானைத் தென்பாண்டி நாட்டானை,
என்னானை, என்னப்பன் என்பார்கட்கு இன்அமுதை
அன்னானை, அம்மானைப் பாடுதும்காண், அம்மானாய்!

**ஐயடிகள் காடவர் கோன் நாயனார்**

குழீஇருந்த சுற்றம் குணங்கள்பா ராட்ட
வழீஇருந்த அங்கங்கள் எல்லாம்–தழீஇருந்தும்
என்ஆனைக்கு ஆவா இதுதகா என்னாமுன்
தென்ஆனைக் காஅடைநீ சென்று.

## 61. திருப்பைஞ்ஞீலி

### நீலகண்டேசுரர்–விசாலாட்சி

**சம்பந்தர் : 1, அப்பர் : 1, சுந்தரர்: 1**

**வழிபட்டநாள் : 16–3–56; 11–1–66.**

திருச்சி சென்னை பெருவழிச் சாலையில் 4 கல் சென்று கொள்ளிடப்பாலம் கடந்தவுடன் வடமேற்கே சேலம்பாதையில் சென்று மணச்சநல்லூருக்கு 1½ மைல் அளவு சென்றால் இத்தலத்தை அடையலாம்.

பைஞ்ஞீலி என்பதற்குப் பசுமையான வாழை என்பது பொருள். வாழைகோயிலில் இருக்கின்றது. பசியினால் வருந்திய அப்பர் சுவாமிகளுக்குச் சிவபிரான் கட்டமுது கொடுத் தருளிய தலம் இது.

சம்பந்தர்

தூயவன் தூயவெண் நீறு மேனிமேல்
பாயவன் பாயபைஞ் ஞீலி கோயிலா
மேயவன் வேய்புரை தோளி பாகமா
ஏயவன் எனைச்செயும் தன்மை என்கொலோ.

அப்பர்

மத்த மாமலர் சூடிய மைந்தனார்
சித்த ராய்த்திரி வார்வினை தீர்ப்பரால்
பத்தர் தாம்தொழுது ஏத்துபைஞ் ஞீலி.எம்
அத்த னைத்தொழ வல்லவர் நல்லரே.

சுந்தரர்

செந்த மிழ்த்திறம் வல்லி ரோ?செங்கண்
அரவம் முன்கையில் ஆடவே
வந்து நிற்கும்இ தென்கொ லோபலி?
மாற்ற மாட்டோம் இடகிலோம்ங
பைந்தண் மாமலர் உந்து சோலைகள்
கந்தம் நாறுபைஞ் ஞீலியீர்!
அந்தி வானம்உம் மேனி யோசொலும்
ஆர ணீய விடங்கரே.

## 62. திருப்பாச்சிலாச்சிராமம்

### (திருவாசி)

### மாற்றறிவரதர்–பாலசுந்தரி

சம்பந்தர் : 1; சுந்தரர் : 1.
வழிபட்டநாள் : 16–3–56; 11–1–66

உத்தமர் கோயில் இரயில் நிலையத்தில் இருந்து $4\frac{1}{2}$ கல்.

*சம்பந்தர்*

மேல்அது நான்முகன் எய்தியது இல்லை
கீழ்அது சேவடி தன்னை.
நீல்அது வண்ணனும் எய்தியது இல்லை
எனஇவர் நின்றதும் அல்லால்.
ஆல்அது மாமதி தோய்பொழில் பாச்சி
லாச்சிரா மத்துஉறை கின்ற
பால்அது வண்ணரோ பைந்தொடி வாடப்
பழிசெய்வ தோஇவர் பண்பே.

*சுந்தரர்*

செடித்தவம் செய்வார் சென்றுழிச் செல்லேன்;
தீவினை செற்றிடும் என்றே
அடித்தவம் அல்லால் ஆசையும் அறியேன்;
ஆவதும் அறிவர்எம் அடிகள்.
படைத்தலைச் சூலம் பற்றிய கையர்;
பாச்சிலாச் சிராமத்துஎம் பரமர்;
பிடித்தவெண் ணீறே பூசுவ தானால்
இவரலாது இல்லையோ பிரானார்?

**ஐயடிகள் காடவர் கோன் நாயனார்**

இட்ட குடிநீர் இருநாழி ஓர்உழக்காச்
சட்டஒரு முட்டைநெய் தான்கலந்து–அட்ட
அருவாச்சாறு என்றுஅங்கு அழாமுன்னம் பாச்சில்
திருவாச்சி ராமமே சேர்.

## 63. திருஈங்கோய்மலை

### (திருவிங்கநாதமாலை)

### மரகதநாதர்–மரகதவல்லி

*சம்பந்தர் : 1.*

வழிபட்டநாள் : **12-11-56; 10-1-66.**

திருச்சி – சேலம் பெருவழிச் சாலையில் இத் தலம் முசிரிக்கு

அண்மையில் இருக்கின்றது. கோயில் குன்றின் மேல் உள்ளது. சுமார் 500 படிகள் இருக்கும். செங்குத்தான ஏற்றம். சிவலிங்கம் மரகதக் கல் போல் நல்ல பச்சை நிறத்தில் பளபளப்பாக இருக்கின்றது.

புலவர் நக்கீரர் இம் மலை ஈசற்கு "ஈங்கோய் எழுபது" என்ற ஒரு நூல் இயற்றியுள்ளார்.

காவிரிக்கு வட கரையில் உள்ள தேவாரத் தலங்கள் 63– ஈங்கோய் மலை இறுதித் தலம். இதற்கு நேரே காவிரிக்குத் தென்கரையில் முதல் தலமாக வாட்போக்கி இருக்கின்றது. அது இதை விட மிகப் பெரிய மலை.

**சம்பந்தர்**

வானத்து உயர்தண் மதிதோய் சடைமேல் மத்த மலர்சூடித்
தேன்ஒத் தனமென் மொழிமான் விழியாள் தேவி பாகமாக்
கானத்து இரவில் எரிகொண்டு ஆடும் கடவுள் உலகுஏத்த
ஏனத் திரள்வந்து இழியும் சாரல் ஈங்கோய் மலையாரே.

**மணிவாசகர்**

ஈங்கோய் மலைஎம் எந்தாய்! போற்றி!

**நக்கீர தேவ நாயனார்**

தோகை மயிலினங்கள் சூழ்ந்து மணிவரைமேல்
ஓகை செரியாயத்து ஓடாட–நாகம்
இனவளையில் புக்குஒளிக்கும் ஈங்கோயே நம்மேல்
வினைவளையச் செற்றுஉகந்தான் வெற்பு.

## 64. திருவாட்போக்கி

### (ரத்நகிரி, மாணிக்கமலை, சிவாயமலை)

### ரத்தினகிரீசர், முடித்தழும்பர்–சுரும்பார்குழலி

**அப்பர் 1**

**வழிபட்ட நாள் : 13–11–56; 7–1–66.**

மிக உயரமான மலை. மலையின் உயரம் 1178 அடி என்று

சொல்லப் பெறுகிறது. 952 படிகள். மலையின் உச்சியில் சுவாமி கோயில் இருக்கின்றது. அம்மன் கோயில் மலையின் நடுவில் இருக்கின்றது. இம்மலை இப்போது "ஐயர் மலை" என்று வழங்கப் பெறுகின்றது. குழித்தலையிலிருந்து மணப்பாறை செல்லும் சாலையில் இத்தலம் ஐந்துகல் தொலைவில் இருக்கின்றது. காவிரியின் தென்கரைத் தலங்கள் 128ல் இதுவே முதல் தலம். இதற்கு நேராகக் காவிரியின் வடகரையில் ஈங்கோய்மலை இருக்கின்றது. வடகரைத்தலங்களுள் இறுதியில் வைத்து எண்ணப் பெறும் தலம் ஈங்கோய்மலை.

வாட்போக்கி மலையில் சுவாமி மேற்கு முகமாக எழுந்தருளியிருக்கின்றார்.

அப்பர்

நாடிவந்து நமன்தமர் நல்இருள்
கூடி வந்து குமைப்பதன் முன்னமே
ஆடல் பாடல் உகந்தவாட் போக்கியை
வாடி ஏத்தநம் வாட்டம் தவிருமே.

## 65. கடம்பந்துறை

### (கடம்பர்கோயில், குழித்தலை)

### கடம்பவனநாதர்—முற்றிலாமுலையாள்

அப்பர் : 1.

வழிபட்டநாள் : 13—11—56; 7—1—66.

இரயில் நிலையம், திருச்சிராப்பள்ளி ஈரோடு வழியிலுள்ள குழித்தலைதான் கடம்பந்துறை. திருச்சி—கரூர் நெடுஞ்சாலையில் அண்மையில் கோயில் இருக்கின்றது.

சுவாமி சந்நிதி வடக்கு நோக்கியது. வடக்குப் பார்த்த சந்நிதி மிக அருமையாகவே இருக்கும்.

அப்பர்

பண்ணின் இன்மொழி கேட்கும் பரமனை.
வண்ண நன்மல ரான்,பல தேவரும்
கண்ண னும்அறி யான்:கடம் பந்துறை
நண்ண நம்வினை ஆயின நாசமே.

ஐயடிகள் காடவர் கோன் நாயனார்

அழகு திரிகுரம்பை ஆங்குஅதுவிட்டு ஆவி
ஒழுகும் பொழுதுஅறிய ஒண்ணா—கழுகு
கழித்துஉண்டு அலையாமுன். காவிரியின் தென்பால்
குழித்தண் டலையானைக் கூறு.

## 66. திருப்பராய்த்துறை

### பராய்த்துறைநாதர்—பொன்மயிலாம்பிகை

சம்பந்தர் : 1. அப்பர் : 1.
வழிபட்டநாள் : 29–9–57; 17–10–65.

இரயில் நிலையம்: திருச்சி—ஈரோடு வழியிலிருக்கிறது. திருச்சி—கரூர் நெடுஞ்சாலையில் பத்துமைல் தொலைவில் கோயில் இருக்கிறது.

திருப்பராய்த்துறையைத் திருவாசகம் இரண்டு இடங்களில் பாராட்டுகின்றது.

சம்பந்தர்

நீறு சேர்வதுஒர் மேனியர் நேர்இழை
கூறு சேர்வதுஒர் கோலமாய்ப்
பாறு சேர்தலைக் கையர் பராய்த்துறை
ஆறு சேர்சடை அண்ணலே.

*அப்பர்*

*கரப்பர் காலம் அடைந்தவர் தம்வினை*
*சுருக்கம் ஆறுவல் லார்.கங்கை செஞ்சடைப்*
*பரப்பு நீர்வரு காவிரித் தென்கரைத்*
*திருப்ப ராய்த்துறை மேவிய செல்வரே.*

*மணிவாசகர்*

*அன்பர் ஆகிமற்று அருந்தவம் முயல்வார்*
*அயனும் மாலும் மற்று அழல்உறு மெழுகாம்*
*என்பர் ஆய்நினை வார்எ னைப்பலர்*
*நிற்க இங்குஎனை ஏற்றினுக்கு ஆண்டாய்?*
*வன்ப ராய்முருடு ஒக்கும்என் சிந்தை;*
*மரக்கண்; என்செவி இரும்பினும் வலிது;*
*தென்ப ராய்த்துறை யாய்.சிவ லோகா!*
*திருப்பெ ருந்துறை மேவிய சிவனே!*

## 67. கற்குடி

## (உய்யக்கொண்டான்)

### உய்யக்கொண்டநாதர்–மைவிழியம்மை

*சம்பந்தர் : 1; அப்பர் : 1; சுந்தரர் : 1.*
*வழிபட்டநாள் : 15–3–56; 12–1–66*

திருச்சிராப் பள்ளிக்குத் தென்மேற்கு இரண்டரைக் கல் தொலைவிலுள்ளது. கோயில் மலையின் மீது இருக்கிறது. மேற்குப் பார்த்த சந்நிதி. இறைவி சந்நிதி இரண்டு. இங்கிருந்து மூன்றரைக் கல் தொலைவில் வயலூர் என்ற சிறந்த முருகன் தலம் உள்ளது.

*சம்பந்தர்*

*மானிடம் ஆர்தரு கையர்;*
*மாமழு ஆரும் வலத்தார்;*
*ஊன்இடை ஆர்தலை ஓட்டில்*
*உண்கலன் ஆக உகந்தார்;*
*தேன்இடை ஆர்தரு சந்தின்*
*திண்சிறை யால்.தினை வித்திக்*
*கான்இடை வேடர் விளைக்கும்*
*கற்குடி மாமலை யாரே.*

அப்பர்

சங்கைதனைத் தவிர்த்துஆண்ட தலைவன் தன்னை,
சங்கரனை, தழல்உறுதாள் மழுவாள் தாங்கும்,
அங்கையனை, அங்கமணி ஆகத் தானை,
ஆகத்தோர் பாகத்தே அமர வைத்த
மங்கையனை, மதியொடுமா சுணமும் தம்மின்
மருவவிரி சடைமுடிமேல் வைத்த வான்நீர்க்
கங்கையனை, கற்குடியில் விழுமி யானைக்
கற்பகத்தைக் கண்ணாரக் கண்டேன் நானே.

சுந்தரர்

சந்தார் வெண்குழை யாய்!சரி கோவண ஆடை யானே!
பந்தா ரும்விர லாள்ஒரு பாகம் அமர்ந்த வன்னே!
கந்தார் சோலைகள் சூழ்திருக் கற்குடி மன்னி நின்ற
எந்தாய்! எம்பெரு மான்அடி யேனையும் ஏன்று கொள்ளே.

## 68. மூக்கீச்சுரம்

## (உறையூர்)

## பஞ்சவர்ணேசுரர்–காந்திமதி

சம்பந்தர் : 1.

வழிபட்டநாள் : 15–3–56; 12–1–66.

திருச்சிராப்பள்ளிக்கு மேற்கில் ஒரு கல் தொலைவில் உள்ளது. உறையூர் ஒரு காலத்தில் சோழ மன்னரின் தலை நகராக இருந்தது. புகழ்ச் சோழ நாயனார் அரசாண்ட பதி இது. இத் தலத்துக்கு மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள் புராணம் பாடியுள்ளார்.

சம்பந்தர்

நீர்உளா ரும்மலர் மேல்உறை வான்நெடு மாலும்ஆய்ச்
சீர்உளா ரும்கழல் தேடமெய்த் தீத்திரள் ஆயினான்;
சீரினால் அங்குஒளிர் தென்னவன், செம்பியன், வில்லவன்
சேரும்மூக் கீச்சரத்து அடிகள்செய் கின்றதுஓர் செம்மையே.

சேக்கிழார்

குலகிரியின் கொடுமுடிமேல் கொடிவேங்கைக் குறிஎழுதி
நிலவுதரு மதிக்குடைக்கீழ் நெடுநிலம்காத்து இனிதுஅளிக்கும்
மலர்புகழ்வண் தமிழ்ச்சோழர் வளநாட்டு மாமூதூர்
உலகில்வளர் அணிக்குஎல்லாம் உள்ளுறைஊ ராம்உறையூர்.

## 69. திருச்சிராப்பள்ளி

### தாயுமானவர்–மட்டுவார்குழலி

சம்பந்தர் : 1; அப்பர் : 1.

வழிபட்டநாள் : 1–9–57; 11–1–66

இரயில் நிலையம்.

கோயில் இருக்கும் இடத்திற்கு மலைக்கோட்டை என்று பெயர். நடு ஊருக்குள் ஓர் குன்றின் மீது கோயில் இருக்கிறது. இறைவன் எழுந்தருளியிருக்கிற இடம் தரையிலிருந்து சுமார் 500 அடி உயரத்திலிருக்கின்றது. அதற்கும் மேல் 200 அடி உயரத்தில் உச்சிப் பிள்ளையார் கோயில் இருக்கின்றது. இறைவன் ஓர் பெண்ணின் மகப் பேறு காரணமாகத் தாயாக வந்தமையால் "தாயும் ஆனவர்" என்று பெயர் பெற்றார் என்பர்.

பின்னாளில் சைவம் தழைக்கப் பல அரிய பாடல்கள் பாடிய, திருமறைக் காட்டில் பிறந்து அருளிய தாயுமான சுவாமிகள் இக்கடவுள் பெயரையே தாங்கி இருந்தார். இத்தலத்துக்குச் சைவ எல்லப்ப நாவலர் புராணம் பாடியுள்ளார்.

சம்பந்தர்

கைம்மகவு ஏந்திக் கடுவனொடு ஊடிக் கழைபாய்வான்
செம்முக மந்தி கருவரை ஏறும் சிராப்பள்ளி
வெம்முக வேழத்து ஈருரி போர்த்த விகிர்தா!நீ
பைம்முக நாகம் மதிஉடன் வைத்தல் பழி அன்றே.

அப்பர்

தாயு மாய்எனத் கேதலை கண்ணுமாய்
பேய னேனையும் ஆண்ட பெருந்தகை
தேய நாதன் சிராப்பள்ளி மேவிய
நாய னார்என நம்வினை நாசமே.

மணிவாசகர்

சிராப்பள்ளி மேவிய சிவனே போற்றி!

ஐயடிகள் காடவர் கோன் நாயனார்

கழிந்தது நென்னற்றுக் கட்டுவிட்டு நாறி
ஒழிந்தது உடல்இரா வண்ணம்-அழிந்தது
இராமல்ஐயா! கொண்டுபோ என்னாமுன் நெஞ்சே!
சிராமலையான் பாதமே சேர்.

## 70. எறும்பியூர்

### எறும்பீசர்-நறுங்குழல்நாயகி.

அப்பர் : 2.

வழிபட்டநாள் : 17-3-56; 12-1-66.

இரயில் நிலையம்: திருச்சி-தஞ்சை வழி.

கோயில் ஒரு சிறு மலையின் மீது இருக்கின்றது. மலையின் உயரம் சுமார் 60 அடி இருக்கலாம்.

அப்பர்

பன்னியசெந் தமிழறியேன்; கவியேன்; மாட்டேன்;
எண்ணோடு பண்நிறைந்த கலைகள் ஆய
தன்னையும்தன் திறத்துஅறியாப் பொறியி லேனைத்
தன்திறமும் அறிவித்து நெறியும் காட்டி.
அன்னையையும் அத்தனையும் போல அன்பாய்
அடைந்தேனைத் தொடர்ந்துஎன்னை ஆளாக் கொண்ட.
தென்எறும்பி-யூர்மலைமேல் மாணிக் கத்தைச்
செழும்சுடரைச் சென்றடையப் பெற்றேன் நானே.

## 71. நெடுங்களம்

### (திருநட்டான்குளம்)

### நித்தியசுந்தரர்–ஒப்பிலாநாயகி

சம்பந்தர் : 1.

வழிபட்டநாள் : 17–3–56; 12–1–66.

இத் தலம் எறும்பியூருக்கு வடகிழக்கே ஏழுகல் தொலைவில் உள்ளது. சோழகம்பட்டி இரயில் நிலையத்திலிருந்து இரண்டு கல் அளவு.

சம்பந்தர்

நின்அடியே வழிபடுவான் நிமலா நினைக்கருத
என்அடியான் உயிரைவவ்வேல் என்றுஅடல்கூற்று உதைத்த
பொன்அடியே பரவிநாளும் பூவொடுநீர் சுமக்கும்
நின்அடியார் இடர்களையாய்! நெடுங்களம் மேயவனே!

ஐயடிகள் காடவர் கோன் நாயனார்

தொட்டுத் தடவித் துடிப்புஒன்றும் காணாது
பெட்டப் பிணம்என்று பேர்இட்டுக்–கட்டி
எடுங்கள் அத்தா என்னாமுன் ஏழைமட நெஞ்சே!
நெடுங்களத்தான் பாதம் நினை.

## 72. மேலைத்திருக்காட்டுப்பள்ளி

### தீயாடியப்பர்–வார்கொண்டமுலையாள்

சம்பந்தர் : 1 அப்பர் : 1.

வழிபட்டநாள் : 24–3–57 ; 2–1–66.

திருச்சி–தஞ்சை இருப்புப் பாதையில் பூதலூர் இரயில் நிலையத்திலிருந்து வடக்கே 5 கல் தொலைவு. திருவையாற்றிற்கு மேற்கில் 11 மைல். திருவையாற்றிலிருந்து இத்தலத்திற்குச்

செல்லும் வழியில் திருக்கண்டியூர், திருப்பூந்துருத்தி, திருவாலம்பொழில் என்னும் தலங்கள் இருக்கின்றன.

சம்பந்தர்

செங்கண்மால் திகழ்தரு மலர்உறை திசைமுகன்
தம்கையால் தொழுதுஎழத் தழல்உருவு ஆயினான்;
கங்கைஆர் சடையினான்; கருதுகாட் டுப்பள்ளி
அம்கையால் தொழும்அவர்க்கு அல்லல்ஒன்று இல்லையே!

அப்பர்

தேனை வென்றசொல் லாளொடு செல்வமும்
ஊனை விட்டுஉயிர் போவதன் முன்னமே
கான வேடர் கருதும்காட் டுப்பள்ளி
ஞான நாயக னைச்சென்று நண்ணுமே.

## 73. திருவாலம்பொழில்

### ஆத்மநாதர்–ஞானாம்பிகை.

அப்பர் : 1.

வழிபட்டநாள் : 18–12–56; 2–1–66.

தஞ்சை–திருவையாறு சாலையில் உள்ள திருக்கண்டியூரி னின்றும் மேற்கே இரண்டு கல் தொலைவிலுள்ள திருப்பூந்துருத்தியை யடைந்து. இத்தலத்திற்கு அங்கிருந்து ஒரு மைல் செல்லவேண்டும்.

அப்பர்

பொல்லாத என்அழுக்கில் புகுவான் என்னைப்
புறம்புறமே சோதித்த புனிதன் தன்னை,
எல்லாரும் தன்னையே இகழ அந்நாள்
இடுபலிஎன்று அகம்திரியும் எம்பி ரானைச்
சொல்லாதார் அவர்தம்மைச் சொல்லா தானைத்
தொடர்ந்துதன் பொன்னடியே பேணு வாரைச்
செல்லாத நெறிசெலுத்த வல்லான் தன்னைத்
திருவாலம் பொழிலானைச் சிந்தி நெஞ்சே.

# 74. திருப்பூந்துருத்தி

## புட்பவனநாதர்–அழகார்ந்தநாயகி.

அப்பர் : 3.

வழிபட்டநாள் : 18–12–56; 2–1–66.

திருக்கண்டியூருக்கு மேற்கே இரண்டு கல். திருஞான சம்பந்தரும், திருநாவுக்கரசரும் இணைந்து அளவளாவிய பதிகளில் திருப்பூந்துருத்தி ஒன்று. இத் தலத்தில்தான் திருஞானசம்பந்தர் அறியா வண்ணம் அவர் இவர்ந்து வந்த சிவிகையைத் திருநாவுக்கரசர் தாங்கினார் என்று சேக்கிழார் கூறுவார். திருநாவுக்கரசு சுவாமிகள் திருமடம் ஒன்று அமைத்துக் கொண்டு நெடுங்காலம் பணி செய்தார் என்பர். இரண்டு ஆறுகட்கு இடையிலுள்ள தலம் "துருத்தி" என்று கூறப் பெறும். திருத்துருத்தி வேறு; திருப்பூந்துருத்தி வேறு. திருத்துருத்தியும் தேவாரத்தலமே. திருத்துருத்தி, திருவாசகத்திலும் கூறப்பெறுகின்றது.

### அப்பர்

எனக்குஎன்றும் இனியானை, எம்மான் தன்னை,
எழிலாரும் ஏகம்பம் மேயான் தன்னை,
மனக்குஎன்றும் வருவானை வஞ்சர் நெஞ்சில்
நில்லானை, நின்றியூர் மேயான் தன்னைத்
தனக்குஎன்றும் அடியேனை ஆளாக் கொண்ட
சங்கரனை, சங்கவார் குழையான் தன்னை,
புனக்கொன்றை தார்அணிந்த புனிதன் தன்னை,
பொய்யிலியை, பூந்துருத்திக் கண்டேன் நானே.

### சேக்கிழார்

நீடிய அப்பதி நின்று நெய்த்தான மேமுத லாக
மாடுயர் தானம் பணிந்து, மழபாடி யாரை வணங்கிப்
பாடிய செந்தமிழ் மாலை பகர்ந்து பணிசெய்து போற்றித்
தேடிய மாலுக்கு அரியார் திருப்பூந் துருத்தியைச் சேர்ந்தார்.

# 75. கண்டியூர்

## வீரட்டானேசுரர்–மங்களநாயகி.

*சம்பந்தர் : 1; அப்பர் : 1.*
*வழிபட்டநாள் : 18–12–56; 2–1–66.*

தஞ்சை–திருவையாறு சாலையில், தஞ்சையினின்றும் ஆறு கல். திருஐயாற்றிற்கு ஒன்றரை மைல். மேற்குப் பார்த்த சந்நிதி. எட்டு வீரட்டத் தலங்களுள் ஒன்று. பிரமனின் தலையைக் கிள்ளிய தலம். இத் தலத்தில் எதிர்ப் புறம் உள்ள திருமால் கோயிலும் மங்களா சாஸனம் பெற்றது.

*சம்பந்தர்*

கருத்தனை,பொழில் சூழும்கண்டியூர் வீரட்டத்துறை கள்வனை,
அருத்தனை,திறம் அடியார்பால்மிகக் கேட்டுஉகந்த வினாஉரை
திருத்தமாம்திகழ் காழிஞானசம் பந்தன்செப்பிய செந்தமிழ்
ஒருத்தர் ஆகிலும் பலர்கள் ஆகிலும் உரைசெய்வார் உயர்ந்தார்களே

*அப்பர்*

வான மதியமும். வாள்அர வும்,புன லோடுசடைத்
தானம் இதுஎன வைத்துஉழல் வான்தழல் போல்உருவன்;
கான மறிஒன்று கையுடை யான்;கண்டி யூரிருந்த
ஊனம்இல் வேதம் உடையானை நாம்அடி உள்குவதே.

# 76. திருச்சோற்றுத்துறை

## தொலையாச்செல்வர்–ஒப்பிலாஅம்மை

*சம்பந்தர் : 1; அப்பர் : 4; சுந்தரர் : 1*
*வழிபட்டநாள் : 18–12–56; 2–1–66.*

கண்டியூருக்குக் கிழக்கு ஒன்றரைக் கல்.

சம்பந்தர்

பெண்ஓர் பாகம் உடையார்; பிறைசென்னிக்
கண்ஓர் பாகம் கலந்த நுதலினார்;
எண்ணாது அரக்கன் எடுக்க ஊன்றிய
அண்ணல் சோற்றுத் துறைசென்று அடைவோமே.

அப்பர்

ஆட்டி னாய்அடி யேன்வினை ஆயின
ஓட்டி னாய்ஒரு காதில் இலங்குவெண்
தோட்டி னாய்என்று சோற்றுத் துறையர்க்கே
நீட்டி நீபணி செய்மட நெஞ்சமே.

சுந்தரர்

ஓதக் கடல்நஞ் சினைஉண்டு இட்ட
பேதைப் பெருமான் பேணும் பதியாம்;
சீதப் புனல்உண்டு எரியைக் காலும்
சூதப் பொழில்சூழ் சோற்றுத் துறையே.

## 77. திருவேதிகுடி

### வேதபுரீசுரர்–மங்கையர்க்கரசி

சம்பந்தர் : 1; அப்பர் : 1.

வழிபட்டநாள் : 18–12–56; 2–1–66.

கண்டியூரினின்றும் தென்கிழக்கே இரண்டு கல். திருச்சோற்றுத்துறைக்கும், இத்தலத்திற்கும் குறுக்கே இரண்டு கல் அளவு. வேதி குடி வேறு; வேள்விக்குடி வேறு.

சம்பந்தர்

செய்யதிரு மேனிமிசை வெண்பொடி அ
ணிந்து,கரு மான்உரிவை போர்த்து
ஐயம்இடும் என்றுமட மங்கையொடு,அ
கம்திரியும் அண்ணல் இடம்ஆம்
வையம்விலை மாறிடினும் ஏறுபுகழ்
மிக்கஇழிவு இலாத வகையார்
வெய்யமொழி தண்புலவ ருக்குஉரை,செ
யாதஅவர் வேதி குடியே.

அப்பர்

எண்ணும் எழுத்தும் குறியும் அறிபவர். தாமொழியப்
பண்ணின் இசைமொழி பாடிய வானவர் தாம்பணிவார்.
திண்ணென் வினைகளைத் தீர்க்கும் பிரான்.திரு வேதிகுடி
நண்ண அரிய அமுதினை. நாம்அடைந்து ஆடுதுமே.

## 78. தென்குடித்திட்டை

### (திட்டை)

### பசுபதிநாதர்–உலகநாயகி

*சம்பந்தர் : 1.*

*வழிபட்டநாள் : 12–1–57; 1–1–66.*

தஞ்சை–மாயூரம் இருப்புப் பாதையில் திட்டை என்ற பெயரில் இரயில் நிலையம். தஞ்சைக்கு வடகிழக்கு ஆறு கல்.

சம்பந்தர்

ஊறினார் ஓசைஉள் ஒன்றினார் ஒன்றிமால்
கூறினார் அமர்தரும் குமரவேள் தாதைஊர்
ஆறினார் பொய்அகத் தைஉணர்வு எய்திமெய்
தேறினார் வழிபடும் தென்குடித் திட்டையே.

## 79. திருப்புள்ளமங்கை

### (பசுபதிகோயில்)

### ஆலந்தரித்தநாதர்–அல்லியங்கோதை

சம்பந்தர்

வழிபட்டநாள் : 24–3–57; 13–1–66.

திருவையாறு–ஐயம்பேட்டை சாலையில், ஐயம்பேட்டைக்கு மேற்கே இரண்டரைக் கல். பசுபதி கோயில் இரயில் நிலையத்திலிருந்து ஒன்றரைக் கல்.

சம்பந்தர்

இலங்கைமனன் முடிதோள்இற
எழில்ஆர்திரு விரலால்
விலங்கல்இடை அடர்த்தான்இடம்
வேதம்பயின்று ஏத்திப்
புலன்கள்தமை வென்றார்புகழ்
அவர்வாழ்புள மங்கை
அலங்கல்மலி சடையான்இடம்
ஆலந்துறை அதுவே.

## 80. சக்கரப்பள்ளி

### (ஐயம்பேட்டை)

### சக்கரவாகீசுரர்–தேவநாயகி

சம்பந்தர் : 1

வழிபட்டநாள் : 29–2–56; 13–1–66.

ஐயம்பேட்டை இரயில் நிலையத்திற்கு மேற்கே ஒருகல்.

சம்பந்தர்

பாங்கினால் முப்புரம் பாழ்பட வெஞ்சிலை
வாங்கினார் வானவர் தானவர் வணங்கிட
ஓங்கினார் உமைஒரு கூறொடும் ஒலிபுனல்
தாங்கினார் உறைவிடம் சக்கரப் பள்ளியே.

## 81. திருக்கருகாவூர்

### (திருக்களாவூர்)

### முல்லைவனேசுரர்–கரும்பனையாள்

சம்பந்தர் : 1; அப்பர் : 1.

வழிபட்டநாள் : 28–2–56; 13–1–66.

ஐயம்பேட்டை இரயில் நிலையத்திலிருந்து தென்கிழக்கு

நாலுகல். பாவநாசம் இரயில் நிலையத்திலிருந்து தெற்கே நாலுகல். இத்தலம் வெட்டாற்றின் தென்கரையில் இருக்கிறது.

சம்பந்தர்

மையல் இன்றிமலர் கொய்து,வ ணங்கிடச்
செய்ய உள்ளம்மிக நல்கிய செல்வத்தர்;
கைதன் முல்லைகம ழும்கரு காவூர்எம்
ஐயர் வண்ணம்அழ லும்அழல் வண்ணமே.

அப்பர்

குருகுஆம் வயிரம்ஆம் கூறும் நாள்ஆம்
கொள்ளும் கிழமைஆம் கோளே தான்ஆம்
பருகா அமுதம்ஆம் பாலின் நெய்ஆம்
பழத்தின் இரதம்ஆம் பாட்டில் பண்ணாம்
ஒருகால் உமையாளோர் பாக னும்ஆம்
உள்நின்ற நாவிற்கு உரையா டியாம்
கருவாய் உலகுக்கு முன்னே தோன்றும்
கண்ணாம் கருகாவூர் எந்தை தானே.

## 82. திருப்பாலைத்துறை

### பாலைவனநாதர்–தவளவெண்நகையாள்

அப்பர் : 1

வழிபட்டநாள் : 27–2–56; 13–1–66.

பாவநாசம் இரயில் நிலையத்திற்கு வடகிழக்கே ஒருகல். தஞ்சை–கும்பகோணம் பெருவழிச்சாலையில் பாவநாசம் ஊருக்கு அண்மையில் இத்தலம் இருக்கிறது.

அப்பர்

மின்னின் நுண்இடைக் கன்னியர் மிக்குஎங்கும்
பொன்னி நீர்மூழ்கிப் போற்றி அடிதொழ
மன்னி நான்மறை யோடுபல் கீதமும்
பன்னி னார்அவர் பாலைத் துறையரே.

# 83. திருநல்லூர்

## பெரியாண்டேசுரர்–திரிபுரசுந்தரி
## கலியாணசுந்தரர்–கலியாணசுந்தரி

சம்பந்தர் : 3; அப்பர் : 2.

வழிபட்டநாள் : 27–2–56; 13–1–66.

கும்பகோணத்தை அடுத்த சுந்தரப்பெருமாள் கோயில் இரயில் நிலையத்திற்குத் தெற்கே இரண்டுகல் தொலைவு.

இத்தலம் அப்பர் சுவாமிகளுக்குத் திருவடித்திட்சை நல்கிய சிறப்புடையது. இத்தலத்தில் பெருமாள் கோயிலில் சடாரி வைப்பதைப் போல, அப்பர் சுவாமிகளுக்குச் சூட்டப்பெற்ற "நனைந்தனைய திருவடி" பொறித்த கிரீடத்தை இன்னும் அடியார்கள் தலையில் சூட்டுகின்றனர். மேலும், அறுபான் மும்மை நாயன்மார்களுள் ஒருவராகிய அமரர்நீதி நாயனாருக்கு வீடுபேறு அருளிய தலம் இது.

### சம்பந்தர்

எங்கள் பெருமானை, இமையோர் தொழுதுஎத்தும்
நங்கள் பெருமானை, நல்லூர் பிரிவில்லாத்
தம்கை தலைக்குஏற்றி ஆள்என்று அடிநீழல்
தங்கு மனத்தார்கள் தடுமாற்று அறுப்பாரே.

### அப்பர்

நினைந்துஉருகும் அடியாரை நைய வைத்தார்;
நில்லாமே தீவினைகள் நீங்க வைத்தார்;
சினம்திருகு களிற்றுஉரிவைப் போர்வை வைத்தார்;
செழுமதியின் தளிர்வைத்தார்; சிறந்து வானோர்
இனம்துருவி மணிமகுடத் தேறத் துற்ற
இனமலர்கள் போதுஅவிழ்ந்து மதுவாய்ப் பில்கி,
நனைந்துஅனைய திருவடிஎன் தலைமேல் வைத்தார்;
நல்லூர்எம் பெருமானார் நல்ல வாறே!

சேக்கிழார்

நன்மைபெருகு அருள்நெறியே வந்துஅணைந்து நல்லூரின்
மன்னுதிருத் தொண்டனார் வணங்கிமகிழ்ந்து எழும்பொழுதில்
"உன்னுடைய நினைப்பதனை முடிக்கின்றோம்" என்று அவர்தம்
சென்னிமிசைப் பாதமலர் சூட்டினான் சிவபெருமான்.

## 84. ஆவூர்ப்பசுபதீச்சுரம்

### பசுபதீசுரர்–மங்களநாயகி

சம்பந்தர் : 1.
வழிபட்டநாள் : 24–3–57; 13–1–66.

ஆவூர் ஊரின் பெயர். பசுபதீச்சுரம் கோயிலின் பெயர். கும்பகோணத்திற்குத் தென் மேற்கே நான்கு மைலிலுள்ள பட்டீச்சரத்திற்குத் தென்மேற்கே நாலரைக் கல். திருக்கருகாவூரிலிருந்து வட கிழக்கே நான்கு கல். கோவில் சிறுமலைமீது இருக்கிறது. அம்பாள் சந்நிதி இரண்டு. ஒன்று மங்களவல்லி. இன்னொன்று பங்கயவல்லி.

சம்பந்தர்

இந்துஅணை யும்சடையார்; விடையார்;
இப்பிறப்பு என்னை அறுக்கவல்லார்;
வந்துஅணைந்து இன்னிசை பாடுவார்பால்
மன்னினர்; மன்னி யிருந்தஊராம்
கொந்துஅணை யும்குழ லார்விழவில்
கூட்டம் இடைஇடை சேரும்வீதி.
பந்துஅணை யும்விர லார்தம்
ஆவூர்ப் பசுபதிசச்சரம் பாடுநாவே!

## 85. திருச்சத்திமுத்தம்

### சிவக்கொழுந்தீசர்–பெரியநாயகி

*அப்பர் : 1.*

*வழிபட்டநாள் : 9–1–57; 15–1–66.*

கும்பகோணத்திற்குத் தென்மேற்கே நாலுகல். தாராசுரம் இரயில் நிலையத்திலிருந்து தென்மேற்கே இரண்டு கல். திருப்பட்டீச்சரம் கோயிலிலிருந்து கால் மைல். அம்பிகை இறைவனுக்கு முத்தம் கொடுத்த தலம் என்ற பொருளில் சத்தி முத்தம் என வழங்குகிறது. தேவாரத்தில் சத்தி முற்றம் என்று சொல்லப் பெறுகின்றது.

*அப்பர்*

*கருஉற்று இருந்துஉன் கழலே*
*நினைந்தேன்; கருப்புவியில்*
*தெருவில் புகுந்தேன்; திகைத்தடி*
*யேன்;தன் திகைப்புஒழிவி;*
*உருவில் திகழும் உமையாள்*
*கணவா! விடில்கெடுவேன்;*
*திருவில் பொலிசத்தி முற்றத்து*
*உறையும் சிவக்கொழுந்தே!*

## 86. பட்டீச்சுரம்

### பட்டீசுரர்–பல்வளைநாயகி

*சம்பந்தர் : 1.*

*வழிபட்டநாள் : 9–1–57; 15–1–66.*

கும்பகோணத்திற்குத் தென் மேற்கு 4 மைல். தாராசுரம் இரயில் நிலையத்திற்குத் தென்மேற்கு 2 மைல். திருச் சத்தி முத்தம் கோயிலுக்கும், திருப்பட்டீச்சுரம் கோயிலுக்கும் இடையே ஒரு வீதி தான்.

சம்பந்தர்

பிறவிபிணி மூப்பினொடு நீங்கிஇமை
யோர்உலகு பேணல் உறுவார்
துறவிஎனும் உள்ளம்உடை யார்கள்கொடி
வீதியழகு ஆய தொகுசீர்
இறைவன்உறை பட்டிசரம் ஏத்திஎழு
வார்கள்வினை ஏது மிலவாய்
நறவவிரை யாலும்மொழி யாலும்வழி
பாடுமற வாத அவரே!

## 87. பழையாறைவடதளி

### சோமேசர்–சோமகலாநாயகி

*அப்பர் : 1*

*வழிபட்டநாள் : 9–1–57; 15–1–66.*

பட்டீச்சரத்திலிருந்து தென்கிழக்கே ஒரு கல். பழையாறை என்றும், வடதளி என்றும் இரு தலங்களாக உள்ளன. வடதளியில் இறைவன் பெயர் தருமபுரீசுவரர். தேவி, விமலநாயகி.

பழையாறை அமர்நீதி நாயனார் பிறந்தருளியதலம். இதற்கு அண்மையில் முழையூர் என்ற வைப்புத் தலம் இருக்கிறது.

அப்பர்

வாய்.இ ரும்தமி ழேபடித்து ஆள்உறா
ஆயி ரம்சம ணும்அழிவு ஆக்கினான்;
பாய்இ ரும்புனல் ஆறை வடதளி
மேய வன்.என வல்வினை வீடுமே!

சேக்கிழார்

சீரில் நீடிய செம்பியர் பொன்னிநன் னாட்டுக்
காரின் மேவிய களிஅளி மலர்பொழில் சூழ்ந்து
தேரின் மேவிய செழுமணி வீதிகள் சிறந்து
பாரில் நீடிய பெருமைசேர் பதிபழை யாறை.

# 88. திருவலஞ்சுழி

## கற்பகநாதர்–பெரியநாயகி

சம்பந்தர் : 3; அப்பர் : 2.
வழிபட்டநாள் : 31–12–55; 26–6–65

இரயில் நிலையம் சுவாமிமலை, கும்பகோணத்திற்கு மேற்கே நான்கு கல் அளவு. இத் தலத்தில் வெள்ளைப் பிள்ளையார் பெரும் சிறப்புடையது. கோவிலுக்குள் நுழைந்தவுடன் வேலைப்பாடு அமைந்த அழகிய மண்டபத்தில் பிள்ளையார் வீற்றிருக்கின்றார். அப்பிள்ளையாரை யாரும் தொடக் கூடாதாம். பிள்ளையார் இயல்பாகவே நல்ல வெள்ளை நிறமாக அமைந்திருக்கிறது. இத் தலத்தில் திருவிழா எல்லாம் விநாயகருக்குத்தானாம்.

சம்பந்தர்

என்ன புண்ணியம் செய்தனை.
நெஞ்சமே! இரும்கடல் வையத்து
முன்னம் நீபுரி நல்வினைப்
பயன்இடை முழுமணித் தரளங்கள்
மன்னு காவிரி சூழ்திரு
வலஞ்சுழி வாணனை வாய்ஆரப்
பன்னி ஆதரித்து ஏத்தியும்
பாடியும் வழிபடும் அதனாலே.

அப்பர்

கயிலை நாதன் கறுத்தவர் முப்புரம்
எயில்கள் தீஎழ வெல்வல வித்தகன்;
மயில்கள் ஆலும் வலஞ்சுழி ஈசனைப்
பயில்கி லார்சிலர் பாவித் தொழும்பரே.

நக்கிரதேவநாயனார்

தான்ஏறும் ஆன்ஏறு கைதொழேன் தன்சடைமேல்
தேன்ஏறு கொன்றைத் திறம்பேசேன்–வான்ஏறு
மையாரும் சோலை வலஞ்சுழியான் என்கொல்? என்
கையார் வளைகவர்ந்த வாறு.

## 89. குடமூக்கு

### (கும்பகோணம்)

### கும்பேசுரர்–மங்களநாயகி

சம்பந்தர் : 1; அப்பர் : 1
வழிபட்டநாள் : 30–12–55; 26–6–65.

இரயில் நிலையம். கோவில் மிகப் பெரியது; நடு ஊருக்குள் அமைந்திருக்கிறது. பன்னிரண்டு ஆண்டுக்கு ஒரு முறை மகாமகம் சிறப்பாகக் கொண்டாடப் பெறுகிறது. மங்களநாயகி சன்னிதி பெரும் சிறப்புடையது. இத்தலத்திற்கு மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை புராணம் இயற்றியுள்ளார்.

சம்பந்தர்

மலைமலி மங்கைபா கம்மகிழ்ந் தான்எழில் வையம்உய்யச்
சிலைமலி வெங்கணை யால்சிதைத் தான்புர மூன்றினையும்
குலைமலி தண்பல வின்பழம் வீழ்குட மூக்குஇடமா
இலைமலி சூலம்ஏந் தி.இருந் தான்அவன் எம்இறையே!

அப்பர்

நங்கை யாள்உமை யாள்உறை நாதனார்
அங்கை யாளொடு அறுபதம் தாழ்சடைக்
கங்கை யாள்அவள் கன்னி எனப்படும்
கொங்கை யாள்உறை யும்குட மூக்கிலே.

# 90. குடந்தைக்கீழ்க்கோட்டம்

## (நாகேசுரசுவாமி கோயில்)

## நாகேசுரசுவாமி-பெரியநாயகி

அப்பர் : 1

வழிபட்டநாள் : 2-1-56; 17-10-65

கும்பேசுரசுவாமி கோவிலுக்குக் கிழக்கே அரைக் கல் அளவில் நடுவூருக்குள் கோவில் இருக்கிறது. இதனை நாகேசுர சுவாமி கோவில் என்று கூறுவர். இங்குக் கூத்தப் பெருமான் சன்னிதி மிகச் சிறப்புடையது. கோவில் பெரியது. இறைவன் சன்னிதியின் முன் கங்கை கொண்ட கணபதி அழகிய தோற்றமுடையது. ஆண்டு தோறும் சித்திரைத் திங்கள் 11, 12, 13 ஆகிய மூன்று நாட்களிலும் சூரியன் தோன்றும் போது சூரிய ஒளி மகாலிங்கத்தின் மீது படிவது கண் கொள்ளாக் காட்சியாக இருக்கும்.

அப்பர்

பூச்சூழ்ந்த பொழில்தழுவு புகலூ ருள்ளார்;
புறம்பயத்தார்; அறம்புரிபூந் துருத்திபுக்கு.
மாச்சூழ்ந்த பழனத்தார்; நெய்த்தா னத்தார்;
மாதவத்து வளர்சோற்றுத் துறையார்; நல்ல.
தீச்சூழ்ந்த திகிரிதிரு மாலுக்கு ஈந்து.
திருவானைக் காவில்ஓர் சிலந்திக்கு அந்நாள்
கோச்சோழர் குலத்தரசு கொடுத்தார் போலும்;
குடந்தைக்கீழ்க் கேட்டத்துஎம் கூத்த னாரே.

ஐயடிகள் காடவர்கோன் நாயனார்

கடுவடுத்த நீர்கொடுவா காடிதா என்று
நடுநடுத்து நாவடங்கா முன்னம்—பொடியடுத்த
பாழ்க்கோட்டம் சேராமுன் பன்மாடத் தென்குடந்தைக்
கீழ்க்கோட்டம் செப்பிக் கிட

# 91. குடந்தைக்காரோணம்

## (விசுவநாதர்கோயில்)

## காசிவிசுவநாதர்—காசிவிசாலாட்சி

## சோமநாதர்—தேனார்மொழி

சம்பந்தர் : 1

வழிபட்டநாள் : 31–12–55; 17–10–65

இக்கோவில் கும்பகோணம் இரயில் நிலையத்திலிருந்து மேற்கே சுமார் அரைக் கல் தொலைவில், மகாமகப் பெருங்குளத்தின் வடகரையிலிருக்கின்றது. இதனைக்காசிவிசுவநாதர் கோவில் என்று கூறுவர். இங்கே நவ கன்னியர்களின் திருவுருவங்கள் இருக்கின்றன. பன்னிரண்டு ஆண்டுக்கு ஒருமுறை நடைபெறும் மகாமக நாளில், கோவிலுக்கு முன்னுள்ள மகாமகக் குளத்தில் இலட்சக்கணக்கான மக்கள் நீராடுவர். மகாமக நாளன்று கும்ப கோணத்திலுள்ள பல கோவில் சுவாமிகளும் இங்கு எழுந்தருளும். அன்று கணக்கற்ற சிவபெருமான்களை இங்குக் கண்டு மகிழலாம்.

சம்பந்தர்

பூவார் பொய்கை அலர்தா
மரைசெங் கழுநீர் புறவுஎல்லாம்
தேவார் சிந்தை அந்தண்
ஆளர் சீரால் அடிபோற்றக்
கூவார் குயில்கள் ஆலும்
மயில்கள் இன்சொல் கிளிப்பிள்ளை
காவார் பொழில்சூழ்ந்து அழகுஆர்
குடந்தைக் காரோ ணத்தாரே.

சேக்கிழார்

பூமருவும் கங்கைமுதல் புனிதமாம் பெருந்தீர்த்தம்
மாமகம்தான் ஆடுதற்கு வந்துவழி படும்கோயில்,
தூமருவு மலர்க்கையால் தொழுதுவலம் கொண்டு அணைந்து
காமர்கெட நுதல்விழித்தார் கழல்பணிந்து கண்களித்தார்.

## 92. திருநாகேச்சுரம்

### நாகநாதேசுரர்–குன்றமுலைநாயகி

சம்பந்தர் : 2. அப்பர் : 4. சுந்தரர் : 1.
வழிபட்டநாள் : 1–1–56; 17–10–65.

இரயில் நிலையம். கும்பகோணத்துக்குக் கிழக்கே நான்கு மைல். திருவிடை மருதூர் இரயில் நிலையத்துக்குத் தென் மேற்கே இரண்டரை மைல். பெரியபுராணம் பாடியருளிய சேக்கிழார் அடிகள் இத்தலத்தில் பெரிதும் அன்பு கொண்டிருந்தாரென்றும், தாம் பிறந்த குன்றத்தூரிலே அவர் கட்டிய கோவிலுக்குத் திரு நாகேச்சுரம் என்று பெயரிட்டார் என்றும் கூறுவர். இத்தலத்தில் சுந்தர மூர்த்தி சுவாமிகளின் பக்கத்தில் பரவையார் படிமம் அமைந்திருக்கின்றது.

சம்பந்தர்

பெண்ஒர்பாகம் அடையச் சடையில் புனல்பேணிய
வண்ணம்ஆன பெருமான் மருவும்இடம் மண்உளார்
நண்ணிநாளும் தொழுதுஏத்தி நன்குஎய்து நாகேச்சுரம்
கண்ணினால் காணவல்லார் அவர்கண் உடையார்களே.

அப்பர்

கச்சைசேர் அரவர் போலும்; கறையணி மிடற்றர் போலும்;
பிச்சைகொண்டு உண்பர்போலும்; பேரரு ளாளர்போலும்;
இச்சையால் மலர்கள் தூவி இரவொடு பகலும் தம்மை
நச்சுவார்க்கு இனியர் போலும்; நாகஈச் சரவ னாரே.

சுந்தரர்

தங்கிய மாதவத்தின் தழல்வேள்வியின் நின்றுஎழுந்த
சிங்கமும், நீள்புலியும் செழுமால்கரி யோடுஅலறப்
பொங்கிய போர்புரிந்து பிளந்திர்;உரி போர்த்ததென்னே
செங்கயல் பாய்கழனித் திருநாகேச் சரத்தானே.

## 93. திருவிடைமருதூர்

### மகாலிங்கேசுரர்–பெருநலமாமுலைநாயகி

சம்பந்தர் : 6. அப்பர் : 5. சுந்தரர் :1.
வழிபட்டநாள் : 6–1–57; 3–1–66.

இரயில் நிலையம், கும்பகோணத்துக்கு வடகிழக்கு ஐந்து கல். இத்தலத்தை வடநூலார் மத்திய அர்ஜுனம் என்பர். வடக்கே உள்ள ஸ்ரீசைலம் மல்லிகார்ஜுனம் என்றும், தெற்கே நெல்லை மாவட்டத்தில் அம்பாசமுத்திரத்திலிருந்து மூன்றுகல் தொலைவில் தாம்பிரவருணி ஆற்றங்கரையிலுள்ள திருப்புடார்ஜுனமும் இருத்தலால் இது மத்தியார்ஜுனம் என்று கூறப் பெறுகிறது. மத்திய அர்ஜுனம் இடைமருது.

இத்தலம் மூவர் தேவாரமும் பெற்றதோடு திருவாசகம் பெற்ற சிறப்பும் உடையது. திருவிடைமருதூர் திருவாசகத்தில் ஐந்து இடங்களில் பேசப்பெறுகிறது. மேலும் கருவூர்த் தேவர் திருவிசைப்பாவிலும், பட்டினத்தடிகள் பாடலிலும் இத் தலம் இடம் பெற்றிருக்கிறது.

கோவில் மிகப் பெரியது. நான்கு புறங்களிலும் கோபுரங்கள் கொண்டது. கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகர் என்னும் புலவர் இத்தலத்துக்குப் புராணம் பாடியுள்ளார்.

சம்பந்தர்

அருமையன், எளிமையன், அழல்விடம் மிடறினன்,
கருமையின் ஒளிபெறு கமழ்சடை முடியினன்,
பெருமையன், சிறுமையன், பிணைபெணொடு ஒருமையின்
இருமையும் உடைஅணல், இடம்இடை மருதே.

அப்பர்

கனியி னும்கட்டி பட்டக ரும்பினும்.
பனிம லர்க்குழல் பாவைநல் லாரினும்.
தனிமு டிகவித்து ஆளும் அரசினும்.
இனியன் தன்அடைந் தார்க்குஇடை மருதனே.

சுந்தரர்

கழுதை குங்குமம் தான்சுமந்து எய்த்தால்
கைப்பர் பாழ்புக மற்றுஅது போலப்
பழுது நான்உழன்று உள்தடு மாறிப்
படுசு ழித்தலைப் பட்டனன். எந்தாய்!
அழுது நீஇருந்து என்செய்தி மனனே!
அங்க ணா!அர னே!என மாட்டா
இழுதை யேனுக்குஓர் உய்வகை அருளாய்!
இடைம ருதுஉறை எந்தைபி ரானே!

மணிவாசகர்

மூன்றுஅங்கு இலங்கு நயனத்தன் மூவாத
வான்தங்கு தேவர்களும் காணா மலர்அடிகள்
தேன்தங்கித் தித்தித்து அமுதுஊறித் தான்தெளிந்தங்கு
ஊன்தங்கி நின்றுஉருக்கும் உத்தர கோசமங்கைக்
கோன்தங்கு இடைமருது பாடிக் குலமஞ்ஞை
போன்றுஅங்கு அனநடையீர்! பொன்னூசல் ஆடாமோ!

கருவூர்த்தேவர்

பனிபடு மதியம் பயில்கொழுந் தன்ன
பல்லவம் வல்லிஎன்று இங்ஙன்
வினைபடு கனகம் போலயா வையுமாய்
வீங்குலகு ஒழிவற நிறைந்து
துனிபடு கலவி மலைமக ளுடனாய்த்
தூங்கிருள் நடுநல்யா மத்துஎன்
மனனிடை அணுகி நுணுகிஉள் கலந்தோன்
மருவிடம் திருவிடை மருதே.

பட்டினத்துப்பிள்ளையார்

வருந்தேன் இறந்தும் பிறந்தும்
 மயக்கும் புலன்வழிப்போய்ப்
பொருந்தேன் நரகில் புகுகின்றி
 லேன்புகழ் மாமருதில்
பெருந்தேன் முகந்துகொண்டு உண்டு
 பிறிதுஒன்றில் ஆசைஇன்றி
இருந்தேன் இனிச்சென்று இரவேன்
 ஒருவரை யாதுஒன்றுமே.

# 94. தென்குரங்காடுதுறை

## (ஆடுதுறை)

## ஆபத்சகாயேசுரர்–பவளக்கொடி

சம்பந்தர் : 1; அப்பர் : 1
வழிபட்டநாள் : 6–1–57; 3–1–66.

இரயில் நிலையம். திருவிடைமருதூருக்குக் கிழக்கு இரண்டரை மைல். சுக்கிரீவன் வணங்கிய தலம். அனுமனும் இத்தலத்தை வழிபட்டான் என்ப.

சம்பந்தர்

விழிக்கும் நுதல்மேல் ஒருவெண் பிறைசூடி
தெழிக்கும் புறங்காட்டு இடைச்சேர்ந்து எரிஆடி
பழிக்கும் பரிசே பலிதேர்ந்து அவன்ஊர்.பொன்
கொழிக்கும் புனல்சூழ் குரங்காடு துறையே.

அப்பர்

நற்ற வம்செய்த நால்வர்க்கு நல்அறம்
உற்ற நன்மொழி யால்அருள் செய்தநல்
கொற்ற வன்குரங் காடு துறைதொழப்
பற்றும் தீவினை ஆயின பாறுமே.

# 95. திருநீலக்குடி

## (தென்னலக்குடி)

## நீலகண்டேசுரர்–உமையம்மை

அப்பர் : 1

வழிபட்டநாள் : 6–1–57; 14–1–66

ஆடுதுறை இரயில் நிலையத்திலிருந்து இரண்டரைக் கல். திருவிடைமருதூர் இரயில் நிலையத்துக்குத் தென்கிழக்கு ஐந்து மைல்.

அப்பர் சுவாமிகளைச் சமணர்கள் கல்லைக்கட்டிக் கடலில் இட்டதற்கு, அப்பர் சுவாமிகள் பாடிய அகச்சான்றாகிய பின்வரும் தேவாரப் பாடல் இத்தலத்தில் எழுந்தது. "சொல் துணை வேதியன்" என்ற தேவாரப் பாடலில் "கல்துணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்" என்றிருப்பதால், கடலில் வீழ்த்திய செய்தியை அறிவிக்கும் அகச்சான்றாக அப்பாடலைக் கொள்ளுமாறில்லை.

அப்பர்

கல்லி னோடுஎனைப் பூட்டி அமண்கையர்
ஒல்லை நீர்புக நூக்கஎன் வாக்கினால்
நெல்லு நீள்வயல் நீலக் குடிஅரன்
நல்ல நாமம் நவிற்றிஉய்ந் தேன்அன்றே.

# 96. வைகன்மாடக்கோயில்

## வைகல்நாதர்–கொம்பில்இளங்கோதை

சம்பந்தர் : 1

வழிபட்டநாள் : 10–8–57; 15–1–66

நீலக்குடியினின்றும் தென்கிழக்கே மூன்று கல். வைகல் என்பதற்குத் தென்மேற்கு சிறிது தூரத்தில் மாடக் கோவில்

இருக்கிறது. இரண்டு கோவில்கள் உள்ளன. இம்மாடக்கோவில் கோச்செங்கட் சோழனால் கட்டப்பெற்றகோவில்களுள் ஒன்று.

சம்பந்தர்

கொம்புஇயல் கோதைமுன் அஞ்சக் குஞ்சரத்
தும்பிய துரிசெய்த துங்கர் தங்குஇடம்
வம்புஇயல் சோலைசூழ் வைகல் மேற்றிசைச்
செம்பியன் கோச்செங்க ணான்செய் கோயிலே.

## 97. திருநல்லம்

### (கோனேரிராயபுரம்)

### உமாமகேசுரர்–மங்களநாயகி.

சம்பந்தர் : 1; அப்பர் : 1.

வழிபட்டநாள் : 25–3–57; 14–1–66

திருவிடைமருதூருக்குத் தென் கிழக்கு ஆறுகல். மேற்குப்பார்த்த சன்னிதி. இத்தலத்திலுள்ள உலோகத்தாலான கூத்தப் பெருமான் திருவுருவம் உலகிற் சிறந்த ஒரு பேருருவம்.

சம்பந்தர்

கல்லால் நிழல்மேய கறைசேர் கண்டா!என்று
எல்லா மொழியாலும் இமையோர் தொழுது ஏத்த
வில்லால் அரண்மூன்றும் வெந்து விழஎய்த
நல்லான் நமைஆள்வான் நல்லம் நகரானே.

அப்பர்

மாத ராரொடு மக்களும் சுற்றமும்
பேத மாதிப் பிரிவதன் முன்னமே
நாதன் மேவிய நல்லம் நகர்தொழப்
போது மின்!எழு மின்!புக லாகுமே.

## 98. கோழம்பம்

### கோகிலேசுரர்–சௌந்தரநாயகி

சம்பந்தர் : 1; அப்பர் : 1.
வழிபட்டநாள் : 11–8–57; 15–1–66.

மாயூரத்துக்கு மேற்கே 10 கல் தொலைவில் உள்ள நரசிங்கம் பேட்டை இரயில் நிலையத்திலிருந்து தென்கிழக்கே இரண்டு மைல்.

சம்பந்தர்

நெடியானொடு அயன்அறி யாவகை நின்றதோர்
படியானை, பண்டுஅங்க வேடம்ப யின்றானை,
கடியாரும் கோழம்பம் மேவிய வெள்ஏற்றின்
கொடியானைக் கூறுமின்! உள்ளம் குளிரவே.

அப்பர்

சமர சூரபன் மாவைத் தடிந்தவேல்
குமரன் தாதை.நல் கோழம்பம் மேவிய
அமரர் கோவினுக்கு அன்புடைத் தொண்டர்கள்
அமர லோகமது ஆளுடை யார்களே.

## 99. திருவாவடுதுறை

### மாசிலாமணிநாதர்–ஒப்பிலாமுலையாள்

சம்பந்தர் : 1; அப்பர் : 5. சுந்தரர் : 2.
வழிபட்டநாள் : 11–1–57; 3–1–66.

மாயூரத்துக்கு மேற்கு 10கல் தொலைவிலுள்ள நரசிங்கன் பேட்டைஇரயில் நிலையத்திலிருந்து ஒன்றரைமைல் தொலை வில் இத்தலமிருக்கிறது. கும்பகோணம்–மாயூரம் நெடுஞ்சாலை

யில் சிறிது விலகிச் சென்றால் இத்தலத்தை அடையலாம். திருவாவடுதுறை ஆதீனம் இத்தலத்தின் பெயர் கொண்டதே. கோவில் பெரியது.

பத்தாம் திருமுறை ாகிய, திருமந்திரம் என்னும் சைவர்கள் போற்றும் மூவாயிரம் திருப்பாடல்கள் கொண்ட பெருநூலை, திருமூலநாயனார் இத்தலத்திலேயே அருளினார் என்ப. திருவிசைப்பா ஆசிரியருள் ஒருவராகிய திருமாளிகைத்தேவர் வாழ்ந்த பதி இது என்பர். திருவிசைப்பாவில் சேந்தனார் இத்தலத்தைச் சிறப்பித்துப் பாடியுள்ளார்.

### சம்பந்தர்

இடரினும் தளரினும் எனதுஉறுநோய்
தொடரினும் உனகழல் தொழுதுஎழுவேன்
கடல்தனில் அமுதொடு கலந்தநஞ்சை
மிடறினில் அடக்கிய வேதியனே!
இதுவோஎமை ஆளுமாறு? ஈவதுஒன்றுஎமக்கு இல்லையேல்
அதுவோஉனது. இன்அருள் ஆவடுதுறை அரனே!

### அப்பர்

மாயிரு ஞாலம் எல்லாம் மலரடி வணங்கும்போலும்;
பாயிரும் கங்கை யாளைப் படர்சடை வைப்பர் போலும்
காயிரும் பொழில்கள் சூழ்ந்த கழுமல ஊரர்க்கு அம்பொன்
ஆயிரம் கொடுப்பர் போலும் ஆவடு துறைய னாரே.

### சுந்தரர்

மண்ணின் மேல்மயங் கிக்கிடப் பேனை
வலிய வந்து.எனை ஆண்டுகொண் டானே!
கண்ணி லேன்உடம் பில்அடு நோயால்
கருத்து அழிந்துஉனக் கேபொறை ஆனேன்;
தெண்ணி லாஎறிக் கும்சடை யானே!
தேவனே;திரு ஆவடு துறையுள்
அண்ணலே!எனை அஞ்சல்என் றருள்வாய்.
ஆர்எ னக்குஉறவு அமரர்கள் ஏறே!

சேந்தனார்

பாலும் அமுதமும் தேனுமாய்
ஆனந்தம் தந்துள்ளே பாலிப்பான்
போலும்என் ஆருயிர்ப் போகமாம்
புரகால காமபு ராந்தகன்
சேலும் கயலும் திளைக்குநீர்த்
திருவா வடுதுறை வேந்தனொடு
ஆலும் அதற்கே முதலுமாம்
அறிந்தோம் அரிவைபொய் யாததே.

## 100. திருத்துருத்தி

### (குற்றாலம்)

### வேதேசுரர்–முகிழாம்பிகை

சம்பந்தர் : 1; அப்பர் : 1. சுந்தரர் : 1.

வழிபட்டநாள் : 10–1–57; 13–10–65.

கும்பகோணம்–மாயூரம் இருப்புப் பாதையில் குற்றாலம் என்னும் இரயில் நிலையம். இத்தலம் மூவர் தேவாரத்தோடு திருவாசகமும் பெற்ற சிறப்புடையது. திருவாசகத்தில் இத்தலம் இரண்டு இடங்களில் பாராட்டப்படுகிறது. ஐயடிகள் காடவர் கோன் நாயனார் சிறப்பித்துச் சொல்லிய தலங்களில் இதுவும் ஒன்று.

சம்பந்தர்

கரும்பன வரிசிலைப் பெருந்தகைக் காமனைக் கவின் அழித்த
சுரும்பொடு தேன்மல்கு தூமலர்க் கொன்றையம் சுடர்ச்சடையார்
அரும்பன வனமுலை அரிவையோடு ஒருபகல் அமர்ந்தபிரான்
விரும்புஇடம் துருத்தியார் இரவிடத்து உறைவர் வேள்விக்குடியே.

அப்பர்

உடல்தன்னைக் கழிக்கல் உற்ற உலகத்துள் உயிர்கட்கு எல்லாம்
இடர்தன்னைக் கழிக்கவேண்டில் இறைவனை ஏத்து மின்னோ
கடல்தனில் நஞ்சம் உண்டு காண்பரி தாகி நின்ற
சுடர்தனைத் துருத்தி யானைத் தொண்டனேன் கண்ட வாறே.

**சுந்தரர்**

புலங்களை வளம்படப் போக்கறப் பெருகிப்
பொன்களே சுமந்துளங்கும் பூசல்செய்து ஆர்ப்ப.
இலங்கும்ஆர் முத்தினோடு இனமணி இடறி
இருகரைப் பெருமரம் பீழ்ந்துகொண்டு எற்றிக்
கலங்குமா காவிரித் துருத்தியார் வேள்விக்
குடியுளார் அடிகளைச் செடியனேன் நாயேன்
விலங்குமாறு அறிகிலேன் எம்பெரு மானை
மேலைநோய் இம்மையே வீடுவித் தானை.

**மணிவாசகர்**

உருத்தெரியாக் காலத்தே உள்புகுந்துஎன் உளம்மன்னி
கருத்திருத்தி ஊன்புக்குக் கருணையினால் ஆண்டுகொண்ட
திருத்துருத்தி மேயானைத் தித்திக்கும் சிவபதத்தை
அருத்தியினால் நாய்அடியேன் அணிகொள்தில்லை கண்டேனே!

**ஐயடிகள் காடவர்கோன் நாயனார்**

வஞ்சியன நுண்இடையார் வாள்தடங்கண் நீர்சோரக்
குஞ்சி குறங்கின்மேல் கொண்டிருந்து-கஞ்சி
அருத்தொருத்தி கொண்டுவா என்னாமுன் நெஞ்சே!
திருத்துருத்தி யான்பாதம் சேர்.

# 101. திருவழுந்தூர்

## (தேரழுந்தூர்)

## வேதபுரீசுரர்-சௌந்தரநாயகி

**சம்பந்தர் : 1**

**வழிபட்டநாள் : 10-1-57; 13-10-65.**

கும்பகோணம்-மாயூரம் இருப்புப்பாதையில் உள்ள தேரழுந்தூர் இரயில் நிலையத்தினின்றும் சுமார் 2 கல் அளவு. மாயூரம்-கும்பகோணம் நெடுஞ்சாலை, தேரழுந்தூர் இரயில் நிலையத்தை ஒட்டியே செல்கின்றது.

இத்தலத்தில் சிவபெருமான் மேற்கு முகமாக இருக்கின்றார். நேரே எதிரில் சுமார் முக்கால் மைல் அளவில் ஆழ்வார் பாடல் பெற்ற ஆமருவிஅப்பன் என்னும் பெருமாள் கிழக்கு முகமாக நிற்கின்றார்.

இத்தலம் தேவார, திவ்வியப்பிரபந்தப் பாடல் சிறப்புப் பெற்றதோடு, கம்பர்பெருமானை அளித்த பெருமையும் உடையது. ஊர்க்கோடியில், "கம்பர்மேடு" என்று ஒன்று இருக்கிறது. அங்குத்தான் கவிச்சக்கரவர்த்தி பிறந்து,வளர்ந்து, வாழ்ந்ததாகக் கூறப் பெறுகிறது.

கம்பன் பிறந்தஊர்;காவேரி தங்கும்ஊர்;
கும்பமுனி சாபம் குலைந்தஊர்;–செம்பதுமத்
தாதகத்து நான்முகனும் தாதையும்தே டிக்காணா
ஒதுஅகத்தார் வாழும்அழுந்தூர்.

என்ற தனிப்பாடல் இவ்வூரின் சிறப்பைப் பகரும்.

**சம்பந்தர்**

நறவுஆர் தலையின் நயவா உலகில்
பிறவா தவனே! பிணியில் லவனே!
அறையார் கழலாய்! அழுந்தை மறையோர்
மறவாது எழமா மடம்மன் னினையே.

## 102. திருமயிலாடுதுறை
## (மாயூரம்)
### மாயூரநாதர்–அபயாம்பிகை; அம்சொல்நாயகி

**சம்பந்தர் : 2 அப்பர் : 1**

**வழிபட்டநாள் : 1–2–57; 19–10–65.**

இரயில் நிலையம். பெரியகோயில். அம்பிகை மயில் உரு எடுத்து இறைவனை வழிபட்டதலம் என்ப. இத்தலத்திற்கு மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை புராணம் பாடியுள்ளார்.

சம்பந்தர்

அம்தண்மதி செம்சடையார் அம்கண்எழில்
கொன்றையொ டுஅணிந்த அழகர்ஆம்
எம்தம்அடி கட்குஇனிய தானம்அது
வேண்டில்எழில் ஆர்ப தியதாம்
கந்தமலி சந்தினொடு கார்அகிலும்
வாரிவரு காவி ரியுளால்
வந்ததிரை உந்திஎதிர் மந்திமலர்
சிந்துமயில் ஆடு துறையே.

அப்பர்

சித்தம் தேறும் செரிவளை சிக்குளனும்
பச்சை திரும்என் பைங்கொடி பால்மதி
வைத்த மாமயில் ஆடு துறைஅரன்
கொத்தி னில்பொலி கொன்றை கொடுக்கிலே.

## 103. திருவிளநகர்

### துறைகாட்டு வள்ளலார்–வேயுறுதோளி

சம்பந்தர் : 1

வழிபட்டநாள் : 3–7–57, 19–10–65.

மாயூரத்துக்கு கிழக்கு 4 கல்.

சம்பந்தர்

தேவ ரும்அம ரர்களும் திசைகள் மேல்உள தெய்வமும்
யாவ ரும்அறி யாததுஓர் அமைதி யால்தழல் உருவினார்
மூவ ரும்இவர் என்னவும் முதல்வ ரும்இவர் என்னவும்
மேவ ரும்பொருள் ஆயினார் மேய துவிள நகர்அதே.

## 104. திருப்பறியலூர்

### (பரசலூர்)

### வீரட்டேசுரர்–இளங்கொடியாள்

சம்பந்தர் : 1.

வழிபட்டநாள் : 3–7–57; 19–10–65

மாயூரத்திற்கு அணித்தேயுள்ள செம்பொன்பள்ளி என்னும் தலத்தினின்றும் தென்மேற்கே ஒன்றரைக்கல். அட்ட வீரட்டங்களில் ஒன்று. இது தக்கன் தலையை அறுத்த பதி.

சம்பந்தர்

நரைஆர் விடையான் நலம்கொள் பெருமான்
அரைஆர் அரவம் அழகா அசைத்தான்
திரைஆர் புனல்சூழ் திருப்பறி யலூரில்
விரைஆர் மலர்ச்சோலை வீரட்டத் தானே!

## 105. திருச்செம்பொன்பள்ளி

### சொர்ணபுரீசுரர்–மருவார்குழலி

சம்பந்தர் : 1. அப்பர் 2.

வழிபட்டநாள் : 3–7–57; 18–10–65.

மாயூரத்திற்குக் கிழக்கே ஏழு மைலிலுள்ள செம்பொன்னார் கோயில் இரயில் நிலையம்.

சம்பந்தர்

வார்ஆர் கொங்கை மாதுஒர் பாகமாய்ச்
சீர்ஆர் செம்பொன் பள்ளி மேவிய
ஏர்ஆர் புரிபுன் சடைஎம் ஈசனைச்
சேரா தவர்மேல் சேரும் வினைகளே.

அப்பர்

என்பும் ஆமையும் பூண்டுஅங்கு உழிதர்வார்க்கு
அன்பும் ஆயிடும்; ஆயிழை யீர்!இனிச்
செம்பொன் பள்ளியு ளான்சிவ லோகனை
நம்பொன் பள்ளி.உள் கவினை நாசமே.

## 106. திருநனிபள்ளி

### (புஞ்சை)

### நல்துணையப்பர்–மலையான்மடந்தை

சம்பந்தர் : 1. அப்பர் : 1. சுந்தரர் : 1.

வழிபட்டநாள் : 3–7–57; 19–10–65.

மாயூரத்துக்கு வடகிழக்கு 8 கல் அளவு. வழியில் 4 கல்லில் விளநகரும், 7 கல்லில் செம்பொன்பள்ளியும் இருக்கின்றன. இத்தலத்தில் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரின் தாயார் பிறந்தனர் என்பர்.

அப்பர்சுவாமிகளுக்குப் பல்லவன் கொடுத்த நஞ்சை அமுதமாக்கிய வரலாறு பற்றி, அப்பர் சுவாமிகளே கூறும் தேவாரப்பாடலை இங்கே காண்க.

சம்பந்தர்

குளிர் தரு கங்கைதங்கு சடைமாடு இலங்கு
 தலைமாலை யோடு குலவி
ஒளிர்தரு திங்கள்சூடி உமைபாகம் ஆக
 உடையான் உகந்த நகர்தான்
குளிர்தரு கொம்மலோடு குயில்பாடல் கேட்ட
 பெடைவண்டு தானும் முரல
நளிர்தரு சோலைமாலை நரைகுருகு வைகும்
 நனிபள்ளி போலும் நமர்காள்.

அப்பர்

துஞ்சுஇருள் காலை மாலை தொடர்ச்சியை மறந்துஇ ராதே
அஞ்சுஎழுத்து ஓதின் நாளும் அரன்அடிக்கு அன்பது ஆகும்;
வஞ்சனைப் பால்சோறு ஆக்கி வழக்குஇலா அமணர் தந்த
நஞ்சுஅமுது ஆக்கு வித்தார் நனிபள்ளி அடிக ளாரே.

சுந்தரர்

ஏன மருப்பி னொடும்எழில் ஆமையும் பூண்டுஉகந்து
வான மதின்அர ணம்மலை யேசிலை யாவளைத்தான்;
ஊனம்இல் காழிதன் உள்உயர் ஞானசம் பந்தர்க்குஅன்று
ஞானம் அருள்புரிந் தான்நண் ணும் ஊர்நனி பள்ளியதே

சேக்கிழார்

செழும்தரளப் பொன்னிசூழ் திருநன்னி
பள்ளியுள்ளோர் தொழுது. "திங்கள்
கொழுந்துஅணியும் சடையாரை எங்கள்பதி
யிற்கும்பிட்டு அருள அங்கே
எழுந்துஅருள வேண்டும்"என இசைந்துஅருளித்
தோணிவீற்று இருந்தார் பாதம்
தொழும்தகைமை யால்இறைஞ்சி அருள்பெற்றுப்
பிறபதியும் தொழமுன் செல்வார்.

# 107. திருவலம்புரம்

## (பெரும்பள்ளம்)

## வலம்புரிநாதர்–வடுவகிர்க்கண்ணி

சம்பந்தர் : 1. அப்பர் : 2. சுந்தரர் : 1.
வழிபட்டநாள் : 31–1–57; 16–10–65.

சீர்காழியிலிருந்து தென்கிழக்கே காவிரிப்பூம்பட்டினம் சாலையில் 7 மைலிலுள்ள திருவெண்காட்டை அடைந்து

அங்கிருந்து 2 கல் அளவு செல்லவேண்டும். இதற்குத் தென் மேற்கு ஒன்றரை மைலில் தலைச்சங்காடு என்ற தலம் இருக்கின்றது. இங்கு பிட்சாடனமூர்த்தி வடிவம் பேரழகோடு பொலிகின்றது.

**சம்பந்தர்**

*புரிதரு புன்சடை பொன்தயங்கப் புரிநூல் புரண்டுஇலங்க*
*விரைதரு வேழத்தின் ஈர்உரிதோல் மேல்மூடி வேய்புரைதோள்*
*அரைதரு பூம்துகில் ஆரணங்கை அமர்ந்தார் இடம்போலும்*
*வரைதரு தொல்புகழ் வாழ்க்கைஅரு வலம்புர நல்நகரே!*

**அப்பர்**

*செங்கண்மால் சிலைபிடித்துச் சேனை யோடும்*
*சேதுபந்த னம்செய்து சென்று புக்குப்*
*பொங்குபோர் பலசெய்து புகலால் வென்ற*
*போர் அரக்கன் நெடுமுடிகள் பொடியாய் வீழ.*
*அங்குஒருதன் திருவிரலால் இறையே ஊன்றி*
*அடர்த்து அவற்கே அருள்புரிந்த அடிகள் இந்நாள்*
*வங்கமலி கடல்புடைசூழ் மாட வீதி*
*வலம்புரமே புக்குஅங்கே மன்னி னாரே.*

**சுந்தரர்**

*எனக்குஇனித் தினைத்தனைப் புகல்இடம் அறிந்தேன்*
*பனைக்கனி பழம்படும் பரவையின் கரைமேல்*
*எனக்குஇனி அவன்தமர்க்கு இனியவன் எழுமையும்*
*மனக்குஇனி யவன்தனது இடம்வலம் புரமே.*

## 108. தலைச்சங்காடு

### சங்கருணாதேசுரர்–சௌந்தரநாயகி

*சம்பந்தர் : 1.*

*வழிபட்டநா–ளள் : 31–1–57; 19–10–65*

மாயூரம்–தரங்கம்பாடி இருப்புப்பாதையில் உள்ள ஆக்கூர்

இரயில் நிலையத்தினின்றும் வடகிழக்கே 1½ மைல். இதற்கு வடகிழக்கே 1½ மைலில் வலம்புரம் என்னும் தலம் இருக்கின்றது.

சம்பந்தர்

நலச்சங்க வெண்குழையும் தோடும்பெய்தோர் நால்வேதம்
சொலச்சங்கை இல்லாதீர்! சுடுகாடுஅல்லால் கருதாதீர்!
குலைச்செங்காய்ப் பைங்கமுகின் குளிர்கொள்சோலைக் குயில்ஆலும்
தலைச்சங்கைக் கோயிலே கோயில்ஆகத் தாழ்ந்தீரே!

## 109. ஆக்கூர்

### தான்தோன்றி அப்பர்–வாள்நெடுங்கண்ணி

சம்பந்தர் : 1. அப்பர் : 1.

வழிபட்டநாள் : 31–1–57; 19–10–65.

மாயூரம்–தரங்கம்பாடி இருப்புப் பாதையில் ஓர் இரயில் நிலையம். மாயூரம்–தரங்கம்பாடி நெடுஞ்சாலையில், மாயூரத்தினின்றும் 10 கல் அளவு. சிறிய மாடக் கோயில். கோவிலுக்குத் தான்தோன்றிமாடம் என்று பெயர். அறுபான்மும்மை நாயன்மார்களுள் ஒருவராகிய சிறப்புலியார் பிறந்த இடம். இத் தலத்து வேளாளர்களைத் திருஞானசம்பந்தர் தேவாரத்தில் சிறப்பித்துப் பாடியுள்ளார்.

சம்பந்தர்

வாள்ஆர்கண் செம்துவர்வாய் மாமலையான் தன்மடந்தை
தோள்ஆகம் பாகமாப் புல்கினான் தொல்கோயில்
வேள்ஆளர் என்றவர்கள் வள்ளன்மையான் மிக்குஇருக்கும்
தாள்ஆளர் ஆக்கூரில் தான்தோன்றி மாடமே.

**அப்பர்**

மாதூரும் வாள்நெடும்கண் செவ்வாய் மென்தோள்
மலைமகளை மார்பத்து அணைத்தார் போலும்;
மூதூர் முதுதிரைகள் ஆனார் போலும்;
முதலும் இறுதியும் இல்லார் போலும்;
தீதுஊர நல்வினையாய் நின்றார் போலும்;
திசைஎட்டும் தாமேயாம் செல்வர் போலும்;
ஆதிரை நாளாய் அமர்ந்தார் போலும்;
ஆக்கூரில் தான்தோன்றி யப்ப னாரே.

**சேக்கிழார்**

ஆலைசூழ் பூகவேலி அத்திரு ஆக்கூர் தன்னில்
ஞாலமார் புகழின் மிக்கார் நான்மறைக் குலத்தின் உள்ளார்
நீலமார் கண்டத்து எண்தோள் நிருத்தர்தம் திருத்தொண்டுஏற்ற
சீலராய்ச் சாலும்ஈகைத் திறத்தினில் சிறந்த நீரார்.

# 110. திருக்கடவூர்

## அமிர்தலிங்கேசுரர்–அபிராமிஅம்மை

**சம்பந்தர் : 1. அப்பர் : 3. சுந்தரர் : 1.**
**வழிபட்டநாள் : 31–1–57; 18–10–65.**

மாயூரம்–தரங்கம்பாடி இருப்புப் பாதையில் உள்ள ஓர் இரயில் நிலையம். மாயூரம்–தரங்கம்பாடி நெடுஞ் சாலையில் 13 கல் தொலையில் இத்தலம் இருக்கிறது. பெரியகோயில். மேற்குப் பார்த்த சந்நிதி. சிறப்புப் பெற்ற அபிராமி அம்மனின் சந்நிதி கிழக்குப் பார்த்தது.

அபிராமிப் பட்டர் என்பவர் இனிமையான நூறு பாடல் கொண்ட அந்தாதி பாடியது இவ்அம்பிகைக்குத்தான். அபிராமி அந்தாதி பாடல் அனைத்தும் அம்மன் கோயிலில் சலவைக்கல்லில் பதிக்கப் பெற்றிருக்கின்றன.

இத்தலம் எட்டு வீரட்டங்களுள் ஒன்று. மார்க்கண்டனுக்காகக் காலனைக் கடவுள் உதைத்த பதி இது. காலஸம்ஹார மூர்த்தி இத் தலத்தில் பெரிய வடிவத்தில் கம்பீரமாக அமைந்திருக்கிறது. மகாலிங்கத்தின் மீது எமன் வீசிய பாசத்தழும்பு இருக்கின்றது.

குங்கிலியக்கலய நாயனாரும், காரிநாயனாரும் வாழ்ந்து வீடுபேறு அடைந்த தலம் இது.

சம்பந்தர்

வெந்தவெண் நீறுஅணி வீரட்டா னத்துறை வேந்தனை,
அந்தணர் தம்கட வூர்உளா னை,அணி காழியான்
சந்தம்எல் லாம்அடிச் சாத்தவல் லமறை ஞானசம்
பந்தன செந்தமிழ் பாடிஆ டக்கெடும் பாவமே.

அப்பர்

பெரும்புலர் காலை மூழ்கி, பித்தற்குப் பத்தர் ஆகி,
அரும்பொடு மலர்கள் கொண்டுஆங்கு ஆர்வத்தை உள்ளே வைத்து
விரும்பிநல் விளக்குத் தூபம் விதியினால் இடவல் லார்க்கு,
கரும்பினால் கட்டி போல்வார் கடவூர்வீ ரட்ட னாரே!

சுந்தரர்

மையார் கண்டத்தி னாய்!மத மாஉரி போர்த்தவனே!
பொய்யாது என்உயிர் உள்புகுந் தாய்!இன்னம் போந்து அறியாய்!
கையார் ஆடுஅர வா!கட வூர்தன்உள் வீரட்டத்துஎம்
ஐயா!என்அமு தே!எனக்கு ஆர்துணை நீஅலதே!

சேக்கிழார்

கருப்புவில் லோனைக் கூற்றைக் காய்ந்தவர் கடவூர் மன்னி
விருப்புறும் அன்பு மேன்மேல் மிக்குஎழும் வேட்கை கூர
ஒருப்படும் உள்ளத் தன்மை உண்மையால் தமக்கு நேர்ந்த
திருப்பணி பலவும் செய்து சிவபத நிழலில் சேர்ந்தார்.

# 114. திருக்கடவூர் மயானம்

## (திருமெய்ஞ்ஞானம்)

## பிரமபுரீசுரர்–மலர்க்குழல் மின்னம்மை

சம்பந்தர் : 1. அப்பர் : 1. சுந்தரர் : 1.

வழிபட்டநாள் : 31–1–57; 19–10–65.

கடவூர்க் கோயிலுக்குக் கிழக்கே ஒரு கல் அளவு. மணற்பாதை. கார் செல்வது சிறிது கடினம். எனினும் போகலாம். இங்கு ஊர் எதுவும் இல்லை. கோயில் மட்டுமே இருக்கிறது.

### சம்பந்தர்

மங்கை மணந்த மார்பர் மழுவாள் வலன்ஒன்று ஏந்திக்
கங்கை சடையில் கரந்தார் கடவூர் மயானம் அமர்ந்தார்
செங்கண் வெள்ளேறு ஏறிச் செல்வம் செய்யா வருவார்
அங்கை ஏறிய மறியார் அவர்எம் பெருமான் அடிகளே.

### அப்பர்

குழைகொள் காதினர்;கோவண ஆடையர்;
உழையர்; தாம்கட வூரின் மயானத்தார்;
பழைய தம்அடி யார்செய்த பாவமும்
பிழையும் தீர்ப்பர்; பெருமான் அடிகளே!

### சுந்தரர்

வாடா முலையாள் தன்னோடும்
மகிழ்ந்து, கானில் வேடுவனாய்க்
கோடுஆர் கேழல் பின்சென்று
குறுகி, விசயன் தவம்அழித்து,
நாடா வண்ணம் செருச்செய்து,
ஆவ நாழி நிலைஅருள்செய்
பீடுஆர் சடையார் மயானத்துப்
பெரிய பெருமான் அடிகளே!

**ஐயடிகள் காடவர்கோன் நாயனார்**

உய்யும் மருந்துஇதனை உண்மின் எனஉற்றார்
கையைப் பிடித்துஎதிரே காட்டியக்கால்–பைய
எழுந்துஇருமி யான்வேண்டேன் என்னாமுன் நெஞ்சே!
செழுந்திரு மயானமே சேர்.

## 112. திருவேட்டக்குடி

### திருமேனியழகர்–சாந்தநாயகி

**சம்பந்தர் : 1**

**வழிபட்டநாள் : 10–7–57 18–10–65**

காரைக்காலுக்கு வடகிழக்கு 6 மைல்.

**சம்பந்தர்**

தோத்திரமா மணல்இலிங்கம் தொடங்கியஆன்நிரையில்பால்
பாத்திரமா ஆட்டுதலும் பரஞ்சோதி பரிந்துஅருளி
ஆத்தம்என மறைநால்வர்க்கு அறம்புரிநூல் அன்றுஉரைத்த
தீர்த்தம்மல்கு சடையாரும் திருவேட்டக் குடியாரே.

## 113. திருத்தெளிச்சேரி

### (கோயில்பத்து)

### பார்வதீசுரர்–சத்தியம்மை

**சம்பந்தர் : 1.**

**வழிபட்டநாள் : 10–7–57; 18–10–65.**

காரைக்கால் இரயில் நிலையத்திற்கு வடமேற்கே முக்கால் மைல் அளவு. கோவில் சிறியது. மேற்குப்பார்த்த சந்நிதி.

ஆண்டுதோறும் பங்குனி பதின்மூன்றாம் நாள்தொட்டுப் பத்து நாட்கள் சூரிய ஒளி சிவலிங்கத்தின்மேல் விழுகின்றதாம்.

சம்பந்தர்

கார்உ லாம்கடல் இப்பிகள் முத்தம் கரைப்பெயும்
தேர்உ லாம்நெடு வீதிய தார்தெளிச் சேரியீர்!
ஏர்உ லாம்பலிக்கு ஏகிட வைப்புஇடம் இன்றியே
வார்உ லாம்முலை யாளைஓர் பாகத்து வைத்ததே.

## 114. தருமபுரம்

### யாழ்மூரிநாதர்–தேன்அமுதவல்லி

சம்பந்தர் : 1.

வழிபட்டநாள் : 10–7–57; 18–10–65.

காரைக்கால் இரயில் நிலையத்திற்கு மேற்கே அரை மைல் அளவு.

சம்பந்தர்

தேமரு வார்குழல் அன்னந டைப்பெடை மான்விழித்
திருந்திழை பொருந்துமேனி செங்கதிர் விரியத்
தூமரு செஞ்சடையில் துதைவெண்மதி துன்றுகொன்றை
தொல்புனல் சிரம்கரந்து உரித்தோல் உடையார்;
காமரு தண்கழி நீடிய கானல கண்டகம்
கடல்லடை கழிஇழிய முண்டகத்து அயலே
தாமரை சேர்குவ ளைப்படு இற்கழு நீர்மலர்
வெறிகமழ் செறிவ்வயல் தருமபு ரம்பதியே.

# 115. திருநள்ளாறு

*தர்ப்பாரண்யேசுரர் – போகமார்த்தபூண்முலையாள்*

*சம்பந்தர் : 4. அப்பர் : 2. சுந்தரர் : 1.*
*வழிபட்டநாள் : 10–7–57; 18–10–65.*

பேரளம்–காரைக்கால் இருப்புப்பாதையில் உள்ள ஓர் இரயில் நிலையம். காரைக்காலுக்கு மேற்கே 3 மைல். சப்தவிடங்கத் தலங்களில் ஒன்று.

இங்கு சனீசுவரன் கோயில் முக்கியமானது. நளச் சக்கரவர்த்தி வழிபட்டு. சனிநீக்கம் பெற்றத்தலம் இஃது என்ப. கோவிலுக்குப்பக்கத்தில் நளதீர்த்தம் என்னும் பெரியகுளம் இருக்கிறது. இக்குளத்தில் சனிப்பெயர்ச்சிக்கு ஏராளமான மக்கள் வந்து நீராடுகின்றனர்.

*சம்பந்தர்*

*போகம்ஆர்த்த பூண்முலையாள் தன்னோடும் பொன் அகலம்*
*பாகம்ஆர்த்த பைங்கண்வெள் ஏற்றுஅண்ணல் பரமேட்டி*
*ஆகம்ஆர்த்த தோல் உடையன் கோவண ஆடையின்மேல்*
*நாகம்ஆர்த்த நம்பெருமான் மேயது நள்ளாறே.*

*அப்பர்*

*இறவாமே வரம்பெற்றேன் என்று மிக்க*
*இராவணனை இருபதுதோள் நெரிய ஊன்றி.*
*உறவாகி இன்இசைகேட்டு இரங்கி. மீண்டே*
*உற்றபிணி தவிர்த்துஅருள வல்லான் தன்னை.*
*மறவாதார் மனத்துஎன்றும் மன்னி னானை.*
*மாமதியம். மலர்க்கொன்றை. வன்னி. மத்தம்.*
*நறவார்செஞ் சடையானை. நள்ளாற் றானை.*
*நான்அடியேன் நினைக்கப்பெற்று உய்ந்த வாறே.*

சுந்தரர்

மாதி னுக்குஉடம்பு இடம்கொடுத் தானை.
மணியி னை.பணி வார்வினை கெடுக்கும்
வேத னை.வேத வேள்வியர் வணங்கும்
விமல னை.அடி யேற்குஎளி வந்த
தூத னை.தன்னைத் தோழமை அருளித்
தொண்ட னேன்செய்த துரிசுகள் பொறுக்கும்
நாத னை.நள் ளாறனை. அமுதை.
நாயி னேன்மறந்து என்நினைக் கேனே.

# 116. கோட்டாறு

## (திருக்கொட்டாரம்)

## ஐராவதேசுரர்–வண்டமர்பூங்குழலி

சம்பந்தர் : 2

வழிபட்டநாள் : 11–7–57; 18–10–65.

திருநள்ளாறு இரயில் நிலையத்திலிருந்து வடமேற்கே மூன்று கல். வெள்ளையானை வணங்கிய தலம் என்ப.

சம்பந்தர்

பஞ்சின் மெல்அடி மாதர்.ஆடவர்.
பத்தர். சித்தர்கள் பண்பு வைகலும்
கொஞ்சிஇன் மொழியால் தொழில்மல்கு கோட்டாற்றில்
மஞ்ச னே!மணி யேம ணிமிடற்று
அண்ண லே!என உள்நெ கிழ்ந்தவர்
துஞ்சுமாறு அறியார் பிறவார்இத் தொல்நிலத்தே.

## 117. அம்பர்ப்பெருந்திருக்கோயில்

### (அம்பர்)

### பிரமபுரீசுரர்–பூங்குழலம்மை

**சம்பந்தர் 1.**

**வழிபட்டநாள் : 5–5–56; 24–6–65.**

பேரளம் இரயில் நிலையத்திற்கு அடுத்த பூந்தோட்டம் இரயில் நிலையத்திற்குத் தென்கிழக்கு 2 மைல். அம்பர் மாகாளத்திற்குக் கிழக்கே முக்கால் மைல். கோயிலுக்குப் பெருந்திருக் கோயில் என்று பெயர். இது கோச்செங்கட் சோழர் கட்டிய மாடக் கோயில்களில் ஒன்று.

சோமாசிமாற நாயனார் வீடு பேறடைந்த தலம் இது.

**சம்பந்தர்**

மையகண் மலைமகள் பாக மாய்இருள்
மையகதுஓர் கனல்எரி கனல ஆடுவர்
ஐயநன் பொருபுனல் அம்பர்ச் செம்பியர்
செய்யகண் நிறைசெய்த கோயில் சேர்வரே.

## 118. அம்பர்மாகாளம்

### காளகண்டேசுரர்–பட்சநாயகி

**வழிபட்டநாள் : 5–5–56; 24–6–65**

அம்பர்க் கோயிலிலிருந்து மேற்கே முக்கால் மைல். அம்பர் மாகாளத்திற்கும் அம்பருக்கும் இடையில் சோமாசிமாற நாயனார் யாகம் செய்த இடம் இருக்கின்றது.

சம்பந்தர்

கொந்தண் பொழில்சோலைக் கோல வரிவண்டு
மந்தம் மலிஅம்பர் மாகா ளம்மேயே
கந்தம் கமழ்கொன்றை கமழ்புன் சடைவைத்த
எந்தை கழல்ஏத்த இடர்வந்து அடையாவே.

## 119. திருமீயச்சூர்

### முயற்சிநாதர்–சௌந்தரநாயகி

சம்பந்தர் : 1.
வழிபட்டநாள் : 6–5–56; 24–6–65

பேரளம் இரயில் நிலையத்திலிருந்து மேற்கே ஒரு மைல். இங்கே அம்பிகை வீற்றிருந்த திருக்கோலம்.

சம்பந்தர்

காயச் செவ்விக் காமன் காய்ந்து கங்கையைப்
பாயப் படர்புன் சடையில் பதித்த பரமேட்டி
மாயச் சூர்அன்று அறுத்த மைந்தன் தாதைதன்
மீயச் சூரே தொழுது வினையை வீட்டுமே.

## 120. திருமீயச்சூர் இளங்கோயில்

### சகலபுவனேசுரர்–மேகலாம்பிகை

அப்பர் : 1
வழிபட்டநாள் : 6–5–56; 24–6–65

இக்கோயில் மீயச்சூர் கோயிலுக்குள் சுவாமி சந்நிதிக்கு அண்மையில் இருக்கிறது. சிறிய கோயில். இளங்கோயில் என்பதெல்லாம் ஒரு சமயத்தில் வாலாலயம் செய்து வைத்திருந்தபோது தோன்றியிருக்க வேண்டும். அந்தக் காலத்தில் தேவார ஆசிரியர்கள் சென்று பாடியிருக்கலாம்.

தோற்றும் கோயிலும் தோன்றிய கோயிலும்
வேற்றுக் கோயில் பலஉள மீயச்சூர்க்
கூற்றம் பாய்ந்த குளிர்புன் சடையாற்கு
ஏற்றும் கேயில்கண் டீர்!இளங் கோயிலே!

## 121. திலதைப்பதி

### (திலதர்ப்பணபுரி)

### (மதிமுத்தம்)

### முத்தீசுரர்-பொற்கொடியாள்

*சம்பந்தர் : 1.*

*வழிபட்டநாள் : 9-8-57; 24-6-65*

பேரளம் இரயில் நிலையத்திற்குத் தென்மேற்கே மூன்றரை மைல் அளவு. அரிசிலாற்றின் தென்கரையில் கோயில் இருக்கிறது. தயரதச் சக்கரவர்த்திக்கு இராம-இலக்குவர் திலதர்ப்பணம் செய்த இடம் இது என்ப.

*சம்பந்தர்*

பொடிகள்பூசிப் பலதொண்டர் கூடிப் புலர்காலையே
அடிகள்ஆரத் தொழுதுஏத்த நின்றஅவ் அழகன் இடம்
கொடிகள் ஓங்கிக் குலவும் விழவார் திலதைப்பதி
வடிகொள்சோலைம் மலர்மணம் கமழும் மதிமுத்தமே.

## 122. திருப்பாம்புரம்

### பாம்புரேசுரர்-வண்டார்பூங்குழலி

*சம்பந்தர் : 1.*

*வழிபட்டநாள் : 6-6-57; 15-1-66.*

பேரளம் இரயில் நிலையத்திற்கு மேற்கே 4½ கல் அளவு. வழியில் ஒருமைலில் மீயச்சூர் இருக்கிறது. இது நாகாராசன்

வழிபட்ட தலம் என்பர். பாம்பு மன்னனின் மூல வடிவமும், எழுந்தருளும் வடிவமும் இக் கோயிலில் இருக்கின்றன.

**சம்பந்தர்**

கடிபடுகமலத்து அயனொடுமாலும் காதலோடு அடிமுடிதேடச்
செடிபடுவினைகள் தீர்த்து அருள் செய்யும் திவணசெம்முடைச்செல்வர்
முடியுடைஅமரர் முனிகணத்தவர்கள் முறைமுறை அடிபணிந்தேத்த
படியதுவாகப் பாவையும்தாமும் பாம்புர நன்னகராரே.

## 123. சிறுகுடி

### மங்களேசுரர்–மங்களநாயகி

**சம்பந்தர் : 1.**

**வழிபட்டநாள் : 6–6–57; 15–1–66.**

பேரளம் இரயில் நிலையத்திற்கு மேற்கே 4½ கல் தொலைவிலுள்ள திருப்பாம்புரத்திற்கு மேற்கே ஒருகல் அளவு.

**சம்பந்தர்**

செந்நல வயல்அணி சிறுகுடி மேவிய
ஒன்னலர் புரம்எரித் தீரே!
ஒன்னலர் புரம்எரித் தீர்!உமை உள்குவார்
சொல்நலம் உடையவர் தொண்டே.

## 124. திருவீழிமிழலை

### வீழிஅழகுஈசர்–அழகுமுலைஅம்மை

**சம்பந்தர் : 15; அப்பர் : 8. சுந்தரர் : 1.**

**வழிபட்டநாள் : 25–3–57; 24–6–65.**

மாயூரத்திற்கு அடுத்த குற்றாலம் இரயில் நிலையத்திற்குத் தெற்கே 6 கல். பேரளம் இரயில் நிலையத்திற்குத் தென்

மேற்கே 8 மைல். ஆடுதுறை, பூந்தோட்டம் நிலையங்களி னின்றும் செல்லலாம். வீழிச் செடிகள் மலிந்திருப்பதால் இவ்வூர் இப்பெயர் பெற்றது என்ப. ஊர் சிறியது. கோவில் பெரிய கோவில். வடக்கு வீதியில் கீழ்ப்புறத்தில் சம்பந்தர் கோயிலும், மேற்புறத்தில் அப்பர் கோயிலும் இருக்கின்றன. இறைவன் வீற்றிருக்கும் இடத்திற்கு மேலுள்ளது விண்இழி விமானம் என்று பாராட்டப் பெறுகின்றது.

தேவார வரிசையில் இத்தலம் மூன்றாவது விளங்குகின்றது. 1. சிர்காழி: 71 பதிகம் உடையது. 2. திருவாரூர்: 34 பதிகம் உடையது. 3. திருவீழிமிழலை: 24 பதிகங்கள் கொண்டது. மேலும் இத்தலம் சேந்தனாரின் திருவிசைப்பாப் பெற்றது.

சம்பந்தரும், அப்பரும் படிக்காசு பெற்று மக்களின் பட்டினி தீர்த்தது இத்தலத்திலேயே என்பர்.

சம்பந்தர்

எழுந்துஉலகை நலிந்துஉழலும் அவுணர்கள்தம்
புரமூன்றும் எழிற்கண் நாடி,
உழுந்துஉருளும் அளவையின்ஒள் எரிகொள,வெஞ்
சிலைவளைத்தோன் உறையும் கோயில்
கொழும்தரளம் நகைகாட்டக் கோகநதம்
முகம்காட்டக் குதித்து நீர்மேல்
விழுந்தகயல் விழிகாட்ட வில்பவளம்
வாய்காட்டும் மிழலை யாமே.

அப்பர்

அன்றுஆலின் கீழிருந்துஅங்கு அறம்சொன் னானை,
அகத்தியனை உகப்பானை, அயன்மால் தேட
நின்றானை, கிடந்தகடல் நஞ்சுஉண் டானை,
நேரிழையைக் கலந்திருந்தே புலன்கள்ஐந்தும்
வென்றானை, மீயச்சூர் மேவி னானை,
மெல்இயலாள் தவத்தின்நிறை அளக்கல் உற்றுச்
சென்றானைத் திருவீழி மிழலை யானைச்
சேராதார் தீநெறிக்கே சேர்கின் றாரே.

### சுந்தரர்

பரந்த பாரிடம் ஊரி டைப்பலி
பற்றிப் பார்த்துஉணும் சுற்ற மாயினீர்!
தெரிந்த நான்மறை யோர்க்குஇடம்
ஆய திருமிழலை
இருந்து நீர்தமி ழோடுஇசை கேட்கும்
இச்சையால் காசு நித்தல் நல்கினீர்;
அருந்தண் வீழிகொண் டீர்!அடி
யேற்கும் அருளுதிரே.

### சேந்தனார்

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றஎம் சிவனைத்
திருவீழி மிழலைவீற் றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டுகண்டு உள்ளம்
குளிரஎன் கண்குளிர்ந் தனவே.

### சேக்கிழார்

வையம் எங்கும் வற்கடமாய்ச்
செல்ல, உலகோர் வருத்தம்உற,
நையும் நாளில் பிள்ளையார்
தமக்கும் நாவுக் கரசருக்கும்,
கையில் மானும், மழுவும்உடன்
காணக் கனவில் எழுந்தருளிச்
செய்ய சடையார் திருவீழி–
–மிழலை உடையார் அருள்செய்வார்.

# 125. திருவன்னியூர்

## (அன்னூர்)

## தீவண்ணர்–பார்வதி

அப்பர் : 1.

வழிபட்டநாள் : 25–3–57; 15–1–66.

திருவீழிமிழலைக்கு வடமேற்கே 2 கல். சிறியகோயில். வன்னி என்றால் நெருப்பு என்பது பொருள். அக்கினி வணங்கிய தலம் என்பர்.

அப்பர்

ஞானம் காட்டுவர்; நன்னெறி காட்டுவர்;
தானம் காட்டுவர்: தம்அடைந் தார்க்கெலாம்
தானம் காட்டித்தன் தாள்அடைந் தார்கட்கு
வானம் காட்டுவர் போல்வன்னி யூரரே.

# 126. கருவிலி

## சற்குணநாதர்–சர்வாங்கநாயகி.

அப்பர் : 1.

வழிபட்டநாள் : 25–3–57; 15–1–66.

இத்தலம் திருநல்லம் என்னும் கோனேரிராசபுரத்திற்குத் தென்மேற்கு ஒன்றரை மைலில் இருக்கிறது. வன்னியூரிலிருந்து இத்தலம் இரண்டரைக்கல் அளவு. கோயிலுக்குக் கொட்டிட்டை என்று பெயர்.

அப்பர்

வாடி நீர்வருந் தாதே மனிதர்காள்
வேட னாய்விச யற்குஅருள் செய்தவெண்
காட னார்உறை கின்ற கருவிலிக்
கோடு நீள்பொழில் கொட்டிட்டை சேர்மினே.

# 127. பேணுபெருந்துறை

## (திருப்பந்துறை)

## சிவாநந்தர்–மலையரசி

*சம்பந்தர் : 1.*

*வழிபட்டநாள் : 25–3–57; 26–6–65.*

கும்பகோணத்திற்குத் தென்கிழக்கு 7 மைல் தொலைவிலுள்ள திருநறையூருக்குக் கிழக்கே, இத்தலம் ஒரு மைல் தொலைவில் இருக்கிறது.

"பேணுபெருந்துறையில் கண்ணார் கழல்காட்டி" என்ற திருவாசகத்தில் இத்தலப்பெயர் காணப்படினும் அச்சொற்றொடர் இத்தலத்தைக் குறிக்காது எனவும், அது பேணத்தக்க திருப்பெருந்துறையையே சுட்டும் எனவும் ஆராய்ச்சிக்காரர் கூறுவர்.

*சம்பந்தர்*

நிலனொடு வானும், நீரொடு தீயும்,
வாயுவும் ஆகி ஓர்ஐந்து
புலனொடு வென்று பொய்மைகள் தீர்ந்த
புண்ணியா! வெண் பொடிப்பூசி
நலனொடு திங்கும் தானலது இன்றி
நன்கெழு சிந்தையர் ஆகி,
மலனொடு மாசும் இல்லவர் வாழும்
மல்கு பெருந்துறை யாரே.

# 128. நறையூர்ச்சித்தீச்சுரம்

## சித்தநாதேசுரர்–அழகாம்பிகை

*சம்பந்தர் : 4; சுந்தரர் : 1.*

*வழிபட்டநாள் : 2–1–56; 26–6–65.*

கும்பகோணத்திற்குத் தென்கிழக்கே 5½ மைல், வழியில் 4½ மைலில் அரசிற்கரைப்புத்தூர் என்னும் தலம் இருக்கிறது.

சம்பந்தர்

குழலார்சடையர்; கொக்கின் இறகர்; கோலநிறமத்தம்
தழலார்மேனித் தவள நீற்றர் சரிகோவணக்கீளர்;
எழிலார்நாகம் புலியின் உடைமேல் இசைத்து விடையேறிக்
கழலார்சிலம்பு புலம்ப வருவார் சித்திச்சரத்தாரே.

சுந்தரர்

ஊனார் உடைவெண் தலைஉண் பலிகொண்டு
ஆனார் அடலேறு அமர்வான் இடமாம்
வானார் மதியம் பதிவண் பொழில்வாய்த்
தேனார் நறையூர்ச் சித்திச் சரமே.

## 129. அரிசிற்கரைப்புத்தூர்

### (அழகார்புத்தூர்)

### படிக்காசுஅளித்தஈசர்–அழகாம்பிகை

சம்பந்தர் : 1. அப்பர் : 1. சுந்தரர் : 1.
வழிபட்டநாள் : 2–1–56; 26–6–65

கும்பகோணத்திற்குத் தென்கிழக்கு 4½ கல் அளவு. புகழ்த்துணை நாயனார் வழிபட்டு வீடு பேறடைந்த தலம் இது.

சம்பந்தர்

நிலந்தண் நீரோடு அனல்கால் விசும்பின் நீர்மையான்
சிலந்தி செங்கட் சோழனாகச் செய்தான்ஊர்
அலந்த அடியான் அற்றைக்கு அன்றோர் காசுஎய்திப்
புலர்ந்த காலை மாலை போற்றும் புத்தூரே.

அப்பர்

அருப்புப் போல்முலை யார்அல்லல் வாழ்க்கைமேல்
விருப்புச் சேர்நிலை விட்டுநல் விட்டமாய்த்
திருப்புத் தூரனைச் சிந்தை செயச்செயக்
கருப்புச் சாற்றிலும் அண்ணிக்கும் காண்மினே.

சுந்தரர்

அகத்தடிமை செய்யும் அந்தணன் தான்.அரி
சிற்புனல் கொண்டுவந்து ஆட்டுகின்றான்.
மிகத்தளர்வு எய்திக் குடத்தையும் நும்முடி
மேல்விழுத் திட்டு. நடுங்குதலும்.
வகுத்துஅவ னுக்கு நித்தற் படியும்.
வரும்என்று ஒருகாசினை நின்றநன்றிப்
புகழ்த்துணை கைப்புகச் செய்து உகந்தீர்!
பொழிலார் திருப்புத்தூர் புனிதன்நீரே.

## 130. சிவபுரம்

### சிவபுரநாதர்–சிங்காரவல்லி.

சம்பந்தர் : 3. அப்பர் : 1.

வழிபட்டநாள் : 1–1–56; 13–1–66.

கும்பகோணத்திற்குத் தென்கிழக்கு மூன்றுகல் அளவு. சிவபுரம் என்றசொல் திருவாசகத்தில் பதினாறு இடங்களில் வருகின்றது. 'சிவபுரம்' என்பதைச் சிவலோகம் என்னும் பொருளில் பொதுவாகவே கொண்ட போதிலும். இத்தலத்தை நினைவுபடுத்துவதாகக் கொள்வதில் தவறு ஏதும் இல்லை.

சம்பந்தர்

அன்றுஅடல் காலனைப் பாலனுக்காய்ப்
பொன்றிகொள் உதைசெய்த புனிதன்நகர்
வென்றிகொள் எயிற்றுவெண் பன்னிமுன்னாள்
சென்றடி வீழ்தரு சிவபுரமே.

அப்பர்

கலையாரு நூல் அங்கம் ஆயி னான்காண்;
கலைபயிலும் கருத்தன்காண் திருத்த மாகி
மலையாகி மறிகடல்ஏழ் சூழ்ந்து நின்ற
மண்ணாகி விண்ணாகி நின்றான் தான்காண்;
தலையாய மலைஎடுத்த தகவி லோனைத்
தகர்ந்துவிழ ஒருவிரலால் சாதித்து ஆண்ட
சிலையாரும் மடமகள்ஓர் கூறன் தான்காண்;
சிவன் அவன்காண் சிவபுரத்துஎஞ் செல்வன் தானே.

மணிவாசகர்

அன்பினால் அடியேன் ஆவியோடு ஆக்கை
ஆனந்த மாய்க்கசிந்து உருக
என்பரம் அல்லா இன்அருள் தந்தாய்;
யான்இதற்கு இலன்ஓர்கைம் மாறு;
முன்புமாய்ப் பின்பும் முழுதுமாய்ப் பரந்த
முத்தனே! முடிவிலா முதலே!
தென்பெருந் துறையாய்! சிவபெரு மானே!
சீருடைச் சிவபுரத்து அரைசே

## 131. கலயநல்லூர்

### (சாக்கோட்டை)

### அமிர்தகலேசுரர்–அமிர்தவல்லி

சுந்தரர் : 1.

வழிபட்டநாள் : 1–1–56; 26–6–65.

கும்பகோணத்திற்குத் தென்கிழக்கு 3 கல் அளவு. கும்பகோணம்–நீடாமங்கலம் பெரு வழியில் இத்தலம் இருக்கின்றது. கோயில் அரிசில் ஆற்றின் தென்கரையில் இருக்கிறது.

சுந்தரர்

நிற்பானும் கமலத்தில் இருப்பானும் முதலா
நிறைந்துஅமரர் குறைந்துஇரப்ப நினைத்துஅருளிஅவர்க்குஆய்
வெற்புஆர்வில் அரவுநாண் எரிஅம்பால் விரவார்
புரம்மூன்றும் எரிவித்தவிகிர் தன்ஊர் வினவில்
சொற்பால பொருட்பால சுருதிஒரு நான்கும்
தோத்திரமும் பலசொல்லித் துதித்துஇறைதன் திறத்தே
கற்பாரும் கேட்பாரும் ஆய்எங்கும் நன்குஆர்
கலைபயில்அந் தணர்வாழும் கலயநல்லூர் காணே.

## 132. கருக்குடி

### (மருதாந்தநல்லூர்)

### சற்குணலிங்கேசுரர்–சர்வாலங்கிருதமின்னாள்

சம்பந்தர் :1.

வழிபட்டநாள் : 1–1–56; 26–6–65.

கும்பகோணத்திற்குத் தென்கிழக்கே மூன்று மைலிலுள்ள கலய நல்லூருக்குத் தென்கிழக்கே ஒரு கல்தொலைவு. இத்தலத்துக்குக் கிழக்கே ஒன்றரைக் கல் அளவில் ஏனாதி நாத நாயனார் பிறந்த எயினனூர் இருக்கின்றது.

சம்பந்தர்

ஊன்உடைப் பிறவியை அறுக்க உன்னுவீர்!
கான்இடை ஆடலான் பயில்க ருக்குடிக்
கோன்உயர் கோயிலை வணங்கி வைகலும்
வானவர் தொழுகழல் வாழ்த்தி வாழ்மினே.

## 133. திருவாஞ்சியம்

### வாஞ்சிநாதர்–மங்களநாயகி

சம்பந்தர் : 1. அப்பர் : 1. சுந்தரர் : 1.

வழிபட்டநாள் : 7–5–56; 23–6–65.

நன்னிலம் இரயில் நிலையத்திற்கு மேற்கே ஆறு கல் அளவு. வழியில் ஒன்றரை மைலில் திருக்கொண்டீச்சரமும், அதினின்றும் ஒன்றரை மைலில் நன்னிலத்துப் பெருங் கோயிலும் இருக்கின்றன. கோயிலில் எமனுக்கு ஒரு சந்நிதி இருக்கின்றது. இத்தலம் திருவாசகத்திலும் பேசப்பெறுகின்றது.

சம்பந்தர்

மாடம் நீடுகொடி மன்னிய தென்இலங் கைக்குமன்
வாடி ஊடவரை யால்அடர்த்து அன்று அருள் செய்துஅவர்
வேட வேடர்திரு வாஞ்சியம் மேவிய வேந்தரைப்
பாட நீடுமனத் தார்வினை பற்றஅறுப் பார்களே.

*அப்பர் : 1.*

புற்றில் ஆடுஅர வோடு புனல்மதி
தெற்றும் செம்சடைத் தேவர்பி ரான்பதி
சுற்று மாடங்கள் சூழ்திரு வாஞ்சியம்
பற்றிப் பாடுவார்க் குப்பாவம் இல்லையே.

*சுந்தரர்*

மைகொள் கண்டர்எண் தோளர்
மலைமகள் உடன்உறை வாழ்க்கைக்
கொய்த கூவிள மாலை
குலவிய சடைமுடிக் குழகர்
கைதை நெய்தலம் கழனி
கமழ்புகழ் வாஞ்சியத்து அடிகள்
பைதல் வெண்பிறை யோடு
பாம்புஉடன் வைப்பது பரிசே.

*மணிவாசகர்*

திருவாஞ் சியத்தில் சீர்பெற இருந்து
மருவார் குழலியொடு மகிழ்ந்த வண்ணமும்

# 134. நன்னிலம்

## மதுவனேசுரர்–மதுவனநாயகி

*சுந்தரர் : 1.*

*வழிபட்டநாள் : 7–5–56; 23–6–65.*

நன்னிலம் இரயில் நிலையத்திற்கு மேற்கே மூன்று மைலில் கோயில் இருக்கின்றது. இடையில் ஒன்றரை மைலில் திருக் கொண்டீச்சரம் என்னும் தலம் இருக்கின்றது. கோயில் சிறிய தாயினும், நன்னிலத்துப் பெருங்கோயில் என்று இதற்குப் பெயர். கோச்செங்கட் சோழர் கட்டிய மாடக் கோயில்களுள் இதுவும் ஒன்று.

சுந்தரர்

கருவரை போல்அரக்கன் கயிலைம்மலைக் கீழ்க்கதற
ஒருவிர லால் அடர்த்துஇன் அருள்செய்த உமாபதிதாள்
திரைபொரு பொன்னிநன்னீர்த் துறைவன்திகழ் செம்பியர்கோன்
நரபதி நன்னிலத்துப் பெருங்கோயில் நயந்தவனே.

## 135. திருக்கொண்டீச்சுரம்

### பசுபதீசுரர்–சாந்தநாயகி

அப்பர் : 2.

வழிபட்டநாள் : 7–5–56; 23–6–65.

நன்னிலம் இரயில் நிலையத்திற்கு மேற்கே 1½ கல் அளவு. கோயில் சிறியது. கோயிலைச் சுற்றிலும் அகழி இருக்கின்றது. முடிகொண்டான் ஆற்றுக்குத் தென்கரையில் கோயில் இருக்கின்றது.

அப்பர்

பாலன்ஆய்க் கழிந்த நாளும்
பனிமலர்க் கோதை மார்தம்
மேலன் ஆய்க் கழிந்த நாளும்
மெலிவொடு மூப்பு வந்து
கோலன் ஆய்க் கழிந்த நாளும்
குறிக்கோள். இலாது கெட்டேன்;
சேல்உலாம் பழன வேலித்
திருக்கொண்டீச் சரத்துஉ ளானே.

## 136. திருப்பனையூர்

### சௌந்தரியநாதர்–பெரியநாயகி

சம்பந்தர் 1. சுந்தரர் 1.

வழிபட்டநாள் : 8–5–56; 24–6–65.

திருவாரூருக்கு வடக்கே 6½ மைலில் உள்ள ஆண்டிப் பந்தல் என்னும் கிராமம் சேர்ந்து அங்கிருந்து கிழக்கே ஒரு

மைல் சென்றால் இத்தலத்தை அடையலாம். இத்தலம் திருவாசகத்திலும் பேசப் பெறுகின்றது.

சம்பந்தர்

வரம்முன் னிமகிழ்ந்து எழுவீர்காள்!
சிரம்முன் அடிதா ழுவணங்கும்
பிரமன் னொடுமால் அறியாத
பரமன் உறையும் பனையூரே!

சுந்தரர்

மண்ணலாம்முழ வம்அதிர்தர மாடமாளிகை கோபுரத்தின் மேல்
பண்ணணி யாழ்முரலும் பழனத் திருப்பனையூர்
வெண்நிலாச்சடை மேவியவிண் ணவரொடுமண் ணவர்தொழ
அண்ணல் ஆகிநின்றார் அவரே அழகியரே!

மணிவாசகர்

துருத்தி தன்னில் அருத்தியோடு இருந்தும்
திருப்பனை யூரில் விருப்பன் ஆகியும்.

# 137. திருவிற்குடி

## வீரட்டானேசுரர்–ஏலவார்குழலி

சம்பந்தர் : 1.

வழிபட்டநாள் : 8–5–56; 24–6–65.

மாயூரம்–காரைக்குடி இருப்புப் பாதையிலுள்ள விற்குடி இரயில் நிலையத்திலிருந்து 3 கல் தொலைவில் கோவில் இருக்கிறது. எட்டு வீரட்டத் தலங்களில் இது ஒன்று. சலந்தராசுரனை மாய்த்த தலம் இது. எழுந்தருளும் மூர்த்தியின் திருக்கரத்தில் சக்கரம் இருக்கின்றது.

சம்பந்தர்

பெண்ஓர் கூறினர் பெருமையர்
 சிறுமறிக் கையினர் மெய்ஆர்ந்த
அண்ணல் அன்புசெய் வார்அவர்க்கு
 எளியவர், அரியவர் அல்லார்க்கு
விண்ணில் ஆர்பொழில் மல்கிய
 மலர்விரி விற்குடி வீரட்டம்
எண்ணில் ஆவிய சிந்தையி
 னார்தமக்கு இடர்கள்வந்து அடையாவே.

## 138. திருப்புகலூர்

### கோணப்பிரான்–கருந்தாழ்குழலி

சம்பந்தர் : 2, அப்பர் : 5. சுந்தரர் : 1.
வழிபட்டநாள் : 3–5–56, 23–6–65.

நன்னிலம் இரயில் நிலையத்துக்குக் கிழக்கே நான்கு கல், பெரிய கோவில். கோவிலைச் சுற்றிலும் திருக்குளம் அகழிபோல் அமைந்திருக்கின்றது. கோணப்பிரான் என்னும் பெயருடைய சுவாமியின் வடிவம் சிறிது சாய்ந்திருக்கிறது.

அப்பர் சுவாமிகள் நெடுங்காலம் உழவாரப் பணி செய்து "புண்ணியா உன்னடிக்கே போதுகின்றேன் பூம்புகலூர் மேவிய புண்ணியனே" என்று கூறி, இறைவனோடு இரண்டறக் கலந்த திருத்தலம் இது.

சுந்தரமூர்த்திகள் "கொடுக்கிலாதானைப் பாரியே என்று கூறினும் கொடுப்பாரிலை" என்று பாடியதும் இத்தலத்தில் தான்.

அறுபான் மும்மை நாயன் மார்களுள் ஒருவராகிய முருக நாயனார் பிறந்தருளியது இப்பதியில்.

### சம்பந்தர்

வாழ்ந்தநாளும் இனிவாழும் நாளும்இவை அறிதிரேல்
வீழ்ந்தநாள்எம் பெருமானை. ஏத்தாவிதி இல்லிர்காள்!
போழ்ந்ததிங்கள் புரிசடையி னான்தன் புகலூரையே
சூழ்ந்தஉள்ளம் உடையீர்கள்! உங்கள்துயர் தீருமே.

### அப்பர்

அங்கமே பூண்டாய்! அனல்ஆ டின்னாய்!
ஆதிரையாய்! ஆல்நிழலாய்! ஆன்ஏறு ஊர்ந்தாய்!
பங்கம்ஒன்று இல்லாத படர்ச டையினாய்!
பாம்பொடு திங்கள் பகைதீர்த்து ஆண்டாய்!
சங்கைஒன்று இன்றியே தேவர் வேண்டச்
சமுத்திரத்தின் நஞ்சு உண்டுசாவா மூவாச்
சிங்கமே! உன் அடிக்கே போது கின்றேன்;
திருப்புகலூர் மேவிய தேவ தேவே!

### சுந்தரர்

நரைகள் போந்துமெய் தளர்ந்து மூத்துஉடல்
நடுங்கி நிற்கும்இக் கிழவனை.
வரைகள் போல்திரள் தோள னே!என்று
வாழ்த்தி னும்கொடுப் பார்இலை;
புரைவெள் ஏறுஉடைப் புண்ணி யன்புக
லூரைப் பாடுமின். புலவீர்காள்!
அரையன் ஆய்அமர் உலகம் ஆள்வதற்கு
யாதும் ஐயுறவு இல்லையே.

### சேக்கிழார்

மண்முதலாம் உலகேத்த மன்னுதிருத் தாண்டகத்தைப்
"புண்ணியா உன்னடிக்கே போதுகின்றேன்" எனப்புகன்று
நண்ணரிய சிவானந்த ஞானவடி வேயாகி
அண்ணலார் சேவடிக்கீழ் ஆண்ட அரசு அமர்ந்திருந்தார்.

# 139. திருப்புகலூர் வர்த்தமானீச்சுரம்

## வர்த்தமானேசுரர்–கருந்தாழ்குழலி

சம்பந்தர் : 1.

வழிபட்டநாள் : 3–5–56; 23–6–65.

இக்கோயில் திருப்புகலூர் கோவிலுக்குள்ளேயே ஒரு பகுதியாக இருக்கிறது. கோணப்பிரான் சன்னிதிக்கு வட பக்கத்தில் வர்த்தமானீச்சுரம் இருக்கிறது. இங்கே முருக நாயனார் திருவுருவம் காணப்படுகிறது.

சம்பந்தர்

ஈசன்; ஏறுஅமர் கடவுள்;
இன்அமுது; எந்தை!எம் பெருமான்;
பூசு மாசுஇல்வெண் நீற்றர்;
பொலிவுஉடைப் பூம்புக லூரில்
மூசு வண்டுஅறை கொன்றை
முருகன்முப் போதும்செய் முடிமேல்
வாச மாமலர் உடையார்;
வர்த்தமா னீச்சரத் தாரே.

சேக்கிழார்.

ஆன பெருமை வளம்சிறந்த அந்தண் புகலூர் அதுதன்னில்
மான மறையோர் குலமரபின் வந்தார் முந்தை மறைமுதல்வர்
ஞான வரம்பின் தலைநின்றார் நாகம் புனைவார் சேவடிக்கீழ்
ஊனம் இன்றி நிறைஅன்பால் உருகு மனத்தார் முருகனார்.

# 140. இராமனதீச்சுரம்

## இராமனாதர்–கருவார்குழலி

சம்பந்தர் : 1.

வழிபட்டநாள் : 5–5–56; 23–6–65.

திருப்புகலூருக்கு அடுத்துள்ள முடிகொண்டான் ஆற்றைக் கடந்து ஒருமைலில் இத்தலமிருக்கிறது. திருக்கண்ணபுரம்

என்னும் திருமால்தலத்துக்கு அண்மையில் இத்தலம் இருக்கிறது. இதற்குக் கிழக்கே ஒருகல் அளவில் திருச்செங்காட்டாங்குடி உளது. இத்தலமும் இராமனால் வழிபடப் பெற்றது என்பர்.

சம்பந்தர்

*தனமணி தையல்தன் பாகன் தன்னை*
*அனமணி அயன்அணி முடியும் காணான்;*
*பனமணி அரவரி பாதம் காணான்;*
*இனமணி இராமன தீச்ச ரம்மே.*

## 141. திருப்பயற்றூர்

### (திருப்பயற்றங்குடி)

### திருப்பயற்றீசர்–காவியங்கண்ணி

**அப்பர் : 1.**

**வழிபட்டநாள் : 8–5–56; 24–6–65.**

திருவிற்குடி என்னும் தலத்தினின்றும் கிழக்கே மூன்று கல் அளவு.

அப்பர்

*தந்தைஆய்த் தாயும் ஆகித்*
*தரணிஆய் தரணி உள்ளார்க்கு*
*எந்தையும் என்ன நின்ற*
*ஏழ்உலகு உடனும் ஆகி*
*எந்தை!எம் பிரானே! என்றுஎன்று*
*உள்குவார் உள்ளத்து என்றும்*
*சிந்தையும் சிவமும் ஆவார்*
*திருப்பயற் றூர னாரே!*

# 142. திருச்செங்காட்டங்குடி

## கணபதீச்சுரர்–திருகுகுழல்நாயகி

சம்பந்தர் : 2. அப்பர் : 1.

வழிபட்டநாள் : 5–5–56; 23–6–65.

நன்னிலம் இரயில் நிலையத்திலிருந்து 6 கல் தொலைவு. திருக்கண்ணபுரத்தினின்றும் ஒருகல்.

சிறுத்தொண்டநாயனார் சீராள தேவன் எனும் தன் ஒரே மைந்தனை அறுத்துக் கறி சமைத்து, கடவுளுக்கு அளித்து, மைந்தனோடும் மனைவியோடும் வீடுபேறடைந்த திருத்தலம். சிறுத்தொண்டர், அவர் மனைவி வெண்காட்டுநங்கை, மைந்தன் சீராளன், தாதி சந்தனநங்கை இவர்கள் திருவுருவங்கள் கோவிலில் இருக்கின்றன.

### சம்பந்தர்

கூர்ஆரல் இரைதேர்ந்து குளம்உலவி வயல்வாழும்
தாராவே! மடநாராய்! தமியேற்குஒன்று உரையீரே!
சீராளன் சிறுத்தொண்டன் செங்காட்டாங் குடிமேய
பேர்ஆளன் பெருமான்தன் அருள்ஒருநாள் பெறலாமே.

### அப்பர்

பெருந்தகையை, பெறற்கரிய மாணிக் கத்தை,
பேணிநினைந்து எழுவார்தம் மனத்தே மன்னி
இருந்தமணி விளக்குஅதனை, நின்ற பூமேல்
எழுந்தருளி இருந்தானை, எண்தோள் வீசி
அரும்திறல்மா நடம்ஆடும் அம்மான் தன்னை,
அம்கனகச் சுடர்க்குன்றை, அன்றுஆ லின்கீழ்த்
திருந்துமறைப் பொருள்நால்வர்க்கு அருள்செய் தானை,
செங்காட்டாங் குடிஅதனில் கண்டேன் நானே!

சேக்கிழார்

சிறுத்தொண்ட ருடன்கூடச் செங்காட்டங்
குடியில்எழுந்து அருளிச் சீர்த்தி
நிறுத்துஎண்திக் கிலும்நிலவும் தொண்டர்அவர்
நண்புஅமர்ந்து நீல கண்டம்
பொறுத்துஅண்டர் உயக்கொண்டார் கணபதீச்
சரத்தின்கண் போகம் எல்லாம்
வெறுத்துஉண்டிப் பிச்சைநுகர் மெய்த்தொண்ட
ருடன்அணைந்தார் வேத கீதர்.

## 143. திருமருகல்

### மாணிக்கவண்ணர்–வண்டுவார்குழலி

சம்பந்தர் : 2; அப்பர் : 1.
வழிபட்டநாள் : 6–5–56; 23–6–65.

திருப்புகலூரினின்றும் தென்கிழக்கே மூன்றரைக் கல். இதற்கு வடகிழக்கே ஒரு மைலில் சாத்தமங்கை என்னும் தலம் இருக்கிறது.

பாம்பு கடித்து இறந்த செட்டிப் பிள்ளையைத் திருஞான சம்பந்தர் பதிகம்பாடி உயிர்ப்பித்த தலம். தான் வரித்த கணவனைப் பாம்பு தீண்டலும் அதற்கு இரங்கி, திருமருகல் தலத்தில் வணிகப்பெண் கூறுவதாகச் சேக்கிழார் அடிகள் பாடும் "அடியாராம் இமையவர்தம் கூட்டம் உய்ய" என்ற பாடலும், "வந்தடைந்த சிறுமறையோன் உயிர்மேல்சீறி" என்ற பாடலும் மிக அருமையானவை.

சம்பந்தர்

சடையாய் எனுமால்; சரண்நீ எனுமால்;
விடையாய் எனுமால்; வெருவா விழுமால்;
மடைஆர் குவளை மலரும் மருகல்
உடையாய் தகுமோ? இவள்உள் மெலிவே.

அப்பர்

ஓது பைங்கிளிக்கு ஒண்பால் அமுதூட்டிப்
பாது காத்துப் பலபல கற்பித்து.
மாது தான்மரு கல்பெரு மானுக்குத்
தூது சொல்ல விடத்தான் தொடங்குமே.

சேக்கிழார்

பொங்குவிடம் தீர்ந்துஎழுந்து நின்றான்;சூழ்ந்த
பொருவில்திருத் தொண்டர்குழாம் பொலிய ஆர்ப்ப
அங்கையினை உச்சியின்மேல் குவித்துக்கொண்டுஅங்கு.
அருட்காழிப் பிள்ளையார் அடியில் வீழ்ந்த
நங்கைஅவள் தனை.நயந்த நம்பி யோடு
நானிலத்தில் இன்புற்று வாழும் வண்ணம்
மங்குல்தவழ் சோலைமலி புகலி வேந்தர்
மணம்புணரும் பெருவாழ்வு வகுத்து விட்டார்.

## 144. திருச்சாத்தமங்கை

### அயவந்தீசுரர்–மலர்க்கண்ணம்மை

சம்பந்தர் : 1.

வழிபட்டநாள் : 6–5–56; 23–6–65.

திருமருகலுக்கு வடகிழக்கே ஒரு கல். இக்கோவிலுக்கு அயவந்தி என்று பெயர். திருநீலநக்க நாயனார் பிறந்தருளிய தலம். திருநீலநக்க நாயனாரைச் சம்பந்தர் இத் தலத்துத் தேவாரப் பதிகத்து வைத்துப் பாடியுள்ளார்.

திருநீலநக்க நாயனார் என்ற அந்தணர் திருஞானசம்பந்த மூர்த்திகளோடு வந்த திருநீலகண்டப் பெரும் பாணர்க்கு வேள்விச்சாலையில் தங்க இடம் கொடுத்துச் சிறப்பித்தது இத் தலத்திலேயே என்று பெரியபுராணம் விதந்து ஓதும்.

சம்பந்தர்

மறையினார்; மல்குகாழித் தமிழ்ஞானசம் பந்தன் மன்னும்
நிறையினார்; நீலநக்கன் நெடுமாநகர் என்று தொண்டர்
அறையும்ஊர் சாத்தமங்கை அயவந்திமேல் ஆய்ந்த பத்தும்
முறைமையால் ஏத்தவல்லார் இமையோரிலும் முந்து வாரே!

சேக்கிழார்

பூத்த பங்கயப் பொகுட்டின்மேல் பொருகயல் உகளும்
காய்த்த செந்நெலின் காடுசூழ் காவிரி நாட்டுச்
சாத்த மங்கைஎன்று உலகெலாம் புகழ்வுறும் தகைத்தால்
வாய்த்த மங்கல மறையவர் முதற்பதி வனப்பு.

## 145. நாகைக்காரோணம்

### (நாகப்பட்டினம்)

### காயாரோகணர்–நீலாயதாட்சி

சம்பந்தர்: 2; அப்பர் : 4 ; சுந்தரர் : 1.
வழிபட்டநாள் : 1–9–56; 11–3–65.

இரயில் நிலையம். கடற்கரைப் பட்டினம். மிகப் பழமையான நகரம். அதிபத்த நாயனார் பிறந்தருளிய தலம். சப்தவிடங்கத்தலங்களுள் ஒன்று. இத்தலத்தில் சுந்தரமூர்த்திகள் தமக்கு வேண்டும் பொருள்களை எல்லாம் இறைவனிடம் கேட்கின்றார். மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை இத்தலத்துக்குப் புராணம் பாடியுள்ளார்.

சம்பந்தர்

உயர்ந்தபோதுஇன் உருவத்து உடைவிட்டு உழல்வார்களும்
பெயர்ந்தமண்டை இடுபிண்ட மாஉண்டு உழல்வார்களும்
நயந்துகாணா வகைநின்ற நாதர்க்கு இடம்ஆவது
கயம்கொள்ஓதம் கழிசூழ் கடல்நாகைக் காரோணமே!

அப்பர்

செம்துவர் வாய்க்கரும் கண்இணை வெண்நகைத்தேன்மொழியார்
வந்து வலம்செய்து மாநடம் ஆட மலிந்தசெல்வக்
கந்த மலிபொழில் சூழ்கடல் நாகைக்கா ரோணம்என்றும்
சிந்தைசெய் வாரைப் பிரியாது இருக்கும் திருமங்கையே!

சுந்தரர்

பண்மயத்த மொழிப்பரவை சங்கிலிக்கும் எனக்கும்
பற்றுஆய பெருமானே! மற்றுஆரை உடையேன்?
உண்மயத்த உமக்குஅடியேன் குறைதீர்க்க வேண்டும்;
ஒளிமுத்தம் பூண்ஆரம் ஒண்பட்டும் பூவும்
கண்மயத்த கத்தூரி கமழ்சாந்தும் வேண்டும்.
கடல்நாகைக் காரோணம் மேவிஇருந் தீர்என்று
அண்மயத்தால் அணிநாவல் ஆரூரன் சொன்ன
அரும்தமிழ்கள் இவைவல்லார் அமர்உலகுஆள்பவரே!

சேக்கிழார்

மன்னி நீடிய செங்கதி ரவன்வழி மரபின்
தொன்மை யாம்முதல் சோழர்தம் திருக்குலத்து உரிமைப்
பொன்னி நாடுஎனும் கற்பகப் பூங்கொடி மலர்போல்
நன்மை சான்றது நாகப்பட் டினத்திரு நகரம்.

## 146. சிக்கல்

### வெண்ணெய்நாதர்–வேல்நெடுங்கண்ணி

சம்பந்தர் : 1.

வழிபட்டநாள் : 1–9–56; 11–3–65.

நாகப்பட்டினத்துக்கு மேற்கு 3 கல் தொலைவு. இரயில் நிலையம். இறைவன் கட்டுமலை மேல் வீற்றிருக்கின்றார். இங்கே அழகே வடிவமாக வீற்றிருக்கின்ற சிங்காரவேலர் சன்னிதி மிக்க சிறப்புடையது. கோவில் பெரியது. தங்க வாகனங்கள் நிறைய இருக்கின்றன. கோவிலுக்குள் வடபக்கத்தில் கோல வாமனப்பெருமாள் சன்னிதி இருக்கின்றது.

சம்பந்தர்

கந்தம்முந் தக்கைதை பூத்து,க மழ்ந்துசே ரும்பொழில்
செந்துவண் டின்இசை பாடல்மல் கும்திகழ் சிக்கலுள்
வெந்தவெண் ணீற்றுஅண்ணல் வெண்ணெய்ப்பி ரான்விரையார்கழல்
சிந்தைசெய் வார்வினை யாயின தேய்வது திண்ணமே.

# 147. கீழ்வேளூர்

## கேடிலியப்பர்–வனமுலைநாயகி

**சம்பந்தர்: 1. அப்பர் : 1.**
**வழிபட்டநாள் : 1–9–56; 11–3–65.**

இரயில் நிலையம். திருவாரூர்–நாகப்பட்டினம் நெடுஞ் சாலையில் திருவாரூரக்குக் கிழக்கே 7 கல் தொலைவு. கோவில் பெரியது. கட்டுமலை மேல் இருக்கின்றது. இங்கே எழுந்தருளி இருக்கின்ற கடவுளுக்குக் கேடிலியப்பன் என்பது பெயர். அப்பர் சுவாமிகள் பாடல்தோறும் "கீழ்வேளூர் ஆளுங்கோவைக் கேடிலியை நாடுமவர் கேடிலாரே" என்று வாய் கொள்ளாமல் பாடி மகிழ்வார்.

**சம்பந்தர்**

சேடு லாவிய கங்கையைச்
சடையிடைத் தேங்கவைத்து அழகாக
நாடு லாவிய பலிகொளும்
நாதனார் நலமிகு கீழ்வேளூர்ப்
பீடு லாவிய பெருமையர்
பெருந்திருக் கோயிலுள் பிரியாது
நீடு லாவிய நிமலனைப்
பணிபவர் நிலைமிகப் பெறுவாரே.

**அப்பர்**

சொற்பாவும் பொருள்தெரிந்து தூய்மை நோக்கித்
தூங்காதார் மனத்துஇருளை வாங்கா தானை,
நற்பான்மை அறியாத நாயி னேனை
நன்னெறிக்கே செலும்வண்ணம் நல்கி னானை,
பற்பாவும் வாயாரப் பாடிஆடி,
பணிந்துஎழுந்து குறைந்தடைந்தார் பாவம் போக்க
கிற்பானைக் கீழ்வேளூர் ஆளும் கோவை,
கேடிலியை நாடும்அவர் கேடி லாரே.

# 148. தேவூர்

## தேவபுரீசுரர்–பண்நிலாவியமொழிஉமை

சம்பந்தர் : 2.

வழிபட்டநாள் : 1–9–56; 11–3–65.

கீழ்வேளூருக்குத் தெற்கே இரண்டுகல், கோவில் கட்டுமலை மேல் இருக்கிறது.

இக்கோவிலுக்குத் தென் பக்கத்தில் சிறிது தூரத்தில் தீவு போல் இருக்கின்ற ஓரிடத்தில் திருவாசகத்தில் கூறப்பெறும் ஓர் சிறு கோவில் இருக்கின்றது. கடவுள் பசுவாக வந்து கன்றுக்குப் பால் கொடுத்ததாக, திருவாசக வரிகட்கு ஏற்ப அங்கே கல்லில் செதுக்கப் பெற்றிருக்கின்றது. கோவில் மிகப் பழுதடைந்திருக்கின்றது. தேவூர்க் கோவில் நிருவாகத்தின்கீழ் உள்ளது இக்கோவிலும். இதனை விரைந்து செப்பனிட வேண்டும்.

சம்பந்தர்

பாடு வார்இசை பல்பொருள் பயன்உகந்து அன்பால்
கூடு வார்துணைக் கொண்டதம் பற்றறப் பற்றி.
தேடு வார்பொரு ளானவன் செறிபொழில் தேவூர்
ஆடு வான்அடி அடைந்தனம்; அல்லல்ஒன்று இலமே.

மணிவாசகர்

தேவூர்த்தென்பால் திகழ்தரு தீவில்
கோவார் கோலம் கொண்ட கொள்கையும்

# 149. பள்ளியின்முக்கூடல்

## (அரியான்பள்ளி)

## முக்கோணநாதர்–மைம்மேவுகண்ணி

அப்பர் : 1.

வழிபட்டநாள் : 3–9–56; 13–3–65.

திருவாரூருக்கு வடகிழக்கு மூன்று கல் தொலைவு.

*அப்பர்*

*ஆராத இன்னமுதை, அம்மான் தன்னை,*
*அயனொடுமால் அறியாத ஆதி யானை,*
*தாராரும் மலர்க்கொன்றைச் சடையான் தன்னை,*
*சங்கரனை, தன்ஒப்பார் இல்லா தானை,*
*நீரானை, காற்றானை, தீயா னானை,*
*நீள்விசும்பாய் ஆழ்கடல்கள் ஏழும் சூழ்ந்த*
*பாரானை, பள்ளியின்முக் கூட லானை,*
*பயிலாதே பாழேநான் உழன்ற வாறே.*

## 150. திருவாரூர்

### வன்மீகநாதர்–அல்லியங்கோதை

### புற்றிடங்கொண்டஈசர்–கமலாம்பிகை

*சம்பந்தர் 5; அப்பர் : 21. சுந்தரர் : 8.*
*வழிபட்டநாள் : 30–8–56; 12–3–65.*

இரயில் நிலையம். கோவிலுக்குத் திருமூலட்டானம் என்றும் பூங்கோயில் என்றும் பெயர். ஐம்பெரும் பூதத்தலங்களுள் இது பிருதுவித் தலம். சப்தவிடங்கத் தலங்களுள் இது ஒன்று. "பிறக்க வீடளிக்கும் தலம்" என, இத்தலத்தைப்பற்றிப் பல புராணங்களும் பேசும். "திருவாரூர்ப் பிறந்தார்கள் எல்லார்க்கும் அடியேன்" என்பார் சுந்தரமூர்த்தி அடிகள். இங்குள்ள தேவாசிரியன் என்னும் ஆயிரக்கால் மண்டபத்திலிருந்துதான் சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருத்தொண்டத் தொகை அருளினார் என்ப. பெரியபுராணத்துக்கு மூலகாரணமாக இருந்தது இத்தலமே. சுந்தரமூர்த்தி சுவாமிகள் காதையில் பெரும்பகுதி நடந்தது இங்குதான். பரவையார் வாழ்ந்தது இப்பழம் பதியிலேயே. மனுச்சோழ மன்னன் நீதிசெலுத்தியது இத்திருவாரூரிலேயே. திருவாரூர் சோழர்கட்கு ஒருகாலத்துத் தலைநகரமாக இருந்தது.

உலகத்திலேயே பெரிய தேர் திருவாரூர்த் தேர்தான். கோவில் மிகப்பெரியது. நான்குபுறமும் கோபுரங்கள்

கொண்டது. கோவிலுக்கு எதிரிலுள்ள கமலாலயம் என்னும் திருக்குளம் பெரிதினும் பெரிது. இக்கோவிலில் நவக்கிரகங்கள் வக்கரிக்காமல் ஒரேவரிசையில் இருப்பது குறிப்பிடத்தக்கது. இவ்வாறு வேறுசில தலங்களிலும் காணப் பெறுகின்றன. தியாகராச சுவாமிக்கு நடக்கும் சாயரட்சைதிபமே ஒருதனி அழகு கொண்டது.

தேவாரப் பெருக்கத்தில் இரண்டாவது திருவாரூர். திருவாரூரக்கு 34 தேவாரப் பதிகங்கள் இருக்கின்றன. அதோடு திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, பெரியபுராணம், ஆகிய பாடல்களும் பெற்ற காரணத்தால் திருவாரூர் பஞ்சபாசுரமும் பெற்ற தலம் ஆகின்றது. பஞ்ச பாசுரம், சிதம்பரம், திருவாரூர் இரண்டுக்கும் மட்டுமே இருக்கின்றன.

திருவாரூர் தில்லையினும் பழமையானது என அப்பர் சுவாமிகள் பெருமிதத்தோடு பாடுவார்.

விறல்மிண்ட நாயனார், நமிநந்தியடிகள், செருத்துணை நாயனார், தண்டியடிகள், கழற்சிங்கநாயனார் முதலிய அடியார்கள் வீடு பேறடைந்த தலம் திருவாரூர்.

சம்பந்தர்

அஞ்சும்ஒன்றி ஆறுவீசி நீறுபூசி மேனியில்
குஞ்சியார வந்திசெய்ய அஞ்சலென்னி மன்னுமூர்
பஞ்சியாருமெல்லடிப் பணைத்தகொங்கை நுண்இடை
அஞ்சொலார் அரங்குஎடுக்கும் அந்தண் ஆரூர் என்பதே.

அப்பர்

பாடகம்சேர் மெல்லடிநல் பாவை யாளும்
நீயும்போய்ப் பார்த்தனது பலத்தைக் காண்பான்
வேடனாய் வில்வாங்கி எய்த நாளோ?
விண்ணவர்க்கும் கண்ணவனாய் நின்ற நாளோ?
மாடமொடு மாளிகைகள் மல்கு தில்லை
மணிதிகழும் அம்பலத்தே மன்னிக் கூத்தை.
ஆடுவான் புகுவதற்கு முன்னோ? பின்னோ?
அணிஆரூர் கோயிலாக் கொண்ட நாளே?

*சுந்தரர்*

பொன்னும், மெய்ப்பொரு ளும்தரு வானை,
போக மும்,திரு வும்புணர்ப் பானை,
பின்னை என்பிழை யைப்பொறுப் பானை,
பிழைஎ லாம்தவி ரப்பணிப் பானை,
இன்ன தன்மையன் என்றுஅறி ஒண்ணா
எம்ம னை,எளி வந்தபி ரானை,
அன்னம் வைகும் வயல்பழ னத்துஅணி
ஆரூ ரானை மறக்கலு மாமே.

*மணிவாசகர்*

கார்உறு கண்ணியர் ஐம்புலன் ஆற்றங் கரைமரமாய்
வேர்உறு வேனை விடுதி,கண் டாய்!விளங் கும்திருஆர்–
ஊர்உறை வாய்!மன்னும் உத்தர கோசமங் கைக்குஅரசே!
வார்உறு பூண்முலை யாய்பங்க! என்னை வளர்ப்பவனே!

*பூந்துருத்திநம்பி காடநம்பி*

பத்தியாய் உணர்வோர் அருளைவாய் மடுத்துப்
பருகுதோறும் அமுதம்ஒத்து அவர்க்கே
தித்தியா இருக்கும் தேவர்காள்! இவர்தம்
திருஉரு இருந்தவா பாரீர்:
சத்தியாய்ச் சிவமாய் உலகெலாம் படைத்த
தனிமுழு முதலுமாய் அதற்கோர்
வித்துமாய் ஆரூர் ஆதியாய் வீதி
விடங்கராய் நடம்குலா வினரே.

*சேந்தனார்*

குழலொலி யாழொலி கூத்தொலி
ஏத்தொலி எங்கும் குழாம்பெருகி
விழவொலி விண்ணளவும்சென்று
விம்மி மிகுதிரு வாரூரின்
மழவிடை யாற்கு வழிவழி
ஆளாய் மணம்செய் குடிப்பிறந்த
பழஅடி யாரொடும் கூடிஎம்
மானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

ஐயடிகள் காடவர்கோன் நாயனார்

காளை வடிவொழிந்து கையுறவோடு ஐயுறவாய்
நாளும் அணுகி நலியாமுன்-பாளை
அவிழ்கமுகம் பூஞ்சோலை ஆரூரற்கு ஆளாய்க்
கவிழ்கமுகம் கூம்புகஎன் கை.

சேரமான் பெருமான் நாயனார்

இழையார் வனமுலை ஈர்ந்தண் புனத்தில்
உழையாகப் போந்ததுஒன்று உண்டே-பிழையாச்சீர்
அம்மான் அனல்ஆடி ஆரூர்க்கோன் அன்றுஉரித்த
கைம்மானேர் அன்ன களிறு.

சேக்கிழார்

நிலம கட்குஅழகு ஆர்திரு நீள்நுதல்
திலகம் ஒப்பது செம்பியர் வாழ்பதி
மலர்ம கட்குவண் தாமரை போல்மலர்ந்து
அலகில் சீர்த்திரு ஆரூர் விளங்குமால்.

# 151. திருவாரூர் அரநெறி

## அரநெறியப்பர்–வண்டார்குழலி

அப்பர் : 2.

வழிபட்டநாள் : 30–8–56; 12–3–65.

இக்கோவில் திருவாரூர்ப் பெரிய கோவிலுக்குள் இரண்டாம் பிரகாரத்தில் இருக்கின்றது. மேற்குப் பார்த்த சன்னிதி. நமிநந்தியடிகள் நாயனார் தண்ணீரால் விளக்கேற்றிய தலம் இது. நமிநந்தியடிகளை அப்பர் சுவாமிகள் தாண்டகத்தில் வைத்துப் போற்றுவர்.

அப்பர்

பாதிஒரு பெண்.முடிமேல் கங்கை யானைப்
பாதூரும் பரங்குன்றும் மேயான் தன்னை,
வேதியனை. தன்அடியார்க்கு எளியான் தன்னை,
மெய்ஞ்ஞான விளக்கானை. விரையே நாறும்
போதியலும் பொழில்ஆரூர் மூலட்டானம்
புற்றிடங்கொண்டு இருந்தானை. போற்று வார்கள்
ஆதியை. அரநெறியில் அப்பன் தன்னை,
அடைந்துஅடியேன் அருவினைநோய் அறுத்தவாறே.

## 152. திருவாரூர்ப்பரவையுண்மண்டளி

### தூவாயநாதர்-பஞ்சின்மெல்லடியாள்

சுந்தரர் : 1.

வழிபட்டநாள் : 30-8-56; 12-3-65.

இக் கோயில் திருவாரூர்ப் பெரிய கோவிலுக்குப் பக்கதிலிருக்கின்றது.

சுந்தரர்

அம்மானே! ஆகம சீலர்க்கு அருள்நல்கும்
பெம்மானே! பேரரு ளாளன் பிடவூரன்
தம்மானே! தண்தமிழ் நூற்புல வாணர்க்குஓர்
அம்மானே! பரவையுண் மண்டளி அம்மானே!

## 153. திருவிளமர்

### பதஞ்சலிமனோகரர்-யாழினுமென்மொழியாள்

சம்பந்தர் : 1.

வழிபட்டநாள் : 30-8-56; 13-3-65.

திருவாரூருக்குத் தென்மேற்கு 2 கல் அளவு. ஓடம்போக்கி ஆற்றுக்குத் தென்கரையில் உள்ளது. கோவில் சிறியது.

சம்பந்தர்

நெறிகமழ் தரும்உரை உணர்வினர்; புணர்வுறு மடவரல்
செறிகமழ் தரும்உரு உடையவர்; படைபல பயில்பவர்;
பொறிகமழ் தருபட அரவினர்; விரவிய சடைமிசை
வெறிகமழ் தருமலர் அடைபவர் இடம்எனில் விளமரே.

## 154. கரவீரம்

### (கரையபுரம்)

### கரவீரேசுரர்–பிரத்தியட்சமின்னம்மை

சம்பந்தர் : 1.
வழிபட்டநாள் : 2–9–56; 13–3–65.

திருவாரூருக்கு மேற்கு 7 கல் தொலைவு.

சம்பந்தர்

பண்ணி னார்மறை பாடலன், ஆடலன்
விண்ணி னார்மதில் எய்தமுக்
கண்ணி னான்உறை யும்கர வீரத்தை
நண்ணு வார்வினை நாசமே.

## 155. பெருவேளூர்

### (காட்டூரையன்பேட்டை)

### பிரியாஈசுரர்–மின்னனையாள்

சம்பந்தர் : 1; அப்பர் : 1.
வழிபட்டநாள் : 2–9–56; 13–3–65.

கரவீரத்திற்கு வடமேற்கு ஒன்றரைக்கல் தொலைவு.

*சம்பந்தர்*

குணக்கும்,தென் திசைக்கண்ணும், குடபாலும், வடபாலும்
கணக்கென்ன அருள்செய்வார், கழிந்தோர்க்கும் ஒழிந்தோர்க்கும்
வணக்கம்செய் மனத்தராய் வணங்காதார் தமக்குஎன்றும்
பிணக்கம்செய் பெருமானார் பெருவேளூர் பிரியாரே.

*அப்பர்*

நாதனாய் உலகம் எல்லாம் நம்பிரான் எனவும் நின்ற
பாதனாம் பரம யோகி பலபல திறத்தி னாலும்
பேதனாய்த் தோன்றி னானைப்பெருவேளூர் பேணினானை,
ஓதநா உடைய னாகி உரைக்குமாறு உரைக்கின் றேனே.

## 156. தலையாலங்காடு

### ஆடவல்லநாதர்–திருமடந்தை

*அப்பர் : 1.*

*வழிபட்டநாள் : 2–9–56, 13–3–65.*

குடவாயிலுக்குக் கிழக்கு 5 மைல். இதற்குக் கிழக்கு 3 மைலில் பெருவேளூர் இருக்கிறது. "தலையாலங் காடன் தன்னைச் சாராதே சாலநாள் போக்கினேனே" என்று அப்பர் சுவாமி உருகிப்பாடுவார். கோவிலுக்குள் சென்று பார்த்தால் கோவில் காணத்தக்க நிலையில் இல்லை.

*அப்பர்*

சிவனாகி, திசைமுகனாய், திருமால் ஆகி,
செழுஞ்சுடராய், தீயாகி, நீரும் ஆகி,
புவனாகி, புவனங்கள் அனைத்தும் ஆகி,
பொன்னாகி, மணியாகி, முத்தும் ஆகி,
பவனாகி, பவனங்கள் அனைத்தும் ஆகி,
பசுஏறித் திரிவான் ஓர் பவனாய் நின்ற
தவனாய தலையாலங் காடன் தன்னைச்
சாராதே சாலநாள் போக்கினேனே.

## 157. குடவாயில்

### கோணேசுரர்–பெரியநாயகி

**சம்பந்தர் : 2.**

**வழிபட்டநாள் : 2–9–56; 13–3–65.**

கொரடாச்சேரி இரயில் நிலையத்திலிருந்து வடக்கே எட்டுக்கல் அளவு.கும்பகோணம்–திருவாரூர் நெடுஞ்சாலையில் இத்தலம் இருக்கிறது.

**சம்பந்தர்**

*அடியார்ந்த பைங்கழலும் சிலம்பும்ஆர்ப்ப அங்கையில்*
*செடியார்ந்த வெண்தலைஒன்று ஏந்திஉலகம் பலிதேர்வீர்*
*குடியார்ந்த மாமறையோர் குலாவிஏத்தும் குடவாயில்*
*படியார்ந்த கோயிலே கோயிலாகப் பயின்றீரே.*

## 158. திருச்சேறை

### (உடையார்கோயில்)

### செந்நெறியப்பர்–ஞானவல்லி

**சம்பந்தர் : 1; அப்பர் : 2.**

**வழிபட்டநாள் : 2–9–56; 25–6–65**

கும்பகோணம்–திருவாரூர் நெடுஞ்சாலையில் கும்பகோணத்திலிருந்து ஒன்பது கல் அளவு. இங்குப் பெருமாள் கோயிலும் பாடல் பெற்றது.

**சம்பந்தர்**

பாடினர் அருமறை முறைமுறை பொருளென அருநடம்
ஆடினர் உலகிடை அலர்கொடும் அடியவர் துதிசெய
வாடினர் படுதலை இடுபலி அதுகொடு மகிழ்தரும்
சேடர்தம் வளநகர் செறிபொழில் தழுவிய சேறையே.

அப்பர்

ஓர்த்துஉள வாறுநோக்கி உண்மையை உணராக் குண்டர்
வார்த்தையை மெய்என்று எண்ணி, மயக்கில்வீழ்ந்து அழுந்துவேனை,
பேர்த்துஎனை ஆளாக்கொண்டு பிறவிவான் பிணிகள் எல்லாம்
தீர்த்துஅருள் செய்தார் சேறைச் செந்நெறிச் செல்வ னாரே.

# 159. நாலூர்மயானம்

## பலாசவனேசுரர்–பெரியாம்பிகை.

சம்பந்தர் : 1.

வழிபட்டநாள் : 13–8–57; 25–6–65.

குடவாயிலுக்கு வடகிழக்கு மூன்றுகல் தொலைவு. நாலூர் மயானத்திற்குத் தென்கிழக்கு ஒருகல் அளவில் நாலூர் என்னும் ஊர் இருக்கிறது.

சம்பந்தர்

மாலோடு நான்முகனும் நேட வளர்எரியாய்
மேலோடு கீழ்காணா மேன்மையான்; வேதங்கள்
நாலோடும் ஆறங்கம் நாலூர் மயானத்துஎம்
பாலோடு நெய்ஆடி பாதம் பணிவோமே.

# 160. கடுவாய்க்கரைப்புத்தூர்

## (ஆண்டான்கோவில்)

## சொர்ணபுரீசுரர்–சிவாம்பிகை.

அப்பர் : 1.

வழிபட்டநாள் : 11–1–57; 13–1–66.

குடவாயிலிலிருந்து மேற்கே மூன்றரைக்கல் அளவு. கும்பகோணம்–திருவாரூர்ப்பாதையில் வலங்கைமானிலிருந்து பிரிந்து செல்ல வேண்டும்.

அப்பர்

யாவ ரும்அறி தற்குஅரி யான்தனை,
மூவ ரின்முதல் ஆகிய மூர்த்தியை,
நாவின் நல்உரை ஆகிய நாதனை,
தேவ னைப்புத்தூர் சென்றுகண்டு உய்ந்தெனே.

# 161. இரும்பூளை

## (ஆலங்குடி)

## காசிஆரணியேசுரர்–ஏலவார்குழலி

சம்பந்தர். 1.

வழிபட்டநாள் : 11–1–57; 22–6–65.

நீடாமங்கலம்–கும்பகோணம் சாலையில் நீடாமங்கத்தினின்றும் நாலுகல் தொலைவு. இத்தலத்தில் தட்சிணா மூர்த்தியின் வடிவம் அற்புதமானது.

சம்பந்தர்

நச்சித் தொழுவீர்கள் நமக்குஇது சொல்லீர்
கச்சிப் பொலிகா மக்கொடி யுடன்கூடி
இச்சித்து இரும்பூளை இடம்கொண்ட ஈசன்
உச்சித் தலையில் பலிகொண்டு உழல்ஊணே.

# 162. அரதைப்பெரும்பாழி

## (அரித்துவாரமங்கலம்)

## பாதாளேசுரர்–அலங்காரநாயகி

சம்பந்தர் : 1;

வழிபட்டநாள் : 28–2–56; 13–1–66.

தஞ்சை–நீடாமங்கலம் இருப்புப் பாதையில் உள்ள சாலிய மங்கலம் இரயில் நிலையத்திலிருந்து வடகிழக்கு 6½ மைலில்

உள்ள அவளிவள்நல்லூர் என்னும் தலத்தையடைந்து, அங்கிருந்து ஒருமைல் கிழக்கே சென்றால் இத்தலத்தை அடையலாம்.

சம்பந்தர்

பைத்தபாம் போடுஅரைக் கோவணம் பாய்புலி
மொய்த்தபேய் கண்முழக் கம்,முது காட்டிடை
நித்தமா கந்நட மாடி,வெண் ணீறணி
பித்தர்கோ யில்,அர தைப்பெரும் பாழியே.

## 163. அவளிவள்நல்லூர்

### சாட்சிநாயகர்–சௌந்தரநாயகி

சம்பந்தர் : 1; அப்பர் : 1.
வழிபட்டநாள் : 26–2–56; 13–1–66.

தஞ்சை–நீடாமங்கலம் இருப்புப்பாதையில் உள்ள சாலியமங்கலம் இரயில் நிலையத்திலிருந்து வடகிழக்கு 6½ மைல் தொலைவு.

சம்பந்தர்

துஞ்சல்இல ராயமரர் நின்றுதொழுது ஏத்தஅருள் செய்து
நஞ்சுமிடறு உண்டு,கரி தாயஎளி தாகிஒரு நம்பன்
மஞ்சுறநி மிர்ந்து,உமைந டுங்க,அக லத்தொடுவ ளாவி
அஞ்சமத வேழஉரி யான்உறைவது அவளிவண லூரே.

அப்பர்

நன்மைதான் அறிய மாட்டான் நடுவிலா அரக்கர் கோமான்
வன்மையே கருதிச் சென்று வலிதனைச் செலுத்தல் உற்று,
கன்மையான் தலையை ஓடிக் கருதித்தான் எடுத்து, வாயால்
அம்மையோ! என்ன வைத்தார் அவளிவள் நல்லூ ராரே.

## 164. பரிதிநியமம்

### (பருத்தியப்பர்கோயில்)

### பரிதியப்பர்–மங்களநாயகி

**சம்பந்தர் : 1.**

**வழிபட்டநாள் : 26–3–57; 12–1–66.**

தஞ்சை–நீடாமங்கலம் இருப்புப்பாதையிலுள்ள சாலியமங்கலம் இரயில் நிலையத்தினின்றும் தென்மேற்கு 8 மைல். தஞ்சாவூர்–பட்டுக்கோட்டை நெடுஞ்சாலையில் தஞ்சாவூரினின்றும் பத்து மைல்.

**சம்பந்தர்**

வாள்முக வார்குழல் வாள்நெடுங்கண் வளைத்தோள் மாதுஅஞ்ச
நீள்முகம் ஆகிய பைங்களிற்றின் உரிமேல் நிகழ்வித்து
நாள்முகம் காட்டி நலம்கவர்ந்த நாதர்க்கு இடம்போலும்
பாண்முகம் வண்டினம் பாடிஆடும் பரிதிந் நியமமே.

## 165. வெண்ணி

### வெண்ணிக்கரும்பர்–அழகியநாயகி

**சம்பந்தர் 1. அப்பர் : 2**

**வழிபட்டநாள் : 27–7–57; 20–6–65.**

தஞ்சாவூர்–நீடாமங்கலம் இருப்புப்பாதையில் உள்ள கோயில் வெண்ணி இரயில் நிலையம். நீடாமங்கலத்தினின்றும் மேற்கே 4 கல் அளவு.

**சம்பந்தர்**

கனிதனை, கனிந்தவ ரைக்கலந்து ஆட்கொள்ளும்
முனிதனை, மூவுல குக்குஒரு மூர்த்தியை,
நனிதனை, நல்லவர் தாம்தொழும் வெண்ணியில்
இனிதனை ஏத்துவர் ஏதம் இலா தாரே.

அப்பர்

கைஉலாம் மூவிலைவேல் ஏந்தி னாரும்.
கரிகாட்டில் எரியாடும் கடவு ளாரும்.
பைஉலாம் நாகம்கொண்டு ஆட்டு வாரும்.
பரவுவார் பாவங்கள் பாற்று வாரும்.
செய்உலாம் கயல்பாய வயல்கள் சூழ்ந்த
திருப்புன்கூர் மேவிய செல்வ னாரும்.
மெய்எலாம் வெண்ணீறு சண்ணித் தாரும்.
வெண்ணிஅமர்ந்து உறைகின்ற விகிர்த னாரே.

## 166. பூவனூர்

### புட்பவனேசுரர்–கற்பகவல்லி

அப்பர் : 1.

வழிபட்டநாள் : 11–1–57; 22–6–65.

நீடாமங்கலம் இரயில் நிலையத்திற்குத் தென்மேற்கு 2 கல் அளவு. மன்னார்குடிக்குப்போகும் நெடுஞ்சாலையில் பாமணி ஆற்றின் மேல்கரையில் இருக்கிறது.

அப்பர்

அனுச யப்பட்டு அதுஇது என்னாதே
கனிம னத்தொடு கண்களும் நீர்மல்கிப்
புனித னைப்பூவ னூரனைப் போற்றுவார்
மனித ரில்தலை யான மனிதரே.

## 167. பாதாளீச்சுரம்

### (பாமணி)

### சர்ப்பபுரீசுரர்–அமிருதநாயகி

சம்பந்தர் : 1.

வழிபட்டநாள் : 5–6–57; 22–6–65.

மன்னார்குடி இரயில் நிலையத்தினின்றும் வடக்கே ஒன்றரைக்கல் அளவு.

சம்பந்தர்

நீடலர் கொன்றையொடு நிரம்பா மதிசூடி வெள்ளைத்
தோடமர் காதில் நல்ல குழையான் சுடுநீற்றான்;
ஆடர வம்பெருக அனல்ஏந்திக் கைவீசி, வேதம்
பாடலி னால்இனி யான்உறை கோயில் பாதாளே.

## 168. திருக்களர்

### களர்முளைநாதர்–அமுதவல்லி

சம்பந்தர் : 1.

வழிபட்டநாள் : 12–5–56; 10–3–65.

திருத்துறைப் பூண்டியினின்றும் மேற்கே மன்னார்குடி செல்லும் சாலையில் 6½ கல் சென்று, அங்கிருந்து தெற்கே 2½ மைல் செல்ல வேண்டும். கோயில் பெரிது.

கோவிலூர் மடாலயத்தில் அதிபதியாக இருந்த வீரசேகர ஞானதேசிக சுவாமிகள் இங்குக் கோவில் பணி செய்து, இத்தலத்தில் சமாதியானார். அவருடைய அழகிய சமாதிக் கோயில் சிவன் கோவிலுக்குப் பக்கத்தில் இருக்கின்றது. அவருக்குத் "திருக்களர் ஆண்டவர்" என்று பெயர்.

சம்பந்தர்

கோல மாமயில் ஆலக் கொண்டல்கள்
சேர்பொ ழில்குல வும்வ யல்இடைச்
சேலிளம் கயலார் புனல்சூழ்ந்த திருக்களருள்
நீலம் மேவிய கண்ட னேநிமிர்
புன்ச டைப்பெரு மான்எ னப்பொலி
ஆல நீழலுளாய்! அடைந்தார்க்கு அருளாயே.

## 169. சிற்றேமம்

### (சிற்றாம்பூர்; சிற்றாய்மூர்)

### பொன்வைத்தநாதர்–அகிலாண்டநாயகி

சம்பந்தர் : 1.

வழிபட்டநாள் : 11–5–56; 21–6–65.

திருத்துறைப்பூண்டி–திருவாரூர் இரயில் பாதையில் உள்ள ஆலத்தம்பாடி இரயில் நிலையத்தினின்றும் சுமார் 5 மைல் தொலைவில் உள்ளது. குறுக்கே ஒரு ஆறு கடக்க வேண்டும்; பாலம் இல்லை.

சம்பந்தர்

நிறைவெண் திங்கள் வாள்முக மாதர் பாடநீள்சடைக்
குறைவெண் திங்கள் சூடியோர் ஆடல்மேய கொள்கையான்
சிறைவண்டு யாழ்செய் பைம்பொழில் பழனம் சூழ்சிற் றேமத்தான்
இறைவன் என்றே உலகெலாம் ஏத்த நின்ற பெருமானே.

## 170. திருஉசாத்தானம்

### (கோவிலூர்)

### மந்திரபுரீசுரர்–பெரியநாயகி

சம்பந்தர் : 1.

வழிபட்டநாள் : 2–10–55; 1–1–66.

முத்துக்பேட்டை இரயில் நிலையத்திலிருந்து 2 கல் தொலைவு. இராமன், இலக்குவன், சாம்புவான், சுக்கிரீவன், அநுமன் முதலியோர் வழிபட்ட தலம் என்ப.

சம்பந்தர்

நீரிடைத் துயின்றவன், தம்பிநீள் சாம்புவான்,
போருடைச் சுக்கிரீ வன்.அநு மான்தொழக்
காருடை நஞ்சுண்டு காத்துஅருள் செய்தஎம்
சீருடைச் சேடர்வாழ் திருஉசாத் தானமே.

# 171. இடும்பாவனம்

## சற்குணநாதர்–மங்களநாயகி

சம்பந்தர் : 1.

வழிபட்டநாள் : 1–10–55; 1–1–66

காரைக்குடி–மாயூரம் இருப்புப் பாதையில் உள்ள தில்லைவிளாகம் இரயில் நிலையத்திலிருந்து சுமார் நான்கு மைல். இத்தலத்திற்கு ஒரு மைலில் தில்லைவிளாகம் என்ற ஊரில் அழகிய நடராசர் கோயிலும், இராமர் கோயிலும் இருக்கின்றன.

சம்பந்தர்

நீறேறிய திருமேனியர் நிலவும்உலகு எல்லாம்
பாறேறிய படுவெண்தலை கையிற்பலி வாங்காக்
கூறேறிய மடவாள்ஒரு பாகம்மகிழ்வு எய்தி
ஏறேறிய இறைவர்க்குஇடம் இடும்பாவனம் இதுவே.

# 172. கடிக்குளம்

## (கற்பகனார்கோயில்)

## கற்பகேசுரர்–சௌந்தரநாயகி

சம்பந்தர் : 1.

வழிபட்டநாள் : 1–10–55; 1–1–66

இடும்பாவனம் கோயிலினின்றும் கிழக்கே ஒரு கல் அளவு.

சம்பந்தர்

குலவு கோலத்த கொடிநெடு
மாடங்கள் குழாம்பல குளிர்பொய்கை,
உலவு புள்ளினம் அன்னங்கள்
ஆலிடும் பூவைசே ரும்கூந்தல்
கலவை சேர்தரு கண்ணியன்
கடிக்குளத்து உறையும்கற் பகத்தைச்சீர்
நிலவி நின்றுநின்று ஏத்துவார்
மேல்வினை நிற்ககில் லாதானே.

## 173. தண்டலைநீள்நெறி

### (தண்டலைச்சேரி)

### நீள்நெறிநாதர்–ஞானாம்பிகை

சம்பந்தர் : 1.

வழிபட்டநாள் : 4–9–56; 10–3–65.

திருத்துறைப்பூண்டி இரயில் நிலையத்தினின்று 3 கல் தொலைவு. மணலி இரயில் நிலையத்திற்கு அண்மையில் இருக்கிறது.

அரிவாட்டாய நாயனார் வீடு பேறு அடைந்த தலம். அவர் பிறந்த கண்ணமங்கலம் இத்தலத்திற்குக் கிழக்கே அரை மைலில் இருக்கிறது. இத்தலத்திற்குப் படிக்காசுப் புலவர் "தண்டலையார் சதகம்" என ஒரு நூல் இயற்றியுள்ளார். கோச்செங்கட் சோழன் வழிபட்ட தலம்.

சம்பந்தர்

கருவர் உந்தியின் நான்முகன் கண்ணன்என்று
இருவ ரும்தெரி யாஒரு வன்இடம்
செருவ ருந்திய செம்பியன் கோச்செங்கண்
நிருபர் தண்டலை நீணெறி காண்மினே.

## 174. கோட்டூர்

### கொழுந்தீசர்–தேன்மொழிப்பாவை

சம்பந்தர் : 1.

வழிபட்டநாள் : 27–7–57; 10–3–65.

திருத்துறைப்பூண்டி இரயில் நிலையத்திலிருந்து வடமேற்கு 9 கல் அளவு. கோட்டூரில் அடுத்தடுத்து இரண்டு சிவன் கோவில்கள் இருக்கின்றன. மேற்கே உள்ள திருக்கோயில் தேவாரம் பெற்றது. கிழக்கே உள்ள திருக்கோயில் திருவிசைப்பாப் பெற்றது. அக்கோயிலைக் கருவூர்த் தேவர்

"கீழ்க்கோட்டூர் மணிஅம்பலம்" என்று பாடுவர். இத்தலத்தில் தேவாரக்கோயில் மிகப் பெரியது; அழகிய அமைப்பு உடையது. கீழ்க்கோட்டூர் மணிஅம்பலக் கோயில் பழைய சிறிய கோயில்.

சம்பந்தர்

உருகு வார்உள்ளத்து ஒண்சுடர்
 தனக்குஎன்றும் அன்பராம் அடியார்கள்
பருகும் ஆரமுத எனநின்று
 பரிவொடு பத்திசெய்து எத்திசையும்.
குருகு வாழ்வயல் சூழ்தரு
 கோட்டூர்நற் கொழுந்தே!என்று எழுவார்கள்
அருகு சேர்தரு வினைகளும்
 அகலும்போய் அவன்அருள் பெறலாமே.

கருவூர்த்தேவர்

திருநுதல் விழியும், பவளவாய் இதழும்,
 திலகமும் உடையவன் சடைமேல்
புரிதரு மலரின் தாதுநின்று ஊதப்
 போய்வரும் தும்பிகாள் இங்கே
கிரிதவழ் முகிலின் கீழ்த்தவழ் மாடம்
 கெழுவுகம் பலைசெய்கீழ்க் கோட்டூர்
வருதிறல் மணிஅம் பலவனைக் கண்டுஎன்
 மனத்தையும் கொண்டுபோ துமினே.

## 175. திருவெண்துறை

### (திருவண்டுதுறை)

### வெண்துறைநாதர்–வேல்நெடுங்கண்ணி

**சம்பந்தர் : 1.**

**வழிபட்டநாள் : 27–7–57; 22–6–65.**

மன்னார்குடி இரயில் நிலையத்தினின்றும் கிழக்கு 6 கல் தொலைவு. கோட்டூருக்கு வட மேற்கு 5 கல்.

சம்பந்தர்

பாரிய லும்பலி யான்படி யார்க்கும் அறிவரியான்
சீரிய லும்மலை யாள்ஒரு பாகமும் சேரவைத்தான்
போரிய லும்புர மூன்றுடன் பொன்மலை யேசிலையா
வீரிய நின்றுசெய் தான்விரும் பும்இடம் வெண்துறையே.

## 176. கொள்ளம்பூதூர்

### வில்வவனேசுரர்–சௌந்தராம்பிகை

சம்பந்தர் : 1.

வழிபட்டநாள் : 12–8–57; 22–6–65.

நீடாமங்கலம் இரயில் நிலையத்திற்கு வடகிழக்கு 6 கல் தொலைவு. வெட்டாற்றின் வடகரை. கொரடாச்சேரிக்கு வடக்கே மூன்று மைல் அளவு.

சம்பந்தர்

ஓடம்வந்து அணையும் கொள்ளம் பூதூர்
ஆடல் பேணிய அடிகளை உள்கச்
செல்ல வுந்துக சிந்தை யார்தொழ
நல்கு மாறுஅருள் நம்பனே.

## 177. திருவிடைவாய்

### விடைவாய் அப்பர்–உமையம்மை

சம்பந்தர் : 1.

வழிபட்டநாள் : 12–8–57; 22–6–65.

இது புதிதாகக் கண்டுபிடிக்கப்பெற்ற தேவாரத் தலம். ஒரு மேட்டை வெட்டிப் பிரிக்கும்போது, உள்ளே கோயில் மூடியிருந்ததாகவும், தோண்டிப் பார்க்கும்போது கோயிலுக்

குள் அத்தலத்தைப்பற்றிய ஞானசம்பந்தர் தேவாரம் கல்வெட்டில் இருந்ததாகவும் கூறப்பெறுகிறது. இப்போது இக்கோயில் செப்பனிடப் பெற்றிருக்கிறது. முன்னே தேவாரத்தலம் 274 ஆக இருந்தது. இத்தலத்தைச் சேர்த்து இன்று 275 ஆக இருக்கின்றது. இத்தலம் 1917 இல் கண்டுபிடிக்கப்பட்டது. இத்தலத்தை ஐயடிகள் காடவர்கோன் பதினோராம் திருமுறையில் க்ஷேத்திரத் திருவெண்பாவில் பாடியிருக்கின்றார். "பாண்டவாய்த் தென்இடைவாய்" என்று அப்பாடலில் வருகின்றது. பாண்டவ ஆறு என்ற ஆற்றின் கரையில்தான் கோயில் இருக்கிறது.

கொரடாச்சேரி இரயில் நிலையத்தினின்றும் தெற்கே, கூத்தாநல்லூருக்குப் போகும் சாலையில் ஒரு மைல் சென்று, பாண்டவாறு என்னும் ஆற்றின் பாலத்தைக் கடந்து, தென் கரையோரம்சிறிது தூரம்சென்றால் இத்தலத்தை அடையலாம். பக்கத்தில் பாவாக்குடி என்னும் கிராமம் இருக்கிறது.

**சம்பந்தர்**

*எண்ணா தஅரக் கன்உரத் தைநெரித்து.*
*பண்ணார் தருபா டல்உகந்து அவற்பற்றாம்*
*கண்ணார் விழவில் கடிவீ திகள்தோறும்*
*விண்ணோர் களும்வந்து இறைஞ்சும் விடைவாயே.*

**ஐயடிகள் காடவர்கோன் நாயனார்**

மாண்டுவாய் அங்காவா முன்னம் மடநெஞ்சே!
வேண்டுவா யாகி விரைந்துஒல்லைப்-பாண்டவாய்த்
தென்னிடைவாய் மேய சிவனார் திருநாமம்
நின்னிடைவாய் வைத்து நினை.

## 178. பேரெயில்

### (ஓகைப்பேரையூர்)

### சகதீசுரர்-சகந்நாயகி

**அப்பர் : 1.**

**வழிபட்டநாள் : 4-9-57; 21-6-65.**

காரைக்குடி-மாயூரம் இருப்புப் பாதையில் உள்ள மாவூர் ரோடு என்னும் இரயில் நிலையத்தினின்றும், மேற்கே 5 கல்

தொலைவிலுள்ள வடபாதிமங்கலத்தை அடைந்தது அங்கிருந்து ஒரு மைல் வடக்கே சென்றால் இத்தலத்தை அடையலாம்.

**அப்பர்**

உழைத்தும் துள்ளியும் உள்ளத்து ளேஉரு
இழைத்தும் எந்தை பிரான்என்று இராப்பகல்
அழைக்கும் அன்பின ராய அடியவர்
பிழைப்பு நீக்குவர் பேரெயி லாளரே.

## 179. திருக்கொள்ளிக்காடு

### அக்கினீசுரர்–பஞ்சினுமெல்லடியாள்

**சம்பந்தர் : 1.**

**வழிபட்டநாள் : 27–7–57; 22–6–65.**

காரைக்குடி–மாயூரம் இருப்புப் பாதையில் உள்ள திருநெல்லிக்காவல் இரயில் நிலையத்திலிருந்து தென்மேற்கு 2½ கல் தொலைவு. வழியில் ஒரு மைலில் திருத்தெங்கூர் என்னும் தலம் இருக்கிறது.

**சம்பந்தர்**

பஞ்சுதோய் மெல்லடிப் பாவை யாளொடும்
மஞ்சுதோய் கயிலையுள் மகிழ்வர் நாள்தொறும்
வெஞ்சின மருப்பொடு விரைய வந்துஅடை
குஞ்சரம் உரித்தனர் கொள்ளிக் காடரே.

## 180. திருத்தெங்கூர்

### வெள்ளிமலைநாதர்–பெரியநாயகி

**சம்பந்தர் : 1.**

**வழிபட்டநாள் : 11–5–56; 21–6–65.**

காரைக்குடி–மாயூரம் இருப்புப் பாதையிலுள்ள திருநெல்லிக்காவல் இரயில் நிலையத்திலிருந்து தென்மேற்கு ஒரு மைல்.

சம்பந்தர்

சுழித்த வார்புனல் கங்கை சூடியோர் காலனைக் காலால்
தெழித்து வானவர் நடுங்கச் செற்றவர் சிறையணி பறவை
கழித்த வெண்தலை ஏந்திக் காமனது உடல்பொடி யாக
விழித்த வர்திருத் தெங்கூர் வெள்ளி அம்குன்றமர்ந் தாரே.

# 181. திருநெல்லிக்கா

## நெல்லிவனநார்–மங்களநாயகி

சம்பந்தர் : 1.
வழிபட்டநாள் : 10–5–56; 12–3–65.

காரைக்குடி–மாயூரம் இருப்புப் பாதையில் உள்ள திருநெல்லிக்காவல் இரயில் நிலையம். திருவாரூருக்குத் தெற்கே 8 கல் தொலைவு.

சம்பந்தர்

அறத்தால் உயிர்கா வல்அமர்ந்து அருளி
மற்றதால் மதில்மூன் றுடன்மாண்பு அழித்த
திறத்தால் தெரிவெய் தியதீ வெண்திங்கள்
நிறத்தான் நெல்லிக் காவுள் நிலாயவனே.

# 182. திருநாட்டியத்தான்குடி

## மாணிக்கவண்ணர்–மலைமங்கை

சுந்தரர் : 1.
வழிபட்ட நாள் : 6–6–57; 12–3–65.

காரைக்குடி– மாயூரம் இருப்புப் பாதையிலுள்ள மாவூர் ரோடு இரயில் நிலையத்தினின்றும் 3½ கல் தொலைவு. திருவாருக்குத் தெற்கு 6 கல் அளவு. இது கோட்புலி நாயனார் பிறந்த தலம். கோட்புலியாரைச் சுந்தரர் தேவாரத்தில் பாடி

யுள்ளார். கோட்புலி நாயனார் உருவம் கோயிலில் இருக்கின்றது.

**சுந்தரர்**

அஞ்சா தேஉமக்கு ஆட்செய வல்வேன்;
யாதினுக்கு ஆசைப் படுகேன்;
பஞ்சேர் மெல்லடி மாமலை மங்கை
பங்கா! எம்பர மேட்டி!
மஞ்சேர் வெண்மதி செஞ்சடை வைத்த
மணியே! மாணிக்க வண்ணா!
நஞ்சேர் கண்டா! வெண்தலை ஏந்தி
நாட்டியத் தான்குடி நம்பீ!

**சேக்கிழார்**

நலம்பெருகும் சோணாட்டு நாட்டியத்தான் குடிவேளாண்
குலம்பெருக வந்துஉதித்தார் கோட்புலியார் எனும்பெயரார்
தலம்பெருகும் புகழ்வளவர் தந்திரியா ராய்வேற்றுப்
புலம்பெருகத் துயர்விளைப்பப் போர்விளைத்துப்புகழ்விளைப்பார்

## 183. திருக்காறாயில்

### (திருக்காறைவாசல்)

### கண்ணாயிரநாதர்–கைலாயநாயகி

சம்பந்தர் : 1.

வழிபட்டநாள் : 4–9–56; 9–3–65.

திருவாரூர்–திருத்துறைப்பூண்டி நெடுஞ்சாலையில். திருவாரூரினின்றும் 8 மைல். சப்த விடங்கத் தலங்களுள் ஒன்று.

சம்பந்தர்

விண்ணானே! விண்ணவர் ஏத்தி விரும்புசீர்
மண்ணானே! மண்ணிடை வாழும் உயிர்க்கெல்லாம்
கண்ணானே! கடிபொழில் சூழ்திருக் காறாயில்
எண்ணானே! என்பவர் ஏதம் இலாதாரே.

## 184. கன்றாப்பூர்

### நடுதறிநாதர்–மாதுஉமை

அப்பர் : 1.

வழிபட்டநாள் : 4–9–56; 9–3–65.

காரைக்குடி–மாயூரம் இருப்புப் பாதையில் உள்ள மாவூர் ரோடு இரயில் நிலையத்திலிருந்து 6 கல் தொலைவு.

அப்பர்

விடிவதுமே வெண்ணீற்றை மெய்யிற் பூசி.
வெளுத்துஅமைந்த கோவணமும் தற்று.
செடியுடைய வல்வினைநோய் தீர்ப்பாய் என்றும்.
செல்கதிக்கு வழிகாட்டும் சிவனே என்றும்.
துடியனைய இடைமடவாள் பங்கா என்றும்.
சுடலைதனில் நடமாடும் சோதி என்றும்.
கடிமலர் தூய்த் தொழும்அடியார் நெஞ்சின் உள்ளே
கன்றாப்பூர் நடுதறியைக் காண லாமே.

## 185. வலிவலம்

### மனத்துணைநாதர்–வாளையங்கண்ணி

சம்பந்தர் : 2. அப்பர் : 1. சுந்தரர் : 1.

வழிபட்டநாள் : 4–9–56; 9–3–65.

திருவாரூருக்குத் தென்கிழக்கு 6 கல் தொலைவு. இதற்கு

வடக்கு இரண்டு மைலில் கன்றாப்பூர் இருக்கிறது. வடகிழக்கில் அண்மையில் திருவிசைப்பாப் பெற்ற சாட்டியக்குடி என்னும் தலம் இருக்கிறது.

**சம்பந்தர்**

பிடியதன் உருஉமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடும் அவர்இடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை இறையே.

**அப்பர்**

நல்லான்கண்; நான்மறைகள் ஆயி னான்காண்;
நம்பன்காண்; நணுகாதார் புரமூன்று எய்த.
வில்லான்காண்;விண்ணவர்க்கு மேலா னான்காண்;
மெல்லியலாள் பாகன்காண்;வேத வேள்விச்
சொல்லான்காண்; சுடர்மூன்றும் ஆயி னான்காண்;
தொண்டாகிப் பணிவார்க்குத் தொல்வான் ஈய
வல்லான்காண்; வானவர்கள் வணங்கி ஏத்தும்
வலிவலத்தான் காண்;அவன்என் மனத்து ளானே.

**சுந்தரர்**

நல்இசை ஞானசம் பந்தனும், நாவினுக்கு
அரசனும் பாடிய நற்றமிழ் மாலை
சொல்லிய வேசொல்லி ஏத்துஉகப் பானை,
தொண்ட னேன்அறி யாமை அறிந்து
கல்இ யல்மனத் தைக்கசி வித்துக்
கழலடி காட்டிஎன் களைகளை அறுக்கும்
வல்லியல் வானவர் வணங்கநின் றானை,
வலிவ லம்தனில் வந்துகண் டேனே.

## 186. கைச்சினம்

### கைச்சினநாதர்–வெள்வளைநாயகி

**சம்பந்தர் : 1.**

**வழிபட்டநாள் : 11–5–56; 9–3–65.**

காரைக்குடி – மாயூரம் இருப்புப் பாதையில் உள்ள

திருநெல்லிக்கா இரயில் நிலையத்திற்குக் கிழக்கே 2 கல் அளவு. திருத்துறைப்பூண்டி–திருவாரூர் நெடுஞ்சாலையில், திருத்துறைப்பூண்டியினின்றும் 7 கல் அளவு.

சம்பந்தர்

வரிஅரவே நாணாக மால்வரையே வில்லாக
எரிகணையால் முப்புரங்கள் எய்துகந்த எம்பெருமான்
பொரிசுடலை ஈமப் புறங்காட்டான் போர்த்ததோர்
கரிஉரியான் மேவிஉறை கோயில் கைச்சினமே.

# 187. திருக்கோளிலி

## (குவளை)

## கோளிலிநாதர்–வண்டமர்பூங்குழலி

சம்பந்தர் 1. அப்பர் 2. சுந்தரர் 1.

வழிபட்டநாள் : 5–9–56; 9–3–65.

கைச்சினத்திற்குக் கிழக்கே 4 கல் அளவு. இது சப்த விடங்கத் தலங்களுள் ஒன்று. இத்தலத்துக்கு முக்கால் மைல் அளவில் வைப்புத்தலமாகிய குண்டையூர் இருக்கிறது. எட்டிக்குடி என்னும் சிறந்த முருகனுக்கு உரியதலம் இங்கிருந்து ஒன்றரைக் கல் அளவு.

சம்பந்தர்

நாளாய போகாமே நஞ்சுஅணியும் கண்டனுக்கே
ஆளாய அன்புசெய்வாம் மடநெஞ்சே! அரன்நாமம்
கேளாய்!நம் கிளைகிளைக்கும் கேடுபடாத் திறம்அருளிக்
கோளாய நீக்கும்அவன் கோளிலிஎம் பெருமானே.

அப்பர்

விண்ணு ளார்தொழுது ஏத்தும் விளக்கினை,
மண்ணு ளார்வினை தீர்க்கும் மருந்தினை,
பண்ணு ளார்பயி லும்திருக் கோளிலி
அண்ண லார்அடி யேதொழுது உய்ம்மினே.

சுந்தரர்

நீள நினைந்துஅடி யேன்உமை நித்தலும் கைதொழுவேன்
வாளன கண்மட வாள்அவள் வாடி வருந்தாமே
கோளிலி எம்பெருமான் குண்டை யூர்சிலநெல்லுப்பெற்றேன்
ஆளிலைஃஎம்பெரு மான்!அவை அட்டித் தரப்பணியே.

## 188. திருவாய்மூர்

### வாய்மூர்நாதர்–பாலினும்நன்மொழியாள்

சம்பந்தர் 1. அப்பர் 2.

வழிபட்டநாள் : 5–9–56; 9–3–65.

கோளிலியின்றும் தென்கிழக்கே 3 கல். வழியில் எட்டிக்குடி இருக்கிறது. இது சப்த விடங்கத் தலங்களுள் ஒன்று.

சம்பந்தர்

வெங்தழல் வடிவினர்; பொடிப்பூசி
விரிதரு கோவண உடைமேல்ஓர்
பந்தம்செய்து அரவுஅசைத்து ஒலிபாடிப்
பலபல கடைதொறும் பலிதேர்வார்;
சிந்தனை புகுந்துஎனக்கு அருள்நல்கிச்
செஞ்சுடர் வண்ணர்தம் அடிபரவ
வந்தனை பலசெய இவராள்நீர்
வாய்மூர் அடிகள் வருவாரே.

அப்பர்

திறக்கப் பாடிய என்னினும் செந்தமிழ்
உறைப்புப் பாடி அடைப்பித்தார் உந்நின்றார்
மறைக்க வல்லரோ தம்மைத் திருவாய்மூர்ப்
பிறைக்கொள் செஞ்சடை யார்இவர் பித்தரே.

# 189. திருமறைக்காடு

## (வேதாரணியம்)

### மறைக்காட்டீசர்–யாழைப்பழித்தமொழியாள்

சம்பந்தர் : 4. அப்பர் : 5. சுந்தரர் :1.

வழிபட்டநாள் : 26–7–57; 10–3–65.

இரயில் நிலையம். திருத்துறைப்பூண்டியினின்றும் தென் கிழக்கு 22 மைல். சப்த விடங்கத் தலங்களுள் ஒன்று. இது வேதங்கள் வழிபட்ட தலம். அப்பர் சுவாமிகளும், சம்பந்த மூர்த்திகளும் மறைக் கதவைத் திறக்கவும், அடைக்கவும் தேவாரம் பாடிய தலம். சுந்தரமூர்த்திகள் சேரமான் பெருமாளுடன் சென்று வணங்கிய பதி. கடற்கரை நகரம்.

"தூண்டு சுடரனைய சோதி கண்டாய்" என அப்பர் சுவாமிகள் பாடியதற்கு ஏற்ப, விளக்குகளின் பேரொளியை இக்கோவிலில் இன்றும் காணலாம். கோயில் மிகப் பெரியது. மறைக்காட்டு நாதருக்கு யாழ்ப்பாணத்துச் சின்னத்தம்பி நாவலர் என்னும் புலவர் "மறைசை அந்தாதி" என்னும் சிறந்த திரிபு அந்தாதி ஒன்றைப் பாடினார்.

மதுரைமாநகருக்குத் திருவிளையாடல் புராணம் பாடிய கல்விக்கடல் பரஞ்சோதி முனிவர் பிறந்த சிறந்தபதி இது.

பின்னாளில் சைவம் வளர்த்த பெரியார் தாயுமான அடிகள் பிறந்து அருளியது இத்தலத்திலேயே.

### சம்பந்தர்

மாலைமதி வாள்அரவு கொன்றைமலர்
 துன்றுசடை நின்று சுழலக்
காலையில்எ ழுந்தகதிர் தாரகைம-
 -டங்கஅனல் ஆடும் அரனூர்
சோலையின்ம ரங்கள்தொறும் மிண்டிஇன
 வண்டுமது உண்டி சைசெய
வேலைஒலி சங்குதிரை வங்கசுற-
 -வம்கொணரும் வேத வனமே.

### அப்பர்

மூரி முழங்குஒலிநீர் ஆனான் கண்டாய்;
 முழுத்தழல்போல் மேனி முதல்வன் கண்டாய்;
ஏரி நிறைந்தனைய செல்வன் கண்டாய்;
 இன்அடியார்க்கு இன்பம் விளைப்பான் கண்டாய்;
ஆரியன் கண்டாய்; தமிழன் கண்டாய்;
 அண்ணா மலைஉறைஎம் அண்ணல் கண்டாய்;
வாரி மதகளிறே போல்வான் கண்டாய்;
 மறைக்காட்டு உறையும் மணாளன் தானே.

### சுந்தரர்

யாழைப்பழித்து அன்னமொழி மங்கைஒரு பங்கன்
பேழைச்சடை முடிமேல்பிறை வைத்தான்இடம் பேணில்;
தாழைப்பொழில் ஊடேசென்று பூழைத்தலை நுழைந்து
வாழைக்கனி கூழைக்குரங்கு உண்ணும்மறைக் காடே.

### சேக்கிழார்

மன்றல் விரவு மலர்ப்புன்னை
 மணம்சூழ் சோலை உப்பளத்தின்
முன்றில் தோறும் சிறுமடவார்
 முத்தம் கொழிக்கும் மறைக்காட்டுக்
குன்ற வில்லி யார்மகிழ்ந்த
 கோயில் புகுந்து வலம்கொண்டு
சென்று சேர்ந்தார் தென்புகலிக்
 கோவும். அரசும் திருமுன்பு.

சின்னத்தம்பி நாவலர்

செந்தாது இயல்மணிப் பூண்புலி
 யூரர்க்குச் சேர்ந்து அளித்த
சிந்தாத் தியானம்செய் வில்லவ
 ராயன் திருப்புதல்வன்.
நந்தா வளம்திகழ் நல்லைச்சின்
 னத்தம்பி நாவலன்.சீர்
அந்தாதி மாலையை வேதஅடவி
 ஈசற்கு அணிந்தனனே.

—மறைசை அந்தாதி

## 190. அகத்தியான்பள்ளி

### அகத்தீசுரர்—பாகம்பிரியாள்

சம்பந்தர் : 1.

வழிபட்டநாள் : 26–7–57; 10–3–65.

வேதாரணியத்திற்குத் தெற்கு ஒரு மைல். அகத்தியர் வழிபட்ட தலம் என்ப. அகத்தியர் திருவுருவம் கோயிலில் இருக்கின்றது

சம்பந்தர்

காய்ந்ததும் அன்று காமனை நெற்றிக் கண்ணினால்
பாய்ந்தது வும்கழல் காலனைப் பண்ணின் நான்மறை
ஆய்ந்தது வும்பொழில் சூழ்அ கத்தியான் பள்ளியான்
ஏய்ந்தது வும்இமவான்ம கள்ஒரு பாகமே.

# 191. திருக்கோடி

## (குழகர்கோயில்)

## அமிர்தகடேசுரர்-மையார்தடங்கண்ணி

சுந்தரர் : 1.

வழிபட்டநாள் : 26-7-57; 10-3-65.

வேதாரணித்திற்குத் தெற்கே ஆறுகல் அளவு. வழியில் ஒரு மைலில் அகத்தியான்பள்ளி உள்ளது. இத்தலத்திற்கு ஒரு மைல் அளவில் கோடிக்கரை என்னும் கடற்கரை இருக்கின்றது.

சுந்தரர்

கடிதாய்க் கடற்காற்று வந்துஎற்றக் கரைமேல்
குடிதான் அயலே இருந்தால் குற்றம்ஆமோ
கொடியேன் கண்கள்கண் டனக்கோடிக் குழகீர்!
அடிகேள் உமக்குஆர் துணையாக இருந்திரே.

# 2. ஈழநாடு

(2 தலங்கள்)

## 192. திருக்கோணமலை

### கோணேசுரர்–மாதுஉமையாள்

சம்பந்தர் : 1.
வழிபட்டநாள் :

இலங்கைத் தீவில் கிழக் கடற்கரையில் இத்தலம் இருக்கிறது. இரயில் நிலையம். இலங்கையிலுள்ள தேவாரத் தலங்கள் இரண்டினுள் இத்தலம் ஒன்று.

சம்பந்தர்

தாயினும் நல்ல தலைவர்என்று அடியார்
தம்அடி போற்றிஇசைப் பார்கள்
வாயினும் மனத்தும் மருவிநின்று அகலா
மாண்பினர் காண்பல வேடர்,
நோயிலும் பிணியும் தொழிலர்பால் நீக்கி
நுழைதரு நூலினர், ஞாலம்
கோயிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்த
கோணமா மலைஅமர்ந் தாரே.

## 193. திருக்கேதீச்சுரம்

### கேதீசுரர்–கௌரியம்பிகை

சம்பந்தர் : 1. சுந்தரர் : 1.
வழிபட்டநாள் :

இலங்கைத் தீவில் உள்ள இரண்டாவது தேவாரத்தலம். இலங்கை அரசாங்க இரயில் நிலையமான தலைமன்னாருக்குக் கிழக்கே 5கல் தொலைவிலுள்ள பாலாவி என்ற ஆற்றின் கரையில் மாதோட்டம் என்ற இடத்தில் இக் கோயில் இருக்கின்றது.

### சம்பந்தர்

பெண்ணொர் பாகத்தார்;பிறைதவழ்
    சடையினர்; அறைகழல் சிலம்புஆர்க்க,
சுண்ணம் ஆதரித்து ஆடுவர்;
    பாடுவர்; அகம்தொறும் இடுபிச்சைக்கு
உண்ண லாவதோர் இச்சையின்
    உழல்பவர்; உயர்தரு மாதோட்டத்து
அண்ணல் நண்ணுகே தீச்சரம்
    அடைபவர்க்கு அருவினை அடையாவே.

### சுந்தரர்

வெய்யவினை யாய்அவ்அடி யார்மேல் ஒழித்துஅருளி
வையம்மலி கின்றகடல் மாதோட்ட நன்னகரில்
பையேர்இடை மடவாளொடு பாலாவியின் கரைமேல்
செய்யசடை முடியான்திருக் கேதீச்சரத் தானே.

# 3. பாண்டி நாடு

(14 தலங்கள்)

# 194. திருஆலவாய்

## (மதுரை)

## சொக்கலிங்கம்;–மீனாட்சி;

## சோமசுந்தரம்–அங்கயற்கண்ணி

**சம்பந்தர் : 9. அப்பர் : 2.**

**வழிபட்டநாள் : 10–4–56; 24–8–65.**

இரயில் நிலையம். பாண்டி நாட்டின் தலைநகரம். கண்ணுதற் பெருங்கடவுள் சங்கப் புலவர்களோடு அமர்ந்து தமிழ் ஆராய்ந்த தனிச்சிறப்புடைய பெருநகரம். இறைவன் அறுபத்து நான்கு திருவிளையாடல்கள் நிகழ்த்திய பழம்பதி. மணிவாசகப் பெருமான் பாண்டிய மன்னனுக்கு அமைச்சராக இருந்து அரசாண்ட அரும்பதி. மங்கையர்க்கரசியார் வாழ்ந்த நகரம் குலச்சிறையார் என்ற அமைச்சரும், மங்கையர்க்கரசியாரும் மன்னனைத் திருத்தி, "நின்றசீர் நெடுமாற நாயனார்" ஆக்கிய நீள்பதி.

ஆலவாயுடையார், சேரமான் பெருமாளுக்குத் திருமுகப் பாசுரம் கொடுத்த திருத்தலம். இத்தலத்திற்குப் பெரும்பற்றப் புலியூர் நம்பி என்ற புலவர் "திருவாலவாயுடையார் திருவிளையாடல்" என்ற புராணம் பாடினார். அவருக்குப் பின்வந்த பரஞ்சோதி முனிவர், திருவிளையாடற் புராணம் என்னும் பெயரால், தமது அமுத கவிகளால், மதுரைமா நகரத்தை வாய்கொள்ளாமல் பாடி மகிழ்ந்தார்.

திருவாசகத்தில் இத்தலம் ஒன்பது இடங்களில் பாராட்டப் பெறுகிறது. 'கலிமதுரை' என்று அன்று திருவாசகம் சொன்னதற்கு ஏற்ப, இன்றும் ஆரவாரம் நிறைந்த மதுரையாகவே காட்சியளிப்பதைக் காண்கின்றோம்.

குமரகுருபர அடிகள் மதுரைமீனாட்சிக்கு அரிய பிள்ளைத் தமிழ் பாடினார். போரூர்ச் சிதம்பர சுவாமிகள் மீனாட்சி கலிவெண்பாச் செய்தார்.

இத்தலத்தைத் தேவார ஆசிரியருள் ஒருவராகிய சுந்தர மூர்த்திகள் பாடியிருக்கத்தான் வேண்டும். மறைந்தவற்றுள்

அவை போயிருக்கலாம். அவருக்கு முன்னே இருந்த சம்பந்தரும், அப்பரும் பெரிதும் பாராட்டிய மதுரையை, பல்லாற்றானும் சிறந்து விளங்கிய மதுரையை, பன்னிரண்டு மைல் தொலைவிலுள்ள திருப்பூவணத்துக்கும் மிக அணித்தேயுள்ள திருப்பரங்குன்றத்திற்கும் வந்து பாடிய சுந்தரர், பாடாது ஒழிந்தார் என்று கூறுவது பொருந்தாது.

சம்பந்தர்

மங்கையர்க்கு அரசி, வளவர்கோன் பாவை,
வரிவளைக் கைம்மட மானி
பங்கயச் செல்வி, பாண்டிமா தேவி,
பணிசெய்து நாள்தொறும் பரவ,
பொங்குஅழல் உருவன் பூதநா யகன்,நால்
வேதமும், பொருள்களும் அருளி,
அங்கயற் கண்ணி தன்னொடும் அமர்ந்த
ஆலவாய் ஆவதும் இதுவே.

அப்பர்

முளைத்தானை, எல்லார்க்கும் முன்னே தோன்றி
முதிரும் சடைமுடிமேல் முகிழ்வெண் திங்கள்
வளைத்தானை, வல்அசுரர் புரங்கள் மூன்றும்
வரைசிலையா வாசுகிமா நாணாக் கோத்து,
துளைத்தானைச் சுடுசரத்தால், துவள நீறா,
தூமுத்த வெண்முறுவல் உமையோடு ஆடி,
திளைத்தானைத் தென்கூடல் திருஆ லவ்வாய்ச்
சிவன்அடியே சிந்திக்கப் பெற்றேன் நானே.

மணிவாசகர்

பண்சுமந்த பாடல் பரிசு படைத்தருளும்
பெண்சுமந்த பாகத்தன்;பெம்மான்; பெருந்துறையான்;
விண்சுமந்த கீர்த்தி வியன்மண் டலத்துஈசன்,
கண்சுமந்த நெற்றிக் கடவுள்; கலிமதுரை
மண்சுமந்து கூலிகொண்டு, அக்கோவால் மொத்துண்டு
புண்சுமந்த பொன்மேனி, பாடுதும்காண் அம்மானாய்!

### திருஆலவாயுடையார்

மதிமலி புரிசை மாடக் கூடல்
பதிமிசை நிலவு பால்நிற வரிச்சிறகு
அன்னம் பயில்பொழில் ஆலவாயில்
மன்னிய சிவன்யான் மொழிதரு மாற்றம்.
பருவக் கொண்மூப் படிஎனப் பாவலர்க்கு
உரிமையின் உரிமையின் உதவி ஒளிதிகழ்
குருமா மதிபுரை குலவிய குடைக்கீழ்ச்
செருமா உகைக்கும் சேரலன் காண்க!
பண்பால் யாழ்பயில் பாண பத்திரன்
தன்போல் என்பால் அன்பன். தன்பால்
காண்பது கருதிப் போந்தனன்.
மாண்பொருள் கொடுத்து வரவிடுப் பதுவே.

### சேக்கிழார்

மும்மைப் புவனங் களின்மிக்கதன் றேஅம் மூதூர்
மெய்ம்மைப் பொருளாம் தமிழ்நூலின் விளங்கு வாய்மைச்
செம்மைப் பொருளும் தருவார்திரு ஆல வாயில்
எம்மைப் பவம்தீர்ப் பவர்சங்கம் இருந்தது என்றால்.

### வில்லிபுத்தூர் ஆழ்வார்

வளவன்பதி முதலாக வயங்கும்பதி தோறும்
துவளம்கமழ் அதிசிதள தோயங்கள் படிந்தே
இளவண்தமிழ் எழுதுஏடுமுன் எதிர்ஏறிய துறைசூழ்
தளவம்கமழ் புறவம்செறி. தண்கூடல் புகுந்தான்.

### பரஞ்சோதிமுனிவர்

திருவால வாய்க்குஇணையாம் ஒருதலமும்
தெய்வமணம் செய்யப் பூத்த
மருவார்பொற் கமலம்நிகர் தீர்த்தமும்அத்
தீர்த்தத்தின் மருங்கின் ஞான
உருவாகி உறைசோம சுந்தரன்போல்
இகபரம்தந்து உலவா வீடு
தருவானும் முப்புவனத் தினும்இல்லை
உண்மைஇது சாற்றின் மன்னோ.

## 195. திருஆப்பனூர்
### (திருஆப்புடையார்கோயில்)
### ஆப்புடையார்-குரவம்கமழ்குழலி

**சம்பந்தர் : 1.**

**வழிபட்டநாள் : 8-4-56; 26-8-65.**

மதுரைப் பெரிய கோயிலினின்றும் வடகிழக்கே ஒரு மைலில் இருக்கின்றது. அணித்தே வையை ஆறு ஓடுகின்றது.

**சம்பந்தர்**

இயலும் விடைஏறி எரிகொள் மழுவீசிக்
கயலின் இணைக்கண்ணாள் ஒருபால் கலந்துஆட.
இயலும் இசையானை எழில்ஆப்ப னூரானைப்
பயிலும் மனமுடையார் வினைப்பற்று அறுப்பாரே.

## 196. திருப்பரங்குன்றம்
### பரங்கிரிநாதர்-ஆவுடைநாயகி

**சம்பந்தர் 1. சுந்தரர் 1.**

**வழிபட்டநாள் : 10-4-56; 26-8-65.**

இரயில் நிலையம். மதுரைக்குத் தென்மேற்கே 4 கல் அளவு. முருகக் கடவுளுக்குரிய ஆறுபடை வீடுகளுள் ஒன்று. முருகன் தெய்வானையை மணம் புரிந்த தலம் இஃது. எனவே முருகன் பின்னே மணந்த வள்ளியம்மை உருவம் இங்கே இல்லை. இத்தலத்திற்கு நிரம்பு அழகிய தேசிகர் என்ற சைவப் புலவர் புராணம் பாடியுள்ளார்.

**சம்பந்தர்**

மைத்தகு மேனி வாள்அரக் கன்தன் மகுடங்கள்
பத்தின திண்தோள் இருபதும் செற்றான் பரங்குன்றைச்
சித்தமது ஒன்றிச் செய்கழல் உன்னிச் சிவன்என்று
நித்தலும் ஏத்தத் தொல்வினை நம்மேல் நில்லாவே.

சுந்தரர்

அடிகேள் உமக்குஆட் செயஅஞ் சுதும்என்று
அமரர் பெருமானை ஆரூரன் அஞ்சி.
முடியால் உலகுஆண்ட மூவேந்தர் முன்னே
மொழிந்து.ஆறும் ஓர்நான்கும் ஓர்ஒன் றினையும்
படியா இவைகற்று வல்ல அடியார்
பரம்குன்ற மேய பரமன் அடிக்கே
குடியாகி வானோர்க்கும் ஓர்கோவும் ஆகிக்
குலவேந்த ராய்விண் முழுதுஆள் பவரே.

சேக்கிழார்

தேன்நிலவு பொழில்மதுரைப் புறத்துப் போந்த
தென்னவனார் தேவியார் அமைச்சர் சிந்தை
ஊன்நெகிழும் படிஅழிந்துஅங்கு ஒழுகு கண்ணீர்
பாய்ந்துஇழிய உணர்வின்றி வீழக் கண்டே.
"யான்உம்மைப் பிரியாத வண்ணம் இந்நாட்டு
இறைவர்பதி எனைப்பலவும் பணிவீர்" என்று
ஞானம்உணர் வார்அருள அவரும்போத
நம்பர்திருப் பரங்குன்றை நண்ணி னாரே.

## 197. திருஏடகம்

### ஏடகநாதர்–ஏலவார்குழலி

சம்பந்தர் : 1.

வழிபட்டநாள் : 8–4–56; 26–8–65.

மதுரைக்கு வடமேற்கு 10 மைல் அளவு. திருஞான சம்பந்தர் புனல் வாதில் சமணர்களை வெல்லுதற்கு வைகை ஆற்றில் இட்ட, "வாழ்க அந்தணர்" என்னும் தேவாரம் எழுதிய ஏடு எதிர்த்து வந்த இடம், இத்தலம் என்ப. அதனாலேயே ஏடகம் என்னும் பெயர் பெற்றது.

*சம்பந்தர்*

பொய்கையின் பொழில்உறு புதுமலர்த் தென்றலார்
வைகையின் வடகரை மருவி ஏடகத்து
ஐயனை அடிபணிந்து அரற்றுமின்; அடர்தரும்
வெய்ய, வன்பிணிகெட வீடுஎளி தாகுமே.

# 198. கொடுங்குன்றம்

## (பிரான்மலை)

## கொடுங்குன்றீசர்–குயிலமிர்தநாயகி

*சம்பந்தர் : 1.*

*வழிபட்டநாள் : 27–2–55; 24–8–65.*

காரைக்குடியிலிருந்து 13 மைலிலுள்ள திருப்புத்தூர் சென்று, அங்கிருந்து வடமேற்கே 15 கல் அளவில் இத்தலம் இருக்கிறது. திருப்புத்தூர்–திண்டுக்கல் நெடுஞ்சாலையிலுள்ள சதுர்வேத மங்கலம் சென்று, அங்கிருந்து வடக்கே திரும்ப வேண்டும்.

மலையடிவாரத்தில் ஒருகோயிலும், மலையில் சிறிது உயரத்தில் மற்றொரு கோயிலும் இருக்கிறது.

வரையாது வழங்கிய பாரி வள்ளலின் பரம்பு மலை இதுவே.

*சம்பந்தர்*

பருமாமத கரியோடுஅரி இழியும் விரிசாரல்
குருமாமணி பொன்னோடுஇழி அருவிக் கொடும்குன்றம்
பொருமாஎயில் வரைவில்தரு கணையில் பொடிசெய்த
பெருமான்அவன் உமையாளொடு மேவும் பெருநகரே.

# 199. திருப்புத்தூர்

## திருத்தளிநாதர்–சிவகாமியம்மை

சம்பந்தர் 1 அப்பர் 1

வழிபட்டநாள் : 27–2–55; 24–8–65.

காரைக்குடியிலிருந்து மேற்கே 13 கல் தொலைவு. மதுரையினின்றும் கிழக்கே 40 மைல். இங்கே வயிரவர் சந்நிதி மிக்க சிறப்புடையது. திருத்தளி என்னும் கோவிலுக்கு அணித்தேயுள்ள திருக்குளம் மிகப் பெரியது.

### சம்பந்தர்

வேனல் விம்மு வெறியார் பொழிற்சோலைத்
தேனும் வண்டும் திளைக்கும் திருப்புத்தூர்
ஊனம் இன்றி உறைவார் அவர்போலும்
ஏன முள்ளும் எயிறும் புனைவாரே.

### அப்பர்

மின்காட்டும் கொடிமருங்குல் உமையாட்கு என்றும்
விருப்பவன்காண்; பொருப்புவலிச் சிலைக்கையோன்காண்;
நன்பாட்டுப் புலவனாய்ச் சங்கம் ஏறி
நற்கனகக் கிழி.தருமிக்கு அருளி னோன்காண்;
பொன்காட்டக் கடிக்கொன்றை மருங்கே நின்ற
புனக்காந்தள் கைகாட்டக் கண்டு வண்டு.
தென்காட்டும் செழும்புறவில் திருப்புத் தூரில்
திருத்தளியான் காண்;அவன்என் சிந்தை யானே.

### சேக்கிழார்

பற்றார்தம் புரங்கள்மலைச் சிலையால் செற்ற
பரமனார் திருப்புத்தூர் பணிந்து போந்து
புற்றாரும் பணிபூண்ட புனித னார்தம்
பூவணத்தைப் புக்குஇறைஞ்சிப் புகழ்ந்து பாடிக்
கற்றார்கள் தொழுதுஏத்தும் கானப் பேரும்
கைதொழுது தமிழ்பாடிச் சுழியல் போற்றிக்
குற்றாலம் குறும்பலாக் கும்பிட்டு ஏத்திக்
கூற்றுதைத்தார் நெல்வேலி குறுகி னாரே.

## 200. திருப்புனவாயில்

### பழம்பதிநாதர்–கருணைநாயகி

சம்பந்தர் : 1 சுந்தரர் : 1.

வழிபட்டநாள் : 14–4–57; 28–1–65.

அறந்தாங்கி இரயில் நிலையத்தினின்றும் எட்டுமைலிலுள்ள மாணிக்கவாசக சுவாமிகளை இறைவன் ஆட்கொண்டருளிய திருப்பெருந்துறை என்னும் ஆவுடையார் கோயில் வழியாகச் சென்றால் 30 மைலில் இத்தலம் இருக்கின்றது. திருஆடானை என்னும் தலத்தினின்றும் வடக்கே 12 மைல் சென்றால் இத்தலத்தை அடையலாம். இவ்வழியில் கோவிலுக்குப் பக்கத்தில் குறுக்கே பாம்பாறு என்ற ஒரு ஆறு ஓடுகிறது. ஆற்றுக்குப் பாலம் இல்லை. இத்தலத்துக்கு மிக அண்மையில் கடல் இருக்கின்றது. இங்கு சிவலிங்கம் மிகப் பெரியது.

சம்பந்தர்

வாருறு மென்முலை மங்கைபா டநட மாடிப்போய்க்
காருறு கொன்றைவெண் திங்களா னும்கனல் வாயதோர்
போருறு வெண்மழு ஏந்தினா னும்புன வாயிலில்
சீருறு செல்வமல் கவ்விருந் தசிவ லோகனே.

சுந்தரர்

சித்தம் நீநினை என்னோடு சூள்அறும் வைகலும்
மத்த யானையின் ஈர்உரி போர்த்த மணாளன்ஊர்
பத்தர் தாம்பலர் பாடிநின்று ஆடும் பழம்பதி
பொத்தில் ஆந்தைகள் பாட்டுஅ றாப்புன வாயிலே.

## 201. இராமேச்சுரம்

### இராமனாதர்–மலைவளர்காதலி

சம்பந்தர் : 2. அப்பர் : 1.

வழிபட்டநாள் : 22–2–60; 16–9–65.

இரயில் நிலையம். இத்தலம் கடற்கரை நகரம். கோவில் மிகப் பெரியது. கோயில் முழுமைக்கும் சேர்த்து ஒரே பெரிய பிரகாரமாக, அழகாகவும், ஒழுங்காகவும் அமைக்கப் பெற்றிருக்கின்றன.

இராமபிரான் உண்டாக்கி வணங்கிய கோயில். எனவே இராமேசுரம் என்னும் பெயர் பெற்றது. இராமன் தோற்றுவித்த இலிங்கமாதலின் இராமலிங்கம் என்றும், இராமனாதன் என்றும் இறைவனுக்குப் பெயர்.

கோயிலுக்குள்ளும், வெளியில் ஊருக்குள்ளும் ஏராளமான தீர்த்தங்கள் இருக்கின்றன. இந்திய நாட்டின் தென் கோடியில் உள்ள தலம் ஆதலின் இதனை நாடுமுழுதும் போற்றுகின்றது. இராமனாதனை வணங்க வடநாட்டிலிருந்து மக்கள் எப்போதும் கூட்டங் கூட்டமாக வந்துகொண்டிருப்பதைக் காணலாம். காசிக்கு இலிங்கம் கொண்டுவரச் சென்ற அனுமன் வருமுன்னரேயே சீதையால் வைக்கப்பெற்று இராமன் வணங்கிய இலிங்கம் இராமலிங்கம். பின்னர் அனுமன் கொணர்ந்த இலிங்கத்தைப் பக்கத்தில் வைத்திருக்கிறது. அதற்குக் காசி விசுவனாதர் என்று பெயர்.

இந்நகரத்தில் பலரும் ஏராளமான சத்திரங்களும், விடுதிகளும் கட்டியிருக்கின்றனர். நாட்டுக்கோட்டை நகரத்தாருக்குப் பெரிய சத்திரமிருக்கிறது. சேது மன்னர்கள் இக்கோயிலில் தொன்றுதொட்ட உரிமை உடையவர்கள்.

இராமனாதபுரத்தில் சமாதியான தாயுமான சுவாமிகள் இத்தலத்தில் எழுந்தருளியிருக்கும் மலைவளர் காதலி அம்மைக்கு அருமையான பதிகம் பாடியுள்ளார்.

இத்தலத்தில் வடக்கே மூன்று மைலில் கந்தமாதன பருவதம் என்ற ஒரு குன்று இருக்கின்றது. இராமேசுரம் நாற்புறமும் கடல் சூழ்ந்த ஒரு தீவு. கந்தமாதன பருவதத்தின் உச்சியினின்றும் பார்த்தால் நான்கு புறத்துக் கடலும் தெரியும். இங்கிருந்துதான் அனுமன் பேருரு எடுத்துக் கடல் தாண்டி இலங்கை சென்றான் என்ப.

இராமேசுரத்திலிருந்து தெற்கே 12 கல் அளவில் தனுக்கோடி என்று சொல்லப்பெறும் தீர்த்தமாடும் இடம் இருந்து அண்மையில் தோன்றிய புயலால் அழிந்துவிட்டது. இந்த இடத்துக்குச் சேது என்று பெயர். சேது என்றால் அணைக்கட்டு என்பது பொருள். இராமபிரான் இலங்கை செல்ல அணைகட்டியது இவ்விடத்திலேயே என்பர். சேது புராணம் என்ற பெயரால் நிரம்ப அழகிய தேசிகர் என்னும் புலவர் புராணம் பாடியுள்ளார்.

### சம்பந்தர்

தேவியை வவ்விய தென்இலங் கைத்தச மாமுகன்
பூவிய லும்முடி பொன்றுவித் தபழி போய்அற
ஏவிய லும்சிலை அண்ணல்செய் தஇரா மேச்சுரம்
மேவிய சிந்தையி னார்கள்தம் மேல்வினை வீடுமே.

### அப்பர்

கோடிமா தவங்கள் செய்து குன்றினார் தம்மை எல்லாம்
வீடவே சக்க ரத்தால் எறிந்துபின் அன்பு கொண்டு
தேடிமால் செய்த கோயில் திருஇரா மேச்சு ரத்தை
நாடிவாழ் நெஞ்ச மேநீ. நன்னெறி ஆகும் அன்றே.

### தாயுமான சுவாமிகள்

மிடியிட்ட வாழ்க்கையால் உப்பிட்ட கலம்எனவும்
மெய்எலாம் உள்உடைந்து
வீறிட்ட செல்வர்தம் தலைவாயில் வாசமாய்
வேதனைகள் உறவேதனும்

துடியிட்ட வெவ்வினையை ஏவினான் பாவிநான்
தொடரிட்ட தொழில்கள்எல்லாம்
துண்டிட்ட சாண்கும்பி யின்பொருட் டாயதுஉன்
தொண்டர்பணி செய்வதுஎன்றோ?

அடியிட்ட செந்தமிழின் அருமையிட்டு ஆரூரில்
அரிவையோர் பரவைவாயில்
அம்மட்டும் அடியிட்டு நடைநடந்து அருள்அடிகள்
அடிஈது முடிஈதுஎன

வடியிட்ட மறைபேசு பச்சிளங் கிள்ளையே!
வளமருவு தேவைஅரசே!
வரைராச னுக்கு இருகண் மணியாய் உதித்தமலை
வளர்காத லிப்பெண்உமையே!

# 202. திருஆடானை

## ஆடானைநாதர்-அன்புக்கொடி

சம்பந்தர் : 1.

வழிபட்டநாள் : 15-4-57; 17-3-65.

தேவகோட்டையினின்றும் சுமார் 25 கல் அளவு. அங்கிருந்து சில மைல் தூரம் சென்றால் தொண்டிக் கடற்கரையை அடையலாம்.

சம்பந்தர்

மாய னும்மல ரானும் கைதொழ
ஆய அந்தணன் ஆடானை
தூய மாமலர் தூவிக் கைதொழத்
தீய வல்வினை தீருமே.

# 203. திருக்கானப்பேர்

## (காளையார்கோயில்)

## காளையீசுரர்-சொர்ணவல்லி

சம்பந்தர் : 1; சுந்தரர் 1.

வழிபட்டநாள் : 4-4-58; 18-3-65.

திருச்சி-மானாமதுரை இருப்புப் பாதையிலுள்ள நாட்டரசன் கோட்டை இரயில் நிலையத்திலிருந்து 6 கல் தொலைவு. சிவகங்கை-தொண்டி பெருவழிச் சாலையில் சிவகங்கையி னின்றும் 11 மைல். பெரிய கோயில். மூன்று இறைவனும், மூன்று இறைவியும் இங்கு எழுந்தருளியிருக்கின்றனர்.

1. காளீசர் – சொர்ணவல்லி
2. சோமேசர் – சௌந்தரநாயகி
3. சொக்கேசர் – மீனாட்சி

மருதுபாண்டியன் கட்டிய பெரிய இராசகோபுரம் சோமேசர் சந்நிதிக்கு எதிரில் இருக்கிறது. கோவிலுக்குப் பக்கத்தில் இருக்கும் தெப்பக்குளம் மிகப் பெரியது.

சம்பந்தர்

வாளினான் வேலினான் மால்வரை எடுத்ததிண்
தோளினான் நெடுமுடி தொலையவே ஊன்றிய
தாளினான் கானப்பேர் தலையினால் வணங்குவார்
நாளும்நாள் உயர்வதோர் நன்மையைப் பெறுவரே.

சுந்தரர்

நாதனை, நாதமிகுத்து ஓசையது ஆனவனை,
ஞான விளக்குஒளியாம் ஊன்உயி ரைப்பயிரை,
மாதனை, மேதகுதன் பத்தர் மனத்துஇறையும்
பற்று விடாதவனைக் குற்றம்இல் கொள்கையனைத்
தூதனை, என்தனைஆள் தோழனை, நாயகனைத்
தாழ்மக ரக்குழையும், தோடும் அணிந்ததிருக்
காதனை நாயடியேன் எய்துவது என்றுகொலோ
கார்வயல் சூழ்கானப் பேர்உறை காளையையே.

## 204. திருப்பூவணம்

### பூவணநாதர்–மின்னனையாள்

சம்பந்தர் : 2. அப்பர் : 1. சுந்தரர் : 1.
வழிபட்டநாள் : 21–5–59; 26–8–65.

மதுரை–மானாமதுரை இருப்புப் பாதையில் உள்ள இரயில் நிலையம். மதுரையினின்றும் தென்கிழக்கே 12 கல் அளவு. பாண்டி நாட்டிலுள்ள தேவாரம் பெற்ற தலங்கள் பதினான்கில் இன்றைக்கு மூவர் தேவாரமும் இருக்கும் தலம் இது ஒன்றுதான். மேலும், இத்தலம் திருவாசகத்திலும் பாராட்டப் பெறுகிறது. திருவிசைப்பா பாடிய கருவூர்த் தேவர் இத்தலத்தைப் பெரிதும் போற்றிப் பாடியிருக்கின்றார்.

திருவிளையாடல் புராணத்தில் இரசவாதம் செய்த படலம் இத்தலத்தைப்பற்றி எழுந்தது. இங்குப் பொன்னனையாள் என்று ஒரு நடனமாது இருந்தாள். அவளுக்குத் தங்கத்தால்

இறைவன் திரு உருவத்தை உண்டாக்குவதற்குச் சொக்கேசர் சித்தராக வந்து பித்தளை முதலியவற்றைத் தங்கமாக்கிக் கொடுத்தார் என்று திருவிளையாடல் செப்பும். பொன்னனையாள், சித்தர் திருமலைநாயக்கர் உருவங்கள் இக்கோயிலில் இருக்கின்றன. இங்குள்ள சிலையினால் வடிக்கப்பெற்ற கூத்தப் பெருமான் உருவம் மிகமிகப் பெரியது. கோயிலுக்கு எதிரில் வைகை ஆறு ஓடுகின்றது.

### சம்பந்தர்

குருந்தொடு மாதவி கோங்கு மல்லிகை
பொருந்திய பொழில்திருப் பூவ ணத்துஉறை
அருந்திறல் அவுணர்தம் அரணம் மூன்றுஎய்த
பெருந்தகை அடிதொழப் பீடை இல்லையே.

### அப்பர்

படைமலிந்த மழுவாளும் மானும் தோன்றும்;
பன்னிரண்டு கண்ணுடைய பிள்ளை தோன்றும்;
நடைமலிந்த விடையோடு கொடியும் தோன்றும்;
நான்மறையின் ஒலிதோன்றும்; நயனம் தோன்றும்;
உடைமலிந்த கோவணமும் கீளும் தோன்றும்;
ஊரல்வெண் சிரமாலை உலாவித் தோன்றும்;
புடைமலிந்த பூதத்தின் பொலிவு தோன்றும்;
பொழில்திகழும் பூவணத்துஎம் புனித னார்க்கே.

### சுந்தரர்

எண்ணி இருந்து கிடந்து நடந்தும்
அண்ணல் எனாநினை வார்வினை தீர்ப்பார்.
பண்ணிசை யார்மொழி யார்பலர் பாடப்
புண்ணிய னார்உறை பூவணம் ஈதோ?

### மணிவாசகர்

பொருப்பமர் பூவணத்து அரனே! போற்றி!

கருவூர்த்தேவர்

செம்மனக் கிழவோர் அன்புதா என்றுஉன்
சேவடி பார்த்திருந்து அலச
எம்மனம் குடிகொண்டு இருப்பதற் கியானார்?
என்னுடை அடிமைதான் யாதே?
அம்மனம் குளிர்நாள் பலிக்குஎழுந்து அருள
அரிவையர் அவிழ்குழல் சுரும்பு
பொம்மென முரலும் ஆவண வீதிப்
பூவணம் கோயில்கொண் டாயே.

## 205. திருச்சுழியல்

### திருமேனிநாதர்–துணைமாலை

சுந்தரர் : 1.

வழிபட்டநாள் : 9–4–56; 25–8–65.

மதுரையினின்றும் 38 கல் அளவு. விருதுநகர் இரயில் நிலையத்தினின்று 19 கல். மானாமதுரை–விருதுநகர் புதிய இருப்புப் பாதையில் உள்ள ஓர் இரயில் நிலையம்.

சுந்தரர்

கவ்வைக்கடல் கதறிக்கொணர் முத்தம்கரைக்கு ஏற்றக்
கொவ்வைத்துவர் வாயார்குடைந்து ஆடும்திருச் சுழியல்
தெய்வத்தினை வழிபாடுசெய்து எழுவார்அடி தொழுவார்;
அவ்அத்திசைக்கு அரசாகுவர் அலராள்பிரி யாளே.

## 206. திருக்குற்றாலம்

### குறும்பலாநாதர்–குழல்வாய்மொழி

சம்பந்தர் : 2.

வழிபட்டநாள் : 31–1–58; 7–9–65.

நெல்லை மாவட்டம் தென்காசி இரயில் நிலையத்திலிருந்து மேற்கே 4 கல் தொலைவு.

இத்தலத்தில் குறும்பலா மரம் மிக்க சிறப்புடையது. வேறு எங்கும் இல்லாதபடி, திருஞான சம்பந்தர் திருக்குற்றாலத்திற்கு ஓர் அழகிய பதிகம் பாடியதோடு, திருக்குறும்பலாவுக்கும் ஒரு தேவாரப் பதிகம் பாடினார்.

கோயில் மலை அடிவாரத்தில் சங்கு வடிவத்தில் இருக்கின்றது. கோவிலுக்குப் பக்கதில் மலையினின்றும் அழகிய பெரிய அருவி விழுகின்றது. பருவ காலத்தில் பல பகுதிகளினின்றும் கணக்கற்றவர்கள் வந்து இத்தலத்தில் தங்கி மகிழ்கின்றனர். 1300 ஆண்டுகளுக்கு முன்னர் திருஞானசம்பந்தப் பெருமான் "கூதல் மாரி நுண்துளி தூங்கும் குற்றாலம்" என்று பாடி அருளினார். அவஇயற்கைக் காட்சியை இன்றும் நாம் கண்டு நுகர்ந்து மகிழ்கின்றோம். இத்தலம் பஞ்ச சபைகளில் ஒன்றாகிய "சித்திர சபை"யை உடையது. திருநாவுக்கரசு சுவாமிகள் தனிப் பதிகம் பாடாவிட்டாலும் திருக்குற்றாலத்தைப் பதின்மூன்று இடங்களில் பாராட்டுவார். சுந்தர மூர்த்திகள் குற்றாலத்தை ஊர்த்தொகையில் ஓர் இடத்தில் கூறுவர். சிவபெருமான் திருஅந்தாதியில் கபிலர் பெருமான் குற்றாலத்தைப் பாராட்டியுள்ளார். பட்டினத்து அடிகள் குற்றாலத்தைப் பாடி மகிழ்வார். மணிவாசகப் பெருமான் திருவாசகத்தில் இத்தலத்தை மூன்று இடங்களில் பாராட்டுவதோடு, திருக்கோவையாரிலும் பாராட்டியுள்ளார்.

திருக்குற்றாலத்திற்குத் திரிகூட ராசப்பக் கவிராயர் என்ற பெரும் புலவர், புராணம், குறவங்சி முதலியன இயற்றியுள்ளார்.

கோயிலினின்றும் மூன்றுமைல் அளவில் ஐந்து அருவி என்ற சிறந்த அருவி இருக்கின்றது. ஐந்து பிரிவாக விழுவதால் இப்பெயர் பெற்றது. இன்னும் பற்பல அருவிகளையும், ஓடைகளையும் ஆங்காங்குக் காணலாம். மலைக்கு மேல் 1½ மைலில் செண்பக அடவி அருவியும், அதற்குமேல் 1½ மைலில் கண்டவரை அச்சுறுத்தும் பெரிய தேனருவியும் விழுகின்றன.

குற்றாலத்திற்கு 1½ மைலில் திருப்புகழ் பெற்ற இலஞ்சி என்ற முருகன் தலமும், சுமார் 8 மைலில் திருமலை என்னும் உயரமான மலையின் மீதுள்ள முருகன் தலமும் இருக்கின்றன. திருமலை முருகனுக்குக் கவிராச பண்டாரத்து ஐயா என்ற புலவர் அழகிய பிள்ளைத்தமிழ் பாடியுள்ளார்.

சம்பந்தர்

போதும் பொன்னும் உந்தி அருவி புடைசூழக்
கூதல் மாரி நுண்துளி தூங்கும் குற்றாலம்
மூதூர்இலங்கை முட்டிய கோனை மிறைசெய்த
நாதன் மேய நன்னகர் போலும் நமரங்காள்.

தலைவாள் மதியம் கதிர்விரியத்
தண்புனலைத் தாங்கித் தேவி
முலைபாகம் காதலித்த மூர்த்தி
இடம்போலும் முதுவேய் சூழ்ந்த
மலைவாய் அசும்பு பசும்பொன்
கொழித்துஇழியும் மல்கு சாரல்
குலைவாழைத் திங்கனியும். மாங்கனியும்
தேன்பிலிற்றும் குறும்ப லாவே.

அப்பர்

உற்றார் ஆருளரோ-உயிர்
கொண்டு போம் பொழுது
குற்றா லத்துஉறை கூத்தன்அல் லால்நமக்கு
உற்றார் ஆருள ரோ.

–திரு அங்கமாலை

சுந்தரமூர்த்திகள்

கொங்கிற் குறும்பிற் குரக்குத்தளியாய் குழகா குற்றாலர்

–ஊர்த்தொகை

மணிவாசகர்

உற்றாரை யான்வேண்டேன்;ஊர்வேண்டேன்;பேர்வேண்டேன்;
கற்றாரை யான்வேண்டேன்; கற்பனவும் இனிஅமையும்;
குற்றாலத்து அமர்ந்துஉறையும் கூத்தா!உன் குரைகழற்கே
கற்றாவின் மனம்போலக் கசிந்துஉருக வேண்டுவனே!

கபிலர்

கூற்றும் பொருளும்போல் காட்டிஎன் கோல்வளையைக்
கூற்றின் பொருள்முயன்ற குற்றாலன்-கூற்றின்
செருக்குஅழியச் செற்ற சிவற்குஅடிமை நெஞ்சே
செருக்குஅழியா முன்னமே செய்.

பட்டினத்தார் பாடல்

காலன் வருமுன்னே கண்பஞ்சு அடைமுன்னே
பால்உண் கடைவாய் படுமுன்னே-மேல்விழுந்தே
உற்றார் அழுமுன்னே, ஊரார் சுடுமுன்னே
குற்றாலத் தானையே கூறு.

திரிகூடராசப்பக் கவிராயர்

வற்றாத வடஅருவி படிந்துசங்க
வீதிதனில் வலம்கொண்டு ஏகிப்
பற்றாத பிறைமவுலிப் பரமனையும்
தேவியையும் பணிந்து போற்றிக்
கற்றார்கள் உடன்கூடிக் கண்ணுதல்சீர்
பாடிஒரு கடிகைப் போது
குற்றாலத்து இருந்தவர்கள் கயிலாயத்து
இருப்பர்கற்ப கோடி காலம்.

–திருக்குற்றாலப் புராணம்

## 207. திருநெல்வேலி

### நெல்லையப்பர்–காந்திமதி

சம்பந்தர் : 1.

வழிபட்டநாள் : 9–8–59; 5–9–65.

இரயில்வே நிலையம். இங்கு அழகிய தாமிரவருணி என்னும் தண்பொருநை ஆறு ஓடுகிறது. பஞ்ச சபைகளில் ஒன்றாகிய "தாமிர சபை" யை உடையது இது.

கோயில் மிகப் பெரியது. இக்கோயிலிலுள்ள ஆறுமுகக் கடவுளின் பெரிய திரு உருவம் மிக்க அழகுடையது. இத்தலத்திற்குப் புராணமும், காந்திமதியம்மனுக்கு அழகிய பிள்ளைத் தமிழும் இருக்கின்றன.

சம்பந்தர்

முந்திமா விலங்கல்அன்று எடுத்தவன்
முடிகள்தோள் நெரிதரவே
உந்திமா மலரடி ஒருவிரல்
உகிர்நுதி யால்அடர்த்தார்;
கந்தமார் தருபொழில் மந்திகள்
பாய்தர மதுத்திவலை,
சிந்துபூந் துறைகமழ் திருநெல்வே–
–லிஉறை செல்வர்தாமே.

# 4. மலை நாடு

(1 தலம்)

# 208. திருஅஞ்சைக்களம்

## அஞ்சைக்களத்துஅப்பர்–உமையம்மை

சுந்தரர் : 1.

வழிபட்டநாள் : 23–7–58; 6–4–65.

மலை நாட்டில் உள்ள ஒரே தேவாரத் தலம் இது. திவ்வியப்பிரபந்தத் தலங்கள் மலை நாட்டில் பதின்மூன்று இருக்கின்றன. தேவாரத் தலம் இது ஒன்றுதான். சுந்தரமூர்த்தி சுவாமிகள் சேரமான் பெருமாள் நாயனாரோடு வீடுபேறு அடைந்த தலம் இது. இங்கு, சுந்தரர், சேரமான் பெருமாள் இருவரின் திரு உருவங்கள் இருக்கின்றன.

இத்தலம் சென்னை–கொச்சின் இருப்புப் பாதையிலுள்ள இருஞாலக்குடா என்ற இரயில் நிலையத்திலிருந்து ஐந்து கல் தொலைவு. திருச்சூருக்கு 20 மைல் அளவில் உள்ளது. கோவையிலிருந்து சுமார் 100 மைல். இங்கிருந்து சிறிது தூரத்தில் கடற்கழிவு இருக்கிறது. சேரமான் பெருமாள் அரசாண்ட கொடுங்கோளூர் இத்தலத்துக்கு மிக அண்மையில் இருக்கிறது. அங்குக் கண்ணகிக்கு ஒரு கோயில் காணப்படுகிறது.

சுந்தரர்

வெறுத்தேன் மனைவாழ்க் கையைவிட்டு ஒழிந்தேன்;
விளங்கும் குழைக்கா துடைவே தியனே!
இறுத்தாய் இலங்கைக்கு இறையா யவனைத்
தலைபத் தொடு.தோள் பலஇற் றுவிழ;
கறுத்தாய் கடல்நஞ்சு அமுதுண்டு கண்டம்;
கடுகப் பிரமன் தலைஐந் திலும்ஒன்று
அறுத்தாய்! கடலங் கரைமேல் மகோதை
அணியார் பொழில்அஞ் சைக்களத்து அப்பனே!

சேக்கிழார்

மாவீற் றிருந்த பெரும்சிறப்பின்
மன்னும் தொன்மை மலைநாட்டுப்
பாவீற் றிருந்த பல்புகழார்.
பயிலும் இயல்பில் பழம்பதிதான்.
சேவீற் றிருந்தார் திருவஞ்சைக்
களமும் நிலவிச் சேரர்குலக்
கோவீற் றிருந்து முறைபுரியும்
குலக்கோ மூதூர் கொடுங்கோளூர்

# 5. கொங்கு நாடு

(7 தலங்கள்)

# 209. அவிநாசி

## அவிநாசிஅப்பர்–கருணாம்பிகை

சுந்தரர் : 1.

வழிபட்டநாள் : 23–4–57; 10–1–66.

திருப்பூர் இரயில் நிலையத்தினின்றும் 8 கல் அளவு. வழியில் 5 கல் அளவில் திருமுருகன்பூண்டி என்னும் தலம் இருக்கிறது. ஈரோடு–கோயம்புத்தூர் நெடுஞ்சாலையில் கிட்டத்தட்ட நடு மையத்தில் இத்தலம் இருக்கிறது. கோவில் பழமையானது. சுந்தரமூர்த்திகள் முதலைவாய்ப் பிள்ளையை அழைத்துக் கொடுத்தது இத்தலத்திலேயே. கோவிலினின்றும் சிறிது தூரத்தில் ஓர் ஏரி இருக்கின்றது. அவ்ஏரியில்தான் முதலைவாய்ப்பிள்ளையை அழைத்ததாகக் கூறப்பெறுகிறது. ஏரிக்கரையில் சுந்தரருக்கு ஒரு கோயில் இருக்கிறது. அக்கோயிலில் முதலை வாயினின்றும் பிள்ளை வருவதுபோன்ற பாவனையில் சிலை இருக்கின்றது. இத்தலத்தை, புக்கொளியூர்அவிநாசி என்ப.

இத்தலத்தைத் திருவாசகம் பாராட்டும், கொங்கு நாட்டில் திருவாசகம் பெற்ற தலம் இது ஒன்றுதான்.

சுந்தரர்

உரைப்பார் உரைஉகந்து உள்கவல் லார்தங்கள் உச்சியாய்!
அரைக்குஆடு அரவா! ஆதியும் அந்தமும் ஆயினாய்!
புரைக்காடு சோலைப் புக்கொளி ஊர்அவி நாசியே!
கரைக்கால் முதலையைப்பிள்ளை தரச்சொல்லுகாலனையே.

மணிவாசகர்

நரியைக் குதிரைப் பரியாக்கி
    ஞாலம் எல்லாம் நிகழ்வித்துப்
பெரிய தென்னன் மதுரையெல்லாம்
    பிச்சது ஏற்றும் பெருந்துறையாய்!

அரிய பொருளே! அவிநாசி
அப்பா! பாண்டி வெள்ளமே!
தெரிய அரிய பரஞ்சோதி!
செய்வது ஒன்றும் அறியேனே!

**சேக்கிழார்**

நாட்டார் அறிய முன்னாளில்
நன்னாள் உலந்த ஐம்படையின்
பூட்டார் மார்பின் சிறயமறைப்
புதல்வன் தன்னைப் புக்கொளியூர்த்
தாள்தா மரையின் மடுவின்கண்
தனிமா முதலை வாய்நின்றும்
மீட்டார் கழல்கள் நினைவாரை
மீளா வழியின் மீட்பவனே.

## 210. திருமுருகன்பூண்டி

### முருகநாதர்–முயங்குபூண்முலையாள்

சுந்தரர் : 1.
வழிபட்டநாள் : 23–4–57; 10–1–66.

திருப்பூர் இரயில் நிலையத்தினின்றும் 5 கல் தொலைவு. ஈரோடு–கோவை நெடுஞ்சாலையிலுள்ள அவிநாசியினின்றும் 3 கல் தொலைவு.

சேரமான் பெருமாளிடம் மலைநாட்டில் பெற்றுவந்த பொருள்களைக் கள்வர்கள் கவர்ந்துகொள்ள, பாட்டுப் பாடி மீட்ட தலம் இது. சுந்தரமூர்த்திகள் திருவுருவம் கோயிலில் இருக்கிறது.

சுந்தரர்

கொடுகு வெஞ்சிலை வடுக வேடுவர்
விரவ லாமை சொல்லித்
திடுகு மொட்டெனக் குத்திக் கூறை
கொண்டு ஆறுஅ லைக்கும்இடம்
முடுகு நாறிய வடுவர் வாழ்முரு-
-கன்பூண் டிமாந கர்வாய்
இடுகு நுண்இடை மங்கை தன்னொடும்
எதுக்கு இங்குஇருந் தீர்எம்பி ரானிரே.

## 211. திருநணா

### (பவாநி)

### கூடுதுறைநாதர்:திருநணாஉடையார்–வேதாம்பிகை

சம்பந்தர் : 1.
வழிபட்டநாள் : 8–4–57; 8–1–66.

ஈரோட்டினின்றும் 10 கல் தொலைவு. காவிரி ஆறும், பவாநி ஆறும் கூடும் இடத்தில் கோவில் அமைந்திருக்கிறது. மிகப் பழைய கோயில். இப்போது சுவாமி கோயில் மட்டும் பெரும் பொருட் செலவில் அருமையான வேலைப்பாட்டுடன் கட்டப்பட்டு வருகின்றது. விரைவில் வேலை முடிந்துவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இக்கோவிலின் ஒரு பகுதியில் ஆதிகேசவப் பெருமாள் சந்நிதி இருக்கிறது.

சம்பந்தர்

வில்லார் வரையாக மாநாகம்
நாணாக வேடம் கொண்டு
புல்லார் புரமூன்று எரித்தார்க்கு
இடம்போலும்; புலியும் மானும்
அல்லாத சாதிகளும் அங்குஅழல்மேல்
கைகூப்ப அடியார் கூடிச்
செல்லா வருநெறிக்கே செல்ல
அருள்புரியும் திருந ணாவே.

## 212. கொடிமாடச்செங்குன்றூர்
### (திருச்செங்கோடு)
### அர்த்தநாரீசுரர்–பாகம்பிரியாள்

சம்பந்தர் : 1.
வழிபட்டநாள் : 8–4–57; 8–1–66.

ஈரோடு–சேலம் இருப்புப் பாதையிலுள்ள சங்கரிதுர்க்கம் என்னும் இரயில் நிலையத்திலிருந்து தென்கிழக்கு 6 கல் அளவு. ஈரோட்டிலிருந்து கார்ப்பாதை 10 மைல். கோயில் பெரிய உயரமான மலையின்மீது இருக்கிறது. ஏராளமான படிகள் ஏறவேண்டும். இத்தலத்தில் திருப்பரங்குன்றத்தைப்போல, செங்கோட்டு வேலவன் சந்நிதி மிக்க சிறப்புடையது. ஆதி கேசவப் பெருமாள் சந்நிதி ஒன்றும் கோயிலில் இருக்கிறது.

இத்தலத்தில் ஓர் தனிச் சிறப்பு மூலஸ்தானம் சிவலிங்கம் அல்ல. அர்த்தநாரி வடிவத்தில் (அம்மை–அப்பனாக) ஒரு ஆள் உயரத்தில் கடவுள் காட்சி அளிக்கின்றார். விக்கிரகத்தின் நிறம் பழநியாண்டவரைப்போல, வெண்மை கலந்து காணப்படுகிறது. இங்கு அம்மையப்பர் சந்நிதி மேற்கு நோக்கியும், செங்கோட்டு வேலவர் சந்நிதி கிழக்கு நோக்கியும் இருக்கின்றன.

தோலும், துகிலும், குழையும், சுருள்தோடும்
பால்வெள்ளை நீறும், பசுஞ்சாந்தும், பைங்கிளியும்,
சூலமும், தொக்க வளையும்உடைத் தொன்மைக்
கோலமே நோக்கிக் குளிர்ந்துஊதாய் கோத்தும்பீ!

என்ற திருவாசகத்தின் பொருளாக இங்கே அம்மை-அப்பன் நிற்பது கண்கொள்ளாக் காட்சியாகும்.

விறல்மிண்ட நாயனார் பிறந்தருளிய திருத்தலம் இஃது என்று சிலர் கருதுவதாகத் தெரிகிறது. சேக்கிழார் கருத்துப்படி அத்தலம் இஃது அன்று. மலைநாட்டிலுள்ள செங்குன்றூர் என்று சேக்கிழார் ஐயத்துக்கு இடமின்றிக் கூறுகின்றார்.

"சேரர்திருநாட்டு ஊர்களின்முன்
சிறந்த மூதூர் செங்குன்றூர்"

என்று விறல்மிண்ட நாயனார் பிறந்த ஊரைச் சேக்கிழார் செப்புவார். அந்தச்செங்குன்றூர் மலைநாட்டிலுள்ள திவ்வியப் பிரபந்தத் தலங்கள் பதின்மூன்றனுள் ஒன்று. அங்குச் சிவன் கோவிலும் இருக்கிறது.

சம்பந்தர்

அலைமலி தண்புனலோடு அரவம்
சடைக்குஅணிந்து ஆகம்
மலைமகள் கூறுடையான்
மலையார் இளவாழைக்
குலைமலி தண்பொழில்சூழ் கொடிமாடச்
செங்குன் றூர்நின்ற
தலைமக னைத்தொழுவார்
தடுமாற்று அறுப்பாரே.

## 213. வெஞ்சமாக்கூடல்

### விகிர்தநாதர்-பண்ணேர்மொழியாள்

சுந்தரர் : 1.

வழிபட்டநாள் : 11-11-56; 7-1-66.

கருவூருக்குத் தெற்கே அரவக்குறிச்சிச் சாலையில் 12 மைல்

சென்று. அங்கிருந்து கிழக்கே மூன்று மைல் சென்றால் இத்தலத்தை அடையலாம். கோவில் மிகப் பழையது. தேடாத நிலையில் இருக்கின்றது. கோயில் இருக்கும் இடம் ஒரு பள்ளத்தாக்கு. அணித்தே ஒரு சிற்றாறு ஓடுகின்றது.

*சுந்தரர்*

*காடும். மலையும்.நாடும் இடறிக்*
*கதிர்மா மணி.சந் தனமும். அகிலும்.*

*சேடன் உறையும் இடம்தான் விரும்பித்*
*திளைத்தெற்று சிற்றா றதன்கிழ்க் கரைமேல்*

*பாடல் முழவும் குழலும் இயம்பப்*
*பணைதோ ளியர்பா டலொடுஆ டல்அறா*

*வேடர் விரும்பும் வெஞ்சமாக் கூடல்*
*விகிர்தா! அடியே னையும்வேண் டுதியே.*

## 214. திருப்பாண்டிக்கொடுமுடி
### (கொடுமுடி)
### கொடுமுடிநாதர்–பண்மொழிநாயகி

**சம்பந்தர் : 1. அப்பர் : 1. சுந்தரர் : 1.**
**வழிபட்டநாள் : 11–11–56; 7–1–66.**

திருச்சி–ஈரோடு இருப்புப் பாதையில் உள்ள ஓர் இரயில் நிலையம். கோவிலுக்கு நேராகக் காவிரி ஆறு ஓடுகின்றது.

இக் கோயிலுக்குள் பெருமாளுக்கு ஒரு சந்நிதியும். பிரமனுக்கு ஓர் உருவமும் இருக்கிறது. எனவே மும்மூர்த்தித் தலம் என்று கூறுவர்.

சுந்தரமூர்த்திகள் "நமச்சிவாய" திருப்பதிகம் பாடியது இத்தலத்திற்குத்தான்.

கொங்கு நாட்டில் மூவர் தேவாரமும் பெற்ற தலம் இஃது ஒன்றே.

கொங்கு நாட்டுக் கொடுமுடிக்குப் பாண்டிக் கொடுமுடி என ஏன் பெயர் வந்தது என்பது ஆராய்ச்சிக்குரியது.

சம்பந்தர்

போகமும் இன்பமும் ஆகிப்
போற்றிஎன் பார்அவர் தங்கள்

ஆகமும் உறைவிட மாக
அமர்ந்தவர் கொன்றையி னோடும்

நாகமும் திங்களும் சூடி
நன்னுதல் மங்கைதன் மேனிப்

பாகம் உகர்ந்தவர் தாமும்
பாண்டிக் கொடுமுடி யாரே.

அப்பர்

சிட்ட னைச்சிவ னைச்செழும் சோதியை
அட்ட மூர்த்தியை ஆல நிழல்அமர்
பட்ட னைத்திருப் பாண்டிக் கொடுமுடி
நட்ட னைத்தொழ நம்வினை நாசமே.

சுந்தரர்

எல்லை யில்புகழ் எம்பி ரான்எந்தை
தம்பி ரான்என்பொன் மாமணி

கல்லை உந்தி வளம்பொ ழிந்துஇழி
காவி ரியதன் வாய்க்கரை

நல்ல வர்தொழுது ஏத்தும் சீர்க்கறை
ஊரில் பாண்டிக் கொடுமுடி

வல்ல வாஉனை நான்ம றக்கினும்
சொல்லும்நா. நமச்சி வாயவே.

## 215. கருவூர்

### பசபதீசுரர்–கிருபாநாயகி; சவுந்திரநாயகி

சம்பந்தர் : 1.

வழிபட்டநாள் : 10–11–56; 7–1–66.

திருச்சி–ஈரோடு இருப்புப் பாதையில் உள்ள இரயில் நிலையம்.

இத்தலத்திலுள்ள கோயிலுக்கு ஆநிலை என்று பெயர். கோவில் பெரியது. தேவி சந்நிதி இரண்டு இருக்கின்றன. எறிபத்த நாயனார் பிறந்தருளிய தலம் இது. புகழ்ச் சோழ நாயனார் அருமையாக அரசாண்ட பதி இது. சிவகாமி ஆண்டார் என்னும் பெரியவர் இப்பதியில் வாழ்ந்ததாகப் பெரிய புராணம் சொல்லும்.

தித்திக்கும் திருவிசைப்பாப் பாடிய கருவூர்த் தேவர் பிறந்தருளி வீடுபேறு அடைந்த தலம் இது. கோவிலுக்குள் தென்மேற்கு மூலையில் கருவூர்த் தேவருக்கு ஒரு கோயில் இருக்கின்றது. கருவூர்த் தேவர் திரு உருவத்தை இராச இராசீச்சுரம் என்னும் தஞ்சைப் பெரிய கோயிலிலும் காணலாம்.

*சம்பந்தர்*

தேவர் திங்களும் பாம்பும் சென்னியில்
மேவர் மும்மதில் எய்த வில்லியர்.
காவ லர்கரு வூருள் ஆனிலை
மூவ ராகிய மொய்ம்பர் அல்லரே.

*சேக்கிழார்*

பொன்மலைப் புலிவென்று ஓங்கப் புதுமலை இடித்துப் போற்றும்
அந்நெறி வழியே ஆக அயல்வழி அடைத்த சோழன்,
மன்னிய அநபா யன்சீர் மரபின்மா நகரம் ஆகும்.
தொல்நெடும் கருவூர் என்னும் சுடரிமணி வீதி மூதூர்.

# 6. நடு நாடு

(22 தலங்கள்)

# 216. திருநெல்வாயில் அரத்துறை

## (திருஅரத்துறை)

## அரத்துறைநாதர்–ஆநந்தநாயகி

சம்பந்தர் : 1; அப்பர் : 1; சுந்தரர் : 1.
வழிபட்டநாள் : 6–7–57; 5–1–66.

விழுப்புரம்–திருச்சி இருப்புப் பாதையில் உள்ள பெண்ணாகடம் என்னும் இரயில் நிலையத்திற்குத் தென் மேற்கே 3 கல் அளவில் இருக்கிறது. கோயில் நிவா என்னும் ஆற்றின் வடகரையில் இருக்கிறது.

சம்பந்தப் பெருமானுக்கு முத்துச் சிவிகையும், முத்துக் குடையும் சிவபெருமான் கொடுத்தருளிய தலம் இது.

### சம்பந்தர்

காழி யானைக் கனவிடை ஊரும்மெய்
வாழி யானைவல் லோரும்என்று இன்னவர்
ஆழி யான்பிர மற்கும் அரத்துறை
ஊழி யானைக்கண் டீர்நாம் தொழுவதே.

### அப்பர்

வெருகு ரிஞ்சுவெங் காட்டில்
ஆடிய விமலன்என்று உள்கி,
உருகி நைபவர்க்கு அல்லால்
ஒன்றும்கை கூடுவது அன்றால்
முருகு ரிஞ்சுபூஞ் சோலை
மொய்ம்மலர் சுமந்துஇழி நிவாவந்து
அருகு ரிஞ்சுநெல் வாயில்
அரத்துறை அடிகள்தம் அருளே.

சுந்தரர்

கோடுயர் கோங்குஅலர் வேங்கைஅலர்
மிகஉந்தி வரும்நிவ வின்கரைமேல்
நீடுயர் சோலைநெல் வாயில்அரத்-
-துறைநின்மல னே!நினை வார்மனத்தாய்!
ஓடு புனல்கரை யாம்இளமை
உறங்கிவிழித் தால்ஒக்கும் இப்பிறவி
வாடி இருந்து வருந்தல்செய்யாது
அடியன் உய்யப் போவதோர் சூழல்சொல்லே.

## 217. பெண்ணாகடம்

### (திருக்கடந்தைநகர்)

### சுடர்க்கொழுந்தீசர்–கடந்தைநாயகி

சம்பந்தர் : 1. அப்பர் : 1.

வழிபட்டநாள் : 6–7–57; 5–1–66.

விழுப்புரம்–திருச்சி இருப்புப் பாதையில் உள்ள பெண்ணாகடம் என்னும் இரயில் நிலையம். விருத்தாசலத்தினின்றும் திட்டக்குடி செல்லும் பாதையில் 11 கல் அளவு.

இத்தலத்துக் கோயிலுக்குத் தூங்கானை மாடம் என்பது பெயர். இக்கோயிலில் மகாலிங்கம் இருக்கின்ற கர்ப்பக்கிருகத்தில் முன்வாயில் தவிர ஏனைய மூன்று புறங்களிலும் இறைவனைக் கண்டு வணங்குமாறு சன்னல்கள் அமைத்திருப்பது ஓர் தனிச் சிறப்புடையது.

கலிக்கம்ப நாயனார் பிறந்தது இத்தலத்தில். அப்பர் சுவாமிகளுக்குத் தோளில் சூலக்குறியும், இடபக் குறியும் பொறிக்கப் பெற்ற தலம் இது.

சிவஞானபோதம் அருளிய மெய்கண்ட தேவரின் தந்தையார் அச்சுதக்களப்பாளர் இவ்வூரில்வாழ்ந்தனர் என்பர். இத்தலத்துக்குக் கோவிலுக்குப் பக்கத்தில் உள்ள வயல் வெளியில் மெய்கண்டாருக்கு ஒரு சிறு கோயில் இருக்கிறது.

சம்பந்தர்

சாநாளும் வாழ்நாளும் தோற்றம்இவை
சலிப்பாய வாழ்க்கை ஒழியத்தவம்
ஆமாறு அறியாது அலமந்து.நீர்–
அயர்ந்தும் குறையவில்லை; ஆன்ஏறுடைப்
பூமாண் அலங்கல் இலங்குகொன்றை.
புனல்பொதிந்த புன்சடையி னான்உறையும்
தூமாண் கடந்தைத்த டங்கோயில்சேர்
தூங்கானை மாடம் தொழுமின்களே.

அப்பர்

பொன்னார் திருவடிக்கு ஒன்றுஉண்டு
விண்ணப்பம்; போற்றிசெய்யும்
என்ஆவி காப்பதற்கு இச்சையுண்–
–டேல்இரும் கூற்றுஅகல
மின்னாரும் மூவிலைச் சூலம்என்
மேல்பொறி; மேவுகொண்டல்
துன்னார் கடந்தையுள் தூங்கானை
மாடச் சுடர்க்கொழுந்தே.

## 218. கூடலையாற்றூர்

### நெறிகாட்டுநாயகர்–புரிகுழலம்மை

சுந்தரர் : 1.

வழிபட்டநாள் : 23–12–56; 5–1–66

விருத்தாசலத்திலிருந்து புவனகிரிக்குப் போகும் சாலையில் 12 மைல் அளவிலுள்ள வளையமாதேவி என்னும் ஊரை அடைந்து, அங்கிருந்து தெற்கே 2 மைல் செல்ல வேண்டும். மணிமுத்தா நதி, வெள்ளாறு என்ற இரண்டும் கூடும் இடத்தில் கோயில் இருக்கிறது. இத்தலத்திற்குத் தென்மேற்கே 4 கல் அளவில் ஸ்ரீ முஷ்ணம் என்னும் சிறந்த திருமால் தலம் இருக்கின்றது.

*சுந்தரர்*

*வையகம் முழுதுண்ட மாலொடு நான்முகனும்*
*பையரவு இளஅல்கும் பாவையொ டும்முடனே*
*கொய்யணி மலர்ச்சோலைக் கூடலை யாற்றூரில்*
*ஐயன்இவ் வழிபோந்த அதிசயம் அறியேனே.*

## *219. எருக்கத்தம்பூலியூர்*

### *(இராசேந்திரப்பட்டினம்)*

### *நீலகண்டேசுரர்–நீலமலர்க்கண்ணி*

*சம்பந்தர் : 1.*
*வழிபட்டநாள் : 23–12–56; 5–1–66.*

விருத்தாசலத்திற்குத் தெற்கே 7 கல் அளவு. கோவிலுக்குள் வெள்ளெருக்கம் செடி ஒன்று காணப்படுகிறது.

திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் உடன் இருந்து அவர் பாடிய தேவாரங்களை வீணையில் பொருத்திப் பாடிய திருநீலகண்ட யாழ்ப்பாணர் பிறந்தது இத்தலத்தில். இதற்குக் கிழக்கே நான்கு மைலில் திருமுட்டம் என்னும் திருப்பதி இருக்கிறது. திருமுட்டம் சிதம்பரத்தினின்றும் 24 மைல்.

*சம்பந்தர்*

*விண்ணோர் பெருமானே! விகிர்தா! விடைஊர்தீ!*
*பெண்ஆண் அலியாகும் பித்தா! பிறைசூடி!*
*எண்ணார் எருக்கத்தம் புலியூர் உறைகின்ற*
*அண்ணா! எனவல்லார்க்கு அடையா வினைதானே*

சேக்கிழார்

இருந்த டங்களும். பழனமும்
கடந்துபோய் எருக்கத்தம் புலியூரின்
மருங்கு சென்றுஉற நீலகண்
டப்பெரும் பாணனார் வணங்கி."கார்
நெருங்கு சோலைசூழ் இப்பதி
அடியனேன் பதி"என நெடிதுஇன்புற்று
அருங்க லைச்சிறு மழஇளம்
களிறனார் அங்குஅணைந்து அருள்செய்வார்.

## 220. திருத்தினை நகர்

### (தீர்த்தனகிரி)

### சிவக்கொழுந்தீசர்–ஒப்பிலாநாயகி

சுந்தரர் : 1.

வழிபட்டநாள் : 4–1–58 4–1–66.

பரங்கிப்பேட்டை இரயில் நிலையத்திற்கு வடமேற்கே 7 கல் தொலைவு.

சுந்தரர்

பரிந்த சுற்றமும் மற்றுவன் துணையும்
பலரும் கண்டு.அழுது எழஉயிர் உடலைப்
பிரிந்து போம்;இது நிச்சயம்; அறிந்ததால்
பேதை வாழ்புஎனும் பிணக்கினைத் தவிர்ந்து
கருந்த டங்கண்ணி பங்கனை. உயிரை.
கால காலனை. கடவுளை விரும்புச்
செருந்தி பொன்மலர் திருத்தினை நகருள்
சிவக்கொ ழுந்தினைச் சென்றுஅடை மனனே.

# 221. திருச்சோபுரம்

## (தியாகவல்லி)

## சோபுரநாதர்–சோபுரநாயகி

*சம்பந்தர் : 1.*

*வழிபட்டநாள் : 8–10–57; 19–3–66.*

சிதம்பரம்–கடலூர் இருப்புப் பாதையில் உள்ள ஆலப் பாக்கம் இரயில் நிலையத்தினின்றும் வடகிழக்கே 2 கல் அளவில் இத்தலம் இருக்கின்றது. இடையே உப்பங்கழியைத் தோணியில் கடக்க வேண்டும். அதற்கு அப்புறம் நல்ல மணலில் நடந்து செல்ல வேண்டும். மணல் சூழ்ந்த இடத்தில் இக் கோவில் இருக்கின்றது.

*சம்பந்தர்*

குற்றமின்மை உண்மைநீஎன்று உன்அடியார் பணிவார்
கற்றல்கேள்வி ஞானமான காரணம்என் னைகொலாம்;
வற்றல்ஆமை வாள்அரவம் பூண்டுஅயன்வெண் தலையில்
துற்றலான கொள்கையானே! சோபுரமே யவனே!

# 222. திருஅதிகை

## வீரட்டேசுரர்–திரிபுரசுந்தரி

*சம்பந்தர் : 1. அப்பர் : 16; சுந்தரர் : 1.*

*வழிபட்டநாள் : 5–7–57; 3–12–65.*

பண்ணுருட்டி இரயில் நிலையத்திற்குத் தென்கிழக்கு 1 கல் தொலைவு. கெடில நதியின் வடகரையில் கோயில் இருக்கின்றது. இது அட்ட வீரட்டத் தலங்களுள் ஒன்று. விரிசடைக் கடவுள் திரிபுரத்தை எரித்த தலம் இது.

திருநாவுக்கரசு சுவாமிகளின் உடன் பிறந்த திலகவதி யம்மையார் திருத்தொண்டு செய்து, சிவபெருமானை வழிபட்ட

சிறப்புடைய தலம் இது. தம்பியாருக்கு, திலகவதியார் திருவாளன் திருநீறு அளித்து, வயிற்று வலியைத் தீர்த்த திருப்பதி இது.

திருநாவுக்கரசு சுவாமிகள் முதன்முதலாக, "கூற்றாயின வாறு" என்று தொடங்கும்தேவாரப் பதிகத்தை இத்தலத்திலேயே பாடி அருளினார்.

இக்கோவிலில் சிவலிங்கம் பட்டை பட்டையாக, அழகாகக் காட்சியளிக்கின்றது. கோயில் மிகப் பெரியது. அப்பர் சுவாமிகள், திலகவதியார் திருவுருவங்கள் இக்கோவிலில் இருக்கின்றன.

சைவசித்தாந்த சாத்திரங்கள் பதினான்கினுள் ஒன்றாகிய "உண்மை விளக்கம்" நூல்செய்த மனவாசகங் கடந்தார் பிறந்த தலம் இது.

சம்பந்தர்

அரும்பும் குரும்பையும் மலைத்த மென்கொங்கைக்
கரும்பின் மொழியாளோடு உடன்கை அனல்வீசிச்
சுரும்புஉண் விரிகொன்றைச் சுடற்பொற் சடைதாழ
விரும்பும் அதிகையுள் ஆடும்வீரட் டானத்தே.

அப்பர்

கூற்றாயின வாறு விலக்ககிலீர்!
கொடுமைபல செய்தன நான் அறியேன்;
ஏற்றாய்அடிக் கேஇர-வும்,பகலும்
பிரியாது வணங்குவன் எப்பொழுதும்
தோற்றாதுஎன் வயிற்றின் அகம்படியே
குடரோடு துடக்கி முடக்கியிட,
ஆற்றேன்அடி யேன்அதி கைக்கெடில
வீரட்டா னத்துறை அம்மானே!

*சுந்தரர்*

*வெய்தாய வினைக்கடலில் தடுமாறும உயாகசு*
*மிகஇரங்கி. அருள்புரிந்து வீடுபேறு ஆக்கம்*
*பெய்தானைப் பிஞ்ஞகனை. மைஞ்ஞவிலும் கண்டத்து*
*எண்தோள்எம் பெருமானை. பெண்பாகம் ஒருபால்*
*செய்தானைச் செக்கர்வான் ஒளியானைத் தீவாய்*
*அரவாடு சடையானைத் திரிபுரங்கள் வேவ*
*எய்தானை. எறிகெடில வடவீரட் டானத்து*
*உறைவானை இறைபோதும் இகழ்வன்போல்யானே.*

*சேக்கிழார்*

*திரைக்கெடில வீரட்டா னத்துஇருந்த செங்கனக*
*வரைச்சிலையார் பெருங்கோயில் தொழுதுவலம் கொண்டுஇறைஞ்சித்*
*தரைத்தலத்தின் மிசைவீழ்ந்து தம்பிரான் திருவருளால்*
*உரைத்தமிழ்மா லைகள்சாத்தும் உணர்வுபெற உணர்ந்துஉரைப்பார்*

## 223. திருநாவலூர்

### (திருநாமநல்லூர்)

### திருநாவலேசுரர்–சுந்தரநாயகி:மனோன்மணிஅம்மை

*சுந்தரர் : 1.*

*வழிபட்டநாள் 5–7–57; 3–12–65.*

*திருவெண்ணெய் நல்லூருக்குத் தென்கிழக்கு 5 கல் அளவு. பண்ணுருட்டி இரயில் நிலையத்திலிருந்து 10 கல் தொலைவு.*

*நாயன்மார்களை உலகத்துக்குக் காட்டிய "திருத்தொண்டத் தொகை" செய்த, பெரிய புராணத்துக்கு மூலகாரணராக இருந்த, சுந்தரமூர்த்தி சுவாமிகள் பிறந்து அருளிய திருப்பதி இது. சுந்தரரைப் பெற்றெடுத்த தாய் தந்தையராகிய இசை ஞானியார்–சடையனார் ஆகிய இரண்டு நாயனாரும் வாழ்ந்த பதி இது என்று சொல்லவும் வேண்டுமோ?*

திருநாவலூரினின்றும் பண்ணுருட்டி செல்லும் சாலையில் 5, 6 மைல் சென்று, வலது கைப்பக்கமாகத் திரும்பி ஒரு மைல் சென்றால் திருஆமூரை அடையலாம். திருநாவுக்கரசு சுவாமிகளும், திலகவதியாரும் பிறந்தருளிய ஊர் திருஆமூர். "தெய்வ நெறிச் சிவம் பெருக்கும் திருஆமூர், திருஆமூர்" என்பார் சேக்கிழார் அடிகள். திருஆமூரில் திருநாவுக்கரசு சுவாமிகள் வாழ்ந்ததாகக் கருதப் பெறுகிற ஓர் இடத்தில் புதிதாக அவருக்கு ஒரு கோயில் கட்டியிருக்கின்றார்கள். கோயில் நல்ல புதிய முறையில் அமைக்கப் பெற்றிருக்கின்றது. அக்கோயிலில் திருநாவுக்கரசர், திலகவதியார், அவர்களின் பெற்றோர்களாகிய புகழனார், மாதினியார் ஆகியவர் திருவுருவங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு சதய நாளிலும் சிறப்பாக வழிபாடு நடைபெறுகின்றது.

திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்திகள் ஆகிய இரண்டு பெரியார்களும் இவ்வளவு அண்மையில் தோன்றிய காரணத்தால் அவர்கள் பிறந்த திருமுனைப்பாடி நாட்டைப் பின்வரும் பாடலால் சேக்கிழார் அடிகள் பாராட்டி மகிழ்வார்.

மறந்தருதீ நெறிமாற மணிகண்டர் வாய்மைநெறி
அறந்தருநா வுக்கரசும் ஆலால சுந்தரரும்
பிறந்தருள உளதானால் நம்மளவோ? பேருலகில்
சிறந்ததிரு முனைப்பாடித் திறம்பாடும் சீர்ப்பாடு.

வில்லிபுத்தூராழ்வார் மைந்தர் வரந்தருவார்,

தேவரும் மறையும் இன்னமும் காணாச்
செஞ்சடைக் கடவுளைப் பாடி,
யாவரும் மதித்தோர் மூவரில் இருவர்
பிறந்தநாடு இந்தநன் னாடு.

என்று எக்களிப்போடு இயம்புவார்.

சுந்தரர்

நாதனுக்கு ஊர்நமக்கு ஊர்;நர சிங்க முனை அரையன்
ஆதரித்து ஈசனுக்கு ஆட்செயும் ஊர்அணி நாவலூர்என்று
ஓதநல் தக்கவன் தொண்டன்ஆ ரூரன் உரைத்ததமிழ்
காதலித் தும்,கற்றும் கேட்பவர் தம்வினைக் கட்டுஅறுமே.

சேக்கிழார்

பெருகிய நலத்தால் மிக்க பெருந்திரு நாடு தன்னில்
அருமறைச் சைவம் ஓங்க அருளினால் அவத ரித்த
மருவிய தவத்தால் மிக்க வளம்பதி. வாய்மை குன்றாத்
திருமறை யவர்கள் நீடும் திருநாவ லூராம் அன்றே.

## 224. திருமுதுகுன்றம்

### (விருத்தாசலம்)

### பழமலைநாதர்-பெரியநாயகி;பாலாம்பிகை.

சம்பந்தர் : 7 அப்பர் : 1 சுந்தரர் : 3.

வழிபட்டநாள் : 6-7-57; 5-1-66

திருச்சி-விழுப்புரம் இருப்புப் பாதையில் உள்ள இரயில் நிலையம். இரயில்வே சந்திப்பினின்றும் கோயில் இரண்டு கல் தொலைவில் இருக்கின்றது.

கோவில் மிகப்பெரியது. அம்மன் சந்நிதி இரண்டு இருக்கின்றன. முதுகுன்றம், பழமலை, விருத்தாசலம் எல்லாம் ஒரே பொருளைக் குறிப்பன.

தரைக்குக் கீழ் 16 படிகள் இறங்கி அங்குள்ள ஆழத்துப் பிள்ளையாரை வணங்க வேண்டும்.

சம்பந்தர்

மஞ்சர்தாம் மலர்கொடு வானவர் வணங்கிட
வெஞ்சொலார் வேடரோடு ஆடவர் விரும்பவே
அஞ்சொலாள் உமையொடும் அமர்விடம் அணிகலைச்
செஞ்சொலார் பயில்தரும் திருமுது குன்றமே.

அப்பர்

எத்திசையும் வானவர்கள் தொழநின் றானை,
ஏறூர்ந்த பெம்மானை, எம்மான் என்று
பத்தனாய்ப் பணிந்துஅடியேன் தன்னைப் பன்னாள்
பாமாலை பாடப் பயில்வித் தானை,
முத்தினை,என்மணியை, மாணிக் கத்தை,
முளைத்துஎழுந்த செம்பவளக் கொழுந்துஒப்.பானை
சித்தனை,என் திருமுதுகுன்று உடையான் தன்னை,
தீவினையேன் அறியாதே திகைத்த வாறே.

சுந்தரர்

கொந்தண வும்பொழில்சூழ் குளிர்மாமதில் மாளிகைமேல்
வந்தண வும்மதிசேர் சடைமாமுது குன்றுடையாய்!
பந்தண வும்விரலாள் பரவை இவள் தன்முகப்பே
அந்தண னே!அருளாய் அடியேன்இட் டளம்கெடவே.

சேக்கிழார்

"மொய்கொள் மாமணி கொழித்துமுத்து
ஆறுசூழ் முதுகுன்றை அடைவோம்"என்று
எய்து சொல்மலர் மாலைவண்
பதிகத்தை இசையொடும் புனைந்துஏத்திச்
செய்த வத்திரு முனிவரும்
தேவரும் திசைஎலாம் நெருங்கப்புக்கு
ஐயர் சேவடி பணியும்அப்
பொருப்பினில் ஆதர வுடன்சென்றார்.

# 225. திருநெல்வெண்ணெய்

## (நெய்வெணை)

## வெண்ணெயப்பர்–நீலமலர்க்கண்ணி

சம்பந்தர் : 1.

வழிபட்டநாள் : 25–6–58; 5–1–66.

உளுந்தூர்ப்பேட்டை இரயில் நிலையத்திலிருந்து வடமேற்கே நான்கு கல் தொலைவு. பாதை மிகவும் மோசமானது

நல்வெணெய் விழுதுபெய் தாடுதிர் நாள்நொறும்
நெல்வெணெய் மேவிய நீரே;
நெல்வெணெய் மேவிய நீர்உமை நாள்தொறும்
செல்வணம் இடுவது சொல்லே.

## 226. திருக்கோவலூர்

### வீரட்டேசுரர்–சிவானந்தவல்லி

சம்பந்தர் : 1. அப்பர் : 1.
வழிபட்டநாள் : 3–12–57 ; 6–12–65.

விழுப்புரம்–திருவண்ணாமலை இருப்புப் பாதையில் உள்ள இரயில் நிலையம். பெண்ணையாற்றின் தென்கரையில் கோயில் இருக்கின்றது. இத்தலம் அட்டவீரட்டங்களுள் ஒன்று. அந்தகாசுரனை அழித்த பதி.

இத்தலத்தில் திவ்வியப் பிரபந்தம் பெற்ற உலகளந்த பெருமாள் கோயில் இருக்கின்றது.

இத்தலத்தைப் பற்றி அப்பர் சுவாமிகள் பாடிய, "தலை சுமந்து இருகைநாற்றி" என்ற சொல் தொடரை, கவிச் சக்கரவர்த்தி கம்பர் எடுத்து ஆண்டிருக்கின்றார்.

மெய்ப்பொருள் நாயனார் பிறந்து, சிறப்பாக அரசாண்டு தன்னைக் கொன்றவனையும் மன்னித்த திருப்பதி இத்திருக் கோவலூர்.

**சம்பந்தர்**

உரையும்பாட்டும் தளர்வுஎய்தி உடம்புமூத்த போதின்கண்
நரையும்திரையும் கண்டுஎள்கி நகுவர்நமர்கள் ஆதலால்
வரைகொள்பெண்ணை வந்துலா வயல்கள்சூழ்ந்தகோவலூர்
விரைகொள்சீர் வெண்ணீற்றினான் வீரட்டானம் சேர்துமே.

### அப்பர்

தலைசுமந்து இருகை நாற்றித் தரணிக்கே பொறைய தாகி.
நிலையிலா நெஞ்சம் தன்னுள் நித்தலும் ஐவர் வேண்டும்
விலைகொடுத்து அறுக்க மாட்டேன்;வேண்டிற்றே வேண்டி எய்த்தேன்;
குலைகொள்மாங் கனிகள் சிந்தும் கோவல்வீ ரட்ட னீரே.

### சேக்கிழார்

சேதிநன் னாட்டுநீடு திருக்கோவ லூரின் மன்னி
மாதொரு பாகர் அன்பின் வழிவரு மலாடர் கோமான்
வேதநன் னெறியின் வாய்மை விளங்கிட மேன்மை பூண்டு
காதலால் ஈசற்கு அன்பர் கருத்துஅறிந்து ஏவல் செய்வார்.

### வில்லிபுத்தூர் ஆழ்வார்

உருகும்கமழ் நெய்பால்இரு பாலும்கரை ஒத்துப்
பெருகும்துறை ஏழ்ஏழு பிறப்பும்கெட மூழ்கி.
கருகும்கரு முகில்மேனியர் கவிஞானியர் கண்ணில்
பருகும்சுவை அமுதுஆனவர் பாதம்தலை வைத்தான்.

# 227. அறையணிநல்லூர்

## அறையணிநாதர்–அருள்நாயகி

சம்பந்தர் : 1.

வழிபட்டநாள் : 3–12–57; 6–12–65.

திருக்கோவலூர் கோயிலுக்கு வடக்கே பெண்ணையாற்றின் வடகரையில் ஒரு சிறு குன்றில் இக்கோயில் இருக்கின்றது. மேற்குப் பார்த்த சந்நிதி.

### சம்பந்தர்

இலையி னார்சூலம் ஏறுஉகந்து ஏறி யேஇமை யோர்தொழ
நிலையி னால்ஒரு கால்உறச் சிலையி னால்மதில் எய்தவன்
அலையி னார்புனல் சூடிய அண்ண லார்அறை அணிநல்லூர்
தலையி னால்தொழுது ஓங்குவார் நீங்கு வார்தடு மாற்றமே.

## 228. இடையாறு

### இடையாற்றீசர்–சிற்றிடைநாயகி

*சுந்தரர் : 1.*

*வழிபட்டநாள் : 8–9–57; 3–12–65.*

*திருவெண்ணெய் நல்லூருக்கு வடமேற்கு; 3 கல் அளவு.*

*சைவசமய சந்தானகுரவர்களுள் ஒருவராகிய அருள் நந்தி சிவத்தின் சீடரும், உமாபதி சிவத்தின் குருவும் ஆகிய மறைஞானசம்பந்தர் பிறந்தது இத்தலம் என்பர்.*

*சுந்தரர்*

*திங்களூர் திருவா திரையான் பட்டினமூர்*
*நங்களூர் நறையூர் நனிநால் இசைநாலூர்*
*தங்களூர் தமிழான் என்றுபா லிக்கவல்ல*
*எங்களூர் எய்தமான் இடையாறு இடைமருதே.*

## 229. திருவெண்ணெய்நல்லூர்

### தடுத்தாட்கொண்டநாதர்–வேல்கண்ணி

*சுந்தரர் : 1.*

*வழிபட்டநாள் : 8–9–57; 3–12–65.*

*விழுப்புரம்–திருச்சி குறுக்கு இருப்புப் பாதையில் உள்ள திருவெண்ணெய் நல்லூர் ரோடு என்னும் இரயில் நிலையத்திலிருந்து 4 கல் தொலைவு. பண்ணுருட்டிக்கு மேற்குப் பதினைந்து மைல். விழுப்புரத்தினின்றும் 12 கல். திருக்கோவலூரிலிருந்து 14 மைல்.*

இறைவன் இருமணத்திற்குக்காரணமாகச் சுந்தரமூர்த்திகளை ஒருமணத்தில் தடுத்தாட்கொண்டது இத்தலத்தில்தான் இத்தலத்துக்கு அணித்தே "மணம் தவிர்ந்த புத்தூர்" என்று ஒரு கிராமம் இருக்கிறது. அங்குத்தான் சிவபெருமான் ஓலை காட்டி மணத்தைத் தவிர்த்தார் என்பர். திருவெண்ணெய் நல்லூரிலுள்ள கோயிலுக்கு அருள்துறை என்று பெயர்.

சுந்தரமூர்த்தி சுவாமிகளின் முதல் தேவாரம் எழுந்தது இத்தலத்திலேயே.

சிவஞானபோதம் அருளிய மெய்கண்ட தேவர் இத்தலத்தில் வாழ்ந்தார். "வெண்ணெய் மேவும் மெய்கண்ட தேவன்" என அருள்நந்திசிவம் போற்றுவார். இத்தலத்தில் மெய்கண்ட தேவருக்கு ஒரு தனிக் கோயில் இருக்கிறது.

கம்பர்பிரானை ஆதரித்த சடையப்ப வள்ளல் வாழ்ந்த திருவெண்ணெய் நல்லூர் இஃது அன்று என்பர் ஆராய்ச்சிக்காரர்.

சுந்தரர்

பித்தா!பிறை சூடீ!பெரு மானே!அரு ளாளா
எத்தான்மற வாதேநினைக் கின்றேன்மனத்து உன்னை.
வைத்தாய்பெண்ணைத் தென்பால் வெண்ணெய்நல்லூர் அருள்துறையுள்
அத்தா!உனக்கு ஆளாய்இனி அல்லேன் எனல் ஆமே.

சேக்கிழார்

சொல்லார்தமிழ் இசைபாடிய தொண்டன்தனை. "இன்னும்
பல்லாறுல கினில்நம்புகழ் பாடு"என்றுஉறு பரிவில்
நல்லார்வெண்ணெய் நல்லூர்அருள் துறைமேவிய நம்பன்
எல்லாஉல குய்யப்புரம் எய்தான்அருள் செய்தான்.

வில்லிபுத்தூர் ஆழ்வார்

ஐஆனனன் இயல்வாணனை அடிமைக்கொள மெய்யே
பொய்ஆவணம் எழுதும்பதி பொற்போடு வணங்கா
மெய்ஆகம அதிகைத்திரு வீரட்டமும் நேமிக்
கையாளன்அ கிந்திரபுர மும்கண்டுகை தொழுதான்.

# 230. துறையூர்

## (திருத்தளூர்)

## பசுபதீசுரர்–பூங்கோதைநாயகி

*சுந்தரர் : 1.*

*வழிபட்டநாள் : 26–6–58; 4–1–66.*

*இரயில் நிலையம்: பண்ணுருட்டியிலிருந்து வடமேற்கே சுமார் 6 மைல்.*

*சிவஞான சித்தியார் ஆசிரியரும், சைவசமய சந்தான குரவர்களுள் ஒருவரும் ஆகிய சகல ஆகம பண்டிதர் அருணந்தி சிவாசாரிய சுவாமிகள் பிறந்தருளிய தலம் இது.*

*சிவன் கோவிலுக்கு எதிரில் அருள் நந்தி சிவத்துக்கு ஒரு மிகச் சிறிய கோவில் இருக்கிறது. இக்கோவில், சித்தியார் ஆசிரியர் பெருமைக்குச் சிறிதும் உகந்ததாக இல்லை. கோவில் நல்ல பராமரிப்பில் இல்லை. இது திருவாவடுதுறை ஆதீனத்தைச் சேர்ந்ததென்று சொல்லப்படுகிறது.*

*சுந்தரர்*

*மாவாய்ப் பிளந்தானும் மலர்மிசை யானும்*
*ஆவா அவர்தேடித் திரிந்தல மந்தார்*
*பூவார்ந்தன பொய்கைகள் சூழும் துறையூர்த்*
*தேவா! உனைவேண்டிக் கொள்வேன் தவநெறியே.*

# 231. வடுகூர்

## (ஆண்டார்கோயில்)

## வடுகேசுரர்–வடுவகிர்க்கண்ணி

**சம்பந்தர் : 1**

**வழிபட்டநாள் : 8–9–57; 4–12–65.**

**விழுப்புரம் புதுச்சேரி இருப்புப் பாதையிலுள்ள சின்னபாபு சமுத்திரம் இரயில் நிலையத்தினின்றும் மேற்கே 2 கல் தொலைவு. புதுச்சேரிக்கு மேற்கே 12 கல்.**

சம்பந்தர்

நெடியர்; சிறிதாய நிரம்பா மதிசூடும்
முடியர்; விடையூர்வர்; கொடியர் மொழிக்கொள்ளார்;
கடிய தொழிற்காலன் மடிய உதைகொண்ட
அடியர்; வடுகூரில் ஆடும் அடிகளே.

# 232. திருமாணிகுழி

## மாணிக்கவரதர்–மாணிக்கவல்லி

சம்பந்தர் : 1.
வழிபட்டநாள் : 5–7–57; 19–3–66.

திருப்பாதிரிப்புலியூர் இரயில் நிலையத்திற்கு மேற்கே 2½ கல் தொலைவிலுள்ள திருவகீந்திரபுரம் என்னும் திருமால் தலத்தை அடைந்து, அத்தலத்திற்குத் தென்புறத்திலிருக்கும் கேபர் மலை ஓரமாகக் கொடி வழி மேற்கே 1 மைல் சென்றால் இத்தலத்தை அடையலாம். கோவில் கெடில ஆற்றின் தென் கரையில் இருக்கிறது.

சம்பந்தர்

நித்தநிய மத்தொழில னாகிநெடு
மால்குறள னாகி மிகவும்
சித்தமதுஒ ருக்கிவழி பாடுசெய்–
–கின்றசிவ லோகன் இடமாம்
கொத்தலர்ம லர்ப்பொழிலின் நீடுகுல
மஞ்ஞைநடம் ஆடல் அதுகண்டு
ஒத்தவரி வண்டுகள் உலாவிஇசை
பாடுதவு மாணி குழியே.

# 233. திருப்பாதிரிப்புலியூர்

## தோன்றாத்துணை நாதர்–தோகையம்பிகை
## (பாடலீசுரர்–பெரியநாயகி)

சம்பந்தர் : 1; அப்பர் : 1.
வழிபட்டநாள் : 5–7–57; 3–12–65

இரயில் நிலையம்:

அப்பர் சுவாமிகள் கல் தோணி உகைத்து நமச்சிவாயத் திருப்பதிகத்தை ஓதிக் கரை ஏறிய தலம். "பூந்திருப்பாதிரிப் புலியூர்ப் பாங்கரில்" அப்பர் கரையேறினார் என்று சேக்கிழாரடிகள் செப்புவர். தலத்தின் அணித்தே கடல் இருக்கின்றது. கரையேறவிட்ட குப்பம் என்று அங்கு ஓர் இடம் இருக்கிறது.

இத்தலத்திற்குச் சிதம்பரநாத முனிவர் இயற்றிய தல புராணமும், தொல்காப்பிய முனிவர் என்பார் இயற்றிய கலம்பகமும் இருக்கின்றன.

சம்பந்தர்

ஆகநல்லார் அமுதுஆக்க உண்டான்; அழல்ஐந்தலை
நாகநல்லார் பரவந்நயந்து அங்குஅரை ஆர்த்தவன்;
போகநல்லார் பயிலும் பாதிரிப் புலியூர்தனுள்
பாகநல்லா ளொடும்நின்ற எம்பர மேட்டியே.

அப்பர்

மண்பா தலம்புக்கு மால்கடல் மூடிமற்று ஏழுலகும்
விண்பால் திசைகெட்டு இருசுடர் வீழினும் அஞ்சல்நெஞ்சே!
திண்பால் நமக்குஒன்று கண்டோம்! திருப்பா திரிப்புலியூர்க்
கண்பாவு நெற்றிக் கடவுள் சுடரான் கழல்இணையே.

சேக்கிழார்

வாய்ந்தசீர் வருணனே வாக்கின் மன்னரைச்
சேர்ந்துஅடை கருங்கலே சிவிகை ஆயிட,
ஏந்தியே கொண்டுஎழுந்து அருளு வித்தனன்;
பூந்திருப் பாதிரிப் புலியூர்ப் பாங்கரில்.

## 234. திருமுண்டீச்சுரம்

### (முண்டீசர்–கானார்குழலி)

### (சிவலோகநாதர்–செல்வநாயகி)

அப்பர் : 1.

வழிபட்டநாள் : 8–9–57; 3–12–65

திருவெண்ணெய் நல்லூருக்குக் கிழக்கே 3 கல் தொலைவு. திருவெண்ணெய் நல்லூர் ரோடு இரயில் நிலையத்தினின்றும் திருவெண்ணெய் நல்லூர் செல்லும் வழியில் 1 மைல் அளவில் இத்தலம் இருக்கிறது.

**அப்பர்**

மூவன்காண்; மூவர்க்கும் முதலா னான்காண்;
முன்னுமாய்ப் பின்னுமாய் முடிவா னான்காண்;
காவன்காண்; உலகுக்கோர் கண்ணா னான்காண்;
கங்காளன் காண்;கயிலை மலையி னான்காண்;
ஆவன்காண்; ஆவகத்துஅஞ்சு ஆடி னான்காண்
ஆர்அழலாய் அயற்குஅரிக்கும் அறிய ஒண்ணாத்
தேவன்காண்; திருமுண்டீச் சரத்துமேய சிவலோகன்
காண்; அவன்என் சிந்தை யானே.

## 235. புறவார்பனங்காட்டூர்

### (பனையபுரம்)

### பனங்காட்டீசர்–புறவம்மை

சம்பந்தர் : 1.

வழிபட்டநாள் : 8–9–57; 4–12–65.

விழுப்புரம் இ ரயில் நிலையத்திற்கு வடக்கே 5½ கல் தொலைவு. முண்டியம்பாக்கம் இரயில் நிலையத்தினின்றும் வடகிழக்கே 2 கல் அளவு. இங்கு இரண்டு பழைய பனைமரங்கள் இருக்கின்றன.

இத்தலத்தில் சித்திரை முதல் தேதி முதல் ஏழாம் நாள்வரை, சூரியன் உதிக்குங்கால் சூரிய ஒளி முதலில் சுவாமி மேலும் பிறகு தேவி மேலும் விழுகின்றதாம்.

*சம்பந்தர்*

*கைய ரிவையர் மெல்வி ரல்லவை*
*காட்டி அம்மலர்க் காந்த ளங்குறி*
*பைய ராவிரி யும்புற வார்பனங் காட்டூர்*
*மெய்ய ரிவைஓர் பாக மாகவும்*
*மேவி னாய்கழ லேத்தி நாள்தொறும்*
*பொய்யி லாஅடி மைபு ரிந்தார்க்குஅரு ளாயே.*

## 236. திருஆமாத்தூர்

### அபிராமஈசர்–முத்தாம்பிகை

***சம்பந்தர் : 2; அப்பர் : 2 சுந்தரர் : 1.***
***வழிபட்டநாள் : 8–9–57; 4–12–65.***

விழுப்புரம் இரயில் நிலையத்தினின்றும் வடமேற்கே 4 கல் தொலைவு. பம்பை என்னும் சிறிய ஆற்றின் வட கரையில் கோயில் இருக்கிறது.

*இரட்டையர்கள் இத்தலத்திற்குக் கலம்பகம் பாடியுள்ளார்கள்.*

*சம்பந்தர்*

*கோண்நாகப் பேர்அல்குல் கோல்வளைக்கை மாதராள்*
*பூண்ஆகம் பாகமாப் புல்கி அவளோடும்*
*ஆண்ஆகம் காதல்செய் ஆமாத்தூர் அம்மானைக்*
*காணாத கண்எல்லாம் காணாத கண்களே.*

அப்பர்

வெந்தார்வெண் பொடிப்பூசி வெள்ளை மாலை
விரிசடைமேல் தாம்சூடி வீணை ஏந்திக்
கந்தாரம் தாம்முரலாப் போகா நிற்கக்
கறைசேர் மணிமிடற்றீர் ஊர்ஏது என்றேன்;
நொந்தார்போல் வந்து,எனது இல்லே புக்கு,
"நுடங்குஏர் இடைமடவாய்! நம்ஊர் கேட்கில்,
அந்தா மரைமலர்மேல் அளிவண்டு யாழ்செய்
ஆமாத்தூர்" என்று அடிகள் போயி னாரே.

சுந்தரர்

ஓர்ந்தனன் ஓர்ந்தனன் உள்ளத்துள்-
-ளேநின்ற ஒண்பொருள்;
சேர்ந்தனன் சேர்ந்தனன் சென்று
திருஒற்றி யூர்புக்குச்
சார்ந்தனன் சார்ந்தனன் சங்கிலி
மென்தோள் தடமுலை;
ஆர்ந்தனன் ஆர்ந்தனன் ஆமாத்தூர்
ஐயன்அருளதே.

# 237. திருவண்ணாமலை

## அண்ணாமலையார்-உண்ணாமுலையாள்

**சம்பந்தர் 2. அப்பர் : 3.**

**வழிபட்டநாள் : 29-11-55; 14-11-65.**

விழுப்புரம் காட்பாடி இருப்புப் பாதையில் உள்ள ஓர் இரயில் நிலையம். கோயில் மிகப் பெரிது. திருமாலும் பிரமனும் சிவபிரானின் அடிமுடி தேடிக் காண முடியாத தலம் இது. பஞ்சபூதத் தலங்களுள் இஃது ஒன்று. நெருப்புத்தலம். இத்தலத்தைச் சுந்தரரும் பாடியிருக்கத்தான் வேண்டும்.

"விளவார்கனி படநூறிய
கடல்வண்ணனும் வேதக்
கிளர்தாமரை மலர்மேலுறை
கேடில்புக ழோனும்
அளவாவணம் அழலாகிய
அண்ணாமலை அண்ணல்"

என்பது தேவாரம். அண்ணாமலையார் கோயில் மலையின் அடிவாரத்தில் இருக்கின்றது. திருக்கார்த்திகை விழா இங்குப் பெருஞ் சிறப்பாக நடைபெறுகின்றது. மலையின் உச்சியில் பேரொளியுடன் கூடிய விளக்கு ஏற்றப்படுகின்றது. 'அண்ணாமலை தீபம்' என்றே அதற்குப் பெயர்.

அருணகிரிநாதர் வாழ்ந்த ஊர் திருவண்ணாமலையே ஆகும். சில ஆண்டுகளாக இத்தலத்தில் அருணகிரியாருக்கு ஆகஸ்டுப் பதினைந்தாம் நாளில் பெருவிழா எடுக்கின்றனர்.

இத்தலத்தில் ஏராளமான சத்திரங்களும் விடுதிகளும் இருக்கின்றன. நாட்டுக்கோட்டை நகரத்தார் இங்கு நிறைந்த அறங்கள் செய்திருக்கின்றனர்.

இத்தலம் திருவாசகப் பெருமையும் பெற்றிருக்கின்றது. திருவாசகம் திருவண்ணாமலையை 3 இடங்களில் குறிப்பிடுகின்றது. திருவெம்பாவை இத்தலத்திலேயே எழுந்தது என்று கூறுப.

இத்தலத்துக்கு அண்ணாமலை வெண்பா என்னும் பெயருடன் ஓர் அரிய நூலை குருநமச்சிவாயப் புலவர் இயற்றியிருக்கின்றார்.

மலைச் சுற்றில் அணி அண்ணாமலை என்ற ஒரு சிவன் கோவில் இருக்கின்றது. குகைநமச்சிவாயர், குருநமச்சிவாயர், ஈசான ஞான தேசிகர், குன்றக்குடியில் திருவண்ணாமலை ஆதீன மடாலயத்தைக் கண்ட தெய்வசிகாமணி தேசிகர், ரமண மகரிஷிகள் முதலிய ஞானச் செல்வர்கள் இப்பதியில் வாழ்ந்தனர்.

சம்பந்தர்

தேடிக் காணார் திருமால் பிரமன் தேவர் பெருமானை
மூடிஓங்கி முதுவேய் உகுத்த முத்தம் பலகொண்டு
கூடிக் குறவர் மடவார், குவித்துக் கொள்ள வம்மின்என்று
ஆடிப் பாடி அளக்கும் சாரல் அண்ணா மலையாரே.

### அப்பர்

பைம்பொனே! பவளக் குன்றே!
பரமனே! பால்வெண் நீறா!
செம்பொனே! மலர்செய் பாதா!
சீர்தரு மணியே! மிக்க
அம்பொனே கொழித்து வீழும்
அணிஅணா மலையு ளானே!
எம்பொனே! உன்னை அல்லால்
ஏதுநான் நினைவி லேனே.

### மணிவாசகர்

விண்ஆளும் தேவர்க்கும் மேலான வேதியனை.
மண்ஆளும் மன்னவர்க்கும் மாண்பாகி நின்றானை.
தண்ஆர் தமிழ்அளிக்கும் தண்பாண்டி நாட்டானை.
பெண்ஆளும் பாகனைப் பேணு பெருந்துறையில்
கண்ஆர் கழல்காட்டி நாயேனை ஆட்கொண்ட
அண்ணா மலையானைப் பாடுதும்காண் அம்மானாய்!

### சேக்கிழார்

அண்ணா மலைமேல் அணிமலையை
ஆரா அன்பின் அடியவர்தம்
கண்ணார் அமுதை விண்ணோரைக்
காக்கக் கடலில் வந்துஎழுந்த
உண்ணா நஞ்சம் உண்டானைக்
கும்பிட்டு உருகும் சிந்தையுடன்
பண்ணார் பதிகத் தமிழ்பாடிப்
பணிந்து பரவிப் பணிசெய்தார்.

### வில்லிபுத்தூர் ஆழ்வர்

பெற்றாள்சகத்து அண்டங்கள் அனைத்தும்,அவைபெற்றும்
முற்றாமுகிழ் முலையாளொடு முக்கண்ணர் விரும்பும்
பற்றாம்என மிக்கோர்இகழ் பற்றுஒன்றினும் உண்மை
கற்றார்தொழும் அருணாசலம் அன்போடுகை தொழுதான்.

### குருநமச்சிவாயர்

கண்டம் கரியமலை; கண்மூன்று உடையமலை;
அண்டர்எலாம் போற்றற்கு அரியமலை;-தொண்டருக்குத்
தோற்றுமலை; நாளும் தொழுவோர் எழுபிறப்பை
மாற்றுமலை அண்ணா மலை.

-அண்ணாமலை வெண்பா

### சைவ எல்லப்ப நாவலர்

ஒருமானைக் கரத்தினில்வைத்து. ஒருமானைச்
சிரத்தினில்வைத்து. உலகம் ஏழும்
தருமானை இடத்தினில்வைத்து. அருள்வானைப்
பவளநெடும் சயிலம் போல
வரும்ஆனை முகத்தானை அளித்தானைப்
பெரும்ஆனை மகிழ ஏறும்
பெருமானை. அருணகிரிப் பெம்மானை
அடிபணிந்து பிறவி தீர்ப்பாம்.

### சைவஎல்லப்ப நாவலர்

கார்ஒழுகும் குழலாளை. கருணைவழிந்து
ஒழுகும்இரு கடைக்கண் ணாளை.
மூரல்இள நிலவுஒழுக. புழுகுஒழுக.
அழகுஒழுகும் முகத்தி னாளை.
வார்ஒழுகும் தனத்தாளை. வடிவுஒழுகித்
தெரியாத மருங்கு லாளை.
சீர்ஒழுகும் பதத்தாளை. அருணைஉண்ணா–
–முலையாளை. சிந்தை சேர்ப்பாம்.

(அருணாசலப்புராணம்)

### இராமலிங்க சுவாமிகள்

தேடுவார் தேடும் செல்வமே! சிவமே!
திருஅரு ணாபுரித் தேவே!
ஏடுவார் இதழிக் கண்ணிஎங் கோவே!
எந்தையே! எம்பெரு மானே!
பாடுவார்க்கு அளிக்கும் பரம்பரப் பொருளே!
பாவியேன் பொய்எலாம் பொறுத்து
நாடுவார் புகழும் நின்திருக் கோயில்
நண்ணுமா எனக்குஇவண் அருளே.

# 7. தொண்டை நாடு

(32 தலங்கள்)

# 238. கச்சிஏகம்பம்

## (காஞ்சிபுரம்)

## ஏகாம்பரநாதர்

சம்பந்தர் : 4; அப்பர் : 7; சுந்தரர் : 1.

வழிபட்டநாள் : 11-9-57; 22-1-66.

இரயில் நிலையம்:

மிகப் பழமையான பதி. காஞ்சி நகரத்தில் கச்சி ஏகம்பம், கச்சி அநேகதங்காபதம், கச்சி மேற்றளி, கச்சி நெறிக் காரைக் காடு, ஓணகாந்தன் தளி, எனத் தேவாரம் பெற்ற சிவன் கோவில் 5 இருக்கின்றன. இவ்வைந்து கோயில்களிலும் இறைவி சந்நிதி இல்லை. அந்த நாளில் சிவன் கோவிலில் அம்பிகை சந்நிதி அமைப்பதில்லை என்பதற்கு எடுத்துக்காட்டாக விளங்குகின்றது காஞ்சிக் கோவில்கள்.

காஞ்சியில் காமாட்சி அம்மனுக்கு ஒரு தனிக் கோவில் இருக்கிறது. அங்கு இறைவன் திருவுருவம் இல்லை. காமாட்சி அம்மனுக்கு அறம்வளர்த்த நாயகி என்றொரு பெயர். 32 அறங்களையும் வளர்த்தாள் அம்பிகை என்பது கருத்து.

பாடற் சிவன் கோவில்கள் தவிர மேலும் பல பழமையான சிற்பக்கலை மல்கிய கைலாசநாதர் கோவில் போன்ற சிவன் கோவில்களும் இருக்கின்றன.

திவ்வியப் பிரபந்தம் பெற்ற திருமால் கோவில் காஞ்சி நகர எல்லைக்குள் 14 இருக்கின்றன.

முருகனுக்கு ஒரு தனிக் கோவில். அதற்குக் குமர கோட்டம் என்று பெயர்.

ஏகாம்பர நாதர் கோவிலுக்குள்ளேயே கச்சி மயானம், என்ற ஒரு தேவார வைப்புக் கோவிலும் இருக்கின்றது.

பஞ்சபூதத் தலங்களுள் ஒன்றாகிய பிருதுவி தலம் காஞ்சி என்று சிலரும் திருவாரூர் என்று வேறு சிலரும் கூறுவர்.

அம்பிகை இறைவனை வழிபட்டுத் தழுவிக்கொண்ட காரணத்தால் தழுவக் குழைந்தார் என்று இறைவனுக்கு ஒரு பெயர் உண்டு.

ஐயடிகள் காடவர்கோன் அரசாண்ட தலம் இது. இத்தலத்தைத் தலை நகராகக்கொண்டு பல்லவ மன்னர் பலரும் ஆண்டிருக்கின்றனர். சுந்தரமூர்த்தி சுவாமிகள், இழந்த இடக்கண் பெற்ற பதி. திருக்குறிப்புத் தொண்ட நாயனார், பிறந்தருளிய தலம். சாக்கிய நாயனார் வீடு பேறடைந்த தலம், திருவாசகத்தில் காஞ்சியை 6 இடங்களில் குறிப்பிடுவார்.

வில்லிபுத்தூர் ஆழ்வார் தல .யாத்திரை வந்த பார்த்தன் காஞ்சிக்கு வந்ததைக் கூறுமிடத்து, காஞ்சிக் காமாட்சியை வாய் கொள்ளாமல் பாடி மகிழ்வார்.

மாதவச் சிவஞான யோகிகள் காஞ்சிக்கு ஒரு அரியபுராணம் பாடியுள்ளார். அப் புராணத்தில் வரும் நால்வர் வணக்கம் இணையற்றன.

கந்தபுராணம் பாடிய கச்சியப்பச் சிவாச்சாரிய சுவாமிகள் காஞ்சி நகரத்தில் பிறந்தவர்.

### சம்பந்தர்

மழுவாளோடு எழில்கொள்சூ லப்படை வல்லார்தம்
கெழுவாள்ஓர் இமையார்உச் சிஉமை யாள்நங்கை
வழுவாமே மல்குசீ ரால்வளர் ஏகம்பம்
தொழுவாரே விழுமியார் மேல்வினை துன்னாமே.

### அப்பர்

உமையவளை ஒருபாகம் சேர்த்தி னான்காண்;
உகந்துஒலிநீர்க் கங்கைசடை ஒழுக்கி னான்காண்;
இமய வடகயிலைச் செல்வன் தான்காண்;
இல்பலிக்குச் சென்றுஉழலும் நல்கூர்ந் தான்காண்;
சமயம்அவை ஆறினுக்கும் தலைவன் தான்காண்;
தத்துவன்காண்; உத்தமன்காண்; தானே யாய
இமையவன்காண் எழில்ஆரும் பொழிலார் கச்சி
ஏகம்பன் காண்அவன்என் எண்ணத் தானே.

### சுந்தரர்

வெல்லு வெண்மழு ஒன்றுடை யானை,
வேலை நஞ்சுண்ட வித்தகன் தன்னை,
அல்லல் தீர்த்து அருள் செய்யவல் லானை,
அரும றையவை அங்கம்வல் லானை,
அந்த மில்புக ழான்உமை நங்கை
ஆதரித்து வழிபடப் பெற்ற
கந்த வார்சடைக் கம்பன்எம் மானைக்
காணக் கண்அடி யேன்பெற்ற வாறே.

### மணிவாசகர்

ஈர்அம்பு கண்டிலம் ஏகம்பர் தன்கையில்
ஓர்அம்பே முப்புறம் உந்தீபற!
ஒன்றும் பெருமிகை உந்தீபற!

### ஐயடிகள் காடவர்கோன் நாயனார்

என்நெஞ்சே! உன்னை இரந்தும் உரைக்கின்றேன்;
கன்னம்செய் வாய்ஆகில் காலத்தால் வன்னெஞ்சே!
மாகம்பத்து ஆனை உரித்தானை, வண்கச்சி
ஏகம்பத் தானை இறைஞ்சு.

### பட்டினத்துப் பிள்ளையார்

மெய்த்தொண்டர் செல்லும் நெறிஅறி யேன்,மிக நற்பணிசெய்
கைத்தொண்டர் தம்மிலும் நல்தொண் டுவந்திலன், உண்பதற்கே
பொய்த்தொண்டு பேசிப் புறம்புற மேஉன்னைப் போற்றுகின்ற
இத்தொண்ட னேன்பணி கொள்ளுதி யோகச்சி ஏகம்பனே!

### சேக்கிழார்

திருவா யிலினைப் பணிந்துஎழுந்து,
செல்வத் திருமுன் றிலைஅணைந்து,
கருவார் கச்சி ஏகம்பர்
கனக மணிமா ளிகைசூழ்ந்து,
வருவார் செம்பொன் மலைவல்லி
தழுவக் குழைந்த மணிமேனிப்
பெருவாழ் வினைமுன் கண்டு இறைஞ்சிப்
பேரா அன்பு பெருக்கினார்.

"விண்ஆள்வார் அமுதுஉண்ண மிக்கபெரு விடம்உண்ட
கண்ணாளா! கச்சிஏ கம்பனே! கடையானேன்
எண்ணாத பிழைபொறுத்திங்கு யான்காண எழிற்பவள
வண்ணா!கண் அளித்து அருளாய்" எனவீழ்ந்து வணங்கினார்.

வில்லிபுத்தூர் ஆழ்வார்

இச்சைப்படி தன்பேர்அறம் எண்நான்கும் வளர்க்கும்
பச்சைக்கொடி விடையோன்ஒரு பாகம்திறை கொண்டாள்
செச்சைத்தொடை இளையோன்நுகர் தீம்பால்மணம் நாறும்
கச்சைப்பொரு முலையாள்உறை கச்சிப்பதி கண்டான்.

## 239. கச்சிமேல்தளி

## (காஞ்சீபுரம்)

## திருமேற்றளிநாதர்

அப்பர் : 1; சுந்தரர் : 1.

வழிபட்டநாள் : 12–9–57; 24–1–66

இக்கோவில்காஞ்சிநகரத்தின்மேற்குப்பகுதியாகிய பிள்ளைப் பாளையத்தில் இருக்கின்றது.

அப்பர்

மண்ணினை உண்ட மாயன்
தன்னையோர் பாகம் கொண்டார்;
பண்ணினைப் பாடி ஆடும்
பத்தர்கள் சித்தம் கொண்டார்;
கண்ணினை மூன்றும் கொண்டார்;
காஞ்சிமா நகர்தன் உள்ளால்;
எண்ணினை எண்ண வைத்தார்
இலங்குமேற் றளிய னாரே.

சுந்தரர்

பாரூர் பல்லவனூர்
மதில்காஞ்சி மாநகர்வாய்ச்
சீர்ஊ ரும்புறவில்
திருமேற் றளிச்சிவனை
ஆரூ ரன்அடியான்
அடித்தொண்டன்ஆ ரூரன்சொன்ன
சீரூர் பாடவல்லார்
சிவலோகம் சேர்வாரே.

## 240. ஓணகாந்தன்தளி

### (காஞ்சிபுரம்)

### ஓணகாந்தேசுரர்

சுந்தரர் : 1.

வழிபட்டநாள் : 12-9-57; 24-1-66.

இக்கோவில் காஞ்சி நகரத்திற்கு மேற்கில் உள்ள சர்வதீர்த்தத்திற்கு வடக்கில் ஏகாம்பரர் கோவிலுக்கு மேற்கே ½ மைலில் இருக்கிறது.

ஓணன், காந்தன் என்னும் இரண்டு அசுரர்கள் வழிபட்ட தலம் என்ப.

சுந்தரர்

பொய்ம்மை யாலே போது போக்கிப்
புறத்தும் இல்லை அகத்தும் இல்லை;
மெய்ம்மை சொல்லி ஆள மாட்டீர்
மேலை நாள்ஒன்று இடவுங் கில்லீர்
எம்மைப் பெற்றால் ஏதும் வேண்டீர்
ஏதும் தாரீர்! ஏதும் ஓதீர்!
உம்மை என்றே எம்பெ ருமான்
ஓண காந்தன் தளியு ளீரே.

## 241. கச்சிஅனேகதங்காபதம்

### (காஞ்சிபுரம்)

### அனேகதங்காபதேசுரர்

சுந்தரர் : 1.

வழிபட்டநாள் : 12–9–57; 23–1–66.

இக்கோவில் காஞ்சி நகரத்தின் வடமேற்கில் வயல் வெளியில் இருக்கின்றது.

சுந்தரர்

தண்ட முடைத்தரு மன்தமர் என்தம-
 ரைச்செயும் வன்துயர் தீர்க்கும்இடம்
பிண்ட முடைப்பிற வித்தலை நின்று
 நினைப்பவர் ஆக்கையை நீக்கும்இடம்
கண்ட முடைக்கரு நஞ்சை நுகர்ந்த
 பிரானது இடம்.கடல் ஏழுகடந்து
அண்ட முடைப்பெரு மானது இடம்கலிக்
 கச்சி அனேகதங் காவத்மே.

## 242. கச்சிநெறிக்காரைக்காடு

### (காஞ்சிபுரம்)

### காரைத்திருநாதர்

சம்பந்தர் : 1.

வழிபட்டநாள் : 11–9–57; 23–1–66.

காஞ்சிபுரத்தின் வடகிழக்கில் கொல்லை வெளியில் இக்கோவில் இருக்கிறது. திருக்காளீசுவரன் கோவில் என்று இக்கோவில் வழங்கப் பெறுகின்றது. காரைச் செடிகள் மிகுந்திருத்தலினால் இப் பெயர் பெற்றது என்ப.

சம்பந்தர்

பன்மலர்கள் கொண்டு அடிக்கீழ் வானோர்கள் பணிந்துஇறைஞ்ச
நன்மையிலா வல்அவுணர் நகர்மூன்றும் ஒருநொடியில்
வில்மலையின் நாண்கொளுவி வெங்கணையால் எய்துஅழித்த
நின்மலனார் கலிக்கச்சி நெறிக்காரைக் காட்டாரே.

## 243. குரங்கணில்முட்டம்

### வாலீசர்–இறையார்வளையாள்

சம்பந்தர் : 1

வழிபட்டநாள் : 9–2–58; 24–1–66

காஞ்சிபுரத்திற்குத் தெற்கு 6 கல் தொலைவில் பாலாற்றின் தென் கரையைத் தாண்டி இத்தலம் இருக்கிறது. தூசி என்ற ஊருக்குத் தென்கிழக்கே 1 கல் தொலைவு.

குரங்கும் அணிலும் காக்கையும் வழிபட்ட தலம் இஃதென்ப. முட்டம் : காக்கை.

சம்பந்தர்

விழுநீர்மழு வாள்படை அண்ணல் விளங்கும்
கழுநீர்குவ ளைம்மல ரக்கயல் பாயும்
கொழுநீர்வயல் சூழ்ந்த குரங்கணில் முட்டம்
தொழு நீர்மையர் தீதுறு துன்பம் இலரே.

## 244. மாகறல்

### அடைக்கலங்காத்தநாதர்–புவனநாயகி

சம்பந்தர் : 1

வழிபட்டநாள் : 13–9–57; 24–1–66.

காஞ்சிக்குத் தெற்கே 10 கல் தொலைவு. வழியில் வேகவதி ஆற்றையும் பாலாற்றையும் கடத்தல் வேண்டும்.

*சம்பந்தர்*

இங்குகதிர் முத்தினொடு பொன்மணிகள்
உந்திஎழில் மெய்யுளுடனே
மங்கையரும், மைந்தர்களும் மன்னுபுனல்
ஆடிமகிழ் மாகறல்உளான்;
கொங்குவளர் கொன்றைகுளிர் திங்கள்அணி
செஞ்சடையி னான்அடியையே
நுங்கள்வினை தீர.மிக ஏத்திவழி-
-பாடு நுகரா எழுமினே.

## 245. திருஓத்தூர்

### வேதநாதர்–இளமுலைநாயகி

*சம்பந்தர் : 1*

*வழிபட்டநாள் : 12–9–57; 24–1–66.*

காஞ்சிக்குத் தென்மேற்கு 19 கல் தொலைவு. மூன்றாவது மைலில் பாலாற்றைக் கடக்க வேண்டும். நல்ல சாலை. கோயிலுக்கு அணித்தே சேயாறு ஓடுகின்றது. கோயில் பெரிது. கோயில் வெளிச் சுற்றில் 4, 5 பனை மரங்கள் இருக்கின்றன. இது ஆண்பனை, பெண்பனையான தலம். நந்தி கிழக்கு நோக்கி இருக்கிறது. கோவிலுக்குள் ஆதிகேசவப் பெருமாள் சந்நிதி ஒன்று இருக்கிறது.

ஒத்து என்றால் வேதம். கடவுள் வேதத்திற்குப் பொருள் சொன்ன இடம் இஃதென்ப.

கருணாகரக் கவிராயர் என்பார் இத்தலத்திற்கு ஒரு புராணம் பாடியுள்ளார்.

*சம்பந்தர்*

இடையீர் போகா இளைமுலை யாளைஓர்
புடையீ ரே!புள்ளி மான்உரி
உடையீ ரே!உம்மை ஏத்துதும் ஒத்தூர்ச்
சடையீ ரேஉம் தாளே.

# 246. திருப்பனங்காட்டூர்

## (வன்பாத்தான்பனங்காட்டூர்)

## (திருப்பனங்காடு)

## பனங்காட்டீசர்–அமுதவல்லி

சுந்தரர் : 1

வழிபட்டநாள் : 13–9–57; 24–1–66.

காஞ்சிக்குத் தெற்கில் 4 மைல் சென்று ஐயன்குளம் என்னும் ஊரைச் சேர்ந்து, அவ் இடத்தினின்றும் மேற்கே ஆற்காட்டுக்குச் செல்லும் வழியில் 3½ கல் தூரம் சென்று அங்கிருந்து வடக்கே திரும்பி 1 மைல் சென்றால் இத்தலத்தை அடையலாம். இடையில் வேகவதி ஆற்றையும் பாலாற்றையுந் தாண்ட வேண்டும். கோவிலில் இரண்டு சந்நிதிகள் இருக்கின்றன. இரண்டு பனைமரங்களும் இருக்கின்றன.

சுந்தரர்

நெற்றிக்கண் உடையானை. நீறுஏறும் திருமேனிக்
குற்றமில் குணத்தானைக் கோணாதார் மனத்தானை.
பற்றிபாம்பு அரைஆர்த்த படிறன்தன் பனங்காட்டூர்ப்
பெற்றோன்றுஏ றும்பிரானைப் பேசாதார் பேச்சென்னே.

# 247. திருவல்லம்

## (திருவலம்)

## வல்லநாதர்–வல்லாம்பிகை

சம்பந்தர் : 1

வழிபட்டநாள் : 3–12–57; 5–12–65

சென்னை–காட்பாடி இருப்புப் பாதையில் திருவலம் என்னும் இரயில் நிலையத்தினின்றும், 2 கல் தொலைவில் "நீவா" என்னும் ஆற்றின் மேல் கரையில் கோவிலிருக்கிறது. காட்பாடியிலிருந்து சுமார் 6 கல் தொலைவு.

வல்லத்துக்கு வடக்கே 8 மைலில் வள்ளிமலை என்னும் சிறந்த முருகன் தலம் இருக்கிறது.

சம்பந்தர்

சார்ந்தவர்க்கு இன்பங்கள் தழைக்கும் வண்ணம்
நேர்ந்தவன் நேரிழை யோடும் கூடித்
தேர்ந்தவர் தேடுவார் தேடச் செய்தே
சேர்ந்தவன் உறைவிடம் திருவல் லம்மே.

## 248. திருமாற்பேறு

### மால்வணங்கீசர்–கருணைநாயகி

சம்பந்தர் : 2; அப்பர் : 4.

வழிபட்டநாள் : 8–2–58; 25–1–66.

செங்கற்பட்டு–அரக்கோணம் இருப்புப் பாதையிலுள்ள திருமால்பேறு என்னும் இரயில் நிலையத்திற்குத் தென்மேற்கு இரண்டரை கல் தொலைவு. காஞ்சியினின்றும் வடமேற்கே ஏழு கல் அளவில் இத்தலமிருக்கிறது. இது திருமால் சிவ பெருமானை வழிபட்டுப் பேறுபெற்ற தலம் என்ப.

சம்பந்தர்

தலையவன் தலையணி மாலைபூண்டு
கொலைநவில் கூற்றினைக் கொன்றுஉகந்தான்
கலைநவின் றான்கயி லாயம்என்னும்
மலையவன் வளநகர் மாற்பேறே.

அப்பர்

பிறப்பானை, பிறவாத பெருமை யானை,
பெரியானை, அரியானை, பெண்ஆண் ஆய
நிறத்தானை, நின்மலனை நினையா தாரை
நினையானை, நினைவோரை நினைவோன் தன்னை,
அறத்தானை, அறவோனை, ஐயன் தன்னை,
அண்ணல்தனை, நண்ணரிய அமரர் ஏத்தும்
திறத்தானை, திகழ்ஒளியை, திருமாற் பேற்றுஎம்
செம்பவளக் குன்றினைச் சென்று அடைந்தேன்நானே.

# 249. திருஊறல்

## (தக்கோலம்)

## உமாபதீசுரர்–உமையம்மை

*சம்பந்தர் : 1.*

*வழிபட்டநாள் : 10–9–57; 25–1–66.*

செங்கற்பட்டு–அரக்கோணம் இருப்புப் பாதையிலுள்ள தக்கோலம் எனும் இரயில் நிலையத்திலிருந்து கிழக்கே மூன்று கல் தொலைவு. இக்கோயிலுக்குப் பக்கத்தில் ஒரு நந்தியின் வாயினின்றும் எப்பொழுதும் நீர் விழுந்து கொண்டிருப்பதால் இத்தலத்திற்குத் திருவூறல் என்று பெயர். இங்கு, தட்சிணா மூர்த்தியின் வடிவம் தனிச்சிறப்புடைத்து.

**சம்பந்தர்**

*மாறில் அவுணர்அரணம்அவை மாயஓர் வெம்கணை யால்அன்று*
*நீறுஎழ எய்த எங்கள் நிமலன் இடம்வி னவ்வில்*
*தேறல் இரும்பொழி லும்திகழ் செங்கயல் பாய்வய லும்சூழ்ந்த*
*ஊறல் அமர்ந்த பிரான்ஒலி யார்கழல் உள்கு தும்மே.*

# 250. இலம்பையங்கோட்டூர்

## சந்திரசேகரர்–கோடேந்துமுலையாள்

*சம்பந்தர் : 1.*

*வழிபட்டநாள் : 10–9–57; 25–1–66*

திருவிற்கோலமாகிய கூவம் என்ற தலத்திற்குத் தென் மேற்கே 1¼ கல் அளவு. கூவம் ஏரியில் நீரில்லாவிட்டால் தான் இவ்வழி செல்ல முடியும். ஏரியில் நீரிருந்தால் ஏரிக் கரையின் மேல் ஒரு மைல் மேற்கே சென்று, பின் தெற்கே திரும்பி, ஏரியின் மேற்புறமாக 1½ மைல் சென்றால் இத்தலத்தை அடையலாம். வழி செம்மையாக இல்லை.

சம்பந்தர்

நீருளான்.தீயுளான்; அந்தரத் துள்ளான்;
நினைப்பவர் மனத்துளான்;நித்தமா ஏத்தும்
ஊருளான்;எனதுஉரை தனதுஉரை யாக
ஒற்றைவெள் ஏறுஉகந்து ஏறிய ஒருவன்.
பாருளார்பாடலோடு ஆடல் அறாத
பண்முரன்று அஞ்சிறை வண்டினம் பாடும்
ஏருளார் பைம்பொழில் இலம்பையங் கோட்டூர்
இருக்கையாப் பேணி,என் எழில்கொள்வது இயல்பே.

# 251. திருவிற்கோலம்

## (கூவம்)

## திரிபுராந்தகர்–திரிபுராந்தகி

சம்பந்தர் : 1.
வழிபட்டநாள் : 25–11–56; 25–1–66

சென்னை–அரக்கோணம் இருப்புப் பாதையில் திருவள்ளூரை அடுத்த கடம்பத்தூர் என்னும் இரயில் நிலையத் தினின்றும் தெற்கே 6 கல் தொலைவு. சென்னையினின்றும் திருவள்ளூர் வழி. கார்ப்பாதை 45 மைல். இலம்பையங் கோட்டூர் இதற்கு அண்மையிலிருக்கிறது. விற்கோலத்திற்குச் சிவப்பிராகாச சுவாமிகள் புராணம் பாடியுள்ளார்கள்.

சம்பந்தர்

ஐயன்நல் அதிசயன் அயன்விண் ணோர்தொழும்
மையணி கண்டனார் வண்ண வண்ணம்வான்
பையரவு அல்குலாள் பாகம் ஆகவும்
செய்யவன் உறைவிடம் திருவிற் கோலமே.

# 252. திருவாலங்காடு

## (பழையனூர்–ஆலங்காடு)

### ஊர்த்துவதாண்டவப்பெருமான்–வண்டார்குழலி

*சம்பந்தர் : 1; அப்பர் : 2; சுந்தரர் : 1.*

*வழிபட்டநாள் : 10–2–58; 26–1–66.*

சென்னை–அரக்கோணம் இருப்புப் பாதையிலுள்ள திருவாலங்காடு என்னும் இரயில் நிலையத்தினின்றும் வட கிழக்கே 3 மைலில் இத்தலம் இருக்கிறது. இடையில் ஒரு சிற்றாறு ஓடுகிறது. சென்னையினின்றும் திருத்தணி செல்லும் வழியில் திருவள்ளூர், திருப்பாசூர் முதலிய ஊர்களைக் கடந்து காரில் சென்றால் 40 கல் தொலைவு.

கோவில் மிகப்பெரியது. பஞ்சசபைகளில் ஒன்றாகிய இரத்தின சபையை உடைய தலம் இது. காளியோடு ஆடிய கூத்தப் பெருமான் இங்கு ஊர்த்துவத் தாண்டவத்தில் அருமையாகக் காட்சி அளிக்கிறார். ஊர்த்துவம் என்பது ஒரு காலை மேலே தூக்கிய நிலை. "அண்டம் உற நிமிர்ந்து ஆடும் அடி" என்று குறிப்பார் ஊர்த்துவத் தாண்டவத்தை உமாபதிசிவம்.

காரைக்காலம்மையார் தலையால் நடந்து அருளிய திருப்பதி இது. இத்தலத்தில் காரைக்காலம்மையார் பெரிதும் சிறப்பிக்கப் பெறுகின்றார். அம்மையார் திருவுருவம் இக்கோயிலில் இருக்கின்றது.

பழையனூர் நீலி கதை நடந்தது இத்தலத்தில். பழையனூர் நீலியின் செயலால் தாங்கள் கொடுத்த வாக்கைக் காக்க வேளாளர் எழுபதின்மர் தீக்குளித்த இடம் இக் கோவிலுக்கு அண்மையில் இருக்கின்றது. அங்கு ஒரு சிறு சிவன் கோவிலும் தீக்குளித்த வரலாறும் காட்டப் பெற்றிருக்கின்றன.

#### சம்பந்தர்

துஞ்ச வருவாரும் தொழுவிப் பாரும் வழுவிப்போய்
நெஞ்சம் புகுந்துஎன்னை நினைவிப் பாரும் முனைநட்பாய்
வஞ்சப் படுத்துஒருத்தி வாழ்நாள் கொள்ளும் வகைகேட்டு
அஞ்சும் பழையனூர் ஆலங் காட்டுஎம் அடிகளே.

### அப்பர்

மலைமகளைப் பாகம் அமர்ந்தார் தாமே;
வானோர் வணங்கப் படுவார் தாமே;
சலமகளைச் செஞ்சடைமேல் வைத்தார் தாமே;
சரண்என்று இருப்பார்கட்கு அன்பர் தாமே;
பலபலவும் வேடங்கள் ஆனார் தாமே;
பழனை பதியா உடையார் தாமே;
சிலைமலையா மூஎயிலும் அட்டார் தாமே;
திருவாலங் காடுறையும் செல்வர் தாமே.

### சுந்தரர்

பொய்யே செய்து புறம்புறமே
திரிவேன் தன்னைப் போகாமே
மெய்யே வந்துஇங்கு எனைஆண்ட
மெய்யா! மெய்யர் மெய்ப்பொருளே!
பையாடு அரவம் அரைக்குஅசைத்த
பரமா! பழைய னூர்மேய
ஐயா! ஆலங் காடா!உன்
அடியார்க்கு அடியேன் ஆவேனே.

### காரைக்கால் அம்மையார்

கொங்கை திரங்கி நரம்புஎழுந்து.
குண்டுகண் வெண்பல் குழிவயிற்றுப்
பங்கி சிவந்து,இரு பற்கள்நீண்டு
பரடுயர் நீள்கணைக் கால்ஓர்பெண்பேய்
தங்கி அலறி உலறுகாட்டில்
தாழ்சடை எட்டுத் திசையும்வீசி.
அங்கம் குளிர்ந்துஅனல் ஆடும்எங்கள்
அப்பன் இடம்திரு ஆலங்காடே.

### சேக்கிழார்

"திருவாலங் காடுஉறையும் செல்வர்தாம்" எனச்சிறப்பின்
ஒருவாத பெருந்திருத்தாண் டகம்முதலாம் ஓங்குதமிழ்ப்
பெருவாய்மைத் தொடைமாலை பலபாடிப் பிறபதியும்
மருவுஆர்வம் பெறவணங்கி வடதிசைமேல் வழிக்கொள்வார்.

# 253. திருப்பாசூர்

## பாசூர்நாதர்–பசுபதிநாயகி

சம்பந்தர் : 1 அப்பர் : 2.

வழிபட்டநாள் : 22–4–56; 26–1–66.

சென்னைக்கு மேற்கே 26 கல் தொலைவிலுள்ள திருஎவ்வளூர் என்னும் தலத்திற்கு வடமேற்கே 4½ கல் தொலைவு. இங்கு, சிவபெருமான் மூங்கிலில் தோன்றியதாக ஐதிகம். பாசு:மூங்கில். இத்தலத்தில் விநாயகர் திருவுருவங்கள் நிறைய இருக்கின்றன.

சம்பந்தர்

கண்ணின் அயலே கண்ஒன்று உடையார் கழல்உன்னி
எண்ணும் தனையும் அடியார் ஏத்த அருள்செய்வார்;
உள்நின்று உருக உவகை தருவார் ஊர்போலும்
பண்ணின் மொழியார் பாடல் ஓவாப் பாசூரே.

அப்பர்

சாம்பல் பூசுவர்; தாழ்சடை கட்டுவர்;
ஓம்பல் மூதுஎருது ஏறும் ஒருவனார்
தேம்பல் வெண்மதி சூடுவர்;தீயதோர்
பாம்பும் ஆட்டுவர்; பாசூர் அடிகளே.

# 254. திருவெண்பாக்கம்

## வெண்பாக்கநாதர்–கனிவாய்மொழி

சுந்தரர் : 1.

வழிபட்டநாள் : 10–9–57; 26–1–66.

சென்னையினின்றும் மேற்கே 26 கல் தொலைவிலுள்ள திரு எவ்வளூரைக் கடந்து, அங்கிருந்து மேற்கே திருப்பாசூருக்குச்

செல்லும் பாதையில் போய், அங்கிருந்து வடக்கே திரும்பி, பூண்டி நீர்த்தேக்கத்தை அடைய வேண்டும். இத்தலத்தில்தான் கண்ணிழந்த சுந்தரர் ஊன்றுகோல் பெற்றார். பழைய கோவில் பூண்டி நீர் நிலைக்குள் மூழ்கிவிட்டது. கோவிலின் உச்சி இன்றும் தெரிகின்றது. நீர்த் தேக்கக் கரையில் புதிய கோவிலொன்று கட்டப் பெற்று வருகின்றது. இன்னும் அது முடிவடையவில்லை. பழைய கோவிலில் இருந்த விக்கிரகங்கள் வேறு இடத்திற்கு மாற்றப் பெற்றுள்ளன.

*சுந்தரர்*

பிழையுளன பொறுத்திடுவர் என்றுஅடியேன்பிழைத்தக்கால்
பழியதனைப் பாராதே·படலம்என்கண் மறைப்பித்தாய்;
குழைவிரவு வடிகாதா! கோயிலுளா யேஎன்ன,
உழைஉடையான் உள்ளிருந்து "உளம்போகிர்" என்றானே.

# 255. திருக்கள்ளில்

## (திருக்கள்ளம்–திருக்கண்டலம்)

## சிவாநந்தேசுரர்–ஆநந்தவல்லி

*சம்பந்தர் : 1*

*வழிபட்டநாள் : 11–2–58; 30–1–66.*

சென்னையினின்றும் திருக்காளத்தி செல்லும் வழியில், 16 மைலிலுள்ள, பெரிய பாளையத்துக்குச் சிறிது முன்னர் இடது பக்கம் திரும்பி நான்கு மைல் சென்று, கன்னிப்புத்தூர் வழியாக மேலும் இரண்டு மைல் சென்றால் இத்தலத்தை அடையலாம். சென்னையினின்றும் மொத்தம் 22 கல் தொலைவு.

**சம்பந்தர்**

முள்ளின்மேல் முதுகூகை முரலும்சோலை
வெள்ளின்மேல் விடுகூறைக் கொடிவி ளைந்த
கள்ளின் மேய அண்ணல் கழல்கள்நாளும்
உள்ளு மேல்உயர்வு எய்தல் ஒருதலையே.

# 256. திருக்காளத்தி

## (காளஹஸ்தி)

## காளத்திநாதர்-ஞானப்பூங்கோதை

*சம்பந்தர் : 2. அப்பர் : 1. சுந்தரர் : 1.*

*வழிபட்டநாள் : 18-11-61; 30-1-66.*

இரயில் நிலையம். பொன்முகலி ஆற்றின் கீழ்க்கரையில் காளத்திமலை அடிவாரத்தில் கோவில் இருக்கிறது. பெரிய கோவில். ஐந்து பூதத் தலங்களுள் இது காற்றுத் தலம். இறைவன் சன்னிதியில் ஒரு தூண்டா மணிவிளக்குக் காற்றில் அசைவதுபோல் அசைந்து ஆடி எரிந்துகொண்டிருக்கிறது. மேற்குப் பார்த்த சன்னிதி.

கண்ணைப் பிடுங்கிக் கடவுளுக்குக் கொடுத்த செயற்கருஞ் செயல் புரிந்த கண்ணப்ப நாயனார் வழிபட்டு முத்தியடைந்த தலம் இது. கண்ணப்பர் திருவுருவம் சிலை வடிவத்தில் சிவபெருமான் திருமுன்னர் நிற்பதை இன்றும் காணலாம்.

காளத்தியப்பனை வணங்க வந்த ஞானசம்பந்தர், "கடவுளை வணங்கிய பயன் கண்ணப்பரை வணங்குதலே" என்று கருதினார் என, "வீழ்ந்தெழுவார் கும்பிட்ட பயன் கணபார் போல் மெய்வேடர் பெருமானைக் கண்டு வீழ்ந்தார்" என்ற வரிகளால் சேக்கிழார் அருளுவார்.

நக்கீரதேவர் இத்தலத்தை வழிபட்டுச் சிறப்பெய்தினார். கைலை பாதி காளத்தி பாதி அந்தாதி பாடினார்.

கருணைப்பிரகாசர், சிவப்பிரகாசர், வேலப்ப தேசிகர் ஆகிய உடன்பிறந்தவர்கள் இத்தலத்திற்கு ஸ்ரீ காளத்திப் புராணமும், வீரைநகர் ஆனந்தக் கூத்தர் திருக்காளத்திப் புராணமும், சேரைக் கவிராயர் திருக்காளத்தி உலாவும் பாடியுள்ளனர்.

பட்டினத்து அடிகள் கண்ணப்பரின் அருஞ்செயலைப் பெரிதும் பாராட்டிப் பாடியிருக்கின்றார். அப்பாடலைப் பாடல் பகுதியில் காண்க.

*சம்பந்தர்*

*சந்தமார் அகிலொடு சாதிதேக் கம்மரம்*
*உந்துமா முகலியின் கரையினில், உமையொடும்*
*மந்தமார் பொழில்வளர் மல்குவண் காளத்தி*
*எந்தையார் இணையடி என்மனத்து உள்ளவே.*

*அப்பர்*

*நாரணன்காண்; நான்முகன்காண்; நால்வே தன்காண்;*
*ஞானப் பெருங்கடற்குஓர் நாவாய் அன்ன.*
*பூரணன்காண்; புண்ணியன்காண்; புராணன் தான்காண்;*
*புரிசடைமேல் புனல்ஏற்ற புனிதன் தான்காண்;*
*சாரணன்காண்; சந்திரன்காண்; கதிரோன் தான்காண்;*
*தன்மைக்கண் தானேகாண்; தக்கோர்க்கு எல்லாம்*
*காரணன்காண்; காளத்தி காணப் பட்ட*
*கணநாதன் காண்;அவன்என் கண்ணு ளானே.*

*சுந்தரர்*

பொய்யவன் நாயடியேன் புகவேநெறி ஒன்றுஅறியேன்
செய்யவன் ஆகிவந்துஇங்கு இடர்ஆனவை தீர்த்தவனே!
மெய்யவ னே!திருவே! விளங்கும்திருக் காளத்திஎன்
ஐய!நுன் தனைஅல்லால் அறிந்துஏத்த மாட்டேனே.

*நக்கீரதேவ நாயனார்*

*பிறப்புடையர் கற்றோர் பெருஞ்செல்வர் மற்றும்*
*சிறப்புடையர் ஆனாலும் சீசீ-இறப்பில்*
*கடியார் நறுஞ்சோலைக் காளத்தி ஆள்வார்*
*அடியாரைப் பேணா தவர்.*

**சேக்கிழார்**

*மாகமார் திருக்கா ளத்தி மலைஎழு கொழுந்தாய் உள்ள*
*ஏகநா யகரைக் கண்டார்; எழுந்தபேர் உவகை அன்பின்*
*வேகமா னதுமேல் செல்ல மிக்கதோர் விரைவி னோடும்*
*மோகமாய் ஓடிச் சென்றார்; தழுவினார்; மோந்து நின்றார்.*

பட்டினத்து அடிகள்

வாளால் மகவுஅரிந்து ஊட்டவல்-
-லேன் அல்லன்; மாதுசொன்ன
சூளால் இளமை துறக்கவல்-
-லேன் அல்லன்; தொண்டுசெய்து
நாள்ஆறில் கண்இடந்து அப்பவல்-
-லேன் அல்லன்; நான்இனிச்சென்று
ஆளாவது எப்படி யோ!திருக்
காளத்தி அப்பருக்கே.

## 257. திருஒற்றியூர்

### மாணிக்கத்தியாகர்-வடிவுடையம்மை

*சம்பந்தர் : 1. அப்பர் : 5. சுந்தரர் : 2.*
*வழிபட்டநாள் : 17-4-56; 22-1-66*

இரயில் நிலையம். சென்னை நகரத்துக்கு வடக்கே 5 கல் தொலைவு. கலிய நாயனார் பிறந்த தலம். சுந்தரமூர்த்தி சுவாமிகள் சங்கிலி நாச்சியாரை மணம் புணர்ந்த பதி. சுந்தர மூர்த்திகள் வரலாற்றுக் குறிப்புடைய மகிழடித் திருவிழா மாசி மகத்தில் மிகச் சிறப்பாக நடைபெறுகின்றது. இங்குத் தியாகராசர் சன்னிதி மிகச் சிறப்புடையது. கோவில் பெரியது. சுந்தரர் சங்கிலியார் திருவுருவங்கள் மணக்கோலத்தில் காட்சி யளிக்கின்றன.

முற்றத் துறந்த பட்டினத்து அடிகள் வாழ்ந்து முக்தி யடைந்த பழம்பதி இது.

கோவிலுக்கு அண்மையில் கடல் இருக்கின்றது. கடலோரத்தில் பட்டினத்தடிகட்கும் அப்பர் சுவாமிகட்கும் தனித் தனிக் கோயில்கள் இருக்கின்றன.

*சம்பந்தர்*

*விளிதரு நீரும்மண்ணும் விசும் போடுஅனல் காலும்ஆகி*
*அளிதருபே ரருளாளன் அர னாகிய ஆதிமூர்த்தி*
*களிதருவண்டுபண்செய் கமழ்கொன்றையி னோடுஅணிந்த*
*ஒளிதரு வெண்பிறையான் உறையும்இடம் ஒற்றியூரே.*

*அப்பர்*

*மருஉற்ற மலர்க்குழலீ மடவாள் அஞ்ச*
*மலைதுளங்கத் திசைநடுங்கச் செறுத்து நோக்கிச்*
*செருஉற்ற வாள்அரக்கன் வலிதான் மாளத்*
*திருவடியின் விரல்ஒன்றால் அலற ஊன்றி.*
*உருஒற்றி அங்குஇருவர் ஓடிக் காண*
*ஓங்கினஅவ் ஒள்அழலார் இங்கேவந்து.*
*திருஒற்றி யூர்நம்ஊர் என்று போனார்;*
*செறிவளைகள் ஒன்றொன்றாச் சென்ற வாறே.*

*சுந்தரர்*

*ஈன்று கொண்டதோர் சுற்றம்ஒன்று அன்றால்*
*இயாவ ராகிலென் அன்புடை யார்கள்*
*தோன்ற நின்றுஅருள் செய்துஅளித் திட்டால்*
*சொல்லு வாரைஅல் லாதன சொல்லாய்;*
*மூன்று கண்ணுடை யாய்;அடியேன்கண்*
*கொள்வ தேகணக் குவழக் காகில்*
*ஊன்று கோல்எனக்கு ஆவதுஒன்று அருளாய்*
*ஒற்றி யூர்எனும் ஊர்உறை வானே.*

***ஐயடிகள் காடவர்கோன் நாயனார்***

*தஞ்சாக மூவுலகும் ஆண்டு தலைஅளித்திட்டு*
*எஞ்சாமை பெற்றிடினும் யான்வேண்டேன்–நஞ்சும்*
*கரந்துஉண்ட கண்டர்தம் ஒற்றியூர் பற்றி*
*இரந்துஉண்டு இருக்கப் பெறின்.*

**சேக்கிழார்**

எழுதாத மறைஅளித்த எழுத்துஅறியும் பெருமானைத்
தொழுதுஆர்வம் உறநிலத்தில் தோய்ந்துஎழுந்தே அங்கமெலாம்
முழுதாய பரவசத்தின் முகிழ்த்தமயிர்க் கால்தோறும்
விழுதாரை கண்பொழிய விதிர்ப்புற்று விம்மினார்.

மண்ணிறைந்த பெருஞ்செல்வத் திருஒற்றி யூர்மன்னும்
எண்ணிறைந்த திருத்தொண்டர் எழிற்பதியோர்உடன்ஈண்டி
உள்நிறைந்த மகிழ்ச்சியுடன் உம்பர்பூ மழைபொழியக்
கண்நிறைந்த பெருஞ்சிறப்பில் கலியாணம் செய்துஅளித்தார்

பட்டினத்து அடிகள்

ஒடுவிழுந்து சீழ்ப்பாயும் ஒன்பதுவாய்ப் புண்ணுக்கு
இடுமருந்தை யானறிந்து கொண்டேன்;–கடுஅருந்தும்
தேவாதி தேவன் திருஒற்றி யூர்த்தெருவில்
போவார் அடியில் பொடி.

இராமலிங்க சுவாமிகள்

வெள்ளி மாமலை வீடுஎன உடையீர்;
விளங்கும் பொன்மலை வில்எனக் கொண்டீர்;
வள்ளி யீர்என நும்மைவந்து அடைந்தால்
வாய்தி றந்துஒரு வார்த்தையும் சொல்லீர்;
எள்ளில் எண்ணெய்போல் எங்கணும் நின்றீர்;
ஏழை யேன்குறை ஏன்அறி யீரோ?
ஒள்ளி யீர்!உமை அன்றிஒன்று அறியேன்;
ஓங்குசீர் ஒற்றி ஊருடை யீரே.

# 258. திருவலிதாயம்

## (பாடி)

## வலிதாயநாதர்–தாயம்மை

**சம்பந்தர் : 1.**

**வழிபட்டநாள் : 20–4–56; 22–1–66**

சென்னைக்கு மேற்கே 8 கல் தொலைவு.

சம்பந்தர்

கண்நிறைந்தவிழி யின்அழலால்வரு காமன்உயிர்வீட்டிப்
பெண்நிறைந்தஒரு பால்மகிழ்வுஎய்திய பெம்மான்உறைகோயில்
மண்நிறைந்தபுகழ் கொண்டுஅடியார்கள் வணங்கும்வலி தாயத்து
உள்நிறைந்தபெரு மான்கழலேத்தநம் உண்மைக்கதியாமே.

இராமலிங்க சுவாமிகள்

தேரும் நற்றவர் சிந்தைஎனும் தலம்
சாரும் நற்பொரு ளாம்வலி தாயநீர்!
பாரும் அற்றுஇப் பழம்கந்தை சாத்தினீர்;
யாரும் அற்றவ ரோசொலும் ஐயரே?

# 259. வடதிருமுல்லைவாயில்

## மாசிலாமணிநாதர்–கொடியிடைநாயகி

சுந்தரர் : 1.

வழிபட்டநாள் : 20–4–56; 22–1–66.

சென்னைக்கு மேற்கே 10 கல் தொலைவிலுள்ள அம்பத்தூர் இரயில் நிலையத்துக்கு வட மேற்கே $1\frac{1}{2}$ கல். ஆவடி இரயில் நிலையத்திற்கு வட கிழக்கே $2\frac{1}{2}$ கல். தொண்டைமான் வழி பட்ட தலம். சுவாமி சன்னிதியில் இரண்டு எருக்கம் தூண்கள் இருக்கின்றன. இவற்றில் பூண் பிடித்திருக்கின்றது.

தெற்கே சீர்காழியின் பக்கத்தில் தேவாரம் பெற்ற திருமுல்லைவாயில் ஒன்றிருப்பதால் இது வடதிருமுல்லை வாயிலாயிற்று.

தன் யானையைச் சுற்றிக்கொண்ட முல்லைக் கொடியைத் தொண்டைமான் வெட்டும்போது இறைவன் திருமேனியில்பட, அதற்கு வருந்திய தொண்டைமானுக்கு அருள் சுரந்தார் கடவுள் என்பர். அவ்வாளின் வடு சிவலிங்கத்தின் மேல் காணப்படுகிறது. 'வெட்டுத் தாங்கிய ஈசர்' என்று இறைவன் அழைக்கப்படுகிறார்.

சுந்தரர்

விண்பணிந்து ஏத்தும் வேதியா! மாதர்
வெருவிட வேழம்அன்று உரித்தாய்;
செண்பகச் சோலை சூழ்திரு முல்லை
வாயிலாய்! தேவர்தம் அரசே!
தண்பொழில் ஒற்றி மாநகர் உடையாய்!
சங்கிலிக் காஎன்கண் கொண்ட
பண்ப!நின் அடியேன் படுதுயர் களையாய்;
பாசுப தா!பரஞ் சுடரே!

இராமலிங்க சுவாமிகள்

வண்ண மாமுல்லை வாயிலின் மேவிய
அண்ண லே!அமு தே!அர சே!நுதல்
கண்ண னே!உனைக் காணவந் தோர்க்கெலாம்
நண்ண ரும்துயர் நல்குதல் நன்றதோ?

## 260. திருவேற்காடு

### வேற்காட்டீசர்–வேற்கண்ணி

சம்பந்தர் : 1.

வழிபட்டநாள் : 20–4–56; 22–1–66.

சென்னைக்கு மேற்கே 13 மைலில் உள்ள ஆவடி இரயில் நிலையத்தினின்றும், தெற்கே பூவிருந்தவல்லிக்குச் செல்லும் வழியில் நான்கு கல் தூரம் சென்று அங்குள்ள காடுவெட்டியாறு என்ற பழைய பாலாற்றைக் கடந்தால் அக்கரையில் இத்தலமிருக்கிறது. பூவிருந்தவல்லி இதற்குத் தெற்கே இரண்டு கல் தொலைவில் உளது.

இது மூர்க்க நாயனார் பிறந்த தலம். அவருடைய திருவுருவம் கோயிலில் இருக்கிறது.

*சம்பந்தர்*

*பூதம் பாடப் புறங்காட்டு இடையாடி*
*வேத வித்தகன் வேற்காடு*
*போதும் சாந்தும் புகையும் கொடுத்தவர்க்கு*
*ஏதம் எய்துதல் இல்லையே.*

*சேக்கிழார்*

*மன்னிப் பெருகும் பெருந்தொண்டை*
*வளநாடு அதனில் வயல்பரப்பும்*
*நல்நித் திலவெண் திரைப்பாலி*
*நதியின் வடபால் நலங்கொள்பதி*
*அன்னப் பெடைகள் குடைவாவி*
*அலர்புக்கு ஆட அரங்கின்இடை*
*மின்னுக் கொடிகள் துகிற்கொடிகள்*
*விழவிற் காடு வேற்காடு.*

# 261. மயிலாப்பூர்

## (திருமயிலை)

## கபாலீசுரர்–கற்பகவல்லி

*சம்பந்தர் : 1*

*வழிபட்டநாள் : 11–2–58;* **22–1–66**

சென்னை மாநகரத்திலுள்ள தேவாரம் பெற்ற தலம். கோவில் பெரிது. மேற்குப் பார்த்த சந்நிதி. கோவிலுக்கு எதிரில் சுற்றிலும் படிக்கட்டுள்ள பெரிய தெப்பக் குளம். தேவியார் மயில் வடிவாக இருந்து இறைவனை வழிபட்டமையால் இப் பெயர் எய்தியது என்பர்.

திருஞானசம்பந்தர், இறந்துபோன பூம்பாவை என்ற பெண்ணின் என்பைத் தேவாரம் பாடி உயிர்ப்பித்த தலம். என்பு பெண்ணாகி நின்ற நிகழ்ச்சியைச் சேக்கிழார் அடிகள் பின்வரும் இரண்டு அரிய பாடல்களால் செப்புவார்.

கற்பகம் ஈன்ற செவ்விக் காமரு பவளச் சோதிப்
பொற்றிரள் வயிரப் பத்திப் பூந்துணர் மலர்ந்த போலும்
நற்பதம் பொலிவு காட்ட ஞாலமும் விசும்பும் எல்லாம்
அற்புதம் எய்தத் தோன்றி அழகினுக்கு அணியாய் நின்றாள்.

எண்ணில்ஆண்டு எய்தும் வேதா.
படைத்தவள் எழிலின் வெள்ளம்.
நண்ணும்நான் முகத்தால் கண்டான்;
அவளினும் நல்லாள் தன்பால்.
புண்ணியப் பதினாறு ஆண்டு
பேர்பெறும் புகலி வேந்தர்.
கண்ணுதல் கருணை வெள்ளம்
ஆயிரம் முகத்தால் கண்டார்.

இக்கோயிலில் திருஞான சம்பந்தர் திருவுருவமும், பூம்பாவை வடிவமும் இருக்கின்றன. அப்பர் அடிகளும் இக் கோயிலை வணங்கினதாகச் சேக்கிழார் அடிகள் செப்புவார்.

வாயிலார் நாயனார் பிறந்தருளிய தலம் இது:

"வாயிலார் என்னும் தபோதனர், மயிலைத் திருமாநகர் நலம் பெறத் தோன்றினார்" என்பார் சேக்கிழார். வாயிலாருக்கு இங்க ஒரு சந்நிதி இருக்கிறது.

அறுபத்து மூவர் திருவிழா, பெரும் சிறப்பாக இங்கு நடைபெறுகிறது.

தெய்வப்புலமைத் திருவள்ளுவ நாயனார் பிறந்து அருளிய தலம் இது.

சம்பந்தர்

மைப்பூசும் ஒண்கண் மடநல்லார், மாமயிலைக்
கைப்பூசு நீற்றான்; கபாலீச் சரம்அமர்ந்தான்;
நெய்ப்பூசும் ஒண்புழுக்கல் நேரிழையார் கொண்டாடும்
தைப்பூசம் காணாதே போதியோ பூம்பாவாய்.

ஐயடிகள் காடவர்கோன் நாயனார்

குயில்ஒத்த இருள்குஞ்சி, கொக்குஒத்து, இருமல்
பயிலப் புகாமுன்னம் நெஞ்சே!–மயிலைத்
திருப்புன்னை யங்கானல் சிந்தியாய் ஆகில்
இருப்பின்னை, அங்காந்து இளைத்து.

சேக்கிழார்

வரைவளர்மா மயில்என்ன மாடமிசை மஞ்சாடும்
தரைவளர்சீர்த் திருமயிலைச் சங்கரனார் தாள்வணங்கி,
உரைவளர்மா லைகள்அணிவித்து உழவாரப் படையாளி,
திரைவளர்வே லைக்கரைபோய்த் திருஒற்றி யூர்சேர்ந்தார்.

## 262. திருவான்மியூர்

### மருந்தீசர்—சொக்கநாயகி

சம்பந்தர் : 2. அப்பர் : 1.
வழிபட்டநாள் : 23-4-56; 22-1-66

இத்தலம் மயிலாப்பூருக்குத் தெற்கே மூன்று கல் தொலைவில் இருக்கிறது. கோவிலுக்கு அண்மையில் கடற்கரை இருக்கிறது. வான்மீகி முனிவர் வணங்கிய தலம் என்பர். அம்முனிவரின் எழுந்தருளும் உருவம் கோயிலில் இருக்கிறது.

சம்பந்தர்

குண்டா டும்சமணர் கொடும்சாக்கியர் என்றுஇவர்கள்
கண்டார் காரணங்கள் கருதாதவர் பேசநின்றாய்;
திண்தேர் வீதியதார் திருவான்மி யூர்உறையும்
அண்டா! உன்னைஅல்லால் அடையாதுஎனது ஆதரவே.

அப்பர்

உள்ளம் உள்கலந்து ஏத்தவல் லார்க்குஅலால்
கள்ளம் உள்ளவ ழிக்கசி வான்அலன்;
வெள்ள மும்அர வும்விர வும்சடை
வள்ள லாகிய வான்மியூர் ஈசனே.

சேக்கிழார்

திருவான்மி யூர்மருந்தைச் சேர்ந்துபணிந்து அன்பினொடும்
பெருவாய்மைத் தமிழ்பாடி அம்மருங்கு பிறப்புஅறுத்துத்
தருவார்தம் கோயில்பல சார்ந்துஇறைஞ்சித் தமிழ்வேந்தர்
மருவாரும் மலர்ச்சோலை மயிலாப்பூர் வந்துஅடைந்தார்.

# 263. திருக்கச்சூர்

## (ஆலக்கோயில்)

## விருந்திட்டஈசர்–உமையம்மை (மைக்கண்ணி)

*சுந்தரர் : 1.*

*வழிபட்டநாள் : 9–9–57; 27–1–66.*

செங்கற்பட்டிற்கு வடக்கிலுள்ள சிங்கப் பெருமாள் கோயில் இரயில் நிலையத்திற்கு வடமேற்கே 1½ கல் அளவு. இங்கே கச்சூர் என்ற ஒரு கோயிலும், கோயிலுக்கு மேற்கே கால் மைலில் ஆலக்கோயில் என்ற மருந்தீசர் கோயிலும் இருக்கின்றன.

*சுந்தரர்*

பொய்யே உன்னைப் புகழ்வார் புகழ்ந்தால்
அதுவும் பொருளாக் கொள்வானே!
மெய்யே! எங்கள் பெருமான்! உன்னை
நினைவார் அவரை நினைகண்டாய்;
மையார் தடம்கண் மடந்தை பங்கா!
கங்கார் மதியம் சடைவைத்த
ஐயா! செய்யாய்! வெளியாய்! கச்சூர்
ஆலக் கோயில் அம்மானே.

# 264. திருஇடைச்சுரம்

## இடைச்சுரநாதர்–இமையமடக்கொடி

*சம்பந்தர் : 1.*

*வழிபட்டநாள் : 9–9–57; 27–1–66.*

செங்கற்பட்டிலிருந்து கிழக்கே திருப்போரூருக்குச் செல்லும் வழியில் ஐந்து கல் சென்று, வடக்கே அரை மைல் சென்றால் இத்தலத்தை அடையலாம். மகாலிங்கம் ஒளி மயமாக மிக அழகாக இருக்கும்.

சம்பந்தர்

தோடுஅணி குழையினர்; சுண்ணவெண் ணீற்றர்;
சுடலையின்ஆடுவர்; தோல்உடை யாகப்
பீடுயர் செய்ததோர் பெருமையை உடையர்;
பேயுடன் ஆடுவர்; பெரியவர் பெருமான்;
கோடல்கள் ஒழுகுவ; முழுகுவ தும்பி;
குரவமும் அரவமும் மன்னிய பாங்கர்,
ஏடவிழ் புதுமலர் கடிகமழ் சாரல்
இடைச்சுர மேவிய இவர்வணம் என்னே.

சேக்கிழார்

"இருந்தஇடைச் சுரம்மேவும் இவர்வண்ணம் என்னே!"என்று
அருந்தமிழின் திருப்பதிகத்து அலர்மாலை கொடுபரவித்
திருந்துமனம் கரைந்துஉருகத் திருக்கடைக்காப் புச்சாத்திப்
பெருந்தனிவாழ் வினைப்பெற்றார் பேருலகின் பேறானார்.

# 265. திருக்கழுக்குன்றம்

## மலைமருந்துஈசர்–பெண்ணில்நல்லாள்

சம்பந்தர் : 1அப்பர் : 1; சுந்தரர் 1.
வழிபட்டநாள் : 13–2–58; 29–1–66.

செங்கற்பட்டு இரயில் நிலையத்திற்குத் தென்கிழக்கே 9 கல் தொலைவு. ஊருக்குள் கோவில் இருக்கிறது. பக்கத்தில் உள்ள திருக்கழுக்குன்று மலையில் நாள்தோறும் உச்சிக் காலத்தில் இரண்டு கழுகுகள் வந்து உணவு எடுத்துக் கொண்டு செல்வதை இன்றும் காணலாம். இம் மலையை வலம் வரலாம். இரண்டேகால்மைல் சுற்றளவு. மறைகளே மலையாக நிற்றலின் இம்மலையை வேதகிரி என்று கூறுவர்.

மணிவாசகப் பெருமான் திருவாசகத்தில், திருக்கழுக்குன்றப் பதிகம் என்ற ஒரு பதிகத்திலுள்ள ஏழு பாடல்களிலும் திருக்கழுக்குன்றத்தைப் பற்றிச் செப்புவதோடு, கீர்த்தித் திரு அகவலில் ஓர் இடத்திலும், போற்றித் திருஅகவலில் மற்றோர் இடத்திலும் பாராட்டுவார்.

அந்தகக் கவி வீரராகவ முதலியார் என்ற பெரும் புலவர் இத்தலத்திற்குப் புராணம் பாடியிருக்கிறார்.

சொக்கநாதப் புலவர் என்பவர் வஞ்சப் புகழ்ச்சியாக இத்தலத்தைப்பாடிய பாடல் ஒன்றைப் பாடற்பகுதியில் காண்க.

சம்பந்தர்

தேனகத்தார் வண்டுஅது உண்ட திகழ்கொன்றை.
தானகத்தார் தண்மதி சூடித் தலைமேல்ஓர்
வானகத்தார் வையகத் தார்கள் தொழுதுஏத்தும்
கானகத்தான் காதல்செய் கோயில் கழுக்குன்றே.

அப்பர்

மூவிலைவேல் கையானை, மூர்த்தி தன்னை.
முதுபிணக்காடு உடையானை. முதலா னானை.
ஆவினில்ஐந்து உகந்தானை. அமரர் கோனை.
ஆலாலம் உண்டுஉகந்த ஐயன் தன்னை.
பூவினின்மேல் நான்முகனும், மாலும்போற்றப்
புணர்வுஅரிய பெருமானைப் புனிதன் தன்னைக்
காவலனைக் கழுக்குன்றம் அமர்ந்தான் தன்னைக்
கற்பகத்தைக் கண்ணாரக் கண்டேன் நானே.

சுந்தரர்

கொன்று செய்த கொடுமை யால்பல சொல்லவே
நின்ற பாவம் வினைகள் தாம்பல நீங்கவே
சென்று சென்று தொழுமின்; தேவர் பிரான்இடம்.
கன்றி னோடு பிடிசூழ் தண்கழுக் குன்றமே.

மணிவாசகர்

மலங்கி னேன்கண்ணின் நீரை மாற்றி.
மலங்கெ டுத்த பெருந்துறை
விலங்கி னேன்வினைக் கேட னேன்,இனி
மேல்வி ளைவது அறிந்திலேன்;
இலங்கு கின்றநின் சேவ டிகள்
இரண்டும் வைப்பிடம் இன்றியே
கலங்கி னேன்;கலங் காம லேவந்து
காட்டி னாய்,கழுக் குன்றிலே.

சொக்கநாதப் புலவர்

அடிபட்டீர்; கல்லாலும் எறிபட்டீர்;
அத்தனைக்கும் ஆளாய் அந்தப்
படிபட்டும் போதாமல் உதைபட்டீர்;
இப்படியும் படுவார் உண்டோ?
முடிபட்ட சடையுடையீர்! கழுக்குன்றீர்!
முதற்கோணல் முற்றும் கோணல்;
இடிபட்டும் பொறுத்திருந்தீர்; சிவசிவ
உமைத்தெய்வம் என்னல் ஆமோ?

## 266. அச்சிறுபாக்கம்

### பாக்கபுரேசர்–சுந்தரநாயகி

சம்பந்தர் : 1

வழிபட்டநாள் : 6–2–58; 27–1–66.

சென்னை–விழுப்புரம் இருப்புப் பாதையில் உள்ள ஓர் இரயில் நிலையம். சென்னையினின்றும் தெற்கே 59 கல் தொலைவு. சென்னை–விழுப்புரம் நெடுஞ்சாலையில் இருக்கிறது.

விநாயகனை வணங்காது சென்ற காரணத்தால் தேரின் அச்சு முறிந்துபோன இடம் இது என்ப. அச்சு இறு பாக்கம் : அச்சு ஒடிந்த இடம்.

சம்பந்தர்

தேனினும் இனியர் ;பாலன நீற்றர்;
தீங்கரும் பனையர்தம் திருவடி தொழுவார்
ஊன்நயந்து உருக உவகைகள் தருவார்;
உச்சிமேல் உறைபவர் ஒன்றுஅலாது ஊரார்;
வானகம் இறந்து வையகம் வணங்க
வயம்கொளி நிற்பதொர் வடிவினை உடையார்;
ஆனையின் உரிவை போர்த்தஎம் அடிகள்
அச்சிறு பாக்கம்அது ஆட்சிகொண் டாரே.

# 267. திருவக்கரை

## சந்திரசேகரர்–வடிவாம்பிகை

சம்பந்தர் : 1.

வழிபட்டநாள் : 26–6–58; 4–12–65.

மயிலத்திலிருந்து வானூர் போகும் சாலையில் 4 மைல் சென்று. அங்கிருந்து வயல் வழியாக 5 கல் சென்றால் இத்தலத்தை அடையலாம். பாதை செம்மையில்லை. கோயில் மிகவும் பழுது அடைந்திருக்கிறது. சிவலிங்கத்தின் முகம் வகிர்ந்துவிடப்பட்டிருக்கின்றது. நந்தி, இராசகோபுரம் எல்லாம் சந்நிதியை விட்டு விலகி இருக்கின்றன. கூத்தப் பெருமான் இடக்காலை ஊன்றி வலக்காலைத் தூக்கி நிற்கின்றார். தூக்கிய திருவடியின் அமைப்புப் புதுமாதிரியாக இருக்கின்றது.

காளியின் உருவம் மிகச் சிறப்புடையது; தமிழ் நாட்டிலேயே மிகச் சிறந்தது என்று கருதப்படுகிறது. வடக்குப் பிராகாரத்தில் திருமால் திருஉருவம் இருக்கின்றது.

சம்பந்தர்

சந்திர சேகர னே!அரு ளாய்என்று தண்விசும்பில்
இந்திர னும்முத லாஇமை யோர்கள் தொழுதுஇறைஞ்ச
அந்தர மூஎயி லும்அன லாய்விழ ஓர் அம்பினால்
மந்தர மேருவில் லாவளைத் தான்இடம் வக்கரையே.

# 268. அரசிலி

## (ஒழிந்தியாப்பட்டு)

## அரசிலிநாதர்–பெரியநாயகி

சம்பந்தர் : 1.

வழிபட்டநாள் : 5–1–58; 4–12–65.

புதுச்சேரியிலிருந்து திண்டிவனம் போகும் வழியில் வட மேற்கே 5 கல் சென்று, இரும்பை மாகாளத்தை அடைந்து, அங்கிருந்து ஒட்டன்பாளையம் வழியாய் வடகிழக்கே 3 மைல் சென்றால் இத்தலத்தையடையலாம்.

சம்பந்தர்

கங்கை நீர்சடை மேலே
கதம்மிகக் கதிர்இள வனமென்
கொங்கை யாள்ஒரு பாகம்
மருவிய கொல்லைவெள் ஏற்றன்;
சங்கை யாய்த்திரி யாமே
தன்அடி யார்க்குஅருள் செய்து
அங்கை யால்அனல் ஏந்தும்
அடிகளுக்கு இடம்அர சிலியே.

## 269. இரும்பைமாகாளம்

### மாகாளேசுரர்–குயில்மொழி

சம்பந்தர் : 1.

வழிபட்டநாள் : 5–1–58; 4–12–65.

புதுச்சேரியிலிருந்து திண்டிவனம் போகும் வழியில் வட மேற்கே 5 கல் சென்றால் இத்தலத்தை அடையலாம்.

சம்பந்தர்

வேதவித் தாய்வெள்ளை நீறுபூ சிவினை யாயின
கோதுவித் தாய் நீறு எழக்கொடி மாமதி லாயின
ஏதுவித்து ஆயின தீர்க்கும் இடம்இரும் பைதனுள்
மாதவத் தோர்மறை யோர்தொழ நின்றமா காளமே.

# 8. துளுவநாடு

(1. தலம்)

# 270. கோகர்ணம்

## மகாபலநாதர்–கோகர்ணநாயகி

சம்பந்தர் : 1. அப்பர் : 1.

வழிபட்டநாள் : 7–3–59; 10–4–65.

மைசூர் அரசாங்க எல்லையில் இருக்கின்றது. மேற்குக் கடற்கரை ஓரத்தில் கோயில் இருக்கிறது. மங்களூரிலிருந்து உடுப்பி, குண்டாப்பூர், கெங்குலி, பைந்தூர், காஸர்கோடு, அன்னோவர் வழியாக, சுமார் 140 மைல் காரில் செல்ல வேண்டும். இடையில் ஏழு ஆறுகளைக் கடக்க வேண்டும். காரை, பெரியில் (Ferry) ஏற்றிச் செல்லவேண்டும். கடினமான பயணம். இப்பொழுது அந்த ஆறுகளுக்கெல்லாம் பாலம் கட்டப்பட்டு வருகிறது.

சென்னை–பம்பாய் இருப்புப் பாதையிலுள்ள குண்டக்கல் இரயில் நிலையம் அடைந்து, அங்கிருந்து ஹூப்ளி இரயில் நிலையம் சேர்ந்து, ஹூப்ளியிலிருந்து 105 மைல் சென்றால் இத்தலத்தை அடையலாம். ஹூப்ளியிலிருந்து 105 மைலும் ஒரேடியாகக் காரில் செல்லலாம். இடையே ஆறு குறுக்கிட்டுத் தடுப்பதில்லை.

திருக்கோகர்ணம் பெரிய நகரம். முன்னே பம்பாய் அரசாங்கத்திலிருந்தது. இப்போது மைசூர் அரசாங்கத்தி லிருக்கிறது. அங்குப் பேசப்படும் மொழி கன்னடம்.

இராவணன் இலங்கையில் வைப்பதற்காகச் சிவபெருமானிடம் கயிலையில் பெற்றுவந்த இலிங்கத்தை இங்கே தரையில் வைக்குமாறு நேர்ந்ததால், திரும்ப இராவணனால் அதை எடுக்க முடியவில்லை. எனவேதான் மகாபலேசுவரர் என்று சுவாமிக்குப் பெயர். இராவணன் அசைத்துப் பிடுங்கும்போது பசுவின் காதுபோல் குழைந்து நீண்டுவிட்டபடியால் இத்தலம் கோகன்னம் என்று பெயர் பெற்றது. கோகன்னம் : பசுவின் காது.

சிவலிங்கம் மிகச் சிறியது. ஒரு கொட்டைப் பாக்கு அளவில் தரைக்குள் ஆவுடையாருக்குள்ளே அடங்கியிருக்கிறது. ஆவுடையாருக்குள் விரலைவிட்டுத் தடவினால்தான் சிவலிங்கத்தை அறிய முடியும். இங்குக் காசி நகரத்தில் போல் எல்லோரும் கடவுளைத் தொட்டு, நீராட்டி, மலரிட்டு வழிபடலாம். அப்பர் சுவாமிகள் "கோகர்ணம் சூழாக் கால்களால் பயன் என்?" என்று கேட்பார்.

பார்த்தன் தல யாத்திரை வரும்போது கோகன்னத்துக்கு வந்தான் என்ற நிகழ்ச்சியை வில்லிபுத்தூர் ஆழ்வார் பின்வரும் பாடல் வரிகளால் கூறுவார்.

சிந்துதிரை நதிபலவும் சென்று தோய்ந்து.
திங்களுடன் அரவுஉறவு செய்யும்வேணிக்
கொந்துஅவிழும் மலர்இதழித் தொடையோன் வைகும்
கொடிமதில்சூழ் கோகன்னம் குறுகி னானே.

சம்பந்தர்

நீறுதிரு மேனிமிசை ஆடிநிறை
வார்கழல்சி லம்புஒ லிசெய,
ஏறுவிளை யாடஇசை கொண்டுஇடப–
–லிக்குவரும் ஈசன் இடமாம்,
ஆறுசம யங்களும்வி ரும்பிஅடி
பேணிஅரன் ஆக மம்மிகக்
கூறுமனம் வேறிரதி வந்தடியர்
கம்பம்வரு கோக ரணமே.

அப்பர்

கையால் கயிலை எடுத்தான் தன்னைக்
கால்விரலால் தோள்நெரிய ஊன்றி னான்காண்;
மெய்யின் நரம்பிசையால் கேட்பித் தாற்கு
மீண்டே அவற்கருள்கள் நல்கி னான்காண்;
பொய்யர் மனத்துப் புறம்பா வான்காண்;
போர்ப்படையான் காண்;பொருவார் இல்லா தான்காண்;
மைக்கொள் மணிமிடற்று வார்சடை யான்காண்;
மாகடல்சூழ் கோகரணம் மன்னி னானே.

# 9. வடநாடு

(5 தலங்கள்)

# 271. திருப்பருப்பதம்

## (ஸ்ரீ சைலம் ; மல்லிகார்ச்சுனம்)

## பருப்பதநாதர்–பருப்பதநாயகி

சம்பந்தர் 1. அப்பர் 1. சுந்தரர் 1.

வழிபட்டநாள் : 15–11–64; 1–2–66.

ஆந்திர நாட்டில் உள்ள ஒரே தேவாரத் தலம் இது. இத்தலத்தை மூவரும் பாடியிருக்கின்றனர்.

கர்நூல் மாவட்டத்திலுள்ள நந்தியால் என்னும் இரயில் நிலையமுள்ள பெரிய நகரத்திலிருந்து ஸ்ரீ சைலம் சரியாக நூறு மைல். நந்தியாலிலிருந்து 32 மைலில் ஆத்மக்கூர் என்னும் ஊர் இருக்கின்றது. அங்கிருந்து டொரானால் என்ற இடம் 37 கல் தொலைவு. டொரானாவிலிருந்து ஸ்ரீ சைலம் 31 மைல் மலைப்பாதை. சாலை நன்றாக இருக்கிறது. கோவில் வரை காரில் செல்லலாம். கோவில் மலையின் மீதுஇருக்கின்றது. கோவில் இருக்குமிடம் 1200 அடி உயரம்.

ஸ்ரீ சைலத்தில் ஆந்திர அரசாங்கத்தார் நிறையச் சீர் திருத்தம் செய்து வருகின்றனர். வருபவர் தங்கும் மாளிகைகளும், சத்திரங்களும், விடுதிகளும் நிறைய இருக்கின்றன. இன்னும் கட்டிக் கொண்டிருக்கின்றார்கள். ஆந்திர நாட்டில் திருமால் தலத்திற்குப் பெயர் பெற்ற திருப்பதியைப் போல, சிவத் தலத்திற்கு ஸ்ரீசைலத்தை ஆக்க ஆந்திர அரசாங்கம் முயல்கின்றது.

கோவில் ஓரளவு பெரியது. நன்றாகப் பராமரிக்கின்றார்கள். அம்மன் கோவில், சுவாமி கோவிலைவிடச் சிறிது உயரத்தில் இருக்கின்றது.

ஸ்ரீசைலத்தைப் பற்றி மூவரும் பாடிய தேவாரம் முழுதையும் தமிழ் எழுத்தில் கோயிலில் சலவைக்கல்லில் பதித்திருக்கின்றார்கள். ஆந்திர நாட்டில் இதைக் காணும் போது மனத்திற்கு மிக மகிழ்ச்சியாக இருக்கின்றது.

ஸ்ரீசைலம் கோவிலுக்குச் சிறிது கீழே பாதாள கங்கை என்ற இடத்தில் அணைக்கட்டு ஒன்று கட்டிக்கொண்டிருக்கின்றார்கள்.

சென்னையினின்றும் ஸ்ரீசைலத்திற்கு நேரே காரிற் செல்லலாம். சுமார் 300 மைல் அளவு இருக்கும்.

சம்பந்தர்

சீர்கெழு சிறப்புஓவாச் செய்தவ நெறிவேண்டில்,
ஏர்கெழு மடநெஞ்சே! இரண்டுஉற மனம்வையேல்;
கார்கெழு நறுங்கொன்றைக் கடவுளது இடம்வகையால்
பார்கெழு புகழ்ஓவாப் பருப்பதம் பரவுதுமே.

அப்பர்

அங்கண்மால் உடைய ராய ஐவரால் ஆட்டு ணாதே
உங்கண்மால் தீரவேண்டில் உள்ளத்தால் உள்ளி ஏத்தும்
செங்கண்மால் பரவி ஏத்திச் சிவன்என நின்ற செல்வர்,
பைங்கண்வெள் ஏறுஅது ஏறிப் பருப்பத நோக்கி னாரே.

சுந்தரர்

மானும்மரை இனமும்மயில் இனமும்கலந்து எங்கும்
தாமேமிக மேய்ந்துதடம் சுனைநீர்களைப் பருகிப்
பூமாமரம் உரிஞ்சிப்பொழில் ஊடேசென்று புக்குத்
தேமாம்பொழில் நீழல்துயில் சீபர்ப்பத மலையே.

## 272. இந்திரநீலப்பருப்பதம்

### நீலாசலநாதர்–நீலாம்பிகை

சம்பந்தர் : 1

வழிபட்டநாள் :

இது வடநாட்டுத் தலங்கள் ஐந்தில் ஒன்று. இமயமலைச் சாரலில் உளது என்பர். இந்திரன் வழிபட்ட தலம் இது என்று கூறுவர்.

சம்பந்தர்

குறைவி லார்மதி சூடி ஆடவண்டு
அறையும் மாமலர்க் கொன்றை சென்னிசேர்
இறைவன் இந்திர நீல பர்ப்பதத்து
உறைவி னான்தனை ஓதி உய்ம்மினே.

## 273. அனேகதங்காபதம்

### அருண்மன்னேசுரர்–மனோன்மணி

சம்பந்தர் : 1
வழிபட்டநாள் :

இது வடநாட்டுத் தலங்கள் ஐந்தினுள் ஒன்று. ஹரித்துவாரத்திலிருந்து திருக்கேதாரம் செல்லும் வழியில், கேதாரத்திற்கு 11 மைல் முன்னே உள்ள கௌரி குண்டம் என்னும் இடமே அனேகதங்காபதம் என்று கூறப்பெறுகின்றது.

சம்பந்தர்

வெருவி வேழம்இரி யக்கதிர் முத்தொடு வெண்பளிங்கு
உருவி வீழவயி ரம்கொழி யா.அகில் உந்திவெள்
அருவி பாயும்அணி சாரல் அனேகதம் காவதம்
மருவி வாழும்பெரு மான்கழல் சேர்வது வாய்மையே.

## 274. திருக்கேதாரம்

### கேதாரநாதர்–கேதாரநாயகி

சம்பந்தர் : 1. சுந்தரர் 1.
வழிபட்டநாள் :

இமயமலைச் சாரலில் இருக்கின்றது. ஹரித்துவாரத்தி லிருந்து 156 கல் தொலைவு.

கோவில் மே மாதம் திறக்கப் பெற்று, அக்டோபரில் மூடப் பெறுகிறது. ஆறு மாதம்தான் பூசை, ஏனைய ஆறு மாதங்களில் கோயில் பனிக்கட்டியால் மூடப் பெற்றிருக்கும். பிறகு, பனிக்கட்டியை உளியினால் உடைத்துத்தான் கதவைத் திறக்க வேண்டுமாம்.

சம்பந்தர்

தொண்டர் அஞ்சு களிறும் அடக்கிச் சுரும்பார்மலர்
இண்டை கட்டி வழிபாடு செய்யும்இடம் என்பரால்;
வண்டு பாட மயில்ஆல மான்கன்று துள்ள,வரிக்
கெண்டை பாயச் சுனைநீலம் மொட்டுஅலரும் கேதாரமே.

சுந்தரர்

வாள்ஓடிய தடம்கண்ணியர் வலையில்அழுந் தாதே,
நாள்ஓடிய நமனார்தமர் நணுகாமுனம் நணுகி,
ஆளாய்உய்ம்மின்; அடிகட்குஇடம் அதுவோஎனில்இதுவே
கிளோடுஅரவு அசைத்தான்இடம் கேதாரம்எ னீரே.

சேக்கிழார்

மன்னுதிருக் கேதாரம் வழிபட்டு மாமுனிவர்
பன்னுபுகழ்ப் பசுபதிநே பாளத்தைப் பணிந்துஏத்தித்
துன்னுசடைச் சங்கரனார் ஏற்றதூ நீர்க்கங்கை
அன்னமலி அகல்துறைநீர் அருங்கரையின் மருங்கு அணைந்தார்.

# 275. நொடித்தான்மலை

## (திருக்கயிலாயம்)

## கயிலாயநாதர்–பார்வதியம்மை

**சம்பந்தர் 2. அப்பர் ; 4. சுந்தரர் ; 1**

**வழிபட்டநாள் :**

இமய மலையின் உச்சியில் இருக்கின்றது. கட்டப்பட்ட கோவில் எதுவுமில்லை. மலையின் இயற்கையையே சிவலிங்க

வடிவமாகக் கொண்டு வணங்கப் பெறுகின்றது. அப்பர் சுவாமிகள் கயிலையை நோக்கிச் சென்றார். அப்பெருமான் முதிர்ச்சியை யறிந்த சிவபெருமான் அவரை மேலே செல்ல விடாமல் இடையே தடுத்து, திருஐயாற்றில் கயிலைக் காட்சியைக் காட்டுவதாகக் கூறி, அவரை அங்குள்ள ஒரு நீர் நிலையில் முழுகச் செய்து, ஐயாற்றில் அவர் எழுந்திருக்கக் கயிலையை அங்குக் காட்டினார் என்று பெரிய புராணம் பேசும். சுந்தர மூர்த்திகள் உடம்போடு கயிலையை அடைந்தார் என்று சேக்கிழார் கூறுவார். ஆனால் அவர் திரும்ப இவ்வுலகத்திற்கு வர இல்லை. கயிலை சென்றவர்கள் திரும்பமாட்டார்கள் என்று பலரும் கருதுகின்றனர். எனினும் நாமறியச் சித்பவானந்த சுவாமிகள் முதலிய பெரியோர்கள் கயிலை சென்று திரும்பியதோடல்லாமல், அவர்கள் சென்று வந்த முறையை நூலில் வடித்துத் தரவும் நாம் கண்டு மகிழ்கின்றோம்.

சம்பந்தர்

அந்தண்வரை வந்தபுனல் தந்ததிரை
சந்தனமொடு உந்தி அகிலும்.
கந்தமலர் கொந்தினொடு மந்திபல
சிந்துகயி லாய மலைமேல்
எந்தைஅடி வந்துஅணுகு சந்தமொடு
செந்தமிழ் இசைந்த புகலிப்
பந்தன்உரை சிந்தைசெய வந்தவினை
நைந்துபர லோகம் எளிதே.

அப்பர்

வேற்றாகி விண்ணாகி நின்றாய் போற்றி!
மீளாமே ஆள்என்னைக் கொண்டாய் போற்றி!
ஊற்றாகி உள்ளே ஒளித்தாய் போற்றி!
ஓவாத சத்தத்து ஒலியே போற்றி!
ஆற்றாகி அங்கே அமர்ந்தாய் போற்றி!
ஆறுஅங்கம் நால்வேதம் ஆனாய் போற்றி!
காற்றாகி எங்கும் கலந்தாய் போற்றி!
கயிலை மலையானே! போற்றி! போற்றி!

சுந்தரர்

தான்எனை முன்படைத் தான்அதுஅ றிந்துதன் பொன்அடிக்கே
நான்என பாடல்அந் தோநாயி னேனைப் பொருட்படுத்து
வான்எனை வந்துஎதிர்கொள்ள மத்தயானை அருள்புரிந்து
ஊன்உயிர் வேறுசெய் தான்நொடித் தான்மலை உத்தமனே.

### மணிவாசகர்

திருந்துவார் பொழில்சூழ் திருப்பெருந் துறையில்
செழுமலர்க் குருந்தம்மே வியசீர்
இருந்தவாறு எண்ணி ஏசறா நினைந்திட்டு
என்னுடை எம்பிரான் என்றுஎன்று
அருந்தவா! நினைந்தே ஆதரித்து அழைத்தால்
அலைகடல் அதனுளே நின்று
பொருந்தவா, கயிலை புகுநெறி இதுகாண்,
போதராய், என்றுஅரு ளாயே.

### நக்கீரதேவ நாயனார்

உருவு பலகொண்டு உணர்வரிதாய் நிற்கும்
ஒருவன் ஒருபால் இருக்கை-மருவினிய
பூக்கையில்கொண்டு எப்பொழுதும் புத்தேளிர்வந்துஇறைஞ்ச
மாக்கயிலை என்னும் மலை.

### சேக்கிழார்

நெற்றியில் கண்ணர்; நால்பெரும் தோளர்;
நீறுஅணி மேனியர் அனேகர்;
பெற்றமேல் கொண்ட தம்பிரான் அடியார்;
பிஞ்ஞகன் தன்அருள் பெறுவார்,
மற்றவர்க்கு எல்லாம் தலைமையாம் பணியும்
மலர்க்கையில் சுரிகையும், பிரம்பும்
கற்றைவார் சடையான் அருளினால் பெற்றான்
காப்பதுஅக் கயிலைமால் வரைதான்.

### வில்லிபுத்தூர் ஆழ்வார்

வலப்பாகம் செழும்பவளச் சோதி என்ன,
வாள்நீலச் சோதிஎன்ன மற்றைப் பாகம்
கலப்பான திருமேனி அணிந்த நீற்றால்
கதிர்முத்தின் சோதிஎன, மேனை ஈன்ற
குலப்பாவை உடன்கயிலைக் குன்றில் வாழ்வில்
குன்றுடையோன் திருக்கோலம்குறிப்பால் உன்னி,
புலப்பாடு புறம்பொசிய மார்பும் தோளும்
பூரித்தான்; உடல்புளகம் பாரித் தானே.

திவ்வியப் பிரபந்தத் தலங்கள்
108

# 1. சோழநாடு

(40 தலங்கள்)

# திவ்வியப் பிரபந்தத் திருப்பதி
## *108*

*நாலுபத்துத் திருப்பதிகள் சோழ நாட்டில்;*
*நல்லதமிழ்ப் பாண்டிபதி நான்கி னோடு*

*நாலு;மலை நாட்டினிலே ஈராறு ஒன்றாம்;*
*நடுநாட்டில் இரண்டுபதி; தொண்டை நாட்டில்*

*நாலைந்தோடு இரண்டுபதி; வடக்குஈ ராறு;*
*நற்பரம பதம்என்னும் திருநாடு ஒன்று;*

*நாலினுடன் ஆயிரம்சேர் ஆழ்வார் பாடல்*
*நவின்றதிருப் பதிஇந்த நூற்றெட்டு ஆகும்.*

# 1. கோயில்

## (திருஅரங்கம்)

## அரங்கநாதர்–அரங்கநாயகி

**வழிபட்டநாள் : 4–1–56; 7–1–66.**

1. பெரியாழ்வார் 35; 2. ஆண்டாள் 10;
3. குலசேகராழ்வார் 31; 4. திருமழிசையாழ்வார் 14;
5. தொண்டரடிப்பொடியாழ்வார் 55; 6. திருப்பாணாழ்வார் 10;
7. திருமங்கையாழ்வார் 73; 8. பொய்கையாழ்வார் 1;
9. பூதத்தாழ்வார் 4; 10. பேயாழ்வார் 2;
11. நம்மாழ்வார் 12. (ஆக 247)

இரயில் நிலையம். திருச்சி நகரத்திலிருந்து வடக்கே மூன்று கல் தொலைவு. காவிரி–கொள்ளிடம் ஆகிய இரண்டு ஆறுகளுக்கு இடையே கோயில் இருக்கிறது. "அரங்கம் என்பது ஆற்றிடைக் குறையே" என்பது இலக்கணம். கோவில் மிகப் பெரியது. அரங்கநாதர் பள்ளி கொண்டிருக்கின்றார். வைணவ மரபுப்படி கிடந்த திருக்கோலம். அரங்கம் என்ற சொல்லுக்கு, அம்பலம், சபை என்பது பொருள். சைவர்களுக்குத் தில்லையம்பலம் எப்படியோ, அத்தகையது வைணவர்களுக்குத் திருவரங்கம். "ஒன்றே மெய்ப்பொருள்" என்று உணர்ந்த ஞானிகள் இரண்டிற்கும் வேறுபாடு காணமாட்டார்.

திருமால் புகழ் பாடிய ஆழ்வார்கள் பன்னிருவருள், திருமாலைப் பாடாது, நம்மாழ்வாரை மட்டுமே பாடிய மதுர கவியாழ்வாரைத் தவிர, மற்றைய பதினொரு ஆழ்வார்களும் திருவரங்கத்தை வாய்குளிரப் பாடியிருக்கின்றார்கள். மொத்தம் ஆழ்வார்கள் பாடல் நாலாயிரத்துள் திருவரங்கத்தைப் பற்றி மட்டும் உள்ள பாடல்கள் 247.

ஆழ்வார்களைத் தவிரப் பின்வந்த வைணவப் பெரியோர்கள் திருவரங்கத்தைப் பற்றி நிறையப் பாடியிருக்கின்றனர்.

அவருள்ளே தலைநின்றவர் திவ்வியகவி பிள்ளைப் பெருமாள் ஐயங்கார். திருவரங்கக் கலம்பகம், திருவரங்கத்து அந்தாதி, திருவரங்கத்து மாலை, ஸ்ரீரங்க நாயகர் ஊசல், திருநாமம், என்பன இவர் திருவரங்கத்தைப் பற்றிப் பாடிய நூல்கள். இவை தவிர அரங்கநாதனைப் பல தனிப் பாடல்களால் அலங்கரித்துப் பாடியுள்ளார்.

திருவரங்கக் கோவிலைப் பற்றிச் சொல்லும்போது,

"செம்பொன் மதிள் ஏழுடுத்த திருவரங்கப் பெருங்கோயில்"

என்பார். தேர்த்திருநாளன்று தேரை இழுக்காமல் திண்ணையில் உறங்கிக் கிடந்த சோம்பேறிகளைப் பார்த்து பிள்ளைப் பெருமாள் ஐயங்கார், பின்வரும் அழகான வெண்பாவைப் பாடினார்.

ஒன்றும் தெரியாத ஊமர்காள்! தென்னரங்கர்
இன்று திருத்தேரில் ஏறினார்;—நின்று
வடம்பிடிக்க வாருங்கள்! வைகுந்த நாட்டில்
இடம்பிடிக்க வேண்டும் எனின்.

பெரியநம்பி, பட்டர், வடக்குத் திருவீதிப்பிள்ளை, பிள்ளை லோகாச்சாரியார் ஆகியோர் இத்தலத்துப் பிறந்தனர்.

கவிச்சக்கரவர்த்தி கம்பர், தாம் பாடிய இணையற்ற இராம காதையை அரங்கேற்றிய இடம் திருவரங்கம் என்று கூறுவர். கோவிலுள் இருக்கின்ற ஒரு மண்டபத்தை இராமாயணம் அரங்கேற்றிய மண்டபம் என்று இன்றும் கூறுகின்றனர். கம்பர் இராம காதையில், பால காண்டம், குலமுறை கிளத்துப் படலத்தில், திருவரங்கநாதனை, அரங்கத்திற் பள்ளிகொள்ளச் செய்த பெருமை, இராமபிரானின் வழி முதல்வனாகிய இட்சுவாகு மன்னனைச் சேர்ந்தது என்று கூறுவார். அவ் அரிய பாடலைத் தொடர்ந்து வரும் பாடற் பகுதியில் காண்க.

**பெரியாழ்வார்**

துப்புடை யாரை அடைவது எல்லாம்
சோர்விடத் துத்துணை யாவர் என்றே.
ஒப்பிலேன் ஆகிலும்நின்அ டைந்தேன்;
ஆனைக்கு நீஅருள் செய்த மையால்.

எய்ப்புஎன்னை வந்து நலியும் போதுஅங்கு
ஏதும்நான் உன்னை நினைக்க மாட்டேன்;
அப்போதைக்கு இப்போதே சொல்லி வைத்தேன்
அரங்கத்து அரவணைப் பள்ளி யானே.

ஆண்டாள்

எழில்உடைய அம்மனைமீர்! என்அரங்கத்து இன்அமுதர்.
குழல்அழகர்; வாய்அழகர்; கண்அழகர்; கொப்பூழில்
எழுகமலப் பூஅழகர்; எம்மானார் என்னுடைய
கழல்வளையைத் தாமும் கழல்வளையே ஆக்கினரே.

குலசேகராழ்வார்

மறம்திகழும் மனம்ஒழித்து. வஞ்சம் மாற்றி.
ஐம்புலன்கள் அடக்கி,இடர்ப் பாரத் துன்பம்
துறந்து.இருமுப் பொழுதுஏத்தி. எல்லை இல்லாத்
தொல்நெறிக்கண் நிலைநின்ற தொண்டரான
அறம்திகழும் மனத்தவர்தம் கதியை. பொன்னி
அணிஅரங்கத்து அரவணையில் பள்ளி கொள்ளும்
நிறம்திகழும் மாயோனைக் கண்டுஎன் கண்கள்
நீர்மல்க என்றுகொலோ நிற்கும் நாளே!

திருமழிசையாழ்வார்

அவன்என்னை ஆளி அரங்கத்து அரங்கில்
அவன்என்னை எய்தாமல் காப்பான்–அவன்என்னது
உள்ளத்து நின்றான்; இருந்தான்; கிடக்குமே.
வெள்ளத்து அரவணையின் மேல்.

தொண்டர் அடிப்பொடியாழ்வார்

தவத்துளார் தம்மில் அல்லேன்;
தனம்படைத் தாரில் அல்லேன்;
உவர்த்தநீர் போல என்தன்
உற்றவர்க்கு ஒன்றும் அல்லேன்;
துவர்த்தசெவ் வாயி னார்க்கே
துவக்கறத் துரிசன் ஆனேன்;
அவத்தமே பிறவி தந்தாய்.
அரங்கமா நகரு ளானே!

### திருப்பாணாழ்வார்

கொண்டல் வண்ணனைக் கோவல னாய்வெண்ணெய்
உண்ட வாயன்,என் உள்ளம் கவர்ந்தானை,
அண்டர் கோன்அணி அரங்கன்என் அமுதினைக்
கண்ட கண்கள்,மற் றொன்றினைக் காணாவே.

### திருமங்கையாழ்வார்

மின்இலங்கு திருஉருவும், பெரிய தோளும்,
கரிமுனிந்த கைத்தலமும், கண்ணும், வாயும்,
தன்அலர்ந்த நறும்துழாய் மலரின் கீழே
தாழ்ந்துஇலங்கும் மகரம்சேர் குழையும் காட்டி,
என்நலனும், என்நிறையும், என்சிந் தையும்,
என்வளையும், கொண்டுஎன்னை ஆளும்கொண்டு,
பொன்அலர்ந்த நறும்செருந்திப் பொழிலின் ஊடே
புனல்அரங்கம் ஊர்என்று போயி னாரே!

### பொய்கையாழ்வார்

ஒன்றும் மறந்துஅறியேன் ஓதநீர் வண்ணனைநான்,
இன்று மறப்பனோ ஏழைகாள்!-அன்று
கருவரங்கத் துள்கிடந்து கைதொழுதேன் கண்டேன்,
திருஅரங்கம் மேயான் திசை.

### பூதத்தாழ்வார்

மனத்துள்ளான்; வேங்கடத்தான்; மாகடலான்; மற்றும்
நினைப்பரிய நீள்அரங்கத்து உள்ளான்;-எனைப்பலரும்
தேவாதி தேவன் எனப்படுவான்; முன்ஒருநாள்
மாவாய் பிளந்த மகன்.

### பேயாழ்வார்

விண்ணகரம், வெஃகா, விரிதிரைநீர் வேங்கடம்,
மண்ணகரம், மாமாட வேளுக்கை,-மண்ணகத்த
தென்குடந்தை, தேனார் திருஅரங்கம், தென்கோட்டி,
தன்குடங்கை நீர்ஏற்றான் தாழ்வு.

### நம்மாழ்வார்

'முடிவுஇவள் தனக்குஒன்று அறிகிலேன்' என்னும்;
'மூவுலகு ஆளியே!' என்னும்;
'கடிகமழ் கொன்றைச் சடையனே!' என்னும்;
'நான்முகக் கடவுளே!' என்னும்;
'வடிவுடை வானோர் தலைவனே!' என்னும்;
'வண்திரு அரங்கனே!' என்னும்;
அடிஅடை யாதாள் போல்இவள் அணுகி
அடைந்தனள் முகில்வண்ணன் அடியே.

### கம்பர்

பிணிஅரங்க வினை அகலப்
பெருங்காலம் தவம்பேணி
மணிஅரங்க நெடுமுடியாய்!
மலர்அயனை வழிபட்டுப்
பணிஅரங்கப் பெரும்பாயல்
பரஞ்சுடரை யாம்காண
அணிஅரங்கம் தந்தானை
அறியாதார் அறியாதார்.

### வில்லிபுத்தூர் ஆழ்வார்

இலங்காபுரி முன்செற்றவன் இருபோதும் வணங்க.
துலங்குஆடுஅரவு அணைமேல்அறி துயில்கொண்டவர் பொன்தாள்
பொலம்காவிரி இருபாலும் வரபூதல மங்கைக்கு
அலங்காரம் அளிக்கும்தென் அரங்கத்திடை தொழுதான்.

### பிள்ளைப் பெருமாள் ஐயங்கார்

முருகன்உறை குறிஞ்சித்தேன் முல்லை பாய
முல்லைநிலத் தயிர்,பால்,நெய் மருதத்து ஓட.
மருதநிலக் கொழும்பாகு நெய்தல் தேங்க.
வருபுனல்கா விரிசூழ்ந்த வளத்தைப் பாட.
'கருமணியே! மரகதமே! முத்தே! பொன்னே!
கண்மணியே! ஆர்உயிரே !கனியே! தேனே!
அருள்புரிவாய்!' என்றவர்தம் அகத்துள் வைகும்
அணிஅரங்க மாளிகையார் ஆடிர்! ஊசல்!

## 2. கோழி

### (உறையூர்)

### அழகியமணவாளப்பெருமாள்–உறையூர்நாச்சியார்

வழிபட்டநாள் : 15–3–56; 12–1–66

திருமங்கையாழ்வார் 1.

திருச்சிக் கோட்டையிலிருந்து ஒரு கல் தொலைவு. நின்ற திருக்கோலம். வடக்கே திருமுக மண்டலம். திருமங்கை யாழ்வார் மங்களாசாசனம். திருப்பாணாழ்வார் பிறந்தருளிய தலம். திருப்பாணாழ்வாருக்கு இங்குச் சந்நிதி உண்டு.

உறையூரில் திருமூக்கீச்சுரம் என்னும் தேவாரக் கோயில் இருக்கின்றது. உறையூர் ஒரு காலத்தில் சோழ அரசர்களுக்குத் தலைநகராக இருந்திருக்கிறது.

திருமங்கையாழ்வார்

கோழியும், கூடலும் கோயில் கொண்ட
  கோவ ரேஒப்பர்; குன்றம்அன்ன
பாழியும், தோளும்ஓர் நான்கு உடையர்;
  பண்டுஇவர் தம்மையும் கண்டுஅறியோம்,
வாழிய ரோ!இவர் வண்ணம் எண்ணில்
  மாகடல் போன்றுஉளர் கையில்வெய்ய
ஆழிஒன்று ஏந்தி,ஓர் சங்கு பற்றி
  அச்சோ! ஒருவர் அழகியவா!

## 3. தஞ்சைமாமணிக்கோயில்

### நீலமேகப்பெருமாள்–செங்கமலவல்லி

வழிபட்டநாள் : 29–1–57; 1–1–66.

1. திருமங்கையாழ்வார் 3 2. பூதத்தாழ்வார் 1 (ஆக 4)

தஞ்சாவூரிலிருந்து திருஐயாறு செல்லும் சாலையில் சுமார் இரண்டரைக் கல் அளவில் வெண்ணாற்றின் கரைமேல் இருக்

கின்றது. இங்கே அடுத்தடுத்து மூன்று கோயில்கள் இருக்கின்றன. மூன்றுக்கும் சேர்த்தே மங்களாசாசனம் என்று சொல்லப் பெறுகிறது.

1. நீலமேகப் பெருமாள்–செங்கமலவல்லி; இருந்ததிருக் கோலம். கிழக்கே திருமுக மண்டலம்.
2. தஞ்சையாளி நகர்; நரசிம்மப் பெருமாள்–தஞ்சை நாயகி. இருந்த திருக்கோலம் ; கிழக்கே திருமுக மண்டலம்.
3. மணிகுன்றப் பெருமாள்–அம்புயவல்லி; இருந்த திருக் கோலம்; கிழக்கே திருமுக மண்டலம்.

*திருமங்கையாழ்வார்*

*எம்பிரான், எந்தை என்னுடைச் சுற்றம்,*
*எனக்குஅரசு, என்னுடை வாழ்நாள்,*
*அம்பினால் அரக்கர் வெருக்கொள நெருக்கி*
*அவர்உயிர் செகுத்தஎம் அண்ணல்,*
*வம்புஉலாம் சோலை மாமதிள் தஞ்சை*
*மாமணிக் கோயிலே வணங்கி,*
*நம்பிகாள்! உய்ய நான்கண்டு கொண்டேன்*
*நாராய ணாஎன்னும் நாமம்.*

*பூதத்தாழ்வார்*

*தமர்உள்ளம், தஞ்சை, தலைஅரங்கம், தண்கால்,*
*தமர்உள்ளும் தண்பொருப்பு, வேலை–தமர்உள்ளும்*
*மாமல்லை, கோவல், மதிள்குடந்தை என்பரே*
*ஏவல்ல எந்தைக்கு இடம்.*

## 4. அன்பில்

### திருவடிவழகியநம்பி:அழகியவல்லி

*வழிபட்டநாள் : 16–3–56; 11–1–66.*

*திருமழிசையாழ்வார் 1*

லால்குடி இரயில் நிலையத்திற்குக் கிழக்கே 3 கல் தொலைவு. கிடந்த திருக்கோலம்; கிழக்கே திருமுக மண்டலம்.

இக்கோயிலுக்கு எதிரில் அன்பிலாலந்துறை என்ற தேவாரக் கோயில் இருக்கிறது.

திருமழிசையாழ்வார்

நாகத்து அணை.குடந்தை. வெஃகா திருஎவ்வுள்.
நாகத்து அணைஅரங்கம். பேர். அன்பில்–நாகத்து
அணைப்பாற் கடல்.கிடக்கும் ஆதி நெடுமால்.
அணைப்பார் கருத்தனா வான்.

## 5. உத்தமர்கோயில்

### (கரம்பனூர்)

### புருடோத்தமன்–பூர்வாதேவி

வழிபட்டநாள் : 16–3–56; 11–1–66.

திருமங்கையாழ்வார் 1

திருச்சி–சேலம் நெடுஞ்சாலையில் கொள்ளிட ஆறு கடந்து. சிறிது தொலைவில் இத்தலம் இருக்கிறது.

திருச்சி–விழுப்புரம் குறுக்கு வழி இருப்புப் பாதையில் உள்ள ஸ்ரீரங்கத்திற்கு அடுத்த இரயில் நிலையம்.

கிடந்த திருக்கோலம் கிழக்கே திருமுக மண்டலம். இக் கோவிலினுள் சிவன் கோவிலும். பிரமனுக்கு ஒரு கோயிலும் இருக்கின்றன.

**திருமங்கையாழ்வார்**

பேரானை. குறுங்குடிஎம் பெருமானை. திருத்தண்கால்
ஊரானைக் கரம்பனூர் உத்தமனை. முத்துஇலங்கு
காரார்திண் கடல்ஏழு. மலைஏழுஇவ் உலகேழுஉண்டும்.
ஆராதுஎன்று இருந்தானைக் கண்டதுதென் அரங்கத்தே.

# 6. திருவெள்ளறை

## பங்கயக்கண்ணன் – பங்கயச்செல்வி

வழிபட்டநாள் : 16–3–56; 10–1–66

1. பெரியாழ்வார் 11; 2. திருமங்கையாழ்வார் 13. (ஆக 24.)

திருச்சி–சேலம் நெடுஞ்சாலையில் சிறிது சென்று, மணச்சநல்லூர் கற்சாலையில் திரும்பவேண்டும். உத்தமர் கோவிலிலிருந்து 7 கல் தொலைவில் இருக்கிறது. ஸ்ரீரங்கத்திலிருந்து 10 கல் தொலைவு.

நின்ற திருக்கோலம்; கிழக்கே திருமுக மண்டலம். உய்யக் கொண்டார் பிறந்த தலம்.

### பெரியாழ்வார்

இன்பம் அதனை உயர்த்தாய்!
இமையவர்க்கு என்றும் அரியாய்!
கும்பக் களிறுஅட்ட கோவே!
கொடும்கஞ்சன் நெஞ்சினில் கூற்றே!
செம்பொன் மதில்வெள் ளறையாய்!
செல்வத்தி னால்வளர் பிள்ளாய்!
கம்பக் கபாலிகாண் அங்குக்
கடிதுஓடிக் காப்பிட வாராய்!

### திருமங்கையாழ்வார்

மஞ்சு லாமணி மாடங்கள் சூழ்திரு
வெள்ளறை அதன்மேய,
அஞ்ச னம்புரை யும்திரு உருவனை,
ஆதியை, அமுதத்தை,
நஞ்சுஉ லாவிய வேல்வல வன்,கலி
கன்றிசொல் ஐயிரண்டும்
எஞ்சல் இன்றிநின்று ஏத்தவல் லார்இமை
யோர்க்குஅரசு ஆவர்களே.

## 7. புள்ளம்பூதங்குடி

### வல்வில்இராமன்–பொற்றாமரையாள்

*வழிபட்டநாள் : 1–2–57; 3–1–66.*

*திருமங்கையாழ்வார் 10.*

சுவாமி மலைக்கு வடமேற்கே 2 கல் தொலைவு. கிடந்த திருக்கோலம்; கிழக்கே திருமுக மண்டலம். இத்தலத்திற்கு மேற்கே ஒரு கல் தொலைவில் தொண்டரடிப்பொடி ஆழ்வார் பிறந்தருளிய மண்டங்குடி இருக்கிறது. வடகிழக்கே ½ கல் தொலைவில் ஆதனூர் என்ற திவ்வியப் பிரபந்தத் தலம் இருக்கிறது.

*திருமங்கையாழ்வார்*

மேவா அரக்கர் தென்இலங்கை
வேந்தன் வீயச் சரம்துரந்து,

மாவாய்ப் பிளந்து மல்அடர்த்து
மருதம் சாய்த்த மாலதுஇடம்,

காவார் தெங்கின் பழம்வீழக்
கயல்கள் பாயக் குருகுஇரியும்

பூவார் கழனி எழில்ஆரும்
புள்ளம் பூதங் குடிதானே.

## 8. திருப்பேர்நகர்

### (கோவிலடி)

### அப்பக்குடத்தான்–கமலவல்லி

**வழிபட்டநாள் : 24–3–57; 2–1–66**

***1. பெரியாழ்வார் 2; 2. திருமழிசையாழ்வார் 1;***
***3. திருமங்கையாழ்வார் 19; 4.நம்மாழ்வார் 11. (ஆக 33)***

தஞ்சாவூருக்கு மேற்கே 11 கல் தொலைவிலுள்ள பூதலூர் இரயில் நிலையத்திலிருந்து வடக்கே ஐந்து கல் அளவில்

இருக்கும் மேலைத் திருக்காட்டுப்பள்ளியை அடைந்து. அங்கிருந்து மேற்கே 5 மைல் தூரம் சென்றால் இத்தலத்தை யடையலாம். மேலைத் திருக்காட்டுப்பள்ளிக்குக்கண்டியூரி னின்றும் ஓர் சாலை இருக்கிறது. கண்டியூரினின்றும் 11 கல் அளவு.

கிடந்த திருக்கோலம். மேற்கே திருமுக மண்டலம்.

### பெரியாழ்வார்

கொண்டல்வண் ணா!இங்கே போத ராயே!
கோயிற்பிள் ளாய்!இங்கே போத ராயே!

தெண்டிரை சூழ்திருப் பேர்க்கி டந்த
திருநார ணா!இங்கே போத ராயே!

உண்டுவந் தேன்அம்மம் என்று சொல்லி
ஓடி அகம்புக ஆய்ச்சி தானும்.

கண்டுஎதி ரேசென்றுஎ டுத்துக் கொள்ளக்
கண்ணபி ரான்கற்ற கல்வி தானே.

### திருமழிசையாழ்வார்

(அன்பில் தலப்பாடல் பார்க்க)

### திருமங்கையாழ்வார்

வெண்ணெய்தான் அமுது செய்ய
வெகுண்டுமத்து ஆய்ச்சி ஓச்சி.

கண்ணியார் குறுங் கயிற்றால்
கட்ட,வெட் டென்றுஇ ருந்தான்;

திண்ணமா மதிள்கள் சூழ்ந்த
தென்திருப் பேருள். வேலை

வண்ணனார் நாமம் நாளும்
வாய்மொழிந்து உய்ந்த வாறே!

### நம்மாழ்வார்

திருப்பேர் நகரான் திருமால் இருஞ்சோலைப்
பொருப்பே உறைகின் றபிரான் இன்றுவந்து
'இருப்பேன்'என்று என்நெஞ்சு நிறையப் புகுந்தான்;
விருப்பே பெற்றுஅமுதம் உண்டு களித்தேனே.

## 9. ஆதனூர்

### ஆண்டளக்கும்ஐயன்–ஸ்ரீரங்கநாயகி

வழிபட்டநாள் : 1–2–57; 3–1–66;

திருமங்கையாழ்வார் 1.

சுவாமி மலையினின்றும் 2½ மைல் தொலைவில் உள்ளது. புள்ளம் பூதங்குடியினின்றும் ½ கல் அளவு.

கிடந்த திருக்கோலம்; கிழக்கே திருமுக மண்டலம்.

திருமங்கையாழ்வார்

அன்னவனை ஆதனூர் ஆண்டுஅளக்கும் ஐயனை,

## 10. திருஅழுந்தூர்

### (தேரழுந்தூர்)

### ஆமருவியப்பன்–செங்கமலவல்லி

வழிபட்டநாள் : 10–1–57; 13–10–65.

திருமங்கையாழ்வார் 45.

கும்பகோணம்–மாயூரம் இருப்புப் பாதையில் உள்ள தேரழுந்தூர் என்னும் இரயில் நிலையத்தினின்றும் சுமார் 2 கல் தொலைவில் உள்ளது. கும்பகோணம்–மாயூரம் நெடுஞ்சாலையும் இரயில் நிலையத்தை ஒட்டியே செல்கின்றது. மாயூரத்திலிருந்து 7 மைல் தொலைவு.

நின்ற திருக்கோலம்; கிழக்கே திருமுக மண்டலம். கம்பர் பெருமான் பிறந்து அருளிய தலம் இது. ஆமருவியப்பன் கோவிலில் கம்பர் திருவுருவச் சிலையும், அவர் இல்லக் கிழத்தியின் உருவச் சிலையும் இருக்கின்றன. இக்கோவிலுக்குச் சிறிது தூரத்தில் கம்பர் பிறந்து, வளர்ந்த இடம் என்று கருதப்பெறும் கம்பர் மேடு இருக்கிறது.

கோவிலுக்கு நேரே கிழக்கில் தேவாரம் பெற்ற சிவன் கோவில் இருக்கிறது. இரண்டு கோவிலுக்கும் இடையில் சிறிது உயரமான ஓர் இடத்தில் சாலையருகில் சம்பந்த வினாயகர் என்ற பிள்ளையார் கோயில் இருக்கிறது.

**திருமங்கையாழ்வார்**

தேமருவு பொழிலிடத்து மலர்ந்த போதைத்
தேன்அதனை வாய்மடுத்துஉன் பெடையும், நீயும்,
பூமருவி, இனிதுஅமர்ந்து பொறியில் ஆர்ந்த
அறுகால சிறுவண்டே! தொழுதேன் உன்னை.
ஆமருவி .நிரைமேய்த்த அமரர் கோமான்
அணிஅழுந்தூர் நின்றானுக்கு இன்றே சென்று
நீமருவி, அஞ்சாதே நின்று.ஓர் மாது
நின்நயந்தாள் என்றுஇறையே இயம்பிக் காணே.

## 11. சிறுபுலியூர்

### அருமாகடல்–திருமாமகள்

வழிபட்டநாள் : 12–7–57; 24–6–65.

திருமங்கையாழ்வார் 10.

மாயூரம்–காரைக்குடி இருப்புப் பாதையில் உள்ள மங்கை நல்லூர் இரயில் நிலையத்திலிருந்து மூன்று கல் தொலைவில் இருக்கிறது. பேரளத்திலிருந்தும் மூன்று மைல்தான்.

கிடந்த திருக்கோலம்; தெற்கே திருமுக மண்டலம்.

**திருமங்கையாழ்வார்**

வானார்மதி பொதியும்சடை மழுவாளியொடு ஒருபால்,
தானாகிய தலைவன்அவன் அமரர்க்குஅதி பதியாம்;
தேனார்பொழில் தழுவும்சிறு புலியூர்ச்சல சயனத்து
ஆனாயனது அடியல்லதுஒன்று அறியேன்அடி யேனே.

## 12. திருச்சேறை

### சாரநாதன்–சாரநாயகி.

வழிபட்டநாள் : 2–9–56; 25–6–65.
திருமங்கையாழ்வார் 13.

கும்பகோணம்–திருவாரூர் நெடுஞ்சாலையில் கும்பகோணத்தினின்றும் ஒன்பது கல் தொலைவு.

நின்ற திருக்கோலம்; கிழக்கே திருமுக மண்டலம். இத்தலத்தில் தேவாரக் கோவிலும் இருக்கின்றது.

திருமங்கையாழ்வார்

'தேராளும் வாள்அரக்கன் தென்இலங்கை
வெஞ்சமத்துப் பொன்றி வீழ,
போராளும் சிலைஅதனால் பொருகணைகள்
போக்குவித்தாய்' என்று, நாளும்
தாராளும் வரைமார்பன், தண்சேறை
எம்பெருமான், உம்பர் ஆளும்
பேராளன், பேர்ஓதும் பெரியோரை
ஒருகாலும் பிரிகி லேனே.

## 13. தலைச்சங்கநாண்மதியம்

### (தலைச்சங்காடு)

### நாண்மதியப்பெருமாள்–தலைச்சங்கநாச்சியார்

வழிபட்டநாள் : 31–1–57; 19–10–65.
திருமங்கையாழ்வார் 2.

சீர்காழி–தரங்கம்பாடி நெடுஞ்சாலையில் 10 கல் தொலைவில் இருக்கிறது. மாயூரமிருந்து தரங்கம்பாடி செல்லும் நெடுஞ்சாலையில் உள்ள செம்பொன்னார் கோயில் என்னும் தேவாரத்

தலத்தை அடைந்து. அங்கிருந்து 5 மைல் வடக்கே சென்றாலும் இத்தலத்தையடையலாம். காவிரியாற்றின் தென்கரையில் இக் கோயில் இருக்கிறது.

நின்ற திருக்கோலம்; கிழக்கே திருமுக மண்டலம். இக் கோயிலுக்குக் கிழக்கே தேவாரம் பெற்ற சிவன் கோவில் இருக்கிறது.

திருமங்கையாழ்வார்

கண்ணார் கண்ணபுரம் கடிகை கடிகமழும்
தண்ணார் தாமரைசூழ் தலைச்சங்க மேல்திசையுள்
விண்ணோர் நாள்மதியை. விரிகின்ற வெஞ்சுடரை.
கண்ணாரக் கண்டுகொண்டு களிக்கின்றது என்றுகொலோ?

## 14. திருக்குடந்தை

### (கும்பகோணம்)

### சாரங்கபாணிப்பெருமாள்–கோமளவல்லி

வழிபட்டநாள் : 31–12–55; 26–6–65.

1. பெரியாழ்வார் 3; 2. ஆண்டாள் 1;
3. திருமழிசையாழ்வார் 7; 4. திருமங்கையாழ்வார் 25;
5. பூதத்தாழ்வார் 2; 6. பேயாழ்வார் 2;
7. நம்மாழ்வார் 11. (ஆக 51.)

இரயில் நிலையம். கிடந்த திருக்கோலம். கிழக்கே திருமுக மண்டலம். கோயில் நடுவூருக்குள் இருக்கின்றது. கும்ப கோணத்தில் சக்கரபாணி கோயில், இராமசுவாமி கோயில் முதலிய பெருமாள் கோயில் நிறைய இருப்பினும் ஆழ்வார் மங்களா சாசனம் பெற்ற கோயில் இஃது ஒன்றே.

கும்பகோணம் நகரத்தில் தேவாரம் பெற்ற சிவன் கோயில்கள் மூன்று இருக்கின்றன. பாடல்பெறாத கோவில்கள்

மிகப் பல இருக்கின்றன. 'கோயில் பெருத்தது கும்பகோணம்' என்பது பழமொழி. எங்கு பார்த்தாலும் குடந்தை நகருள் வானளாவிய கோபுரங்களைக் காணலாம்.

சாரங்கபாணி கோயில் பெரிது. அதன் இராசகோபுரம் மிகப் பெரிது. கும்பகோணம் கோயில் எல்லாவற்றுள்ளும் உயரமான கோபுரம் இக்கோபுரந்தான். இங்கே பள்ளி கொண்டிருக்கின்ற பெருமாளை 'சாரங்கராசன்' என்றும் 'ஆரா அமுதன்' என்றும் அழைப்பார்கள்.

திருமழிசையாழ்வார், திருநாட்டுக்கு எழுந்தருளியது. அதாவது வீடுபேறடைந்தது இத்தலத்திலேயே.

பெரியாழ்வார்

குடங்கள் எடுத்துஏற விட்டுக்
கூத்தாட வல்லஎம் கோவே!

மடங்கொள் மதிமுகத் தாரை
மால்செய்ய வல்லஎன் மைந்தா!

இடந்திட்டு இரணியன் நெஞ்சை
இருபிளவு ஆகமுன் கீண்டாய்!

குடந்தைக் கிடந்தஎம் கோவே!
குருக்கத்திப் பூச்சூட்ட வாராய்!

ஆண்டாள்

பால்ஆல் இலையில் துயில்கொண்ட
பரமன் வலைப்பட் டிருந்தேனை,

வேலால் துன்னம் பெய்தாற்போல்
வேண்டிற்று எல்லாம் பேசாதே,

கோலால் நிரைமேய்த்து ஆயனாய்க்
குடந்தைக் கிடந்த குடமாடி,

நீலார் தண்ணந் துழாய்கொண்டுஎன்
நெறிமென் குழல்மேல் சூட்டீரே.

நடந்தகால்கள் நொந்தவோ? நடுங்குஞாலம் ஏனமாய்
இடந்தமெய்கு லுங்கவோ?வி லங்குமால்வ ரைச்சுரம்
கடந்தகால்ப ரந்தகாவி ரிக்கரைக்கு டந்தையுள்
கிடந்தவாறுஎ ழுந்திருந்து பேசுவாழி கேசனே!

### திருமங்கையாழ்வார்

வாராளும் இளம்கொங்கை வண்ணம்வேறு
ஆயினவாறு எண்ணாள்; எண்ணில்
பேராளன் பேரல்லால் பேசாள்;இப்
பெண்பெற்றேன் என்செய் கேன்நான்;
தாராளன்; தண்குடந்தை நகராளன்;
ஐவர்க்குஆய் அமரில் உய்த்த
தேராளன்; என்மகளைச் செய்தனகள்
எங்ஙனம்நான் செப்பு கேனே!

### பூதத்தாழ்வார்

எங்கள் பெருமான் இமையோர் தலைமகன்நீ.
செங்கண் நெடுமால் திருமார்பா!-பொங்கு
படமூக்கின் ஆயிரவாய்ப் பாம்பணைமேல் சேர்ந்தாய்!
குடமூக்கில் கோயிலாக் கொண்டு.

### பேயாழ்வார்

சேர்ந்த திருமால் கடல்குடந்தை வேங்கடம்
நேர்ந்தஎன் சிந்தை நிறைவிசும்பு-வாய்ந்த
மறைபா டகம்அனந்தன் வண்துழாய்க் கண்ணி
இறைபாடி ஆய இவை.

### நம்மாழ்வார்

களைவாய் துன்பம் களையாது ஒழிவாய்
களைகண் மற்றுஇலேன்
வளைவாய் நேமிப் படையாய்! குடந்தைக்
கிடந்த மாமாயா!
தளரா உடலம் என்னது ஆவி
சரிந்து போம்போது.
இளையாது உனதாள் ஒருங்கப் பிடித்துப்
போத இசைநீயே.

# 15. கண்டியூர்

## அரன்சாபம்தீர்த்தபெருமாள் : கமலவல்லி

**வழிபட்டநாள் : 18-12-56; 2-1-66.**

**திருமங்கையாழ்வார் 1.**

தஞ்சை–திருவையாறு நெடுஞ்சாலையில் திருவையாற்றுக்கு ஒரு கல் முன்னே இருக்கின்றது. சாலையின்மீது மேல்புறத்தில் கோயில் இருக்கின்றது. நின்ற திருக்கோலம். கிழக்கே திருமுக மண்டலம். எதிர்ப்புறத்தில் அட்ட வீரட்டங்களுள் ஒன்றாகிய தேவாரக் கோயில் இருக்கின்றது.

திருமங்கையாழ்வார்

பிண்டியார் மண்டை ஏந்திப்
பிறர்மனை திரிதந்து உண்ணும்
உண்டியான் சாபம் தீர்த்த
ஒருவன்ஊர், உலகம் ஏத்தும்
கண்டியூர், அரங்கம், மெய்யம்,
கச்சி,பேர், மல்லை என்று
மண்டினார் உய்யல் அல்லால்
மற்றையார்க்கு உய்ய லாமே?

# 16. திருவிண்ணகர்

## (ஒப்பிலியப்பன்கோயில்)

## ஒப்பிலியப்பன்–பூமிதேவி

**வழிபட்டநாள் : 1-1-56; 17-10-65.**

**1. திருமங்கையாழ்வார் 34; 2. பேயாழ்வார் 2.**

**3. நம்மாழ்வார். 11 (ஆக. 47.)**

கும்பகோணத்துக்குக் கிழக்கே 4 கல் தொலைவில் இருக்கிறது. திரு நாகேச்சுரம் இரயில் நிலையத்துக்கு அண்மையில்

இருக்கிறது. கோவில் பெரிது. நின்ற திருக்கோலம். கிழக்கே திருமுக மண்டலம்.

இங்குள்ள கடவுளுக்கு ஒப்பிலியப்பன் என்று பெயர். ஒப்பில்லாத தந்தை என்னும் பொருளது. இதனைத் திரித்து இன்று உப்பிலியப்பன் கோயில் என்றழைக்கின்றார்கள். அதோடு இக்கோயிலுக்குள் உப்பிட்ட உணவுப் பொருள் எதையும் பயன்படுத்துவதில்லை என்றும் வைத்திருக்கிறார்கள். இதற்குச் சில கதைகளும் சொல்லுகிறார்கள். இவைகள் எல்லாம் சரியன்று. ஒப்பில்லாதவனை உப்பில்லாதவனாக்குவதில் என்ன சிறப்பு இருக்கிறது?

"திருவிண்ணகர் சேர்ந்த அப்பன்
தன்ஒப்பார்இல் அப்பன்"

என நம்மாழ்வார் திருவாய்மொழிப் பாசுரத்தில் வரும் சொற்றொடர் ஒப்பிலியப்பன் என்பதற்குத் தக்க சான்றாகும்.

இக்கோயிலுக்குப் பக்கத்தில் திருநாகேச்சுரம் என்ற பாடல் பெற்ற சிவன் கோயில் இருக்கின்றது.

**திருமங்கையாழ்வார்**

அன்றுஆயர் குலமகளுக்கு அரையன் தன்னை,
அலைகடலைக் கடைந்துஅடைத்த அம்மான்தன்னை,
குன்றாத வலிஅரக்கர் கோனை,மாளக்
கொடும்சிலைவாய்ச் சரம்துரந்து. குலம்க ளைந்து
வென்றானை, குன்றுஎடுத்த தோளி னானை,
விரிதிரைநீர் விண்ணகரம் மருவி நாளும்
நின்றானை, தண்குடந்தைக் கிடந்த மாலை,
நெடியானை அடிநாயேன் நினைந்திட் டேனே.

**பேயாழ்வார்**

பண்டுஎல்லாம் வேங்கடம் பாற்கடல் வைகுந்தம்
கொண்டுஅங்கு உறைவார்க்குக் கோயில்போல்–வண்டு
வளம்கிளரும் நீள்சோலை வண்பூங் கடிகை
இளம்குமரன் தன்விண் ணகர்.

நம்மாழ்வார்

நல்குரவும் செல்வும் நரகும் சுவர்க்கமும்ஆய்
வெல்பகையும் நட்பும் விடமும் அமுதமுமாய்ப்
பல்வகையும் பரந்தபெரு மான்என்னை ஆள்வானை,
செல்வம்மல்கு குடித்திரு விண்ணகர்க் கண்டேனே.

## 17. திருக்கண்ணபுரம்

### சௌரிராசப்பெருமாள் : கண்ணபுரநாயகி

வழிபட்டநாள் : 5–5–56; 23–6–65.

1. பெரியாழ்வார் 1 ; 2. ஆண்டாள் 1;
3. குலசேகராழ்வார் 1; 4. திருமங்கையாழ்வார் 104;
5. நம்மாழ்வார் 11. (ஆக 128)

மாயூரம்–காரைக்குடி இருப்புப்பாதையிலுள்ள நன்னிலம் என்னும் இரயில் நிலையத்திலிருந்து கிழக்கே 5 கல் தொலைவு. நான்காவது மைலில் திருப்புகலூர், சிவத்தலம் இருக்கிறது. அங்கே முடிகொண்டான் ஆற்றைப் பாலத்தின்மீது கடந்து தெற்கே செல்லுதல் வேண்டும்.

நின்ற திருக்கோலம். கிழக்கே திருமுகமண்டலம். இத் தலத்திற்குத் திவ்வியப் பிரபந்தத்தில் 128 பாசுரங்கள் இருக்கின்றன. திருமங்கையாழ்வார் மட்டும் நூற்றுக்குமேற்பட்ட பாடல்கள் இப்பதிக்குப் பாடியிருக்கின்றார். மங்கைமன்னன் நூற்றுக்குமேல் பாசுரம் பாடிய பதி இரண்டு. இன்னொன்று திருநறையூர்.

திவ்வியப்பிரபந்தப் பாடல்பெருக்கத்தில் இப்பதி மூன்றாவதாக நிற்கின்றது. திருமாலிருஞ்சோலையும் 128 பாசுரம் பெற்றிருக்கின்றது. முதலாவது திருவரங்கம். இரண்டாவது திருவேங்கடம். மூன்றாவது இடம் இத்திருப்பதிக்குக் கிடைத்ததால் இத்தலம் பெருஞ்சிறப்படைகிறது.

திருக்கண்ணபுரம் பெருமாள் அந்த நாளில் தோன்றினார் என்பதைப் பின்வரும் ஒரு அரிய தனிப்பாடல் அழகாக எடுத்துக்காட்டும்.

"உத்திரத்திற்கு ஓர்நாள்
உரோகிணிக்குப் பத்தாம்நாள்
சித்திரைக்கு நேரே
சிறந்தநாள்;-எத்திசையும்
காராரும் பூஞ்சோலைக்
கண்ணபுரம் வாழ்சவரி
நாராய ணன்பிறந்த நாள்."

இத்தலத்தில் முனியோதரன் பொங்கல் என அர்த்த சாமத்தில் ஓர் நைவேத்தியம் சாமிக்குப் படைக்கின்றார்கள். அது மிக அருமையாக இருக்கும். ஐந்து, மூன்று, இரண்டு என்று அப்பொங்கலுக்குப் பெயர். காரணம் அரிசி ஐந்து பங்கு; பாசிப்பருப்பு மூன்று பங்கு; வெண்ணெய் உருக்கிய நெய் இரண்டு பங்கு அதில் சேர்க்கிறார்கள்.

### பெரியாழ்வார்

உன்னையும் ஒக்கலையில் கொண்டு.த மில்மருவி
உன்னொடு தங்கள்கருத்து ஆயின செய்துவரும்
கன்னிய ரும்மகிழக் கண்டவர் கண்குளிரக்
கற்றவர் தெற்றிவரப் பெற்றஎ னக்குஅருளி.
மன்னுகு றுங்குடியா!ய் வெள்ளறை யாய்!மதில்சூழ்
சோலைம லைக்குஅரசே! கண்ணபு ரத்துஅமுதே!
என்,அவ லம்களைவாய்! ஆடுக செங்கீரை!
ஏழுல கும்உடையாய்! ஆடுக ஆடுகவே.

### ஆண்டாள்

காட்டில் வேங்கடம் கண்ண புரநகர்.
வாட்டம் இன்றி மகிழ்ந்துஉறை வாமனன்
ஓட்ட ராவந்துஎன் கைப்பற்றித் தன்னொடும்
கூட்டு மாகில் கூடிடு கூடலே.

குலசேகராழ்வார்

கொங்குமலி கருங்குழலாள் கோசலைதன் குலமதலாய்!
தங்குபெரும் புகழ்ச்சனகன் திருமருகா! தாசரதி!
கங்கையிலும் தீர்த்தமலி கணபுரத்துஎன் கருமணியே!
எங்கள்குலத்து இன்னமுதே! இராகவனே! தாலேலோ!

திருமங்கையாழ்வார்

'தாராய தண்துளப வண்டுஉழுத
வரைமார்பன்' என்கின் றாளால்.
'போரானைக் கொம்புஒசித்த புள்பாகன்
என்அம்மான்' என்கின் றாளால்.
'ஆரானும் காண்மின்கள் அம்பவளம்
வாய்அவனக்கு' என்கின் றாளால்.
கார்வானம் நின்றதிருக் கண்ணபுரத்து
அம்மானைக் கண்டாள் கொல்லோ!

நம்மாழ்வார்

மானைநோக் கிமடப் பின்னைதன் கேள்வனை.
தேனை.வா டாமலர் இட்டுநீர் இறைஞ்சுமின்
வானைஉந் தும்மதிள் சூழ்திருக் கணபுரம்
தான்நயந் தபெரு மான்சரண் ஆகுமே.

# 18. திருவாலிதிருநகரி

## வயலாலிமணவாளன்–அமுதகடவல்லி

**வழிபட்டநாள் : 25–12–56; 14–10–65**

*1. குலசேகராழ்வார் : 1; 2. திருமங்கையாழ்வார் 41;(ஆக42)*

சீர்காழியிலிருந்து தென்கிழக்கே ஆறு கல் தொலைவு. திருவாலி என்றும் திருநகரி என்றும் இரண்டு தலங்கள்

இருக்கின்றன. இரண்டுக்குமிடையே இரண்டு கல் தொலைவு. திருநகரியில் மணவாளன் சந்நிதியும் திருமங்கையாழ்வார் சந்நிதியும் இருக்கின்றன. திருமங்கையாழ்வார் திருவுருவம் பேரழகோடு பொலிகின்றது. திருவாலியில் நரசிம்மப் பெருமாள் சந்நிதி இருக்கின்றது. திருமங்கையாழ்வார் பிறந்தருளிய குறையலூர் எனும் தலம் இத் திருப்பதிக்கு அண்மையிலுளது.

வீற்றிருந்த திருக்கோலம். மேற்கே திருமுகமண்டலம்.

இங்குள்ள திருமங்கையாழ்வார் தை அமாவாசை தோறும் எழுந்தருளி, குறையலூர் சென்று, அதற்கு அணித்தேயுள்ள மங்கை மடத்தில் தங்கி, திருநாங்கூர் திருப்பதி பன்னிரண்டிலும் கெருடசேவை கண்டருளி, மீண்டும் திருநகரியை அடைகின்றார்.

குலசேகராழ்வார்

ஆலின்இலைப் பாலகனாய் அன்றுஉலகம் உண்டவனே!
வாலியைக்கொன்று அரசுஇளைய வானரத்துக்கு அளித்தவனே!
காலின்மணி கரைஅலைக்கும் கணபுரத்துஎன் கருமணியே!
ஆலிநகர்க்கு அதிபதியே! அயோத்திமனே! தாலேலோ!

திருமங்கையாழ்வார்

நெஞ்சுருகிக் கண்பனிப்ப நிற்கும்;சோரும்;
நெடிதுஉயிர்க்கும்; உண்டுஅறியாள்; உறக்கம்பேணாள்;
'நஞ்சுஅரவில் துயில்அமர்ந்த நம்பீ!' என்னும்;
'வம்பார்பூம் வயல்ஆலி மைந்தா!' என்னும்;
அஞ்சிறைய புட்கொடியே ஆடும், பாடும்;
'அணிஅரங்கம் ஆடுதுமோ தோழி!' என்னும்
என்சிறகின் கீழ்அடங்காப் பெண்ணைப் பெற்றேன்;
இருநிலத்துஓர் பழிபடைத்தேக் ஏபா வம்மே!'

## 19. திருநாகை

### (நாகப்பட்டினம்)

### சௌந்தரியராசப்பெருமாள்–சௌந்தரியவல்லி

வழிபட்டநாள் : 1–9–56; 12–3–65.

திருமங்கையாழ்வார் : 10.

இக்கோயில் நாகப்பட்டினம் நகரத்தில் இருக்கின்றது. இத்தலம் பழைய கடற்கரைப் பட்டினம்.

நின்ற திருக்கோலம். கிழக்கே திருமுகமண்டலம். இத்தலத்தில் நாகைக்காரோணம் என்ற தேவாரம்பெற்ற சிவன் கோயிலும் இருக்கின்றது.

திருமங்கையாழ்வார்

அன்னமும் கேழலும் மீனும்ஆய
 ஆதியை,நாகை அழகி யாரை
கன்னிநன் மாமதிள் மங்கை வேந்தன்
 காமரு சீர்க்கலி கன்றி. குன்றா
இன்னிசை யால்சொன்ன செஞ்சொல் மாலை
 ஏழும் இரண்டும்ஒ ரொன்றும் வல்லார்
மன்னவ ராய்உலகு ஆண்டு மீண்டும்
 வானவ ராய்மகிழ்வு எய்து வாரே.

## 20. திருநறையூர்

### (நாச்சியார்கோயில்)

### நம்பி–நம்பிக்கை நாச்சியார்

வழிபட்டநாள் : 2–1–56; 25–6–65.

திருமங்கையாழ்வார் : 110

கும்பகோணம்–குடவாசல் நெடுஞ்சாலையில் கும்பகோணத்திலிருந்து ஆறு கல் தொலைவு.

பெரிய கோயில். நின்ற திருக்கோலம். கிழக்கே திருமுக மண்டலம். திருமங்கையாழ்வார் அதிகமான பாசுரங்கள் பாடியது இத்தலத்திற்குத்தான். நூற்றுக்கு மேற்பட்ட திருமங்கையாழ்வாரின் பாசுரம் பெற்ற திருப்பதி இரண்டு. ஒன்று திருக்கண்ணபுரம். இன்னொன்று திருநறையூர். திருக்கண்ணபுரத்துக்கு மங்கை மன்னன் பாடல் நூற்றுநான்கு. இத்தலத்திற்கு நூற்றுப்பத்து.

திவ்வியப்பிரபந்தப் பாடல் பெருக்கத்தில் இத்தலம் ஐந்தாவதாக நிற்கின்றது. 1. திருவரங்கம். 2. திருவேங்கடம். 3. திருக்கண்ணபுரம். 4. திருமாலிருஞ்சோலை.

இத்தலத்தில் நறையூர்ச்சித்திச்சுரம் என்ற தேவாரம் பெற்ற சிவன் கோயில் இருக்கின்றது.

**திருமங்கையாழ்வார்**

கல்லார் மதில்சூழ் கடிஇலங்கைக் கார்அரக்கன்
வல்ஆகம் கீள வரிவெஞ் சரம்துரந்த
வில்லானை. செல்வ விபீடணற்கு வேறாக
நல்லானை. நாடி நறையூரில் கண்டேனே.

# 21. நந்திபுரவிண்ணகரம்

## (நாதன்கோயில்)

## விண்ணகரப்பெருமாள்—சண்பகவல்லி

**வழிபட்டநாள் : 9–1–57; 15–1–66.**
**திருமங்கையாழ்வார் : 10**

கும்பகோணத்திலிருந்து தெற்கே 3 கல் தொலைவு. இருந்த திருக்கோலம். மேற்கே திருமுகமண்டலம்.

*திருமங்கையாழ்வார்*

*தம்பியொடு தாம்ஒருவர் தம்துணைவி*
*காதல்துணை ஆக முனநாள்*
*வெம்பிளரி கானகம்உ லாவும்அவர்*
*தாம்இனிது மேவு நகர்தான்*
*கொம்புகுதி கொண்டுகுயில் கூவமயில்*
*ஆலும்எழில் ஆர்பு றவுசேர்*
*நம்பிஉறை கின்றநகர் நந்திபுர*
*விண்ணகரம் நண்ணு மனமே!*

## 22. திருஇந்தளூர்

## (திருவழுந்தூர்)

*மருவினியநாதன்*
*சுகந்தவனநாதன் சந்திரசாபவிமோசனவல்லி*

*வழிபட்டநாள் : 1–2–57; 19–10–65.*

*திருமங்கையாழ்வார் : 11*

*மாயூரம் இரயில் நிலையத்திலிருந்து 3 கல் தொலைவு. கிடந்த திருக்கோலம். கிழக்கே திருமுகமண்டலம்.*

*திருமங்கையாழ்வார்*

*ஆசை வழுவாது ஏத்தும்*
*எமக்குஇங்கு இழுக்காய்த்து. அடியோர்க்குத்*
*தேசம் அறிய உமக்கே*
*ஆளாய்த் திரிகின் றோமுக்கு.*
*காசின் ஒளியில் திகழும்*
*வண்ணம் காட்டீர். எம்பெருமான்.*
*வாசி வல்லீர்! இந்த*
*ளூரீர்! வாழ்ந்தே போம்நீரே!*

# 23. தில்லைத்திருச்சித்திரகூடம்

## (சிதம்பரம்)

## கோவிந்தராசப்பெருமாள்–புண்டரீகவல்லி

***வழிபட்டநாள் : 25–12–55; 13–10–65***

***1. குலசேகராழ்வார்:11; 2. திருமங்கையாழ்வார் 21;(ஆக 32)***

சிதம்பரம் கூத்தப்பெருமான் கோயிலுக்குள் சந்நிதிக்கு நேராக இக்கோயில் இருக்கிறது.

கிடந்த திருக்கோலம். கிழக்கே திருமுகமண்டலம்.

குலசேகராழ்வார்

வலிவணக்கு வரைநெடுந்தோள் விராதைக் கொன்று.
வண்தமிழ்மா முனிகொடுத்த வரிவில் வாங்கி.
கலைவணக்கு நோக்குஅரக்கி மூக்கை நீக்கி.
கரனோடு தூடணன்தன் உயிரைவாங்கி.
சிலைவணக்கி மான்மரிய எய்தான் தன்னைத்
தில்லைநகர்த் திருச்சித்ர கூடம் தன்னுள்
தலைவணக்கிக் கைகூப்பி ஏத்த வல்லார்
திரிதலால் தவம்உடைத்துஇத் தரணி தானே.

திருமங்கையாழ்வார்

காயோடு நீடு கனியுண்டு வீசு
கடும்கால் நுகர்ந்து நெடுங்காலம். ஐந்து
தீயோடு நின்று தவம்செய்ய வேண்டா;
திருமார்ப னைச்சிந் தையுள்வைத்தும் என்பீர்.
வாயோது வேதம் மல்கின்ற தொல்சீர்
மறையாளர் நாளும் முறையால் வளர்த்த
தீஓங்க ஓங்கப் புகழ்ஓங்கு தில்லைத்
திருச்சித்ர கூடம் சென்றுசேர் மின்களே.

## 24. காழிச்சீராமவிண்ணகரம்

### (தாடாளன்–சந்நிதி)

### தாடாளன்–மட்டவிழும்குழலி

வழிபட்டநாள் : 25–12–56; 15–10–65

திருமங்கையாழ்வார்

சீர்காழி இரயில் நிலையத்துக்குக் கிழக்கே அரை மைலில் இருக்கின்றது.

நின்ற திருக்கோலம். கிழக்கே திருமுகமண்டலம்.

திருமங்கையாழ்வார்

பிறைதங்கு சடையானை வலத்தே வைத்துப்
பிரமனைத்தன் உந்தியிலே தோற்றுவித்து.
கறைதங்கு வேல்தடம்கண் திருவை மார்பில்
கலந்தவன்தாள் அணைகிற்பீர்! கழுநீர் கூடித்
துறைதங்கு கமலத்துத் துயின்று கைதைத்
தோடாரும் பொதிசோற்றுச் சுண்ணம் நண்ணி,
சிறைவண்டு களிபாடும் வயல்சூழ் காழிச்
சீராம விண்ணகரே சேர்மின் நீரே.

## 25. கூடலூர்

### (ஆடுதுறைப்பெருமாள்கோயில்)

### வையம்காத்தபெருமாள்–பத்மாசனவல்லி

வழிபட்டநாள் : 29–1–57; 16–1–66

திருமங்கையாழ்வார் 10.

பாபநாசத்தினின்றும் ஐந்துகல் தொலைவு. திருஜயாற்றினின்றும் ஏழுகல் தொலைவு.

நின்ற திருக்கோலம். கிழக்கே திருமுகமண்டலம்.

திருமங்கையாழ்வார்

பெருகு காதல் அடியேன் உள்ளம்
உருகப் புகுந்த ஒருவர் ஊர்போல்
அருகு கைதை மலர, கெண்டை
குருகுஎன்று அஞ்சும் கூடல் ஊரே.

## 26. திருக்கண்ணங்குடி

### சியாமளமேனிப்பெருமாள்–அரவிந்தவல்லி

வழிபட்டநாள் : 1–9–56; 21–6–65.
திருமங்கையாழ்வார் 10.

திருவாரூருக்குக் கிழக்கே ஏழு கல் தொலைவிலுள்ள கீழ் வேளூர் இரயில் நிலையத்திலிருந்து கிழக்கே இரண்டு கல் தொலைவு.

நின்ற திருக்கோலம். கிழக்கே திருமுகமண்டலம்.

திருமங்கையாழ்வார்

பன்னிய பாரம் பார்மகட்கு ஒழிய,
பாரத மாபெரும் போரில்,
மன்னர்கள் மடிய மணிநெடும் திண்தேர்
மைத்துனர்க்கு உய்த்தமா மாயன்,
துன்னுமா தவியும் சுரப்புனைப் பொழிலும்
சூழ்ந்துஎழு செண்பக மலர்வாய்,
தென்னஎன்று அளிகள் முரன்றுஇசை பாடும்
திருக்கண்ணங் குடியுள் நின்றானே.

# 27. திருக்கண்ணமங்கை

## பக்தவத்சலப்பெருமாள்–அபிடேகவல்லி

*வழிபட்டநாள் : 2–9–57; 12–3–65.*
*திருமங்கையாழ்வார் : 14*

*திருவாரூர்–கும்பகோணம் நெடுஞ்சாலையில் திருவாரூரி னின்றும் நான்கு கல் தொலைவில் இருக்கின்றது.*

*நின்ற திருக்கோலம். கிழக்கே திருமுகமண்டலம்.*

*திருமங்கையாழ்வார்*

*மண்ணாடும், விண்ணாடும், வானவரும்*
*தானவரும் மற்றும் எல்லாம்*
*உண்ணாத பெருவெள்ளம் உண்ணாமல்*
*தான்விழுங்கி, உய்யக் கொண்ட*
*கண்ணாளன், கண்ணமங்கை நகராளன்*
*கழல்சூடி, அவனை உள்ளத்து*
*எண்ணாத மானிடத்தை எண்ணாத*
*போதெல்லாம் இனிய வாறே.*

இராமலிங்க சுவாமிகள்

உலகம் புரக்கும் பெருமான்தன்
உளத்தும், புயத்தும் அமர்ந்துஅருளி,
உவகை அளிக்கும் பேரின்ப
உருவே! எல்லாம் உடையானே!
திலகம் செறிவாள் நுதலகரும்பே!
தேனே! கனிந்த செழுங்கனியே!
தெவிட்டாது அன்பர் உளத்துள்ளே
தித்தித்து எழும்ஓர் தெள்ளமுதே!

மலகஞ் சுகத்தேற்கு அருள்அளித்த
வாழ்வே! என்கண் மணியே!என்
வருத்தம் தவிர்க்க வரும்குருவாம்
வடிவே! ஞான மணிவிளக்கே!

சலகந் தரம்போல் கருணைபொழி
தடங்கண் திருவே! கண்ணமங்கைத்
தாயே! சரணம் சரணம்;இது
தருணம்; கருணை தருவாயே.

## 28. கவித்தலம்

### கசேந்திரவரதர்–ரமாமணிவல்லி

வழிபட்டநாள் : 29–1–57; 3–1–66.

திருமழிசையாழ்வார் : 1

பாபநாசம் இரயில் நிலையத்திலிருந்து வடக்கே இரண்டு கல் தொலைவு.

கிடந்த திருக்கோலம். கிழக்கே திருமுகமண்டலம்.

திருமழிசையாழ்வார்

கூற்றமும் சாரா; கொடுவினையும் சாரா;தீ
மாற்றமும் சாரா வகையறிந்தேன்;–ஆற்றங்
கரைக்கிடக்கும் கண்ணன் கடல்கிடக்கம்; மாயன்
உரைக்கிடக்கும் உள்ளத்து எனக்கு.

## 29. திருவெள்ளியங்குடி

### கோலவில்இராமன்–மரகதவல்லி

வழிபட்டநாள் : 23–5–57; 14–1–66

திருமங்கையாழ்வார் : 10

திருவிடைமருதூரிலிருந்து 5 கல் தொலைவு.

கிடந்த திருக்கோலம். கிழக்கே திருமுகமண்டலம்.

இத்தலத்திற்கு வடக்கே 1 கல் தொலைவில், திவ்வியப் பிரபந்தத்துக்குப் பேருரை கண்ட பெரியவாச்சான் பிள்ளை பிறந்தருளிய செங்கநல்லூர் என்னும் ஊர் இருக்கிறது.

திருமங்கையாழ்வார்

முடியுடை அமரர்க்கு இடர்செயும் அசுரர்
தம்பெரு மானைஅன்று அரியாய்
மடியிடை வைத்து மார்வைமுன் கீண்ட
மாயனார் மன்னிய கோயில்,
படியிடை மாடத்து அடியிடைத் தூணில்
பதித்தபன் மணிகளின் ஒளியால்
விடிபகல் இரவுஎன்று அறிவுஅரி தாய
திருவெள்ளி யங்குடி அதுவே.

## 30. மணிமாடக்கோயில்

### (திருநாங்கூர்)

### நந்தாவிளக்குப்பெருமாள்–புண்டரீகவல்லி

வழிபட்டநாள் : 30–1–57; 14–10–65

திருமங்கையாழ்வார் : 12

சீர்காழியினின்றும் 5 கல் தொலைவு. திருவாலியிலிருந்து தெற்கே இரண்டு மைலில் இருக்கின்றது.

திருநாங்கூர்த் தலங்கள் ஆறனுள் இது முதலாவது.

இருந்த திருக்கோலம். கிழக்கே திருமுக மண்டலம்.

திருநாங்கூர்த் தலங்கள் ஆறு பின்வருவன :

1. மணிமாடக் கோயில்
2. வைகுந்த விண்ணகரம்.
3. அரிமேய விண்ணகரம்.

4. வண்புருடோத்தமம்.

5. செம்பொன் செய் கோயில்.

6. திருத்தெற்றியம்பலம்.

இவ் ஆறு கோயிலும் திருநாங்கூர் என்னும் சிறிய ஊருக்குள் இருக்கின்றன. இவ்வனைத்தும் திருமங்கையாழ்வார் மங்களா சாசனம் பெற்றவை.

*திருமங்கையாழ்வார்*

*துளையார் கருமென் குழல்ஆய்ச்சி யர்தம்*
*துகில்வாரி யும்,சிற்றில் சிதைத்தும், முற்றா*
*இளையார் விளையாட் டொடுகாதல் வெள்ளம்*
*விளைவித்த அம்மான் இடம்,வேல் நெடுங்கண்*
*முளைவாள் எயிற்று மடவார் பயிற்று*
*மொழிகேட்டு இருந்து முதிராத இன்சொல்*
*வளைவாய கிள்ளை மறைபாடு நாங்கூர்*
*மணிமாடக் கோயில் வணங்குஎன் மனனே.*

# 31. வைகுந்தவிண்ணகரம்

## வைகுந்தநாதன்–வைகுந்தவல்லி

*வழிபட்டநாள் : 30–1–57; 14–10–65*
*திருமங்கையாழ்வார் : 10*

இது நாங்கூர் ஆறு தலங்களுள் இரண்டாவது. இருந்த திருக்கோலம். கிழக்கே திருமுக மண்டலம்.

*திருமங்கையாழ்வார்*

*மின்அனைய நுண்மருங்குல் மெல்லியற்காய் இலங்கை*
*வேந்தன்முடி ஒருபதும்தோள் இருபதும்போய் உதிர,*
*தன்நிகரில் சிலைவளைத்துஅன்று இலங்கைபொடிசெய்த*
*தடம்தோளன் மகிழ்ந்துஇனிது மருவிஉறை கோயில்,*
*செந்நெலொடு செங்கமலம் சேல்கயல்கள் வாளை*
*செங்கழுநீ ரொடுமிடைந்து கழனிதிகழ்ந்து எங்கும்*
*மன்னுபுகழ் வேதியர்கள் மலிவுஎய்து நாங்கூர்*
*வைகுந்த விண்ணகரம் வணங்கு,மட நெஞ்சே!*

## 32. அரிமேய விண்ணகரம்

### குடமாடு கூத்தப்பெருமாள்–அமுதகடவல்லி

**வழிபட்டநாள் : 30–1–57; 14–10–65.**

**திருமங்கையாழ்வார் : 10**

இது திருநாங்கூர் ஆறு தலங்களுள் மூன்றாவது. இருந்த திருக்கோலம். கிழக்கே திருமுக மண்டலம்.

திருமங்கையாழ்வார்

திருமடந்தை மண்மடந்தை இருபாலும் திகழத்
தீவினைகள் போய்அகல அடியவர்கட்கு என்றும்
அருள்நடந்துஇவ் ஏழுலகத்து அவர்பணிய வானோர்
அமர்ந்துஏத்த இருந்தஇடம் பெரும்புகழ்வே தியர்வாழ்
தரும்இடங்கள் மலர்கள்மிகு கைதைகள்செங் கழுநீர்
தாமரைகள் தடங்கள்தொறும் இடங்கள்தொறும் திகழ
அருவிடங்கள் பொழில்தழுவி எழில்திகழு நாங்கூர்
அரிமேய விண்ணகரம் வணங்குமட நெஞ்சே.

## 33. வண்புருடோத்தமம்

### புருடோத்தமப்பெருமாள்–புருடோத்தமநாயகி

**வழிபட்டநாள் : 30–1–57; 14–10–65.**

**திருமங்கையாழ்வார் : 10**

இது திருநாங்கூர் ஆறுதலங்களுள் நான்காவது.

நின்ற திருக்கோலம். கிழக்கே திருமுக மண்டலம்.

திருமங்கையாழ்வார்

பருங்கை யானையின் கொம்பினைப் பறித்துஅதன்
    பாகனைச் சாடிப்புக்கு,
ஒருங்க மல்லரைக் கொன்றுபின் கஞ்சனை
    உதைத்தவன் உறைகோயில்,
கரும்பின் ஊடுஉயர் சாலிகள் விளைதரு
    கழனியில் மலிவாவி
மருங்குள லாம்பொழில் ஓங்கிய நாங்கூர்
    வண்புரு டோத்தமமே.

## 34. செம்பொன்செய்கோயில்

### பேரருளாளப்பெருமாள்–அல்லிமாமலர் நாச்சியார்

வழிபட்டநாள் : 30–1–57; 14–10–65.
திருமங்கையாழ்வார் : 10

இது திருநாங்கூர்க் கோவில் ஆறினுள் ஐந்தாவது. நின்ற திருக்கோலம். கிழக்கே திருமுக மண்டலம்.

திருமங்கையாழ்வார்

'களங்கனி வண்ணா! கண்ணனே! என்தன்
    கார்முகி லே!'என நினைந்திட்டு,
உளம்கனிந்து இருக்கும் அடியவர் தங்கள்
    உள்ளத்துள் ஊறிய தேனை,
தெளிந்தநான் மறையோர் நாங்கைநன் நடுவுள்
    செம்பொன்செய் கோயிலின் உள்ளே
வளங்கொள்பே ரின்பம் மன்னிநின் றானை
    வணங்கிநான் வாழ்ந்துஒழிந் தேனே.

## 35. திருத்தெற்றி அம்பலம்

### செங்கண்மால்–செங்கமலவல்லி

*வழிபட்டநாள் : 30–1–57; 14–10–65*

*திருமங்கையாழ்வார் 10*

இது திருநாங்கூர் ஆறாவது கோயில். கிடந்த திருக்கோலம். கிழக்கே திருமுக மண்டலம்.

**திருமங்கையாழ்வார்**

மாற்றரசர் மணிமுடியும், திறலும், தேசும்,
மற்றுஅவர்தம் காதலிமார் குழையும், தந்தை
கால்தளையும் உடன்கழல வந்து தோன்றிக்
கதநாகம் காத்துஅளித்த கண்ணர் கண்டீர்!
நூற்றுஇதழ்கொள் அரவிந்தம் நுழைந்த பள்ளத்து
இளம்கமுகின் முதுபாளை பகுவாய் நண்டின்
சேற்றளையில் வெண்முத்தம் சிந்து நாங்கூர்த்
திருத்தெற்றி அம்பலத்துஎன் செங்கண் மாலே.

## 36. திருத்தேவனார்தொகை

### (கீழைச்சாலை)

### மாதவப்பெருமாள்–கடல்மகள்

*வழிபட்டநாள் : 30–1–57; 14–10–65.*

*திருமங்கையாழ்வார் : 10*

இத்தலம் திருநாங்கூருக்கு வடக்கே வயல்வழி இரண்டு கல் தொலைவு. அண்ணன் கோயிலுக்குக் கிழக்கே அரைக்கல் தொலைவு.

நின்ற திருக்கோலம். மேற்கே திருமுக மண்டலம்.

திருமங்கையாழ்வார்

யாவருமாய் யாவையுமாய்
எழில்வேதப் பொருள்களுமாய்
மூவருமாய் முதலாய
மூர்த்திஅமர்ந்து உறையும்இடம்.
மாவரும்திண் படைமன்னை
வென்றிகொள்வார் மன்னுநாங்கைத்
தேவரும்சென்று இறைஞ்சுபொழில்
திருத்தேவ னார்தொகையே.

## 37. திருமணிக்கூடம்

### மணிக்கூடநாயகன்–திருமாமகள்

வழிபட்டநாள் : 7–8–57; 14–10–65

திருமங்கையாழ்வார் : 10

திருநாங்கூருக்குக் கிழக்கே ஒரு கல் தொலைவிலும், காவளம் பாடிக்குத் தெற்கே மூன்று கல் தொலைவிலும் இருக்கின்றது. நின்ற திருக்கோலம். கிழக்கே திருமுக மண்டலம்.

திருமங்கையாழ்வார்

கருமகள் இலங்கை யாட்டி
பிலங்கொள்வாய் திறந்து, தன்மேல்
வரும்அவள் செவியும் மூக்கும்
வாளினால் தடிந்த எந்தை.

பெருமகள் பேதை மங்கை
தன்னொடும் பிரிவுஇ லாத

திருமகள் மருவு நாங்கூர்த்
திருமணிக் கூடத் தானே.

## 38. காவளம்பாடி

### கோபாலகிருஷ்ணன்–மடவரல்மங்கை

*வழிபட்டநாள் : 7–8–57; 14–10–65*

*திருமங்கையாழ்வார் : 10*

திருநகரியிலிருந்து தெற்கே திருவெண்காடு செல்லும் சாலையில் ஒன்றரைக் கல் தொலைவிலிருக்கின்றது.

நின்ற திருக்கோலம். கிழக்கே திருமுக மண்டலம்.

திருமங்கையாழ்வார்

சந்தமாய், சமயம் ஆகி,
சமயஐம் பூதம் ஆகி,

அந்தமாய் ஆதி ஆகி,
அருமறை அவையும் ஆனாய்;

மந்தமார் பொழில்கள் தோறும்
மடமயில் ஆலும் நாங்கைக்

கந்தமார் காவ ளம்தண்
பாடியாய்! களைகண் நீயே.

# 39. திருவெள்ளக்குளம்

## (அண்ணன் கோயில்)

## கண்ணன் நாராயணன்–பூவார் திருமகள்

வழிபட்டநாள் : 30–1–57; 14–10–65

திருமங்கையாழ்வார் : 10

திருத்தேவனார் தொகை என்னும் தலத்திற்கு மேற்கே அரைக்கல் அளவு. நின்ற திருக்கோலம். கிழக்கே திருமுக மண்டலம்.

திருமங்கையாழ்வார்

வாராக மதாகிஇம் மண்ணை இடந்தாய்!
நாரா யணனே! நல்லவே தியர்நாங்கூர்,
சீரார் பொழில்சூழ் திருவெள்ளக் குளத்துள்
ஆரா அமுதே! அடியேற்கு அருளாயே.

# 40. பார்த்தன்பள்ளி

## தாமரையாள்கேள்வன்–தாமரைநாயகி

வழிபட்டநாள் : 31–1–57; 15–10–65.

திருமங்கையாழ்வார் : 10

சீர்காழியினின்றும் ஏழு கல் தொலைவு. திருநாங்கூரிலிருந்து இரண்டு கல் தொலைவு.

முப்பதாவது எண்ணிலிருந்து நாற்பது எண் முடியப் பதினொரு தலங்களும் திருநாங்கூரைச் சேர்ந்த தலங்கள் என்று சொல்லப்பெறுகின்றன. இந்தத் தலங்களின் பதினொரு பெருமாள்களும் திருநகரிப் பெருமாளும் சேர்ந்து தை அமாவாசையில் பன்னிரண்டு கருட வாகனங்களில் வரும் காட்சியை ஒரே சமயத்தில் திருநாங்கூரில் காணலாம்.

திருமங்கையாழ்வார்

கவளயானைக் கொம்புஒசித்த
கண்ணனென்றும், காமருசீர்க்
குவளைமேகம் அன்னமேனி
கொண்டகோன்என் னானைஎன்றும்,
தவளமாட நீடுநாங்கைத்
தாமரையாள் கேள்வன்என்றும்,
பவளவாயாள் என்மடந்தை
பார்த்தன்பள்ளி பாடுவாளே.

# 2. பாண்டி நாடு

(18 தலம்)

# 41. திருமாலிருஞ்சோலைமலை
## (அழகர் கோயில்)

மாலலங்காரர் : அழகர்–சுந்தரவல்லி

வழிபட்டநாள் : 9–9–58; 24–8–65

1. பெரியாழ்வார் 34; ஆண்டாள் 11;
3. திருமங்கையாழ்வார் 33; 4. பூதத்தாழ்வார் 3;
5. பேயாழ்வார் 1; 6. நம்மாழ்வார் 46. (ஆக 128)

இத்தலம் மதுரையினின்றும் வட கிழக்கே 12 கல் தொலைவு. கோவில் மலை அடிவாரத்தில் இருக்கிறது. நின்ற திருக்கோலம்; கிழக்கே திருமுக மண்டலம். மலையின் மீது சிலம்பாறு என்னும் நூபுர கங்கை மூன்று மைலில் இருக்கிறது. தூய்மையான நீர். அந்நீரைக் குழாய் மூலம் கீழே கொண்டு வந்திருக்கிறார்கள்.

சித்திரை மாதத்தில் பூரணை நாளன்று தங்கக் குதிரை வாகனத்தில் அழகர் மதுரைக்குச் செல்லும் வழியில் பற்பல மண்டபங்களில் தங்கி, அழகர் வையை ஆற்றில் இறங்கும் காட்சி பெரும் சிறப்புடையது. இவ்விழாவுக்கு மதுரை நகரமே திரண்டு வந்துவிடும்,

இத்தலத்தின் கோபுர வாயிலில் உயரமான இடத்தில் பதினெட்டாம்படிக் கறுப்பர் சந்நிதி இருக்கிறது.

இத்தலத்தை ஆறுபடை வீடனுள் ஒன்றென்று கூறுப. பழமுதிர்சோலை இஃது என்ப. முருகன் கோயிலைத் திருமால் கோயிலாக மாற்றப் பெற்றிருப்பதாகக் கூறப்படுகிறது.

இன்னோரன்ன, ஆராய்ச்சிக்கு உரியவை. முடிவு காண்பது கடினம்.

திவ்வியப் பிரபந்தப் பெருக்கத்தில் இத்தலம் மூன்றாவதாக இருக்கிறது.

### பெரியாழ்வார்

வல்லாளன் தோளும், வாள் அரக்கன்
    முடியும், தங்கை
பொல்லாத மூக்கும், போக்குவித்-
    -தான்பொருந் தும்மலை,
எல்லா இடத்திலும், எங்கும்
    பரந்துபல் லாண்டுஒலி
செல்லா நிற்கும் சீர்த்தென்
    திருமாலிருஞ் சோலையே.

### ஆண்டாள்

நாறு நறும்பொழில்மால்
    இருஞ்சோலை [illegible]ம்பிக்கு,ந[illegible]
நூறு தடாவில்வெ[illegible]ணெய்
    வாய்நேர்ந்து [illegible]ாவிலைத்[illegible]
நூறு தடாநிறைந்த
    அக்கார அ[illegible]சொன்[illegible]
ஏறு திருவுடையான்
    இன்றுவந்துஇவை கொள்ளும்கொலோ!

### திருமங்கையாழ்வார்

முந்துற உரைக்கேன், விரைக்குழல் மடவார்
    கலவியை விடுதடு மாறல்;
அந்தரம் ஏழும் அலைகடல் ஏழும்
    ஆயஎம் அடிகள் தம்கோயில்,
சந்தொடு மணியும் அணிமயில் தழையும்
    தழுவிவந்து அருவிகள் நிரந்து,
வந்துஇழி சாரல் மாலிருஞ் சோலை
    வணங்குதும் வா!மட நெஞ்சே!

### பூதத்தாழ்வார்

உணர்ந்தாய் மறைநான்கும்; ஓதினாய் நீதி;
மணந்தாய் மலர்மகள்தோள் மாலே!-மணந்தாய்போய்
வேய்இரும் சாரல் வியல்இரு ஞாலம்சூழ்
மாயிரும் சோலை மலை.

### பேயாழ்வார்

(விண்ணகர் தலப்பாடல் பார்க்க)

### நம்மாழ்வார்

திருமா லிருஞ்சோ லைமலையே!
திருப்பாற் கடலே! என்தலையே!
திருமால் வைகுந் தமே!தண்
திருவேங் கடமே! எனதுஉடலே!
அருமா மாயத்து எனதுஉயிரே!
மனமே! வாக்கே! கருமமே!
ஒருமா நொடியும் பிரியான்என்
ஊழி முதல்வன் ஒருவனே.

### பிள்ளைப் பெருமாள் ஐயங்கார்

நீர்ஆழி வண்ணனை, பாலாழி நாதனை, நின்மலனை,
சீர்ஆழி அம்கைத் திருமகள் கேள்வனை, தெய்வப்புள்ஊர்
கூர்ஆழி மாயனை, மால்அலங் காரனை,கொற்றவெய்யோன்
ஓர்ஆழித் தேர்மறைத் தானை,எஞ் ஞான்றும்உரைநெஞ்சமே.

### அழகர் கலம்பகம்

மணங்கமழ்பூ வையும்,மயிலும், தமாலக் காடும்,
வண்கிளியும், நீலவெற்பும், மடமான் கன்றும்,
இணங்கு,கட லும்,துகிரும், காரும், மின்னும்,
யமுனைஎனும் திருநதியும், எகினப் பேடும்,
கணங்குழைய கோசலை,தே வகி,ய சோதை,
கண்மணியும், பாவையும்போல், கமல வீட்டின்
அணங்குஅரசி உடன்குலவி ஆடீர்! ஊசல்!
அலங்கார மாயவரே! ஆடீர்! ஊசல்!

# 42. திருக்கோட்டியூர்

## சௌமியநாராயணன்–திருமாமகள்

**வழிபட்டநாள் : 5–4–58; 24–8–65.**

*1. பெரியாழ்வார் 22; 2. திருமழிசையாழ்வார் 1; 3. திருமங்கையாழ்வார் 13; 4. பூதத்தாழ்வார் 2; 5. பேயாழ்வார் 1. (ஆக 39)*

காரைக்குடியினின்றும் 13 கல் தொலைவிலுள்ள திருப்புத்தூர்த் தலத்தை யடைந்து, அங்கிருந்து தெற்கே சிவகங்கைச் சாலையில் 6 மைல் சென்றால் இத்தலத்தை யடையலாம். கோவில் பெரியது; உயரமானது; பல தளங்களைக் கொண்டது. அடித் தளத்தில் பள்ளிகொண்ட பெருமாள். இரண்டாவது தளத்தில் சௌமிய நாராயணப் பெருமாள்; நின்ற திருக்கோலம். மூன்றாவது தளத்தில் வைகுண்டநாதன்; இருந்த திருக்கோலம்.

வைகுண்டவாசலாகிய, கோவிலின் வடக்குக் கோபுர வாயிலில் இருமருங்கும் இரணியனோடு நரசிம்மமூர்த்தி போர் செய்யும் உருவம் ஒன்றும், இரணியனை மாய்க்கும் வடிவம் ஒன்றும் பெரிய சிலை உருவில் அருமையாக அமைந்திருப்பதைக் காணலாம்.

கோபுரம் தஞ்சைக் கோவில் கோபுரத்தின் மாதிரியில் பரவலாக அமைந்திருக்கிறது. இக்கோவிலின் கோபுரத்தின் உச்சியில் ஏறித்தான் உடையவர் என்னும் இராமாநுசர் உலகம் உய்ய மூல மந்திரத்தைச் சொல்லி அருளினார் என்பர்.

கோவிலுக்குள் நுழையும்போது முதன்முதலில் சிவ பெருமான் சந்நிதி இருப்பதைக் காணலாம்.

பெரியாழ்வார் திவ்வியப் பிரபந்தத்திலேயே திருப் பல்லாண்டுக்கு அடுத்து, முதலாக வைத்திருக்கும் "வண்ண மாடங்கள் சூழ்திருக் கோட்டியூர்" என்ற பாடல் இத்தலத்திற்கே ஆகும்.

திருக்கோட்டியூர்நம்பி பிறந்தருளிய தலம் இது.

### பெரியாழ்வார்

நாவ காரியம் சொல்லி லாதவர்
நாள்தொ றும்விருந்து ஓம்புவார்,
தேவ காரியம் செய்து வேதம்
பயின்று வாழ்திருக் கோட்டியூர்
மூவர் காரிய மும்தி ருத்தும்
முதல்வ னைச்சிந்தி யாத,அப்
பாவ காரிக ளைப்ப டைத்தவன்
எங்ங னம்படைத் தான்கொலோ!

### திருமழிசையாழ்வார்

குறிப்புஎனக்குக் கோட்டியூர் மேயானை ஏத்த;
குறிப்புஎனக்கு நன்மை பயக்க;-வெறுப்பனோ
வேங்கடத்து மேயானை, மெய்வினைநோய் எய்தாமல்,
தான்கடத்தும் தன்மையான் தாள்.

### திருமங்கையாழ்வார்

ஏறும்ஏறி இலங்கும்ஒண் மழுப்பற்றும்
ஈசற்கு இசைந்து, உடம்பில்ஓர்
கூறுதான் கொடுத்தான் குலமா மகட்குஇனியான்;
நாற்று சண்பக மல்லிகை மலர்புல்கி,
இன்இள வண்டு, நல்நறும்
தேறல்வாய் மடுக்கும் திருக்கோட்டி யூரானே.

### பூதத்தாழ்வார்

இன்றா அறிகின்றேன் அல்லேன், இருநிலத்தைச்
சென்றுஆங்கு அளந்த திருவடியை;-அன்று,
கருக்கோட்டி யுள்கிடந்து கைதொழுதேன்; கண்டேன்;
திருக்கோட்டி எந்தை திறம்.

### பேயாழ்வார்

("அரங்கம்" தலப்பாடல் பார்க்க)

# 43. திருமெய்யம்

சத்தியகிரிநாதன்

மெய்யப்பன் உய்யவந்தாள்

வழிபட்டநாள் : 27–8–55; 4–9–65.

திருமங்கையாழ்வார் : 10

காரைக்குடி–புதுக்கோட்டை நெடுஞ்சாலையில், காரைக்குடியினின்றும் 16 கல் தொலைவு. புதுக்கோட்டையினின்றும் 12 கல். கோயில் மலையின் அடிவாரத்தில் இருக்கிறது. இங்கே நின்ற திருக்கோலத்தில் ஒரு பெருமாளும், கிடந்த திருக்கோலத்தில் ஒரு பெருமாளும் இருக்கின்றனர்.

திருமங்கையாழ்வார் இத்தலத்திற்கு ஓர் தனிப் பதிகம் பாடவில்லை. எனினும் பிற தலங்களில் 10 பாடல்களில் திருமெய்யத்தைக் குறிப்பிடுகின்றார்.

இக்கோயிலின் அணித்தே இதைப்போலவே ஓர் குடைவரைச் சிவன் கோயில் இருக்கின்றது. ஆனால் அதற்குத் தேவாரம் இல்லை.

திருமங்கையாழ்வார்

பெண்ணாகிஇன் அமுதம் வஞ்சித் தானை,
பிறைஎயிற்றுஅன்று அடல்அரியாய்ப்பெருகினானை,
தண்ணார்ந்த வார்புனல்சூழ் மெய்யம் என்னும்
தடவரைமேல் கிடந்தானைப் பணங்கள் மேவி
எண்ணானை, எண்ணிறந்த புகழி னானை,
இலங்குஒளிசேர் அரவிந்தம் போன்று நீண்ட
கண்ணானை, கண்ணாரக் கண்டு கொண்டேன்
கடிபொழில்சூழ் கடல்மல்லைத் தலசய னத்தே.

# 44. திருப்புல்லாணி

## (தர்ப்பசயனம்)

## கலியாண சகந்நாதன்–கலியாணவல்லி

**வழிபட்டநாள் : 21–2–60; 17–9–65**

**திருமங்கையாழ்வார் : 21**

இராமனாதபுரத்திலிருந்து தெற்கே 5 கல் தொலைவு. இக் கோயிலுக்குத் தெற்கே 3 கல் தொலைவில் கடல் இருக்கிறது. நின்ற திருக்கோலம்; கிழக்கே திருமுக மண்டலம்.

பள்ளிகொண்ட பெருமாள் சந்நிதி ஒன்று தனியே இருக்கின்றது. இராமபிரான் இலங்கை செல்லக் கடலுக்கு அணைகட்ட வந்தபோது இங்கே புல்லில் படுத்திருந்தான் என்றும், அதனாலேயே இத்தலம் புல்லணை என்றும், தர்ப்ப சயனம் என்றும் பெயர் பெற்றது என்பர். புல்லணை புல்லாணியாக, மாறிவிட்டது.

**திருமங்கையாழ்வார்**

வேதமும், வேள்வியும், விண்ணும் இருசுடரும்,
ஆதியும் ஆனான் அருள்தந்த வாநமக்கு;
போதுஅலரும் புன்னைசூழ் புல்லாணி கைதொழுதேன்;
ஓதமும் நானும் உறங்காது இருந்தேனே.

# 45. திருத்தண்காலூர்

## (திருத்தங்கால்)

## தண்கால் அப்பன்–அன்னநாயகி

**வழிபட்டநாள் : 1–8–58; 25–8–65.**

1. திருமங்கையாழ்வார் 4; 2. பூதத்தாழ்வார் 1. (ஆக 5)

விருதுநகர்–தென்காசி இருப்புப் பாதையிலுள்ள சிவகாசி இரயில் நிலையத்தினின்றும் 2 கல் தொலைவு. நின்ற திருக்கோலம். கிழக்கே திருமுக மண்டலம்.

இக்கோயிலை ஒட்டிச் சிவன் கோயில் ஒன்று இருக்கிறது.

திருத்தண்காலூர் என்ற இத்தலம் வேறு; திருத்தண்கா என்ற காஞ்சியைச் சேர்ந்த திருப்பதி வேறு.

திருமங்கையாழ்வார்

பொங்கார்மெல் இளம்கொங்கை பொன்னே பூப்ப
 பொருகயல்கண் நீர்அரும்பப் போந்து நின்று
செங்கால மடப்புறவம் பெடைக்குப் பேசும்
 சிறுகுரலுக்கு உடல்உருகிச் சிந்தித்து, ஆங்கே
தண்காலும், தண்குடந்தை நகரும் பாடித்
 தண்கோவ லூர்பாடி ஆடக் கேட்டு,
'நங்காய்!நம் குடிக்குஇதுவோ நன்மை?' என்ன
 நிறையூரும் பாடுவாள் நவில்கின் றாளே!

பூதத்தாழ்வார்

(தஞ்சை மாமணிக் கோயில் தலப்பாடல் பார்க்க)

# 46. திருமோகூர்

## காளமேகப்பெருமாள்–மோகூர் வல்லிநாச்சியார்

வழிபட்டநாள் : 8–4–56; 24–8–65.

1. திருமங்கையாழ்வார் 1; 2. நம்மாழ்வார் 11; (ஆக 12)

மதுரைக்குக் கிழக்கே மதுரை–காரைக்குடி நெடுஞ்சாலையில் மதுரையினின்றும் 7 கல் தொலைவிலுள்ள ஒத்தைக் கடை என்னும் சிற்றூருக்கு அண்மையிலிருக்கிறது.

நின்ற திருக்கோலம். கிழக்கே திருமுக மண்டலம்.

திருமங்கையாழ்வார்

"சீராரும் மாலிருஞ் சோலை திருமோகூர்"

நம்மாழ்வார்

தாள தாமரைத் தடமணி வயல்திரு மோகூர்.
நாளும் மேவிநன்கு அமர்ந்துநின்று அசுரரைத் தகர்க்கும்
தோளும் நான்குடைச் சுரிகுழல், கமலக்கண், கனிவாய்
காள மேகத்தை அன்றிமற்று ஒன்றுஇலம் கதியே.

# 47. திருக்கூடல்

## (தென்மதுரை)

### கூடலழகர்–வகுளவல்லிநாச்சியார்

*வழிபட்டநாள் : 10–4–56; 26–8–65.*

*1. திருமழிசையாழ்வார் 1; 2. திருமங்கையாழ்வார் 1;(ஆக 2)*

இது மதுரை நகரத்திற்குள் இருக்கின்றது. வீற்றிருந்த திருக்கோலம். கிழக்கே திருமுக மண்டலம்.

திருமழிசையாழ்வார்

அழைப்பன் திருவேங் கடத்தானைக் காண
இழைப்பன் திருக்கூடல் கூட–மழைப்பேர்
அருவி மணிவரன்றி வந்துஇழிய. யானை
வெருவி அரவுஒடுங்கும் வெற்பு.

திருமங்கையாழ்வார்

("கோழி" தலப் பாடல் பார்க்க)

# 48. ஸ்ரீவில்லிபுத்தூர்

### ஆலிலைப்பள்ளியான்–ஆண்டாள்

*வழிபட்டநாள் : 13–7–58; 25–8–65.*

*1. பெரியாழ்வார் 1; 2. ஆண்டாள் 1. (ஆக 2)*

விருதுநகர்–தென்காசி இருப்புப் பாதையிலுள்ள ஓர் இரயில் நிலையம்.

நின்ற திருக்கோலம். கிழக்கே திருமுக மண்டலம். இத்தலத்தில் ஆண்டாள்தான் தாயார். தனித் தாயார் சன்னிதி இல்லை.

கடவுளைக் காதலித்துக் கனாக் கண்டு அவரையே மணந்து கொண்ட ஆண்டாள் பிறந்து அருளிய தலம் இது. ஆண்டாளை வளர்த்த தந்தை பெரியாழ்வார் பிறந்தருளியதும் இப்பதியிலேயே.

கோதை பிறந்தஊர்; கோவிந்தன் வாழும்ஊர்;
சோதி மணிமாடம் தோன்றும்ஊர்;—நீதியால்
நல்லபத்தர் வாழும்ஊர்; நான்மறைகள் ஓதுமூர்;
வில்லிபுத்தூர்; வேதக்கோன் ஊர்.

என்ற ஓர் அழகிய தனிப்பாடல் வெண்பாச் சிந்திக்கத் தக்கது.

கோவில் பெரியது. கோபுரம் மிகப் பெரியது. இவ்வளவு உயரமான கோபுரம் வேறு எங்கும் இல்லை என்று சொல்லப் பெறுகிறது. திருவண்ணாமலைக் கோபுரம் இதனினும் உயரமானது என்ப.

மகா பாரதத்தைத் தமிழ்ப் பாடலால் பாடிய வில்லிபுத்தூர் ஆழ்வாரின் பெயர் இத்தலத்தைக் குறித்து எழுந்ததேயாகும்.

இத்தலத்தில் பழமையான "மடவார்வளாகம் " என்னும் பெயரிய சிவன் கோவில் ஒன்று இருக்கிறது. ஆனால் அத்தலத்திற்குத் தேவாரமில்லை.

பெரியாழ்வார்

மின் அனைய நுண்இடையார்
விரிகுழல்மேல் நுழைந்தவண்டு.
இன்னிசைக்கும் வில்லிபுத்தூர்
இனிதுஅமர்ந்தாய்! உன்னைக்கண்டார்
என்னநோன்பு நோற்றாள்கொலோ
இவனைப்பெற்ற வயிறுடையாள்.
என்னும்வார்த்தை எய்துவித்த
இருடீகேசா! முலைஉணாயே.

ஆண்டாள்

மென்நடை அன்னம் பரந்து விளையாடும்
வில்லிபுத் தூர்உறை வான்தன்
பொன்அடி காண்பதோர் ஆசையி னால்என்
பொருகயல் கண்இணை துஞ்சா;
இன்அடி சிலொடு பால்அமுது ஊட்டி
எடுத்தஎன் கோலக் கிளியை
உன்னொடு தோழமை கொள்வன் குயிலே!
உலகுஅளந் தான்வரக் கூவாய்!

## 49. திருக்குருகூர்

### (ஆழ்வார்திருநகரி)

### ஆதிநாதப்பெருமாள்–ஆதிநாதவல்லி

வழிபட்டநாள் : 8–8–59; 5–9–65

நம்மாழ்வார் 11.

நெல்லை–திருச்செந்தூர் நெடுஞ்சாலையில் இத்தலமிருக்கிறது. ஆழ்வார் திருநகரி ஓர் இரயில் நிலையம். இரயில் நிலையத்தினின்றும் கோயில் ஒரு கல் தொலைவிலிருக்கிறது.

நின்ற திருக்கோலம். கிழக்கே திருமுக மண்டலம். கோயில் பெரியது.

ஆழ்வாருள் எல்லாம் உரிமை பாராட்டி நம்மாழ்வார் என்று போற்றப் பெறும் "வேதம் தமிழ் செய்த" வித்தகராகிய சடகோபர் பிறந்த இடம். இத்தலத்தில் சடகோபர் திருவுருவம் வீற்றிருந்த திருக்கோலத்தில் எழிலே வடிவமாகத் திகழ்கின்றது. நம்மாழ்வார் பிறந்த காரணத்தாலேயே, இப்பதி ஆழ்வார் திருநகரி என்னும் பெயர் பெற்றது. இங்குள்ள பழம் பெரும் புளியமரம் நம்மாழ்வாரோடு தொடர்புடையது.

இதுவோ திருநகரி;ஈதோ பொருநை;
இதுவோ பரமபதத்து எல்லை;-இதுவோதான்,
வேதம் பகர்ந்திட்ட மெய்ப்பொருளின் உட்பொருளை
ஓதும் சடகோபன் ஊர்.

என்ற ஒரு தனிப்பாடல் நம்மாழ்வார் சிறப்பை எடுத்துக்காட்டா நிற்கும்.

மணவாள மாமுனிகள் பிறந்தது இத்தலத்திலேயே.

தண்பொருநை ஆற்றின் இரு கரைகளிலும் அடுத்தடுத்து ஒன்பது பெருமாள் கோயில்கள் இருக்கின்றன. இவற்றிற்கு நவதிருப்பதி என்று பெயர். முதல் திருப்பதி ஆழ்வார் திருநகரி. இத்தலம் தண்பொருநை ஆற்றின் தென்கரையில் இருக்கின்றது.

நம்மாழ்வார்

ஓடி ஓடிப் பல்பி-
-றப்பும் பிறந்துமற்று ஓர்தெய்வம்
பாடி ஆடிப் பணிந்துபல்
படிகால் வழியே றிக்கண்டீர்;
கூடி வானவர் ஏத்த
நின்ற திருக்குரு கூர்அதனுள்
ஆடு புட்கொடி ஆதி
மூர்த்திக்கு அடிமை புகுவதுமே.

# 50. தொலைவில்லிமங்கலம்
## (இரட்டைத்திருப்பதி)

தேவபிரான்

தாமரைக்கண்ணன் கருந்தடங்கண்ணி

வழிபட்டநாள் : 10-8-59; 6-9-65

நம்மாழ்வார் 11

இங்கு அடுத்தடுத்து இரண்டு கோயில்கள் இருப்பதால் இரட்டைத் திருப்பதி என்று கூறப்பெறுகிறது. ஆழ்வார் திருநகரி இரயில் நிலையத்திலிருந்து கிழக்கே 2 கல் தொலைவில்

தண்பொருநை ஆற்றின் வடகரையில் இருக்கிறது. ஒன்று நின்ற திருக்கோலம். இன்னொன்று வீற்றிருந்த திருக்கோலம். கிழக்கே திருமுக மண்டலம். இத்தலங்கள் நவதிருப்பதியில் இரண்டாவதும் மூன்றாவதும் ஆம்.

நம்மாழ்வார்

பின்னை கொல்?நில மாம கள்கொல்?
திரும கள்கொல்? பிறந்திட்டாள்.
என்ன மாயம்கொ லோ?இ வள்நெடு
மால்என் றேநின்று கூவுமால்;
முன்னி வந்தவன் நின்றுஇ ருந்துஉறை-
-யும்தொ லைவில்லி மங்கலம்
சென்னி யால்வணங் கும்அவ் ஊர்த்திரு
நாமம் கேட்பது சிந்தையே.

## 51. திருப்புளிங்குடி

### காய்சினவேந்தன்–புளிங்குடிவல்லி

**வழிபட்டநாள் : 10–8–59; 6–9–65**

**நம்மாழ்வார் 12.**

ஸ்ரீவைகுண்டம் இரயில் நிலையத்தினின்றும் இரண்டு கல் தொலைவு.

கிழக்கே திருமுக மண்டலம். கிடந்த திருக்கோலம். நவ திருப்பதிகளில் இது நான்காவது. இத்தலம் தண்பொருநை ஆற்றின் வடகரையில் இருக்கின்றது.

நம்மாழ்வார்

எம்இடர் கடிந்துஇங்கு என்னைஆள் வானே!
இமையவர் தமக்கும்ஆங்கு அனையாய்!
செம்மடல் மலரும் தாமரைப் பழனத்
தண்திருப் புளிங்குடிக் கிடந்தாய்;

நம்முடை அடியர் கவ்வைகண்டு உகந்து
நாம்களித்து உளநலம் கூர.
இம்மட உலகர் காணநீ ஒருநாள்
இருந்திடாய் எங்கள்கண் முகப்பே.

# 52. திருப்பேரை

## மகரநெடுங்குழைக்காதன்–குழைக்காதுவல்லி

*வழிபட்டநாள் : 10–8–59; 5–9–65.*

*நம்மாழ்வார் 12.*

இத்தலம் நெல்லை–செந்தூர்ச் சாலையில் இருக்கின்றது. ஆழ்வார் திருநகரியிலிருந்து மூன்று கல் தொலைவு.

இருந்த திருக்கோலம். கிழக்கே திருமுக மண்டலம். கோயில் பெரியது. நவ திருப்பதிகளுள் இது ஐந்தாவது. இத்தலம் தண்பொருநை ஆற்றின் தென்கரையில் இருக்கின்றது.

*நம்மாழ்வார்*

செங்கனி வாயின் திறத்த தாயும்.
செஞ்சுடர் நீள்முடித் தாழ்ந்த தாயும்.
சங்கொடு சக்கரம் கண்டுஉ கந்தும்.
தாமரைக் கண்களுக்கு அற்றுத்தீர்ந்தும்.
திங்களும் நாளும் விழாஅ றாத
தென்திருப் பேரையில் வீற்றுஇ ருந்த
நங்கள் பிரானுக்குஎன் நெஞ்சம் தோழீ!
நாணும் நிறையும் இழந்த துவ்வே.

# 53. ஸ்ரீவைகுந்தம்

## கள்ளப்பிரான்; வைகுந்தநாதன்–வைகுந்தவல்லி

**வழிபட்டநாள் : 10–8–59; 6–9–65**

**நம்மாழ்வார் 2**

நெல்லை–திருச்செந்தூர் இருப்புப் பாதையில் ஸ்ரீவைகுண்டம் இரயில் நிலையத்துக்கு வடக்கே ½ கல் தொலைவில், தண்பொருநை ஆற்றின் வடகரையில் இருக்கின்றது. இது நவ திருப்பதிகளுள் ஆறாவது தலம். இத் தலத்துக்குக் கிழக்கே மூன்று கல் தொலைவில் ஆற்றின் தென்கரைத் தலம் ஆழ்வார்திருநகரி.

நின்ற திருக்கோலம். கிழக்கே திருமுக மண்டலம்.

சைவப் பெரியார், வடநாடுவரைச் சென்று சைவத்தையும் தமிழையும் நிலைநாட்டிய, குமரகுருபர அடிகள் பிறந்தருளியதும் இத்தலத்திலேயே.

**நம்மாழ்வார்**

எங்கள்கண் முகப்பே உலகர்கள் எல்லாம்
இணையடி தொழுதுஎழுந்து இறைஞ்சி,

தங்கள்அன்பு ஆரத் தமதுசொல் வலத்தால்
தலைத்தலைச் சிறந்துபூ சிப்ப,

திங்கள்சேர் மாடத் திருப்புளிங் குடியாய்!
திருவைகுந் தத்துள்ளாய்! தேவா!

இங்கண்மா ஞாலத்து இதனுளும் ஒருநாள்
இருந்திடாய், வீற்றுஇடம் கொண்டே.

# 54. வரகுணமங்கை

## வெற்றி இருக்கைப்பெருமாள்–வரகுணவல்லி

**வழிபட்டநாள் : 10–8–59; 6–9–65.**

**நம்மாழ்வார் 1**

ஸ்ரீவைகுண்டத்திற்குக் கிழக்கே தூத்துக்குடி செல்லும் சாலையில் ஒரு கல் தொலைவு.

இருந்த திருக்கோலம். கிழக்கே திருமுக மண்டலம். நவ திருப்பதிகளுள் இது ஏழாவது தலம். இத்தலம் தண்பொருநை ஆற்றின் வடகரையில் இருக்கின்றது.

நம்மாழ்வார்

புளிங்குடிக் கிடந்து வரகுண மங்கை
இருந்துவை குந்தத்துள் நின்று
தெளிந்தஎன் சிந்தை அகம்கழி யாதே
என்னைஆள் வாய்எனக்கு அருளி
நளிந்தசீர் உலகம் மூன்றுடன் வியப்ப
நாங்கள்கூத் தாடிநின்று ஆர்ப்ப.
பளிங்குநீர் முகிலின் பவளம்போல் கனிவாய்
சிவப்பநீ காணவா ராயே.

## 55. திருக்குளந்தை

### (பெருங்குளம்)

### மாயக்கூத்தன்–குளந்தைவல்லி

வழிபட்டநாள் : 10–8–59; 6–9–65.

நம்மாழ்வார் 1.

ஸ்ரீவைகுண்டம் இரயில் நிலையத்திற்கு வடகிழக்கில் தொலைவு.

நின்ற திருக்கோலம். கிழக்கே திருமுக மண்டலம். இது நவ திருப்பதிகளுள் எட்டாவது. இத்தலம் தண்பொருநை ஆற்றின் வடகரையில் இருக்கிறது.

நம்மாழ்வார்

கூடச்சென் றேன்இனி என்கொ டுக்கேன்?
கோல்வளை நெஞ்சத் தொடக்கம் எல்லாம்,
பாடற்றுஒழிய இழந்து வைகல்
பல்வளை யார்முன் பரிச ழிந்தேன்;
மாடக் கொடிமதிள் தென்கு ளந்தை
வண்குட பால்நின்ற மாயக் கூத்தன்
ஆடல் பறவை உயர்த்த வெல்போர்
ஆழி வலவனை ஆத ரித்தே.

# 56. திருக்கோளூர்

## வைத்தமா நிதி—கோளூர்வல்லி

**வழிபட்டநாள் : 10–8–59; 5–9–65.**

**நம்மாழ்வார் 12.**

ஆழ்வார்திருநகரிக்குக் கிழக்கே 2 கல் தொலைவிலும் திருப்பேரைக்கு மேற்கே 2 கல் தொலைவிலும் இத்தலம் இருக்கின்றது.

கிடந்த திருக்கோலம். கிழக்கே திருமுக மண்டலம். இது நவ திருப்பதிகளுள் ஒன்பதாவது. இத்தலம் தண் பொருநைத் தென்கரையில் இருக்கின்றது. இது நம்மாழ்வாரையே பாடிய மதுரகவி ஆழ்வார் பிறந்தருளிய இடம்.

**நம்மாழ்வார்**

உண்ணும் சோறு பருகுநீர் தின்னும்வெற் றிலையும்எல்லாம்
கண்ணன், எம்பெருமான் என்றுஎன் றேகண்கள் நீர்மல்கி,
மண்ணினுள் அவன்சீர் வளம்மிக் கவனூர் வினவி,
திண்ணம் என்இள மான்புகும் ஊர்திருக் கோளூரே.

# 57. சிரீவரமங்கை

## (வானமாமலை; நாங்குநேரி)

## வானமாமலைப்பெருமாள்—சிரீவரமங்கை

**வழிபட்டநா—ளன் : 8–8–59; 1–4–65.**

**நம்மாழ்வார் 11.**

நெல்லை—கன்னியாகுமரி நெடுஞ்சாலையில் நெல்லைக்குத் தெற்கே 20 கல் தொலைவு.

இருந்த திருக்கோலம். கிழக்கே திருமுக மண்டலம்.

**நம்மாழ்வார்**

ஏன மாய்நிலம் கீண்டஎன் அப்பனே!
கண்ணா! என்றும் என்னை ஆளுடை
வானநா யகனே! மணிமா ணிக்கச் சுடரே!
தேன மாம்பொழில் தண்சிரீ வரமங்
கலத்து அவர்கை தொழஉறை
வான மாமலை யே!அடி யேன்தொழ வந்துஅருளே.

# 58. திருக்குறுங்குடி

## வைணவநம்பி–குறுங்குடிவல்லி

*1. பெரியாழ்வார் 1; 2. திருமழிசையாழ்வார் 1;*
*3. திருமங்கையாழ்வார் 25; 4. நம்மாழ்வார் 13. (ஆக 40)*

நாங்குனேரியிலிருந்து தென்மேற்கே 8 கல் தொலைவு.

நின்ற திருக்கோலம். கிழக்கே திருமுக மண்டலம்.

இங்கே சீயர் மடம் ஒன்று இருக்கிறது.

### பெரியாழ்வார்

("திருக்கண்ணபுரம்" தலப்பாடல் பார்க்க)

### திருமழிசையாழ்வர்

கரண்டமாடு பொய்கையுள்க ரும்பனைப்பெ ரும்பழம்
புரண்டுவீழ வாளைபாய்கு றுங்குடிநெ டுந்தகாய்!
திரண்டதோள்இ ரணியன்சி னங்கொள்ஆகம் ஒன்றையும்
இரண்டுகூறு செய்துஉகந்த சிங்கம்என்பது உன்னையே.

### திருமங்கையாழ்வார்

எல்லியும் நன்பக லும்இருந்தே
ஏசிலும் ஏசுக; ஏந்திழையார்

நல்லர் அவர்திறம் நாம்அறியோம்;
நாண்,மடம்,அச்சம் நமக்குஇங்கு இல்லை;

வல்லன சொல்லி மகிழ்வரேனும்
மாமணி வண்ணரை நம்மறவோம்;

கொல்லை வளர்இள முல்லைபுல்கு
குறுங்குடிக் கேஎன்னை உய்த்திடுமின்.

### நம்மாழ்வார்

எங்ஙனேயோ அன்னை மீர்காள்! என்னை முனிவதுநீர்?
நங்கள்கோலத் திருக்கு றுங்குடி நம்பியை நான்கண்டபின்,
சங்கினோடும் நேமி யோடும் தாமரைக் கண்களொடும்
செங்கனிவாய் ஒன்றி னோடும் செல்கின்றது என்நெஞ்சமே.

**வழிபட்டநாள் : 8–8–59; 1–4–65**

# 3. மலைநாடு

(13 தலம்)

# 59. திருஅனந்தபுரம்

## (அனந்தசயனம்)

## அனந்தபத்மநாபன்–ஸ்ரீஹரிலட்சுமி

**வழிபட்டநாள் : 9–8–59; 3–4–65.**

நம்மாழ்வார் 11.

இரயில் நிலையம். கடற்கரை. மலைநாட்டின் தலைநகரம்.

பள்ளிகொண்ட பெரிய பெருமாள். மூன்று சன்னிதிகள் இருக்கின்றன. மூன்று சன்னிதியின் அளவுக்கு நீளப் பள்ளி கொண்டிருக்கின்றார். கிழக்கே திருமுக மண்டலம். கோயில் மிகப் பெரியது. நடு ஊருக்குள் இருக்கின்றது.

**நம்மாழ்வார்**

புண்ணியம் செய்துநல்ல புனலொடு மலர்கள் தூவி
எண்ணுமின் எந்தைநாமம்; இப்பிறப்பு அறுக்கும்அப்பால்
திண்ணம்நாம் அறியச்சொன்னோம்; செறிபொழில் அனந்தபுரத்து
அண்ணலார் கமலபாதம் அணுகுவார் அமரர்ஆவார்.

# 60. திருவண்பரிசாரம்

## (திருப்பதிசாரம்)

## திருவாழ்மார்பன்–கமலவல்லி

**வழிபட்டநாள் : 9–8–59; 1–4–65.**

நம்மாழ்வார் 1.

இத்தலம் நாகர் கோயிலை ஒட்டி இரண்டு கல் தொலைவில் இருக்கிறது.

இருந்த திருக்கோலம். கிழக்கே திருமுக மண்டலம். இக்கோயிலில் நம்மாழ்வாருக்குச் சன்னிதி இருக்கிறது.

நம்மாழ்வார்

வருவார் செல்வார் வண்பரி சாரத்து இருந்தஎன்
திருவாழ் மார்வற்கு என்திறம் சொல்லார் செய்வதுஎன்?
உருவார் சக்கரம் சங்கு சுமந்துஇங்கு உம்மோடு
ஒருபாடு உழல்வான் ஓர்அடி யானும் உளன்என்றே.

# 61. திருக்காட்கரை

## காட்கரைஅப்பன்–பெருஞ்செல்வநாயகி

வழிபட்டநாள் : 25–7–58; 5–4–65.

நம்மாழ்வார் 11.

சோரனூர்–எரணாகுளம் இருப்புப் பாதையிலுள்ள இடைப்பள்ளி இரயில் நிலையத்திற்கு 2 கல் தொலைவு.

நின்ற திருக்கோலம். கிழக்கே திருமுக மண்டலம்.

நம்மாழ்வார்

வாரிக்கொண்டு உன்னை விழுங்குவன் காணில்என்று
ஆர்வுற்ற என்னை ஒழியஎன் னில்முன்னம்
பாரித்து. தான்என்னை முற்றப் பருகினான்,
காரொக்கும் காட்கரை அப்பன் கடியனே.

# 62. திருமூழிக்களம்

## திருமூழிக்களத்தான்–மதுரவேணி

வழிபட்டநாள் : 25–7–58; 5–4–65.

1. திருமங்கையாழ்வார் 3; 2. நம்மாழ்வார் 11; (ஆக 14)

சோரனூர்–எரணாகுளம்இருப்புப்பாதையிலுள்ள அங்கமாலி இரயில் நிலையத்திலிருந்து கிழக்கே 5 கல் தொலைவு.

நின்ற திருக்கோலம். கிழக்கே திருமுக மண்டலம்.

**திருமங்கையாழ்வார்**

பொன்ஆனாய்! பொழில்ஏழும் காவல் பூண்ட
புகழ்ஆனாய்! இகழ்வாய தொண்ட னேன்நான்
'என்ஆனாய்? என் ஆனாய்?' என்னால் அல்லால்
என்அறிவன் ஏழையேன்; உலகம் ஏத்தும்
தென்ஆனாய்! வடவானாய்! குடபால் ஆனாய்!
குணபாலது ஆயினாய்! இமையோர்க்கு என்றும்
முன்ஆனாய்! பின்ஆனார் வணங்கும் சோதி!
திருமூழிக் களத்தானாய் முதல்ஆ னாயே!

**நம்மாழ்வார்**

பூந்துழாய் முடியார்க்குப் பொன்ஆழிக் கையார்க்கு
ஏந்துநீர் இளங்குருகே! திருமூழிக் களத்தார்க்கு
ஏந்துபூண் முலைபயந்துஎன் இணைமலர்க்கண் ணீர்ததும்ப,
தாம்தம்மைக் கொண்டுஅகல்தல் தகவுஅன்றுஎன்று உரையீரே.

# 63. குட்டநாடு

## (திருப்புலியூர், புலியூர்)

### மாயப்பிரான்–பொற்கொடி நாச்சியார்

**வழிபட்டநாள் : 28–7–58; 4–4–65.**

*1. திருமங்கையாழ்வார் 1; 2. நம்மாழ்வார் 11. (ஆக 12)*

செங்கன்னூரிலிருந்து மேற்கே 3 கல் தொலைவு.

நின்ற திருக்கோலம். கிழக்கே திருமுக மண்டலம்.

**திருமங்கையாழ்வார்**

பேராலி. தண்கால். நறையூர். திருப்புலியூர்;

நம்மாழ்வார்

கருமா ணிக்க மலைமேல் மணித்த
டம்தாமரைக் காடுகள்போல்
திருமார்வு வாய்,கண்,கை,உந்தி,கால்,உடை
ஆடைகள் செய்யபிரான்
திருமால் எம்மான் செழுநீர் வயல்குட்ட
நாட்டுத் திருப்புலியூர்
அருமா யன்பேர் அன்றிப் பேச்சுஇலள்
அன்னைமீர்! இதற்கு என்செய்கேனோ?

## 64. திருச்செங்குன்றூர்
## (செங்கன்னூர்–சிற்றாறு)
## இமையவர் அப்பன்–செங்கமலவல்லி

வழிபட்டநாள் : 28–7–58; 4–4–65.

நம்மாழ்வார் 11

கொட்டாரக்கரையிலிருந்து 30 கல் தொலைவு.
கிழக்கே திருமுக மண்டலம். நின்ற திருக்கோலம்.

நம்மாழ்வார்

என்அமர் பெருமான்;இமையவர் பெருமான்;
இருநிலம் இடந்தஎம் பெருமான்;
முன்னைவல் வினைகள் முழுதுடன் மாள
என்னைஆள் கின்றஎம் பெருமான்;
தென்திசைக்கு அணிகொள் திருச்செங்குன் றூரில்
திருச்சிற்றாற் றங்கரை மீபால்
நின்றஎம் பெருமான், அடிஅல்லால் சரணம்
நினைப்பிலும் பிறிதுஇல்லை எனக்கே.

# 65. திருநாவாய்

## நாராயணன்–மலர்மங்கை

**வழிபட்டநாள் : 22–7–58; 6–4–65.**

*1. திருமங்கையாழ்வார் 2; 2. நம்மாழ்வார் 11. (ஆக 13)*

சென்னை–கள்ளிக்கோட்டை இருப்புப் பாதையில் சோரனூர் கடந்து திருநாவாயா என்ற பெயரோடு இருக்கும் இரயில் நிலையத்திலிருந்து 1½ கல் அளவு. கோயில் ஆற்றங்கரை மேல் இருக்கின்றது.

இருந்த திருக்கோலம். கிழக்கே திருமுக மண்டலம்.

**திருமங்கையாழ்வார்**

*தூவாய புள்ளூர்ந்து வந்து, துறைவேழம்*
*மூவாமை நல்கி முதலை துணித்தானை,*
*தேவாதி தேவனை, செங்கமலக் கண்ணானை,*
*நாவாயு ளானை நறையூரில் கண்டேனே.*

**நம்மாழ்வார்**

*நாளேல் அறியேன் எனக்குள் ளன,நானும்*
*மீளா அடிமைப் பணிசெய்யப் புகுந்தேன்;*
*நீளார் மலர்ச்சோ லைகள்சூழ் திருநாவாய்*
*வாள்ஏய் தடங்கண் மடப்பின்னை மணாளா!*

# 66. திருவல்லவாழ்

## (திருவல்லாய்)

## கோலப்பிரான்–செல்வத்திருக்கொழுந்து

**வழிபட்டநாள் : 27–7–58; 4–4–65**

*1. திருமங்கையாழ்வார் 11; 2. நம்மாழ்வார் 11. (ஆக 22)*

திருவண்வண்டூரிலிருந்து வடக்கே நாலுகல் தொலைவு.

நின்ற திருக்கோலம். கிழக்கே திருமுக மண்டலம்.

திருமங்கையாழ்வார்

மஞ்சுதோய் வெண்குடை மன்னராய்
வாரணம் சூழ வாழ்ந்தார்
துஞ்சினார் என்பதோர் சொல்லைநீ
துயர்எனக் கருதி னாயேல்,
நஞ்சுதோய் கொங்கைமேல் அங்கைவாய்
வைத்தவள் நாளை உண்ட
மஞ்சனார் வல்லவாழ் சொல்லுமா
வல்லையாய் மருவு நெஞ்சே!

நம்மாழ்வார்

மான்ஏய் நோக்குநல்லீர்! வைகலும்வினை யேன்மெலிய
வான்ஆர் வண்கமுகும் மதுமல்லிகை யும்கமழும்
தேன்ஆர் சோலைகள்சூழ் திருவல்ல வாழ்உறையும்
கோனா ரை.அடியேன் அடிகூடுவது என்றுகொலோ?

# 67. திருவண்வண்டூர்

## (திருவமுண்டூர்)

## பாம்பணையப்பன்–கமலவல்லி

வழிபட்டநாள் : 28–7–58; 4–4–65

நம்மாழ்வார் : 11

திருப்புலியூருக்கு வடக்கே 3 கல் தொலைவு. செங்குன்றூரிலிருந்து மேற்கே 5 கல் தொலைவு.

மேற்கே திருமுக மண்டலம். நின்ற திருக்கோலம்.

நம்மாழ்வார்

அடிகள் கைதொழுது அலர்மேல் அசையும் அன்னங்காள்!
விடிவை சங்குஒலிக் கும்திரு வண்வண் டூர்உறையும்
கடிய மாயன்தன் னைக்கண்ண னை.நெடு மாலைக்கண்டு
கொடிய வல்வினை யேன்திறம் கூறுமின் வேறுகொண்டே.

# 68. திருவாட்டாறு

## ஆதிகேசவப்பெருமாள்–மரகதவல்லி

வழிபட்டநாள் : 27–7–58; 2–4–65

நம்மாழ்வார் 11

நாகர்கோவிலிலிருந்து, 16 கல் தொலைவு. திருவநந்த புரத்திலிருந்து 28 கல் தொலைவு.

கோயில் நல்ல உயரமான இடத்திலிருக்கிறது. பெரிய கோயில், கிடந்த திருக்கோலம். மேற்கே திருமுக மண்டலம்.

நம்மாழ்வார்

அருள்பெறுவார் அடியார்தம் அடியனேற்கு, ஆழியான்
அருள்தருவான் அமைகின்றான்; அதுநமது விதிவகையே.
இருள்தருமா ஞாலத்துள் இனிப்பிறவி யான்வேண்டேன்.
மருள்ஒழிநீ மடநெஞ்சே! வாட்டாற்றான் அடிவணங்கே.

# 69. வித்துவக்கோடு

## உய்யவந்தபெருமாள்–வித்துவக்கோட்டுவல்லி

வழிபட்டநாள் : 11–3–59; 6–4–65.

குலசேகராழ்வார் 10

சோரனூர்–குருவாயூர் நெடுஞ்சாலையில் சோரனூரிலிருந்து 10 மைலிலும், குருவாயூரிலிருந்து 20 மைலிலும் இத்தலம் இருக்கிறது. திருவித்துவக்கோடு என்று அந்த இடத்தில் பலகை இருக்கும். அங்கிருந்து ½ மைல் அளவில் கோயிலிருகின்றது, கோயில் ஆற்றங் கரையில் இருக்கின்றது. கோவிலுக்குள் நுழைந்தவுடன் சிவபெருமான் வீற்றிருக்கின்றார். பின்னேதான் பெருமாள்.

கிடந்த திருக்கோலம். தெற்கே திருமுக மண்டலம். குலசேகரப் பெருமாளின் அற்புதமான பாடல் சிறப்புப் பெற்றது இத்தலம்.

குலசேகராழ்வார்

கண்டார்இ கழ்வனவே காதலன்தான் செய்திடினும்,
கொண்டானை அல்லால் அறியாக் குலமகள்போல்
விண்தோய்ம திற்புடைசூழ் வித்துவக்கோட்டு அம்மா!நீ
கொண்டு.ஆளாய் ஆகிலும்உன குரைகழலே கூறுவனே.

# 70. திருக்கடித்தானம்

## அற்புதநாராயணன்–கற்பகவல்லி

வழிபட்டநாள் : 27–7–58; 4–4–65

நம்மாழ்வார் 11

திருவல்லவாழுக்கு வடக்கே மூன்று கல் தொலைவு.

நின்ற திருக்கோலம். கிழக்கே திருமுக மண்டலம்.

நம்மாழ்வார்

எல்லியும் காலையும் தன்னை நினைந்துஎழ
நல்ல அருள்கள் நமக்கேதந்து அருள்செய்வான்
அல்லிஅம் தண்ணம் துழாய்முடி அப்பன்ஊர்
செல்வர்கள் வாழும் திருக்கடித் தானமே.

# 71. திருவாறன்விளை

## (ஆறம்முளை)

## திருக்குறளப்பன்–தாமரையாள்

வழிபட்டநாள் : 27–7–58; 4–4–65

நம்மாழ்வார் 11

திருச்செங்குன்றூருக்குக் கிழக்கே கௌால் வழி நாலுகல் தொலைவு; கொட்டாரக்கரையிலிருந்து 37 கல் தொலைவு.

நின்ற திருக்கோலம். வடக்கே திருமுக மண்டலம்.

நம்மாழ்வார்

ஒன்றும்நில் லாகெடும் முற்றவும் தீவினை
உள்ளித் தொழுமின் தொண்டீர்!
அன்றுஅங்கு அமர்வென்று உருப்பிணி நங்கை
அணிநெடுந் தோள்புணர்ந்தான்
என்றும்எப் போதும்என் நெஞ்சம் துதிப்ப
உள்ளே இருக்கின் றபிரான்
நின்ற அணிதிரு வாறன் விளைஎன்னும்
நீள்நக ரம்அ துவ்வே.

# 4. நடுநாடு

(2 தலம்)

# 72. திருஅயிந்திரபுரம்

## தெய்வநாயகப்பெருமாள்–வைகுண்டநாயகி

வழிபட்டநாள் : 5–7–57; 3–12–65.

திருமங்கையாழ்வார் 10

திருப்பாதிரிப் புலியூருக்கு மேற்கே 3 கல் தொலைவு. கெடில நதிக்கு அணித்தே ஓர் மலைத் தொடரின் கீழ் கோவிலிருக்கிறது. கோயில் பெரியது.

நின்ற திருக்கோலம். கிழக்கே திருமுக மண்டலம்.

பார்த்தன் தல யாத்திரை வந்த பொழுது "நேமிக்கையாளன் அயிந்திரபுரமும் கண்டு கைதொழுதான்" எனப் பார்த்தன் இப்பதியை வணங்கியதாக, வில்லிபுத்தூர் ஆழ்வார் பாடியுள்ளார்.

நடுநாட்டில் திவ்வியப் பிரபந்தம் பெற்ற தலங்கள் இரண்டு. ஒன்று இத்தலம். மற்றொன்று திருக்கோவலூர்.

திருமங்கையாழ்வார்

வையம் ஏழும்உண்டு ஆலிலை வைகிய
மாயவன், அடியவர்க்கு
மெய்யன் ஆகிய தெய்வநா யகன்இடம்
மெய்தகு வரைச்சாரல்
மொய்கொள் மாதவி சண்பகம் முயங்கிய
முல்லைஅம் கொடியாட
செய்ய தாமரைச் செழும்பனை திகழ்தரு
திருவயிந் திரபுரமே.

# 73. திருக்கோவலூர்

## திரிவிக்கிரமன்

## உலகளந்த பெருமாள் பூங்கோவல் நாச்சியார்

**வழிபட்டநாள் : 4-12-57; 3-12-65.**

**1. திருமங்கையாழ்வார் 18; 2. பொய்கையாழ்வார் 2; 3. பூதத்தாழ்வார் 1; (ஆக 21)**

விழுப்புரம்-காட்பாடி இருப்புப் பாதையில் ஓர் இரயில் நிலையம். இரயில் நிலையத்திலிருந்து தென்மேற்கே இரண்டு கல் தொலைவில் பெண்ணை யாற்றின் தென் கரையில் கோயில் இருக்கிறது.

நின்ற திருக்கோலம். கிழக்கே திருமுக மண்டலம். மா்பலிச் சக்கரவர்த்திக்காக, மூன்றடியால் உலகத்தை அளந்த திருக்கோலம். மூர்த்தியின் உருவம் மிகப் பெரியது. கோயில் பழமையான பெரிய கோயில். இத்தலத்தில்தான் முதலாழ்வார் மூவரும் பாதி நாளிரவில்கொட்டும் மழையில் ஒட்டுத் திண்ணையில் மூன்றுதிருவந்தாதிகளும் பாடினர் என்ப.

இக்கோயிலுக்கு அண்மையில் கோவல் வீரட்டம் என்ற தேவாரத் தலமிருக்கின்றது.

### திருமங்கையாழ்வார்

வற்புடைய வரைநெடுந்தோள் மன்னர் மாள
வடிவாய மழுஏந்தி, உலகம் ஆண்டு,
வெற்புடைய நெடுங்கடலுள் தனிவேல் உய்த்த
வேள்முதலா வென்றான்ஊர் விந்தம் மேய,
கற்புடைய மடக்கன்னி காவல் பூண்ட
கடிபொழில்சூழ் நெடுமறுகில் கமல வேலி,
பொற்புடைய மலைஅரையன் பணிய நின்ற
பூங்கோவ லூர்தொழுதும் போது நெஞ்சே!

### பொய்கைஆழ்வார்

நீயும் திருமகளும் நின்றாயால், குன்றுஎடுத்துப்
பாயும் பனிமறைத்த பண்பாளா!-வாயில்
கடைகழியா உள்புகாக் காமர்பூங் கோவல்
இடைகழியே பற்றி இனி.

### பூதத்தாழ்வார்.

(தஞ்சை மாமணிக் கோயில் தலம் பார்க்க.)

# 5. தொண்டை நாடு

(22 தலங்கள்)

# 74. அத்தியூர்

## (காஞ்சி)

## வரதராசப்பெருமாள்–பெருந்தேவி

*வழிபட்டநாள் : 11–9–57; 23–1–66.*

*1. திருமங்கையாழ்வார் 4; 2. பூதத்தாழ்வார் 2; 3. பேயாழ்வார் 1; (ஆக 7.)*

இரயில் நிலையம். பெரிய நகரம். மிகப் பழைய பதி பல்லவர்களின் அரசு இருக்கைத் தலைநகரம். இந்நகர எல்லைக்குள் மங்களா சாசனம் பெற்ற திருப்பதி பதினான்கும், தேவாரம் பெற்ற சிவத்தலம் ஐந்தும், இவையன்றி இன்னும் பல கோயில்களும் இருக்கின்றன.

காஞ்சி நகரத்தை இரண்டு பிரிவாகப் பிரிக்கின்றனர். ஒன்று சிவகாஞ்சி அல்லது பெரிய காஞ்சி; இன்னொன்று விஷ்ணு காஞ்சி அல்லது சின்னக் காஞ்சி.

சின்னக் காஞ்சிபுரத்தில் 'அத்திகிரி', 'திருவெஃகா', 'அட்டபுயகரம்', 'திருத்தண்கா', 'வேளுக்கை', என்னும் ஐந்து திருப்பதிகள் இருக்கின்றன. பெரிய காஞ்சிபுரத்தில் 'ஊரகம்' 'நீரகம்', 'காரகம்', 'கார்வானம்', 'கள்வனூர்', 'பாடகம்', 'நிலாத்திங்கள் துண்டம்', 'பவளவண்ணம்', 'பரமேசுர விண்ணகரம்' ஆகிய ஒன்பது திருப்பதிகள் இருக்கின்றன.

காஞ்சியிலுள்ள பெருமாள் கோவில்களுள் பெரியது அத்திகிரி வரதராசப் பெருமாள் கோயில். இக்கோயில் மலையின்மீது இருக்கின்றது.

இருந்த திருக்கோலம். மேற்கே திருமுக மண்டலம்.

திருமங்கையாழ்வார்

'கல்லுயர்ந்த நெடுமதிள்சூழ் கச்சி மேய
களிறு'என்றும். 'கடல்கிடந்த கனியே!' என்றும்.
'அல்லியம்பூ மலர்ப்பொய்கைப் பழன வேலி
அணிஅழுந்தூர் நின்றுஉகந்த அம்மான்!' என்றும்.
சொல்உயர்ந்த நெடுவீணை முலைமேல் தாங்கித்
தூமுறுவல் நகைஇறையே தோன்றநக்கு.
மெல்விரல்கள் சிவப்புஎய்தத் தடவி ஆங்கே
மென்கிளிபோல் மிகமிழற்றும் என்பே தையே.

பூதத்தாழ்வார்

என்நெஞ்ச மேயான்;என் சென்னியான்; தானவனை
வன்நெஞ்சம் கீண்ட மணிவண்ணன்;-முன்னம்சேய்
ஊழியான்; ஊழி பெயர்த்தான்; உலகுஏத்தும்
ஆழியான்; அத்தியூ ரான்.

பேயாழ்வார்

சிறந்தஎன் சிந்தையும் செங்கண் அரவும்
நிறைந்தசீர் நீள்கச்சி யுள்ளும்-உறைந்ததுவும்
வேங்கடமும். வெஃகாவும். வேளுக்கைப் பாடியுமே
தாம்கடவார் தண்துழா யார்.

பெருந்தேவனார்

நீலமே! காரின் முகிலே! நெடும்கடலின்
கோலமே! அத்திகிரிக் கோமானே!-மூலம்என
மாத்தா மரைமடுவின் மால்யானை ஓலம்இடக்
காத்தாய்! கடைபோகக் கா.

# 75. அட்டபுயகரம்

## (அஷ்டபுஜம்)

## ஆதிகேசவப்பெருமாள்-அலர்மேல்மங்கை

**வழிபட்டநா-ளள் : 11-9-57; 23-1-66.**

1. திருமங்கையாழ்வார் 11; 2. பேயாழ்வார் 1; (ஆக 12.)

இது சின்னக் காஞ்சிபுரத்தில் உள்ளது.

நின்ற திருக்கோலம்; மேற்கே திருமுக மண்டலம்.

திருமங்கையாழ்வார்

மன்னவன் தொண்டையர் கோன்வணங்கும்
நீள்முடி மாலை வயிரமேகன்

தன்வலி தன்புகழ் சூழ்ந் தகச்சி
அட்ட புயகரத்து ஆதிதன்னை.

கன்னிநன் மாமதிள் மங்கைவேந்தன்
காமரு சீர்கலி கன்றி.குன்றா

இன்னிசை யால்சொன்ன செஞ்சொல்மாலை
ஏத்தவல் லார்க்குஇடம் வைகுந்தமே.

பேயாழ்வார்

தொட்ட படைஎட்டும் தோலாத வென்றியான்
அட்ட புயகரத்தான் அஞ்ஞான்று-குட்டத்துக்
கோள்முதலை துஞ்சக் குறித்துஎறிந்த சக்கரத்தான்
தாள்முதலே நங்கட்குச் சார்வு.

## 76. திருத்தண்கா

## (விளக்கொளிக்கோயில்)

## விளக்கொளிப்பெருமாள்–மரகதவல்லி

வழிபட்டநாள் : 11–9–57; 23–1–66.

திருமங்கையாழ்வார் 2.

சின்னக் காஞ்சிபுரத்திலுள்ள திருப்பதி.

நின்ற திருக்கோலம்; மேற்கே திருமுக மண்டலம்.

வேதாந்த தேசிகர் பிறந்த இடம்.

திருமங்கையாழ்வார்

முளைக்கதிரை, குறுங்குடியுள் முகிலை, மூவா,
மூவுலகும் கடந்துஅப்பால் முதலாய் நின்ற
அளப்பரிய ஆரமுதை, அரங்கம் மேய
அந்தணனை, அந்தணர்தம் சிந்தை யானை,
விளக்குஒளியை, மரகதத்தை, திருத்தண் காவில்,
வெஃகாவில், திருமாலைப் பாடக் கேட்டு,
'வளர்த்ததனால் பயன்பெற்றேன் வருக!' என்று
மடக்கிளியைக் கைகூப்பி வணங்கி னாளே.

## 77. வேளுக்கை

### முகுந்தநாயகன்–வேளுக்கைவல்லி

வழிபட்டநாள் : 11–9–57; 23–1–66.

1. திருமங்கையாழ்வார் 1; 2. பேயாழ்வார் 3; (ஆக 4.)

சின்னக் காஞ்சிபுரத்தைச் சேர்ந்த பதி.

நின்ற திருக்கோலம்; கிழக்கே திருமுக மண்டலம்.

திருமங்கையாழ்வார்

"மன்னும் மதிள்கச்சி, வேளுக்கை ஆளரியை"

பேயாழ்வார்

அன்றுஇவ் உலகம் அளந்த அசைவேகொல்
நின்றிருந்து வேளுக்கை நீள்நகர்வாய்–அன்று
கிடந்தானைக் கேடில்சீ ரானை,முன் கஞ்சைக்
கடந்தானை நெஞ்சமே! காண்.

# 78. பாடகம்

## (பாண்டவதூதர் சந்நிதி)

## பாண்டவதூதர்–ருக்மிணி; சத்தியபாமை

வழிபட்டநாள் : 12–9–57; 23–1–66.

1. திருமழிசையாழ்வார் 2; 2. திருமங்கையாழ்வார் 2;
3. பூதத்தாழ்வார் 1; 4. பேயாழ்வார் 1; (ஆக 6)

இது பெரிய காஞ்சிபுரத்திலுள்ள ஒரு தலம்.

இருந்த திருக்கோலம்; கிழக்கே திருமுக மண்டலம்.

திருமழிசையாழ்வார்

நின்றதுஎந்தை ஊரகத்துஇ–
–ருந்ததுஎந்தை பாடகத்து,
அன்றுவெஃக ணைக்கிடந்தது
என்இலாத முன்னெலாம்;
அன்றுநான்பி றந்திலேன்,பி–
–றந்தபின்ம றந்திலேன்;
நின்றதும், இருந்ததும்,கி–
டந்ததும்என் நெஞ்சுளே.

திருமங்கையாழ்வார்

கல்லார் மதிள்சூழ் கச்சி நகருள்
நச்சிப் பாடகத்துள்
எல்லா உலகும் வணங்க இருந்த
அம்மான், இலங்கைக்கோன்
வல்லான் ஆகம் வில்லால் முனிந்த
எந்தை, வீடணற்கு
நல்லான் உடைய நாமம் சொல்லில்
நமோநா ராயணமே.

பூதத்தாழ்வார்

உற்று வணங்கித் தொழுமின், உலகேழும்
முற்றும் விழுங்கும் முகில்வண்ணம்-பற்றிப்
பொருந்தாதான் மார்பிடந்து பூம்பா டகத்துள்
இருந்தானை, ஏத்தும்என் நெஞ்சு.

பேயாழ்வார்

("திருக்குடந்தை" தலப்பாடல் பார்க்க)

## 79. நீரகம்

### சகதீசப்பெருமாள்–நிலமங்கைவல்லி

**வழிபட்டநாள் : 12–9–57; 23–1–66.**

**திருமங்கையாழ்வார் 1.**

இது பெரிய காஞ்சிபுரத்தில் உள்ளது.

நின்ற திருக்கோலம்; கிழக்கே திருமுக மண்டலம்.

உலகளந்த பெருமாள் கோவிலில் வடக்குப் பிரகாரத்தில் இச்சந்நிதி இருக்கிறது.

திருமங்கையாழ்வார்

நீரகத்தாய்! நெடுவரையின் உச்சி மேலாய்!
நிலாத்திங்கள் துண்டத்தாய்! நிறைந்த கச்சி
ஊரகத்தாய்! ஒண்துறைநீர் வெஃகா உள்ளாய்!
உள்ளுவார் உள்ளத்தாய்! உலகம் ஏத்தும்
காரகத்தாய்! கார்வானத்து உள்ளாய்! கள்வா!
காமருபூங் காவிரியின் தென்பால் மன்னு
பேரகத்தாய்! பேராதுஎன் நெஞ்சின் உள்ளாய்!
பெருமான்உன் திருவடியே பேணி னேனே.

# 80. நிலாத்திங்கள் துண்டம்

## நிலாத்திங்கள் துண்டத்தான்

## நேரொருவரில்லாவல்லி

வழிபட்டநாள் : 11–9–57; 23–1–66.

திருமங்கையாழ்வார் : 1

இது பெரிய காஞ்சிபுரத்தில் உள்ளது. நின்ற திருக்கோலம்; மேற்கே திருமுக மண்டலம். இச்சந்நிதி ஏகாம்பர நாதர் கோயிலுக்குள் முதல் பிரகாரத்தில் இருக்கிறது.

திருமங்கையாழ்வார்

('திருநீரகம்' தலப் பாடல் பார்க்க)

# 81. ஊரகம்

## (உலகளந்தபெருமாள் கோயில்)

## உலகளந்த பெருமாள்–அமுதவல்லி

வழிபட்டநாள் : 11–9–57; 23–1–66.

1. திருமழிசையாழ்வார் 2; திருமங்கையாழ்வார் 4;(ஆக 6)

இது பெரிய காஞ்சியில் உள்ளது. இக்கோயிலுக்குள் ஊரகம் தவிர, நீரகம், காரகம், கார்வானம் என்ற மேலும் மூன்று சந்நிதிகள் இருக்கின்றன.

உலகளந்த பெருமாள் நின்ற திருக்கோலம்; மேற்கே திருமுக மண்டலம். பெரிய திருவுருவம். திருக்கோவலூர் உலகளந்த பெருமாளைவிட இவர் பெரிய வடிவினர். மேல் எடுத்த திருவடியைப் பந்தம் உயர்த்தித்தான் காணவேணும்.

*திருமழிசையாழ்வார்*

நன்றிருந்து யோகநீதி நண்ணுவார்கள் சிந்தையுள்
சென்றிருந்து தீவினைகள் தீர்த்ததேவ தேவனே!
குன்றிருந்த மாடநீடு பாடகத்தும் ஊரகத்தும்
நின்றிருந்து வெஃகணைக்கி டந்ததுஎன்ன நீர்மையே?

*திருமங்கையாழ்வார்*

'கல்எடுத்துக் கல்மாரி காத்தாய்!' என்றும்.
'காமருபூங் கச்சிஊ ரகத்தாய்!' என்றும்
'வில்இறுத்து மெல்லியல்தோள் தோய்ந்தாய்!' என்றும்.
'வெஃகாவில் துயில்அமர்ந்த வேந்தே!' என்றும்.
'மல்அடர்த்து மல்லரைஅன்று அட்டாய்!' என்றும்.
'மா.கீண்ட கைத்தலத்துஎன் மைந்தா!' என்றும்.
சொல்லெடுத்துத் தன்கிளியைச் 'சொல்லே' என்றும்.
துணைமுலைமேல் துளிசோரச் சோர்கின் றாளே!

# 82. திருவெஃகா
## (யதோத்காரி சந்நிதி)

## சொன்னவண்ணம் செய்த பெருமாள்
## கோமளவல்லி

*வழிபட்டநாள் : 11–9–57; 23–1–66;*

*1. திருமழிசையாழ்வார் 3; 2. திருமங்கையாழ்வார் 6;*
*3. பொய்கையாழ்வார் 1; 4. பேயாழ்வார் 4;*
*5.நம்மாழ்வார் 1 (ஆக 15)*

இது சின்னக் காஞ்சியிலுள்ள ஒரு தலம்.

கிடந்த திருக்கோலம்; மேற்கே திருமுக மண்டலம்.

பொய்கையாழ்வார் பிறந்தருளிய தலம்.

திருமழிசையாழ்வார்

(ஊரகம், பாடகம், அன்பில் தலப்பாடல்கள் பார்க்க)

திருமங்கையாழ்வார்

கூந்த லார்மகிழ் கோவல னாய்,வெண்ணெய்
மாந்த முந்தையில் கண்டு மகிழ்ந்துபோய்
பாந்தள் பாழியில் பள்ளி விரும்பிய
வேந்த னைச்சென்று காண்டும்வெஃ காவுளே.

பொய்கையாழ்வார்

வேங்கடமும், விண்ணகரும், வெஃகாவும், அஃகாத
பூங்கிடங்கில் நீள்கோவல் பொன்நகரும்–நான்குஇடத்தும்
நின்றான், இருந்தான், கிடந்தான் நடந்தானே
என்றால் கெடுமாம் இடர்.

பேயாழ்வார்

பொருப்பிடையே நின்றும், புனல்குளித்தும், ஐந்து
நெருப்பிடையே நிற்கவும்நீர் வேண்டா:–விருப்புடைய
வெஃகாவே சேர்ந்தானை மெய்ம்மலர் தூய்க் கைதொழுதால்
அஃகாவே தீவினைகள் ஆய்ந்து.

நம்மாழ்வார்

நானிலம் வாய்க்கொண்டு நன்னீர் அறம்என்று கோதுகொண்ட
வேனிலம் செல்வன் சுவைத்துஉமிழ் பாலை, கடந்தபொன்னே!
கால்நிலம் தோய்ந்துவிண் ணோர்தொழும்கண்ணன்வெஃகாஉது:அம்பூந்
தேன்இளஞ் சோலைஅப் பாலது,எப் பாலைக்கும் சேமத்ததே.

# 83. காரகம்

## கருணாகரப்பெருமாள்–பத்மாமணி நாச்சியார்

வழிபட்டநாள் : 12–9–57; 23–1–66.

திருமங்கையாழ்வார் 1.

இது பெரிய காஞ்சிபுரத்திலுள்ளது. உலகளந்த பெருமாள் கோயில் தாயார் சந்நிதிக்கு எதிரில் இருக்கிறது. நின்ற திருக்கோலம்; தெற்கே திருமுக மண்டலம்.

திருமங்கையாழ்வார்

('திருநீரகம்' தலப்பாடல் பார்க்க)

# 84. கார்வானம்

## கள்வர்–கமலவல்லி

*வழிபட்டநாள் : 12–9–57; 23–1–66*

*திருமங்கையாழ்வார் 1*

இது பெரிய காஞ்சியில் உள்ளது. உலகளந்த பெருமாள் கோவிலுக்குள் இருக்கிறது.

நின்ற திருக்கோலம்; மேற்கே திருமுக மண்டலம்.

*திருமங்கையாழ்வார்*

*('திருநீரகம்' தலப்பாடல் பார்க்க)*

# 85. கள்வனூர்

## ஆதிவராகப்பெருமாள்–அஞ்சிலைவல்லி

*வழிபட்டநாள் : 11–9–57; 23–1–66.*

*திருமங்கையாழ்வார் 1*

பெரிய காஞ்சியில் இருக்கிறது. இச்சந்நிதி காமாட்சி அம்மன் கோவிலுக்குள் இருக்கிறது.

நின்ற திருக்கோலம்; மேற்கே திருமுக மண்டலம்.

*திருமங்கையாழ்வார்*

*('திருநீரகம்' தலப்பாடல் பார்க்க)*

# 86. பவளவண்ணம்

## (பவளவண்ணர்சந்நிதி)

## பவளவண்ணர்–பவளவல்லி

வழிபட்டநாள் : 11–9–57; 24–1–66

திருமங்கையாழ்வார் : 10

இது பெரிய காஞ்சியில் உள்ளது.

இருந்த திருக்கோலம்; மேற்கே திருமுக மண்டலம்.

திருமங்கையாழ்வார்

வங்கத்தால் மாமணிவந்து உந்து முந்நீர்
மல்லையாய்! மதிள்கச்சி ஊராய்! பேராய்!
கொங்கத்தார் வளம்கொன்றை அலங்கல் மார்வன்
குலவரையன் மடப்பாவை இடப்பால் கொண்டான்
பங்கத்தாய்! பாற்கடலாய்! பாரின் மேலாய்!
பனிவரையின் உச்சியாய்! பவள வண்ணா!
எங்குஉற்றாய் எம்பெருமான்! உன்னை நாடி
ஏழையேன் இங்ஙனமே உழிதர் கேனே.

# 87. பரமேச்சுரவிண்ணகரம்

## (வைகுண்டப்பெருமாள் கோயில்)

## பரமபதநாதன்–வைகுந்தவல்லி

வழிபட்டநாள் : 12–9–57; 24–1–66

திருமங்கையாழ்வார் 10.

இத்தலம் பெரிய காஞ்சியிலுள்ளது. இருந்த திருக்கோலம்;மேற்கே திருமுக மண்டலம். இது நல்ல வேலைப்

பாடமைந்த கோயில், பல்லவன் கட்டியது. இதோடு காஞ்சி நகரத்திலுள்ள 14 திருப்பதிகள் நிறைவெய்துகின்றன.

திருமங்கையாழ்வார்

சொல்லுவன் சொற்பொருள் தான்அவை ஆய்ச்சுவை,
ஊறு,ஒலி நாற்றமும் தோற்றமுமாய்
நல்அரன், நான்முகன், நாரண னுக்குஇடம்
தான்,தடம் சூழ்ந்துஅழ காயகச்சி,
பல்லவன் வில்லவன் என்றுஉல கில்பல-
-ராய்ப்பல வேந்தர் வணங்குகழல்
பல்லவன், மல்லையர் கோன்பணிந் தபர-
-மேச்சுர விண்ணக ரம்அதுவே.

# 88. திருப்புட்குழி

## விசயராகவப்பெருமாள்–மரகதவல்லி

வழிபட்டநாள் : 8–2–57; 24–1–66

திருமங்கையாழ்வார் 2.

காஞ்சியினின்றும் மேற்கே 7 கல் தொலைவு. இருந்த திருக்கோலம்; கிழக்கே திருமுக மண்டலம்.

திருமங்கையாழ்வார்

'அலங்கெழு தடக்கை ஆயன்வாய் ஆம்பற்கு
அழியுமால் என்உள்ளம்!' என்னும்;
புலங்கெழு பொருநீர்ப் புட்குழி பாடும்;
'போதுமோ நீர்மலைக்கு'. என்னும்;
குலங்கெழு கொல்லி, கோமள வல்லிக்
கொடியிடை நெடுமழைக் கண்ணி,
இலங்குஎழில் தோளிக்கு என்நினைந்து இருந்தாய்
இடஎந்தை எந்தைபி ரானே!

# 89. திருநின்றவூர்

## (தின்னனூர்)

### பத்தர்ஆவிப்பெருமாள்–என்னைப்பெற்றதாயார்

வழிபட்டநாள் : 20–4–56; 22–1–66.

திருமங்கையாழ்வார் : 2

சென்னை–அரக்கோணம் இருப்புப் பாதையிலுள்ள தின்னனூர் இரயில் நிலையத்தினின்று தெற்கே ஒரு கல் தொலைவு.

நின்ற திருக்கோலம்; கிழக்கே திருமுக மண்டலம்.

இங்குச் சிவன் கோவிலும் இருக்கிறது. சிவபெருமானை உள்ளத்து இருத்தி மனக்கோயில் கட்டிய, பூசலார் நாயனார் பிறந்தருளிய தலம் இது.

திருமங்கையாழ்வார்

ஏற்றி னை,இம யத்துள்எம் ஈசனை,
இம்மை யை,மறு மைக்கு மருந்தினை,

ஆற்ற லைஅண்டத்து அப்புறத்து உய்த்திடும்
ஐய னை,கையில் ஆழிஒன்று ஏந்திய

சுற்றி னை,குரு மாமணிக் குன்றினை,
நின்ற வூர்நின்ற நித்திலத் தொத்தினை,

காற்றி னை,புன லைச்சென்று நாடிக்
கண்ண மங்கையுள் கண்டுகொண்டேனே.

# 90. திருஎவ்வுள்

## (திருவள்ளூர்)

### வீரராகவப்பெருமாள்–கனகவல்லி

வழிபட்டநாள் : 22–4–56; 26–1–66.

1. திருமழிசையாழ்வர் : 1 2. திருமங்கையாழ்வார்:11(ஆக 12)

சென்னை–அரக்கோணம் இருப்புப் பாதையில் ஓர் இரயில் நிலையம். இரயில் நிலையத்திலிருந்து கோயில் இரண்டு கல்

தொலைவில் உள்ளது. இத்தலம் சென்னை–திருத்தணி நெடுஞ்சாலையின்மேல் இருக்கிறது.

பெரிய கோயில், கிடந்த திருக்கோலம். கிழக்கே திருமுக மண்டலம்.

எவ்வளூர் வீரராகவப் பெருமாளை, வடலூர் வள்ளல் இராமலிங்க சுவாமிகள் பாடியுள்ளார்.

### திருமழிசையாழ்வார்

('அன்பில்' தலப்பாடல் பார்க்க)

### திருமங்கையாழ்வார்

முனிவன், மூர்த்தி, மூவராகி
வேதம் விரித்துஉரைத்த
புனிதன், பூவை வண்ணன்,அண்ணல்
புண்ணியன், விண்ணவர்கோன்
தனியன், சேயன், தான்ஒருவன்
ஆகிலும் தன்அடியார்க்கு
இனியன், எந்தை, எம்பெருமான்
எவ்வுள் கிடந்தானே.

### இராமலிங்க சுவாமிகள்

இளங்கொடி தனைக்கொண்டு ஏகும்
இராவணன் தனைஅ ழித்தே
களங்கம்இல் விபீட ணர்க்குக்
கனஅரசு அளித்தாய் போற்றி!
துளங்குமா தவத்தோர் உற்ற
துயரெலாம் தவிர்த்தாய் போற்றி!
விளங்குநல் எவ்வு ளூர்வாழ்
வீரரா கவனே போற்றி!

# 91. திருநீர்மலை

## நீர்வண்ணன்–அணிமாமலர்மங்கை

வழிபட்டநாள் : 20–4–56; 29–1–66

1. திருமங்கையாழ்வார் : 19; 2. பூதத்தாழ்வார் : 1 (ஆக 20)

பல்லாவரம் இரயில் நிலையத்திலிருந்து மேற்கே 3 கல் தொலைவில் இருக்கிறது.

கீழே ஒரு கோயிலும், 200 அடி உயரமுள்ள ஒரு சிறு குன்றின்மீது ஒரு கோயிலும் இருக்கின்றது. நின்ற திருக்கோலம்; கிழக்கே திருமுக மண்டலம்.

திருமங்கையாழ்வார்

கார்வண்ணம் திருமேனி; கண்ணும், வாயும்,
கைத்தலமும் அடிஇணையும் கமல வண்ணம்;
பார்வண்ண மடமங்கை, பத்தர், பித்தர்,
பனிமலர்மேல் பாவைக்குப் பாவம் செய்தேன்;
ஏர்வண்ண என்பேதை என்சொல் கேளாள்;
'எம்பெருமான் திருவரங்கம் எங்கே?' என்னும்;
'நீர்வண்ணன் நீர்மலைக்கே போவேன்' என்னும்;
இதுஅன்றோ நிறைஅழிந்தார் நிற்கும் ஆறே?

பூதத்தாழ்வார்

பயின்றது அரங்கம், திருக்கோட்டி, பன்னாள்
பயின்றதுவும் வேங்கடமே பன்னாள்,–பயின்றது
அணிதிகழும் சோலை அணிநீர் மலையே
மணிதிகழும் வண்தடக்கை மால்.

# 92. திருஇடஎந்தை

## (திருவிடந்தை)

## நித்தியகலியாணர்–கோமளவல்லி

வழிபட்டநாள் : 13–2–58; 29–1–66

திருமங்கையாழ்வார் : 13

சென்னையினின்றும் மகாபலிபுரத்திற்குக் கடற்கரையை ஒட்டிச் செல்லும் நெடுஞ்சாலையில், மகாபலிபுரத்திற்கு 6 மைல் முன்னால், சாலைக்கு அண்மையில், இத்தலம் இருக்கிறது.

நின்ற திருக்கோலம்; கிழக்கே திருமுக மண்டலம்.

திருமங்கையாழ்வார்

'ஊழியில் பெரிதால் நாழிகை!' என்னும்;
'ஒண்சுடர் துயின்றதால்!' என்னும்.

'ஆழியும் புலம்பும்! அன்றிலும் உறங்கா!
தென்றலும் தீயினில் கொடிதாம்.

தோழியோ!' என்னும்; 'துணைமுலை சுரக்கும்
சொல்லுமின் என்செய்கேன்?' என்னும்;

ஏழைஎன் பொன்னுக்கு என்நினைந்து இருந்தாய்
இடஎந்தை எந்தை பிரானே!

# 93. திருக்கடல்மல்லை

## (மகாபலிபுரம்)

## தலசயனத்துஉறைவார்–நிலமங்கை

வழிபட்டநாள் : 13–2–58; 29–1–66.

1. திருமங்கையாழ்வார் 26; 2. பூதத்தாழ்வார் 1. (ஆக 27)

சென்னையினின்றும் கடற்கரையை ஒட்டிச் சாலை இருக்கிறது. 37 கல் தொலைவு.

கடற்கரை நகரம். கிடந்த திருக்கோலம்; கிழக்கே திருமுக மண்டலம்.

பல்லவர் காலத்துச் சிற்பங்கள் நிறைய இருக்கின்றன. ஒரே கல்லில் செய்யப் பெற்ற பெரிய தேர், யானை முதலியன இருக்கின்றன. கடற்கரை ஓரத்தில் பெரும் பொருட் செலவில் பயணிகள் தங்கும் மாளிகை கட்டியுள்ளனர்.

பூதத்தாழ்வார் பிறந்தருளிய தலம் இது.

திருமங்கையாழ்வார்

ஏனத்தின் உருவாகி நிலமங்கை எழில்கொண்டான்,
வானத்தில் அவர்முறையால் மகிழ்ந்துஏத்தி வலம்கொள்ள,
கானத்தின் கடல்மல்லைத் தலசயனத்து உறைகின்ற,
ஞானத்தின் ஒளிஉருவை நினைவார்என் நாயகரே.

பூதத்தாழ்வார்

(தஞ்சை மாமணிக் கோயில் தல்ப்பாடல் பார்க்க)

# 94. திருவல்லிக்கேணி

## பார்த்தசாரதிப்பெருமாள்–ருக்மிணிப்பிராட்டி

வழிபட்டநாள் : 23–4–56; 22–1–66

1. திருமழிசையாழ்வார் 1; 2. திருமங்கையாழ்வார் 10.
3. பேயாழ்வார் 1; (ஆக 12)

இது சென்னை நகரத்திலிருக்கும் சிறந்த திருப்பதி. சென்னைப் பெருநகரில் திவ்வியப் பிரபந்தம் பெற்ற பதி இஃது ஒன்றே. பார்த்தனுக்குத் தேரோட்டிய பெருமாள். நின்ற திருக்கோலம்; கிழக்கே திருமுக மண்டலம்.

திருமழிசையாழ்வார்

தாளால் உலகம் அளந்த அசைவேகொல்?
வாளா கிடந்துஅருளும் வாய்திறவான்–நீள்ஓதம்
வந்துஅலைக்கும் மாமயிலை மாவல்லிக் கேணியான்,
ஐந்தலைவாய் நாகத்து அணை.

திருமங்கையாழ்வார்

மீன்அமர் பொய்கை நாள்மலர் கொய்வான்
வேட்கையி னோடுசென்று இழிந்த
கான்அமர் வேழம் கைஎடுத்து அலறக்
கராஅதன் காலினைக் கதுவ,

ஆனையின் துயரம் தீரப்புள் ஊர்ந்து.
சென்றுநின்று ஆழிதொட் டானை.
தேன்அமர் சோலை மாடமா மயிலைத்
திருவல்லிக் கேணிக்கண் டேனே.

பேயாழ்வார்

வந்துஉகைத்த வெண்திரைகள் செம்பவள வெண்முத்தம்
அந்தி விளக்கும் அணிவிளக்காம்:-எந்தை
ஒருவல்லித் தாமரையாள் ஒன்றியசீர் மார்வன்
திருவல்லிக் கேணியான் சென்று.

## 95. கடிகை

### (கடிகாசலம்-சோளசிங்கபுரம்)

### யோகநரசிம்மர்-அமுதவல்லி

வழிபட்டநாள் : 8-2-58; 25-1-66

1. திருமங்கையாழ்வார் 3; 2. பேயாழ்வார் 1; (ஆக 4)

சென்னைக்கு வடமேற்கே 40 மைல் தொலைவிலுள்ள இரயில் நிலையத்திற்கு வடமேற்கே 8 கல் தொலைவு.

இருந்த திருக்கோலம்; கிழக்கே திருமுக மண்டலம்.

320 அடி உயரமுள்ள ஒரு குன்றின் மீது நரசிம்மமூர்த்தியும், 200 அடி உயரமுள்ள மற்றொரு குன்றின் மீது ஆஞ்சனேய மூர்த்தியும் இருக்கின்றன.

ஊருக்குள் இருக்கும் சந்நிதியில் ஆதிகேசவப் பெருமாளும், உற்சவரும் எழுந்தருளியிருக்கின்றனர். கீழ்க் கோவிலுக்கும், மலை அடிவாரத்திற்கும் சுமார் 2 மைல் தொலைவு.

திருமங்கையாழ்வார்

மிக்கானை. மறையாய் விரிந்த விளக்கை.என்னுள்
புக்கானை. புகழ்சேர் பொலிகின்ற பொன்மலையை.
தக்கானை. கடிகைத் தடங்குன்றின் மிசைஇருந்த
அக்காரக் கனியை அடைந்துஉய்ந்து போனேனே.

பேயாழ்வார்

('விண்ணகரம்' தலப்பாடல் பார்க்க)

# 6. வடநாடு

(12 தலங்கள்)

# 96. திருவேங்கடம்

## (திருப்பதி)

### திருவேங்கடத்தான்–அலர்மேல்மங்கைத்தாயார்

வழிபட்டநாள் : 18–11–61; 30–1–66.

1. பெரியாழ்வார் 7; 2. ஆண்டாள் 16; குலசேகராழ்வார் 11;
4. திருமழிசையாழ்வார் 15; 5. திருப்பாணாழ்வார் 2;
6. திருமங்கையாழ்வர் 62; 7. பொய்கையாழ்வார் 10;
8. பூதத்தாழ்வார் 9; 9. பேயாழ்வார் 19;
10. நம்மாழ்வார் 52. (ஆக 203)

இரயில் நிலையம். ரேணிகுண்டா இரயில் நிலையத்திற்கு மேற்கே 6 கல் தொலைவு.

நின்ற திருக்கோலம்; கிழக்கே திருமுக மண்டலம்.

திருப்பதிமலை அடிவாரத்திலிருந்து சீனிவாசப் பெருமான் நிற்கின்ற மலை உச்சி, நடந்து சென்றால் 6 கல் அளவு. கார்ச் சாலை 11 கல் அளவு. நடைபாதை பழமையானது. கார்ச் சாலை, பின்னாளில் தோன்றியது. இன்று இரண்டும் பயன்படுகின்றன.

இந்த மலை உச்சியில் நிற்கும் வேங்கடநாதனை விடச் செல்வத்திற் சிறந்த கடவுள் உலகில் எங்குமே இல்லை. ஆண்டு தோறும் கோடிக்கு மேற்பட்ட வருமானம் வருகிறது. அடியார்கள் தொகையும் பெருகிக்கொண்டே போகின்றது. எந்த நேரத்திலும் திருவேங்கடத்தானைக் கண்டு வணங்குதல் எளிதன்று.

திருவேங்கடத்தானுக்கு இருக்கின்ற சொத்தும், வைர அணிகளும், தங்க, வெள்ளி வாகனங்களும் வேறு எந்தக் கடவுளுக்கும் இல்லை.

புலவர்கள் பாராட்டுதலிலும் திருவேங்கடமுடையார் ஒன்றும் குறைந்தவரல்லர். ஏராளமான பாடற் செல்வத்தையும் பெற்றவர் அவர்.

திருமாலையே பாடிய ஆழ்வார்கள் பதினொருவரில், தொண்டரடிப்பொடியாழ்வார் தவிர, பத்து ஆழ்வார்கள் திருவேங்கடத்தைப் பாடியுள்ளனர். திருவரங்கத்தைப் பதினொரு ஆழ்வாரும் பாடினர். திவ்வியப் பிரபந்தப் பாடற் பெருக்கத்திலும் திருவரங்கம் முதல் இடத்தையும், திருப்பதி இரண்டாவது இடத்தையும் பெறுகின்றன. திருவரங்கத்திற்கு 247; திருப்பதிக்கு 203.

மலையின் மீது பயணிகள் தங்குதற்கு ஏராளமான விடுதிகள் கட்டப் பெற்றிருக்கின்றன. எல்லா வசதிகளும் மலையில் இருக்கின்றன.

மலையின் மீது திருவேங்கடமுடையார் மட்டும்தான் நிற்கின்றார். தாயார் சந்நிதி அங்கு இல்லை.

அடிவாரத்தினின்றும் இரண்டு கல் தொலைவிலுள்ள திருச்சானூரில் அலர்மேல்மங்கைத் தாயார் சந்நிதி இருக்கிறது.

அடிவாரத்திலுள்ள கீழைத் திருப்பதியில் கோவிந்தராசப் பெருமாள் கோயில் இருக்கிறது. இராமர் கோவில் ஒன்றும் இருக்கிறது.

திருமலையில் கண்ணாடி மாளிகை ஒன்று அமைக்கப் பெற்றிருக்கிறது. நிறைந்த பொருட் செலவில் கவர்ச்சிகரமாக அம்மாளிகை விளங்குகிறது. திருவேங்கடமுடையானை அம் மாளிகையினுள் எழுந்தருளச் செய்து, கண்டு களித்தால், எங்கு திரும்பினாலும் எத்தனையோ வேங்கட நாதனைக் காணலாம்.

மலையின் ஓர் புறத்தில் பாபநாசம் அருவி என்று நீர் வீழ்ச்சி ஒன்று விழுகிறது.

திருமலைத் தேவஸ்தானத்தார் கல்லூரி முதலிய எண்ணற்ற அறச் செயல்களைச் செய்து வருகின்றனர்; செல்வத்துப் பயன் ஈதலே என்பதை உணர்ந்து, தேவைப்படும் பல கோயில்களுக்குப் பொருள் உதவுகின்றனர்.

மலை அடிவாரத்தில் ஓர் அருவி விழுகின்றது. அந்த அருவிக்குக் கபில தீர்த்தம் என்று பெயர். அருவிக்கரையில் கபிலேசுவரன் என்ற பெயரையுடைய சிவன் கோயில் ஒன்று இருக்கிறது.

### பெரியாழ்வார்

மச்சொடு மாளிகை ஏறி
மாதர்கள் தம்மிடம் புக்கு.
கச்சொடு பட்டைக் கிழித்துக்
காம்புத் துகில்அவை கீறி
நிச்சலும் தீமைகள் செய்வாய்
நீள்திரு வேங்கடத்து எந்தாய்!
பச்சைத் தமனகத் தோடு
பாதிரிப் பூச்சூட்ட வாராய்!

### ஆண்டாள்

மதயானை போல்எழுந்த
மாமுகில்காள்! வேங்கடத்தைப்
பதியாக வாழ்வீர்காள்!
பாம்பணையான் வார்த்தைஎன்னே?
கதிஎன்றும் தான்ஆவான்
கருதாது.ஓர் பெண்கொடியை
வதைசெய்தான்! என்னும் சொல்
வையகத்தார் மதியாரே.

### குலசேகராழ்வார்

உம்பர் உலகுஆண்டு ஒருகுடைக்கீழ் உருப்பசிதன்
அம்பொன் கலைஅல்குல் பெற்றாலும் ஆதரியேன்;
செம்பவள வாயான் திருவேங் கடமென்னும்
எம்பெருமான் பொன்மலைமேல் ஏதேனும் ஆவேனே

### திருமழிசையாழ்வார்

வேங்கடமே விண்ணோர் தொழுவதுவும் மெய்ம்மையால்
வேங்கடமே மெய்வினைநோய் தீர்ப்பதுவும்–வேங்கடமே
தானவரை வீழத்தன் ஆழிப் படைதொட்டு
வானவரைக் காப்பான் மலை.

### திருப்பாணாழ்வார்

மந்தி பாய்வட வேங்கட மாமலை, வானவர்கள்
சந்தி செய்யநின்றான் அரங்கத்து அரவின் அணையான்
அந்தி போல்நிறத்து ஆடையும் அதன்மேல்
அயனைப் படைத்த தோர்எழில்
உந்தி மேலதுஅன் றோஅடி யேன்உள்ளத்து இன்உயிரே.

### திருமங்கையாழ்வார்

வெருவாதாள் வாய்வெருவி 'வேங்கடமே!
வேங்கடமே!' என்கின் றாளால்,
மருவாளால் என்குடங்கால்; வாள்நெடுங்கண்
துயில்மறந்தாள்; வண்டுஆர் கொண்டல்
உருவாளன் ; வானவர்தம் உயிராளன்;
ஒலிதிரைநீர்ப் பெளவம் கொண்ட
திருவாளன், என்மகளைச் செய்தனகள்
எங்ஙனம்நான் சிந்திக் கேனே!

### பொய்கையாழ்வார்

எழுவார் விடைகொள்வார் ஈன்துழா யானை,
வழுவா வகைநினைந்து வைகல்–தொழுவார்
வினைச்சுடரை நந்துவிக்கும் வேங்கடமே, வானோர்
மனச்சுடரைத் தூண்டும் மலை.

### பூதத்தாழ்வார்

பெருகு மதவேழம் மாப்பிடிக்கு முன்நின்று
இருகண் இளமூங்கில் வாங்கி–அருகுஇருந்த
தேன்கலந்து நீட்டும் திருவேங் கடம்கண்டீர்,
வான்கலந்த வண்ணன் வரை.

### பேயாழ்வார்

தாழ்சடையும், நீள்முடியும், ஒண்மழுவும், சக்கரமும்,
சூழ்அரவும், பொன்நாணும் தோன்றுமால்;—சூழும்
திரண்டுஅருவி பாயும் திருமலைமேல் எந்தைக்கு
இரண்டுஉருவும் ஒன்றாய் இசைந்து.

### நம்மாழ்வார்

சொன்னால் விரோதம்இது, ஆகிலும் சொல்லுவன் கேண்மினோ;
என்நாவில் இன்கவி யான்ஒரு வர்க்கும் கொடுக்கிலேன்;
தென்னா தெனாஎன்று வண்டு முரல்திரு வேங்கடத்து
என்னானை என்அப்பன் எம்பெரு மான்உளன் ஆகவே.

### கம்பர்

வடசொற்கும், தென்சொற்கும் வரம்பிற்றாய்
நான்மறையும், மற்றை நூலும்
இடைசொற்ற பொருட்குஎல்லாம் எல்லையதாய்
நல்அறத்துக்கு ஈறாய், வேறு
புடைசுற்றும் துணைஇன்றி, புகழ்பொதிந்த
மெய்யேபோல் பூத்து நின்ற
அடைசுற்றும் தண்சாரல் ஓங்கியவேங்
கடத்தில் சென்று அடைதிர் மாதோ.

### பெருந்தேவனார்

தேன்ஓங்கு சோலைத் திருவேங் கடம்என்றும்,
வான்ஓங்கு சோலை மலைஎன்றும்—தான்ஓங்கு
தென்அரங்கம் என்றும் திருஅத்தி ஊரென்றும்,
சொன்னவர்க்கும் உண்டோ துயர்.

### வில்லிபுத்தூர் ஆழ்வார்

பத்திக்குவ ரம்பாகிய பார்த்தன் பலதீர்த்தம்,
அத்திக்கினும் எத்திக்கினும் ஆம்என்றுஅவை ஆடி,
சித்திக்குஒரு விதைஆகிய தென்நாட்டினை அணுகி,
தத்திச்சொரி அருவித்தட அரவக்கிரி சார்ந்தான்.

பிள்ளைப்பெருமாள் ஐயங்கார்

மாண்டுபிறக் கும்துயர்போய் வைகுந்தம் புக்கவரும்
மீண்டுதொழக் காதலிக்கும் வேங்கடமே-பாண்டுமகன்
ஏறுஇரதப் பாகனார் ஏத்தும்அடி யார்நாவில்
ஊறுஇரதப் பாகுஅனார் ஊர்.

தனிப்பாடல்

கூன்கொண்டு சென்றவன் கூன்நிமிர்ந்து
ஓட குருடன்கொம்பில்
தேன்என்று காட்ட முடவன்அத்
தேனை எடுக்கஅயல்
தான்நின்ற ஊமை தனக்குஎன்று
கேட்க தருவன்வரம்
வான்நின்ற சோலை வடவேங்-
-கடமேய மாதவனே.

## 97. சிங்கவேள்குன்றம்

### (அகோபிலம்)

### நரசிம்மன்–லட்சுமிநாச்சியார்

வழிபட்டநாள் : 17–11–64, 31–1–66.

திருமங்கையாழ்வார் : 10

நந்தியால்–கடப்பை நெடுஞ்சாலையில், நந்தியாலிலிருந்து 25வது மைலில் அல்லகாடா என்ற ஊரிலிருந்து இடது கைப்பக்கம் திரும்பி, 14 மைல் சென்றால் இத்தலத்தை அடையலாம்.

அகோபிலம் ஓர் மலைப்பகுதி. அடிவாரத்தில் ஓர் கோவில் இருக்கின்றது. மொத்தம் அகோபிலதில் ஒன்பது நரசிம்ம மூர்த்திகள் இருக்கின்றனர்.

1. லட்சுமி நரசிம்மம் (கீழ் அகோபிலம்)
2. சத்திராந்த நரசிம்மம்
3. யோக நரசிம்மம்
4. காரங்கி நரசிம்மம்
5. உக்கிர நரசிம்மம் (மேல் அகோபிலம்)
6. பார்க்கவ நரசிம்மம்
7. பர்முலிதி நரசிம்மம்
8. வராக நரசிம்மம்
9. பிரகலாத நரசிம்மம்.

இருந்த திருக்கோலம்; கிழக்கே திருமுக மண்டலம்.

**திருமங்கையாழ்வார்**

மென்ற பேழ்வாய் வாள்எயிற்றுஓர் கோளரி யாய்;அவுணன்,
பொன்ற ஆகம் வள்உகிரால் போழ்ந்த புனிதன் இடம்;
நின்ற செந்தீ மொண்டுசூறை நீள்விசும்பு ஊடுஇரிய,
சென்று காண்டற்கு அரியகோயில் சிங்கவேள் குன்றமே.

## 98. அயோத்தி

### சக்கரவர்த்தித்திருமகன்–சீதாப்பிராட்டி

**வழிபட்டநாள் : 21–2–61**

1. பெரியாழ்வார் 6; 2. குலசேகராழ்வார் 4;
3. தொண்டரடிப்பொடியாழ்வார் 1; 4. திருமங்கையாழ்வார் 1;
5. நம்மாழ்வார் 1. (ஆக 13)

காசிக்கு வடமேற்கே 125 கல் தொலைவிலும், பிரயாகைக்கு வடக்கே 99 கல் தொலைவிலும் அயோத்தி இருக்கிறது. பைசாபாத் இரயில் நிலையத்திற்கு வடக்கே 6 கல் தொலைவு.

இந்நகரத்தில் பரந்த சரயு நதி ஓடுகிறது. "சரயு என்பது தாய்முலை அன்னது" என்பார் கம்பர் பெருமான்.

செவ்விய மதுரம் சேர்ந்தநற் பொருளில்
சீரிய கூரிய தீம்சொல்
வவ்விய கவிஞர் அனைவரும், வடநூல்
முனிவரும் புகழ்ந்ததுஃ வரம்பில்
எவ்வுல கத்தோர் யாவரும் தவம்செய்து
ஏறுவான் ஆதரிக் கின்ற
அவ்வுல கத்தோர் இழிவதற்கு அருத்தி
புரிகின்றது அயோத்திமா நகரம்.

தேவர்கள் எல்லாம் அயோத்தியில் பிறக்க விரும்புவார்கள் என்பர் கம்பர். ஆம்ஃ இராமபிரான் பிறந்த நகரல்லவா?

அயோத்தி நகரத்தையும், அந்நகரத்தில் ஓடும் சரயு ஆற்றையும் கண்டவுடன் இராமபிரானின் சிறப்பு முழுதும் நினைவுக்கு வந்து மெய்ம்மறந்து விடுவோம்.

அயோத்திக் கோயிலை மேலே குறித்த ஐந்து ஆழ்வார்கள் பாடியிருக்கின்றார்கள். மேற்கே திருமுக மண்டலம்ஃ நின்ற திருக்கோலம். இக்கோவிலில் அனுமன் சந்நிதி ஒன்று இருக்கின்றது. இங்கே காண வேண்டிய சிறந்த இடங்கள்.

1. இராம பிரான் பிறந்த இடம்.
2. அயோத்தி பீடம்.
3. இரத்தின மண்டபம்.
4. தங்க மண்டபம்.
5. தர்மஸ்தானம்.
6. அக்கினி குண்டம்.
7. உத்தியானவனம்.
8. அகத்திய ஆசிரமம்.
9. வசிஷ்ட ஸ்தானம்.
10. அனுமந்த குண்டம்.
11. சுசேந்திர குண்டம்.
12. சீதாகூபம்.
13. சக்கர தீர்த்தம்.

14. ருணவிமோசன தீர்த்தம்.
15. வான்மீகி தீர்த்தம்.
16. நாராயணகுண்டம்.
17. தங்க இராமர்.

அயோத்தியில் நாட்டுக்கோட்டை நகரத்தார்க்குப் பெரிய சத்திரம் இருக்கின்றது. மற்றும் அறச் சாலைகள் நிறைய இருக்கின்றன.

அயோத்திக்கு அண்மையில் சுமார் 10 கல் அளவில் இராமபிரானின் பாதுகையை வைத்துப் பரதன் அரசாண்ட நந்திக் கிராமம் இருக்கிறது.

பெரியாழ்வார்

மைத்தகுமா மலர்க்குழலாய்!
 வைதேவீ! விண்ணப்பம்.
ஒத்தபுகழ் வானரக்கோன்
 உடன்இருந்து நினைத்தேட.
அத்தகுசீர் அயோத்தியர்கோன்
 அடையாளம் இவைமொழிந்தான்;
இத்தகையால் அடையாளம்
 ஈதுஅவன்கைம் மோதிரமே.

குலசேகராழ்வார்

அங்கண்நெடு மதிள்புடைசூழ் அயோத்தி என்னும்
 அணிநகரத்து உலகுஅனைத்தும் விளக்கும்சோதி
வெங்கதிரோன் குலத்துக்குஓர் விளக்காய்த் தோன்றி
 விண்முழுதும் உயக்கொண்ட வீரன் தன்னை,
செங்கண்நெடுங் கருமுகிலை, இராமன் தன்னை,
 தில்லைநகர்த் திருச்சித்ர கூடம் தன்னுள்
எங்கள்தனி முதல்வனைஎம் பெருமான் தன்னை,
 என்றுகொலோ கண்குளிரக் காணு நாளே!

### தொண்டரடிப்பொடியாழ்வார்

மேட்டிள மேதிகள் தளைவிடும் ஆயர்
வேய்ங்குழல் ஓசையும், விடைமணிக் குரலும்,
ஈட்டிய இசைதிசை பரந்தன; வயலுள்
இரிந்தன சுரும்பினம்; இலங்கையர் குலத்தை
வாட்டிய வரிசிலை வானவர் ஏறே!
மாமுனி வேள்வியைக் காத்து,அவ பிரதம்
ஆட்டிய அடுதிறல் அயோத்திஎம் அரசே!
அரங்கத்துஅம் மா!பள்ளி எழுந்துஅரு ளாயே.

### திருமங்கையாழ்வார்

கவள யானை பாய்புர வித்தே ரோடுஅ ரக்கர்எல்லாம்
துவள வென்ற வென்றி யாளன் தன்தமர் கொல்லாமே
தவள மாடம் நீடு அயோத்தி காவலன் தன்சிறுவன்
குவளை வண்ணன் காண ஆடீர் குழமணி தூரமே.

### நம்மாழ்வார்

கற்பார் இராம பிரானைஅல் லால்மற்றும் கற்பரோ?
புற்பா முதலாப் புல்எறும்பு ஆதிஒன்று இன்றியே
நற்பால் அயோத்தியில் வாழும் சராசரம் முற்றவும்
நற்பாலுக்கு உய்த்தனன் நான்முக னார்பெற்ற நாட்டுளே.

### கம்பர்

மூலமும் நடுவும் ஈறும்
இல்லதோர் மும்மைத் தாய
காலமும் கணக்கும் நீத்த
காரணன் கைவில் ஏந்தி,
சூலமும் திகிரி சங்கும்
கரகமும் துறந்து தொல்லை
ஆலமும் மலரும் வெள்ளிப்
பொருப்பும்விட்டு அயோத்தி வந்தான்.

இராமலிங்க சுவாமிகள்

கலைக்கடலே! கருணைநெடும் கடலே! கானம்
கடந்ததடம் கடலே!என் கருத்தே! ஞான
மலைக்கண்எழும் சுடரே!வான் சுடரே! அன்பர்
மனத்துஒளிரும் சுயம்சுடரே! மணியே! வானோர்
தலைக்கண்உறு மகுடசிகா மணியே! வாய்மைத்
தயரதன்தன் குலமணியே! தமியேன் உள்ளம்
நிலைக்கண்உறும் சிராம வள்ள லே!என்
நிலைஅறிந்தும் அருளஇன்னும் நினைந்தி லாயே.

## 99. நைமிசாரணியம்

### தேவராசன்–புண்டரீகவல்லி

வழிபட்டநாள் :

திருமங்கையாழ்வார் 10

இரயில் நிலையம். (Nimisar) லக்னௌ பாலமு (Lucknow-Balamu) ஆகிய இரண்டு சந்திப்புக்கும் இடையில் சாண்டிலா (Sandila) என்னும் இரயில் நிலையத்திலிருந்து வடக்கே 25 கல் தொலைவு. நைமிசாரணியம் இரயில் நிலையத்திலிருந்து இத் தலம் இரண்டு கல் தொலைவு.

இங்குக் கோயில் எதுவுமில்லை. காட்டையே கடவுளாக வணங்குகின்றனர்.

இஃது சூதபுராணிகர் பதினெண் புராணமும் செய்த இடம் என்ப. சூதபுராணிகர் மடமும், வானமாமலை மடமும் இருக்கின்றன.

திருமங்கையாழ்வார்

வம்புஉலாம் கூந்தல் மனைவியைத் துறந்து
பிறர்பொருள், தாரம்என்று இவற்றை
நம்பினார் இறந்தால் நமன்தமர் பற்றி.
ஏற்றிவைத்து. எரிஎழு கின்ற

செம்பினால் இயன்ற பாவையை, 'பாவீ!
தழுவு'என மொழிவதற்கு அஞ்சி,
நம்பனே! வந்துஉன் திருவடி அடைந்தேன்
நைமிசா ரணியத்துள் எந்தாய்;

# 100. சாளக்கிராமம்

## ஸ்ரீ மூர்த்திப்பெருமாள்–ஸ்ரீ தேவிநாச்சியார்

வழிபட்டநாள்:

1. பெரியாழ்வார் 2; 2. திருமங்கையாழ்வார் 10; (ஆக 12.)

இது நேபாள நாட்டில் இருக்கிறது. நேபாள நாட்டின் தலைநகராகிய காட்மாண்டுவுக்கு, பாட்னாவிலிருந்தும், கல்கத்தா வினின்றும் விமானத்தில் செல்லலாம். காட்மாண்டு நகரத்திலிருந்து இத்தலம் 80 கல் தொலைவு. நடந்துதான் செல்ல வேண்டும். வேறு வழியில்லை.

ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் நேபாளத்திலுள்ள காட்மாண்டு நகரம் சென்று. அங்குள்ள பசுபதி நாதர் என்ற சிறப்பு வாய்ந்த சிவபெருமானை வணங்கிய ராய.சொ. எவ்வளவோ முயன்றும் சாளக் கிராமம் என்ற இத்தலத்திற்கு நடந்து செல்ல முடியாமையால் செல்லவில்லை.

நின்ற திருக் கோலம்; வடக்கே திருமுக மண்டலம்.

சாளக்கிராமம் என்ற நீரில் உலவுகின்ற பொருள் இங்கு கிடைப்பதாகச் சொல்லப் பெறுகின்றது.

பெரியாழ்வார்

பாலைக் கறந்து.அடுப்புஏற வைத்துப்
பல்வளை யாள்என் மகள்இருப்ப,
மேலைஅ கத்தே நெருப்பு வேண்டிச்
சென்று.இறைப் பொழுதுஅங்கே பேசிநின்றேன்;

சாளக்கி ராம முடைய நம்பி
சாய்த்துப் பருகிட்டு போந்துநின்றான்.
ஆலைக்க ரும்பின் மொழிஅ னைய
அசோதைநங் காய்!உன் மகனைக்கூவாய்!

**திருமங்கையாழ்வார்**

கலையும், கரியும், பரிமாவும்
திரியும் கானம் கடந்துபோய்
சிலையும், கணையும் துணையாகச்
சென்றான் வென்றிச் செருக்களத்து.
மலைகொண்டு அலைநீர் அணைகட்டி,
மதிள்நீர் இலங்கை வாள்அரக்கர்
தலைவன் தலைபத்து அறுத்துஉகந்தான்
சாளக் கிராமம் அடைநெஞ்சே!

## 101. வதரியாச்சிரமம்

### (பதரிகாச்ரமம்)

### பதரிநாராயணன்–அரவிந்தநாயகி

**வழிபட்டநாள் :**

1. பெரியாழ்வார் 1; 2. திருமங்கையாழ்வார் 21; (ஆக 22)

அரித்துவாரத்திலிருந்து ரிஷிகேசம் 15 கல்; அங்கிருந்து தேவப்பிரயாகை 44 கல். அதுவரைச் சாலை இருக்கிறது. பஸ்ஸிலோ காரிலோ செல்லலாம். தேவப்பிரயாகையிலிருந்து 124 மைல். பல மைல் நடந்து செல்ல வேண்டும். இது இமயமலையிலுள்ள தலங்களில் ஒன்று.

இருந்த திருக்கோலம்; கிழக்கே திருமுக மண்டலம்.

பெரியாழ்வார்

வடதிசை மதுரை, சாளக்கி ராமம்,
வைகுந்தம், துவரை, அயோத்தி,
இடம்உடை வதரி இடவகை உடைய
எம்புரு டோத்தமன் இருக்கை,
தடவரை அதிரத் தரணிவிண்டு இடியத்
தலைப்பற்றிக் கரைமரம் சாடி,
கடலினைக் கலங்கக் கடுத்துஇழி கங்கைக்
கண்டம்என் னும்கடி நகரே.

திருமங்கையாழ்வார்

பீளை சோரக் கண்இ டுங்கிப் பித்துஎழ மூத்து,இருமி,
தாள்கள் நோவத் தம்மில் முட்டித் தள்ளி நடவாமுன்
காளை ஆகிக்கன்று மேய்த்துக் குன்றுஎடுத்துஅன்றுநின்றான்
வாளை பாயும் தண்த டம்சூழ் வதரி வணங்குதுமே.

## 102. கண்டம் என்னும் கடிநகர்

### நீலமேகப்பெருமான்–புண்டரீகவல்லி

வழிபட்டநாள் :

பெரியாழ்வார் 11

ஹரித்துவாரத்திலிருந்து 59 மைல். கார்ச்சாலை இருக்கின்றது. இது இமயமலையிலுள்ள தலங்களில் ஒன்று. நின்ற திருக்கோலம்; கிழக்கே திருமுக மண்டலம்.

பெரியாழ்வார்

தங்கையை மூக்கும், தமையனைத் தலையும்
தடிந்தஎம் தாச ரதிபோய்
எங்கும்தன் புகழா இருந்துஅரசு ஆண்ட
எம்புரு டோத்தமன் இருக்கை,
கங்கைகங் கைஎன்ற வாசகத் தாலே
கடுவினை களைந்திட கிற்கும்
கங்கையின் கரைமேல் கைதொழ நின்ற
கண்டம்என் னும்கடி நகரே.

# 103. திருப்பிரிதி

## (ஜோஷிமடம்)

## பரமபுருடன்–பரிமளவல்லி

**வழிபட்டநாள் :**

**திருமங்கையாழ்வார் 10**

தேவப் பிரயாகையிலிருந்து 106 மைல். இது இமய மலைத் தலங்களுள் ஒன்று.

கிடந்த திருக்கோலம்; கிழக்கே திருமுக மண்டலம்.

**திருமங்கையாழ்வார்**

ஓதி ஆயிர நாமங்கள் உணர்ந்தவர்க்கு
உறுதுயர் அடையாமல்
ஏதம் இன்றிநின்று அருளும்நம் பெருந்தகை
இருந்தநல் இமயத்து.
தாது மல்கிய பிண்டிவிண்டு அலர்கின்ற
தழல்புரை எழில்நோக்கி.
பேதை வண்டுகள் எரிஎன வெருவரு
பிருதிசென்று அடைநெஞ்சே!

# 104. துவாரகை

## கலியாணநாராயணன்–கலியாணநாச்சியார்

**வழிபட்டநாள் :**

**1. பெரியாழ்வார் 5; 2. ஆண்டாள் 4;**
**3. திருமழிசையாழ்வார் 1; 4. திருமங்கையாழ்வார் 2;**
**5. நம்மாழ்வார் 1. (ஆக 13)**

பம்பாயிலிருந்து கடல் மார்க்கம் 180 கல். இருப்புப் பாதை மார்க்கம் 550 கல். விமானத் திலும் செல்லலாம்.

இருந்த திருக்கோலம்; மேற்கே திருமுக மண்டலம்.

இது கண்ணபிரான் வாழ்ந்த சிறப்புடைய பதி. வட மதுரையிலிருந்து கண்ணன் அதைவிட்டுத் துவாரகையை அடைந்தான் என்ப.

பெரியாழ்வார்

பதினாறாம் ஆயிரவர் தேவிமார்
  பணிசெய்யத் துவரை என்னும்
மதில்நா யகர்ஆகி வீற்றிருந்த
  மணவாளர் மன்னு கோயில்,
புதுநாள் மலர்க்கமலம் எம்பெருமான்
  பொன்வயிற்றில் பூவே போல்வான்
பொதுநா யகம்பாவித்து இறுமாந்து
  பொன்சாய்க்கும் புனல்அ ரங்கமே

ஆண்டாள்

கூட்டில் இருந்துகிளி எப்போதும்
  'கோவிந்தா! கோவிந்தா!' என்றுஅழைக்கும்
ஊட்டக் கொடாது செறுப்பன்ஆகில்
  'உலகுஅளந் தான்!'என்று உயரக்கூவும்;
நாட்டில் தலைப்பழி எய்திஉங்கள்
  நன்மை இழந்து தலையிடாதே.
சூட்டுஉயர் மாடங்கள் சூழ்ந்துதோன்றும்
  துவரா பதிக்குஎன்னை உய்த்திடுமின்.

திருமழிசையாழ்வார்

சேயன் அணியன் சிறியன் மிகப்பெரியன்
ஆயன் துவரைக்கோ னாய்நின்ற-மாயன்,அன்று
ஓதிய வாக்குஅதனைக் கல்லார், உலகத்தில்
ஏதிலராய் மெய்ஞ்ஞானம் இல்.

**திருமங்கையாழ்வார்**

*கட்டேறு நீள்சோலைக் காண்டவத்தைத் தீமூட்டி*
*விட்டானை, மெய்யம் அமர்ந்த பெருமானை,*
*மட்டேறு கற்பகத்தை மாதர்க்காய், வண்துவரை*
*நட்டானை நாடி நறையூரில் கண்டேனே.*

**நம்மாழ்வார்**

*அன்னைஎன் செய்யில்என்ஊர்என் சொல்லில்என்தோழிமீர்!*
*என்னை இனிஉமக்கு ஆசை இல்லை அகப்பட்டேன்;*
*முன்னை அமரர் முதல்வன் வண்துவ ராபதி*
*மன்னன், மணிவண் ணன்வாசு தேவன் வலையுளே.*

# 105. வடமதுரை

## கோவர்த்தனஈசன்–சத்தியபாமை

**வழிபட்டநாள் :**

1. பெரியாழ்வார் 4; 2. ஆண்டாள் 6;
3. தொண்டரடிப்பொடியாழ்வார் 1;
4.திருமங்கையாழ்வார் 4;
5. நம்மாழ்வார் 10. (ஆக 25)

தில்லிக்குத் தெற்கே 80 கல் தொலைவிலுள்ள மதுராஇரயில் நிலையத்திற்கு அண்மையில் யமுனை ஆற்றின் கரையில் இத்தலம் இருக்கின்றது.

நின்ற திருக்கோலம்; கிழக்கே திருமுக மண்டலம்.

கண்ணன் பிறந்து, வளர்ந்து ஆடல் புரிந்த திருத்தலம் இது.

இத்தலத்திற்கு 6 மைலில் பிருந்தாவனமும், கிழக்கே 4 மைலில் கோகுலமும், தெற்கே 9 மைலில் கோவர்த்தன கிரியும் இருக்கின்றன.

### பெரியாழ்வார்

நான்ஏதும் உன்மாயம் ஒன்றும்அறியேன்
நமன்தமர் பற்றி நலிந்திட்டு. இந்த
ஊனே புகேஎன்று ஓதும் போதுஅங்கு
ஏதும்நான் உன்னை நினைக்க மாட்டேன்;
வான்ஏய் வானவர் தங்கள் ஈசா!
மதுரைப் பிறந்தமா மாய னே.என்
ஆனாய்நீ என்னைக் காக்க வேண்டும்
அரங்கத்து அரவணைப் பள்ளி யானே!

### ஆண்டாள்

மாயனை. மன்னும் வடமதுரை மைந்தனை.
தூய பெருநீர் யமுனைத் துறைவனை.
ஆயர் குலத்தினில் தோன்றும் அணிவிளக்கை.
தாயைக் குடல்விளக்கம் செய்ததா மோதரனை.
தூயோமாய் வந்துநாம் தூமலர்கள் தூய்த்தொழுது
வாயினால் பாடி மனத்தினால் சிந்திக்க.
போய பிழையும் புகுதருவான் நின்றனவும்
தீயினில் தூசாகும்; செப்பேல்ஓர் எம்பாவாய்.

### தொண்டரடிப்பொடியாழ்வார்

வளவுஎழும் தவள மாட
மதுரைமா நகரம் தன்னுள்
கவளமால் யானை கொன்ற
கண்ணனை. அரங்க மாலை.
துவளத்தொண்டு ஆய தொல்சீர்த்
தொண்டர் அடிப்பொ டிசொல்
இளையபுன் கவிதை யேலும்
எம்பிராற்கு இனிய வாறே!

திருமங்கையாழ்வார்

மன்னும் மதுரை வசுதேவர் வாழ்முதலை,
நன்நறையூர் நின்ற நம்பியை, வம்புஅவிழ்தார்
கன்னவிலும் தோளான் கலியன் ஒலிவல்லார்
பொன்னுலகில் வானவர்க்குப் புத்தேளிர் ஆகுவரே.

நம்மாழ்வார்

கண்ணன் அல்லால் இல்லை கண்டீர் சரண்அது நிற்கவந்து
மண்ணின் பாரம்நீக்கு தற்கே வடமது ரைப்பிறந்தான்;
திண்ணமாநும் உடைமை உண்டேல் அவன்அடி சேர்ந்துஉய்ம்மினோ
எண்ண வேண்டா;நும்மது யாதும் அவன் அன்றிமற்று இல்லையே.

## 106. திரு ஆய்ப்பாடி

## (கோகுலம்)

## நவமோகனகிருஷ்ணன்–ருக்மணிப்பிராட்டி

வழிபட்டநாள் :

1. பெரியாழ்வார் 10; ஆண்டாள் 5;

3. திருமங்கையாழ்வார் 7. ஆக 22.

மதுரா இரயில் நிலையத்திற்குத் தென்கிழக்கே 4 கல் தொலைவில் யமுனை ஆற்றங் கரையில் இருக்கின்றது.

நின்ற திருக்கோலம்; கிழக்கே திருமுக மண்டலம்.

இது கண்ணன் வளர்ந்த இடம். பலராமன் பிறந்த இடம்.

பெரியாழ்வார்

புவியுள்நான் கண்டதுஓர் அற்புதம் கேளீர்!
பூணிமேய்க் கும்இளம் கோவலர் கூட்டத்து

அவையுள், நாகத்துஅணை யான்குழல் ஊத
அமர லோகத்துஅள வும்சென்று இசைப்ப,

அவிஉணா மறந்து வானவர் எல்லாம்
ஆயர் பாடிநிறை யப்புகுந்து ஈண்டி,

செவியுள் நாவின் சுவைகொண்டு மகிழ்ந்து,
கோவிந்த னைத்தொடர்ந்து என்றும்வி டாரே.

**ஆண்டாள்**

அல்லல் விளைத்த பெருமானை,
 ஆயர் பாடிக்கு அணிவிளக்கை.
வில்லி புதுவை நகர்நம்பி
 விட்டு சித்தன் வியன்கோதை.
வில்லைத் தொலைத்த புருவத்தாள்
 வேட்கை உற்று மிகவிரும்பும்
சொல்லைத் துதிக்க வல்லார்கள்
 துன்பக் கடலுள் துவளாரே.

**திருமங்கையாழ்வார்**

பூண்முலைமேல் சாந்துஅணியாள்; பொருகயல்கண்
 மைஎழுதாள்; பூவை பேணாள்;
ஏண்அறியாள் எத்தனையும், 'எம்பெருமான்
 திருஅரங்கம் எங்கே?' என்னும;
நாள்மலராள் நாயகனாய் நாம்அறிய
 ஆய்ப்பாடி வளர்ந்த நம்பி
ஆண்மகனாய் என்மகளைச் செய்தனகள்
 அம்மனைமீர்! அறிகி லேனே.

# 107. திருப்பாற்கடல்

## பாற்கடல்நாதன்–கடல்மகள்

வழிபட்டநாள் :

1.பெரியாழ்வார் 5; 2. ஆண்டாள் 3;
3. குலசேகராழ்வார் 2; 4. திருமழிசையாழ்வார் 13;
5. தொண்டரடிப்பொடியாழ்வார் 1;
6. திருமங்கையாழ்வார் 11; 7. பொய்கையாழ்வார் 1;
8. பூதத்தாழ்வார் 2; 9. பேயாழ்வார் 4;
10. நம்மாழ்வார் 9. (ஆக 51)

இது யோகிகளும், முனிவர்களும், அமரர்களும் இருந்த இடத்திலேயே இருந்து, எண்ணி வழிபாடு செய்யும் இடம்.

### பெரியாழ்வார்

பைஅர வின்அணைப் பாற்க டலுள்
பள்ளி கொள்கின்ற பரம மூர்த்தி.

உய்ய உலகு படைக்க வேண்டி
உந்தியில் தோற்றி னாய்,நான் முகனை;

வைய மனிசரைப் பொய்என்று எண்ணிக்
கால னையும் உடனே படைத்தாய்;

ஐய! இனிஎன்னைக் காக்கவேண்டும்
அரங்கத்து அரவணைப் பள்ளி யானே!

### ஆண்டாள்

வையத்து வாழ்வீர்காள்! நாமும்நம் பாவைக்குச்
செய்யும் கிரிசைகள் கேளீரோ? பாற்கடலுள்
பையத் துயின்ற பரமன் அடிபாடி.
நெய்உண்ணோம்; பால்உண்ணோம்; நாட்காலே நீராடி,
மையிட்டு எழுதோம்; மலரிட்டு நாம்முடியோம்;
செய்யா தனசெய்யோம்; தீக்குறளை சென்றோதோம்;
ஐயமும் பிச்சையும் ஆம்தனையும் கைகாட்டி.
உய்யுமாறு எண்ணி உகந்தேலோர் எம்பாவாய்.

### குலசேகராழ்வார்

ஒண்பவள வேலை உலவுதண் பாற்கடலுள்
கண்துயிலும் மாயோன் கழல்இணைகள் காண்பதற்கு.
பண்பகரும் வண்டினங்கள் பண்பாடும் வேங்கடத்து.
செண்பகமாய் நிற்கும் திருஉடையேன் ஆவேனே.

### திருமழிசையாழ்வார்

பாலிற் கிடந்ததுவும் பண்டுஅரங்கம் மேயதுவும்
ஆலில் துயின்றதுவும் ஆர்அறிவார்–ஞாலத்து
ஒருபொருளை. வானவர்தம் மெய்ப்பொருளை. ஒப்பில்
அருபொருளை யான்அறிந்த வாறு?

### தொண்டரடிப்பொடியாழ்வார்

இனிதிரைத் திவலை மோத
எறியும்தண் பரவை மீதே

தனிகிடந்து அரசு செய்யும்
தாமரைக் கண்ணன் எம்மான்.

கனிஇருந்து அனைய செவ்வாய்க்
கண்ணனைக் கண்ட கண்கள்
பனிஅரும்பு உதிரும் ஆலோ
என்செய்கேன் பாவி யேனே!

### திருமங்கையாழ்வார்

ஊனிடைச் சுவர்வைத்து என்புதூண் நாட்டி,
உரோமம்மேய்ந்து ஒன்பது வாசல்
தானுடைக் குரம்பை பிரியும்போது உன்தன்
சரணமே சரணம்என்று இருந்தேன்;
தேனுடைக் கமலத் திருவினுக்கு அரசே!
திரைகொள்மா நெடுங்கடல் கிடந்தாய்!
நானுடைத் தவத்தால் திருவடி அடைந்தேன்,
நைமிசா ரணியத்துள் எந்தாய்!

### பொய்கையாழ்வார்

உரைமேற்கொண்டு என்உள்ளம் ஓவாது.எப் போதும்
வரைமேல் மரகதமே போல.–திரைமேல்
கிடந்தானைக் கீண்டானை, கேழலாய்ப் பூமி
இடந்தானை ஏத்தி எழும்.

### பூதத்தாழ்வார்

பரசு நறுமலரால் பாற்கடலான் பாதம்
புரிவார் புகழ்பெறுவர் போலாம்–புரிவார்கள்
தொல்அமரர் கேள்வித் துலங்குஒளிசேர் தோற்றத்து
நல்அமரர் கோமான் நகர்.

### பேயாழ்வார்

நன்குஓது நால்வேதத்து உள்ளான், நறவிரியும்
பொங்கோது அருவிப் புனல்வண்ணன்;–சங்குஓதப்
பாற்கடலான்; பாம்பணையின் மேலான்;பயின்றுஉரைப்பார்
நூற்கடலான்; நுண்அறிவி னான்.

### நம்மாழ்வார்

பாம்பணைமேல் பாற்கடலுள் பள்ளி அமர்ந்ததுவும்,
காம்பணைதோள் பின்னைக்கா ஏறுடன்ஏழ் செற்றதுவும்,
தேம்பணைய சோலை மராமரம்ஏழ் எய்ததுவும்,
பூம்பிணைய தண்துழாய்ப் பொன்முடிஅம் போர்ஏறே.

# 7. பரமபதம்

(1 தலம்)

# 108. பரமபதம்

## பரமபதநாதன்–பெரியபிராட்டியார்

வழிபட்டநாள் :

1. பெரியாழ்வார் 4; 2. ஆண்டாள் 1;
3. திருமழிசையாழ்வார் 2; 4. திருப்பாணாழ்வார் 1;
5. திருமங்கையாழ்வார் 1; 6. பொய்கையாழ்வார் 2;
7. பேயாழ்வார் 1; 8. நம்மாழ்வார் 24 (ஆக 36)

இது இன்ன இடம் என்று நம்மால் காண முடியாதது. இதற்கு வழி நாம் எப்படிச் சொல்வது?

மன, மொழி, மெய்களுக்கு எட்டா, எல்லாம் கடந்த ஒரு பொருள் இருக்கும் இடம் பரமபதம்.

பெரியாழ்வார்

தடவரைவாய் மிளிர்ந்துமின்னும்
தவளநெடும் கொடிபோல்,
சுடர்ஒளியாய் நெஞ்சின்உள்ளே
தோன்றும்என் சோதிநம்பீ!
வடதடமும் வைகுந்தமும்
மதிள்துவ ராபதியும்
இடவகைகள் இகழ்ந்திட்டுஎன்பால்
இடவகை கொண்டனையே.

ஆண்டாள்

தூமணி மாடத்துச் சுற்றும் விளக்குஎரிய.
தூமம் கமழத் துயில்அணைமேல் கண்வளரும்
மாமான் மகளே! மணிக்கதவம் தாள்திறவாய்;
மாமீர்! அவளை எழுப்பீரோ? உம்மகள்தான்

ஊமையோ? அன்றிச் செவிடோ? அனந்தலோ?
ஏமப் பெரும்துயில் மந்திரப் பட்டாளோ?
மாமாயன், மாதவன், வைகுந்தன் என்றுஎன்று
நாமம் பலவும் நவின்றுஏலோர் எம்பாவாய்.

### திருமழிசையாழ்வார்

ஏன்றேன் அடிமை; இழிந்தேன் பிறப்பு இடும்பை;
ஆன்றேன் அமரர்க்கு அமராமை;– ஆன்றேன்
கடன்நாடும் மண்ணாடும் கைவிட்டு, மேலை
இடநாடு காணஇனி.

### திருப்பாணாழ்வார்

அமலன் ஆதிபிரான் அடியார்க்கு என்னை ஆட்படுத்த
விமலன், விண்ணவர் கோன்,விரை ஆர்பொழில் வேங்கடவன்
நிமலன், நின்மலன், நீதி வானவன்,
நீள்மதிள் அரங்கத்து அம்மான்,திருக்
கமல பாதம்வந்துஎன் கண்ணின் உள்ளன ஒக்கின்றதே.

### திருமங்கையாழ்வார்

தொண்டெலாம் பரவி நின்னைத்
தொழுதுஅடி பணியுமாறு
கண்டு,தான் கவலை தீர்ப்பான்
ஆவதே பணியாய் எந்தாய்!
அண்டமாய் எண்தி சைக்கும்
ஆதியாய் நீதியான
பண்டமாம் பரம சோதி!
நின்னையே பரவு வேனே.

### பொய்கையாழ்வார்

உணர்வார்ஆர் உன்பெருமை? ஊழிதோறு ஊழி
உணர்வார்ஆர் உன்உருவம் தன்னை?–உணர்வார்ஆர்
விண்ணகத்தாய்! மண்ணகத்தாய்! வேங்கடத்தாய்! நால்வேதப்
பண்ணகத்தாய்! நீகிடந்த பால்?

## பேயாழ்வார்

(திருவிண்ணகர் தலப் பாடல் பார்க்க)

## நம்மாழ்வார்

'குடிஅடி யார்இவர் கோவிந்தன் தனக்கு' என்று
முடியுடை வானவர் முறைமுறை எதிர்கொள்ள,
கொடிஅணி நெடுமதிள் கோபுரம் குறுகினர்,
வடிவுடை மாதவன் வைகுந்தம் புகவே

## பெருந்தேவனார்

பொருப்புஅடைந்து தங்கள் புலன்ஐந்தும் செற்று,
நெருப்புஅடைந்து, நீர்அடைய வேண்டாம்;- விருப்புஅடைந்து
வைகுந்தம் சிந்தையிலே வைப்பார்க்கு மாதவனும்
வைகும்,தம் சிந்தையுளே வந்து.

சிவமயம்

## சென்று வந்த தேவர-பிரபந்தம் அல்லாத தலங்கள்

| தொடர் எண் | சிவத்தலம் |
|---|---|
| | **1. தேவார வைப்புத்தலம்** |
| 1 | குன்னடையூர் |
| 2 | இராப்பட்டீச்சுரம் |
| 3 | மணக்கால் |
| 4 | லால்குடி |
| 5 | கச்சிமயானம் |
| 6 | பேரூர் (கோவை) |
| | **2. திருவாசகத்தலம்** |
| 1 | திருப்பெருந்துறை |
| 2 | திருவாதவூர் |
| 3 | திருஉத்தரகோசமங்கை |
| 4 | பட்டமங்கலம் |
| | **3. திருவிசைப்பாத்தலம்** |
| 1 | திருச்சாட்டியக்குடி |
| 2 | கீழ்க்கோட்டூர்மணியம்பலம் |
| 3 | பன்னகதரு (முகத்தலை) |
| 4 | இராசராசேச்சுரம் (தஞ்சை) |
| 5 | கங்கைகொண்டசோழேச்சுரம் |
| 6 | திருவிடைக்கழி (முருகன்) |
| | **4. பிறசிவன்கோயில்** |
| 1 | திருத்துறைப்பூண்டி |
| 2 | மணலி |
| 3 | பொருள்வைத்தசேரி (சிக்கல்) |
| 4 | சோமநாதர் (ஆரூர்) |
| 5 | சுசீந்திரம் |
| 6 | செங்குன்றூர் (மலைநாடு) |

| தொடர் எண் | சிவத்தலம் (தொடர்ச்சி) |
|---|---|
| 7 | கோட்டயம் (மலைநாடு) |
| 8 | எட்டமானூர் („) |
| 9 | கழுத்திருத்தி („) |
| 10 | வைக்கம் („) |
| 11 | திருச்சூர் („) |
| 12 | பேரளம் |
| 13 | ஸ்ரீவில்லிபுத்தூர் (மடவார்வளாகம்) |
| 14 | திருத்தணிகாலூர் |
| 15 | கிருஷ்ணாபுரம் |
| 16 | சங்கரநயினார்கோயில் |
| 17 | திருவாமூர் (அப்பர் பிறந்த ஊர்) |
| 18 | அணிஅண்ணாமலை |
| 19 | முத்துப்பேட்டை |
| 20 | தில்லைவளாகம் |
| 21 | திங்களூர் (அப்பூதி அடிகள் ஊர்) |
| 22 | சித்தவடம் (சுந்தரர் தொடர்புடையது) |
| 23 | திருமங்கலம் (ஆனாயர் பிறந்ததலம்) |
| 24 | பாபநாசம் (108 சிவன்) |
| 25 | பூங்குடி |
| 26 | திருநின்றவூர் (பூசலார்பிறந்ததலம்) |
| 27 | கச்சபேசுரர் (காஞ்சி) |
| 28 | கயிலாயநாதர் („) |
| 29 | மகாநந்தி (ஆந்திர நாடு) |
| 30 | இளைமையாக்கினார்கோயில் (திருநீலகண்டர்) |
| 31 | நந்தியால் (ஆந்திர நாடு) |

திருமால்தலம்

| | |
|---|---|
| 1 | குருவாயூர் |
| 2 | உடுப்பி |
| 3 | மன்னார்குடி |
| 4 | குறையலூர் (மங்கைமன் பிறந்ததலம்) |
| 5 | மங்கைமடம் |

| தொடர் எண் | திருமால்தலம் (தொடர்ச்சி) |
|---|---|
| 6 | மண்டங்குடி (தொண்டரடிப்பொடி) |
| 7 | திருமழிசை (மழிசைப்பிரான்) |
| 8 | ஸ்ரீபெரும்புதூர் (இராமாநுசர்) |
| 9 | தில்லைவளாகம் (இராமர் கோயில்) |
| 10 | கும்பகோணம் (இராமசாமி கோயில்) |
| 11 | திருமுட்டம் (ஸ்ரீமுஷ்ணம்) |
| 12 | நாமக்கல் |
| 13 | பாப்பா கோயில் |

## அம்பிகைதலம்

| | |
|---|---|
| 1 | காமாட்சி (காஞ்சி) |
| 2 | பகவதி (கன்னியாகுமரி) |

## முருகன்தலம்

| | |
|---|---|
| 1 | திருச்செந்தூர் |
| 2 | பழநி |
| 3 | சுவாமிமலை |
| 4 | திருத்தணி |
| 5 | திருப்போரூர் |
| 6 | மயிலம் |
| 7 | எட்டிகுடி |
| 8 | எண்கண் |
| 9 | குமரன்கோயில் |
| 10 | வயலூர் |
| 11 | விரிஞ்சிபுரம் |
| 12 | வெண்ணெய்மலை |
| 13 | குமரகோட்டம் (காஞ்சி) |
| 14 | மஞ்சக்கொல்லை (சிக்கல்) |

| தொடர் எண் | அடியார்கள் கோயில் |
|---|---|
| 1 | அப்பர்-திருவாமூர் |
| 2 | அப்பர்-திருவொற்றியூர் |
| 3 | மணிவாசகர்-திருவாதவூர் |
| 4 | அம்மையார்-காரைக்கால் |
| 5 | ஆண்டாள்-வில்லிபுத்தூர் |
| 6 | கண்ணகி-கொடுங்கோளூர் |
| 7 | பரவை-ஆரூர் |
| 8 | பரதன்-இருஞாலக்குடா |
| 9 | அனுமன்-நாமக்கல் |
| 10 | பட்டினத்தார்-ஒற்றியூர் |
| 11 | மெய்கண்டார்-வெண்ணெய்நல்லூர் |
| 12 | தாயுமானார்-முகவை |
| 13 | தட்சிணாமூர்த்தி-ஆரூர் |
| 14 | திருகளர் ஆண்டவர்-திருக்களர் |

மொத்தம் சென்றுவந்த சிவத்தலம்

| | |
|---|---|
| தேவாரம் ... ... ... | 269 |
| வைப்பு ... ... ... | 6 |
| திருவாசகம் ... ... ... | 4 |
| திருவிசைப்பா ... ... ... | 5 |
| (முருகன் 1. நீற்க) | |
| பிறசிவன் ... ... ... | 31 |
| ஆக ... | 315 |

மொத்தம் சென்றுவந்த மால்தலம்

| | |
|---|---|
| பிரபந்தம் | 97 |
| பிற மால் | 13 |
| | 110 |

| | |
|---|---|
| சிவத்தலங்கள் ... ... ... | 315 |
| மால்தலங்கள் ... ... ... | 110 |
| முருகன் (திருவிசைப்பாஉள்பட) ... | 15 |
| அம்பிகைதலங்கள் ... ... | 2 |
| அடியார்தலங்கள் ... ... | 14 |
| ஆக ... | 456 |

## தேவாரத் தலங்களில் நகரத்தார் செய்த கோயில் திருப்பணி.

### 1. சோழ நாடு

| தொடர் எண் | தலம் | திருப்பணிச் செல்வர் | | தொகை |
|---|---|---|---|---|
| | | பெயர் | ஊர் | ரூ. |
| 1 | கோயில் (சிதம்பரம்) | சா. ராம. மு., சா. ராம. சித. நகரத்தாரும் | கானாடுகாத்தான் | 30,00,000 |
| 2 | திருவேட்களம் | சா. ராம. மு. ராம., கா. பெ. அ. பெ. | கானாடுகாத்தான் | 2,00,000 |
| 3 | நெல்வாயில் (சிவபுரி) | க. வீ. சொ. வீ. அழ.<br>க. வீ. மு. ப. கதி.<br>முத்து. அரு மு. அரு. | கோட்டையூர்<br>கோட்டையூர்<br>காரைக்குடி | 3,27,500 |
| 4 | திருக்கழிப்பாலை | ராம. அரு. அரு. | தேவகோட்டை | 61,000 |
| 5 | நல்லூர்ப்பெருமணம் (ஆச்சாள்புரம்) | பெரி. நா. நா. | காரைக்குடி | 25,000 |
| 6 | திருமயேந்திரப்பள்ளி | பழ சோம. | தேவகோட்டை | 27,000 |
| 7 | திருப்பல்லவனீச்சுரம் (காவிரிப்பூம்பட்டினம்) | வயிநாகரம் | அமராவதிபுதூர் | 2,00,000 |
| 8 | திருவெண்காடு | மு. ராம. சு. | தேவகோட்டை | 3,00,000 |

| | | | | |
|---|---|---|---|---|
| 9 | சீர்காழி | வயிநாகரம் | அமராவதிபுதூர் | 1,80,000 |
| 10 | திருக்கோலக்கா | ராம மெ. சித. வயி. | தேவகோட்டை | 3,50,000 |
| 11 | திருப்புள்ளிருக்குவேளூர் (வைத்தீசுரன் கோயில்) | கரு. தூ | கானாடுகாத்தான் | 75,000 |
| 12 | திருக்கண்ணார்கோயில் (குறுமாணக்குடி) | தெ. அரு சித. அரு.<br>அ. சி. நா. சி. | கண்டனூர்<br>கண்டனூர் | 3,00,000 |
| 13 | திருநின்றியூர் | ராம. அரு. அரு. | தேவகோட்டை | 1,60,000 |
| 14 | திருப்புன்கூர் | கரு. தூ. சித. | கானாடுகாத்தான் | 30,000 |
| 15 | நீடூர் | அரு. அ.<br>தெ. அரு. சித.<br>அ. சி. நா.<br>வெ. ஆ. தி. | அரிமளம்<br>கண்டனூர்<br>கண்டனூர்<br>தேவகோட்டை | 1,00,000 |
| 16 | நாரையூர் | க வீ. சொ. அழ., நகரத்தாரும் | கோட்டையூர் | 50,000 |
| 17 | கடம்பூர் (மேலைக்கடம்பூர்) | ராம. அரு. அரு. | தேவகோட்டை | 50,000 |
| 18 | கஞ்சனூர் | ராம. அரு. ராம. வெ. | தேவகோட்டை | 50,000 |
| 19 | திருவியலூர் | அ. ராம. அ. லெ. அ.<br>கரு. மெ. கதி. | தேவகோட்டை<br>தேவகோட்டை | 3,00,000 |
| 20 | இன்னம்பர் | சேவு. விசுவநாதன் செட்டியார் | சண்முகநாதபுரம் | 35,000 |

நகரத்தார் கோயில் திருப்பணி (தேவாரத்தலம் தொடர்ச்சி)–சோழநாடு

| தொடர் எண் | தலம் | திருப்பணிச் லெவர் — பெயர் | திருப்பணிச் லெவர் — ஊர் | தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 21 | திருப்புறம்பயம் (தட்சிணாமூர்த்தி சன்னிதி) | ராம. மெ. அரு. அரு. | தேவகோட்டை | 5,000 |
| 22 | திருவையாறு | உ. ராம. மெ. சுப. சேவு | தேவகோட்டை | 10,00,000 |
| 23 | அன்பிலாலந்துறை (அன்பில்) | ராம. சு. லெ. | கோனாபட்டு | 3,00,000 |
| 24 | திருப்பாற்றுறை | உ. அ. பெரி. மு. அரு. | பள்ளத்தூர் | 10,000 |
| 25 | திருவானைக்கா | சா. ராம. சித., நகரத்தாரும் | கானாடுகாத்தான் | 20,00,000 |
| 26 | கடம்பந்துறை (குழித்தலை) | பழ. அ. வேங்கடாசலம் செட்டியார் | தேவகோட்டை | 2,00,000 |
| 27 | திருப்பராய்த்துறை | வெ. வீர., நகரத்தாரும் | கானாடுகாத்தான் | 8,00,000 |
| 28 | முக்கீச்சுரம் (உறையூர்) | வீர. ராம. சித. முரு. நகரத்தாரும் | தேவகோட்டை | 4,00,000 |
| 29 | திருச்சிராப்பள்ளி | வீர. லெ. சின்னையா செட்டியார் | தேவகோட்டை | |
| | | அரு. சு. வே. காசிவிசுவநாதன் செட்டியார் | நாட்டரசன் கோட்டை | 50,000 |

| | | | | |
|---|---|---|---|---|
| 30 | எறும்பியூர் | ராம. வீர. மு. வீரப்பச் செட்டியார் | காரைக்குடி | 25,000 |
| 31 | மேலைத்திருக்காட்டுப்பள்ளி | லெ. அரு. லெ. | தேவகோட்டை | 25,000 |
| 32 | தென்குடித்திட்டை (திட்டை) | ராம. கு. ராம. இராமசாமி செட்டியார் | பலவான்குடி | 3,00,000 |
| 33 | குடமூக்கு | நாட்டுக்கோட்டை நகரத்தார் | | 1,50,000 |
| 34 | குடந்தைக்காரோணம் | நாட்டுக்கோட்டை நகரத்தார் | கும்பகோணம் | 85,000 |
| 35 | திருநாகேசுரம் | அ. அரு. அண்ணாமலை செட்டியார் | அரிமளம் | 50,000 |
| 36 | திருவிடைமருதூர் | மெ. லெ. மெ. நா. இராமநாதன் செட்டியார் | தேவகோட்டை | 8,00,000 |
| 37 | வைகன்மாடக்கோவில் | ராம. மெ. லெ. ராம. இராமநாதன் செட்டியார் | தேவகோட்டை | 1,50,000 |
| 38 | திருத்துருத்தி | ராம. அரு. ராம. வெ. | தேவகோட்டை | 50,000 |
| 39 | திருமயிலாடுதுறை (மாயூரம்) | அழ. வீர. பெ. வீர. | தேவகோட்டை | 22,00,000 |
| 40 | திருவிளநகர் | ராம. அரு. அரு. | தேவகோட்டை | 2,00,000 |
| 41 | திருவேட்டக்குடி | ராம. மெ. லெட்சுமணன் செட்டியார் | தேவகோட்டை | 2,00,000 |

## நகரத்தார் கோயில் திருப்பணி (தேவாரத்தலம் தொடர்ச்சி)–சோழநாடு

| தொடர் எண் | தலம் | திருப்பணிச் செல்வர் | | தொகை |
|---|---|---|---|---|
| | | பெயர் | ஊர் | ரூ. |
| 42 | திருத்தெளிச்சேரி | சேவு. ராம.<br>அ. வயி. அ. நா. சோம. | தேவகோட்டை<br>தேவகோட்டை | 2,00,000 |
| 43 | தருமபுரம் | அரு. அரு. சோம. | தேவகோட்டை | 75,000 |
| 44 | அம்பர்மாகாளம் | க. ப. குமரப்ப செட்டியார் | பள்ளத்தூர் | 1,50,000 |
| 45 | திலதைப்பதி | ராம. மெ. லெ. இராமநாதன் செட்டியார் | தேவகோட்டை | 1,50,000 |
| 46 | திருவீழிமிழலை | ராம. அரு. அரு. அருணாசலம் செட்டியார் | தேவகோட்டை | 50,000 |
| 47 | வன்னியூர் | ராம. மெ. சித. வயி. | தேவகோட்டை | 70,000 |
| 48 | அரிசிற்கரைப்புத்தூர் | ராம. மெ. லெ. இராமநாதன் செட்டியார்<br>மெ. மு. பழ. பழநியப்ப செட்டியார் | தேவகோட்டை<br>நேமுத்துப்பட்டி | 1,50,000 |
| 49 | சிவபுரம் | சேவு. லெ. லெ. | தேவகோட்டை | 2,00,000 |
| 50 | கலயநல்லூர் (சாக்கோட்டை) | முத்த. வெ. வெள்ளையன் செட்டியார் | காரைக்குடி | 15,000 |

| | | | | |
|---|---|---|---|---|
| 51 | திருவிற்குடி | சொ. மு. அ. மெ. | பள்ளத்தூர் | 6,00,000 |
| 52 | திருச்செங்காட்டங்குடி | மெ. செ. | காரைக்குடி | 25,000 |
| 53 | திருமருகல் | ராம. மெ. சித. வயி. | தேவகோட்டை | 2,00,000 |
| 54 | திருச்சாத்தமங்கை | பி கு. நா. | கடியாபட்டி | 7,00,000 |
| 55 | நாகைக்காரோணம் | நகரத்தார் | நாகைப்பட்டினம் | 5,00,000 |
| 56 | சிக்கல் | கருமுத்து குடும்பத்தார் | ஆ. தெற்கூர் | 10,00,000 |
| 57 | கீழ்வேளூர் | மெ. ராம. அ. | தேவகோட்டை | 35,000 |
| 58 | பள்ளியின் முக்கூடல் (அரியான்பள்ளி) | அழ. சுப. சு. சுப்பையா செட்டியார் | தேவகோட்டை | 60,000 |
| 59 | திருவாரூர் | ராம. அரு. அரு. உல. சுயி. | தேவகோட்டை சக்கந்தி | 5,00,000 |
| 60 | திருவிளமர் | வீர. லெ. சின்னையா செட்டியார் | தேவகோட்டை | 60,000 |
| 61 | கரவீரம் (கரையபுரம்) | ராம. அரு. அரு. ராம. அருணாசலம் செட்டியார் | தேவகோட்டை | 50,000 |
| 62 | பெருவேளூர் | ஷை | தேவகோட்டை | 50,000 |
| 63 | கடுவாய்க்கரைப்புத்தூர் | பழ. செ. குடும்பத்தார் | தேவகோட்டை | 3,00,000 |

நகரத்தார் கோயில் திருப்பணி (தேவாரத்தலம் தொடர்ச்சி)–சோழநாடு

| தொடர் எண் | தலம் | திருப்பணிச் செல்வர் பெயர் | திருப்பணிச் செல்வர் ஊர் | தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 64 | இரும்பூளை | பழ. செ., நகரத்தாரும் | தேவகோட்டை | 4,75,000 |
| 65 | அவளிவள்நல்லூர் | மெ. மெ. மெய்யப்ப செட்டியார்<br>மு. பெ. காசிச் செட்டியார்<br>க. வீ. சொ. அழகப்ப ஐயா | காரைக்குடி<br>நேமுத்துப்பட்டி<br>கோட்டையூர் | 1,00,000 |
| 66 | வெண்ணி | ராம. மெ. சித. வயி. | தேவகோட்டை | 1,00,000 |
| 67 | பாதாளீச்சுரம் | சி. கரு. சி. லெ. இலக்குமணன் செட்டியார் | ஒக்கூர் | 3,00,000 |
| 68 | திருக்களர் | வீரசேகர ஞான தேசிக சுவாமிகள், நகரத்தாரும் | கோவிலூர் | 4,50,000 |
| 69 | திருஉசாத்தானம் | அழ. அரு. காசிச் செட்டியார் | கொத்தமங்கலம் | 1,00,000 |
| 70 | தண்டலைநீள்நெறி | ராம. அரு. அரு. அருணாசலம் செட்டியார் | தேவகோட்டை | 2,00,000 |
| 71 | திருவெண்துறை | ராம. அரு. அரு. சோம. | தேவகோட்டை | 1,50,000 |
| 72 | கொள்ளம்புதூர் | பெ. ராம. இராமன் செட்டியார் | நச்சாந்துப்பட்டி | 6,00,000 |

| | | | | |
|---|---|---|---|---|
| 73 | பேரெயில் | அ. ராம. கதி. இராமசாமி செட்டியார் | காரைக்குடி | 1,00,000 |
| 74 | திருக்கொள்ளிக்காடு | மெ. வகையார் | தேவகோட்டை | 50,000 |
| 75 | திருத்தெங்கூர் | பெ. அழ. வீரப்ப செட்டியார் | கண்டனூர் | 2,50,000 |
| 76 | திருநெல்லிக்கா | வீர. ராம. சு. சொக்கலிங்கம் செட்டியார் | தேவகோட்டை | 70,000 |
| | | சு. பெரி. சு. சுப்பிரமணியன் செட்டியார் | அளகாபுரி | 8,000 |
| | | பழ. வ. முத்து அடைக்கப்ப செட்டியார் | அரிமளம் | 16,000 |
| 77 | திருநாட்டியத்தான்குடி | வெ. தெ. | தேவகோட்டை | 1,50,000 |
| 78 | திருக்காறாயில் | முத்து. கரு. அரு.<br>முத்து. க. மா.<br>முத்து. க. அ. லெ. | தேவகோட்டை | 5,00,000 |
| 79 | கன்றாப்பூர் | முத்து. க. அ. ராம. | தேவகோட்டை | 30,000 |
| 80 | வலிவலம் | ராம. அரு. அரு. ராம. | தேவகோட்டை | 30,000 |
| 81 | அகத்தியான்பள்ளி | மெ. அரு. நா.<br>மெ. அரு. அரு. | தேவகோட்டை | 2,00,000 |

நகரத்தார் கோயில் திருப்பணி (தேவாரத்தலம் தொடர்ச்சி)–சோழநாடு

| தொடர் எண் | தலம் | திருப்பணிச் செல்வர் | | தொகை |
|---|---|---|---|---|
| | | பெயர் | ஊர் | ரூ. |
| | அகத்தியான்பள்ளி | ராம.அரு. அரு. | தேவகோட்டை | 7,000 |
| | | பழ.சோம. | தேவகோட்டை | 30,000 |
| 82 | திருக்கோடி (குழகர்கோயில்) | பழ.சோம., வெ. ஆதி. | தேவகோட்டை | 50,000 |
| | | 2. ஈழநாடு | | |
| 83 | திருக்கேதீச்சுரம் | நகரத்தார் | கொழும்பு | 1,00,000 |
| | | 3. பாண்டிநாடு | | |
| 84 | ஆலவாய் (மதுரை) | வயிநாகரம் குடும்பத்தார் | அமராவதிபுதூர் | 25,00,000 |
| 85 | திரு ஆப்பனூர் | வயிநாகரம் நாகப்ப ஐயா, வேங்கடாசலம் ஐயா | அமராவதிபுதூர் | 1,37,000 |
| 86 | திருப்பரங்குன்றம் | வயிநாகரம் குடும்பத்தார் | அமராவதிபுதூர் | 2,00,000 |
| 87 | திரு ஏடகம் | உ. ராம. மெ. சு. | தேவகோட்டை | 7,00,00 |

| | | | | |
|---|---|---|---|---|
| 88 | திருப்புத்தூர் | வயிநாகரம் குடும்பத்தார் | அமராவதிபுதூர் | |
| | | க. ப. குமரப்ப செட்டியார் | பள்ளத்தூர் | 2,00,000 |
| | | பழ. கரு. குடும்பத்தார் | கண்டவராயன்பட்டி | |
| 89 | திருப்புனவாயில் | அழ. சுப பழ. குடும்பத்தார் | தேவகோட்டை | 2,60,000 |
| 90 | இராமேச்சுரம் | அழ. அரு. குடும்பத்தார் நகரத்தாரும் | தேவகோட்டை | 1,50,000 |
| 91 | திரு ஆடானை | ராம. அரு. அரு. அருணாசலம் செட்டியார் | தேவகோட்டை | 2,30,000 |
| | | அரு. அரு. சோம. | தேவகோட்டை | |
| | | ராம. அரு. அரு. ராம. அருணாசலம் செட்டியார் | தேவகோட்டை | 8,00,000 |
| 92 | திருக்கானப்பேர் (காளையார் கோயில்) | அழ. அரு. இராமசாமி செட்டியார் (ஜமீன்தார்) | தேவகோட்டை | 4,50,000 |
| | | தி. ராம. தி. கூஷ சு. குடும்பத்தார் | தேவகோட்டை | 1,75,000 |
| | | சி. கரு. ஆ. கண்ணப்ப செட்டியார் | ஒக்கூர் | 50,000 |
| | | வயிநாகரம் | அமராவதிபுதூர் | 1,00,000 |
| 93 | திருப்பூவணம் | உ. ராம. உ. மு., உ. வீர. | தேவகோட்டை | 4,50,000 |

## நகரத்தார் கோயில் திருப்பணி (தேவாரத்தலம் தொடர்ச்சி)–சோழநாடு

| தொடர் எண் | தலம் | திருப்பணிச் செல்வர் — பெயர் | திருப்பணிச் செல்வர் — ஊர் | தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 94 | திருச்சுழியல் | தி. அ. சு. அண்ணாமலை செட்டியார் | தேவகோட்டை | 4,00,000 |
| 95 | திருக்குற்றாலம் | வி. கரு. சித. சோம. பி.ச. அரு. | தேவகோட்டை | 5,00,000 |
| | | **4. கொங்குநாடு** | | |
| 96 | திருமுருகன்பூண்டி | நகரத்தார் | திருப்பூர் | 1,00,000 |
| 97 | திருப்பாண்டிக்கொடுமுடி | அழ. அரு. அருணாசலம் செட்டியார் | தேவகோட்டை | |
| | | சா. அ. இராமசாமி செட்டியார் | கானாடுகாத்தான் | |
| | | க. வெ. சிதம்பரம் செட்டியார் | கானாடுகாத்தான் | 5,00,000 |
| | | க. வெ. ராம. வெங்கடாசலம் செட்டியார் | கானாடுகாத்தான் | |
| 98 | கருவூர் | சா. ராம. மு., நகரத்தாரும் | கானாடுகாத்தான் | 6,50,000 |

| | | | | |
|---|---|---|---|---|
| | | 5. நடுநாடு | | |
| 99 | நெல்வாயில் அரத்துறை | ராம. அரு. அரு. ராம | தேவகோட்டை | 15,000 |
| 100 | கூடலை ஆற்றூர் | ராம. அரு. அரு. ராம. | தேவகோட்டை | 80,000 |
| 101 | திரு அதிகை | மெ. வகையார் | தேவகோட்டை | 20,000 |
| | | ராம. அரு. அரு. | தேவகோட்டை | |
| 102 | திருநாவலூர் | ராம. அரு. அரு. | தேவகோட்டை | 20,000 |
| 103 | திருமுதுகுன்றம் | வயிநாகரம் | அமராவதிபுதூர் | 6,00,000 |
| 104 | திருக்கோவலூர் | ராம. மெ. சித. வயி. | தேவகோட்டை | 2,50,000 |
| 105 | திருவெண்ணெய்நல்லூர் | வீர. ராம. அருணாசலம் செட்டியார் | தேவகோட்டை | |
| | | ராம. அரு. அரு. வகை | தேவகோட்டை | 50,000 |
| 106 | திருப்பாதிரிப்புலியூர் | தி. சொ., தி. நா., தி. அ. | கடியாபட்டி | 12,00,000 |
| 107 | திருமுண்டீச்சுரம் | வெ. அரு. வெ. | தேவகோட்டை | 1,50,000 |
| 108 | புறவார் பனங்காட்டூர் | கோவிலூரார் வீட்டு முத்து வீரப்ப செட்டியார், | | |
| | | உ. அ. உ. அ. முத்தையா செட்டியார், நகரத்தாரும் | பள்ளத்தூர் | 1,00,000 |
| 109 | திருவண்ணாமலை | நகரத்தார் | | 22,35,000 |

## நகரத்தார் கோயில் திருப்பணி (தேவாரத்தலம் தொடர்ச்சி)

| தொடர் எண் | தலம் | திருப்பணிச் செல்வர் — பெயர் | திருப்பணிச் செல்வர் — ஊர் | தொகை ரூ. |
|---|---|---|---|---|
| | | 6. தொண்டை நாடு | | |
| 110 | திருகச்சிஏகம்பம் | மெ. ராம. அ. முத்தையாசெட்டியார்<br>மெ. ராம. மெ. இலக்குமணன் செட்டியார் | தேவகோட்டை | 20,00,000 |
| | | வயி. ராம. அரு. | கண்டனூர் | 3,00,000 |
| 111 | திருக்கச்சிநெறிக் காரைக்காடு | ராம. மெ. மெய்யப்ப செட்டியார் | தேவகோட்டை | 70,000 |
| 112 | திருப்பனங்காட்டூர் | பெரி. எ. சொ. | தேவகோட்டை | 2,00,000 |
| 113 | திருமாற்பேறு | அழ. வீர. சித. | தேவகோட்டை | 2,00,000 |
| 114 | இலம்பையங்கோட்டூர் | பெ. மு. அ., உ. ராம. மெ. சுப. சேவு., நகரத்தார் | தேவகோட்டை | 50,000 |
| 115 | திருவிற்கோலம் | ராம. பெரி. பிச்சப்ப செட்டியார், நகரத்தாரும் | தேவகோட்டை | 2,00,000 |
| 116 | திருஆலங்காடு | பெ. மு. அ. குடும்பத்தினர் | கோட்டையூர் | 10,00,000 |
| 117 | திருவெண்பாக்கம் (பழைய கோயில்) | நகரத்தார் | | 50,000 |

| | | | | |
|---|---|---|---|---|
| 118 | திருக்கள்ளில் | ராம. அரு. அரு. ஏஜண்ட் தேனப்ப செட்டியார் | தேவகோட்டை | 15,000 |
| 119 | திருக்காளத்தி | மெ. அரு. நா. இராமநாதன் செட்டியார் மெ. அரு. அரு. அருணாசலம் செட்டியார் | தேவகோட்டை | 15,00,000 |
| 120 | திருவலிதாயம் | பழ. சு. அரு. சா. சபாபதி செட்டியார் | தேவகோட்டை | 50,000 |
| 121 | திருவான்மியூர் | முரு. சி. ராம. இராமன் செட்டியார், நகரத்தாரும் | தேவகோட்டை | 4,00,000 |
| 122 | திருவிடைச்சுரம் | வயிநாகரம் சென்னை ஏஜண்ட் நாராயணன் செட்டியார் சா. ராம. மு. | தேவகோட்டை | 50,000 |
| 123 | திருக்கழுக்குன்றம | நா. லெ. நா. நாராயணன் செட்டியார் | காரைக்குடி | |
| | | செ. ராம. ராம. ராமசாமி செட்டியார் | சண்முகநாதபுரம் | 2,00,000– |
| | | | ஆக | 4,35,29,500 |

## பிரபந்தத் தலங்களில் நகரத்தார் செய்த கோயில் திருப்பணி

| தொடர் எண் | தலம் | திருப்பணிச் செல்வர் | | தொகை ரூ. |
|---|---|---|---|---|
| | | பெயர் | ஊர் | |
| 1 | திருக்கண்ணபுரம் | தி. க வெ<br>நா. முரு. | கண்டனூர்<br>அரியக்குடி | 50,000 |
| 2 | தில்லைநகர் திருச்சித்திரகூடம் | சா. ராம: மு.,<br>நகரத்தார் | கானாடுகாத்தான் | 2,00,000 |
| 3 | அழகர் கோயில் | முத்து. கரு. வெ. | தேவகோட்டை | 50,000 |
| 4 | கூடல் அழகர் | முத்து. கரு. வெ. | தேவகோட்டை | 2,00,000 |
| 5 | ஸ்ரீவில்லிபுத்தூர் | சி. கரு. சி. சித. | ஒக்கூர் | 6,00,000 |
| 6 | காஞ்சி நிலாத்திங்கள் துண்டம் | மெ. ராம. அ.<br>ராம. மெ லெ. | தேவகோட்டை<br>தேவகோட்டை | 10,000 |
| | | | ஆக | 11,10,000 |

சிவமயம்

## அறுபத்துமூவர் வரலாற்றுச் சுருக்கம்

| தொடர் எண் | ஆழ்வார் பெயர் | குலம் | நாடு | ஊர் | மாதம் | பிறந்த நட்சத்திரம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | அதிபத்தர் | நுளையர் | சோழ | நாகப்பட்டினம் | ஆவணி | ஆயிலியம் |
| 2 | அப்பூதி அடிகள் | அந்தணர் | சோழ | திங்களூர் | தை | சதயம் |
| 3 | அமர்நீதியார் | வணிகர் | சோழ | பழையாறை | ஆனி | பூரம் |
| 4 | அரிவாள்தாயர் | வேளாளர் | சோழ | கணமங்கலம் | தை | திருவாதிரை |
| 5 | ஆனாயர் | இடையர் | சோழ | மங்கலவூர் | கார்த்திகை | அத்தம் |
| 6 | இசைஞானியார் | ஆதிசைவர் | நடு | திருநாவலூர் | சித்திரை | சித்திரை |
| 7 | இடங்கழியார் | அரசர் | கோனாடு | கொடும்பாளூர் | ஐப்பசி | கார்த்திகை |
| 8 | இயற்பகையார் | வணிகர் | சோழ | காவிரிப்பூம்பட்டினம் | மார்கழி | உத்திரம் |
| 9 | இளையான்குடிமாறர் | வேளாளர் | ... | இளையான்குடி | ஆவணி | மகம் |
| 10 | உருத்திர பசுபதியார் | அந்தணர் | சோழ | திருத்தலையூர் | புரட்டாதி | அசுவதி |
| 11 | எறிபத்தர் | ... | சோழ | கருவூர் | மாசி | அத்தம் |
| 12 | ஏயர்கோன் கலிக்காமர் | வேளாளர் | சோழ | திருப்பெருமங்கலம் | ஆனி | இரேவதி |

## அறுபத்துமூவர் வரலாற்றுச் சுருக்கம் (தொடர்ச்சி)

| தொடர் எண் | ஆழ்வார் பெயர் | குலம் | நாடு | ஊர் | மாதம் | முத்திபெற்ற நட்சத்திரம் |
|---|---|---|---|---|---|---|
| 13 | ஏனாதிநாதர் | சான்றார் | சோழ | எயினனூர் | புரட்டாதி | உத்திராடம் |
| 14 | ஐயடிகள் காடவர்கோன் | அரசர் | தொண்டை | காஞ்சிபுரம் | ஐப்பசி | மூலம் |
| 15 | கணநாதர் | அந்தணர் | சோழ | சீர்காழி | பங்குனி | திருவாதிரை |
| 16 | கணம்புல்லர் | .... | ... | இருக்குவேளூர் | கார்த்திகை | கார்த்திகை |
| 17 | கண்ணப்பர் | வேடர் | தொண்டை | உடுப்பூர் | தை | மிருகசீரிடம் |
| 18 | கலிக்கம்பர் | வணிகர் | நடு | பெண்ணாகடம் | தை | இரேவதி |
| 19 | கலியர் | செக்கார் | தொண்டை | திருஒற்றியூர் | ஆடி | கேட்டை |
| 20 | கழற்றுஅறிவார் | அரசர் | மலை | கொடுங்கோளூர் | ஆடி | சுவாதி |
| 21 | கழற்சிங்கர் | அரசர் | .... | .... | வைகாசி | பரணி |
| 22 | காரியார் | ... | சோழ | திருக்கடவூர் | மாசி | பூராடம் |
| 23 | காரைக்கால் அம்மையார் | வணிகர் | சோழ | காரைக்கால் | பங்குனி | சுவாதி |
| 24 | குங்கிலியக்கலயர் | அந்தணர் | சோழ | திருக்கடவூர் | ஆவணி | மூலம் |
| 25 | குலச்சிறையார் | ... | பாண்டி | மணமேற்குடி | ஆவணி | அநுடம் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 26 கூற்றுவர் | அரசர் | ... | களந்தை | ஆடி | திருவாதிரை |
| 27 கோச்செங்கட் சோழர் | அரசர் | சோழ | ... | மாசி | சதயம் |
| 28 கோட்புலியார் | வேளாளர் | சோழ | நாட்டியத்தான்குடி | ஆடி | கேட்டை |
| 29 சடையனார் | ஆதிசைவர் | நடு | திருநாவலூர் | மார்கழி | திருவாதிரை |
| 30 சண்டேசுரர் | அந்தணர் | சோழ | திருச்சேய்ஞலூர் | தை | உத்திரம் |
| 31 சத்தியார் | வேளாளர் | சோழ | வரிஞ்சியூர் | ஐப்பசி | பூசம் |
| 32 சாக்கியர் | வேளாளர் | ... | திருச்சங்கமங்கை | மார்கழி | பூராடம் |
| 33 சிறப்புலியார் | அந்தணர் | சோழ | திருஆக்கூர் | கார்த்திகை | பூராடம் |
| 34 சிறுத்தொண்டர் | மாமாத்திரர் | சோழ | செங்காட்டான்குடி | சித்திரை | பரணி |
| 35 சுந்தரர் | ஆதிசைவர் | நடு | திருநாவலூர் | ஆடி | சுவாதி |
| 36 செருத்துணையார் | வேளாளர் | சோழ | தஞ்சாவூர் | ஆவணி | பூசம் |
| 37 சோமாசிமாறர் | அந்தணர் | சோழ | திருஅம்பர் | வைகாசி | ஆயிலியம் |
| 38 தண்டியடிகள் | ... | சோழ | திருவாரூர் | பங்குனி | சதயம் |
| 39 திருக்குறிப்புத்தொண்டர் | ஏகாலியர் | தொண்டை | காஞ்சிபுரம் | சித்திரை | சுவாதி |
| 40 திருஞானசம்பந்தர் | அந்தணர் | சோழ | சீர்காழி | வைகாசி | மூலம் |
| 41 திருநாவுக்கரசர் | வேளாளர் | நடு | திருவாமூர் | சித்திரை | சதயம் |

அறுபத்துமூவர் வரலாற்றுச் சுருக்கம் (தொடர்ச்சி)

| தொடர் எண் | நாயன்மார் பெயர் | குலம் | நாடு | ஊர் | மாதம் | முத்திபெற்ற நட்சத்திரம் |
|---|---|---|---|---|---|---|
| 42 | திருநாளைப்போவார் | புலையர் | சோழ | ஆதனூர் | புரட்டாதி | உரோகிணி |
| 43 | திருநீலகண்டர் | குயவர் | சோழ | சிதம்பரம் | தை | விசாகம் |
| 44 | திருநீலகண்ட யாழ்ப்பாணர் | பாணர் | நடு | எருக்கத்தம்புலியூர் | வைகாசி | மூலம் |
| 45 | திருநீலநக்கர் | அந்தணர் | சோழ | சாத்தமங்கை | வைகாசி | மூலம் |
| 46 | திருமூலர் | இடையர் | சோழ | சாத்தனூர் | ஐப்பசி | அசுவதி |
| 47 | நமிநந்தி அடிகள் | அந்தணர் | சோழ | ஏமப்பேரூர் | வைகாசி | பூசம் |
| 48 | நரசிங்கமுனையரையர் | அரசர் | நடு | .... | புரட்டாதி | சதயம் |
| 49 | நின்றசீர் நெடுமாறர் | அரசர் | பாண்டி | மதுரை | ஐப்பசி | பரணி |
| 50 | நேசர் | சாலியர் | ... | காம்பீலி | பங்குனி | உரோகிணி |
| 51 | புகழ்ச் சோழர் | அரசர் | சோழ | உறையூர் | ஆடி | கார்த்திகை |
| 52 | புகழ்த்துணையார் | ஆதிசைவர் | ... | செருவிலிபுத்தூர் | ஆவணி | ஆயிலியம் |
| 53 | பூசலார் | அந்தணர் | தொண்டை | திருநின்றவூர் | ஐப்பசி | அநுடம் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 54 பெருமிழலைக்குறும்பர் | ... | ... | பெருமிழலை | ஆடி | சித்திரை |
| 55 மங்கையர்க்கரசியார் | அரசர் | பாண்டி | மதுரை | சித்திரை | உரோகிணி |
| 56 மானக்கஞ்சாறர் | வேளாளர் | .... | கஞ்சாறூர் | மார்கழி | சுவாதி |
| 57 முருகர் | அந்தணர் | சோழ | திருப்புகலூர் | வைகாசி | மூலம் |
| 58 முனையடுவார் | வேளாளர் | சோழ | திருநீடூர் | பங்குனி | பூசம் |
| 59 மூர்க்கர் | வேளாளர் | தொண்டை | திருவேற்காடு | கார்த்திகை | மூலம் |
| 60 மூர்த்தி | வணிகர் | பாண்டி | மதுரை | ஆடி | கார்த்திகை |
| 61 மெய்ப்பொருளார் | அரசர் | நடு | திருக்கோவலூர் | கார்த்திகை | உத்திரம் |
| 62 வாயிலார் | வேளாளர் | தொண்டை | திருமயிலாப்பூர் | மார்கழி | இரேவதி |
| 63 விறன்மிண்டர் | வேளாளர் | மலை | செங்குன்றூர் | சித்திரை | திருவாதிரை |

## பன்னிரு ஆழ்வார்கள் வரலாற்றுச் சுருக்கம்

| தொடர் எண் | ஆழ்வார் பெயர் | குலம் | நாடு | ஊர் | மாதம் | பிறந்த நட்சத்திரம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | பெரியாழ்வார் | வேயர் | பாண்டி | ஸ்ரீவில்லிபுத்தூர் | ஆனி | சுவாதி |
| 2 | ஆண்டாள் | வேயர் | பாண்டி | ஸ்ரீவில்லிபுத்தூர் | ஆடி | பூரம் |
| 3 | குலசேகராழ்வார் | அரசர் | மலை | கொல்லிநகர் | மாசி | புனர்பூசம் |
| 4 | திருமழிசைப்பிரான் | .... | தொண்டை | திருமழிசை | தை | மகம் |
| 5 | தொண்டரடிப்பொடிகள் | அந்தணர் | சோழ | மண்டங்குடி | மார்கழி | கேட்டை |
| 6 | திருப்பாணாழ்வார் | ஆதித் திராவிடர் | சோழ | உறையூர் | கார்த்திகை | உரோகிணி |
| 7 | மதுரகவியாழ்வார் | ... | சோழ | திருக்கோளூர் | சித்திரை | சித்திரை |
| 8 | திருமங்கையாழ்வார் | அரசர் | சோழ | திருக்குறையலூர் | கார்த்திகை | கார்த்திகை |
| 9 | பொய்கையாழ்வார் | | தொண்டை | திருவெஃகா (காஞ்சி) | ஐப்பசி | திருவோணம் |
| 10 | பூதத்தாழ்வார் | | தொண்டை | கடல்மல்லை | ஐப்பசி | அவிட்டம் |
| 11 | பேயாழ்வார் | | தொண்டை | மயிலாப்பூர் | ஐப்பசி | சதயம் |
| 12 | நம்மாழ்வார் | வேளாளர் | பாண்டி | திருக்குருகூர் | வைகாசி | விசாகம் |

சிவமயம்

# திருத்தலப் பயணத்தில் பங்கு பெற்றோர்

## முழுதும் கலந்து கொண்டவர்

1. 'தமிழ்க்கடல்' ராய. சொ.
2. க. வெ. சித. வெ. வேங்கடாசலம் செட்டியார்

## பெரும் பாலும் கலந்து கொண்டவர்

3. க. வெ. ராம. இராமசாமி செட்டியார்
4. முத்த. வெ. சொக்கலிங்கச் செட்டியார்
5. புலவர் மு. இராமசாமி

## சில பகுதியில் கலந்துகொண்டவர்

6. சா. நா. அ. சொ. அண்ணாமலை செட்டியார்
7. சொ. தேவராயன்
8. சு. ராம. பழநியப்ப செட்டியார்
9. சித. ராய. சிதம்பரம் செட்டியார்
10. பெரி. நா. நா. அ. தேவராயன் செட்டியார்
11. அபிசீனியா பழ. நாச்சியப்ப செட்டியார்
12. ப. வ. ராம. குழைந்தையன் செட்டியார்
13. ரா. பத்மநாபன்
14. க. வெ. ராம. நாராயணன் செட்டியார்
15. டி. வி. எஸ். மணியன்.

சிவமயம்

# திருத்தலப் பயணத்தில் ஆங்காங்கு உதவி செய்தவர்கள்

| | | |
|---|---|---|
| 1. | திரு. மனத்துணைநாத தேசிகர் | வலிவலம் |
| 2. | திரு. சுந்தரேசன் பிள்ளை. | |
| | திருமதி அம்பிகையாம்மாள் | மணலி |
| 3. | திரு. டி. ஆர். அருணாசலம் | சிக்கல் |
| 4. | திரு. அரங்கநாத முதலியார் | |
| | திரு. வி. எஸ். தியாகராச முதலியார் (வடபாதிமங்கலம்) | திருவாரூர் |
| 5. | திரு. கருமுத்து. தியாகராசச் செட்டியார் | புதுக்காடு. |
| | திருமதி இராதை தியாகராசன் | மதுரை. குற்றாலி |
| 6. | திரு. ப. வ. ராம. குழந்தையன் செட்டியார் | பாப்பினிச்சேரி. கண்ணனூர் |
| 7. | திரு. ஏ. ஆர். சி. முத்து | மங்களூர் |
| 8. | திரு. அழ. அரு. சோமநாதன் செட்டியார் | இராமேச்சுரம் |
| 9. | திரு. கே. எஸ். வெங்கு | |
| | திரு. கே. எஸ். இராமு | |
| | திரு. நெப்பத்தூர் இராசகோபாலய்யர் | மாயூரம் |
| | திரு. பாலு | |
| 10. | திரு. முத்த. வெ. சொக்கலிங்கச் செட்டியார் | கும்பகோணம் |
| 11. | தவத்திரு. இராமனாத சுவாமிகள் | திருவண்ணாமலை |
| 12. | திரு. பெரி. நா. நா. அ. தேவராயன் செட்டியார் | தில்லைவளாகம் |
| 13. | திரு. கண்ணப்ப செட்டியார். நா.நா.சத்திரம் | திருஐயாறு |
| 14. | திரு. டாக்டர் ராசா சர். முத்தையா செட்டியார் அவர்களின் ஏற்பாட்டின்படி | |
| | 1) அண்ணாமலைப் பல்கலைக் கழகம் | அண்ணாமலைநகர் |
| | 2) வெ. சா. சத்திரம் | சிதம்பரம் |
| 15. | திரு. சுப. அருணாசலம் | கருவூர் |
| 16. | திரு. காவேரி முதலியார் | திருச் செங்கோடு |
| 17. | திரு. காசி விசுவனாதன் | திருச்செங்கோடு |
| 18. | திரு. கோபாலசாமி ரெட்டியார் குடும்பத்தார் | பெருவள நல்லூர் |
| 19. | திரு. அரு. லெ. வெ. நடராசன் செட்டியார் | கோயம்புத்தூர் |

# தேவார-பிரபந்தப்
# போற்றிப் பாடல்

சிவமயம்

# தேவாரத் தலவணக்கம்

*தென்தில்லை மன்றினுள் ஆடி போற்றி
வேட்கள நன்நகர் மேயாய் போற்றி
நெல்வா யில்வளர் நிதியே போற்றி
கழிப்பா லைஉறை கரும்பே போற்றி
நல்லூர்ப் பெருமண நம்பா போற்றி

மயேந்திரப் பள்ளி மன்னா போற்றி
தென்திரு முல்லை வாயிலாய் போற்றி
கலிக்கா மூர்வளர் கண்ணே போற்றி
சாய்க்காடு இனிதுஉறை சதுரா போற்றி
பல்லவ னீச்சரப் பரனே போற்றி

வெண்காடு உகந்த விகிர்தா போற்றி
கீழ்த்திருக் காட்டுப் பள்ளியாய் போற்றி
குருகா வூர்உறை குணமே போற்றி
காழியுள் மேய கடலே போற்றி
கோலக் காவில் கோவே போற்றி

வேளூர் மேவிய வித்தகா போற்றி
கண்ணார் கோயில்வாழ் கனியே போற்றி
கடைமுடிப் பரம,நின் கழல்கள் போற்றி
நின்றியூர் வளரும் நிதியே போற்றி
திருப்புன் கூர்அமர் திருவே போற்றி

நீடூர் நிருத்த,நின் நீள்அடி போற்றி
அன்னி யூர்வளர் அரனே போற்றி
வேள்விக் குடிவளர் வேதா போற்றி
எதிர்கொள் பாடிஎம் இறைவா போற்றி
மணஞ்சேரி வார்சடை மணாளா போற்றி

குறுக்கைவீ ரட்டக் குழகா போற்றி
கருப்பறி யல்நகர் காப்பாய் போற்றி
குரக்குக் காவில் குருவே போற்றி
வாளொளிப் புத்தூர் வாழ்வே போற்றி
மண்ணிப் படிக்கரை மணியே போற்றி

ஓமாம் புலியூர் ஒருவனே போற்றி
கானாட்டு முள்ளூர்க் கடவுளே போற்றி
நாரையூர் நன்நகர் நலமே போற்றி
*கடம்பூர் மேவிய விடங்கா போற்றி
பந்தணை நல்லூர்ப் பசுபதி போற்றி

கஞ்சனூர் ஆண்ட,கற் பகமே போற்றி
கோடிக் காவுடைக் கோவே போற்றி
திருமங் கலக்குடித் தேனே போற்றி
பனந்தாள் தாடகேச் சரனே போற்றி
ஆப்பா டிப்பதி அமலா போற்றி

சேய்ஞலூர் உறையுஞ் செல்வா போற்றி
திருந்துதே வன்குடித் தேவா போற்றி
வியலூர் இருந்துஅருள் விமலா போற்றி
கொட்டையூ ரிற்,கோ டீச்சரா போற்றி
இன்னம்பர் ஈச!நின் இணையடி போற்றி

புறம்பயப் பதிவாழ் புண்ணியா போற்றி
விசய மங்கை வேதியா போற்றி
திருவை கா,உறை சிவனே போற்றி
வடகுரங் காடுதுறையாய் போற்றி
*பாங்கார் பழனத்து அழகா போற்றி

*சீரார் திருவை யாறா போற்றி
நெய்த்தா னத்து,நெய் ஆடியே போற்றி
பெரும்புலி யூர்ப்பெரு மானே போற்றி
மழபாடி வயிரத் தூணே போற்றி
பழுவூர் மேவிய பண்பா போற்றி

கானூர் மேய,செங் கரும்பே போற்றி
அன்பில் ஆலந்துறை அரசே போற்றி
வடகரை மாந்துறை வள்ளால் போற்றி
திருப்பால் துறைஉறை தேவே போற்றி
ஆனைக் கா,உறை ஆதி போற்றி

பைஞ்ஞீலி அண்ணல்!நின் பாதம் போற்றி
பாச்சிலாச் சிராமப் பரனே போற்றி
*ஈங்கோய் மலைஎம் எந்தாய் போற்றி
வாட்போக்கி மலைஉறை வாழ்வே போற்றி
கடம்பந் துறைவளர் கடலே போற்றி

*பராய்த்துறை மேவிய பரனே போற்றி
கற்குடி மாமலைக் கண்ணுதல் போற்றி
மூக்கீச் சரத்து முதல்வா போற்றி
*சிராப்பள்ளி மேவிய சிவனே போற்றி
எறும்பியூர் இருந்த எம்மான் போற்றி

நெடுங்களம் இனிதுஅமர் நிமலா போற்றி
மேலைக் காட்டுப் பள்ளியாய் போற்றி
ஆலம் பொழில்உறை அரனே போற்றி
திருப்பூந் துருத்தித் தேசிக போற்றி
கண்டிவீ ரட்டக் கரும்பே போற்றி

சோற்றுத் துறைவளர் தொல்லோய் போற்றி
வேதி குடிஉறை விசய போற்றி
தென்குடித் திட்டைத் தேவே போற்றி
திருப்புள்ள மங்கைத் திருவே போற்றி
சக்கரப் பள்ளிஎம் சங்கரா போற்றி

கருகா வூர்உறை கடம்பா போற்றி
திருப்பா லைத்துறைச் செல்வா போற்றி
நல்லூர்ப் பெரும!நின் நற்பதம் போற்றி
ஆவூர்ப் பசுபதீச் சரனே போற்றி
சத்தி முத்தச் சதுரா போற்றி

பட்டீச் சரம்உறை பரமா போற்றி
பழையா றைவட தளியாய் போற்றி
வலஞ்சுழி மேவிய வரதா போற்றி
குடமூக்கு அமர்கும் பேசா போற்றி
கீழ்க்கோட் டத்துஎங் கூத்தா போற்றி

குடந்தைக் காரோ ணத்தாய் போற்றி
நாகேச் சரம்வாழ் நாதா போற்றி
*இடைமருது உறையும் எந்தாய் போற்றி
தென்குரங்கு ஆடு துறையாய் போற்றி
நீலக் குடிஉறை நிருத்தா போற்றி

வைகல் மாடக் கோயிலாய் போற்றி
நல்லம் நடம்பயில் நாதா போற்றி
கோழம் பத்துஉறை கோவே போற்றி
ஆவடு தண்துறை அமரா போற்றி
துருத்தி ஈச!நின் துணையடி போற்றி

அழுந்தூர் ஆளும் அரசே போற்றி
மயிலா டுந்துறை மணியே போற்றி
திருவிள நகர்உறை திருவே போற்றி
பரியல்வீ ரட்டப் பரமா போற்றி
செம்பொன் பள்ளிச் செல்வா போற்றி

நனிபள்ளி வளரும் நம்பா போற்றி
வலம்புரம் மன்னிய வாழ்வே போற்றி
தலைச்சங் காடுஅமர் தத்துவ போற்றி
ஆக்கூர் அமர்ந்த அம்மான் போற்றி
கடவூர்க் காலவீ ரட்டா போற்றி

கடவூர் மயானக் கடவுளே போற்றி
வேட்டக் குடியின் மேயோய் போற்றி
திருத்தெளிச் சேரிச் சிவனே போற்றி
தரும புரம்வளர் தாயே போற்றி
நள்ளாறு உடைய நாதா போற்றி

கோட்டாறு அமருங் குழகா போற்றி
அம்பர்ப் பெருந்திருக் கோயிலாய் போற்றி
அம்பர்மா காளத்து அரனே போற்றி
மீயச் சூர்உறை விண்ணவ போற்றி
மீயச் சூர்இளங் கோயிலாய் போற்றி

திலதைப் பதிவாழ் திலகமே போற்றி
பாம்புர நன்னகர்ப் பரமனே போற்றி
சிறுகுடிப் பிறைமுடிச் செல்வா போற்றி
விண்ணிழி வீழி மிழலையாய் போற்றி
வன்னியூர் மேவிய மைந்தா போற்றி

கருவிலி அமருங் கண்ணே போற்றி
பேணு பெருந்துறைப் பெம்மான் போற்றி
நறையூச் சித்திச் சரனே போற்றி
அரிசிற் கரைப்புத் தூரா போற்றி
*செழுமலர்ச் சிவபுரத்து அரசே போற்றி

கலைய நல்லூர்க் கடவுளே போற்றி
கருக்குடி அண்ணல்!நின் கழல்கள் போற்றி
திருவாஞ் சியம்வளர் தேவே போற்றி
நன்நிலத் துப்பெருங் கோயிலாய் போற்றி
கொண்டீச் சரத்துக் கோவே போற்றி

திருப்பனை யூர்வளர் தேவே போற்றி
விற்குடி வீரட்டம் மேயாய் போற்றி
புகலூர் மேவிய புண்ணியா போற்றி
புகலூர் வர்த்தமா னீச்சரா போற்றி
இராமன தீச்சரத்து இறைவா போற்றி

பயற்றூர் உறையும் பண்பா போற்றி
செங்காட் டங்குடிச் சேவகா போற்றி
மருகற் பெருமு!நின் மலரடி போற்றி
சாத்த மங்கைச் சம்புவே போற்றி
நாகைக்கா ரோணம் நயந்தாய் போற்றி

சிக்கல் நகர்வளர் செல்வா போற்றி
கீழ்வேள் ஊர்ஆள் கேடிலீ போற்றி
தேவூர் ஆதி!நல் தேனே போற்றி
பள்ளிமுக் கூடற் பரனே போற்றி
*ஆரூர் அமர்ந்த அரசே போற்றி

ஆரூர் அரநெறி அப்பா போற்றி
பரவையுள் மண்தளிப் பரனே போற்றி
விளமர் உகந்த வித்தகா போற்றி
கரவீ ரச்,சங் கரனே போற்றி
பெருவே ளூர்உறை பெரும போற்றி

தலையா லங்காடு அமர்ந்தாய் போற்றி
குடவாயில் மன்னிய குருவே போற்றி
சேறைச் செந்நெறிச் செல்வா போற்றி
நாலூர் மயான நாடகா போற்றி
கடுவாய்க் கரைப்புத் தூரா போற்றி

திருஇரும் பூளைத் தேவே போற்றி
அரதைப் பெரும்பதி அமர்ந்தாய் போற்றி
அவளிவள் நல்லூர் அரசே போற்றி
பரிதி நியமப் பரனே போற்றி
வெண்ணிவாழ் விமல!நின் மெல்லடி போற்றி

பூவனூர்ப் புனித!நின் பொன்னடி போற்றி
பாதா ளீச்சரப் பரமா போற்றி
திருக்களர் மேவிய தேவே போற்றி
ஓங்குசிற் றேமத்து ஒருவா போற்றி
உசாத்தா னத்துஅமர் உறவே போற்றி

இடும்பா வனத்துஉறும் இறைவா போற்றி
கடிக்குளத்து உறைகடல் அமுதே போற்றி
தண்டலை நீள்நெறித் தாயே போற்றி
கோட்டூர் மேவிய கொழுந்தே போற்றி
வெண்துறை மேவிய வேதா போற்றி

கொள்ளம் பூதூர்க் கோவே போற்றி
திருவிடை வாய்வளர் தேவா போற்றி
பேரெயில் பெரும!நின் பெய்கழல் போற்றி
கொள்ளிக் காடுஅமர் கொற்றவ போற்றி
திருத்தெங் கூர்வளர் தேனே போற்றி

நெல்லிக் காஉறை நித்திய போற்றி
நாட்டியத் தான்குடி நம்பீ போற்றி
திருக்கா றாயில் தியாகா போற்றி
கன்றாப் பூர்,நடு தறியே போற்றி
வலிவலம் வந்துஅருள் வரதா போற்றி

கைச்சினம் மேவிய கண்ணுதல்! போற்றி
கோளிலி உறையுங் கோவே போற்றி
வாய்மூர் அடிகள்நின் மலர்ப்பதம் போற்றி
மறைக்காடு உறையும் மணாளா போற்றி
அகத்தியான் பள்ளி ஐயா போற்றி

கோடிக் கோயிற் குழகா போற்றி
கோணமா மலை,குடி கொண்டாய் போற்றி
அண்ணல்கே தீச்சரத்து அடிகள் போற்றி
*ஆடக மதுரை அரசே போற்றி
ஆப்ப னூர்வளர் ஐயா போற்றி

திருப்பரங் குன்றில் செல்வா போற்றி
ஏடகத்து எந்தை!நின் இணையடி போற்றி
கொடுங்குன்று அமருங் கோவே போற்றி
திருப்புத் தூர்த்திருத் தளியாய் போற்றி
திருப்புன வாயில்எம் செல்வா போற்றி

மால்செய்,ரா மேச வாழ்வே போற்றி
ஆடா னை,உறை ஆதி போற்றி
கானப் பேர்உறை காளாய் போற்றி
*பொருப்பமர் பூவணத்து அரனே போற்றி
சுழியல் வளருந் துணைவா போற்றி

*குற்றா லத்துளங் கூத்தா போற்றி
நெல்வே லிய்யுறை செல்வா போற்றி
அஞ்சைக் களத்துஉறை அப்பா போற்றி
முருகன் பூண்டி முதல்வா போற்றி

திருநணா வளரும் திருவே போற்றி
கொடிமா டச்செங் குன்றாய் போற்றி
வெஞ்சமாக் கூடல் விகிர்தா போற்றி
பாண்டிக் கொடுமுடிப் பழையோய் போற்றி
கருவூர் ஆனிலைக் கண்மணீ போற்றி

நெல்வா யில்அரத் துறையாய் போற்றி
பெண்ணா கடத்துப் பெரும போற்றி
கூடலை ஆற்றூர்க் கோவே போற்றி
எருக்கத்தம் புலியூர் எந்தாய் போற்றி
திருத்தினை நகரச் சிவனே போற்றி

சோபுரம் மேவிய சொக்கா போற்றி
அதிகைவீ ரட்டத்து அழகா போற்றி
நாவலூர் மேவிய நம்பா போற்றி
முதுகுன்று அமர்ந்த முனிவா போற்றி
நெல்வெணெய் மேவிய நிருத்தா போற்றி

கோவல்வீ ரட்டக் கோமான் போற்றி
அறையணி நல்லூர் அரசே போற்றி
இடையாற இடையமர் ஈசா போற்றி
வெண்ணெய்நல் லூர்உறை மேலோய் போற்றி
துறையூர் அமர்ந்த தூயோய் போற்றி

வடுகூர் அடிகள்! மாணடி போற்றி!
திருமாணி குழிவளர் தேவே போற்றி
பாதிரிப் புலியூர்ப் பரம போற்றி
முண்டீச் சரத்து முதல்வா போற்றி
புறவார் பனங்காட் டூரா போற்றி

திருஆ மாத்தூர்த் தேவே போற்றி
*அண்ணா மலைஎம் அண்ணா போற்றி
*ஏகம் பத்துஉறை எந்தாய் போற்றி
கச்சிமேல் தளிஉறை கடலே போற்றி
ஓண காந்தன் தளியாய் போற்றி

கச்சி,அ நேகதங் காவதா போற்றி
கச்சி,நெறிக் காரைக் காடா போற்றி
குரங்கணில் முட்டம் குலவினாய் போற்றி
மாகறல் வாழும் மருந்தே போற்றி
ஒத்தூர் மேவிய ஒளியே போற்றி

வன்பார்த்தான் பனங்காட்டு ஊரா போற்றி
திருவல்லம் மேவிய தீவணா போற்றி
மாற்பேறு ஆள்உமை மணாளா போற்றி
திருஊ றல்வளர் தேவே போற்றி
இலம்பையங் கோட்டூர் ஈசா போற்றி

விற்கோ லத்துஉறை வீரா போற்றி
ஆலங் காட்டுஎம் அடிகள் போற்றி
பாசூர் அமர்ந்த பசுபதி போற்றி
வெண்பாக் கத்துஉறை விமலா போற்றி
கள்ளில் மேய கனியே போற்றி

காளத்தி நாத!நின் கழலிணை போற்றி
ஒற்றி யூர்உடை ஒருவ போற்றி
வலிதா யம்உறை வள்ளால் போற்றி
வடதிரு முல்லை வாயிலாய் போற்றி
வேற்காட்டு வேத வித்தகா போற்றி

மயிலைக் கபாலீச் சரத்தாய் போற்றி
வான்மியூர் அமர்ந்த வாழ்வே போற்றி
கச்சூர் ஆலக் கோயிலாய் போற்றி
இடைச்சுரம் இருந்த எழில்வண போற்றி
*திருக்கழுக் குன்றில் செல்வா போற்றி

அச்சிறு பாக்கம் அமர்ந்தாய் போற்றி
வக்கரை அமர்ந்த வரதா போற்றி
அரசிலி நாதா ஐயா போற்றி
இரும்பைமா காளத்து இறைவா போற்றி
கோலக் கோகர்ணக் கொழுந்தே போற்றி 270

திருப்பருப் பதத்துத் தேவே போற்றி
இந்திர நீல மலையாய் போற்றி
அநேகதங் காவதம் அமர்ந்தாய் போற்றி
கேதா ரக்கிரிக் கிழவோய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி 275

---

காரைக்குடி, சிவநேசர் திருக்கூட்டத்தார் அனுமதியுடன்
வெளியிடப் பெற்றது.

*இவை திருவாசக வரிகள்

சிவமயம்

# திவ்வியப்பிரபந்தத் தல வணக்கம்

'தமிழ்க்கடல்' 'சிவமணி' ராய. சொ. இயற்றியது

திருவரங் கத்துஉறை தேவா போற்றி
உறையூர் நின்ற ஒருவ போற்றி
தஞ்சை மாமணிக் கோயிலாய் போற்றி
அன்பில் துயின்ற அறமே போற்றி
உத்தமர் கோயில் உகந்தாய் போற்றி

வெள்ளறை மேவிய விண்டுவே போற்றி
புள்ளம் பூதங் குடியாய் போற்றி
திருப்பேர் நகர்க்குடத் திருவே போற்றி
ஆதனூர் ஆண்ட ஆதி போற்றி
தேர்அழுந் தூர்நில், செழுஞ்சுடர் போற்றி

சிறுபுலி யூர்சேர் சீரோய் போற்றி
சேறையுள் நின்ற செங்கண்மால் போற்றி
சங்கநாள் மதியம் சார்ந்தாய் போற்றி
குடந்தைக் கிடந்த கோமான் போற்றி
கண்டியூர் நின்ற கண்ணே போற்றி

ஒப்பிலி அப்ப!நின் ஒண்தாள் போற்றி
கணபுரம் விரும்பிய கண்மணி போற்றி
ஆலியும் நகரியும் அமர்ந்தாய் போற்றி
நாகை அழகிய நல்மணி போற்றி
நறையூர் நின்ற நம்பி போற்றி

நாதன் கோயில் நல்லாய் போற்றி
இந்தளூர் மேவிய அந்தண போற்றி
திருச்சித்ர கூடச் செல்வா போற்றி
சீர்காழி விண்ணகர்ச் செம்மால் போற்றி
கூடலூர் உறையும் கோவிந்த போற்றி

கண்ணங் குடிநில் காகுத்த போற்றி
கண்ண மங்கைசேர் கண்ணா போற்றி
கவித்தலம் கிடந்த கார்வணா போற்றி
வெள்ளியங் குடிவாழ் வில்லா போற்றி
மணிமாடக் கோயில் மன்னா போற்றி

வைகுந்த விண்ணகர் வாழ்வே போற்றி
அரிமேய விண்ணகர் ஐயா போற்றி
வண்புரு டோத்தம மருந்தே போற்றி
செம்பொன்செய் கோயில் தேசிக போற்றி
திருத்தெற்றி அம்பலச் சேவக போற்றி

திருத்தேவ னார்தொகைத் தெய்வமே போற்றி
திருமணிக் கூடச் சீதர போற்றி
காவளம் பாடிக் கருமுகில் போற்றி
திருவெள் ளக்குளத் தேவே போற்றி
பார்த்தன் பள்ளிவாழ் பண்ணவ போற்றி

மால்இருஞ் சோலைமால் அழகா போற்றி
கோட்டியூர் மாதவக் கோவே போற்றி
மெய்யம் அமர்ந்த மெய்யனே போற்றி
திருப்புல் லாணிச் செகநாத போற்றி
தண்காலூர்த் தாமோ தரனே போற்றி

மோகூர்க் காள மேகமே போற்றி
*கூடல் இலங்கு குருமணி போற்றி
வில்லிபுத் தூர்உறை விமலா போற்றி
குருகூர் ஆளும் கொற்றவ போற்றி
தொலைவில்லி மங்கலத் தூயோய் போற்றி

புளிங்குடிக் கிடந்த புண்ணியா போற்றி
திருப்பே ரைக்குழைச் செவியாய் போற்றி
திருவை குந்தம்நில் திருமால் போற்றி
வரகுண மங்கை மணாளா போற்றி
குளந்தை மாயக் கூத்தா போற்றி

---

திருவாசகவரி

கோளூர் மாநிதிக் குழகா போற்றி
சிவர மங்கைத் தெய்வமால் போற்றி
குறுங்குடிக் கோமளக் கொழுந்தே போற்றி
அனந்தையில் பள்ளிகொள் அரங்கா போற்றி
வண்பரி சாரமா மாயவ போற்றி

காட்கரை மேவிய கருங்கடல் போற்றி
மூழிக் களத்து,நில் முகுந்தா போற்றி
புலியூர் நின்ற புங்கவ போற்றி
செங்குன்று ஊர்உறை செல்வமே போற்றி
நாவாய் இருந்த நாரணா போற்றி

வல்லவாழ் நில்,மது சூதனா போற்றி
வண்வண் டூர்உறை மாதவ போற்றி
வாட்டாற்றுக் கிடந்த வள்ளலே போற்றி
வித்துவக் கோட்டு வேந்தே போற்றி
கடித்தான நாரணக் கார்முகில் போற்றி

ஆறன் விளைக்குறள் அப்பனே போற்றி
அயிந்திர புரத்துஉறை அரியே போற்றி
கோவிலில் பேர்உருக் கொண்டாய் போற்றி
அத்தியூர் வரத அரசே போற்றி
அட்ட புயகரத்து அம்மான் போற்றி

திருத்தண் காவிளக்கு ஒளியாய் போற்றி
வேளுக்கை வேந்த!நின் மெல்லடி போற்றி
பாடகப் பாண்டவத் தூதா போற்றி
நீரகம் நின்ற நெடுமால் போற்றி
நிலாத்திங்கள் துண்ட, நின்மல போற்றி

ஊரகத்து உலகினை அளந்தாய் போற்றி
வெஃகாக் கிடந்த மேலோய் போற்றி
காரகக் கருணைக் கடலே போற்றி
கார்வானக் கள்வ!நின் கழல்இணை போற்றி
கள்வனூர் வராகப் பெருமாள் போற்றி

பவளவண்ணப் பதும நாபா போற்றி
பரமேச் சுரவிண் பரமா போற்றி
புட்குழி இருந்த புனிதா போற்றி
நின்றவூர்த் திருவை நீங்காய் போற்றி
எவ்வுள் வீர இராகவ போற்றி 90

நீர்மலை நின்ற நீர்வணா போற்றி
இடஎந்தை இருடி கேசா போற்றி
கடல்மல்லைக் கிடந்த கடல்வணா போற்றி
அல்லிக் கேணி,நில அச்சுத போற்றி
கடிகை மலைவாழ் கரும்பே போற்றி 95

திருவேங் கடத்திரு மார்பா போற்றி
சிங்கவேள் குன்றச் சிங்கமே போற்றி
அயோத்தியை ஆண்ட அறிவே போற்றி
நைமிசா ரணிய நம்பா போற்றி
சாளக் கிராமத் தவமே போற்றி 100

வதரியாச் சிரம மாமுகில் போற்றி
தேவப்பிர யாகைத் தேவனே போற்றி
பிரிதிக் கேசவப் பெருமான் போற்றி
துவாரகை ஆண்ட,பைந் துளவோய் போற்றி
வடமது ரைப்பதி மைந்தா போற்றி 105

கோகுலக் கண்ண!நின் குரைகழல் போற்றி
பாற்கடல் கிடந்த பரஞ்சுடர் போற்றி
பரம பதம்அருள் பரம்பொருள் போற்றி 108

சிவமயம்

# தேவார-பிரபந்தத் தல அகராதி

| பெயர் | நாடு | பக்கம் தேவாரம் | பக்கம் பிரபந்தம் |
|---|---|---|---|
| அகத்தியான்பள்ளி | சோழ | 167 | |
| அச்சிறுபாக்கம் | தொண்டை | 264 | |
| அஞ்சைக்களம் | மலை | 195 | |
| அட்டபுயகரம் | தொண்டை | ... | 358 |
| அண்ணாமலை | நடு | 229 | |
| அதிகை | நடு | 214 | |
| அத்திகிரி(காஞ்சிபுரம்) | தொண்டை | ... | 357 |
| அநந்தபுரம் | மலை | .... | 343 |
| அம்பர்ப்பெருந்திருக்கோயில் | சோழ | 112 | |
| அம்பர்மாகாளம் | சோழ | 112 | |
| அயிந்திரபுரம் | நடு | ... | 353 |
| அயோத்தி | வட | ... | 383 |
| அரங்கம் | சோழ | ... | 281 |
| அரசிலி | தொண்டை | 265 | |
| அரதைப்பெரும்பாழி | சோழ | 147 | |
| அரசிற்கரைப்புத்தூர் | சோழ | 129 | |
| அரிமேயவிண்ணகரம் | சோழ | ... | 314 |
| அல்லிக்கேணி | தொண்டை | ... | 373 |
| அவளிவள்நல்லூர் | சோழ | 148 | |
| அவிநாசி | கொங்கு | 199 | |
| அழகர்கோயில் (மாலிருஞ்சோலை) | பாண்டி | ... | 324 |
| அழுந்தூர் (தேரழுந்தூர்) | சோழ | ... | 292 |
| அழுந்தூர் (தேரழுந்தூர்) | சோழ | 97 | |
| அறையணிநல்லூர் | நடு | 221 | |
| அனேகதங்காபதம் | வட | 275 | |
| அன்பில் | சோழ | ... | 287 |
| அன்பில் ஆலந்துறை | சோழ | 59 | |
| அன்னியூர் | சோழ | 31 | |

| பெயர் | நாடு | பக்கம் தேவாரம் | பிரபந்தம் |
|---|---|---|---|
| ஆக்கூர் | சோழ | 104 | |
| ஆடானை | பாண்டி | 185 | |
| ஆதனூர் | சோழ | ... | 292 |
| ஆப்பனூர் | பாண்டி | 178 | |
| ஆப்பாடி | சோழ | 45 | |
| ஆமாத்தூர் | நடு | 228 | |
| ஆய்ப்பாடி | வட | ... | 395 |
| ஆரூர் | சோழ | 138 | |
| ஆரூர் அரநெறி | சோழ | 141 | |
| ஆரூர்ப் பரவையுண் மண்டலி | சோழ | 142 | |
| ஆலங்காடு | தொண்டை | 247 | |
| ஆலம்பொழில | சோழ | 73 | |
| ஆலவாய்(மதுரை) | பாண்டி | 175 | |
| ஆலிதிருநகரி | சோழ | ... | 302 |
| ஆவடுதுறை | சோழ | 94 | |
| ஆவூர்ப்பசுபதீச்சுரம் | சோழ | 81 | |
| ஆறன்விளை | மலை | ... | 350 |
| ஆனைக்கா | சோழ | 60 | |
| | | | |
| இடஎந்தை | தொண்டை | ... | 372 |
| இடும்பாவனம் | சோழ | 153 | |
| இடைச்சுரம் | தொண்டை | 261 | |
| இடைமருதூர் | சோழ | 89 | |
| இடையாறு | நடு | 222 | |
| இந்தளூர்(திருவழுந்தூர்) | சோழ | ... | 306 |
| இந்திரநீலப்பருப்பதம் | வட | 274 | |
| இராமனதீச்சுரம் | சோழ | 129 | |
| இராமேச்சுரம் | பாண்டி | 182 | |
| இரும்பூளை | சோழ | 147 | |
| இரும்பைமாகாளம் | தொண்டை | 266 | |
| இலம்பையங்கோட்டூர் | தொண்டை | 245 | |
| இன்னம்பர் | சோழ | 48 | |

| பெயர் | நாடு | பக்கம் தேவாரம் | பிரபந்தம் |
|---|---|---|---|
| ஈங்கோய்மலை | சோழ | 64 | |
| உசாத்தானம் | சோழ | 152 | |
| உத்தமர்கோயில்(கரம்பனூர்) | சோழ | ... | 288 |
| உறையூர்(கோழி) | சோழ | ... | 286 |
| ஊரகம் | தொண்டை | ... | 363 |
| ஊறல் | தொண்டை | 245 | |
| எதிர்கொள்பாடி | சோழ | 32 | |
| எருக்கத்தம்புலியூர் | நடு | 212 | |
| எவ்வுள் | தொண்டை | ... | 369 |
| எறும்பியூர் | சோழ | 71 | |
| ஏடகம் | பாண்டி | 179 | |
| ஐயாறு | சோழ | 53 | |
| ஒப்லியப்பன்கோயில் (விண்ணகர்) | சோழ | ... | 298 |
| ஒற்றியூர் | தொண்டை | 253 | |
| ஓணகாந்தன்தளி | தொண்டை | 239 | |
| ஓத்தூர் | தொண்டை | 242 | |
| ஓமாம்புலியூர் | சோழ | 37 | |
| கச்சி அநேகதங்காபதம் | தொண்டை | 241 | |
| கச்சி ஏகம்பம் | தொண்டை | 235 | |
| கச்சிநெறிக்காரைக்காடு | தொண்டை | 240 | |
| கச்சிமேற்றளி | தொண்டை | 238 | |
| கச்சூர் | தொண்டை | 261 | |
| கஞ்சனூர் | சோழ | 42 | |
| கடம்பந்துறை | சோழ | 66 | |
| கடம்பூர் | சோழ | 40 | |
| கடவூர் | சோழ | 105 | |

| பெயர் | நாடு | பக்கம் தேவாரம் | பிரபந்தம் |
|---|---|---|---|
| கடவூர்மயானம் | சோழ | 107 | |
| கடல்மல்லை(மகாபலிபுரம்) | தொண்டை | ... | 372 |
| கடிக்குளம் | சோழ | 153 | |
| கடிகை | தொண்டை | ... | 374 |
| கடித்தானம் | மலை | ... | 350 |
| கடுவாய்க்கரைப்புத்தூர் | சோழ | 146 | |
| கடைமுடி (கீழையூர்) | சோழ | 28 | |
| கண்டமென்னும் கடிநகர் (தேவப்பிரயாகை) | வட | ... | 390 |
| கண்டியூர் | சோழ | 75 | |
| கண்டியூர் | சோழ | ... | 298 |
| கண்ணங்குடி | சோழ | ... | 309 |
| கண்ணபுரம் | சோழ | ... | 300 |
| கண்ணமங்கை | சோழ | ... | 310 |
| கண்ணார்கோவில் | சோழ | 27 | |
| கரவீரம் | சோழ | 143 | |
| கருகாவூர் | சோழ | 78 | |
| கருக்குடி | சோழ | 123 | |
| கருப்பறியலூர் | சோழ | 34 | |
| கருவிலி | சோழ | 118 | |
| கருவூர் | கொங்கு | 205 | |
| கலயநல்லூர் | சோழ | 122 | |
| கலிக்காமூர் | சோழ | 16 | |
| கவித்தலம் | சோழ | ... | 311 |
| கழிப்பாலை | சோழ | 12 | |
| கழுக்குன்றம் | தொண்டை | 262 | |
| களர் | சோழ | 151 | |
| கள்வனூர் | தொண்டை | ... | 366 |
| கள்ளில் | தொண்டை | 250 | |
| கற்குடி | சோழ | 68 | |
| கன்றாப்பூர் | சோழ | 161 | |

| பெயர் | நாடு | பக்கம் தேவாரம் | பிரபந்தம் |
|---|---|---|---|
| காட்கரை | மலை | ... | 344 |
| காட்டுப்பள்ளி (கீழை) | சோழ | 21 | |
| காட்டுப்பள்ளி (மேலை) | சோழ | 72 | |
| காரகம் | தொண்டை | ... | 365 |
| கார்வானம் | தொண்டை | ... | 366 |
| காவளம்பாடி | சோழ | ... | 318 |
| காவிரிப்பூம்பட்டினம் (பல்லவனீச்சுரம்) | சோழ | 18 | |
| காழி (சீர்காழி) | சோழ | 22 | |
| காழிச்சீராமவிண்ணகரம் | சோழ | ... | 308 |
| காளத்தி | தொண்டை | 251 | |
| காறாயில் | சோழ | 160 | |
| கானப்பேர் | பாண்டி | 185 | |
| கானாட்டுமுள்ளூர் | சோழ | 38 | |
| கானூர் | சோழ | 58 | |
| கீழ்வேளூர் | சோழ | 136 | |
| குடந்தை | சோழ | ... | 295 |
| குடந்தைக்காரோணம் | சோழ | 87 | |
| குடந்தைக்கீழ்க்கோட்டம் | சோழ | 86 | |
| குடமூக்கு | சோழ | 85 | |
| குடவாயில் | சோழ | 145 | |
| குரக்குக்கா | சோழ | 35 | |
| குரங்கணில்முட்டம் | தொண்டை | 241 | |
| குரங்காடுதுறை (வட) | சோழ | 51 | |
| குரங்காடுதுறை (தென்) | சோழ | 91 | |
| குருகாவூர் | சோழ | 21 | |
| குருகூர் (ஆழ்வார் திருநகரி) | பாண்டி | ... | 333 |
| குளந்தை | பாண்டி | ... | 338 |
| குறுக்கை | சோழ 33 | | |
| குறுங்குடி | பாண்டி | ... | 340 |
| குற்றாலம் | பாண்டி | 188 | |

| பெயர் | நாடு | பக்கம் தேவாரம் | பக்கம் பிரபந்தம் |
|---|---|---|---|
| கூடலூர் (ஆடுதுறை) | சோழ | ... | 308 |
| கூடலையாற்றூர் | நடு | 211 | |
| கூடல் (மதுரை) | பாண்டி | ... | 331 |
| கேதாரம் | வட | 275 | |
| கேதிச்சரம் | ஈழ | 171 | |
| கைச்சினம் | சோழ | 162 | |
| கைலாயம் (நொடித்தான்மலை) | வட | 276 | |
| கொடிமாடச்செங்குன்றூர் | கொங்கு | 202 | |
| கொடுங்குன்றம் | பாண்டி | 180 | |
| கொட்டையூர் | சோழ | 47 | |
| கொண்டீச்சுரம் | சோழ | 125 | |
| கொள்ளம்பூதூர் | சோழ | 156 | |
| கொள்ளிக்காடு | சோழ | 158 | |
| கோகர்ணம் | துளுவ | 269 | |
| கோடி | சோழ | 168 | |
| கோடிகா | சோழ | 42 | |
| கோட்டாறு | சோழ | 111 | |
| கோட்டியூர் | பாண்டி | ... | 326 |
| கோட்டூர் | சோழ | 154 | |
| கோணமலை | ஈழ | 171 | |
| கோயில்(சிதம்பரம்) | சோழ | 3 | |
| கோலக்கா | சோழ | 24 | |
| கோவலூர் | நடு | 220 | |
| கோவலூர் | நடு | ... | 354 |
| கோழம்பம் | சோழ | 94 | |
| கோளிலி | சோழ | 163 | |
| கோளூர் | பாண்டி | ... | 339 |
| சக்கரப்பள்ளி | சோழ | 78 | |
| சத்திமுத்தம் | சோழ | 82 | |

| பெயர் | நாடு | பக்கம் தேவாரம் | பிரபந்தம் |
|---|---|---|---|
| சாத்தமங்கை | சோழ | 133 | |
| சாய்க்காடு | சோழ | 17 | |
| சாளக்கிராமம் | வட | ... | 388 |
| சிக்கல் | சோழ | 135 | |
| சிங்கவேள்குன்றம் (அகோபிலம்) | வட | ... | 382 |
| சிராப்பள்ளி | சோழ | 70 | |
| சிவபுரம் | சோழ | 121 | |
| சிறுகுடி | சோழ | 115 | |
| சிறுபுலியூர் | சோழ | ... | 293 |
| சிற்றேமம் | சோழ | 152 | |
| சுழியல் | பாண்டி | 188 | |
| செங்காட்டங்குடி | சோழ | 131 | |
| செங்குன்றூர் | மலை | ... | 346 |
| செம்பொன்பள்ளி | சோழ | ... | 315 |
| சேய்ஞலூர் | சோழ | 45 | |
| சேறை | சோழ | ... | 294 |
| சேறை | சோழ | 145 | |
| சோபுரம் | நடு | 214 | |
| சோற்றுத்துறை | சோழ | 75 | |
| தஞ்சை மாமணிக்கோயில் | சோழ | ... | 286 |
| தண்கா | தொண்டை | ... | 359 |
| தண்காலூர் | பாண்டி | ... | 329 |
| தண்டலைநீள்நெறி | சோழ | 154 | |
| தருமபுரம் | சோழ | 109 | |
| தலைச்சங்கநாள்மதியம் | சோழ | ... | 294 |
| தலைச்சங்காடு | சோழ | 103 | |
| தலையாலங்காடு | சோழ | | 144 |

| பெயர் | நாடு | பக்கம் தேவாரம் | பக்கம் பிரபந்தம் |
|---|---|---|---|
| திருத்தேவனார்தொகை | சோழ | ... | 316 |
| திருந்துதேவன்குடி | சோழ | 46 | |
| திலதைப்பதி | சோழ | 114 | |
| தில்லைத்திருச் சித்திரக்கூடம் (சிதம்பரம்) | சோழ | ... | 307 |
| தினைநகர் | நடு | 213 | |
| துருத்தி (குற்றாலம்) | சோழ | 96 | |
| துவாரகை | வட | ... | 391 |
| துறையூர் | நடு | 224 | |
| தெங்கூர் | சோழ | 158 | |
| தெளிச்சேரி | சோழ | 113 | |
| தெற்றியம்பலம் | சோழ | ... | 316 |
| தென்குடித்திட்டை | சோழ | 77 | |
| தேவூர் | சோழ | 137 | |
| தொலைவில்லிமங்கலம் | பாண்டி | ... | 334 |
| நணா | கொங்கு | 201 | |
| நந்திபுரவிண்ணகரம் | சோழ | ... | 305 |
| நல்லம் | சோழ | 93 | |
| நல்லூர் | சோழ | 80 | |
| நல்லூர்பெருமணம் | சோழ | 14 | |
| நள்ளாறு | சோழ | 110 | |
| நறையூர் (நாச்சியார்கோயில்) | சோழ | ... | 304 |
| நறையூர்ச் சித்திச்சுரம் | சோழ | 119 | |
| நனிபள்ளி | சோழ | 101 | |
| நன்னிலம் | சோழ | 124 | |
| நாகேச்சுரம் | சோழ | 88 | |
| நாகைக்காரோணம் | சோழ | 134 | |
| நாகைப்பட்டினம் | சோழ | ... | 304 |
| நாங்குனேரி (சிரீவரமங்கை) | பாண்டி | ... | 393 |

| பெயர் | நாடு | பக்கம் தேவாரம் | பிரபந்தம் |
|---|---|---|---|
| நாங்கூர் (மணிமாடக்கோயில்) | சோழ | ... | 312 |
| நாட்டியத்தான்குடி | சோழ | 159 | |
| நாரையூர் | சோழ | 38 | |
| நாலூர் மயானம் | சோழ | 146 | |
| நாவலூர் | நடு | 216 | |
| நாவாய் | மலை | ... | 347 |
| நிலாத்திங்கள் துண்டம் | தொண்டை | ... | 363 |
| நின்றியூர் | சோழ | 28 | |
| நின்றவூர் | தொண்டை | ... | 369 |
| நீடூர் | சோழ | 30 | |
| நீரகம் | தொண்டை | ... | 362 |
| நீர்மலை | தொண்டை | ... | 371 |
| நீலக்குடி | சோழ | 92 | |
| நெடுங்களம் | சோழ | 72 | |
| நெய்த்தானம் | சோழ | 55 | |
| நெல்லிக்கா | சோழ | 159 | |
| நெல்வாயில் | சோழ | 12 | |
| நெல்வாயில் அரத்துறை | நடு | 209 | |
| நெல்வெண்ணெய் | நடு | 219 | |
| நெல்வேலி | பாண்டி | 191 | |
| நைமிசாரணியம் | வட | ... | 387 |
| பட்டீச்சுரம் | சோழ | 82 | |
| பந்தணைநல்லூர் | சோழ | 41 | |
| பயற்றூர் | சோழ | 130 | |
| பரங்குன்றம் | பாண்டி | 178 | |
| பராய்த்துறை | சோழ | 67 | |
| பரமபதம் | வட | ... | 401 |
| பரமேச்சுர விண்ணகரம் | தொண்டை | ... | 367 |

| பெயர் | நாடு | பக்கம் தேவாரம் | பிரபந்தம் |
|---|---|---|---|
| பரிதிநியமம் | சோழ | 149 | |
| பருப்பதம் | வட | 273 | |
| பவளவண்ணம் | தொண்டை | ... | 367 |
| பழனம் | சோழ | 52 | |
| பழுவூர் | சோழ | 57 | |
| பழையாறை வடதளி | சோழ | 83 | |
| பள்ளியின் முக்கூடல் | சோழ | 137 | |
| பறியலூர் | சோழ | 100 | |
| பனங்காட்டூர் (வன்பார்த்தான்) | தொண்டை | 243 | |
| பனந்தாள் | சோழ | 44 | |
| பனையூர் | சோழ | 125 | |
| பாசூர் | தொண்டை | 249 | |
| பாச்சிலாச்சிராமம் | சோழ | 63 | |
| பாடகம் | தொண்டை | ... | 361 |
| பாண்டிக்கொடுமுடி | கொங்கு | 204 | |
| பாதாளீச்சரம் | சோழ | 150 | |
| பாதிரிப்புலியூர் | நடு | 226 | |
| பாம்புரம் | சோழ | 114 | |
| பார்த்தன்பள்ளி | சோழ | ... | 319 |
| பாலைத்துறை | சோழ | 79 | |
| பாற்கடல் | வட | ... | 396 |
| பாற்றுறை | சோழ | 60 | |
| பிரிதி | வட | ... | 391 |
| புகலூர் | சோழ | 128 | |
| புகலூர் வர்த்தமானீச்சுரம் | சோழ | 129 | |
| புட்குழி | தொண்டை | ... | 368 |
| புத்தூர் | பாண்டி | 181 | |
| புலியூர்(குட்டநாடு) | மலை | ... | 345 |
| புல்லாணி | பாண்டி | ... | 329 |
| புளிங்குடி | பாண்டி | ... | 335 |

| பெயர் | நாடு | பக்கம் தேவாரம் | பிரபந்தம் |
|---|---|---|---|
| புள்ளமங்கை | சோழ | 77 | |
| புள்ளிருக்குவேளூர் | சோழ | 26 | |
| புள்ளம்பூதங்குடி | சோழ | ... | 290 |
| புறம்பயம் | சோழ | 49 | |
| புறவார்பனங்காட்டூர் | நடு | 227 | |
| புனவாயில் | பாண்டி | 182 | |
| புன்கூர் | சோழ | 29 | |
| பூந்துருத்தி | சோழ | 74 | |
| பூவணம் | பாண்டி | 186 | |
| பூவனூர் | சோழ | 150 | |
| பெண்ணாகடம் | நடு | 210 | |
| பெரும்புலியூர் | சோழ | 55 | |
| பெருவேளூர் | சோழ | 143 | |
| பேணுபெருந்துறை | சோழ | 119 | |
| பேரெயில் | சோழ | 157 | |
| பேரை | பாண்டி | ... | 336 |
| பேர்நகர் (கோவிலடி) | சோழ | ... | 290 |
| பைஞ்ஞீலி | சோழ | 62 | |
| மங்கலக்குடி | சோழ | 45 | |
| மணஞ்சேரி | சோழ | 33 | |
| மணிக்கூடம் | சோழ | ... | 317 |
| மண்ணிப்படிக்கரை | சோழ | 36 | |
| மயிலாடுதுறை | சோழ | 98 | |
| மயிலாப்பூர் | தொண்டை | 258 | |
| மயேந்திரப்பள்ளி | சோழ | 15 | |
| மருகல் | சோழ | 132 | |
| மழபாடி | சோழ | 56 | |
| மறைக்காடு | சோழ | 165 | |

| பெயர் | நாடு | பக்கம் தேவாரம் | பக்கம் பிரபந்தம் |
|---|---|---|---|
| மாகறல் | தொண்டை | 241 | |
| மாணிகுழி | நடு | 225 | |
| மாந்துறை | சோழ | 59 | |
| மாற்பேறு | தொண்டை | 244 | |
| மீயச்சூர் | சோழ | 113 | |
| மீயச்சூர் இளங்கோயில் | சோழ | 113 | |
| முண்டீச்சரம் | நடு | 227 | |
| முதுகுன்றம் | நடு | 218 | |
| முருகன்பூண்டி | கொங்கு | 200 | |
| முல்லைவாயில் (தென்) | சோழ | 15 | |
| மூக்கீச்சரம் | சோழ | 69 | |
| மூழிக்களம் | மலை | ... | 344 |
| மெய்யம் | பாண்டி | ... | 328 |
| மோகூர் | பாண்டி | ... | 330 |
| வக்கரை | தொண்டை | 265 | |
| வடமதுரை | வட | ... | 393 |
| வடுகூர் | நடு | 224 | |
| வண்பரிசாரம் | மலை | ... | 343 |
| வண்புருடோத்தமம் | சோழ | ... | 314 |
| வண்வண்டூர் | மலை | ... | 348 |
| வதரியாச்சிரமம் | வட | ... | 389 |
| வரகுண மங்கை | பாண்டி | ... | 337 |
| வலஞ்சுழி | சோழ | 84 | |
| வலம்புரம் | சோழ | 102 | |
| வலிதாயம் | தொண்டை | 255 | |
| வலிவலம் | சோழ | 161 | |
| வல்லம் | தொண்டை | 243 | |
| வல்லவாழ் | மலை | ... | 347 |
| வன்னியூர் | சோழ | 118 | |

| பெயர் | நாடு | பக்கம் தேவாரம் | பிரபந்தம் |
|---|---|---|---|
| வாஞ்சியம் | சோழ | 123 | |
| வாட்டாறு | மலை | ... | 349 |
| வாட்போக்கி | சோழ | 65 | |
| வாய்மூர் | சோழ | 164 | |
| வாளொளிப்புத்தூர் | சோழ | 35 | |
| வான்மியூர் | தொண்டை | 260 | |
| விசயமங்கை | சோழ | 50 | |
| விடைவாய் | சோழ | 156 | |
| வித்துவக்கோடு | மலை | ... | 349 |
| வியலூர் | சோழ | 47 | |
| வில்லிபுத்தூர் | பாண்டி | ... | 331 |
| விளநகர் | சோழ | 99 | |
| விளமர் | சோழ | 142 | |
| விற்குடி | சோழ | 126 | |
| விற்கோலம் | தொண்டை | 246 | |
| வீழிமிழலை | சோழ | 115 | |
| வெஞ்சமாக்கூடல் | கொங்கு | 203 | |
| வெண்காடு | சோழ | 19 | |
| வெண்டுறை | சோழ | 155 | |
| வெண்ணி | சோழ | 149 | |
| வெண்ணெய்நல்லூர் | நடு | 222 | |
| வெண்பாக்கம் | தொண்டை | 249 | |
| வெள்ளக்குளம் | சோழ | ... | 319 |
| வெள்ளறை | சோழ | ... | 289 |
| வெள்ளியங்குடி | சோழ | ... | 311 |
| வெஃகா | தொண்டை | ... | 364 |
| வேங்கடம் | வட | | 377 |
| வேட்களம் | சோழ | 11 | |
| வேட்டக்குடி | சோழ | 108 | |

| பெயர் | நாடு | பக்கம் தேவாரம் | பக்கம் பிரபந்தம் |
|---|---|---|---|
| வேதிகுடி | சோழ | 76 | |
| வேளுக்கை | தொண்டை | ... | 360 |
| வேள்விக்குடி | சோழ | 32 | |
| வேற்காடு | தொண்டை | 257 | |
| வைகன்மாடக் கோயில் | சோழ | 92 | |
| வைகாவூர் | சோழ | 50 | |
| வைகுந்தம் | பாண்டி | ... | 337 |
| வைகுந்த விண்ணகரம் | சோழ | ... | 313 |

# பாட்டு முதற் குறிப்பு


| பாட்டு முதல் | பக்கம் |
|---|---|
| அகத்து அடிமை | 121 |
| அங்கண் நெடு | 385 |
| அங்கண் மால் | 274 |
| அங்கமே | 128 |
| அச்சம் இலர் | 28 |
| அஞ்சனம் சேர் | 18 |
| அஞ்சாதே | 160 |
| அஞ்சியாகிலும் | 29 |
| அஞ்சும் ஒன்றி | 139 |
| அடிகள் கைதொழுது | 348 |
| அடிகேள் | 179 |
| அடிபட்டமர் | 264 |
| அடிபேரில் | 8 |
| அடியார்ந்த | 145 |
| அணங்கு உமை | 34 |
| அணிகொள் ஆடை | 29 |
| அண்ணாமலை மேல் | 231 |
| அந்தணர் வேள்வி | 56 |
| அந்தண்மதி | 99 |
| அந்தண்வரை | 277 |
| அப்பொழுதே | 39 |
| அமலன் ஆதி | 402 |
| அம்மானே | 142 |
| அருத்தனை | 28 |
| அருந்தவத்தோர் | 37 |
| அருந்துணையை | 4 |
| அருப்புப் போல் | 120 |
| அருமணியை | 38 |
| அருமையன் | 89 |
| அரும்பும் | 215 |
| அருள் எலாம் | 10 |
| அருள் பெறுவார் | 349 |
| அலங்கெழு | 368 |
| அலிமலி தண் | 203 |
| அல்லல் இல்லை | 11 |
| அல்லல் விளைத்த | 396 |
| அல்லி அம் | 6 |
| அவனென்னை | 283 |
| அழுகுதிரி | 67 |
| அழைப்பன் | 331 |
| அறத்தால் உயிர் | 159 |
| அனுசயப்பட்டு | 150 |
| அன்பர் ஆகி | 68 |
| அன்பினால் | 122 |
| அன்புறு சிந்தை | 14 |
| அன்றுஅடல் | 121 |
| அன்று ஆயர் | 299 |
| அன்று ஆலின் | 116 |
| அன்று இவ்வுலகம் | 360 |
| அன்று வந்தெனை | 25 |
| அன்ன நடை | 7 |
| அன்னமும் | 304 |
| அன்னவனை | 292 |
| அன்னையென் | 393 |
| ஆகத்து உமை | 20 |
| ஆக நல்லார் | 226 |
| ஆசை வழுவாது | 306 |
| ஆடுமின் | 37 |
| ஆட்டினாய் | 76 |
| ஆரணம் | 24 |
| ஆராத | 138 |
| ஆல நீழல் | 35 |
| ஆலின் இலை | 303 |
| ஆலை சூழ் | 105 |
| ஆவனயாரே | 8 |

| பாட்டு முதல் | பக்கம் | பாட்டு முதல் | பக்கம் |
|---|---|---|---|
| ஆழ் தருமால் | 11 | உண்ணும் சோறு | 339 |
| ஆனபெருமை | 129 | உண்மை அறிவு | 9 |
| | | உமையவளை | 236 |
| இங்கு கதிர் | 242 | உம்பருலகாண்டு | 379 |
| இச்சைப்படி | 238 | உயர்ந்த போதின் | 134 |
| இடரினும் | 95 | உய்யும் மருந்தினை | 108 |
| இடையீர் | 242 | உரைப்பார் உரை | 199 |
| இட்ட குடி நீர் | 64 | உரை மேற்கொண்டு | 398 |
| இந்து அணையும் | 81 | உரையும் பாட்டும் | 220 |
| இயலும் விடைஏறி | 178 | உருகும் கமழ் | 221 |
| இருந்த இடைச்சுரம் | 262 | உருகு வார் | 155 |
| இருந்தடங்களும் | 213 | உருத் தெரியா | 97 |
| இருவரால் அறிய | 18 | உருவு பல | 278 |
| இலங்கை மனன் | 78 | உலகம் புரக்கும் | 310 |
| இலங்காபுரி | 285 | உழைத்தும் | 158 |
| இலையினார் சூலம் | 221 | உள்ளம் உள் | 260 |
| இழவாடி | 57 | உள்ளிடத்தான் | 45 |
| இழையார் | 141 | உள்ளுமாய் | 45 |
| இளங்கொடி | 370 | உற்றாரை | 190 |
| இறவாமே | 110 | உற்றார் | 190 |
| இனிதிரை | 397 | உற்று வணங்கி | 362 |
| இன்பமதனை | 289 | உன்னையும் | 301 |
| இன்றா | 327 | | |
| இன்னம்பல | 9 | ஊழிஊழி | 61 |
| | | ஊழியில் | 372 |
| ஈங்கோய் | 65 | ஊறினார் | 77 |
| ஈசன் | 129 | ஊனாருடை | 120 |
| ஈர்அம்பு | 237 | ஊனிடை | 398 |
| ஈன்று கொண்ட | 254 | ஊனுடை | 123 |
| உடல் தன்னை | 96 | எங்கள் கண் | 337 |
| உணர்ந்தாய் | 325 | எங்கள் பெருமான் | 297 |
| உணர்வார் | 402 | எங்கள் பெருமானை | 80 |

| பாட்டு முதல் | பக்கம் | பாட்டு முதல் | பக்கம் |
|---|---|---|---|
| எங்கேனும் இருந்து | 13 | ஏனமருப்பினொடு | 112 |
| எங்ஙனேயோ | 340 | ஏனமாய் நிலம் | 339 |
| எண்ணாத | 157 | ஏன்றேன் | 402 |
| எண்ணார் தரு | 47 | | |
| எண்ணார் எயில் | 19 | ஐ ஆனனன் | 223 |
| எண்ணி இருந்து | 187 | ஐயன் நல் | 246 |
| எண்ணில் ஈரமும் | 36 | | |
| எண்ணும் எழுத்தும் | 77 | ஒடு விழுந்து | 255 |
| எண் திசைக்கும் | 48 | ஒண்பவளவேலை | 397 |
| எத்திசையும் | 219 | ஒருகுன்ற வில்லாரை | 53 |
| எம்இடர் கடிந்து | 335 | ஒருமானை | 232 |
| எம்பிரான் | 287 | ஒன்று நில்லா | 350 |
| எல்லியும் காலையும் | 350 | ஒன்றும் | 284 |
| எல்லியும் நன்பகலும் | 340 | | |
| எல்லியில் புகழ் | 205 | ஓடம் வந்து | 156 |
| எழில் உடைய | 283 | ஓடியோடி | 334 |
| எழுதாதமறை | 255 | ஓடுகின்ற நீர்மை | 8 |
| எழுந்து உலகை | 116 | ஓதக்கடல் | 76 |
| எழுவார் | 380 | ஓதி ஆயிர | 391 |
| எனக்கு இனி | 103 | ஓதுபைங்கிளி | 133 |
| எனக்கென்றும் | 74 | ஓர்த்து உளவாறு | 146 |
| என்நெஞ்சமே | 358 | ஓர்ந்தனன் | 229 |
| என்நெஞ்சே | 237 | | |
| என்பும் ஆமையும் | 101 | கங்கை நீர் | 266 |
| என்றும் இன்பம் | 9 | கச்சை சேர் | 88 |
| என்ன புண்ணியம் | 84 | கடம்பூர்மேவிய | 40 |
| என்னமர் பெருமான் | 346 | கடிதாய் | 168 |
| என்னில் ஆரும் | 48 | கடிபடுகமலத்து | 115 |
| என்னெஞ்சமே | 358 | கடுவடுத்த | 87 |
| | | கட்டேறு | 393 |
| ஏறும்ஏறி | 327 | கணை நீடு எரி | 59 |
| ஏற்றினை | 369 | கண்ணன்அல்லால் | 395 |
| ஏனத்தின் | 373 | கண்ணார் கண்ணபுரம் | 295 |

| பாட்டு முதல் | பக்கம் |
|---|---|
| கண்ணிறைந்த விழி | 256 |
| கண்ணின் அயலே | 249 |
| கண்டம் கரியமலை | 231 |
| கண்டார் | 349 |
| கண்பனி அரும்ப | 6 |
| கந்தம்உந்த | 135 |
| கயிலை நாதன் | 85 |
| கரண்டமாடு | 340 |
| கரப்பர் கால | 68 |
| கரம் ஊன்றி | 44 |
| கருங்கை யானையின் | 43 |
| கருத்தனை | 75 |
| கருப்புவில்லோனை | 106 |
| கருமகள் இலங்கை | 317 |
| கருமாணிக்க மலை | 346 |
| கருமையார் | 4 |
| கரும்பன | 96 |
| கருவரைபோல் | 125 |
| கருவர் உந்தியின் | 154 |
| கருவளர் மேகத்து | 5 |
| கருவுற்றிருந்து | 82 |
| கலைக்கடலே | 387 |
| கலைக்கன்றுதங்கு | 48 |
| கலைஞானங்கல்லாமே | 31 |
| கலையாரும் | 121 |
| கலையும் கரியும் | 389 |
| கலைமலிந்த | 35 |
| கல்லார் மதில்சூழ் | 305 |
| கல்லார் மதிள் சூழ் | 361 |
| கல்லால் நிழல் மேய | 93 |
| கல்லினோடெனை | 92 |
| கல்லுயர்ந்த | 358 |
| கல்லெடுத்து | 364 |
| கவளயானைக் கொம்பு | 320 |
| கவளயானை பாய் | 386 |
| கவ்வைக்கடல் | 188 |
| கழுதை குங்குமம் | 90 |
| கழுமலம் அதனில் | 24 |
| கழித்தவார்புனல் | 159 |
| கழிந்தது | 71 |
| களங்கனி வண்ணா | 315 |
| களைவாய் துன்பம் | 297 |
| கற்பாரிராமபிரானை | 386 |
| கற்றவர் விழுங்கும் | 117 |
| கனிதனை | 149 |
| கனியினும் | 90 |
| காட்டில் | 301 |
| காடும் மலையும் | 204 |
| காயச் செவ்வி | 113 |
| காயோடு நீடு | 307 |
| காய்ந்ததும் | 167 |
| காராரும் | 61 |
| கார்உலாங்கடல் | 109 |
| கார் உறு கண்ணியர் | 140 |
| கார் ஒழுகும் | 232 |
| கார் வண்ணம் | 371 |
| காலன் | 191 |
| காலைக்கலை | 43 |
| காழியானை | 209 |
| காளை வடி வொழிந்து | 141 |
| கிதமுன் இசைதர | 50 |
| குடங்கள் எடுத்து | 296 |
| குடியடியார் | 403 |

| பாட்டு முதல் | பக்கம் | பாட்டு முதல் | பக்கம் |
|---|---|---|---|
| குணக்கும் | 144 | கையால்கயிலை | 270 |
| குண்டாடும் | 260 | கைஉலாம் | 150 |
| குந்தி நடந்து | 54 | | |
| குயிலொத்து | 259 | | |
| குருகாம் | 79 | கொங்கில் | 190 |
| குருந்தொடு | 187 | கொங்கு மலி | 302 |
| குலகிரியின் | 70 | கொங்கை திரங்கி | 248 |
| குலவு கோலத்த | 153 | கொடுகு வெஞ்சிலை | 201 |
| குவப் பெரும் | 17 | கொண்டல் | 284 |
| குழலார் | 120 | கொண்டல் வண்ணா | 291 |
| குழலொலி | 140 | கொந்தணவும் | 219 |
| குழிஇயிருந்த | 62 | கொந்தண் | 113 |
| குழைகொள் | 107 | கொம்பன்ன | 16 |
| குளிர்தரு | 101 | கொம்பியல் | 93 |
| குறிப்பு எனக்கு | 327 | கொன்று செய்த | 263 |
| குறைவிலார் | 275 | | |
| குற்றமின்மை | 214 | கோ ஆய இந்திரன் | 49 |
| குற்றம்ஒன்று | 31 | கோங்கு செண்பகம் | 60 |
| | | கோடி மாதவங்கள் | 184 |
| கூடச் சென்றேன் | 338 | கோடுயர் கோங்கலார் | 210 |
| கூட்டில் | 392 | கோணாகப் பேரல்குல் | 228 |
| கூந்தலார் | 365 | கோலமாமயில் | 151 |
| கூர் ஆரல் | 131 | கோழியும் | 286 |
| கூற்றமும் | 311 | | |
| கூற்றாயினவாறு | 215 | | |
| கூற்றும் | 191 | சங்கு ஏந்தும் | 10 |
| கூன் கொண்டு | 382 | சங்கைதனை | 69 |
| | | சடையாய் | 132 |
| கெண்டை போல் | 23 | சந்தமாய் | 318 |
| | | சந்தமார் | 252 |
| கைம்மகவு | 70 | சந்தார் | 69 |
| கையரிவையர் | 228 | சந்திர | 265 |
| கைஆர்வளை | 54 | சமர சூர | 94 |

| பாட்டு முதல் | பக்கம் |
|---|---|
| சாநாளும் | 211 |
| சாம்பல் | 249 |
| சார்ந்தவர்க்கு | 244 |
| சிட்டனை | 205 |
| சித்தந்தேறும் | 99 |
| சித்தம் நீநினை | 182 |
| சிராப்பள்ளி | 71 |
| சிவனாகி | 144 |
| சிறந்த | 358 |
| சிறுத்தொண்டர் | 132 |
| சீராரும் | 330 |
| சீரில் நீடிய | 84 |
| சீர்கெழு | 274 |
| சுரிகுழல் நல்ல | 22 |
| சுழித்த | 159 |
| சுழித்துணையாம் | 56 |
| சூழ் தரு | 44 |
| செங்கண்மால் சிலை | 103 |
| செங்கண் மால் திகழ் | 73 |
| செங்கனி வாயின் | 336 |
| செடித்தவம் | 64 |
| செந்நெல் | 115 |
| செந்தமிழ்த்திறம் | 63 |
| செந்தாது | 167 |
| செந்துவர் வாய் | 134 |
| செம்பொன்னை | 39 |
| செம்மனக் கிழவோர் | 188 |
| செய்யதிருமேனி | 76 |
| செல்வநெடு மாடம் | 4 |
| செல்வம் மல்கு | 43 |
| செவ்விய | 384 |
| செழுந்தரள | 102 |
| சென்னி வெண்குடை | 19 |
| சேடுலாவிய | 136 |
| சேதிநன்னாட்டு | 221 |
| சேயன் அணியன் | 392 |
| சேர்ந்த திருமால் | 297 |
| சேல் உலாம் | 7 |
| சைவ சமயம் | 10 |
| சொல் மாலை | 52 |
| சொல்லுவன் | 368 |
| சொல்லார் தமிழிசை | 223 |
| சொற்பாவும் | 136 |
| சொன்னால் விரோதம் | 381 |
| ஞானங்காட்டுவர் | 118 |
| தங்கிய | 89 |
| தங்கையை | 390 |
| தஞ்சாக | 254 |
| தடவரை வாய் | 401 |
| தண்ணார் | 28 |
| தண்டமுடை | 240 |
| தண்பொழில் சூழ் | 20 |
| தந்தை தாய் | 55 |
| தந்தையாய் | 130 |
| தமருள்ளம் | 287 |

| பாட்டு முதல் | பக்கம் |
|---|---|
| தமிழின் நீர்மை | 58 |
| தம்பியொடு | 306 |
| தவத்துளார் | 283 |
| தவஅரசாய | 14 |
| தலைசுமந்திருகை | 221 |
| தலையவன் | 244 |
| தலைவாள் | 190 |
| தனமணி | 130 |
| தாயத்தார் | 58 |
| தாயினும் நல்ல | 171 |
| தாயுமாய் | 71 |
| தாரமாகிய | 62 |
| தாராய தண்துளப | 302 |
| தாழ்சடையும் | 381 |
| தாள தாமரை | 331 |
| தாளால் உலகம் | 373 |
| தானெனை முன் | 277 |
| தான்ஏறும் | 85 |
| திங்களூர் | 222 |
| திருநுதல் | 155 |
| திருந்துவார் | 278 |
| திருப்புன்கூர் | 30 |
| திருப்பேர் நகரான் | 291 |
| திருமடந்தை | 314 |
| திருமாலிருஞ்சோலை | 325 |
| திருவாஞ்சியத்தில் | 124 |
| திருவாயிலினை | 237 |
| திருவாலங்காடு | 248 |
| திருவாலவாய் | 177 |
| திருவான்மியூர் | 260 |
| திரைக்கெடில | 216 |
| திறக்கப்பாடி | 164 |
| தீவிரியக் கழல் | 40 |
| துஞ்சல்இலர் | 148 |
| துஞ்ச வருவாரும் | 247 |
| துஞ்சுஇருள் | 102 |
| துப்புடை | 282 |
| துருத்தி தன்னில் | 126 |
| துளையார் | 313 |
| துள்ளுமான் | 33 |
| தூமணி | 401 |
| தூயவன் | 63 |
| தூவாயபுள் | 347 |
| தேடிக்காணார் | 230 |
| தேடுவார் | 232 |
| தேமருவார்குழல் | 109 |
| தேமருவு | 293 |
| தேராளும் | 294 |
| தேரும் | 256 |
| தேவரும் | 99 |
| தேவர் திங்களும் | 206 |
| தேவியை | 184 |
| தேவூர் | 137 |
| தேனகத்தார் | 263 |
| தேனினும் | 264 |
| தேனோங்கு | 381 |
| தேனை வென்ற | 73 |
| தேன்நிலவு | 179 |
| தொட்டபடை | 359 |

| பாட்டு முதல் | பக்கம் | பாட்டு முதல் | |
|---|---|---|---|
| தொட்டுத் தடவி | 27 | நாயனைய | 8 |
| தொண்டரஞ்சு | 276 | நாவகாரியம் | 327 |
| தொண்டர் குழாம் புடை | 24 | நாளாய | 163 |
| தொண்டர் குழாம் | 42 | நாளேல் | 347 |
| தொண்டெலாம் | 402 | நாறுநறும் | 324 |
| | | நானிலம் | 365 |
| தோகைமயிலினங்கள் | 65 | நானேதும் | 394 |
| தோடணி | 262 | | |
| தோடுடைய | 23 | நித்தநியம | 225 |
| தோத்திரமா | 108 | நிருத்தம் | 5 |
| தோலுடையான் | 21 | நிலந்தண் | 120 |
| தோற்றும் | 114 | நிலனொடு | 119 |
| | | நிழலார் | 25 |
| நங்கடம்பனை | 40 | நிறைவெண் | 152 |
| நங்கையாளுமை | 86 | நிற்பானும் | 122 |
| நச்சித்தொழுவீர் | 147 | நினைந்துருகும் | 80 |
| நஞ்சமுது | 51 | நின்றதெந்தை | 361 |
| நண்ணிய தீவினை | 9 | நின்றுலா | 53 |
| நடந்த கால்கள் | 297 | நின்னடியே | 72 |
| நரியைக் குதிரை | 199 | | |
| நரைகள் | 128 | நீடலர் | 151 |
| நரையார் | 100 | நீடிய | 74 |
| நலச்சங்க | 104 | நீதிபேணுவீர் | 31 |
| நலம் பெருகும் | 160 | நீ நாளும் | 17 |
| நல் குரவும் | 300 | நீயும் திருமகளும் | 354 |
| நல்லிசை ஞான | 162 | நீரகத்தாய் | 362 |
| நல்லாரும் | 60 | நீரிடைத்துயின்றவன் | 152 |
| நல்லான் காண் | 162 | நீருளாரும் சடை | 41 |
| நல்வெணெய் | 220 | நீருளாரும் மலர் | 69 |
| நறவு ஆர் தலையின் | 98 | நீருளாண் | 246 |
| நற்றவஞ் செய்த | 91 | நீர் ஆழி | 325 |
| நன்கு ஓது | 398 | நீலமாமணி | 51 |
| நன்மைதான் | 148 | நீலமே | 358 |
| நன்மைபெருகு | 81 | நீள நினைந்து | 164 |
| நன்றிருந்து | 364 | நீறுசேர்வதோர் | 67 |
| | | நீறுதிருமேனி | 270 |
| நாகத்து | 288 | நீறேறிய | 153 |
| நாடி வந்து | 66 | | |
| நாட்டார் | 200 | நெஞ்சுருகி303 | |
| நாதனாய் | 144 | நெடியார் | 225 |
| நாதனுக்கு ஊர் | 217 | நெடியானோடு | 94 |
| நாதனை | 186 | நெறிகமழ் | 143 |
| நாரணன் காண் | 252 | நெற்றிக் கண் | 243 |

| பாட்டு முதல் | பக்கம் |
|---|---|
| நெற்றிமேல் | 43 |
| நெற்றியிற் | 278 |
| பஞ்சின் மெல்லடி | 111 |
| பஞ்சுதோய் | 158 |
| படைமலிந்த | 187 |
| பண்சுமந்த | 167 |
| பண்டு எல்லாம் | 299 |
| பண்டு செய்த | 42 |
| பண்ணிடை | 22 |
| பண்ணின் | 67 |
| பண்ணினார் | 143 |
| பண்ணுளீராய் | 20 |
| பண் மயத்தமொழி | 135 |
| பதினாறாமாயிரவர் | 392 |
| பத்திக்கு | 381 |
| பத்திமையால் | 27 |
| பத்தியாய் | 140 |
| பயின்றதரங்கம் | 371 |
| பரந்த பாரிடம் | 117 |
| பரசு நறுமலரால் | 398 |
| பரிந்த சுற்றமும் | 213 |
| பருங்கை யானையின் | 315 |
| பருமாமதகரி | 180 |
| பறையும் பழி | 55 |
| பற்றார் தம் | 181 |
| பனிபடுமதியம் | 90 |
| பன்மலர் | 241 |
| பன்னிய செந்தமிழ் | 71 |
| பன்னிய பாரம் | 309 |
| பாங்கார் | 52 |
| பாங்கினால் | 78 |
| பாடகஞ்சேர் | 139 |
| பாடினர் | 145 |
| பாடுவாரிசை | 137 |
| பாதியொரு | 142 |
| பாம்பணை மேல் | 398 |
| பாரியலும் | 156 |
| பாரூர் பல்லவனூர் | 239 |
| பாலனாய் | 125 |
| பால் ஆலிலையில் | 296 |
| பாலிற் கிடந்ததுவும் | 397 |
| பாலும் அமுதமும் | 96 |

| பாட்டு முதல் | பக்கம் |
|---|---|
| பாலைக் கறந்து | 388 |
| பாவாந்த | 6 |
| பிடியதன் உருஉமை | 162 |
| பிணி அரங்க | 285 |
| பிண்டியார் | 298 |
| பித்தா பிறை சூடீ | 223 |
| பிழைத்த பிழை | 54 |
| பிழையுளன | 250 |
| பிறப்பானை | 244 |
| பிறப்புடையார் | 252 |
| பிறவாதே | 30 |
| பிறவி பிணி | 83 |
| பிறைத்ங்கு | 308 |
| பிறை வளரும் | 56 |
| பின்னைகொல் | 335 |
| பீர் அடைந்த | 346 |
| பீளை சோர | 90 |
| புண்ணியம் | 343 |
| புரிதருசடையினர் | 32 |
| புலங்களை | 97 |
| புவியுள் | 395 |
| புளிங்குடிக்கிடந்து | 338 |
| புறம்பயம் | 50 |
| புற்றில் | 124 |
| பூங்கொடி | 37 |
| பூச் சூழ்ந்த | 86 |
| பூண்முலை மேல் | 396 |
| பூதம் பாட | 258 |
| பூத்தபங்கய | 134 |
| பூந்துழாய் | 345 |
| பூமருவு | 88 |
| பூவார் | 87 |
| பெண்ணாகி | 328 |
| பெண்ணொர் கூறினார் | 127 |
| பெண்ணொர் பாகத்தார் | 172 |
| பெண்ணொர் பாம | 76 |
| பெண்ணோர் பாகம் | 88 |
| பெருகிய நலத்தால் | 218 |

| பாட்டு முதல் | பக்கம் | பாட்டு முதல் | பக்கம் |
|---|---|---|---|
| பெருகு காதல் | 309 | மஞ்சுதோய் | 348 |
| பெருகு மதவேழம் | 380 | மஞ்சுலாமணி | 289 |
| பெருந்தகையை | 131 | மணம்கமழ் | 325 |
| பெருமை பிறங்கும் | 46 | மண்ணாடும் | 310 |
| பெரும்புலர்காலை | 106 | மண்ணிறைந்த | 255 |
| பெற்றாள் | 231 | மண்ணினை உண்ட | 238 |
| | | மண்ணின் மேல் | 95 |
| பேணித் தொழும் | 53 | மண்ணெலாம் | 126 |
| பேராலி | 345 | மண் பாதலம் | 226 |
| பேரானை | 288 | மண் முதலாம் | 128 |
| | | மதயானை | 379 |
| பைஅரவின் | 397 | மதிமலிபுரிசை | 177 |
| பைத்தபாம்பொடு | 148 | மத்தமாமலர் | 63 |
| பைம்பொனே | 231 | மந்திபாய் | 380 |
| | | மருந்து வேண்டின் | 47 |
| பொங்கார் | 330 | மருவுற்ற மலர்க்குழலி | 254 |
| பொங்குவிடம் | 133 | மருவுற்ற மலர்க்குழலி | 254 |
| பொடிகள் பூசி | 114 | மலங்கினேன் | 263 |
| பொய்கையின் | 180 | மலைமகளை | 248 |
| பொய்ம்மை | 239 | மலைமலி மங்கை | 85 |
| பொய்யவன் | 252 | மழுவாளோடெழில் | 368 |
| பொய்யா மொழியார் | 52 | மறந்திகழும் | 283 |
| பொய்யாய | 5 | மறையினார் | 133 |
| பொய்யே உன்னை | 261 | மனத்துள்ளான் | 284 |
| பொய்யே செய்து | 248 | மன்றல் விரவு | 166 |
| பொருப்பமர் | 187 | மன்னவன் | 359 |
| பொருப்படைந்து | 403 | மன்னி நீடிய | 135 |
| பொருப்பிடையே | 365 | மன்னிப் பெருகும் | 258 |
| பொல்லாத | 73 | மன்னுகதில்லை | 7 |
| பொன்மலை | 206 | மன்னுதிரு | 276 |
| பொன்னார் திருவடி | 211 | மன்னுமதிள்கச்சி | 360 |
| பொன்னார் மேனி | 57 | மன்னும்மதுரை | 395 |
| பொன்னானாய் | 345 | மாகமார் | 252 |
| பொன்னும் | 140 | மாடநீடுகொடி | 123 |
| பொன்னினார் | 41 | மாணிக்கக் கூத்தனை | 8 |
| | | மாண்டு பிறக்கும் | 382 |
| போகமார்த்த | 110 | மாண்டுவாய் | 157 |
| போகமும் இன்பமும் | 205 | மாதர்ப்பிறை | 54 |
| போதும் பொன்னும் | 190 | மாதராரொடு | 93 |
| மங்கை மணந்த | 107 | மாதினுக்கு | 111 |
| மங்கையர்க்கரசி | 176 | மாதூரும் வாள் | 105 |
| மங்கையர்க்குவாள் | 16 | மாயவன் | 39 |
| மச்சொடு | 379 | மாயனை | 394 |
| மஞ்சர் தாம் | 218 | மாயனும் | 185 |

| பாட்டு முதல் | பக்கம் |
|---|---|
| மாயிருஞாலம் | 95 |
| மாலைமதி | 166 |
| மாலோடு நான்முகனும் | 146 |
| மாவாய்ப் பிளந்தானும் | 224 |
| மாவீற்றிருந்த | 196 |
| மாற்றரசர் | 316 |
| மாறில் | 245 |
| மானிடம் | 68 |
| மானம் மறை | 274 |
| மானேய் நோக்கு | 348 |
| மானை நோக்கி | 302 |
| மானைப் புரையும் | 6 |
| மிக்கானை | 374 |
| மிடியிட்ட | 184 |
| மின் காட்டும் | 111 |
| மின்னனைய நுண் இடை | 332 |
| மின்னனைய நுண் மருங்குல் | 313 |
| மின்னிலங்கு | 284 |
| மின்னின் | 79 |
| மீனமர் | 373 |
| முடியுடையமரர் | 312 |
| முடிவு இவள் தனக்கு | 285 |
| முதிரும் சடையின் | 13 |
| முத்தன் மிகு | 57 |
| முந்திமார் | 192 |
| முந்துற | 324 |
| மும்மை | 177 |
| முருகன் உறை | 285 |
| முளைக்கதிரை | 360 |
| முளைத்தானை | 176 |
| முள்ளின் மேல் | 250 |
| முனிவன் மூர்த்தி | 370 |
| முன்னானை | 62 |
| முன்னைச்செயவினை | 49 |
| மூப்பதும் இல்லை | 32 |
| மூரி முழங்கொலி | 166 |
| மூலமும் நடுவும் | 386 |
| மூவராய | 29 |
| மூவன் காண் | 227 |
| மூவிலை வேற் | 263 |
| மூன்று அங்கு | 90 |
| மெய்த் தொண்டர் | 237 |
| மென்னடை | 333 |
| மேட்டிள மேதிகள் | 386 |
| மேல் அது நான்முகன் | 64 |
| மேவா அரக்கர் | 290 |
| மேவிய பணிகள் | 13 |
| மைகொள் கண்டர் | 124 |
| மைத்தகுமா | 385 |
| மைத்தகுமேனி | 178 |
| மைப்பூசும் | 259 |
| மையகண் | 112 |
| மையலின்றி | 79 |
| மையார் | 106 |
| மொய்க்கொள் | 219 |
| மொழியானை | 33 |
| யாவரும் | 147 |
| யாவருமா | 317 |
| யாழைப்பழித்து | 166 |
| வங்கத்தால் | 367 |
| வங்கம் ஆர் | 15 |
| வஞ்ச ரக்கன் | 32 |
| வஞ்சியன | 97 |
| வடசொற்கும் | 381 |
| வடதிசை | 390 |
| வண்ணமா | 275 |
| வந்து கேண் மின் | 25 |
| வந்து உகைத்த | 374 |
| வம்புலாங் கூந்தல் | 383 |
| வரமுன்னி மகிழ் | 126 |
| வரி அரவே | 163 |
| வருந்தேன் | 91 |
| வரும் பெரும் | 23 |
| வருவார் செல்வார் | 344 |
| வரை வளர்மா | 260 |
| வலப் பாகம் | 278 |
| வலி வணக்கு | 307 |

| பாட்டு முதல் | பக்கம் | பாட்டு முதல் | பக்கம் |
|---|---|---|---|
| வல்லாளன் | 324 | விண்ணோர் | 212 |
| வளவன்பதி | 177 | விண்பணிந்தேத்தும் | 257 |
| வளவு எழும் | 394 | விரிந்தனை | 49 |
| வற்புடைய | 354 | விருத்தனாகி | 12 |
| வற்றாத | 191 | விருந்தினன் | 20 |
| | | வில்லார் வரை | 202 |
| வாச நலஞ் | 27 | விழிக்கும் நுதல் | 91 |
| வாடா முலையாள் | 107 | விழுநீர் மழுவாள் | 241 |
| வாடிநீர் | 118 | விளிதரு நீரும் | 254 |
| வாய் இருந்தமிழே | 83 | | |
| வாய்ந்த சீர் | 226 | வெண்ணெய்தான் | 291 |
| வாய்ந்த புகழ் | 34 | வெந்த நீறுமெய் | 36 |
| வாரகமதாகி | 319 | வெந்தழல் | 164 |
| வாரார் கொங்கை | 100 | வெந்த வெண்ணீறணி | 106 |
| வாராளும் | 297 | வெந்தார் | 229 |
| வாரிக்கொண்டு | 344 | வெய்தாய | 216 |
| வாருறுமென்முலை | 182 | வெருகுரிஞ்சு | 209 |
| வாழ்ந்த நாளும் | 128 | வெருவாதாள் | 380 |
| வாளால் | 253 | வெருவி வேழம் | 275 |
| வாளினான் | 186 | வெல்லும் வெண்மழு | 237 |
| வாள் ஆர் கண் | 104 | வெள்ளம் உள்ள | 59 |
| வாள்முக | 149 | வெள்ளிமாமலை | 255 |
| வானத்துயர் | 65 | வெறுத்தேன் | 195 |
| வானமதியும் | 75 | | |
| வானவர்கள் | 7 | வேங்கடமும் | 365 |
| வானார்மதி | 293 | வேங்கடமே | 380 |
| வானிடை | 16 | வேதமும் | 329 |
| | | வேதவித்தாய் | 266 |
| | | வேற்றாகி | 277 |
| விடிவதுமே | 161 | வேனல் விம்மு | 181 |
| விண்ணகரம் | 284 | | |
| விண்ணப்ப | 13 | வையகம் | 212 |
| விண்ணாளும் | 231 | வையக முற்றும் | 30 |
| விண்ணாள்வார் | 238 | வையத்து வாழ்வீர்காள் | 397 |
| விண்ணானே | 161 | வையம் எங்கும் | 117 |
| விண்ணுளார் | 163 | வையம் ஏழும் | 353 |